ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணேநமஃ.

பகவத்கீதை வசனம்.

விரிவாய குறிப்புரையுடன்.

இது

ஸ்ரீசாது இரத்தின சற்குருவின் பாதசேகரராகிய

பண்டிதர் - கோ. வடிவேலு செட்டியா ரவர்களால்

இயற்றப்பட்டு

ஸ்ரீமத் - ஆ. ஜகந்நாத முதலியாரவர்களது

பொருளுதவியால்

ஷை செட்டியாரவர்களாலும்

ம. சண்முக முதலியாரவர்களாலும்

அச்சிடப்பட்டது.

காபிரைட்] 1924 [ரூ. 1-12-0.

PRINTED AT THE
NOBLE PRESS, TRIPLICANE.
MADRAS.

ஆசிரியர்

கோ. வடிவேலு செட்டியார்.

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணேநம:.

முகவுரை.

சச்சிதா நந்த தயாபர ரத்திரு
வரமாஞ் சற்குரு மாணடி யுளத்தில்
உரமாக் கொள்வா முணர்வா தற்கே.

நம்மனோர் துன்பமென்பது சிறிது மின்றி இன்ப வடிவமாக விளங்குதற் பொருட்டுப் பரமேசுவரன் ஒவ்வொரு சிருஷ்டியின் ஆரம்பத்திலும் அநாதியா யுள்ள வேதத்தை அதன் கிரமந் தவறாது திருவாய்மலர்ந் தருளி வருகின்றானென் பதும், அவன் அதன் பொருளை நன் மாணக்கர்க்கு இராம கிருஷ்ணாதி அவதாரங் கொள்வது வாயிலாகவும், வியாசாதி ஆசாரிய வடிவங் கொள்வது வாயிலாகவும் விளக்கி யருளுகின்றா னென்பதும் சாஸ்திர சம்மதமாம். பரமேசுவரன் நேரே கூறிய வேதத்தின் ஞானகாண்டமாகிய உபநிடதமும், கிருஷ்ணாவதாரங் கொண்டு கூறிய பகவத்கீதையும், வியாசாசாரிய வடிவங் கொண்டு கூறிய பிரஹ்ம சூத்திரமும் * பிரஸ்தானத்திரயமென்று கூறப்படுகின்றன. இம் மூன் றும் ஞான சாஸ்திரங்களுள் தலைமை பெற்று விளங்குவனவாம்; இம் மூன்றனுள் பகவத்கீதை உபநிடதத்தின்பொருளையும், பிரஹ்ம சூத்திரத்தின் பொருளையும் நன்கு விளக்குவது வாயிலாக ஏனைய ஞான சாஸ்திரப் பொரு ளனைத்தையும் நன்கு விளக்குதலின், இது ஞான சாஸ்திராப்பியாசஞ் செய்பவர் யாவராலும் பொன்னேபோற் போற்றப் பட்டு வருகின்றது. இப் பகவத்கீதை ஸ்ரீவியாசா சாரியரால் இற்றைக் கேறக்குறைய 5000 வருஷத்திற்குமுன் அருளிச்செய்யப் பட்டதென்பது அது பாரதத்திலிருப்பதால் மிகு பிரசித்தமாம்; இதற்கொரு நல்லுரை (பாஷ்யம் - விரிவுரை) ஸ்ரீ சங்கரபூஜ்ய பகவத்பாதாசாரிய சுவாமிக ளவர்களால் இற்றைக் கேறக்குறைய 2000 வருஷத்திற்குமுன் அருளிச் செய்யப்பட்டது; இவ் வுரையை யனுசரித்துப் பகவத்கீதை தெலுங்கு - கன் னடம் - மலையாளம் - வங்காளம் - ஹிந்தி முதலிய பாஷைகளிலும், கிரீக்- ஜர்மன் - லாட்டின் - பிரஞ்சு - இங்கிலீஷ்முதலிய பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு விளங்கி வருகின்றது; தமிழ்ப் பாஷையிலோ இற்றைக் கேறக்குறைய 800 வருஷத்திற்குமுன் ஸ்ரீ பட்ட ரென்பவரால் செய்யுள் வடிவமாக மொழிபெயர்க்கப்பட்டு விளங்கிவருகின்றது. இவருடையகாலம் இற்றைக் கேறக்குறைய 800 வருஷத்திற்குமுன் னென்பது இற்றைக் கேறக் குறைய 600 வருஷத்திற்குமுன் சொரூபாநந்தர் திரட்டிய பெருந்திரட் டில் ஸ்ரீ பட்டர் மொழிபெயர்த்தருளிய பகவத்கீதையின் செய்யுட்க ளிருப்ப தால் தெரிகின்றது; இவர் பாண்டி நாட்டில், மதுரைக்கு வடகிழக்கில் வைகை

---

* பிரஸ்தானம் - அங்கம்; திரயம் - மூன்று. உபநிஷத், பகவத்கீதை, பிரஹ்மசூத்திரமென்னு மூன்றும் ஆத்ம வித்தைக்கு (ஆத்மாவை யறிதற்கு) அங்க(சாதன)மா யிருத்தலின், பிரஸ்தானத் திரய மென்று கூறப்படுகின்றன வென்க.

நதிக்கு வடக்கேயுள்ள வேம்பத்தூரில் அவதரித்தவ ரென்பது அபிதாந சிந்தாமணியால் தெரிகின்றது; இவ்வள வன்றி இவரது வரலாறு வேறொன்றும் தெரியவில்லை.

ஸ்ரீபட்டாரியற்றியருளிய செய்யுள் வடிவப் பகவத்கீதைக்குக் கோயிலூர் ஸ்ரீ பொன்னம்பலசுவாமிக ளவர்கள் கூடார்த்ததீபிகை யென ஒரு நல்லுரை இயற்றி யிருக்கின்றனர் ; அவ்வுரை வேதாந்த சாஸ்திரங்களைச் செவ்வையாகப் படித்தவர்க்கன்றி மற்றவர்க்குப் பயன் தருவதன்றா யிருத்தலை நோக்கி இப் பகவத்கீதை வசனத்தை ஸ்ரீசாது இரத்திநசற்குருவின் திருவருளைமுன்னிட்டெழுதி வெளியிடுவதானேன். இப்பகவத்கீதை வசனத்தை விளக்கமாக விரிவாய குறிப்புரையோடு யானெழுதுவதற்கு எனக்குதவியாயிருந்த நூல்கள் பகவத்கீதையின் கூடார்த்ததீபிகை முதலிய வுரைகளும், விசாரசாகரம் - விருத்திப்பிரபாகா முதலியனவுமாம்.

சென்னை, டிராம்வே கம்பெனி, ஜாயிண்ட் ஓர்க்ஷாப் போர்மனும், சென்னை - வேதாந்தசங்கத்தின் கிளைச்சங்க கௌரவ காரியதரிசியும், வேதாந்த சாஸ்திர அநுஷ்டானபரருமாகிய சென்னை-சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீமத்-ஆ. ஜகந்நாத முதலியாரவர்கள் யான் லோகோபகாரியென்னும் பத்திரிகையி லெழுதி முடித்துள்ள இப்பகவத்கீதை வசனத்தைப் புத்தகவடிவமாக அச்சிட்டு வெளியாக்குவதற்கு மூலகாரணராயிருந்து, அதற்குவேண்டிய பொருளுதவியுஞ் செய்தனர்; இவர் செய்த இவ்வுதவி யெஞ்ஞான்றும் மறக்கற்பாலதன்றாம்.

சென்னை - கோமளேசுவரன் பேட்டை ஸ்ரீசாது இரத்திந வேதாந்த சபையினருள் ஒருவரும், எனதாப்தருமாகிய ஸ்ரீமத் ம. சண்முக முதலியாரவர்கள் இந்நூலை யச்சிடுங்காலத்திலென்னுடனிருந்து எனக்குச்செய்த உதவி அளவிறந்ததாம்; அஃதெக்காலத்துங் கருதுதற் குரியதாம்.

இப் பகவத்கீதை வசனத்தை விளக்கமாக விரிவாய குறிப்புரையோடெழுதுவதற்குரிய விவேக மெனக்குண்டாதற்குக் காரணபூதரா யிருந்த ஸ்ரீ சற்குரு - மகாத்மா - சை. இரத்திந செட்டியாரவர்களது பெருங்கருணை என் சித்தத்துள் எஞ்ஞான்றும் நிலைபெறுதற்குரியதாம்.

இந்நூலைச் செப்பமாக அச்சிட்டுத் தந்த சென்னை - ஆநந்தபோதினி அச்சியந்திரசாலை அதிபரின் நன்றியும், சென்னை - திருவல்லிக்கேணி, நோபில் அச்சியந்திரசாலை அதிபரின் நன்றியும் மறக்கற்பாலன வன்றாம்.

இந்நூலின்கண் பிரமப் பிரமாதங்களால் தவறு நேரிட்டிருத்தல் கூடும்; அதனை வேதாந்த வித்வத் சிரோமணிகள் தெரிவிப்பாராயின், அது மறுபதிப்புப் புத்தகத்தைச் சுத்தமாக அச்சிடுவதற்குப் பேருபகாரமாம்.

இந்நூலை யான் எழுதுமாறு எனது சித்தத்தின்கண் குருவடிவமாக வெழுந்தருளியிருந்து, என்னை யேவி வந்த ஸ்ரீ நடராஜப்பிரபு இந்நூல் எஞ்ஞான்றும் நிலைபெறுமாறுங் கருணைபுரிவாராக.

இதிற் பிழையுளதாயின், உலகம் பொறுக்க.

1—7—24.
சென்னை
கோமளேசுவரன் பேட்டை.

கோ. வடிவேலு செட்டியார்.

ஸ்ரீ சாது இரத்திந சற்குரு திருவடி வாழ்க.

உ

கடவுள் துணை.

இந்நூலாசிரியர் மாணாக்கருள் ஒருவராகிய

சென்னை - சிந்தாதிரிப்பேட்டை

ஸ்ரீமத் - தே. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி.எல்.,

ஹைகோர்ட் வக்கீல்

அவர்களியற்றிய

சிறப்புப் பாயிரம்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

வருக விருந்துண வருக புலவீர்
அமிழ்தினு மினிய தமிழெனு மடவரல்
பன்னாள் உறக்கம் இந்நாள் ஒழிந்தனள்
விதம்வித மாக விரிந்தே கிடக்கும்
கதைபல வற்றால் சிதைபட லுற்றாள்
வடிவேற் குரவன் வாய்மொழி கேட்டே
படிமிசைப் பண்டை வடிவடைந் தனளே
எந்நூ லவற்றினும் மெய்ந்நூ லாகும்
கண்ண னுரைத்த வின்னிசை நூற்கே
இதமிகு சங்கரர் முதலாம் அந்தணர்
சதமென வுரைபல தாமொழிந் தனரே
வடமொழி தனிலே நடமிடு மவற்றைத்
தமிழறி புலவர் தாமறி யாமே
இமிழ்திரை வரைப்பில் இந்நா ளெல்லாம்
ஏக்கங் கொண்டே தூக்கமுங் கொண்டார்
அலகில் சீர்த்தி அன்னவர்க் காக
உலகினிற் சிறியரு முணர்ந்திடும் வகையால்
உரைநடை வந்த குறைவிலா அமுதை
விருந்தென வமைத்தான் அருந்தமிழ்ப் புலவன்

ஆயின்றுநன் றிதுகாண் அச்சோ எனவே
துயிலுணர்ந் தொருங்கே சூழ்ந்தன ரீங்கே
இன்னோன் யாரோ என்னுவீர் ஆயின்
தர்மசிவா சாரி தம்மடஞ் சார்ந்து
சென்னையைச் சேர்ந்த கோமள புரத்தே
குடிபுகுந் தருளிய வடமுகப் பெருங்குடி
துலங்கவந் தருளிய சுப்ப ராயனும்
குலங்குண நிறைதனக் கோட்டி யம்மையும்
சாலி வாகன சகாப்தந் தன்னில்
ஆயிரத் தெழுநூற் றெண்பத் தாறினில்
ருத்திரோத் காரியில் சித்திரைத் திங்களில்
அலகில் கோடை யழலும் குளிர்வித்
துலகிரு ளோட்டும் நிறைமதிக் கெதிரே
பிறவிப் பெருந்தணல் பேரின் றொழிய
மனவிருள் ஓட்டும் குணமதி மேலென
உலக மகிழ உவப்புடன் பெற்ற
பலகலை பயின்ற பண்புடைப் பெரியோன்
அதாஅன்று,
வாலாஜா பேட்டைதன் பாலாய்த் தோன்றிய
இராவிருள் இரிக்கும் எல்லவன் போலும்
இராமா நுஜநா யகரெனும் ஏந்தல்பால்
தமிழ்மொழி பயின்றே தமிழ்நூ லெல்லாம்
ஈதறைந் தனவெனக் கோதற அறுதியிட்
டுரைக்கும் அருஞ்சீர்ப் பெருக்க முடையான்
ஐந்திலக் கணமும் இவன்றரு பிச்சை
மைந்தர் மனவிருள் மாளத் தோன்றிய
உலகினி லுள்ள பலவாஞ் சமயமும்
சொன்னவை யிவையெனத் திண்ணென வுணர்ந்தோன்
வைரங் கொண்டே வைரம் பிளத்தல்போல்
அவ்வவர் நூல்கொடே அவ்வவர்க் குரைப்போன்
தருக்க முணர்ந்த அருக்க னெனவே
திகழ்ந்து பொய்யினை யிகழ்ந்தே யுயர்ந்தோன்
தென்னாட் டினரெலாம் தெளிவுறப் பன்னூல்

பன்னு ளெழுதியும் பதித்து முதவுவோன்
மறைமுடி வனைத்தும் மறைப்பிலா துரைக்கத்
தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளரைத்
தினமும் பயிற்றிய திப்பிய மூர்த்தியாம்
சாந்தக் கடல்வே தாந்தக்கட லென்
றோது மிணையிலாச் சாது ரத்திந
சற்குரு தனுது பொற்சர ணங்களே
தாரணி தன்னில் சரணென வாழ்வோன்

அதாஅன்று,

காலை தொட்டு மாலை மட்டே
உலகிருள் போக்குவன் இலகும் கதிரோன்
முடிவிலா அறிவின் வடிவேற் கதிரோன்
வைகறை நின்றும் நடுநிசி வரையும்
மக்க டமது மாலிருள் போக்கி
வெப்ப மின்றித் தட்பமே செய்து
தம்மை யுணரத் தவஞ்செய் வார்க்குத்
தம்மை யுணர்ந்தே தனிநிலை யடைய
அரிதுணர் பொருளவு மெளிதுணர் கதையாத்
தித்திக் கச்சொலுந் திறந்தேர் ஞானி
எத்திக் கிருந்தும் எந்நே ரத்தும்
எவ்வெவர் அழைப்பினும் எவ்வெத்தூ ரத்தும்
அவ்வப் போதே யவர்குறை முடித்தே
அமைதிசால் முகத்தொடும் அன்பொளிர் கண்ணொடும்
தமையுண ரறிவாற் றதும்பு மின்பொடும்
வீடமு தளிக்க நாடநின் றோனே

அதாஅன்று,

பெயரெஞ்சு கிளவி வினையெஞ்சு கிளவியென்
றலகிலா தெழுதித் தலையணை யுரைதரும்
புத்துரை யாளர் போலா தின்று
சித்திரப் பதுமைபோற் றெரிந்தவர் கேட்டிட
நூற்கட லென்னும் பாற்கடல் புகுந்தே
அமுதெனும் பொருளை யங்கையிற் கொணர்ந்தே

அமுதுசெய் திடுகென அனைவர்க் கீந்தும்
ஈங்குளார் எல்லாம் இன்பங் கொள்ள
ஆங்கொளிர் அழகெனும் அருமணி காட்டியும்
திருக்குற ளுடனே தருக்கபரி பாடையும்
நாநா சீவவா தக்கட் டளையும்
எவரு முணர எளிதே யவற்றிற்
கவனியில் விரிவுரை யமைத்தும் ஆன்றவே
தாந்தபரி பாடைசித் தாந்த பிந்தொடு
சர்வ தரிசன சங்கிர கத்தையும்
பலநூல் வல்ல வடமொழிப் பண்டிதர்
சிலர்தம துதவியாற் செந்தமிழ்ப் படுத்தியும்
பெருந்திரட் டுடனே குறுந்திரட் டொன்றோ
தபுவில் சீர்த்தி ரிபுகீ தையுடன்
விவேக முணர்த்தும் விவேகசூ டாமணி
என்றெல் லோரும் நின்று புகழ்ந்தும்
மறைதர நின்றவிம் மறைநூல் தம்மை
விழைதரு முறைப்புடன் பிழையற வாய்ந்தும்
மெய்ஞ்ஞான போத வியாசபோ தினிகளால்
எஞ்ஞான மிலார்க்கும் இன்றறிவு கொளுத்தியும்
இயல்சேர் கைவல்லியநவ நீதமும்
மஹாராஜ நிலைசொல் மஹாராஜா துறவும்
வேதாந்த சூளா மணியும் சிவஞான
போதமும் சசிவன்ன போதமும் விளங்க
உரைநடைப் படுத்தியும் உரைத்தவிந் நூலெலாம்
அச்சு வாகனத்தே மெச்சுற ஏற்றிக்
குழாவி நிலவிடக் குவலயந் தனிலே
உலாப்புறம் போக வுற்சவங் கண்டோன்
இம்மையில் துன்ப மெல்லா மொழிந்திட
மும்மையும் யாந்தொழு முதுநா வலனே.

பரமார்த்ததரிசனமென்னும்

பகவத்கீதை வசனத்தின் பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
6	5	வளவில	வளவில்
6	16	கிருஷ்ண	கிருஷ்ண
11	23	செய்தவன்	செய்வதன்
67	11	ஒடத்தால்	ஓடத்தால்
79	20	பேதபத்தி	பேதபுத்தி
81	24	யோகப்பியாச	யோகாப்பியாச
84	3	பல்	பல்வேறு
92	20	யோகப்பியாச	யோகாப்பியாச
97	15	கேட்கக்கடவாய்	கேட்கக்கடவாய் என்று கூறுவா [ராயினார்
104	26	சிரேட்டவனாவன்	சிரேட்டனாவன்
109	6	கலவி	கல்வி
110	4	பொரு	பொருள்
129	30	ளஞ்	னஞ்
135	24	தோள்று	தோன்று
136	8	யயிமன	யபிமான
141	26	நிலையைத	நிலையைத்
145	28	என்னால	என்னால்
161	6	பூர்வமாக	பூர்வகமாக
184	2	மகாராகார	மகராகார
206	10	கூறல்	கூறல் ‡
207	27	வீதிய	விதீய
227	3	(முடிவு)க்	(முடிவுக்)
251	14	பயன்கனை	பயன்களை
256	Heading	பவத்கீதை	பகவத்கீதை
257	5	சம்மதமாயுமுள்ள	சம்மதமுமாயுள்ள
258	Heading	பவத்கீதை	பகவத்கீதை
,,	9	உத்சரித்து	உச்சரித்து
266	Heading	பவத்கீதை	பகவத்கீதை
,,	27	பலாதாம்	பாலதாம்
268	14	பிரஜாதிபதி	பிரஜாபதி
276	Heading	பவத்கீதை	பகவத்கீதை
280	7	விஷயம்	விஷம்
288	5	பேோர்	போர்

பரமார்த்ததரிசனமென்னும்
பகவத்கீதை வசனத்தின்
அத்தியாய அட்டவணை.

பக்கம்.

நூற்சிறப்பு - நூல்வரலாறு. ... ... 1-2.

கருமகாண்டம்

துவம்பதார்த்த நிரூபணம்.

1. அருச்சுனன் சோக அத்தியாயம் 3
2. சாங்கிய யோக அத்தியாயம்... 12
3. கர்மயோக அத்தியாயம் 39
4. சம்பிரதாய அத்தியாயம் 52
5. ஞான கரும அத்தியாயம் 70
6. யோக அத்தியாயம் 81

உபாசனகாண்டம்

தத்பதார்த்த நிரூபணம்.

7. மாயாரூப அத்தியாயம் 105
8. எழுவகை வினு வுரைத்த அத்தியாயம்... ... 123
9. மாயாவிகார அத்தியாயம் 140
10. விபூதியோக அத்தியாயம் 158
11. விசுவரூப அத்தியாயம் 170
12. பக்தியோக அத்தியாயம் 185

ஞானகாண்டம்

அசிபதார்த்த நிரூபணம்.

13. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாகயோக அத்தியாயம் ... 192
14. குணாதீத அத்தியாயம் 210
15. பிரபஞ்ச அத்தியாயம் 223
16. தேவாசுர சம்பத்து விபாகயோக அத்தியாயம் ... 235
17. குணவிகார அத்தியாயம் 246
18. சஞ்சேப அத்தியாயம் 260

ஓம்
தத்சத்
பரப்பிரஹ்மணே நம :.

பரமார்த்த தரிசனமென்னும்
பகவத்கீதை வசனம்.

இஷ்டதெய்வ நமஸ்கார வடிவ மங்கலம்.

" ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கள் மூன்றும்
செய்வினை யிரண்டு மோன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவள ராழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்."

நூற்சிறப்பு.

பரமார்த்த தரிசனமென்பதன் பொருள் உண்மைப்பொருள் விளக்க மென்பதாம். பகவத்கீதை யென்பதன் பொருள்-பகவானால் (அருச்சுனனுக்கு) அருளிச் செய்யப்பட்ட தத்துவ மென்பதாம்; பகவானென்பதன் பொருள்-ஆறு குணங்களை யுடையவனென்பதாம்; அக்குணங்கள்-ஐசுவரியம், வீரியம், கீர்த்தி, திரு, ஞானம், வைராக்கிய மென்பனவாம். பகவானென்றது இங்குக் கிருஷ்ணமூர்த்தியை. கிருஷ்ணனென்னும் பதத்தின் பகுதி கிருஷ் என்பதாம்; அதன் பொருள் (முக்காலத்திலும் பொய்யென்று நிச்சயித்தலில்லாத) சத்து என்பதாம்; ண (அல்லது ணன்) என்னும் விகுதியின் பொருள்-(மிகு பிரியத்திற்கு விஷயமான) ஆநந்த மென்பதாம். இதனால், கிருஷ்ணனென்பதன் பொருள் சதாநந்த வடிவினனென்பது பெறப்பட்டது; படவே, கிருஷ்ணனென்னும் பதம் சதாநந்த வடிவப் பிரஹ்மத்தைக் குறிப்பிப்பதாயிற்று.

வேதார்த்தங்களை யறிவதற்கேற்ற புத்தி சாமர்த்தியமில்லாத அதிகாரிகளுக்கு அறம், பொருள், இன்பம், வீடென்னும் புரு

ஷார்த்தங்களின் சாதன முண்டாம் பொருட்டு, வியாச பகவான் திருவாய் மலர்ந்தருளிய பாரதமென்னும் நூலின் மத்தியில், நட்சத்திர மண்டலங்களின் மத்தியில் சந்திரமண்டல மிருப்பது போன் றிருப்பதாகிய பகவத்கீதை 18-அத்தியாய முடையதாம். அது, வேதம்-கர்ம காண்டம், உபாசன காண்டம், ஞான காண்டமென மூன்று காண்ட வடிவினதா யிருப்பதுபோல, மூன்று ஷட்க வடிவினதா யிருக்கின்றது. பகவத்கீதையின் முதலாவ தாறத்தியாயம் கர்ம நிஷ்டையையும், இரண்டாவதாறத்தியாயம் பகவத் பக்தி நிஷ்டையையும், மூன்றாவ தாறத்தியாயம் ஞான நிஷ்டையையும் கூறுதலின், இது வேதம் போல்வதாம்; இன்னுமது முதலாவ தாறத்தியாயத்தில் துவம்பதார்த்த நிரூபணத்தையும், இரண்டாவ தாறத்தியாயத்தில் தத்பதார்த்த நிரூபணத்தையும், மூன்றாவ தாறத்தியாயத்தில் அசிபதார்த்த நிரூபணத்தையும் செய்தலின், தத்துவ மசியென்னும் மகா வாக்கியத்தின் பொருளையும் போதிப்பதா யிருக்கின்றது. இக் காரணத்தால் இது சர்வ வேதாந்தசார சங்கிரகமா யிருக்கின்றது. அதனால், பகவத்கீதை அதிகாரி புருஷர் யாவரும் வாசித்தற்குரியதா யிருக்கின்ற தென்க.

கிருஷ்ண பரமாத்மா பரமார்த்தத்தைச் சர்வ முமுட்சுகட்கும் அருச்சுனனுக் குபதேசஞ் செய்வது வாயிலாக உபதேசஞ் செய்தன ரென்பதிங் குணர்தற்பாலதாம்.

நூல் வரலாறு.

வேதவியாச மகா முனிவரது கருணையால் ஆங்காங்கு நடைபெறுவனவற்றை யறியு மாற்றலைப் பெற்ற சஞ்சய ரென்பவர் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் ஏற்பட்டுள்ள யுத்த பூமியில் நடப்பனவற்றை யெமக்குத் தெரிவித்தல் வேண்டுமென்று திருதராஷ்டிரர் கேட்டுக் கொண்டதற் கிணங்கி, யுத்தம் நடத்துவதற் கேற்படுத்தப்பட்ட குருக்ஷேத்திரத்திற்கு வந்து, அங்குத் தக்கதோ ரிடத்தின்கண் நின்று, அங்கு நிகழ்வனவற்றை யறிந்து சென்று திருதராஷ்டிரர்க்குத் தெரிவித்துக்கொண்டு வந்தனர்; ஆங்கு அருச்சுனனுக்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும் யுத்தம் செய்வதுபற்றி யுத்த ஆரம்ப காலத்தில் நடைபெற்ற வினாவிடையையுங் கூறினர். அவ் வினாவிடையே பகவத்கீதையாம்.

நூல்.

1-அருச்சுனன் சோக வத்தியாயம்.

திருதராஷ்டிரர் பாண்டவரது விஜயப் பிரதாபத்தைப் பல விதமாகக் கேட்டிருத்தலால், தமது புத்திரராய கௌரவர் தோல்வி யடைந்து விடுவரே யென்னு மச்சத்தால் தமது புத்திரரது ஜயத்தை விரும்பி, சஞ்சயரை நோக்கி வினவுதல்.

திருதராஷ்டிரர்-சஞ்சயரே! பிரமாண நூல்கள் புண்ணிய பூமியென்று புகழ்ந்து கூறுகின்ற குருக்ஷேத்திரத்தின்கண் நமது பகைவராகிய பாண்டவரும் நமது புத்திரராகிய கௌரவரும் போர் செய்யுங் கருத்துடையவராய் வந்து ஒருமிக்கக் கூடிய பின்னர், அவ்விடத்தின்கண் யாது செய்தனரென்று கேட்க, அதற்குச் சஞ்சயர் மிக வினிய சொற்களால் ஆங்கு நிகழ்ந்தன வற்றைக் கூறுவாராயினர். *

சஞ்சயரது விடை.

(திருதராஷ்டிரரே! யுத்த வாரம்ப காலத்தில்) பெருஞ் சேனையும் சர்ப்பக்கொடியு முடையவனாகிய துரியோதனன் முன்

---

* நெல் முதலிய பயிர்களி னுற்பத்திக்கும் அவற்றின் விர்த்திக்கும் உத்தமமான விளைநிலம் காரணமா யிருப்பதுபோல, தருமத்தினுற்பத்திக்கும் அதன் விர்த்திக்கும் காரணமா யிருப்பது புண்ணிய பூமியாம்; அது குருதேசத்தின்க ணிருத்தலால், புண்ணிய பூமி குருக்ஷேத்திரமென்று கூறப்படுகின்றது. சஞ்சயரென்பதன் பொருள் (காமம், வெகுளி முதலியவற்றை) நன்றாக வென்றவ ரென்பதாம்.

திருதராஷ்டிரர் யுத்தஞ் செய்தற்பொருட்டுத் தர்ம க்ஷேத்திரத்தை யடைந்த பாண்டவர் முன்னரே தரும சொரூபியா யிருத்தலின், தமது பக்கத்திலும் தமது பகைவர் பக்கத்திலு முண்டாகும் இம்சையாற் றோன்றும் பாவத்திற்குப் பயந்து யுத்தஞ் செய்யாதொழிவராயின், நமது புத்திரர் தவறாது ராஜ்ஜியத்தைப் பெறுவர்; சுபாவத்தில் பாவ சொரூபியராயுள்ள நமது புத்திரர் அந்தத் தர்மக்ஷேத்திரத்தின் மகிமையாலே, அந்தக்கரண சுத்தி யுடையவ ராவாராயின், அதனால் தாம் வஞ்சகமாகப் பாண்டவ ரிடத்தினின்றும் அபகரித்த ராஜ்ஜியத்தை மீண்டும் அவர்க்குக் கொடுத்து விடுவர்; அதனாலே அவர்கள் யுத்தமின்றி நாசமுறுவரென்னுங் கருத்தால், 'நமது பகைவராகிய பாண்டவரும், நமது புத்திரராகிய கௌரவரும்... அவ்விடத்தின்கண் யாது செய்தனர்' என்று சஞ்சயரை நோக்கி வினவினரென்பதாம்.

னர்த் திருஷ்டத்தியும்நன் முதலிய சூரவீர புருஷரால் அணி வகுத்து நிறுத்தப்பட்டுள்ள தனது பகைவராகிய பாண்டவரது சேனைகளைப் பார்த்து, பின்னர் வில்லாசிரியராய துரோணாசாரியரருகே சென்று, அவ்வாசிரியரை நோக்கி, பெருந் தேரையுடைய எனதாசிரியரே! நீர் வீமனையும் அருச்சுனனையுமொத்த வில்லாளராகிய வியுதானன், விராடன், துருபதன், திருஷ்டகேது, சேகிதானன், காசிராஜன், புருஜித்து, குந்திபோஜன், சைப்பியன் முதலிய வேந்தரும், வில் வீரருள் சிறந்தவனாகிய அபிமந்யு முதலிய மகாரதராய பல அரசரும், தலைவர்களாகப் பொருந்தித் திரண்டு வந்துள்ள பாண்டவரது பெருஞ் சேனையைப் பார்ப்பீராக வென்று மேக முழக்கம்போலக் கர்ச்சித்துக் கூறி, பின்னுங் கூறுவானானான். $

(பாண்டவரது சேனையிலுள்ள சூரவீர புருஷர்களைக்கண்டு, இவர்தம்மை வெல்வதெவ்வாறென்று தனக்குண்டாய பயத்தை யடக்கிக்கொண்டு, எனக்குப் பாண்டவர் சேனையைக் கண்டு பயமுண்டாகவில்லை யென்பதை மேக முழக்கம்போலக் கர்ஜித்துப் பேசுவதால், துரோணாசாரியர்க்குத் தெரிவித்து நின்ற துரியோதனன் எனது சேனையிலும் சூர வீர புருஷ ரிருக்கின்றனரென்று அவர்தம்மை யவர்க்குக் குறிப்பிட்டுக்கூறக்கருதி) எனதாசிரியரே! கங்கா புத்திரராகிய பீஷ்மாசாரியரும், அங்க

$ பிறரது உதவியின்றிப் பதினாயிரம் போர்வீரரோடெதிர்த்துப் போர் செய்யுந் திறமையும் படைக்கலப் பயிற்சியில் மிகு தேர்ச்சியு முடையவன் மகா ரதனென்றும், அளவிறந்த தேர்வீரரோ டெதிர்த்துப் போர் செய்யுந் திறமையும் படைக்கலப் பயிற்சியில் மிகு தேர்ச்சியுமுடையவன் அதிரதனென்றும், தானொரு தேரி லிருந்துகொண்டு தன்னை யொத்த மற்றொரு தேரி லிருக்கின்றவனோடு போர்செய்யுந் திறமையுடையவன் ரதனென்றும், அவனிலுங் குறைந்தவன் அர்த்தரதனென்றும் கூறப்படுகின்றனரென்க.

சூரவீர புருஷருள் மிக அப்பிரசித்தனாயுள்ள துருபதன் புத்திரனாய திருஷ்டத்தியும்நன் தலைமையாக விருந்து அணிவகுத்து நிறுத்தியுள்ள பாண்டவரது சேனையை நம்மனோருள் ஒரு சாதாரண சூரவீர புருஷனே வென்று விடுவான்; அங்ஙனமாக, எதன் பொருட்டு, நீ பாண்டவரது சேனையைக் கண்டு பயமடைகின்றாயென்று துரோணாசாரியர் தன்னைக் கேளாதிருத்தற்பொருட்டு, துரியோதனன், அவர்க்குப் பாண்டவரது சேனையிலுள்ள சூரவீர புருஷரது பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறினானென்பதாம்.

தேசத் தரசனும் எனதுயிர்த்தோழனுமாய கர்ணனும், எமது செல்வத்துணைவனாய அசுவத்தாமனும், சயத்திரதனும், கிருபாசாரியரும் எனது சேனையிலிருக்கின்றனர்; தேவரீரும் இருக்கின்றீர்; மேற் குறிப்பிட்டவரே யன்றி அநேக வரசரு மிருக்கின்றனர். இச் சூர வீர புருஷர்கள் எனக்கு வெற்றியுண்டாதலையே தமக்குச் செல்வமாக விரும்புவதல்லாமல் வேறெதனையும் விரும்பாதவர்; இன்னு மவர்கள் (கௌரவராகிய) எங்களுக்கொரு குற்ற முண்டாவதாமாயின், அதனைத் தமதுயிரை விட்டேனும் நீக்குதலை மேற்கொண்டிருப்பவர்.

சேனாதிபதியாக வந்துள்ள எங்களது பாட்டனாராகிய பீஷ்மாசாரியர் தமது கட்டளையால் அணிவகுத்து நிறுத்திக் காத்துள்ள பதினோரக்குரோணி யளவினதாகவுள்ள எனது சேனா சமுத்திரம், ஆலோசித்து நோக்குமிடத்து, வீமசேனன் சூர வீர புருஷர் கண்டு வியந்து பேசுமாறு அணிவகுத்து நிறுத்திக் காத்திருக்கின்ற பாண்டவரது ஏழக்குரோணி யளவினதாகவுள்ள சேனைக்கொத்த வல்லமை யுடையதாகுமோ? ஆதலால், தேவரீர் ஏனைய சூர வீர புருஷருடன், பகைவர் சேனைவந்து வெற்றி பெறுதலையே பயனாகக் கருதிப் போர்முகத்தில் நிற்கின்ற பீஷ்மாசாரியரிடத்து நெருங்காதவாறு நமது சேனைகளைத் தக்கவாறு இனி யணிவகுத்து நிறுத்தி, விரைவாகப் பீஷ்மாசாரியரை எல்லாப் பக்கத்திலுமிருந்து காத்தருளல் வேண்டுமென்று கூறினான்.

கௌரவ சேனையின் கிளர்ச்சி.

அவ்வா றவன் கூறிய சமயத்தில், யாதவப்படை வீரரும் மற்றப்படை வீரரும் அரணாகச் சூழ்ந்துள்ள சேனா சமுத்திரத்தின்கண்ணுள்ள பீஷ்மாசாரியர், அறிவுடையோர் யாவரும் வஞ்சகக்குணமுடைய கௌரவர் பாண்டவர்க்குச் செய்த தீவினையே அவருயிர் யமனுக் குணவாகுமாறு கொடும் போரை யுண்டாக்கியதென்று கூறவும், அரசர்க் கரசனாகிய துரியோதனனது உள்ளம் தற்கால சந்தோஷ மடையவும், பகைவர் அஞ்சி நடுக்க முறவும், சிங்கம்போலக் கர்ச்சித்துத் தமது சங்கை வாயில் வைத்தூரக்க வூதினார். இவரிங்ஙனம் தமது சங்கை யூதிய வளவில், துரியோதனனது சேனையின்கண் எவ்விடத்தும் அநேக சங்கங்கள் முழங்கின; அநேக வாத்தியங்கள் ஒலித்தன; அவற்றால் பதி

ரோக்குரோணி யளவினவாகப் போர் செய்யத் திரண்டுள்ள துரியோதனனது சேனைகள் போர்செய்யு முயற்சியோடு ஆரவாரஞ் செய்தன. ¶

பாண்டவ சேனையின் கிளர்ச்சி.

கௌரவ சேனையில் இவ்வாறுய கிளர்ச்சி யுண்டாயவளவில, பதினன் குலகங்களையும் பெற்றவராய ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா தமது ‡ பாஞ்ச ஜந்யமென்னுஞ் சங்கைத் தமது திருக்கரத்தாலெடுத்து, சப்த மேகமுந் திரண்டு முழங்குவதுபோலவும், சப்த சமுத்திரமும் பொங்கிச் சப்திப்பது போலவும், பதினன் குலகத்தையும் சங்கார காலத்தில் எடுத்துண்ட மிகச் சிவந்த பவளம் போன்றுள்ள தமது வாயில்வைத் தூதினர். அச்சங்கினெலி கௌரவரே! அவரைச் சேர்ந்தவரே! பாண்டவர் (கண்ணனுகிய) எனக் குயிரை யொத்திருப்பதனல், இந்தப்போரில் உங்களுக்குப் தப்பிப் பிழைத்த லுண்டாவதில்லை யென்று கூறுவதை யொத்திருந்தது.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் சங்கத்தொனி செய்த பின்னர்த் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவனென்பவர்கள் முறையே அநந்த விஜயம், பௌண்டரம், தேவதத்தம், சுகோ

¶ ராஜ நீதியும் தர்மமுமுடைய அரசரன்றி, அவையில்லாத அரசர் போரில் வெற்றிபெறுவதில்லை யென்பது பிரசித்தமாமாகலின், பீஷ்மாசாரியர் துரியோதனனது உள்ளம் தற்கால சந்தோஷமடையத் தமது சங்கை யூதினரென்க.

துரியோதனன் தனக்குத் துணையாகப் பதினோக்குரோணி சேனையிருக்கவும், பாண்டவரது ஏழக்குரோணி சேனைக்கொத்த வல்லமை யுடையதாகுமோ எனது சேனையென் றையுற்றமைக்குக் காரணம், தனது சேனையில் பாண்டவ சேனையை வெல்லத்தக்க சூர வீர புருஷ ரில்லாமையைக் கருதியேயா மென்க. உத்தர குமாரனைச் சாரதியாகக்கொண்டு, ஒருவனுக வந்த அருச்சுனனை நாம் விராடபுரச் சண்டையில் வெல்லாது தோல்வியடைந்தோமே! அவன் ஏழக்குரோணி சேனையுடனிருக்கும் போது அவனையும், அவனுக் குதவியாகவுள்ள சேனையையும் வெல்வ தெப்படி யென்றும் துரியோதனன் ஐயுற்றனென்க.

‡ பஞ்சஜன னென்னும் அசுரனது வயிற்றைக் கிழித்து அவனுடைய எலும்பினின்றும் எடுக்கப்பட்டமையால், விஷ்ணுவினது சங்கு பாஞ்சஜன்யமென்று கூறப்படுகின்றது.

டம், மணிபுட்பக மென்னும் தமது சங்குகளை இடியையொத்த தொனி பகைவரது செவியிற்படுமாறு ஊதினார்கள். இவர்க ளிவ்வாறு சங்குகளை யூதியவுடன் காசி ராஜன், சிகண்டி, திருஷ்டத்தியும்நன், விராடன், சாத்யகி, துருபதன், திரௌபதியின் புத்திரரைவர், அபிமந்யு ஆகிய சூரவீரர் பலரும் தத்தம் சங்கங்களைத் தனித் தனியாக வெடுத் தூதினார்கள். அவர்க ளூதுகின்ற சங்குகளின் ஓசை (தனது பிரதித்தொனி சப்தத்தால்) சென்று போர்முகத்து நின்றுள்ள கௌரவர்களது இருதயங்களைப் பேதித்து, அவர்களைச் சேர்ந்துள்ளார் யாவரும் அஞ்சி நடுங்குமாறு பூமியின் கண்ணே யன்றி ஆகாயத்தினும் வியாபித்து விட்டது. அதனால் இருதிறத்துச்சேனைகளும் போர்தொடங்கும் நிலைமையிலிருந்தன. அப்போது சுவேதாசுவங்களைப் பூட்டிச் செலுத்துந் தேரின்மீது காண்டீபமென்னும் வில்லுடன் போர்க்கோலமாகவுள்ள அருச்சுனன் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடத்து மனத்தளர்ச்சியோடு ஒரு வசனங் கூறுவானானான். (சுவேதாசுவம்—வெள்ளைக் குதிரை.)

அருச்சுனனது ஆரம்ப வசனம்.

உலகமனைத்தையும் படைத்துக் காத் தழிக்கும் ஸ்ரீ கண்ணபிரானே! பீஷ்மர், துரோணர் முதலிய சூர வீர புருஷருள் யாவர் எம்மோடு போர் செய்தற் பொருட்டு இந்த யுத்த பூமியின்கண் வந்தனர்; போர் செய்ய வந்துள்ள இவர்தம்முள் யாவரோடு யாம் போர்செய்யத் தொடங்கலா மென்று எவ்வளவு காலவளவில் யான் செவ்வையாக அறிந்து கொள்ளுதல் கூடுமோ அவ்வளவு காலவளவும், விருப்பமாகத் தேவரீர் செலுத்தும் எனது தேரை இவ்விரண்டு சேனையின் நடுவே செலுத்தி நிறுத்தக் கடவீரென்று கூறினான் அர்ச்சுனன். †

பின் யாது நிகழ்ந்ததென்று திருதராஷ்டிரர் வினவியதற்குச் சஞ்சயர் விடை கூறல்.

அருச்சுனன் இங்ஙனம் தம்மை நோக்கிப் பிரார்த்தித்த வளவில், ஸ்ரீ கண்ணபிரான் தாம் செலுத்தும் அருச்சுனனது தேரை

---

† எம்மைப் பாதுகாக்குமாறு எனக்குச் சாரதியாக வெழுந்தருளியுள்ள பகவானே! யானெனது தேரைச் செலுத்த வேண்டுமென்று தேவரீரை நோக்கிக் கூறுவதற்குத் தேவரீர் சினங்கொள்ளா திருத்தல் வேண்டுமென்பான் 'விருப்பமாகத் தேவரீர் செலுத்தும் எனது தேரை' என்று கூறினானென்க.

யுத்த பூமியின்கண் நிறைய வந்து நிற்கும் இரண்டு சேனையின் நடுவே செலுத்தி, பீஷ்மர் துரோணர் முதலிய சூரவீர புருஷர்க் கெதிரே நிறுத்தி, ஒருமித்துத் திரண்டுள்ள இக்கௌரவ சேனையை அருச்சுனா! நீ காணக் கடவாயென் றருளிச் செய்தனர். அவர் கூறியவாறே அருச்சுனன் பீஷ்மர் முதலாகவுள்ள அரசரையும் மற்றவரையும் தன்னெதிரே நன்றாகக் கண்டு, கருணை நிரம்பின வனாய்த் தழுதழுத்த சொல்லோடும் கலங்குகின்ற மனத்தோடும் ஸ்ரீ கண்ணபிரானை நோக்கித் தன் சத்தியளவாகச் சிலசொல்லத் தொடங்கி, சுவாமி! பூரிசிரவசு முதலிய தந்தைமாரும், பீஷ்மர் சோமதத்தர் முதலிய பாட்டன்மாரும், துரியோதனன் முதலிய சகோதரரும், துரோணர் கிருபர் முதலிய குருமாரும், அசுவத்தாமன் ஜயத்திரதன் முதலிய தோழர்களும், கிருதவர்மா, பகதத்தன் முதலிய மித்திரர்களும், இந்த யுத்த பூமியில் இராச்சியத்தை விரும்பிப் போர்புரிய வந்த எம்பொருட்டு, தமது உயிரைவிடத் தொடங்கி யிருக்கின்றனரென்று கூறி, பின் துரியோதனுதியர் மக்களான லட்சுமணன் முதலிய புத்திரரும், அவர்தம் புத்திரரும், சல்லியன் சகுனி முதலிய அம்மான்மாரும் இந்த யுத்தத்தி லிறந்து படுவரேயென்று அவர் மீது கிருபை செய்து, அதனு லுண்டாய சோகத்தால் மனக்கலக்க மடைந்து, வருத்த முற்றவ னாயினன். அங்ஙனமாய அருச்சுனன் மீண்டும் ஸ்ரீ கண்ணபிரானை நோக்கி எங்களைத் தேவரீர் காத்தருளல்வேண்டு மென்னும் குறிப்பினனாகச் சில சொல்லுவானாயினன்.

எமக்குத் தாயை யொத்துள்ள சுவாமியே! யுத்த பூமியி னிடத்து எம்மோடு போர்புரிய வந்து நிற்கின்ற பீஷ்மர் முத லியவரைக் காணுந்தோறும் எனது வாயானது செவ்வையாகப் பேச வாராததுந் தவிர முகமும் மலர்ச்சியடையாது வாடுகின்றது; மனமோ ஒன்றையும் ஆராய்ந்தறிய மாட்டாது சுழலுகின்றது; உடம்போ தீயேயென்று கூறுமாறு வெப்பமுற்று வாடுகின்றது; யானோ செவ்வையாக நிற்கச் சமர்த்தனாகா திருக்கின்றேன்; காண்டீப மென்னும் வில்லோ என் கையினின்றும் நழுவி விழு கின்றது; சமீப காலத்தில் துன்ப முண்டாதலைக் குறிப்பிக்கும் துர் நிமித்தம் பல (இடத்தோள் துடித்தல் முதலியனவாகத்) தோன்றுகின்றன. யான் எனதன்பிற்குரியவராய பீஷ்மர் முதலிய வரைக்கொன்று, அதனாலடையும் பயனையோ சிறிது மறியாதிருக்

கின்றேன்; எனக்குப் பீஷ்மர் முதலாயினோரைக் கொல்வதால் வரும் பயன் சிறிதுங் காணப்படாமையால், யான் யுத்த பூமியில் வெற்றி பெறுவதன்கண் விருப்ப மில்லாதவனா யிருக்கின்றேன். அதனால், இப் பகைவரை வெல்லுதலுடனே அரசாட்சியை யுத்தங் காரணமாக நீ யடைதல் கூடுமென்று என் சோகத்தை நோக்கித் தேவரீர் குறிப்பாக வுணர்த்துகின்றது யாது காரணம் பற்றியோ? (பகைவரை வெல்லுதல், அதனால் ராஜ்யத்தைப் பெறுதல், அதனால் விஷய சுகத்தையனுபவித்தலென்பனவற்றை விரும்பாதுள்ள எனக்கு) அதனைத் தேவரீர் அருளிச்செய்தல் வேண்டும். *

அருச்சுனன் எனக்குப் போர் செய்வதன்கண் விருப்ப முண்டாகவில்லை யென்று கூறல்.

(தனது விருத்தராய மாதா பிதா முதலாயினோரைப் பாதுகாத்தற் பொருட்டு, ஒருவன் அறமல்லாத வற்றையுஞ் செய்யலாம்; அஃதவனுக்குத் தோஷமாகா தென்று அறநூல் கூறுதலின், அருச்சுனா! உனக்கு ராஜ்யத்தின்கண் விருப்ப மின்றாயினும், உனது சம்பந்திகளுக்கு ராஜ்ய போகங் கிடைத்தற் பொருட்டு, நீ யுத்தத்தின்கண் பிரவிர்த்தித்தல் வேண்டுமென்று பகவான் வினவுவா ரென்னும் ஆசங்கையை மேற்கொண்டு, மீண்டும்) மலையை யொத்த தோள்களையுடைய பகவானே! ராஜ்யம், அவ் விராஜ்யத்தால் வரும் போக வேதுவான விஷயம், அவ்விஷயத்தா லடையும் சுகமென்று கூறப்படுவனவற்றை யெச்சிலர் பொருட்டு உலகத்தார் முயற்சி செய் தடைவரோ, அவர்கள் தமது பொருள்களிலும் தமது வாழ்நாளிலுமுள்ள விருப்பத்தை நீக்கி வந்து, வரிசையாக ஒருவர் முன் மற்றொருவராக இந்த யுத்த களத்தின்கண் நிற்கின்றனர். இவர்களுள் சிலர் எமது ஆசிரியராவர்; சிலர் தந்தையராவர்; சிலர் புத்திரராவர்; சிலர் மூதாதையராவர்; சிலர் மாதுலராவர்; சிலர் அம்மான்மாராவர்; சிலர் பௌத்திரராவர்; சிலர் மைத்துனராவர்; சிலர் சம்பந்திகளாவர். இவர்களோடு போர்செய்வதா லுண்டாகும் பயன் ராஜ்யம் விஷயம் போகம் என்னும் இவையேயாம். யானோ

*தேவரீர் உறவினர் முதலாயினோரைக் கண்டு சோக மோக மடையா திருத்தல்போல, உம்முடைய அடியவனாய என்னையும் சோகமோகமில்லாத வாறு செய்யவேண்டுமென்னுங் குறிப்பினனாய், அருச்சுனன் இங்ஙனங் கூறினானென்க.

அவற்றை விரும்பா திருக்கின்றேன். அதனால் யாங்கள் கருணையில்லாது அந்தப் பீஷ்மர் முதலாயினோரைக் கொன்றால், எங்களுக்குப் பாவ முண்டாதலே யன்றி யொரு சுகமும் எவ்விடத்துமுண்டாவதில்லையாம். (தேவரீர், நீ கருணையால் இப்பீஷ்மர் முதலாயினோரைக் கொல்லா தொழியின், அவர்கள் ராஜ்யத்தின் மீதுள்ள விருப்பத்தால் உன்னை நிச்சயமாகக் கொன்றுவிடுவார்கள்; அதனால், நீ அவர்களைக் கொன்று ராஜ்யத்தைப் பெறுதல் வேண்டுமென்று கூறுவீராயின், எனக்கு ராஜ்யத்தின்கண் விருப்பமின்மையின், யான் அவர்களோடு போர் செய்யமாட்டேன்;) அவர்கள் தமது வில் திறத்தால் என்னைக் கொல்வதா யிருப்பினும், யான் அவர்களைச் சுவர்க்க மத்திய பாதாள மென்னு மூவுலகும் எனக்குக் கிடைப்பதா யிருப்பினும் கொல்ல மாட்டேன்; அத்தன்மையனான நான் இம் மண்ணுலகத்தைப் பெறுதற் பொருட்டு, அவர்களைக் கொல்வேனோ? கொல்லவே மாட்டேன்.

(அருச்சுனா! நீ பீஷ்மர் முதலாயினோரைக் கொல்வது பாவஹேதுவா மென்று கருதுவாயாயின், அவர்களைக் கொல்வதொழிந்து, அரக்குமாளிகையில் தீ மூட்டல் முதலிய கொடுஞ்செய்கைகளை உங்கள் பொருட்டுச் செய்த துரியோதனன் முதலாயினோரைக் கொல்லக் கடவாய்; அதனா லுங்களுங்குப் பாவமுண்டாகாதென்று பகவான் கூறுவாரென்னும் ஆசங்கையை மேற்கொண்டு மீண்டும் பகவானே!) அரசராயினோர் தமது குலத்தை நாசமாமாறு செய்தலா லுண்டாகின்ற தோஷத்தையும், உண்மையாய நட்பின ரிடத்துத் துரோகஞ் செய்வதாலுண்டாகின்ற தோஷத்தையும், ஆததாயிகளான துரியோதனன் முதலாயினோர் விசாரித் தறியாது மறந்தாலும் மறக்கக் கடவர்; குலத்தைக் கெடுத்தலும், நட்பினர்க்குத் துரோகஞ்செய்தலும் பெரும் பாதகச் செயலா மென்பதை விசாரித்தறிந்த நான் அவற்றைக் கருதா தொழிவேனோ? †

---

† தீக் கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில் விழைவா ரென்றிவர் முதலாயினோர் ஆததாயிகளென்று கூறப்படுவர்; இவர்களை யரசர் கண்ட மாத்திரத்தில் கொல்லவேண்டு மென்று அர்த்த சாஸ்திரங் கூறுகின்றது; அதனால், ஆததாயிகளாகிய துரியோதனன் முதலாயினோரை அருச்சுனா! நீ கொல்லலாம்; அதனா லுனக்குப் பாவ முண்டாகாதென்று பகவான் கூறுவாரென அருச்சுனன் கருதி, தர்ம சாஸ்திரம் எந்தப் பிராணிக்கும் மக்கள் இம்சை செய்தல் கூடா தென்று கூறுகின்றது; அஃது அர்த்த சாஸ்திரத்தினும் மேலாயது; அத் தரும சாஸ்திரத்தை மேற்கொண்டுள்ள எனக்கு ஆததாயிகளாய துரியோதனன் முதலாயினோரைக்கொல்வது அருவருப்பாகத் தோன்றுகின்றது; அதனால், அக்கொலைத்தொழிலை மேற்கொள்ள யான் விரும்பா திருக்கின்றே னென்பது மேலே அருச்சுனன் கூறியதன் கருத்தாம்.

அருச்சுனன் யுத்தத்தால் வருங் கேட்டினைக் கூறல்.

ஒருவனது குலம் நாசமாகவே, அதனால் அக்குலத்தார் பரம்பரையாக அனுஷ்டித்து வருகின்ற குலத்தின் சர்வ தர்மங்களும் நாச மடைவனவாம்; அத்தர்மங்கள் நாசமாகவே, நன்மார்க்கத்தி லொழுகச் செய்யும் புருஷரில்லாமையால் எஞ்சியுள்ள குலத்தை அதர்மந் தன் வசமாக்கிக் கொள்ளுவதாம்; அநாசார வடிவமாய அதர்மம் வந்து அக்குலத்தினரைத் தனது வசஞ் செய்து கொள்ளவே, அக்குலத்திலுள்ள குலமாதர் யாவரும் தமது சன்மார்க்கத்தி னின்றும் பிறழ்ந்து வியபிசாரிகளாய் விடுவர்; அவர்கள் வியபிசாரிகளாகவே, உலகத்தின்கணுள்ள குல முற்றும் நெறி தவறிக் கெட்டுப்போம்; போகவே, அந்த ஸ்திரீகளிடத்து ஜாதிக் கலப்பாய புத்திரர்களுண்டாவார்கள்; ஜாதிக் கலப்பானது அக்குலத்திலிருப்பவர்க்கும் அக் குலத்தோடு கூடாமல் அது கெடுதற்குரிய செயலைக் கருதிச் செய்தவர்க்கும் மீளா நரகத்தைத் தருவதாம். அச்சாதிக் கலப்பால் உண்டாகுந் துன்பங்களை யெவ்வளவென்று வரையறுத்துக் கூறுவேன்? கூறுதல் முடியாது. முன்னே யிறந்து சுவர்க்கத்தை யடைந்துள்ள ஜாதிக் கலப்பானவரது பிதிரரும் தம்மைக் குறித்துத் தானதருமஞ் செய்யும் புத்திரரைப் பின்னே பெறுமையால் தமக்குப் பொருந்துவதாய பிண்டக் கிரியை ஜலக்கிரியைகளைத் தாம் பெறுதலில்லாது சுவர்க்கத்தினின்று மிழிந்து, இருள் வடிவ நரகங்களில் வீழாநிற்பர். பரம்பரையாக வருகின்ற குலத்தை மயங்கச் செய்தவர்க்கும் ஜாதிக் கலப்புடைய குலத்தி லிருப்பவர்க்கும் அறவினை செய்தவன்கண் விருப்பந் தோன்றுவதில்லையாம்; அதனால், அவர்களிடத்து ஜாதி தருமமும் குலதருமமும் குறைந்து கெடுகின்றன; ஜாதி தருமமும் குலதருமமும் குறைந்து கெடவே, அதனால் அவர்க்குமீளாத நரக முண்டாகின்றதென்று பெரியார் கூறுகின்றனர்.

அருச்சுனன் தான் குண தோஷங்களை யறிந்திருந்தும்,
பந்து மித்திரர் முதலாயினோரைக்கொல்ல யுத்த பூமியின்கண்
வந்தமைபற்றி, தன்னையே பழித்துக் கூறல்.

யான் மின்னலை யொத்து விரைவிலழியுந் தன்மையதாய ராஜ்ய சுகத்தை விரும்பித் தம் முடம்பின்கணுள்ள உயிரை வீணாகவே போக்க யுத்த பூமியின்கண் வந்து நிற்கின்ற துரியோதனன் முதலாயினோரைக் கொல்லத் துணிந்த தீவினை யுடையவ

ஞயினேன். இஃதென்ன வியப்பு! மிகக் கொடிய பெரும் பாவத்தை யடையுமாறு யான் கருதி விட்டனன். யான் ஆயுத பாணிகளாயுள்ள துரியோதனன் முதலாயினோர் முன்னே ஆயுதங் களை யெடாது போர் செய்வதொழிந்து நின்றால், இத்துரியோத னன் முதலாயினோர் என்னைக் கோபித்துக் கொல்வரோ? கொல்ல மாட்டார். அவர்கள் என்னைக் கொல்வதாயினும், குணதோஷங் களை யறிந்துள்ள எனக்கு இக்கொலையைப் பொறுத்துக் கொள்ளு தலே க்ஷேமந் தருவதாமென்று கூறினன் அருச்சுனன். அங்ஙனங் கூறிய அருச்சுனன் பின் யாது செய்தனனென்று திருதராஷ்டி ரர் வினவுவாரென்று கருதிய சஞ்சயர் திருதராஷ்டிரரே! மலையை யொத்த தோளையுடைய அருச்சுனன் தனதபிப்பிராயத்தை ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்துக் கூறி, வில்லுடனே அம்பு நழுவி விழ வும், கண்களில் நீர் ஆறாய்ப் பெருகவும் தேரின்மீது செய்வ தறி யாது செயலற்றிருந்தன னென்று கூறினர்.

1-அருச்சுனன் சோக வத்தியாயம் முற்றிற்று.

2-சாங்கியயோக வத்தியாயம்.

பகவான் அருச்சுனனது சோகம் நிவிர்த்தியாமாறு
அவனுக்குச் சாங்கிய யோகத்தை யுபதேசித்தல்.

அருச்சுனன் எந்தப் பிராணியையும் கொல்லாமையும், பிட் சான்ன போஜனமுமாமென்னு மிரண்டுமே எனக்கு மேலாய தர்மமா மென்னும் புத்தியோடு யுத்தஞ் செய்வதன்கண் பராமுக மாயினனென்று சஞ்சயர் கூறியதைக் கேட்டு நமது புத்திரர்க்கே இராச்சியம் நிச்சயமாகக் கிடைத்துவிடுமென்று சந்தோஷமுற்று, அதன்பின் யாது நிகழ்ந்தது என்று வினவிய திருதராட்டிரரை நோக்கி, சஞ்சயர் அவரது துராசையை நிவிர்த்தி செய்தற் பொருட்டுப் பின்னர் நிகழ்ந்ததைக் கூறத்தொடங்கி, திருதராஷ் டிரரே!

இவ்வாறு செய்யத்தக்க திது, செய்யத்தகாத திதுவென்னும் விவேகம் விலகுமாறு பீஷ்மர் துரோணர் முதலாயினோரைக் கொல்வது பாவகாரியமாமே யென்று உண்டாகின்ற சிநேகவடி வக் கிருபையால் தான் செய்தற்குரிய காரியத்தை யறியாது,

தனது தேரின்மீது கண்ணீர் ஆருய்ப் பெருகச் சோகத்தை யடைந்திருந்த அருச்சுனன் சோகத்தினின்றும் நீங்கிக் கடைத் தேறுதற்குரிய சாதனங்களை யாராய்ந்து, அவனுக்கு அவற்றை ஒருவிதமாக, உயர்ந்தோர் சச்சிதாநந்த வியாபக வடிவினனென்று சிறப்பித்துக் கூறுகின்ற கிருஷ்ணபகவா னுபதேசிக்கத்தொடங்கி, அருச்சுன! இச்சோகமானது அவிவேகிகட்கும் பேடிகட்கும் கிடைத்தற் குரியதாம்; நீங்காத அபகீர்த்தியைத் தருவதாம்; செய்யத்தக்க திது, செய்யத்தகாத திது வென்னும் உனது பூரண விவேகத்தைக் குறைப்பதாம்; துன்பந் தருவதற் குரியனவற்றுள் மிகவுந் துன்பந் தருவதாம்; மீளாத நரகத்திற் றள்ளுவதாம்; உன்னை யொத்த க்ஷத்திரியர்க்குத் தகுதியற்றதாம். இஃது இந்த யுத்த பூமியின்கண் உன்னை யெந்த வழியால் வந்தடைந்த தென் பதை யானறியா திருக்கின்றேன் பரமேசுவரனோடு மெதிர்த்துப் போர் செய்த அருச்சுன! உனக்கு இச்சோகம் தகுதியுடைய தாகாது; நீ இச்சோகத்தை நீக்கிப் பகைவரோடு போர் செய்ய முயல்வாயாக என்று கூறினர். $

அதற் கருச்சுனன் விடை கூறல்.

பகவானவ்வாறு கூறியதைக் கேட்ட அருச்சுனன் பக வானே! புஷ்பம், சந்தனம், அட்சதை முதலியவற்றால், மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரண சுத்தியோடு மிகவும் பூசை செய்தற்குரியவராகிய பீஷ்மர் துரோணர் முதலாயினோரை யானெவ்வாறு இந்த யுத்த பூமியின்கண் கொடிய அம்புகளால் கொல்லுதற் குரியவனுவேன்? அவர்களைக் கொல்ல வுடன்பட மாட்டேன். (அங்ஙனமாயின், அருச்சுன! நீயெவ்வாறுய்தல் கூடு மென்று தேவரீர் வினவுதல் கூடும். பகவானே!) பகைவரென்று கருதி, கல்வி கேள்வி முதலியவற்றால் மிகப் பெரியவராயுள்ள இந்தப் பீஷ்மர் துரோணர் முதலாயினோரைக் கொன்று பெறும்

$ மோட்சத்தில் விருப்புடையானுக்கும், சுவர்க்கத்தில் விருப்புடையா னுக்கும், கீர்த்தியில் விருப்புடையானுக்கும், சுவதர்மத்தினின்றும் நிவிர்த்தி யடைதல் தகுதியற்றதாம்; அங்ஙனமாக, மோட்சம், சுவர்க்கம், கீர்த்தி யென்னுமிம் மூன்றனிடத்தும் விருப்புடைய நீ இச்சோகத்தை யடைதல் எவ்வாற்றானும் தகுதியற்றதாம்; அதனால், இச்சோகம் இந்த யுத்த பூமி யின்கண் உன்னை யெந்த வழியால் வந்தடைந்த தென்பதை யானறியா திருக்கின்றே னென்று பகவான் கூறினரென்க.

பெரிய ராஜ்ய போகத்தினும் இவர்களது மகிமையைக் கூறி, பிற ரிடத் திரந் துணவுண்டல் மேன்மையானதா மன்றோ? இவ்வாறு செய்யாது, இந்த யுத்த பூமியின்கண் இந்தப் பீஷ்மர் துரோணர் முதலாயினோரது உயிரை யமனுண்ணுமாறு செய்வேனாயின், யான் பின்னனுபவிக்கும் போக மனைத்தும் அவர்களது உதிரத் தாற் சமைத்த சோற்றை யுண்பது போலவாம். (அருச்சுனா! க்ஷத்திரியர் பிச்சை யன்ன முண்பது கூடாது; யுத்தஞ் செய்வது அவர்கட்குச் சுவதர்மமா மென்று சாஸ்திரங் கூறுதலின், சுவதர்ம மாயுள்ள யுத்தமே உனக்கு மேன்மை தருவதா மென்று பகவான் கூறுதல் கூடுமென்று கருதி, யான் எனக்குச் சுவதர்ம மாவதால்) வில்லிற்றொடுத்துள்ள அம்பைப்பிரயோகித்து, பீஷ்மர் துரோணர் முதலாயினாரோடு போர் செய்வதோ? அதனை யொழித்துப் பிச்சையெடுத் துணவுண்டலோ? எனக்கு மேன்மை தருவது? அதனை யானறியா திருக்கின்றேன். தேவரீர் அருளியவாறு யான் போர் செய்யத் தொடங்கினாலும், அவர்களென்னை வெல்வாரோ? யானவர்களை வெல்வேனோ? அதனையும் யானறியா திருக்கின் றேன். இந்த யுத்த பூமியின்கண் போர்செய்ய வந்துள்ள பீஷ்மர் துரோணர் முதலாயினோருள் சில ரிறப்பாராயின், அதனாலே என் னுயிர் என்னுடலை விட்டு நீங்கிப் போவதாம். அவர்களே எங்க ளோடு நீங்கள் போர் செய்யக் கடவீராகவென் றறைகூவி, வெற்றி பெறுதலை முன்னிட்டு நிற்கின்றனர். உற்பத்தி நாச மில்லாத தனி முதற்பொருளா யிருக்கும் பகவானே! அக்காரணத் தால் எனது ஞான நேத்திரத்தைப் பீஷ்மர் துரோணர் முதலாயி னோரிடத்து யான் வைத்துள்ள காதலென்னுமிருள் மறைத்து விட்டது; அஃதங்ஙனம் மறைக்கவே, யான் கடைத்தேறு மார்க் கத்தை யெவ்விடத்துங் காணாதிருக்கின்றேன்; அவ்வாறிருத்த லால், எனக்குப் பொருந்துதற்குரிய மேன்மையை யறியா திருக் கின்றேன். எனக்கு அம்மேன்மையைத் தேவரீ ருரைத்தருளல் வேண்டு மென்று கூறினான்: அங்ஙனங் கூறினவன் பின்னும்,

அருச்சுனன் பகவானை நோக்கி என் சோகம் நீங்குதற்குரிய சாதனத்தைத் தேவரீர் கூறல் வேண்டுமெனல்.

(புத்திர னல்லாதவனுக்கும், மாணாக்க னல்லாதவனுக் கும் பிரஹ்ம வித்தையை யுபதேசஞ் செய்தல் கூடாதென்று சாஸ்திரங் கூறுகின்றது; அருச்சுனா! நீ அவ்விருவருள் எவனு

மன்றும் ; ஆனால், சிநேகிதனுவை ; அதனால் யான் உனக்கெவ்வாறு பிரஹ்ம வித்தையை யுபதேசிப்பேனென்று பகவான் கூறுதல் கூடுமென்றுட்கொண்டு) செந்தாமரை மலர்போலுந்திருக் கண்களையும் மேகம்போலும் திருமேனியையு முடைய சுவாமி! சோகத்தினின்றுங் கடக்கு மார்க்கத்தை நீ மாணுக்கனுய்க் கேளாதுள்ளவளவும் யான் உனக்கு உபதேசிப்பனோ வென்று கருதுவீராயின், அங்ஙனம் தேவரீர் கருதுதல் கூடாது. இப்போ தடியேன் எனக்குத் தேவரீரே துணை யென்று கருதி, உம்மைச் சரணுகதியாக வடைகின்றேன் ; தேவரீரைத் தண்டம்போலப் பூமியின்மீது விழுந்து நமஸ்காரஞ் செய்கின்றேன் ; நான் உம்முடைய மாணுக்கனுய் உம்முடைய பாத தாமரையை யென் சிரசிற் றரிக்கின்றேன். அதனால், தேவரீர், அருச்சுனு! நீ அஞ்சவேண்டாமென்று கூறி, இந்த யுத்த பூமியின்கண் யான் செய்தற்குரிய காரியத்தில் என்னைச் செலுத்தி, எனக்கு அனுக்கிரகஞ் செய்வீராக.

(அருச்சுனு! நீ சர்வ சாஸ்திர பண்டிதனு யிருத்தலின், நீயே விசாரஞ்செய்து, செய்தற்குரிய காரியத்தைச் செய்யக்கடவாய் ; எனக்கெதன் பொருட்டு நீ மாணுக்கனுதல் வேண்டுமென்று பகவான் கருதுதல் கூடுமென் றுட்கொண்டு பின்னும்) பகவானே! பகையின்றிப் பூலோகத்தை யாளும் பெருஞ் செல்வத்தையேயன்றி, சுவற்ப காலத்திற் கெடுவதாகாத சுவர்க்க லோகத்தை யாளும் மாட்சிமையைப் பெறுவதா யிருப்பினும், என்னுடைய சரீரத்தையும் இந்திரியங்களையும் வருத்துகின்ற இச்சோகம் ஒருபோதும் அடையாமலும், அஃதொரு சமயம் வந்தாலும் வருத்தாமலும் அதனைக் காக்கத்தக்க வுபாயத்தை யிவ்வுலகத்தி லெவ்விடத்தும் யானறியா திருக்கின்றேனென்று கூறி யழுதுகொண்டு மௌனமாக விருந்தான்.

பகவானது உபதேசம்.

இவ்வுலக போகமும், சுவர்க்கலோக போகமும் புண்ணிய கர்ம முடையவர்க்குக் கிடைப்பனவாம் ; ஆனால், அப்போகங்கள் சில காலத்தில் அழிவனவாம் ; அதனால், அப்போகங்கள் சோகத்தை நிவிர்த்திசெய்தற் குரியனவன்று மென்று கருதி அவற்றை வெறுத்திருந்த அருச்சுனன் பின் யாது செய்தனனென்று திருதராஷ்டிரர் கேட்க, சஞ்சயர் பின்னிகழ்ந்ததைக் கூறத் தொடங்கி, திருதராஷ்டிரரே! நெய்யாறு பெருகி யோடு

வதுபோலத் தன் மார்பின்கண் கண்ணீராறு பெருகியோட அழுது கொண்டு மௌனமாக விருந்த அருச்சுனன், பீஷ்மர் துரோணர் முதலாயினோர் மீது தான் கொண்டுள்ள காதலென்னுங் கொடிய அக்கினியால் வெந்தழியாவாறு, பிரதியுபகாரத்தை விரும்பாது பிராணிகளைக் காப்பதையே தமக்குக் கடமையாகக் கொண்டுள்ள கிருஷ்ணமூர்த்தி தமது உபதேச மென்னும் கிருபா வருஷத்தால் அச் சோகாக்கினியை யவிக்கத் திருவுளங் கொண்டார்; அங்ஙனங் கொண்டவர் அவ்விரண்டு சேனைகளின் நடுவே சோகத்தை யடைந்து, அழுதுகொண்டு மௌனமாக விருந்த அருச்சுனனைக் கருணையோடு நோக்கி, மேகத்திற்றோன்றும் சிறு மின்னல் போலச் சிறிது புன்னகைசெய்து, அருச்சுனனுக்கு நீங்காதுள்ள சோகம் நீங்குதற்குரிய சாதனத்தை யாராய்ந் தறிந்து, கிர்த்தோஷமாய் அநாதியாயுள்ள வேதங்களெடுத்துக் கூறி முடியும் பொருளாய், சர்வத்திற்கு முதற் பொருளாய்ப் பரமாத்மாவா யுள்ள தம்மை (சிதாநந்த வடிவப் பிரஹ்மத்தை) யுள்ளவாறு அவ் வருச்சுனனுக்குத் தாமே உபதேசிக்கத் தொடங்கி, அருச்சுன! ஆத்மா சித்தாயும் உடம்பு சடமாயு மிருத்தலினாலும், சித்து நித்தியமாயும் சடம் அநித்தியமாயு மிருத்தலினாலும், நானென்பதன் பொருள் எவ்வகையாலும் உடம்பாகா திருத்தலினாலும், எவரும் எவராலும் எதனாலும் சாவதே யிலராவர்; அஃதிருக்கட்டும்; மற்றொன்று கூறுகின்றேன்; கேட்கக் கடவாய். இந்த யுத்த பூமியின்கண் மரணமாய் விடுவாரென்று நீ யெண்ணுகின்ற பீஷ்மர் துரோணர் முதலிய மகாரதர் யாவரும், கெடுதற்கரிய தீவினைகளைச் செய்யாது, நல்வினைகளைச் செய்து வந்தமையாலே இந்த யுத்த பூமியின்கண் மரண மடைதற்கு முன்னரே சுவர்க்க லோகத்தை மிக மேலாக அடைவதற்குரியவரா யிருக்கின்றனர்.

அருச்சுன! நீ சோகித்தற் குரியவராகாத பீஷ்மர் துரோணர் முதலாயினோரைக் குறித்துச் சோகித் தழுதலாலும், சொல்லற்கரிய நற்குணங்களை யுடைய பண்டிதர்கள் பேசுவது போலக் கிரமமாகப் பேசுவதாலும், பிராந்தி மிக்கு மனமயங்கி யிருக்கின்றனைபோலும்! இம்மயக்க புத்தி பண்டிதனை யுனக்குத் தகுதி யுடையதாகாது;-அதனால், இச்சோகத்தை யொழிக்கக் கடவாய்; இனி யாம் கூறும் இவ் வசனங்களையும் கவனமாய்க் கேட்கக் கடவாய். ஆத்மா இத்தன்மையது; அநாத்மா இத்தன்மைய தென்

பனவற்றைச் செவ்வனே ஆராய்ந் தறிந்துள்ள பண்டிதர்கள் இறந்தொழிந்த வுறவினரைப் பற்றியும், இறவாது வாழும் உறவினரைப் பற்றியும் சோகமடைதலிலராவர்; அவர் சோகமடையாதிருத்தலை அருச்சுனா! நீ அறியாய் போலும்! அருச்சுனா! நீ இத்தேகத்தையே ஆத்மாவென்று கருதி, பீஷ்மர் துரோணர் முதலியோரைப்பற்றிச் சோக மடைந்திருக்கின்றனை. இங்ஙனம் சோகமுறுகின்ற நீயும் பீஷ்மர் துரோணர் முதலிய இந்த வீரர்களும், உனக்கிப்போது குருவாகவிளங்குகின்ற யானும், சுருதி யுக்தி யநுபவ வாயிலாக ஆராயுமிடத்துச் சேதனமாக இருக்குந் தன்மையால், உலகத்தில் இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் * எக்காலத்திலும் இருக்கின்றோம்.

(அருச்சுனா! நீ உடம்புண்டாம்போது உயிருண்டாகின்றது, அது நாசமாம்போது உயிரும் நாசமாகின்றதென்று கருதுதல் கூடும்; அவ்வாறு கருதுதல் தவறுடையதாம்.) இறப்பதென்பது உடம்பேயாம்; அவ்வுடம்பினு ளிருக்கின்ற ஆத்மா இறவாது எப்போதும் ஒரு தன்மையதாக நிர்விகாரமா யிருப்பதாம்; அது தேகத்தின்க ணிருக்குந் தன்மையைக் கூறுகின்றேன், கருத்தாய்க் கேட்கக் கடவாய். இவ்வுடம்பு முன் தானடைந்துள்ள பாலப் பருவத்தை விட்டு யௌவனப் பருவத்தை யடைந்து, அதன்பின் வயோதிகப் பருவத்தை யடைவதாம்; அஃதங்ஙன மடையினும், அதற்கு எவ்வகையாலும் வேறாயுள்ள ஆத்மாவிற்கு அவை சம்பவிப்ப தில்லையாம். †

ஆத்மாவிற்கு அநித்தியத்துவம் எவ்வகையாலும் சம்பவியாதெனல்.

அருச்சுனா! உடம்பினிடத்துப் பாலப்பருவத்திற்குப் பின் யௌவனப்பருவமும், அதன்பின் வயோதிகப்பருவமும் வருதல்

---

* எக்காலத்திலும் இருக்கின்றோ மென்று பகவான் கூறினமையால், ஆத்மாவிற்கு உற்பத்தி நாச மில்லை யென்பதும், பலவா யிருப்பன பரிச்சின்னமாய் அநித்தியமா யிருத்தல் நியமமாகலின், ஆத்மா உபாதியால் பலபோல விருக்கின்றதென்பதும், நான் நான் என்னும் வியவகாரம் நிகழாதவிடம் யாண்டு மின்மையின், அஃதெத்தேசத்தினும் வியாபகமா யிருக்கின்றதென்பதும் பெறப்பட்டன வென்க.

† பகவா னிங்ஙனம் கூறினமையால், பாலப்பருவம் யௌவனப்பருவம் வயோதிகப்பருவ மென்னும் அவஸ்தைகள் உடம்பின் தருமமன்றி, ஆத்மாவின் தரும மன்றென்பது பெறப்பட்டதென்க.

போல ஆன்மாவினிடத்து முன்னுடம்பு நீங்க அதன்பின் மற்றொ ருடம்பு (சூக்குமவுடம்பு வாயிலாக) வருகின்றது; அவை யங்ங னம் வருமிடத்து எனது வடிவமாய ஆன்மாவோ செத்துப்பிறப்ப தில்லை ; செத்துப் பிறப்பது உடம்பேயாம் ; அதனால், ஆத்மா நித்தியமா மென்பதைச் சுருதி யுக்தி அனுபவ வாயிலாக வறிந்த தீர புருஷன், அங்ஙன மறிந்தபின் யானெனதென்னு மபிமானம் சிறிது மில்லாதவனா யிருப்பன் ; அதனால், அவன் தன்னுடம்பு அழிந்தொழியுங் காலத்திலும் எதனையும் என்னுடையதென்று கருதான்; அதனால் ஒரு சிறு துன்பத்தையும் அடையான். இதனை நீ சிந்தித்து நோக்கித் துன்பமடையா திருப்பாயாக.

இங்ஙனமாயின், உஷ்ணம்—சீதம், துக்கம்—சுகமென்றற் றொடக்கத்துத் துவந்துவங்களை நிஷ்கிரியமாயுள்ள ஆத்மா யான் சுகி, யான் துக்கியென் றடைவது யாது காரணத்தாலென்று அருச்சுனா ! நீ வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன்; கேட்கக் கடவாய். உண்மையாக ஆராய்ந்து நோக்குமிடத்து ஐந்து கூறுபா டுடையனவாயுள்ள செவி முதலிய இந்திரியங்களும், ஓசை முதலிய விஷயங்களும், முறையே அறிவன அறியப் படுவன வென்னும் சம்பந்த முடையனவாய்த் தம்முட் கூடித் தம்மோடு சம்பந்தமாயுள்ள அந்தக்கரணத்திற்கு அத் துவந்துவங்களை யுண் டாக்குகின்றன ; அதனால், அந்தக்கரண தர்மங்களாய அத் துவந் துவங்கள் அவ் வந்தக்கரணத்தின்கண் பிரதிபிம்ப ரூபமாயுள்ள ஆத்மாவினிடத்துத் தோன்றுகின்றன ; உண்மை நோக்கில் ஆத் மாவினிடத்துத் துவந்துவங்கள் சம்பவிப்பதே யில்லையாம்.

சீதம் உஷ்ணம், சுகம் துக்கம் என்றற் றொடக்கத்துத் துவந் துவங்களின் தன்மையைக் கூறுகின்றேன்; கேட்கக் கடவாய். அத் துவந்துவங்கள் அஸ்திரமாய் நாசோற்பத்தி யுடையனவா யிருக் கும். அதனால், அருச்சுனா ! நீ அத் துவந்துவங்களை அந்தக்கரண தருமமென் றுணர்ந்து பொறுத்துக்கொள்ளக் கடவாய். அருச் சுனா ! நீ அத் துவந்துவங்களைப் பொறுத்துக்கொள்வதனால் வரும் பயன் யாதென்று வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின் றேன்; கேட்கக் கடவாய். அத் துவந்துவங்களைத் தனது அந்தக் கரண தருமமாகச் சந்தேகவிபரீதமில்லா துணர்ந்து பொறுத்துக் கொண்டிருக்கிற தீர புருஷனை அத் துவந்துவங்கள் தனது நிலையி னின்றும் கலங்கச் செய்வதில்லையாம்; அதனால், அவன் சர்வதுக்க

நிவிர்த்தி பரமாநந்தப் பிராப்தி வடிவ மோட்சத்தை யடைதற் குரியவனாகின்றான். துவந்துவங்களைப் பொறுத்துக் கொள்வதன் முக்கியப் பயன் மோட்சமாம்.

[ஆத்மா அநாத்மா (தேகாதிப் பிரபஞ்சம்) போலத் தோன்று தலின், அது சத்தா அசத்தா என்றருச்சுனன் சங்கித்தல் கூடு மென்று பகவானுட்கொண்டு] மண்ணின் காரியமாய கடம் கலச முதலிய வனைத்தும் காரணமாய அம்மண் மாத்திரமாகவே யிருப் பனவாம்; காரணமாய அந்த மண்ணை யொழித்துக் கடம் கலச முதலியவற்றைச் செய்தா ரெவருமில்லை; மண்ணினின்றும் செய் யப்பட்ட கடம் கலச முதலியவற்றை யெல்லாம் சிந்தித்து நோக்கு மிடத்து அவை யுண்டாவதற்கு முன்னும், அழிந்த பின் னும், இவ்விரண்டிற்கும் நடுவே தோன்றுங் காலத்திலும் தமது காரணமாய மண்ணைத் தவிர வில்லையாம். அவற்றைப் புத்தியால் நன்றாக வாராய்ந்து நோக்கி மண்ணைத்தவிரக் கண்டவ ரிருக்கின் றனரோ? இதற்கு விடை நீ சிந்தனை செய்து கூறக்கடவாய்.

அருச்சுனா! நீ அவ்வுவமானத்தின்படி உவமேயத்தின் தன்மை யைக் கேட்கக் கடவாய். சத்துப் பொருள் எவ்விடத்தும் எக் காலத்தும் நாசமாவ (அசத்தாவ) தில்லையாம். இதற்கு வேறாய தென்றுள்ள அசத்துப்பொருள் எவ்விடத்தும், எக்காலத்தும் சத் துப் பொருளாவ தில்லையாம். இவ்விரண்டும் தத்துவ சாஸ்திர விசாரத்திற்கு விஷயமாயுள்ள பொருளாம். பரமாத்மாவாகிய என்னை யுள்ளவா றறிந்தவர் சத்து அசத்து என்னு மிவற்றை யறி தற்குரியவராவார்; மற்றவ ரறிதற்குரியராகார்.

(கடம் கலச முதலியன தமது காரணமாய மண்ணைத் தவிர வில்லாமைபோல உலகமும் தன் காரணமாய ஆத்மாவைத் தவிர வில்லையாம்; இருப்பதென்பது ஆத்மாவேயாம்.) இவ்வாத்மாவின் சத்துத் தன்மையை யின்னுங் கூறுகின்றேன், அதனை நீ கவன மாய்க் கேட்கக்கடவாய். (கானலின்கண் நீர்போலக் கற்பித மாய்த் தோன்றுகின்ற) சப்த பரிச ரூப ரச கந்தங்களும், ஆகா சாதிக் கிரமமாகத் தோன்றுகின்ற பஞ்ச பூதங்களும், உற்பத்தி யாங் காலத்தில் அவை யுற்பத்தியாவதற் கிடமாயும், சப்தபரிச முதலியவற்றை விடாதுபற்றித் தொடர்ந் தெழுகின்ற அந்தக் கரண விருத்தி யனைத்தையும் அறியா நிற்கும் ஸ்புரணரூப காரண மாயும், இறந்த காலமும் எதிர்காலமு முடைய தாகாது எக்காலத்

திலு மிருப்பதாயு முள்ள ஒப்பற்ற பொருளே ஆன்மாவாம். அருச்சுனா! நீ தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துவாலும் கண்டமா யழியாதுள்ள சத்துப் பொருளாயிருப்பது யாது? அதனைத் தேவரீர் விளக்கமாகக் கூறல்வேண்டு மென்பா யாயின், கூறுகின்றேன்; கேட்கக்கடவாய். அது பிறத்தல் முதலிய விகாரமற்ற ஞானவடிவமாய்க் கடகலச முதலியவற்றில் மண் நீங்காது நிறைந்திருப்பது போலச் சர்வப்பிரபஞ்சத்திலும் நீங்காது நிறைந்து வியாபகமா யிருப்பதாம்; இப்பொருளை யானெனதென்று உடம்பு முதலியவற்றைக் கருதாத நெறியமைந்த ஞான சுபாவத்தால் யான் கூறியதற்குச் சிலமாறுபாடாக அறிவுடையார் கூறார். நாச ரகிதமாயுள்ள இப்பொருளைத் தமது முயற்சியாற் கொல்ல வல்லவர் எவர்! ஒருவருமிலர்.

அநாத்மாவிற்கு நித்தியத்துவம் எவ்வகையாலும் சம்பவியா தெனல்.

அருச்சுனா! சீதோஷ்ணம், சுக துக்க முதலிய துவந்துவமுடைய தேகாதிப் பிரபஞ்சத்தின் அசத்துத் தன்மையைக் கூறுகின்றேன், நீ கேட்கக் கடவாய். அது சூரியனது உஷ்ண கிரணத்தால் கானல் நிலத்தின்கண் சத்துமசத்து மாகாது விரைந்து தோன்றுகின்ற நீர்போலச் செவ்வையாக வறியு மிடத்துப் பொய்யா யொழிவதாம்; அதனால், சர்வப் பிரகாரத்தாலும் நாசமாவது இவ்வுடம்பே யாம். ஆகவே, பீஷ்மர் முதலாயினோரை யான் எவ்வாறு கொல்வேனென்று நீ கருதாதே. ஆத்மாவோ ஒன்றைக் கொல்வதில்லையாம்; ஒன்றாற் கொல்லப்படுவதற்கு முரியதாகாது. இன்னுமதன் றன்மையைக் கூறுகின்றேன்; கேட்கக் கடவாய்.

சட்பாவ விகாரம் உடம்பிற் கன்றி ஆத்மாவிற் கின்றெனல்.

பல வகையாய இடையூறுக ளுண்டாக ஒன்றினிடத்தே பிறத்தல், பிறந் திருத்தல், முன்னுக்குப் பின் மாறாக வளர்தல், அங்ஙனம் வளர்ந்து வந்து மற்றொரு பிரகாரமாகத் திரிதல், அதற்கு மாறாக இளைத்தல், தன் வடிவங் கெட நாசமாத லென்று வருகின்ற இச் சட்பாவ விகாரமும் உடம்பை யடைவதல்லாமல், ஆத்மாவை யடையாவாம்; அதனால், ஆத்மா நிர்விகார வடிவமாம்; ஆகவே, சாசுவதமா யிருப்பதாம். அவ்வாத்மா மேகத்திற் றோன்றும் மின்னல் போல நிலைபெறுதலில்லாத உடம்பினிடத்தே யிருப்பதாயினும், சர்வ வியாபகமா யிருப்பதாம்;

எவ்வகையாலும் பொய்யென்று நிச்சயித்தற் குரியதாகா திருப்பதாம்; அதனால், மித்தையாய பிறப் பிறப்புக்களுள் ஒன்றையும் அறியாததாம். அத்தன்மையதாய ஆத்மாவைத் தேசிகனால் சொல்வழியே சென்று சமாதி கூடி நிலைத்துள்ளவா றுணர்ந்தவர் எவரேனு மொருவரைக் கொல்கின்ற இயற்றுதற் கருத்தாவும், கொல்லுவிக்கின்ற ஏவுதற் கருத்தாவு மாகார். அங்ஙனமாயின், யுத்த முதலிய கர்மங்களை விதிக்கும் சுருதிகளின் தாற்பர்யம் யாதெனெ வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன்; கேட்கக்கடவாய். மக்கள்தம் சாதிக்கேற்றவாறு, அவர்தமக்குக் கர்மங்களை விதிக்கும் சுருதி யனைத்தும் அவர்தமக்கு விதித்த கர்மங்களையும், அவர் தம் சாதியின்மீது வைத்துக் கூறின வல்லாமல், ஆன்மாவின்மீது வைத்துக் கூறவில்லையென்பதை நீ தெளிந்துணரக் கடவாய். ‡

ஆத்மாவிற்குச் சரீரம் வருதலையும் போதலையும் உவமான வாயிலாகக் கூறல்.

அருச்சுனா! முன்னர்க் கிழிந்ததொரு வஸ்திரத்தை நீக்கிவிட்டுப் பின்னர் மற்றொரு புது வஸ்திரத்தை யுடனே விரும்பித் தரிப்பவர்போல, மலம் மூத்திர முதலியன ஊறித் ததும்பும் உடம்பினிடத்து அதற் கெவ்வகையாலும் வேறாய் விளங்குகின்ற ஆத்மாவும் சீரணமாய அவ்வுடம்பினை நீக்கிவிட்டு மற்றொரு புது உடம்பினை யடைகின்றது; அதனால் அவ்வாத்மா விகாரமற் றேக வடிவமா யிருப்பதாம். $

---

‡ பகவான் இங்ஙனங் கூறினமையால், சுருதிகள் கர்மங்களை விதித்தல் அஞ்ஞானிக் கன்றி ஞானிக்கன் றென்பது பெறப்பட்டது. அதனால் சுருதி கூறிய கர்மங்களை விசுவாசத்தோடு பயன் கருதாது செய்பவர் அதனால் சித்த சுத்தி யுடையவராய், பெரியாரை யடுத்து, ஆத்மாவை யறிதற்குரிய அதிகாரி புருஷராவர். ஆத்மாவை யறிந்தவர் ஒருவரைக் கொல்லுவதும் கொல்விப்பது முடையவராகாது, சர்வ சாட்சியாக விளங்குவரென்பது பெறப்பட்ட தென்க.

$ பகவா னிங்ஙனங் கூறினமையால், அர்ச்சுனா! நீ போர் புரிந்து பீஷ்மர் முதலாயினோரைக் கொல்வாயாயின், புண்ணிய சாலிகளாய அவர்கள் தம் பழைய வுடம்பொழியப் பெற்றுத் தேவ சரீரங்களைப் பெற்றுச் சுகபோகங்களை யனுபவித்தற் குரியவராவார்; அதனால், நீ இப்போரின்கண் முயற்சி யுடையவனாக வேண்டுமென்று கூறினாரென்பது பெறப்பட்டதென்க.

(அருச்சுன! தீயால் வீடுவெந்தழியும்போது அதனுளிருக்கும் புருஷனும் வெந்தழிவதுபோல, நோய் முதலியவற்றால் இவ்வுடம்பு சிதைந் தழியும்போது அதனுளிருக்கும் ஆத்மாவும் சிதைந் தழிதல் கூடுமென்று நீ சங்கித்தல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன்; கேட்கக் கடவாய்.) இவ்வுடம்பினிடத்து, எவ்வகையாலும் அதற்கு வேறு யறிவு வடிவமா யிருக்கின்ற ஆத்மாவிற்குக் கைகால் முதலிய அவயங்கள் ஒரு காலத்திலு மில்லையாம்; அதனால், அதனை யுத்த பூமியின்கண் வாள் முதலிய படைக் கலங்கள் மர முதலியவற்றை வெட்டுவதுபோல வெட்டுவதில்லையாம். மர முதலியவற்றைப் போல அவ்வாத்மா தீயால்வெந்தழிவதில்லையாம்; கட்டைமா முதலியனபோல அவ்வாத்மா நீரால் நனைந்து கரைவதில்லையாம். ஈர வஸ்திர முதலியனபோல அவ்வாத்மா காற்றாலும் உலர்வ தில்லையாம். ** இன்னும் அவ்வாத்மாவின் றன்மையைக் கூறுகின்றேன்; அருச்சுன! நீ கேட்பாயாக.

சர்வ பதார்த்தங்கட்கு மூல காரணமா யிருப்பதை, அதனால் எவ்விடத்தும் தான் மாத்திரமாய் (வியாபகமாய்) இருப்பதை, அதனால் ஸ்திரசுபாவ முடையதை, அதனால் நித்தியமா யிருப்பதை, அதனால் நிச்சலமா யிருப்பதை, அதனால் ஞானேந்திரிய பஞ்சகம், கன்மேந்திரிய பஞ்சகம், அந்தக்கரண சதுஷ்டய மென்னும் சட வடிவ இந்திரியங்கள் பதினான்கும் பற்றுவ தில்லாத ஞான சொரூபத்தை அருச்சுன! நீ யுள்ளவா றுணராமல், அது கட முதலிய அநித்தியப் பொருள்களைப் போல அழிந்துபோமென்று கருதி வருத்த முறுகின்றது யாது காரணம் பற்றியோ? அதனையா னறியா திருக்கின்றேன். †

இறப்பவர்களைப் பற்றிச் சோகமுறுதல் கூடாதெனல்.

அருச்சுன! நீ பீஷ்மர் முதலாயினோர் தேக முண்டாம்போதுற்பத்தியாய் அது நாசமாம்போது நாசமாவரென்று தவறாகக்

** இங்ஙனம் பகவான் கூறினமையால், ஆத்மா பிருதிவியாலும், அப்புவாலும், தேயுவாலும், வாயுவாலும் நாச முறுவதில்லை யென்பது பெறப்பட்ட தென்க. ஆகாயம் வெட்டுதல், நனைத்தல், தகித்தல், உலர்த்தலென்னும் தொழிலால் எதனையும் நாச மாக்குவ தின்மையின், அஃதிங்குக் கூறப்படவில்லை யென்க.

† பகவா னிங்ஙனங் கூறினமையால், ஆத்மாவின் தன்மையை யுள்ளவாறறிந்தவர் அஃதிறந்துபோ மென்று வருத்த முறுவதில்லை யென்பது பெறப்பட்ட தென்க.

கருதிக்கொண்டு, அதனால் சோகமடைந்திருக்கின்றாய்; அவ்வாறு சோகமடைதல் உனக்குத் தகுதியன்றாம். எவர் பிறக்கின்றனரோ அவர் எத்தன்மையரா யிருப்பினும் அப்பிறப்பின் காரணமாய வினைமுடிந்தபோது நிச்சயமாக மரணமடைவர்; மீண்டும் முன் செய்த வினைக் கேற்றவாறு பிறப்பர். தத்துவஞானத்தால் அஞ்ஞானம் கெடுமளவும் இப்பிறப்பிற்குப் பரிகார மில்லையாம். (இக் கிரமத்தை நன்குணர்ந்து இன்றியமையாது வரத்தக்க பிறப் பிறப்புப்பற்றி நீ சோகமடையா திருப்பாயாக.) ‡

(ஆத்மா பிறப் பிறப்பற்றதா யிருத்தலின், அதுபற்றிச் சோகமுறுதல் கூடாதென்பது நியாயமே யாயினும், இப்பீஷ்மர் முதலியோரது சரீரத்தைக் குறித்து யான் சோகமடைகின்றேனென்று நீ கூறுதல் கூடும்.) அருச்சுனா! நீ இந்தப் பீஷ்மர் முதலாயினோர் தாம் பிறப்பதற்கு முன்னே இவ்வாறிருந்தன ரென்பதையும் அறியமாட்டாய்; இவர்கள் தம் சரீரங்களினின்றும் பிரிந்து சென்றடையு மிடங்களையும் அறியமாட்டாய். பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவே இவர்களை நீ யறிந்துள்ள காலம் சிலவேயாம். அதனால், இந்த யுத்த பூமியின்கண் வந்துன்னோடு யுத்தஞ் செய்ய ஆயுத சகிதராயுள்ள இப்பீஷ்மர் முதலாயினோரிடத்து நீ யேன் வீணாகச் சோகங்கொண் டிருக்கின்றாய்? அதனை யொழித்து விடக் கடவாய்.

[அருச்சுனா! நீ வித்வான்களும் சோகமுறுதற்குக் காரணம் யாதென வினவுதல் கூடும். அதற்கு விடை கூறுகின்றேன்; கேட்கக் கடவாய். அருச்சுனா! நீ குறிப்பிட்ட வித்வான்கள் $

---

‡பகவா னிங்ஙனம் கூறினமையால், பிறப்பதற்கு முன்னும், இறந்ததற்குப் பின்னுமில்லாத தேகங்கள் தாமுள்ள காலத்திலும் வாஸ்தவத்தி லில்லாதனவாம்; யாதிருப்பதோ அது முக்காலத்திலு மிருப்பதாம். யாதில்லாததோ அது முக்காலத்து மில்லாததேயாம்; பீஷ்மர் முதலியோர் தேகங்கள் முன்னும் பின்னு மில்லாதனவா யிருத்தலின், அவை சத்துப் பொருளன்றாம்; அதனால், அவர்கள் சரீரங்களைப்பற்றி அருச்சுனா! நீ சோகமடைதல் கூடாதென்று வற்புறுத்தினா ரென்பது பெறப்பட்ட தென்க.

$ பிரஹ்ம பாவனையை மூடிப் பேதங்காட்டுவ தஞ்ஞானமாம்; குரவன் வாக்கிய நம்பாமற் குழம்புவது சந்தேகமாம்; சகமெய்யென்றும், தேகம் நானென்றுங் கொண்டுள்ள மோகம் விபரீதமாம்; முன்னனுபவித்த வஸ்துக்களை யடிக்கடி நினைத்தல் பூதப் பிரதிபந்தமாம்; இன்னும் சில பிறப்பு வந்தாற்றான் நமக்கு மோட்ச முண்டாமென்னுஞ் சிந்தனை பௌஷியப் பிரதிபந்தமாம்; விஷயத்திலாசை, மந்தபுத்தி, குதர்க்கம், அபிமானம், சஞ்சலத்தன்மை முதலியன வர்த்தமானப் பிரதிபந்தமாம்.

அஞ்ஞான—சந்தேக—விபரீதங்களால் நிகழும் பூத பௌஷிய வர்த்தமானப் பிரதிபந்தங்களால் ஆத்மாவின் தன்மையை யுள்ளவா றுணராது சோகமுறுகின்றனர்; அவர்களுள்] ஒருவன் நித்திய சித்தமாயுள்ள இந்த ஆத்மாவைச் சற்குருவாயிலாகத் தத்துவோபதேசம் பெற்றகாலத்தில் எப்போதுங் கண்டறியாத தாகியதொன்றனைக் கண்டாற்போல ஆச்சரியமாக வறிகின்றனன்; மற்றொருவன் எப்போதும் கூறியறியாததாகிய தொன்றனைப் பிறர்க்குக் கூறுவதுபோல ஆச்சரியமாக ஒருவனுக்குக் கூறுகின்றான்; இன்னொருவன் எப்போதுங் கேட்டறியாததாகிய தொன்றனைக் கேட்பதுபோல ஆச்சரியமாகக் கேட்டு மகிழ்ச்சியடைகின்றான்; வேறொருவன் பிறர் சொல்ல எப்போதுங் கேட்டாலும் அறியாதவனாகவே யிருக்கின்றான். (அதனால் நீ கூறிய வித்வான்கள் சோகமுறுதற் குரியவரா யிருக்கின்றனர்; அருச்சுனா! நீ அவர்களைப்போலச் சோகமுறல் வேண்டாம்.)

அருச்சுனா! நீ சாவது உடம்பே யல்லாமல் ஆத்மா வன்றென்னும் உறுதியுடையவனாய், முற்கூறிய நால்வருள் எவரும் உள்ளவா றறியாத அவ்வாத்மாவைப் பூதப் பிரதிபந்த முதலிய தடைமூன்றனுள் எதுவுமில்லா துணர்ந்துகொண்டு, இவ்வாத்மானுபவத்தின் வல்லபத்தால், இந்தப் பீஷ்மர் முதலாயினோரை யான் கொன்றேனென்னும் விபரீத புத்தியை விட்கடவாய்; இவ் விபரீத புத்தி நீங்குமாயின், உனக்குச் சோகமுண்டாவ தில்லையாம். நீ சோகமடையா திருத்தற்குரிய காரணங்களை யின்னுங் கூறுகின்றேன்; கேட்கக் கடவாய். இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென நான்கு வகையாயுள்ள வேதவாக்கியங்களும் க்ஷத்திரியரது சுதர்மம் அவர் வாட்படை முதலியவற்றைக் கொண்டு தம் பகைவரோடு நியாயமாகச் செய்யும் யுத்தமாமென்று கூறுகின்றன; அதனால், க்ஷத்திரியனாய நீ உன் க்ஷத்திரிய தர்மத்தை நோக்கியேனும் போர் செய்தல்வேண்டும்; அப்போரினின்றும் நீங்குவது உனக்குத் தகுதியாகாது. அருச்சுனா! நீ யுத்தஞ்செய்தலே க்ஷத்திரியனான எனக்குச் சுதர்மமாமென்றுட் கொண்டு, இந்த யுத்தத்தினைத் தொடங்குவாயாக. இதுபற்றி நீ யாதும் ஐயுறல் வேண்டாம்.

(அருச்சுனா! நீ யுத்தஞ்செய்தல் க்ஷத்திரியரின் சுதர்மமாயினும், பீஷ்மர் முதலாயினாரோடு யுத்தஞ் செய்வது எனக்குத்

தகுதியாகத் தோன்றவில்லை யென்று வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன்; கேட்கக்கடவாய்). இந்திரியத்தை யடக்குதல், மனத்தை யடக்குதல் முதலிய பிரயத்தன மில்லாமலே அத்தேவர்கள் வசிக்கும் சுவர்க்கலோகத்தை யடைதற்குச் சாதனமாயிருக்கின்ற இந்த யுத்தத்தைப் பெறுகின்றவர் யார்? அவர் வைதிக வொழுக்கந் தருகின்ற பெருந்தவத்தினை மேற்கொண்டு செய்து அதனால் தமதுண்மையை யுணர்ந்த அரசரல்லவோ? அதனால், அருச்சுன! நீ உன் சுதர்மமான யுத்தத்தின்கண் முயற்சியுடையவனாகக் கடவாய். நீ பாக்கியசாலிகளாய அரசர் அடையத்தக்கதாய தர்ம ரூபமான இந்த யுத்தத்தைத் தொடங்காதொழிவாயாயின், உனது சுதர்மமும் கீர்த்தியும் நாசமாவனவாம்; அவையேயுமன்றி (மறுமைக்குரிய) பாவமும் உனக்குண்டாகும்; பாவமே யுண்டாவதன்றி அருச்சுனன் பயந்து போர் செய்யாதொழிந்தானென்று பிறர் கூறும் (இம்மைக்குரிய) பழியு முண்டாகும்; இப்பழியைப் பெற்றிருப்பதினும் போரில் இறப்பதே உனக்குத் தலைமையான தருமமன்றோ? அருச்சுன! நீ இப்பழியோடிருப்ப தல்லாமலும் உன்னைத் துரியோதனன் முதலாயினோர் கர்ணன் முதலாயினோர்க்குப் பயந்து யுத்தத்தினின்றும் நீங்கினையென்றுங் கூறுவர். அதற்கும் நீ பாத்திரனாதல் வேண்டும். நீ இவ்வுலகத்தின்கண் தருமம் பராக்கிரம முதலிய பல குணங்களோடு பொருந்தி நின்று முன்னே யடைந்த வெற்றியும், துரியோதனன் முதலாயினோர் பழித்தற்குரியதாய் நிற்கும். பகைவர் சொல்லுதற்குக் கூடாததாய வொரு வார்த்தையைக் கூறுவாராயின், இவ்வார்த்தையினும் அதிகமாகத் துன்பந்தருவது உனக்கு வேறு யாதிருக்கின்றது? இல்லையே! (இத்துன்பம் வாராதிருத்தற் பொருட்டு, நீ உன் சுதர்மமாய யுத்தத்தைச் செய்யக் கடவாய்).

(பகவானே! யான் இந்த யுத்தத்தின்கண் பீஷ்மர் துரோணர் முதலிய ஆசிரியரைக் கொல்வேனாயின், மத்தியஸ்த புருஷர் என்னைப் பழித்துக் கூறுவர்; இந்த யுத்தத்தினின்றும் நீங்கி விடுவேனாயின், துரியோதனன் முதவாயினோர் என்னைப்பழித்துக் கூறுவர். அதனால், யான் இந்த யுத்தத்தைச் செய்யினும் செய்யாதொழியினும், அப்பழியா லுண்டாகும் துக்கம் எனக்கு வாராதிருப்பதன்றென் றருச்சுன! நீ வினவுதல் கூடும்; அதற்கு விடை

கூறுகின்றேன் ; கேட்கக் கடவாய்). அருச்சுன ! நீ இப்போது வாள் முதலிய படைக்கலங்களைக் கொண்டு செய்தற்குரிய இந்த யுத்தத்தின்கண் கர்ணன் முதலாயினேரை யெதிர்த்து அவரோடு போர் செய்து, அவர் விடும் படைக்கலங்களால் மரண மடைவாயாயின், தேவர்கள் வணங்க விண்ணுலகத்தைக் காத்தற்குரிய அரசனுவாய்; அல்லது கர்ணன் முதலாயினேரைக் கொன்று வெற்றி பெறுவாயாயின், இவ்வரசர் யாவரும் வணங்க அரசனுக விருந்து, மண்ணுலகத்தை யாளுதற்குரியவனுவாய். (இந்த யுத்தத்திற் சாதல் வெற்றி பெறுத லென்பனவற்றுள் உனக்குப் பயனைத் தாராதது யாது மின்று; அதனுல், அவர்களென்னை வெல்வரோ ? யானவரை வெல்வேனே ? என்னும் சந்தேகத்தை யொழித்து, திட நிச்சயத்தொடு யுத்தஞ் செய்யக்கடவாய். இந்த யுத்தம் எனக்குப் பெரும்பாவத்தை யுண்டாக்குவதாம் ; அதனுல் செய்யத் தக்க தன்றுமென நீ நினைத்தல் கூடாது). வெற்றி மிக்க அருச்சுன ! இன்பமும் துன்பமும், இவை வருதற் கேதுவாய இலாபமும் நஷ்டமும், இவை வருதற் கேதுவாய வெற்றியும் தோல்வியும் என்னு மித் துவந்துவங்களை விருப்பு வெறுப்பில்லாது சமமாகக் கொள்ளும் மன முடையவனுய், இந்த யுத்தத்தை இது நமக்குச் சுதர்மமா மென்னும் புத்தியோடு செய்யக்கடவாய் ; அவ்வாறு செய்வாயாயின், * * அதனுலுனக்குப் பாவ முண்டாகாது.

அருச்சுனனுக்குச் * சாங்கியயோகத்தை யருளிச்செய்து முடித்த பகவான், அதற்குச் சாதனமாயுள்ள கருமயோகத்தைக் கூறல்.

அருச்சுன ! நீ சர்வ வியாபகமாகப் பொருந்தியுள்ள பரவஸ்துவினை யறிதற்குரிய ஞானேபதேசத்தைச் “ சாவதிலை

---

* * இப்போர் எனக்குரிய சுதர்மமாமென்று முன்னே கருதிப் போர் செய்யப் பிரவேசித்து, பின்னே அதில் தோஷாரோபஞ் செய்து, அதினின்றும் பராமுக மடைந்த அருச்சுனனுக்குப் பகவான் அருச்சுன ! இந்த யுத்தம் உனக்குச் சுதர்மமாக விருத்தலின், இதினின்றும் நீ மீளுதல் கூடாது ; இதனுல் உனக்குப் பாவமுண்டாகாதென்றதனை ஆத்மஞான உபதேசப் பிரசங்கத்திற் கூறினுரேயன்றி, அவனுக்கு விதியாகக் கூறினுரில்லை யென்பதிங் குணர்தற் பாலதாம்.

* பரவஸ்துவின் உண்மை வடிவத்தைக் கூறும் உபநிஷத்தும், அப்பரவஸ்துவும் சாங்கியமாம்.

யாவர்களும்" என்றற்றொடக்கத்துக் கரையற்ற எனது வாக்கியங்களாலே சாமானியமாக அடையுமாறு புத்தியின்க ணறிதற்குரியவனுனைய். யாதொரு நிஷ்காம கருமத்தாலே நல்வினை தீவினையென்னும் இருவினைப் பயன்களும் கெடுமோ அந்த நிஷ்காம கருமத்தைச் செய்யுங் கிரம மறிந்து செய்பவர் சர்வதுக்க நிவிர்த்தி-பரமாநந்தப் பிராப்திவடிவ மோட்ச மடைதற் குரிய அதிகாரி புருஷராவர். இனி யதனைக் கூறுகின்றேன்; நீ கேட்கக்கடவாய்.

(அருச்சுனனுக்குச் சாங்கியயோக வுபதேசத்தால் புத்தி தெளிவடையாமையைக் கண்டு, அத்தெளி வுண்டாதற் கேதுவாய கர்மயோகத்தைக் கூறத் தொடங்கிய பகவான் அருச்சுன! நீ நிஷ்காம கர்மத்தால் கர்ம பந்தம் நிவிர்த்தியாவ தெவ்வாறு? அதற்குத் தடை பல விருக்கின்றன; அதனுல், அக்கரும பலத்தின்கண் எனக்கு விருப்ப முண்டாகவில்லையென்று வினவுதல் கூடும்; அது தகுதியாய வினவன்றும்). அருச்சுன! நிஷ்காம கர்மயோகம் பெறுதற் கரியதாம்; விவேகிகள் மேற் கொள்ளுதற்குரிய † நிஷ்காம கர்மயோகத்தின் பயன் காமிய கர்மத்தின் பயனுன சுவர்க்க முதலியவற்றின் போகம்போல நாசமாவதில்லையாம்; இந்த நிஷ்காம கர்மயோகத்தைச் செய்வதற்க ணிடையே விரிவாய தடைகளும் பாவங்களும் சம்பவிப்ப தில்லையாம். ஆராய்ந் தனுஷ்டித்தற்குரிய இந்நிஷ்காம கர்மயோகம் ஒருவனிடத்து மிகச் சிறிதாக விருப்பினும், அதனுல் அவனுக்குச் சனனமரண வடிவ சம்சாரப் பெரும்பயமானது கெடுவதாம்; அதனுல், இவ்வுலகத்துள்ள விவேகிகளிடத்து அந்நிஷ்காம கர்மமே யிருக்கின்றது; காமிய கர்ம மிருப்பதே யில்லையாம்.

நிஷ்காம கர்மம் சித்தசுத்திக் கேதுவா யிருக்கின்றதென்றதனைச் சாஸ்திரவாயிலாகத் தெளிவாக வறிந்திருப்பவரது புத்தி பரமேசுவர பத்தியாலே நாம் கடைத்தேறுதல் கூடுமென்றேகாகாரமாகவே யிருப்பதாம். நிஷ்காம கர்மத்தின் பயனைத் தெளி

---

† நிஷ்காம கர்ம யோகத்தின் பயன் சித்த சுத்தியாம்; அது சுவர்க்க முதலியவற்றின் போகம்போல அழிவதில்லையாம்; அஃது ஈசுவரனை யுத்தேசித்துச் செய்தற் குரியதாக விருத்தலின், அது செய்யும்போது தடைகளும் பாவங்களு முண்டாவ தில்லையாம்; நிஷ்காம கர்ம யோகம் சிறிதாக விருப்பினும், சம்சார பயத்தைக் கெடுப்பதற் கேதுவா யிருப்பதா மென்பன இங்குணர்தற் பாலனவாம்.

வாக வறியாதவரது புத்தியைப்பற்றிக் கூறுமிடத்து அது விருட்சங்களின் இலைகளைப்போலச் சுவர்க்கபோக முதலியவற்றை விரும்புவதால் பலவாயிருப்பதாம்; அக்காமியகர்மந் தரும் பயனை விரும்பியிருப்பதாம். (அருச்சுன ; நீ காமிய கருமத்தைச் செய்பவர் தம்மாசையை யொழித்து ஏகாகார புத்தியை யேனடையாதிருக்கின்றனரென்று வினவுதல் கூடும். அதற்கு விடை கூறுகின்றேன்; கேட்கக்கடவாய்). ‡ கர்மகாண்ட சுருதி வாக்கியங்களையே இவை மிக மேலாக வறியத்தக்க பொருள்களாமென்று கூறும் விசாரவீன புருஷர் அவ்வேத வாக்கியங்களின் தாற்பரியத்தைத் தெளிந்தறியா திருக்கின்றனர் ; சுவர்க்க முதலியவற்றின் பயன்களை யல்லாமல், பரம புருஷார்த்தமான மோட்ச சுகத்தைச் சிறிது மறியாதவராவர்.

சுவர்க்கத்தின்கண்ணுள்ள அமிர்தம், நந்தனவனம், ஊர்வசி முதலிய பொருள்களின் போகங்களை இவை மிக மேலாய புருஷார்த்தமா மென்று கருதுகின்றவரும், சுவர்க்கத்தின்கண்ணுள்ள போகங்களை யனுபவித்தபின் மண்ணுலகத்தின்கண் வந்து பிறப்பதற்குரிய மார்க்கத்தின்கண் நிற்பவரும், தாம் செய்த கருமங்களுக்குப்பயனை விரும்புகின்றவருமாய பகிர்முக புருஷர்க்கு அதிசூக்குமமாய ஆத்மஞான முடைய பெரியார் சாங்கியயோகத்தை யுபதேசஞ் செய்யார் ; செய்தாராயின், $ அஃதவர்க்குப் பயன் தருவதில்லையாம்.

(அருச்சுன ! நீ காமியகருமம் சுவர்க்காதி போகத்திற்குச் சாதனமா யிருத்தல்போல, நிஷ்காமிய கருமமும் அப்போகத்திற்குச் சாதனமா யிருத்தலின், அதுவும் காமிய கருமம்போல ஆத்மஞானத்தை யடைதற்குத் தடையாமென்று சங்கித்தல் கூடும் ; அதற்கு விடை கூறுகின்றேன் ; கேட்கக் கடவாய்). வேதத்தின்

---

‡ வாசனையில்லாத மலருடைய பலா விருக்ஷம் தூரத்திலிருப்பவர்க்கு மனோரம்மியமாகத் தோற்றுவதுபோலக் கர்மகாண்ட வாக்கியங்களும் ஆராய்ச்சி யில்லாதவர்க்கு மனோரம்மியமாகத் தோற்றுகின்றன. அவ்வாக்கியங்கள் ஸ்துதி அர்த்தவாத வாக்கியங்களாமென் றவற்றை யுணராதவர் காமிய கர்மங்களை விரும்பிச் செய்து, அவற்றின் பயனாக ஜனன மரண சம்சார பயத்தை யடைந்து வருகின்றனரென்பதிங் குணர்தற்பாலதாம்.

$ கர்ம பலத்தை விரும்புகின்றவர்க்கு விவேகஞான முண்டாவதில்லையாமென்பதிங் குணர்தற்பாலதாம்.

கருமகாண்ட மார்க்கத்தை யாசிரயித்துச் சுவர்க்காதி போகத்தையே விரும்பும் இராசதகுணமுடையவர் பலவகையாய குற்றங்களை யுண்டாக்கும் புண்ணிய கர்மம், பாவகருமம், (அவற்றின் கலப்பாய) மிசிர கர்மமென்னுங் கர்ம மூன்றன் சம்பந்தமாய சம்சாரப் பயனை யடைகின்றவரா யிருக்கின்றனர். சீதம் உஷ்ணம், இலாபம் நஷ்டம், சுகம் துக்கம் முதலிய துவந்துவங்களைத் தருகின்ற இராசதகுண முடையவரது கருமத்தின் பயன் இதுவேயாம். இராசத குணத்தால் பயனை விரும்பிச் செய்யும் அக்கருமங்கள் தம்மைச் செய்தவர்கள் துக்க முறுமாறு தம்பயனைத்தர வருகின்றனவா யிருக்கின்றன. அதனால், நீ † அக்கருமங்களுக்கு அப்பாற்பட்டவனாகி, ‡ யோக க்ஷேமங்களைக் கருதாது, நிஷ்காம கருமத்தைச் செய்யு மறிவுடையவனென்று யாவருமுன்னைக் கூறும்படி, யான் கூறும் நிஷ்காம கர்ம மார்க்சத்தின்கண்ணே நிலைபெற் றொழுகுவாயாக.

(அருச்சுனா! நீ யான் சுவர்க்காதி போகங்களைத் தருங் கருமமனைத்தையும் விட்டு, பயனொன்றையும் விரும்பாது கருமங்களைச் செய்வேனாயின், அக்கருமங்களின் பயனாய சுகங்களை யடையா தொழிவனே யென்று வினாவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன்; கேட்கக் கடவாய்). அற்ப ஜலமுள்ள கேணி (சிறு குளம்), கிணறு, தடாக முதலியவற்றின்கண் ஸ்நானம்-ஆசமனம்-பான முதலியவற்றைக் செய்பவன், நாற்புறத்தும் நிறைந்த ஜலத்தையுடைய பெருந்தடாகத்தினை யடைந்தால், அந்த ஸ்நானம்-ஆசமனம்-பான முதலியவற்றைச் செய்தல் அவனுக்கருமையாமோ? மிக வெளிதாமன்றோ? அங்ஙனமே, நிலையாய சுகத்தைத் தருவதற்ற வேதோக்தமாய காமிய கருமங்களா லுண்டாகும் பிரமலோக பரியந்தமுள்ள சுகமனைத்தும், எஞ்ஞான்றும் குறைத லில்லாது சர்வப் பிராணிகளின் உள்ளமும் தனது லேசத்தால் களிப்படைதற்

† இதனால் பகவான் அருச்சுனா! நீ கருமத்தைப் பயனை விரும்பிச் செய்யாது, சீதோஷ்ண முதலிய துவந்துவங்களைப் பொறுத்துக்கொண்டு, சத்துவ குணத்தை மேற்கொண்டு, யோக க்ஷேமங்களைக் கருதாது, ஆன்ம ஞானமடைவதன்கண் கருத்துடையவனா யிருக்கக் கடவா யென்று கூறினாரென்பது பெறப்பட்டதென்க.

‡ முன்படையாத பொருளை யடைவது யோகமாம்; முன் படைந்துள்ள பொருளைப் பாதுகாத்தல் க்ஷேமமாம்.

குக் காரணமாய பிரஹ்மாநந்தத்தி னிடத்தே யிருக்கின்றன். அவ்வாநந்தத்தைப் பிரஹ்ம நிஷ்டன் பெறுதல் அரியதன்றும்; மிக வெளியதேயாம். *

(அருச்சுனா! நீ யான் பிரஹ்மாநந்தத்தை யடைதற்கு வெகு தூரமாயுள்ள நிஷ்காமிய கருமத்தைச் செய்வதன்கண் எனக்குக் கருத்துண்டாகவில்லை; அவ்வாநந்தத்தை யடைதற்குச் சமீப சாதனமா யிருப்பதன்கண் எனக்குக் கருத்துண்டா யிருக்கின்றதென்று வினவுதல் கூடும்).

அருச்சுனா! உனக்குச் சித்த சுத்தி யுண்டாகா திருக்கின்றது; அதனால், நீ, அஃதுண்டாதற் பொருட்டு நிஷ்காமிய கருமத்தையே செய்தல் வேண்டும்; உனக்கிப்போது நிஷ்காம கருமத்திற்றான் அதிகார மிருக்கின்றது; அதனால், புத்தியோகமென்னும் நிஷ்காமகர்மத்தி னிலக்கணத்தைக் கூறுகின்றேன்; கேட்கக் கடவாய்.

சர்வ சம்சாரப் பயன்களும் உன்னை யடைந்து நீங்குங் காலத்தில் நீ மகிழ்ச்சி வாட்டமென்பவற்றில் எதனையு மடையாது சம புத்தி யுடையவனாய், பெரிதாய உனது கர்மத்தைச் செய்துவரக் கடவாயாக. இதுவே நிஷ்காம கர்மத்தி னிலக்கணமாம்.

(அருச்சுனா! நீ பயனைக் கருதாது பாமரனும் ஒரு காரியத்தைச் செய்வதில்லையாகலின், யான் பயன் கருதாது கருமத்தைச் செய்வ தெவ்வாறுமென வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன்; கேட்கக் கடவாய்).

சமையலுக்கு நெருப்புப்போல மோட்ச சாதனமாயுள்ள ஆன்ம ஞானத்தைச் சித்த சுத்தி வாயிலாகத் தருகின்ற புத்தி யோகமென்னும் நிஷ்காம கர்மம் வெகு தூர மாம்படி, பயனை விரும்பிக் கருமத்தைச் செய்து வருபவர் † கிருபணரே யாவர். நிஷ்காம கர்மத்தைச் செய்பவராய், பரமேசுவரனாய என்னை யாராய்ந்தறிபவரது செயலைக் கூறுகின்றேன்; நீ கேட்கக்கடவாய்.

---

* இதனால் அருச்சுனா! நீ நிஷ்காம கருமத்தைச் செய்து, அதனால் சித்த சுத்தியுடையவனாய், பிரஹ்மாநந்தத்தை யடைதற் குரியவனாவாய்; பிரஹ்மாநந்தத்தைப் பெறுவாயாயின், காமிய கருமத்தின் பயனையும் பெற்றவனே யாவாயென்று பகவான் கூறினாரென்பது பெறப்பட்டதென்க.

† சுவர்க்காதி போகங்களை விரும்பிக் கருமங்களைச் செய்து, அதனால் ஜனன மரணவடிவத் துக்கத்தை யடைந்து வருகின்றவர் இங்குக் கிருபணராவரென்க.

விடுவதற் கரியதாய கர்மத்தின் பயனைவிட்டு, தன் சாதிக் குரியதாகச் சாத்திரங்கள்கூறுங் கர்மங்களைத் தடையில்லாதபடி செய்து சித்த சுத்தி பெறுதல் வாயிலாகச் சுகம் துக்கம், மானம் அவமானம், பகை உறவு என்றற்றொடக்கத்துத் துவந்துவங்களி னின்றும் நீங்கி, உடம்போடிவ் வுலகத்திலே யிருக்கின்றானென்று தன்னைப் பிறர் கூறுமாறு சீவித்திருந்து, ஜன்ம பந்தத்தை யொழித்திருப்பவன் என்னைத் தானாக வுள்ளவா றறிந்திருப்பவ னாவன். ஞானி யென்பவன் இத்தன்மையனே யாவன்.

பகவான் நிஷ்காம கர்மம் மோட்ச சாதனமாங் கிரமத்தைக் கூறல்.

ஒருவன் கர்மங்கள் கொடுக்கும் சுவர்க்காதி போகப் பயன் களிலுள்ள விருப்பத்தை யொழித்து, செய்தற்குரிய கர்மங்களை ஈசுவரார்ப்பணமாகச் செய்து வருவானாயின், ஒழித்தற்கரிய ஆசை கோப முதலிய தோஷங்கள் அவன் சித்தத்தினின்றும் ஒழியும். சித்த சுத்தி யென்ப திதுவே யாம். அவனுக்கு ஆசை கோப முதலிய தோஷங்க ளொழியுமாயின், இஃதழியாதது, இஃதழி வது என்னும் நித்தியா நித்திய வஸ்து விவேகமுண்டாவதாம்; அவ்விவேக முண்டாமாயின், புண்ணிய பாவ கர்மங்களைச் செய் வதன்கண் விருப்ப முண்டாவ தொழியும்; அவ்விருப்பமுண்டாவ தொழியுமாயின், பேறிழவென்னும் லாப நஷ்டங்களில் சமபுத்தி யுண்டாகும்; அச்சமபுத்தி யுண்டாமாயின், என்னைத் தானாக அறி தற்குரிய அறிவுண்டாகும்; அவ்வறி வுண்டாமாயின், அவி வேகத்தை யடைந்து அதனால் தானல்லாத வுடம்பை யானென் றும், தனதல்லாத பொருள்களை யெனதென்றும் அபிமானங் கொண்டுள்ள சித்த விருத்தி ஒழிவதாம். அவன் எப்போது இவ் வாறு குற்றமில்லாத சித்த சுத்தி யடைவானோ அப்போது உலக நூல்களைப் படிப்பதிலும் உலகத்தாரைப்பற்றிப் பேசுவதிலும் வைராக்கிய முடையவனாவன்; அவ்வாறு வைராக்கிய மடைந் திருத்தலால், பரமான்மாவாய என்னை யுள்ளவா றடைதற் குரியவ னாவன். அவன் என்னைத் தானாகவடையுங் கிரமத்தைக் கூறுகின்றேன்; அருச்சுனா! நீ அதனைக் கேட்கக்கடவாய்.

நிலைத்த சமாதி யுடையவனுக்கே தத்துவஞான முண்டாமெனல்.

(நிஷ்காம கரும அனுஷ்டானத்தால் சித்தசுத்தி பெற்று, அதனால் வைராக்கிய முண்டாயிருக்கின்றவனுக்குத் தத்துவஞான

முண்டாகுங் காலத்தைக் கூறல்). புத்தியோகமென்னும் நிஷ்காம கருமத்தை மேற்கொண்டொழுகுகின்றவன் * மாயாப் பிரபஞ்ச மனைத்திற்கும் ஆதியாய் (அதிஷ்டானமாய்) இருக்கின்ற பரம் பொருளின் கண்ணே சந்தேகமில்லாமலும் விபர்யயமில்லாமலும் எப்போது நிலைத்து நிற்கின்றானோ, அப்போதே சாஸ்திரங்களின் முடிபொருளாயுள்ள மெய்ஞ்ஞான யோகத்தை யடைவான்; இதிற் சம்சயமில்லை. நீ இந்த யோகத்தை யான் கூறிய வழியே யொழுகி யடையக் கடவாய்.

(பகவான் அருளிச் செய்த புத்தியோகத்தி னிலக்கணத்தையும், அதனால் விளையும் பயனையும் கவனமாய்க் கேட்டு வந்த அருச்சுனன் சீவன் முக்தர்களின் இலக்கணத்தையே முமுட்சுக்களின் மோட்ச சாதன வடிவமாகக் கருதி,) பகவானே! தேவரீர் கூறியருளிய இந்த ஸ்திதப்பிரஞ்ஞனை மற்றவர் யாதிலக்கணமுடையவனென்று கூறுவர்? அந்த ஸ்திதப் பிரஞ்ஞன் சமாதியினின்றும் பகிர்முகமாயபோது எவ்வாறு பேசுவன்? சமாதியினின்றும் வெளியாய சித்தத்தை நிக்கிரகஞ் செய்தற் பொருட்டு, சுரோத்திர முதலிய இந்திரியங்களை யெவ்வாறு நிக்கிரகஞ் செய்வன்? சுரோத்திர முதலிய இந்திரியங்களை நிக்கிரகஞ் செய்துவிட்டால், விஷயங்களை யடைவதெப்படி? † இந் நால்வகை வினாக்களுக்கும் தேவரீர் உள்ளவாறு விடை யருளல்வேண்டு மென்றனன். ஆகாயத்தை முதலாகவுடைய பஞ்ச பூதங்களையும் படைத்த பகவான் அந்நான்கு வினாவிற்கும் விடை கூறத் தொடங்கி,

அருச்சுனா! நீ வினாவிய வினா நான்கிற்கும் விடை கூறுகின்றேன்; அதனைக் கேட்கக்கடவாய்.

---

* பரம் பொருளில் சந்தேக விபர்யயமில்லாது நிலைத்து நிற்பவன் ஸ்திதப் பிரஞ்ஞனெனப்படுவான். மெய்ஞ்ஞானயோகம்-சீவப் பிரஹ்ம ஐக்கிய ஞானமாம்.

† இந்நான்கு வினாக்களுள் முதல் வினா சமாதியிலுள்ள புருஷனை நோக்கியதாம்; மற்ற வினாக்கள் சமாதியினின்றும்விழித்த புருஷனை நோக்கியனவாம். சமாதியினின்றும் விழித்த புருஷனது உரைத்தல், இருத்தல், சரித்தலென்பன எவ்வாறிருப்பனவாமென்பது மற்ற மூன்று வினாக்களின் கருத்தாம். சாதகபுருஷர் தத்துவ ஞானத்தை யடைதற் பொருட்டு, எவற்றைச் சாதகமாகக் கொண்டொழுகுகின்றனரோ அவை தத்துவஞானியரிடத்துச் சுபாவ சித்தமாயிருக்கு மென்பதிங் குணர்தற் பாலதாம்.

சமாதியின்கண்ணுள்ள அப்புருஷன், தனது சித்தத்தின்கண்ணுள்ள எனக்கிது வேண்டுமென்னும் அவாவனைத்தையும் நீக்கி, ஆத்மாவின்கண் ஆத்மாவாலேயே திருப்தி யடைந்து, மயக்கத்தைத் தருவனவாய குரோதம் இராகம் பயமென்பனவற்றை யொழித்து, சுகதுக்கங்களுண்டாய காலத்து அவற்றாலுண்டாகும் மகிழ்ச்சியையும் வாட்டத்தையும் கெடுத்து, பழவினை காரணமாக வருகின்ற ஸ்துதி நிந்தைகளாலுண்டாகின்ற விருப்பையும் வெறுப்பையும் ஒழித்து, ஆமை (தலையொன்று, கால் நான்கு என்னும்) தனது அவயவ மைந்தனையும் தன்னுடம்பினுள்ளே யடக்கிக் கொள்ளுந் தன்மையைப்போல, துன்பத்தைத் தருகின்ற சுரோத்திரம்-துவக்கு-சட்சு-ரசநம்-கிராணமென்னு மிந்திரிய மைந்தனையும் சப்த முதலிய விஷயங்களினின்றும் நீக்கித் தன்னுள்ளே யடங்குமாறு செய்து ஆன்மாவிலேயே விளங்கா நிற்பனென்றிவ் விலக்கணமுடையவனாக அறிஞரால் கூறப்படுவன். அவன் சமாதியினின்றும் விழித்த காலத்தில் அனுகூலப் பொருள், பிரதிகூலப் பொருளெல்லா வற்றினும் விருப்பு வெறுப்பின்றி, எப்போதும் அவற்றைப்பற்றி யுதாசீனமாகப் பேசுவன்; இவ்வாறு பேசுவதே அவனது பேச்சாம்.

(பகவானே! சப்த முதலிய விஷயங்களினின்றும் சுரோத்திர முதலிய இந்திரியங்களைத் திருப்புதல் ஸ்திதப் பிரஞ்ஞைக்குக் காரணமாமாயின், வியாதி உபவாச முதலிய நிமித்தங்களால் மூடர்களும் சுரோத்திர முதலிய இந்திரியங்களைச் சப்த முதலிய விஷயங்களினின்றும் திருப்புகின்றனர். அவர்களும் ஸ்திதப் பிரஞ்ஞராதல் வேண்டுமென்று அருச்சுனா! நீ வினவுதல் கூடும். அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

ஆத்மாவின்கண் நிலைத்து நில்லாதவன் தான் ஞான சாதனமாகக் கொண்டுள்ள சுரோத்திர முதலிய இந்திரியங்களைத் தவம் விரதம் முதலிய காரணங்களால் அடங்குமாறு தடுத்தாலும், அளவற்ற அலைகளையுடைய கடல்போல அளவற்ற எண்ணங்களையுடைய தன் சித்தத்தின்கண்ணுள்ள ஆசை நீங்குதற்குரியவனாகான்; ஆனால், ஆன்மாவின்கண் நிலைத்து நிற்பவனுக்கோ அந்த ஆத்மாவை யுள்ளவாறறிவதனால், அந்த ஆசையும் நீங்கிவிடுகின்றது. சற்குருவினிடத்து வேத வாக்கியம் பலவற்றையுங் கிரமமாகப் படித்து, தம்மை யடக்க முயலுகின்றவனது மனத்தை

யும் பலாத்காரமாக விழுத்து, அவனது தைரியமானது கெடுமாறு சுரோத்திர முதலிய இந்திரிய மைந்தும் சப்த முதலிய விஷயங்களிலே செல்லும்படி செய்வனவாம். *

அருச்சுனு ! முற்கூறிய காரணத்தால் இந்திரிய மைந்தையும் (விஷயத்தில் தோஷங் காண்டல், நான் பரவாசுதேவனென்றுணர்தல் என்பவற்றுலன்றி) அடக்குதல் அரியதாம்.

மனோ நிக்கிரகஞ் செய்யாவிடின், இந்திரிய நிக்கிரகத்தால் பயனின்றெனல்.

(அருச்சுனு ! நீ இந்திரிய நிக்கிரகஞ் செய்தவனுக்கு, மனோ நிக்கிரகந் தானே சித்தித்துவிடும்; அதனுல் மனோ நிக்கிரகஞ் செய்தல் பயனற்றதாமென வினுவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.) சுரோத்திர முதலிய இந்திரியங்கள் அடங்கினுலும், மனம் அடங்காதிருக்குமாயின், அம்மனம் துன்பத்தைத் தரும் சப்தாதி விஷயங்களிலே இவை சுக சாதனமென்று கருதிச்செல்லா நிற்கும்; அவ்வாறு செல்லுமாயின், அவ் விஷயங்கள் மீதுள்ள பிரீதியினுல், அவற்றை யடைய விரைந்து, பேராசை யுடையதாய், விரிந்து நிற்கும்; விரும்பிய விஷயம் கிட்டாதாயின், அது கிட்டாவாறு செய்தவர்மீது பெருங் கோப முடையதாய், அதனுல் வதையா நிற்கும்; தீயையொத்த பெருங் கோப முண்டாகவே, இது செய்யத்தக்கது, இது செய்யத்தகாதது என்னும் விவேக மில்லாமையாகிய மோகமானது வந்து பொருந்தும்; அம்மோகம் வந்து பொருந்தவே, சற்குரு வாயிலாகவும் சற்சாஸ்திர வாயிலாகவும் அறிந்துள்ள அர்த்தாநுசந்தான வடிவ ஸ்மிருதிகள் கெடுவனவாம்; அவை கெட்டபோதே அநர்த்த நிவிர்த்தி—ஆநந்தப் பிராப்தி யென்னும் முத்தி யடைதற்குரிய பிரஹ்மைவாஹம் (பிரஹ்மமே நான்) என்னும் அகண்டாகார விருத்தி வடிவப் புத்தியானது கெடுவதாம்; அப்புத்தி

---

* இதனுல் மனத்தை யடக்க முயலுகின்றவன் முன்னர் இந்திரியங்களை யடக்குதல் வேண்டும்; இந்திரியங்களை யடக்காவிடத்து மனத்தை யடக்குதல் முடியாது; இவ்விரண்டடக்கமு முடையவன் ஆத்மாவில் நிலைத்துநிற்றற் குரியவனுவன்; ஸ்திதப் பிரஞ்ஞனென்பா னிவனே யாவனென்பது பெறப்பட்டதென்க.

யானது கெட்டொழிந்த வழியே அடைதற் கரியனவென்று அறிஞர் கூறுகின்ற புருஷார்த்த மனைத்தும் கெட்டொழிவனவாம். †

இந்திரிய நிக்கிரகஞ் செய்யாத மனோ நிக்கிரக மாத்திரஞ் செய்பவனுக்குக் காமம் வெகுளி முதலிய தோஷங்க ளுண்டாவதில்லை யெனல்.

எதனிடத்தும் விருப்பும் வெறுப்பும் இல்லாமல், தனது வசமாக விருந்து செல்லும் சுரோத்திர முதலிய இந்திரியங்களாலே சாஸ்திர விகிதமான போகங்களை யனுபவிப்பவன் தன் வசமான மன முடையவனாவன்; அவன் அப் போகாநுபவத்தால் காமம் வெகுளி முதலியவற்றை யடைந்து, மனங் கலங்குத லில்லாதவனாவன். அம்மனத்தினிடத்துப் பிரஹ்மான்ம சாட்சாத்காரத்திற்குத் தகுதியாய மிக்க தெளிவே யுண்டாம்; அது மிகத் தெளிவடையவே, எல்லை யில்லாது வந்துள்ள சர்வ துக்கமும் நாசமாம்; அவை நாசமாகவே, ஜீவப் பிரஹ்ம ஐக்கிய விஷயமான புத்தி நிலைபெற்று நிற்பதாம். ‡

---

† இங்கு மனவடக்க மில்லாம லிந்திரிய வடக்க மாத்திர முடையவனுக்கு, மனம் ஒரு முகமாய் நில்லாது பல தலைப்பட்டு விரியும்; அதனால், அதனிடத்துக் காமம், கோபம், மோக மென்பன முறையே யுண்டாகும்; அவை யுண்டாகவே, சாஸ்திரார்த்த சிந்தனை கெடும்; அது கெடவே, நானே பிரஹ்மமென்னும் அகண்டாகார விருத்தி கெடும்; அது கெட்டவிடத்து, சர்வ புருஷார்த்த ரூபமான மோட்ச முண்டாவதில்லையா மென்பன கூறப்பட்டமை காண்க.

மனோ நிக்கிரகஞ் செய்யாது இந்திரிய நிக்கிரக மாத்திரஞ் செய்பவனுக்குத் துக்கம் தொலைவதின்றாயின், மனோ நிக்கிரகமும், இந்திரிய நிக்கிரக முஞ் செய்யாதவனுக்கு வரும் துன்பத்திற் களவில்லை யென்பது சொல்ல வேண்டுவ தில்லையாம்; ஆகவே, அதிகாரி புருஷன் பராமுகமின்றி மனோ நிக்கிரகஞ் செய்தல் வேண்டும்; அதனாற்றான், ஸ்திதப் பிரஞ்ஞை யுண்டாகும்; இந்திரிய நிக்கிரக மாத்திரத்தா லஃதுண்டாவதில்லையா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

‡ மனோ நிக்கிரகஞ் செய்துள்ளவன் இந்திரியங்களின் வாயிலாக விஷயங்களை யனுபவித்தாலும், அவன் மனம் நிர்மலமாகவே யிருக்கும்; மனம் நிர்மலமா யிருப்பதால், அவனுக்குச் சர்வ துக்கமும் படிப்படியாக நீங்கும்; அவன் புத்தி ஜீவப்பிரஹ்ம ஐக்கிய விஷயத்தில் ஸ்திரமாக விருக்கு மென்பது இங்குணர்தற்பாலதாம்.

இந்திரிய நிக்கிரகஞ் செய்யாதவர்க்கு நல்லறிவு முதலியன உண்டாகாவென வற்புறுத்துதல்.

சுரோத்திரம், துவக்கு, சட்சு, ரசநம், கிராணமென்னு மிந்திரிய மைந்தனையும் நிக்கிரகஞ் செய்யாதவர்க்குச் சற்குரு வாயிலாகவும் சற்சாஸ்திர வாயிலாகவும் ஆன்ம விஷயமான புத்தி யுண்டாவ தில்லையாம்; அப்புத்தி யுண்டாவதில்லை யாகவே, பொருளைத் தேடுதல் போகத்தை யனுபவித்த லென்னு முலகிய லெண்ண மொழிந்த ஆத்மத்தியான முண்டாவ தில்லையாம்; அவ்வாத்மத்தியான மில்லையாமாயின், பின், தாம் பெறத் தொடங்கிய ஆத்ம சாட்சாத்கார (பிரத்தியட்ச) வடிவச் சித்த சாந்தி யுண்டாகாது; அச்சாந்தி யுண்டாகாதாயின், அச்சாந்தியின் பயனாகிய மோட்சாநந்த முண்டாவ தில்லையாம். $

(அருச்சுனா! நீ இந்திரிய நிக்கிரகத்தோடு கூடிய மனோ நிக்கிரகம் யாது காரணத்தா லுண்டாகாதிருக்கின்றது, அதனைக் கூறல் வேண்டுமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.) தத்தம் விஷயங்களை யனுபவித்தற்குரிய மார்க்கங்களில் தாம் விரும்பியவாறு செல்லுகின்ற சுரோத்திர முதலிய ஐந்திந்திரியங்களுக்கும் பின்னே, அவை சென்ற மார்க்கங்களைத் தொடர்ந்து செல்லுகின்ற மனமானது அந்தச் சாதக புருஷனது ஆன்ம விஷயமான புத்தியைக் கடலி லோடுகின்ற தோணியை அதற்கனுகூலமாக அதனோடு செல்கின்ற காற்றே பிரதிகூலமா யடித்துக் கெடுத்தழிப்பது போலக் கெடுத்து விடுகின்றது; அதனாலவன் உலகநோக்க முடையவனாய் விடுகின்றான். *

ஸ்திதப்பிரஞ்ஞனிடத்து இந்திரிய மனைத்தும் இயல்பாகவே அடக்க முடையனவா யிருக்கின்றன வெனல்:

அருச்சுனா! எந்தச் † சாட்சாத்கார ஞானத்தை அஞ்ஞானிகள் யாவரும் இருளிலுள்ள பொருள்போன் றறியா திருக்கின்ற

$ இந்திரிய வடக்கத்தோடு கூடிய மனவடக்க மில்லாதவனுக்கு ஆன்ம விஷயமான புத்தி யுண்டாகாது; அஃதுண்டாகா தாகவே, ஆத்மத்தியான முண்டாகாது; அஃதுண்டாகாதாகவே, சாந்தி யுண்டாகாது; அஃதுண் டாகாதாகவே, பரமாநந்த முண்டாகா தென்பதிங் குணர்தற்பாலதாம்.

* இதனால், இந்திரிய நிக்ரகமுடையவனது ஆன்ம விஷயமான புத்தி ஸ்திரமா யிருக்குமென்பது பெறப்பட்டமைகாண்க.

† சாட்சாத்கார ஞானம்—யான் பிரஹ்மமாயிருக்கின்றே னென்னும் பிரத்தியட்ச ஞானம்.

ணரோ, அதனை இந்திரிய நிக்கிரகமுடைய ஞானி உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காண்பவனு யிருக்கின்றனன். எந்தச் சப்தாதி விஷயமான புத்தியை அஞ்ஞானிகள் யாவரும் எப்போதுங் கண்டுகொண் டிருக்கின்றனரோ, அதனை ஞானி தன் மனத்தால் காணு திருக்கின்றனன். ‡

ஸ்திதப் பிரஞ்ஞனுக்கு இந்திரியங்களே யன்றி மனமும்
இயல்பாகவே அடக்கமுடையதா யிருக்குமெனல்.

நீரால் நிறைந்து தனதெல்லையைக் கடவா திருக்கின்ற சமுத்திரத்திலே நீரால் நிறைந்துள்ள கங்கை யமுனை முதலிய நதிகள் பல வழிகளால் வந்து பிரவேசித்தமையால், அந்தச் சமுத்திரம் சிறிதாகவேனும் பெருகி விகாரமடைவ தில்லையாம்; அங்ஙனமே, தமது நிஜ சொரூபத்தில் நிலைத்துள்ள ஸ்திதப் பிரஞ்ஞரது சந்நிதியை நாடிச் சப்தாதி விஷய முற்றும் அவர்தம் பிராரத்த கருமங் காரணமாக வந்தடையுமானுல், அவற்றால் அவர்கள் சிறிதும் சித்தக் கலக்கமுறாது, தமது நிலையிலே யிருப்பர். அருச்சுனு! நீ இதனால், விஷய போகத்தில் விருப்ப மற்றவர் சாந்தி யடைவர்; மற்றவர் அதனை யடையாரென்ப தறியக் கடவாய். $

விஷயப் பற்றில்லாதவர் சாந்தியை யடைவர்,
பிறவியை யடையா ரேனல்.

அருச்சுனு! தானல்லாத வுடம்பின்கண் யானென்னும் அபிமானமும், தனதல்லாத பொருளின்கண் எனதென்னும் அபிமா

---

‡ இதனால் சாட்சாத்கார ஞானத்தை அஞ்ஞானிகள் இருளிலுள்ள பொருளை யறியாமைபோ லறியா திருக்கின்றனர்; ஞானி அதனை வெளிச்சத்திலுள்ள பொருளை யறிவதுபோ லறிந்துகொண் டிருக்கின்றனன். சப்தாதி விஷய புத்தியை அஞ்ஞானிகள் வெளிச்சத்திலுள்ள பொருளை யறிவதுபோ லறிந்துகொண்டிருக்கின்றனர்; ஞானி அதனை இருளிலுள்ள பொருளை யறியாமைபோ லறியா திருக்கின்றன னென்பது பெறப்பட்டதென்க.

இயல்பாகவே இந்திரிய வடக்கமுள்ள ஸ்திதப் பிரஞ்ஞன் எப்போதும் உலக நோக்க மில்லாது, தன்னேக்க முடையவனு யிருக்கின்றானென்பதிங் குணர்தற் பாலதாம்.

$ இதனால், சற்குரு சற்சாஸ்திர வுபதேச வாயிலாக ஆத்மாவை ஐயந்திரிபின்றி யுணர்ந்து, உணர்ந்தவா றிருப்பவர் தமது பிராரத்த கருமங் காரணமாக, சப்தாதி விஷயங்கள் தம்மைவந் தடுப்பினும், அவற்றால் கலக்கமுறா திருப்ப ரென்பது பெறப்பட்டவா றறிக.

ணுமாகிய இவ்விரண் டபிமானமு மில்லாது, எத்தன்மையதாய பொருளையும் எனதென்று கருதுவது சொப்பனத்துமில்லா தொழித்து, தானுன தன்மய மாகவே யிருந்து, தனது பிராரத்த கருமங் காரணமாக வரும் போகங்களைப் பற்றில்லா தனுபவித்து, தான் விரும்பியவா றொழுகுகின்றவ னெவனோ, ஸ்திதப் பிரஞ்ஞ ஞன அவனையே சர்வ சம்சார துக்க நிவிர்த்தி வடிவமான சாந்தி யானது வந்தடையா நிற்கும். இந்தச் சாந்தியை யடைந்தவர் மீண்டும் சம்சார துக்கத்தை யடையார். தாம் மரணமடையு மக் காலத்திலேனும் இச் சாந்திக் கேதுவாய பிரஹ்ம ஞானத்தை யடைந்தவர் * பிரஹ்ம நிருவாண வடிவமான என்னையே யடை வர்; பிறவியை யடைய மாட்டார்.

கீதாசாரியனை வியந்து துதித்தல்.

அருச்சுனனுக்கு "பின்னை யோவிவ் வுலகமெ லாம்பெற்ற
அன்னை யோதிரு மார்பத் தணைத்தவன்
முன்னை யோர்புகழ் வேத முடிவையோ
தன்னை யோவுள்ள வாறெலாஞ் சாற்றினன்" என்க.

[பின்னை - இலக்குமி; இவ்வுலகமெலாம் பெற்ற அன்னை - பூமிதேவி.]

2—சாங்கியயோக வத்தியாயம் முற்றிற்று.

---

* பிரஹ்ம நிருவாண மென்பது பிரஹ்மாநந்தமாம்.

மரண காலத்தில் பிரஹ்மஞான மடைந்தவரும் பிரஹ்ம நிருவா ணத்தை யடைவரென்று கூறினமையால், தம் முடம்பு செவ்வையாக விருக்கும்போதே விஷயப் பற்றின்றி வேதாந்த விசாரஞ் செய்து வருபவர் பிரஹ்ம நிருவாணத்தை யடைவ ரென்பது சொல்லவேண்டுவ தில்லையாயிற் றென்க.

இச் சாங்கியயோக வத்தியாயத்தில் பிரஹ்ம ஞானத்திற்குப் பரம்பரா சாதனமாயுள்ள நிஷ்காம கருமமும், நிஷ்காம கருமத்திற்குச் சித்த சுத்தி வடிவப்பயனும், அச்சித்த சுத்திக்கு ஞான நிஷ்டை வடிவப்பயனும் கூறப் பட்டவா றறிக.

3—கர்மயோக வத்தியாயம்.

அர்ச்சுனன் சாங்கிய (ஞாந) யோகம், கர்மயோக மென்னும் இரண்டனுள், இன்னது முக்கியமா மென்பது அடியேனுக்கு விளங்கவில்லை யெனல்.

வில்லைத் தரித்த தோளையுடைய அர்ச்சுனன் அலைகளை யுடைய திருப்பாற்கடலிலே அறிதுயி லமர்ந்திருந்தும், அறிதற் கரிய வேதங்களின் முடியிலே வீற்றிருக்கும் ஸ்ரீ கண்ணபிரான் தனது தேரின்மீது சாரதியாக வெழுந்தருளி யிருந்து, வேதார்த் தங்களைச் சுருங்கச் சொல்லலும் விளங்க வைத்தலுமாக வெடுத் துத் தனக் கறிவித்தும், அவ் வேதவசனங்களின் மெய்ப் பொரு ளைத் தனது சித்தக் கலக்கத்தா லறியாது, பகவானை நோக்கி, “அளக்க லாகா வளவும் பொருளும், துளக்க லாகா நிலையுந் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையும்” என்பவற் றால் மலையை யொத்துள்ள சுவாமி! தேவரீர் முன்னர் நிஷ்காம கர்மத்தைக் காட்டிலும் (ஆத்ம தத்துவ விஷயமான) ஞானயோக மானது சிரேட்டமாமென் றருளிச் செய்தீர்; பின்னர்க் கரும யோகமானது சிரேட்டமாமென் றருளிச் செய்தீர்; அதனால், யான் அவ்விரண்டனுள் இன்னது முக்கியமாம், இன்னது அமுக் கியமா மென்றுணரா திருக்கின்றேன்; தேவரீரைச் சரணமடைந் துள்ள எனக்குப் பொருந்திய சோகத்தை யொழிக்குஞ் சாதன த்தை யொன்றாகவே நிச்சயித்துத் திருவாய்மலர்ந்தருளல் வேண்டு மென்று வினவினான். *

பகவான் அர்ச்சுனனது வினாவை யனுசரித்து விடை கூறல்.

யான் உலக சிருஷ்டியினாரம்பத்திலே பிராணிகளைச் சிருஷ் டித்து, அப்போதே ஆன்ம அநான்ம விவேக முடையவர் பொருட்டும், மலின அந்தக்கரண முடையவர் பொருட்டும் முறையே கூறிய ஞானயோகம் கர்மயோக மென்னு மிவ்விரண்

---

* கரும யோகத்தினும் ஞானயோகம் சிரேட்டமாமாயின், தேவரீர் அடியேனுக்கு ஹிம்சைவடிவக் கருமத்தைச் செய்யுமாறேன் வற்புறுத்து கின்றீர்; அதனால் யான் கருமயோகம் ஞானயோக மென்னுமிரண்டனுள் இன்னது சிரேட்டமாமென்ப துணராதிருக்கின்றேன்; தேவரீர் எனக்கு அவ் விரண்டனுள் யாதாவ தொன்றனை யென் புத்தி ஸ்திரமாம் வண்ண முப தேசித்தருளல் வேண்டுமென்றருச்சுனன் கண்ணபிரானை நோக்கி வினவி னானென்க.

டும் உண்மையானவையே யாம். யாகம், தானம், தவ முதலிய வடிவமாயுள்ள நித்திய நைமித்திக கருமங்களை நிஷ்காமமாய்ச் செய்யாதவன் துன்பந்தரும் ஆசை நீங்காது வருத்தமுறுவன்; மேன்மை பொருந்திய நிஷ்காம கருமத்தைச் செய்யாதவன் சந்நியாச மாத்திரத்தால் மோட்சமடைய மாட்டான். †

ஞானி அஞ்ஞானி யென்பவருள் ஒருவரும் ஓரவஸ்தையிலும் ஒரு கணமாத்திரமும் நல்வினை தீவினை யென்னும் வினையிரண்டையுஞ் செய்யாதவராக விருப்பதில்லை. நீக்குதற்கரிய மோகத்தைத் தரும் ஆசை நீங்காத மனமுடையவனாய், (வாக்குப் பாணி பாத முதலிய) கர்மேந்திரிய நிக்கிரகஞ் செய்பவன் துன்பத்தோடு சப்தாதி விஷயங்களையே நினைத்துக்கொண்டிருப்பான். இவன் மித்தியாசாரனென்று சொல்லப்படுகின்றான். ‡ (மித்தியாசாரம்—பொய்யொழுக்கம்.)

அருச்சுனா ! நீ சுரோத்திர முதலிய ஞானேந்திரியங்கள் மனதுடன் கூடிச்சப்த முதலிய விஷயங்களிற் செல்வதைப் பிரயத்ன பூர்வகமாகத் தடுத்து, பயன் கருதாது நித்திய நைமித்திக கருமங்களைப் பரமேசுவரனான எனது பிரீதியின் பொருட்டுக் கர்மேந்திரியங்களால் செய்வாயாக ; இங்ஙனஞ் செய்வாயாயின், சித்த சுத்தியில்லாத சந்நியாசியினும் சிரேட்டமுடையவனாவாய். நன்மை

---

† மண், தண்டம், சக்கரம், குலாலன் முதலிய காரணமில்லாவிடத்துக் கடவடிவக் காரிய முண்டாகாமைபோல, நிஷ்காம க்ர்மயோக வடிவக் காரணமில்லா விடத்து, ஞானயோக வடிவக் காரிய முண்டாவதில்லையா மென்பதும், நிஷ்காமகருமத்தால் சித்த சுத்தியும், அதனால் ஞானமும், அதனால் மோட்சமுமுண்டா மென்பதும், சித்த சுத்தியில்லாதவன் சந்நியாசியாயிருப்பினும் அவன் மோட்சமடையா னென்பதும் இங்குணர்தற்பாலனவாம்.

‡ இதனால், ஞானி அஞ்ஞானி யென்பவருள், ஒவ்வொருவரும் பூர்வ கன்ம சம்ஸ்காரத்திற் கேற்றவாறு கருமங்களைச் செய்து வருகின்றனர் ; அச்சம்ஸ்காரம் அவர்களைக் கர்மஞ் செய்யுமா றேவுவதா யிருக்கின்றது ; கர்மங்களைப் பலனை விரும்பாது செய்வது கூடுமேயன்றி, அவற்றை முற்றும் விடுவது முடியாது ; கர்மேந்திரியங்களை யடக்கிச் சப்தாதி விஷயங்களை நினைத்துக்கொண் டிருப்பவன் மித்தியாசார முடையவனாவன்; அவன் துன்பத்தை யனுபவித்தற் குரியவனா யிருக்கின்றானென்பன பெறப்பட்டன வென்க.

பயக்கும் அந்த நித்திய நைமித்திக கருமங்கள் காமிய கருமங்கள் போல விரைவாக நாசமாகாது நிலைபெற்று, சித்த சுத்தியைத் தருவதன்றி, ஞானத்தையுந் தருவது வாயிலாக, விரைந்து கெடு மியல்பினையுடைய பிறப்பினையுங் கெடுக்கும். அக் கருமங்களின் தன்மையைக் கூறுகின்றேன், கேட்கக் கடவாய். *

பகவான் அதிகாரி புருஷன் கருமஞ்செய்வ தவசியமாமென்பதைப் பிரஜாபதி வசனத்தினால் நிரூபித்தல்.

சிருஷ்டியி னாரம்ப காலத்தில் ஜாதி—குலம்—தர்ம முதலிய வற்றை யாராய்ந்துணர்ந்து இந்திரன் முதலிய இமையவரைச் சந்தோஷிப்பிக்கும் வேள்வியோடு கூடவே, அதனைச் செய்தற்குரியவராய பிரஹ்ம க்ஷத்திரிய வைசியரென்னுமிம் முத்திறத்தாரையும் படைத்த பிரஜாபதி, அவர்களை நோக்கிப் பொருந்துதற்குரிய தேவாராதனம் இவ் வேள்வியாம்; இவ் வேள்வி நீங்கள் விரும்பியவற்றை யெல்லாம் தரும். †

(நீங்கள் வேள்வி வடிவக் கருமம் நாங்கள் விரும்பியவற்றை யெல்லாம் தருவ தெவ்வாறு மென்று கருதுதல் கூடும். இந்த வேள்வி தரும் பலனைக் கிரமமாகக் கூறுகின்றேன், கேட்பீராக.) வேள்வி செய்தற் கதிகாரி புருஷராயுள்ள நீங்கள் இந்த வேள்வி முதலிய கருமங்களால், அவ் விந்திரன் முதலிய விமையவரது சித்தங்களில் சந்தோஷமுண்டாமாறு செய்யுங்கள்; அவ்வாறு செய்வீராயின், அப்போதே அவ் விந்திரன் முதலிய இமையவர்களும் மேகத்தின் வாயிலாக மழை பொழியச் செய்து, அதனால் அன்னமுண்டாமாறு செய்து, அவ் வன்னத்தால், உங்களுடம்பினை விருத்தி யடையச்செய்து, அதனால் உங்கள் மனங்களில் சந்

---

* இதனால், மனோ விந்திரிய நிக்கிரகஞ் செய்து, பயன் கருதாமல் ஈசுவரப் பிரீதியாகக் கர்மங்களைச் செய்பவன் சித்த சுத்தி பெறுவான்; அதனால், ஞானத்தைப் பெறுவான்; அதனால், பிறவியின்மையைப் பெறுவானென்பன பெறப்பட்டன வென்க.

† இமையவர்-தேவர்; வேள்வி-யாகம். வேள்வி யென்பதிங்கு நித்திய நைமித்திக கர்மங்களையு முணர்த்தி நின்றது. பிரஜாபதி-பிரமன். நித்திய நைமித்திக கருமங்களுள் எதனையும் செய்யாதிருப்பவர்க்குக் காமிய கர்மத்தைச் செய்வது உசிதமா மாகலின், அதுபற்றிக் காமியகருமம் சிறப்பித்துக் கூறப்பட்டதென்க. இதனால், நிஷ்காம கருமத்தைச் சிறப்பித்துக் கூறு மிவ்விடத்திற் காமிய கருமத்தைச் சிறப்பித்துக்கூறல் குற்றமுடையதன்று மென்பது பெறப்பட்டவா றறிக.

தோஷமுண்டாமாறு செய்வர். இவ்வாறு பரஸ்பரம் (ஒருவர்க்கொருவர்) சந்தோஷிப்பிக்குந் தன்மையானது தவறுதிருக்கவொழுகி வருவீராயின், தேவருட் மக்களுமென் றிருவிதமாகவுள்ள நீவி ரிருவீரும் இவ்வாறு முயலுங் கிரமத்தினுல், நன்மையையடைவீர்களென்று கூறினுர்; மீண்டுமப் பிரஜாபதி அவர்களை நோக்கி, வேள்வியினுல் சந்தோஷ மடைந்த இந்திரன் முதலிய இமையவர் தமக்குத் தந்த அன்னம், பசு, சுவர்ண முதலியவற்றைக் கொண்டு பின்னு மவர்களைப் பூசியாது, அவற்றைத் தமக்கே யுபயோகமாக்கிக் கொள்பவர், தமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியரைப் பழித்துக் கூறிய கள்வரினும் கொடியராவர்; செய்ந்நன்றி கொன்றவருமாவர். தான் தேவர்கள் வாயிலாகப்பெற்ற அன்ன முதலியவற்றைக் கொண்டு, அவர்களைப் பூசித்து, பின் எஞ்சிய அன்ன முதலியவற்றைத் தானேற்றுக்கொண் டுண்ணுது, தான் பெற்றுள்ள அவ்வன்ன முதலியவற்றைத் தன் பொருட்டாகவே யுபயோகமாக்கிக் கொள்ளுகின்றவன் பஞ்சசூனை முதலிய பாவங்களையே யுண்பவனுவன். ‡

---

‡ தனக்குக் கிடைத்த அன்னத்தைத் தேவதைகளுக் கர்ப்பணஞ் செய்யா துண்பவனது நோக்கத்திற்கு அஃது அன்னமாகத் தோன்றினும், சாஸ்திர திருஷ்டிக்கும் தேவதைகளின் திருஷ்டிக்கும் பாவரூபமாகவே தோன்று மென்பதாம்.

ரிஷி யக்ஞம், தேவ யக்ஞம், பூத யக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பிதிர் யக்ஞமென்னு மைம்பெரும் வேள்விகளையும் செய்தற் பொருட்டுத் தான் சமைத்த அன்னத்தை யுபயோகமாக்கி, எஞ்சிநின்ற அன்னத்தை யுண்பவன் பஞ்ச சூனை முதலிய பாவங்களினின்றும், சோர்வினுற் செய்த பாவத்தினின்றும், நற்கருமங்களைச் செய்யாமையா லுண்டாகிய பாவத்தினின்றும் நீங்குவனென்ப திங்குணர்தற் பாலதாம்.

(1) வேதத்தைப் படித்தல், படிப்பித்தல், சந்தியை யுபாசனை செய்தல் ரிஷி யக்ஞமாம்; (2) அக்கினிஹோத்திர முதலியவற்றைச் செய்தல் தேவயக்ஞமாம்; (3) பலி, வைசுவ தேவங்களைச் செய்தல் பூதயக்ஞமாம்; (4) தன் வீட்டின்கண் வந்த அதிதி (விருந்தினர்)களை யன்ன முதலியவற்றுல் சந்தோஷ முறச்செய்தல் மனுஷ்ய யக்ஞமாம்; (5) சிரார்த்தம்-தர்ப்பணங்களைச் செய்தல் பிதிர் யக்ஞமாம்.

பஞ்சசூனை யென்பன (1) நெல் முதலியவற்றை உரல் முதலியவற்றிலிட்டுக் குத்துதல். (2) யந்திரம்—அம்மிகளில் அரிசி முதலியவற்றைப் போட்டரைத்தல், (3) அடுப்பில் தீமூட்டல், (4) பாண்டங்களில் நீரூற்றி வைத்தல், (5) பெருக்கல் மெழுகுதல் முதலிய செயல்களால் வரும் பாவங்களாம். இப்பாவங்களும் மற்றப் பாவங்களும் ரிஷியக்ஞ முதலிய ஐம்பெரும் வேள்விகளையும் செய்பவர்க்கு ஒழிந்துபோ மென்பது இங்குணர்தற் பாலதாம்.

வேள்வி முதலிய கருமங்கள் சம்சார சக்கரத்தின் பிரவிர்த்திக்குக் காரணமாயிருத்தலினாலும், அவை செய்யத்தக்கனவாமெனல்.

கம்பீரமுடைய இளஞ்சிங்கத்தை யொத்த அருச்சுன! போஜனஞ் செய்வது வாயிலாகப் புருஷஸ்திரீகளின் சரீரத்தின் கண்ணே பிரவேசித்துச் சுக்கில சோணித வடிவமாகப் பரிணமத்தை யடையும் அன்னத்தினால் பிராணிகளின் சரீரங்க ளுண்டாவனவாம்; அவ்வன்னம் நெல் கோதுமை முதலிய வடிவமாக நல்ல மழை பெய்வதாலுண்டாவதாம்; வளப்பம் பொருந்திய அந்த நல்ல மழை மேன்மை பொருந்திய தேவர்களின் சந்தோஷத்தா லுண்டாவதாம்; அச்சந்தோஷமும் தகுதியமைந்த அக்கினிஹோத்திர முதலிய கருமங்களா லுண்டாவதாம்; இவ்வக்கினி ஹோத்திர முதலிய கருமங்கள் பெரும் பிரமாணமாயுள்ள வேதம் கூறுவதால் தோன்றுவனவாம்; பெருமை பொருந்திய அவ்வேதம் பரமான்மாவினின்றும் நிசுவாச முண்டாவது போலத்தோன்றி, அத் தருமவடிவ யக்ஞத்தின் கண்ணே நிலைபெற்றிருப்பதாம்.

(அருச்சுன! நீ தேவரீர் இவ்வாறு கூறியதால் சித்தித்த பலன் யாது என்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

உணவால் உடம்பும், மழையால் உணவும், தேவர்களின் மகிழ்ச்சியால் மழையும், அக்கினி ஹோத்திராதி கருமங்களால் தேவர்களின் மகிழ்ச்சியு முண்டாமென் றிங்ஙனங் கூறியவாற்றால், கருமங்களிலிருந்தே காணப்படுவனவெல்லாம் தோன்றுகின்றன வென்பதறிவாயாக. இவ்வாறு நிலைபேறுடைய ஈசுரனால் நியமிக்கப் பட்டு வருகின்ற கர்மரூபமான சக்கரத்தின் வழியை யனுசரியா தொழுகுகின்றவர், தோன்றும்போது மாத்திரம் ரமணீயமாக விருக்கின்ற இந்திரியங்களின் விஷயங்களையே தாம் களிப்புறுதற் கிடமாகவு முடையவராவர்; அவ்வேதுவால் பாவஜீவனமுடைய

அவர் தம் வாழ்நாளை வீணாகவே கழிப்பவராவரென்பதை அருச்சுனா நீ அறியக்கடவாய். $

பகவான் பரமானந்த வடிவமாக விளங்கும் ஜீவன் முக்தன் தான் செய்யவேண்டியவற்றை யெல்லாஞ்செய்து முடித்தவனாகலின், உலகவடிவச் சக்கரத்திற் கேதுவாகிய கர்மங்களைச் செய்யாதிருப்பினும் பாவத்தை யடையான்; ஏனையோர் செய்யாதிருப்பின், பாவத்தை யடைவாரெனல்.

அருச்சுனா! அசுத்தமனத்தா லறிதற்கரிய ஆத்மாவைப் பிரஹ்ம சொரூபமாக அபரோக்ஷமாயறிந்து, அவ்வான்மாவினிடத்திலேயே பூரணமாகத் தோன்றும் ரதி, திருப்தி, சந்தோஷங்களை யனுபவிக்கும் பிரஹ்ம நிஷ்டன் அளவற்ற கருமங் காரணமாக வுண்டாகின்ற பயன்களை யடையுமாறு விரும்பான்; அக்காரணத்தாலவன் நித்திய நைமித்திக கருமமனைத்தையும் செய்வதால் அடைவதாய வொருபய னிருக்கின்றதோ? இல்லையாம்; அக்கருமக்களைச் செய்யாமையா லடைவதாகிய ஒரு பழியிருக்கின்றதோ? இல்லையாம். இவ்வுலகத்திலே அறிஞர் இந்தப் பிரஹ்ம நிஷ்டன் இக்கருமங்களைச் செய்யாதிருக்கின்றானென்று நினைக்கவுமாட்டார்; அவனுக்கு அக்கருமங்களைச் செய்யுமாறு விதிக்கவுமாட்டார். *

$ ஒவ்வொரு சிருஷ்டியினாரம்பத்திலும் பரமேசுவரனிடத்தினின்றும் வேதமுண்டாகின்றது; அதன்பின் அவ்வேதங்கூறும் கருமங்களின் ஞானம் மக்கட்குண்டாகின்றது; அதன்பின் அக்கருமானுஷ்டானத்தால் அபூர்வம் அல்லது அதிர்ஷ்டவடிவத் தருமமுண்டாகின்றது; அதனால் மழை யுண்டாகின்றது; அதன்பின் நெல்—கோதுமை வடிவ அன்ன முண்டாகின்றது; அவ்வன்னத்திலிருந்து மனிதர் முதலிய சரீரங்களுண்டாகின்றன; அதன்பின் மனிதர்கட்குக் கருமஞ் செய்வதன்கண் மீண்டும் முயற்சி யுண்டாகின்ற தென்னும் சம்சார சக்கரத்தை யங்கீகரியாதவர் இந்திரியாராமராய்ப் பாவ கருமங்களையே செய்பவராய்த் தமது காலத்தை வீணாகவே கழித்துத் துன்பத்திற் காளாகின்றனரென்ப திங்குணர்தற்பாலதாம். இந்திரியங்களால் விஷயங்களை யோய்வின்றி யனுபவிப்பவர் இந்திரியா ராமரென்று கூறப்படுகின்றன ரென்க.

* அபரோக்ஷம்-பிரத்தியக்ஷம். ரதி, திருப்தி, சந்தோஷமென்பன-பிரிய, மோதம், பிரமோத மென்பன போல மனோவிருத்தி விசேஷங்களாம். பிரஹ்மநிஷ்டன் சர்வானந்த சொரூபனாக விளங்குதலின், செய்யத்தக்கது மில்லையாம், பெறத்தக்கது மில்லையாம்; அதனாலவன் கருமகர்த்தாவாவதில்லையாம். இங்ஙனமுள்ள இவன் அறிஞர் பழித்தற் கிடமாகாதிருக்கின்றானென்ப திங்குணர்தற் பாலதாம்.

அந்தக் காரணத்தால் அஞ்ஞானியாகிய நீயும், யான் தத்துவ ஞாந மார்க்கத்தை மேற்கொண்டு கர்மங்களைச் செய்யாதிருப்பேனாக 'வென்று கருதுவ தொழிந்து, பலத்தின்மீ திச்சையற்று, வேத விகிதமான நித்திய, நைமித்திக கருமங்களைச் சிரத்தையோடிடைவிடாது செய்வாயாக; அந்த நித்திய நைமித்திக கருமங்களைச் செய்வதால், சித்த சுத்தி வாயிலாகத் தத்துவஞானமடைந்து, துக்கமென்பது சிறிதுமில்லாத மோட்சத்தையேயடைதல் கூடும். முற்காலத்தில் நித்திய நைமித்திக கர்மங்களைப் பயனை விரும்பாது செய்து முத்தி பெற்றவர் அநேகராவர். அவர்கள் யார் யாரென்று அருச்சுனா! நீ வினவுவாயாயின், அவரைக் கூறுகின்றேன், கேட்கக்கடவாய். அவர்கள் ஜனகன், அஜாத சத்துரு, அசுவபதி, பகீரதன் முதலிய அரசராவர். அவர்கள் சிரத்தையோடு சுருதி ஸ்மிருதிகள் கூறும் கர்மங்களைப் பயன் விரும்பாது செய்து வந்தமையாலன்றோ அந்தக்கரணசுத்தி வாயிலாகத் தத்துவஞானிகளாகி அநர்த்த நிவிர்த்தி—ஆநந்தப் பிராப்தி வடிவ மோக்ஷ உலக மடைந்தனர். இவர்களது சதாசாரமும் பயனை விரும்பாது கருமஞ்செய்ய வேண்டுமென்பதற்குப் பிரமாணமாம். அருச்சுனா! நீ உன்னைத் தத்துவ ஞானியாக வெண்ணிக்கொண்டாலும், † இவ்வுலக சங்கிரகத்தின் பொருட்டாவது நித்திய நைமித்திக கருமங்களைச் செய்யக்கடவாயாக.

(அருச்சுனா! நீ யான் கருமஞ் செய்வது எவ்வாறு லோக சங்கிரகமாகுமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்)

அரசர் முதலிய சிரேஷ்ட புருஷர் செய்து வருகின்ற கருமங்களை அவரது கட்டளைக் கடங்கி நடப்பவர் செய்வதல்லாமல் வேறு கர்மங்களைச் செய்யமாட்டார்களாகலின், எவ்வுலகத்திலும் மிகு பிரசித்தி பெற்றுள்ள நீயும் உலகத்தாரைப் பாதுகாத்தற் பொருட்டுச் சுப கருமங்களை யவசியமாகச் செய்தல்வேண்டும். இதற்குப் பகவானாகிய யானே உதாரணமாக விருக்கின்றேன். யானிங்ஙனங் கூறியது உண்மையல்லவாயின், யானேன் கருமஞ் செய்தல் வேண்டும்? எனக்குரிமையாயுள்ள சுவர்க்க மத்திய பாதாள மென்னு மிம்மூன்றுலகத்திலும் அவற்றிற்குச் சுவாமியாகிய எனக்குச் செய்ய வேண்டுவதாகிய காரியம் சிறிதுமில்லையாம். இம்மூன் றுலகத்திலும் கிடைத்தற்கரியனவாய்

† நீ உன்னைத் தத்துவஞானியாக நினைத்துக்கொண்டு, கருமங்களைச் செய்யாதிருப்பாயாயின், உலகந் தடுமாற்ற முடையதாமென்று அருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்ப திங்குணர்தற்பாலதாம். உலக சங்கிரகமாவது உலகத்தாரைத் தத்தங் கருமங்களைச் செய்யுமாறு செய்து, அதருமத்தினின் றுந் திருப்புதலாம்.

என்னாலடையத் தகாதனவும், அடையத் தக்கனவுமாயுள்ள பொருள்களெவை? ஒன்றுமில்லையே! அங்ஙனமாயினும், அருச்சுனா! இவ்வுலகத்தார் சிரத்தையோடு சுப கர்மங்களைச் செய்துய் தற்பொருட்டு, யான் சுப கர்மங்களைச் சிரத்தையோடு செய்து வருகின்றேன்; சுப கருமங்களைச் சிரத்தையோடு செய்து வருகின்ற என்னையும் நீ கருமஞ் செய்வதவசிய மென்பதற்குதாரணமாகப் பார்க்கக்கடவாய். அதனால், அருச்சுனா! நீயும் என்னைப் போலச் சுப கருமங்களைச் சிரத்தையோடு செய்யக்கடவாய்.

பகவான் தான் கருமஞ் செய்யாவிடின் உண்டாகுந் தோஷத்தைக் கூறல்.

அறமனைத்தையும் ஆதரிப்பவனான யான் எனதவதார சரீரத்திற்கேற்ற சுப கர்மங்களைச் செய்யா தொழிவேனாயின், யான் செய்யாத சுபகர்மங்களைக் கர்மாதிகார புருஷர் யாவரும் எவ்வகையாலுஞ் செய்யமாட்டார்; அந்தக் காரணத்தாலே, அநாதியாக நிலைபெற்றுள்ள பிரஹ்ம—க்ஷத்திரிய முதலிய வருணங்கள் தடுமாற்றமுடையனவாம்; ஆகவே, அந்தக் கருமாதிகார புருஷர் யாவரும் நாசமடைவர்; அங்ஙனம் உலகம் வருண சங்கரத்தால் (கலப்பால்) கெடாதிருத்தற் பொருட்டு, யான் சுப கருமங்களைச் செய்து வருகின்றேன். பின்னருண்டாவதை யறியாது இப்பயனெனக்குண்டாதல் வேண்டுமென்னு மவாவோடு சுபகர்மங்களைச் செய்கின்ற அஞ்ஞானியைப் போல, பிறருய்தற் பொருட்டு அருச்சுனா! உனது சுபகர்மங்களைச் செய்யக் கடவாயாக; அவற்றின் பயனைக் கருதாதிருக்கக் கடவாயாக; யானிக் கரும கர்த்தாவென்னும் அபிமானத்தோடு பயனை விரும்பிக் கருமங்களைச் செய்கின்றவரது புத்தியைத் தத்துவோபதேசவாயிலாகச் சலிக்குமாறு செய்தலையு மொழிவாயாக.

பகவான் ஞானிக்கும் அஞ்ஞானிக்கு முள்ள வேறுபாட்டைக் கூறல்.

ஆத்மாவாய தனக்கும் அநாத்மாவாய கண் முதலிய இந்திரியங்கட்கும் யதார்த்தமாகவுள்ள வேறுபாட்டினைச் செவ்வையாக வுணர்ந்த ஞானியானவன், ஐவகையாக வுள்ள கண் முதலிய இந்திரியங்களே உருவ முதலிய விஷயங்களில் தம்மியல்பிற்கேற்றவாறு சென்று வருந்துகின்றன; அசங்கமாயும், சித்தாயுமுள்ள யான் எதனிடத்துஞ் சென்று வருந்துவதில்லை யென்பதுணர்ந்து,

கரும கர்த்தாவாகா திருக்கின்முன். இவ்வாறறியாத அஞ்ஞானி யானவன் லௌகிக கர்மம், வைதிக கர்மமென்னு மிருவகைக் கருமங்களையும் யானே செய்தேனென்று கருதி மனமெலிந்து வருந்துகின்முன். அருச்சுனு! நீ உய்தற் பொருட்டு யான் உபதேசித்த இந்த உபதேசத்தையுணர்ந்து, உனக்குச் சுதர்மமாயுள்ள யுத்தத்தைப் பரமேசுவரனுன வென்னிடத் தர்ப்பணஞ் செய்து, இச்சையற்று மமதை யற்றுச் சோக மற்றுச் செய்யக்கடவாய்.

பகவான் கர்மாநுஷ்டானத்தால் வரும் நன்மையையும் அவ்வநுஷ்டான மில்லாமையால் வரும் தீமையையும் கூறல்.

எவர் பரமாசாரியனுகிய வென்னிடத்தில் இவர் நம்மைத் துக்கத்தைத் தரும் கர்மத்தைச் செய்யுமாறு பிரவிர்த்திக்கச் செய்கின்முரென்னும் அசூயையை யொழித்து எனது பரம தாற்பரிய மாயுள்ள இச் சுப கர்மத்தைச் சிரத்தையோடு எப்போதுஞ் செய்து வருகின்றனரோ, அவர் புண்ணிய பாவரூபமான கரும மனைத்தையும் முற்றும் விடுதற் குரியவராவர்; எவர் என்னிடத்து அசூயையால் யான் கூறிய இச் சுபகர்மத்தை யங்கீகரித்துச் செய்யாது நிந்திக்கின்முரோ அவர் மிக வலிதாய பூமியினுண்டாகிய விருக்ஷம் போல விருத்தியாகாது கெட்டு ஓரறிவு மில்லாதவராவர். ‡

(அருச்சுனு! நீ அரசனது கட்டளையை யிகழுகின்றவர்க்குத் தவருது தண்டனை யுண்டாதல்போல, பரமேசுவரராகிய உம்முடைய கட்டளையை யிகழுகின்றவர்க்குந் தண்டனை தவருதுண்டாகு மென்பதை யறிந்தவரும் எக்காரணத்தால் தங்களது பரம தாற்பரியமான சுப கருமத்தை மேற்கொள்ளாது சர்வ புருஷார்த்தத்தினின்றும் பிரஷ்டராய் விடுகின்றனரென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனு! இது செய்யத் தக்கது, இது செய்யத் தகாதது என்று கருமத்தின் பாகுபாட்டைச் செவ்வையாக அறிந்தவரும் பூர்வ ஜன்மங்களிற் செய்த பிரகிருதியி னனுசாரமாகவே, புண்ணியரூப அல்லது பாவரூப கருமத்தை மேற்கொண்டு செய்து

‡ சுப கருமங்களைப் பயனை விரும்பாது செய்பவர் அந்தக்கரண சுத்தி வாயிலாகத் தத்துவ ஞானிகளாகி, அதனுல், கருமங்க ளற்றவராவர். சுப கர்மங்களைச் செய்யாது அவற்றை நிந்தனை செய்து வருகின்றவர் சர்வ புருஷார்த்தத்தினின்றும் பிரஷ்டராய், சகுண நிர்க்குண விஷயமான ஞானங்களுள், ஒரு ஞானமுமில்லாதவராவர்; அதனுலவர் மூடரேயாவ ரென்பதிங் குணர்தற்பாலதாம். ஒருவனிடத்துள்ள குணத்தின்கண் மற்றொருவன் குற்றத்தைக் கற்பித்துக்கூறல் அசூயையாம்.

வருவாராயின், மற்றவர் சர்வஞ்ஞனுள்ள எனது தண்டனையால் உபகாரமுண்டென்ப துணர்தற் குரியவராவரோ? அவரிடத்து எனது கட்டளை யாது செய்யும்? $

(அருச்சுனு! நீ விவேகி, அவிவேகி யென்பார் யாவரும் பூர்வ ஜன்மங்களிற் செய்த பிரகிருதியி னனுசாரமாகவே ஒழுகுவாராயின், விதி நிஷேத சாஸ்திரம் வியர்த்தமாமே யென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

சுரோத்திரம், துவக்கு, சட்சு, ரசநம், கிராணம் என்னும் ஞானேந்திரிய மைந்தும் தொடர்ந்து செல்வனவாகிய சத்த, பரிச, ரூப, ரச, கந்த மென்னும் ஐந்து விஷயங்களாகிய கொடிய பாலை நிலத்தின்கண் தம் மனம் உலர்ந்து வெதும்பித் துன்பமுறுகின்ற அதிகாரி புருஷர் இப்பாலை நிலத்தினின்றும் பிழைத்துப் போதற்குக் காரணமாய ஒரு ஞானமார்க்கத்தைக் கள்ளரைப்போலத் தடுத்து, அவர்கட்குப் பலவாறுய துன்பங்களைச் செய்ய, பகையிரண்டு நியமமாக விருக்கின்றன; அவற்றைக் கூறுகின்றேன், கேட்கக் கடவாய். அவை ஒவ்வொருநாளும் குறைதலில்லாது விருத்தி யடைந்து வருகின்ற ராகத் துவேஷங்களாம். அருச்சுனு! நீ அவற்றைப் பிரயத்தன பூர்வகமாக வொழிக்கக் கடவாய். *

$ பூர்வ ஜன்மங்களிலுள்ள தர்மம், அதர்மம், ஞானம், இச்சை முதலியவற்றின் சம்ஸ்காரம் இந்த ஜன்மத்தின்கண் அபிவியக்தமாகின்றது; அந்த அபிவியக்த சம்ஸ்காரமே இங்குப் பிரகிருதியாம். தீவினையால் துக்கமுண்டாமென்பதை யறிந்தவரும் துர்வாசனையின் மிகுதிப்பாட்டால், அதனைச் செய்து வருகின்றனர்; மூடர் தீவினை செய்வது பற்றிப் பேசுவதேன்? அவர் எனது கட்டளையை யிகழ்வது ஆச்சரியமன்று; துக்கத்தை யடைதற்குரிய அவரிடத்து எனது கட்டளை யாது செய்யும் என்று பகவான் கூறினரென்க. அபிவியக்தம்-வெளிப்படுதல்.

* மார்க்கத்தில் செல்லும் பிரயாணிகளுக்குக் கள்வர் பலவகையாய தடைகளைச் செய்வதுபோல, தத்துவஞான மார்க்கத்தி லொழுகும் அதிகாரி புருஷர்க்கும் ராகத் துவேஷங்கள் பலவகையாய தடைகளைச் செய்கின்றன; அதனுல், அதிகாரி புருஷர் ராகத் துவேஷங்களைப் பிரயத்ன பூர்வகமாகக் கெடுத்தல் வேண்டுமென்பதிங் குணர்தற்பாலதாம்.

பூர்வ ஜன்மங்களிற் செய்த பிரகிருதி தனது வலிமையால் சப்தாதி விஷயங்களை நினைப்பித்தல் வாயிலாக ராகத் துவேஷங்களுண்டாமாறு செய்கின்றது; அதனுல். புருஷன் தீவினைகளைச் செய்கிருன். விதி நிஷேத சாஸ்திரமோ தீவினை செய்பவன் தவருது கெடுவானென்றும், ராகத் துவேஷங்கள் பகவானைப் பயனை விரும்பாது பூசித்தலால் கெடுமென்றும் கூறுகின்றது. அதனுல் விதி நிஷேத சாஸ்திரம் அதிகாரி புருஷனுக்கு வீணுகா தென்பதாம்.

(அருச்சுனா! நீ இந்த யுத்தம் சாஸ்திர விகித கருமமா யிருத்தல்போல, சந்நியாச பூர்வகமான பிட்சான்ன போஜனமும் சாஸ்திர விகித கர்மமா யிருக்கின்றது; இந்த யுத்தரூப கருமம் இம்சை வடிவமா யிருத்தலால், இதனை யொழித்து, இம்சையில்லாத சந்நியாச பூர்வகமான பிட்சான்ன போஜன கருமத்தை யானேற்றுக் கொள்ளுகின்றே னென்று கூறுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.) அருச்சுனா! ஒருவன் தனது ஆசிரமத்திற்குத் தகுதியல்லவென்று சாஸ்திரம் விலக்கிய கருமங்களைச் செய்வது, அவனுக் கொருவாற்றானுந் தகுதியுடையதன்றாம்; ஒருவன் தனது ஆசிரமத்திற்குத் தகுதியான யுத்த முதலிய கருமங்களைச் செய்து கெடுவானாயினும், அவன் அக் கருமங்களைச் செய்வது, அவனுக்கு மிக மேன்மையைத் தருவதாம். அந்தக் காரணத்தால், உன்னை யொத்த மேன்மைக் குணமுடையார் தமது ஆசிரமத்திற்குத் தகுதியன்றென்று சாஸ்திரம் விலக்கிய கருமங்களை மிகுதியாகச் செய்வதைப் பார்க்கினும், சாஸ்திரம் தமது ஆசிரமத்திற்குத் தகுதியாமென்று விதித்த கருமங்களை யற்பமாக வேனும் செய்தல் வேண்டும்; அங்ஙனஞ் செய்தலே அவர்க்குரிய தருமமாம். *

அருச்சுனன் வினா.

பகவான் இவ் வாக்கியங்களைத் தனது தேரின்மீதிருந்து கூற, அவற்றைக் கேட்ட அருச்சுனன், பின்னும் வினவக் கருதி, பகவானை நோக்கி, பகவானே! தமது வல்லமையாலே தமக்காக வேண்டிய காரியங்களைத் தமக்குப் பரதந்திரராயுள்ள சேவகரைக் கொண்டு செய்துகொள்ளும் அரசரைப்போல, அசுப கர்மம் துக்கமனைத்திற்குங் காரணமா யிருத்தலால், அதனை நாம் செய்ய மாட்டோமென் றிருப்பவரையும் மயங்கச் செய்து, அவரதனைச் செய்யுமாறு செய்விக்கின்றவன் யார்? என்று வினவினான்; திருப்பாற்கடலைத் தாம் படுக்கும் பாயலாகக் கொண்ட பகவான்

* தரும சாஸ்திரம் பிராமணர் முதலிய நான்கு வருணத்தார்க்கும் அவரவர்க்குரிய ஆசிரமங்களைக் குறித்து எவ்வெக் கருமங்களை விதிக்கின்றதோ அவ்வக் கருமங்களே அவரவர்க்குச் சுவ தருமங்களாம். பிராமணர் முதலியோர் தத்தமது ஆசிரமங்களுக்குரிய கருமங்களை விட்டு, மற்றவர்க்குரிய கருமங்களைச் செய்வது அவர்க்குப் பர தருமமாம். சுவ தருமம் புண்ணிய வேதுவாம்; பர தருமம் நரக வேதுவாம்; அதனால், அருச்சுனா! நீ உனக்குரிய சுவ தருமமாகிய யுத்தத்தைச் செய்யக் கடவாயென்று பகவான் கூறினாரென்க.

அதற்கு விடை இவ்வாறென்று கூறுபவராய்ச் சொல்லத் தொடங்கினார்.

அருச்சுனன் வினவியதற்குப் பகவான் விடை கூறல்.

அருச்சுனா! நீ வினவிய காரணம் தீமையைத்தரும் இராசத குண வடிவ மனத்தினின்றும் தோன்றியுள்ள அந்தக் காமமேயாம்; இந்தக் காமமே தனக்குப் பிரதிகூல முண்டாகும்போது துவேஷ வடிவமாகப் பரிணாமத்தை யடைகின்றது; அதனால், அத்தியந்த முக்கிர வடிவத்தைக் கொண்டுள்ள அந்தக் காமத்தின் பெயர் குரோதமென்று சொல்லப்படுகின்றது. அந்தக் காமத்தாலுண்டாகும் தீமையைக் கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.

பகவான் காமத்தின் கொடுமையைக் கூறல்.

காமமானது போகங்களால் திருப்தியடையா திருத்தலால், எவ்வகைத்தாய போகத்தையும் அனுபவிக்கத்தக்க வல்லமை யுடையதாம்; அதனால், எவ்வகைத்தாய பெரும் பாவத்தையும் கொடுக்கத்தக்க வல்லமை யுடையதாம்; அதனால், எவ்வகைத்தாய பிராணிக்கும் பகையா யிருப்பதாம். இன்னு மிக்காமம் இத் தன்மையதாமென்று யான் கூறுவதை அருச்சுனா! நீ கேட்கக் கடவாய். †

பகவான் காமத்தின் கொடுமையைத் திருஷ்டாந்த வாயிலாகக் கூறல்.

நெருப்பை மிகுதியாய்ப் புகையும், மிக்க பிரகாசமுள்ள கண்ணாடியை அழுக்கும் மறைத்திருத்தல்போல, தேகத்தை யடைந்துள்ள சீவர்களின் உள்ளுணர் வெல்லாவற்றையும் இது வேண்டும், அது வேண்டு மென்னும் விருப்பம் மாறாது பொருந்தியுள்ள கொடிய காமமானது மறைத்திருக்கின்றது. ‡

---

† காமமுடையவன் தான் விரும்பிய பொருளை யடைதற்பொருட்டுப் பெரும்பாதகச் செயலையும் செய்தலின், காமம் தன்னை யுடையவனுக்குப் பெரும் பாதகத்தையுந் தருதற் குரியதா யிருக்கின்றது என்றும், காமம் எவ்வகைத்தாய போகத்தையும் தன்னை யுடையவன் அனுபவிக்கத்தக்க வல்லமை யுடையதாயும், அதனால் அவன் பெரும் பாதகச் செயலையுஞ் செய்தற்குத் தக்க வல்லமையுடையதாயு மிருக்கின்றமையின், அது பகைவரை வசமாக்குதற் குரிய சாம-தான-பேத-தண்டமென்னும் நால்வகை யுபாயங்களுள், தண்டோபாயத்தாலன்றி, ஏனைய உபாயங்களால் வசமாகா திருக்கின்ற தென்றும், இங்குணர்தற் பாலனவாம்.

‡ உள்ளுணர் வென்றது நித்தியா நித்திய வஸ்து விவேக ஞானத்தை, காமமுடையவர் சித்தம் கலக்கமுடையதா யிருத்தலின், அச்சித்தத்தின் கண் ஒவ்வொரு சமயத்திற் றோன்றும் நித்தியாநித்திய வஸ்து விவேக ஞானம், தான் தோன்றியவுடனே காமத்தால் மறைந்து விடுகின்றதென்பதிங் குணர்தற் பாலதாம்.

பகவான் காமமுண்டாதற்குக் காரணமா யிருப்பனவற்றைக் கூறல்:

இது வேண்டும், அது வேண்டுமென்னும் விருப்பம் மிக்குள்ள இக்காமமானது இந்திரியம் - மனம் - புத்தியென்னு மிம் மூன்றையுமே தனக்கு வழியாகக்கொண் டுள்ளே பிரவேசித்து, தேகாபிமானிகளை அவர்களின் நித்தியா நித்தியவஸ்து விவேக ஞானத்தை மறைத்து மயங்கச் செய்கின்றது; அக்காரணத்தால், அருச்சுனா! நீ முதலில் சுரோத்திரம் (காது) முதலிய ஞானேந்திரிய மைந்தனையும் காமமானது உன்னை மயக்குவதற்குமுன்னே அடக்கி, அதன்பின் மனத்தையும் புத்தியையும் உன்வசமாகச் செய்து, பின்னர் உன்னோ டுண்மையில் சம்பந்த மில்லாததாகிய கொடிய காமத்தை நாசஞ்செய்யக் கடவாய். $

பகவான், ஆத்மா உடல் பொறி முதலியவற்றினும்
வேறா யிருப்பதாம், அதனைத் தரிசித்தால்
காமமுற்றுங் கெடுமென்று கூறல்.

ஸ்தூல பூதங்களின் மயமாகப் பொருந்தியுள்ள இத்தூல தேகத்தினும் சுரோத்திர முதலிய இந்திரிய மைந்தும் பரமாம்; அடக்குதற்குரிய அவ்விந்திரியத்தினும் மனம் பரமாம்; அம்மனத்தினும் பாதுகாத்தற்குரிய புத்தி பரமாம்; அப் புத்தியினும் திருசியமா யுள்ள உடல் பொறி முதலியவற்றிற்கு வேறாயிருந்து, அவற்றை யறிகின்ற ஆத்மாவே பழமையான பரமாம். *

அருச்சுனா! நீ முன்னர் இவ்வாறு புத்தியினும் பரமாயுள்ள ஆத்மாவைச் சந்தேக விபரீத மில்லா துள்ளவா றறிந்து, மித்தை

$ காம முடையவன் பாவ மனைத்தையும் செய்தற்குரியவனாயும், அஃதில்லாதவன் ஒரு பாவத்தையும் செய்தற் குரியனல்லனாயு மிருத்தலின், பாவஞ்செய்யா திருத்தல் வேண்டுமென்று விரும்புகின்றவர் காமத்தை யவசியங் கெடுத்தல் வேண்டும்; அக்காமந் தோன்றுதற் கிடம் முன்னர் இந்திரியமும், பின்னர் மனமும் புத்தியுமா யிருத்தலின், காமத்தைக் கெடுக்க விரும்புகின்றவர் முன்னர் இந்திரியங்களை யடக்கப் பழகுதல் வேண்டும்; அதன் பின்னர் மனத்தையும் புத்தியையும் அடக்கப் பழகுதல் வேண்டும் என்பன இங்கறிதற் பாலனவாம்.

* ஸ்தூல தேகம் இந்திரியங்களின் வயமாயும், இந்திரியங்கள் மனத்தின் வயமாயும், மனம் புத்தியின் வயமாயும், புத்தி ஆத்மாவின் வயமாயு மிருத்தலின், அவை தம்முள் வேறாய், ஒன்றற் கொன்று பரமா யிருக்கின்றன; ஆத்மா சர்வ சாட்சியா யிருத்தலின், அதனினும் பரமாயிருப்ப தொன்றில்லையா மென்பதிங் குணர்தற் பாலதாம். பரம்—மேல்.

யாய பிறப்பொழியுமாறு இந்திரியங்களையே யன்றிப் பலவகை ஆசைகளுடையதாய்க் கலங்கி யிருக்கின்ற மனத்தையும் ஆத்மா புத்தியினும் பரமா மென்னும் நிச்சய புத்தியா லடக்கி, பின்னர் அந்த மனத்தைக் கலங்கச் செய்யும் மூல காரணமான காமரூப சத்துருவை நாசஞ்செய்யக் கடவா யென்று சேலா யுலக முறு புனலோர் செலுவின் புரையே செலுத்திஞேனாகிய பகவான் கூறியருளினர். (சேல்-மீன் ; புனல்-கடல்.)

இம்மூன்ருவது அத்தியாயத்தில் ஞான நிஷ்டையின் சாதன மாய நிஷ்காம கர்ம நிஷ்டை பிரதானரூப மாகவும், பலரூப ஞான நிஷ்டை கௌணரூப மாகவும் கூறியிருப்ப துய்த்துணர்தற் பால தாம்.

3—கர்மயோக வத்தியாயம் முற்றிற்று.

4—சம்பிரதாய வத்தியாயம்.

பகவான் சர்வ வேதார்த்தங்களின் சாரமாயுள்ள கர்ம யோகம்—ஞானயோக மென்னு மிரண்டனையும் விரிவாகக் கூறக் கருதி, சம்பிரதாயக் கிரமமாக அவற்றைப் புகழ்ந்து கூறல்.

குற்றமென்பது சிறிதுமில்லாத சக்கரப் படையைத் தாங்கிய திருக்கரத்தையுடைய பகவான் அருச்சுனனைக் கருணையோடு நோக்கி, பெருந்தவத்தையுடைய அருச்சுன! பிரவிர்த்தி நிவிர்த்தி அதிகாரிகளிடத்து முறையே நடைபெற்று வருவதற்குரிய கரும யோகத்தையும், ஞானயோகத்தையும், குற்றமான தொழிய நீ யறிந் தனுஷ்டிக்குமாறு உனக்கு விளக்கமாகக் கூறினேன் ; இனி அந்த யோகங்களின் குரு சிஷ்ய பாரம்பரிய வரலாற்றினையும் கூறுகின்றேன், கேட்கக் கடவாய். யான் இவ்விரண்டு யோகங் களையும் உலக சிருஷ்டியி னாதிகாலத்தில் சூரியனுக்கு அவனது துன்பமொழியக் கூறினேன் ; அச்சூரியன் அவற்றைத் தனது புத்திரனான வைவஸ்வதமனுவென்னும் அரசனுக்கு விளக்கமாகக் கூறினான்; அம்மனுவரசன் தானறிந்த அந்த யோகங்களைத் தனது புத்திரனான இட்சுவாகு வேந்தனுக்குச் சந்தோஷத்தோடு கூறி னான். இவ்வாறு பரம்பரையாக வந்த இந்த யோகங்களைக் குரு சிஷ்ய பரம்பரையாக நிமி, ஜனகன், அஜாத சத்துரு, கைகேயன் முதலிய ராஜ ரிஷிகள் அறிந் தனுஷ்டிக்குந் தன்மைய ராயினர்.

அவை அனுஷ்டிப்பா ரில்லாமையால் நீண்ட காலமாக நஷ்ட மடைந்து விட்டன.

இவ்வளவென்று வரை யறுத்து மதித்தறிதற் கருமையாக (பொருள்களின் புடை பெயர்ச்சி யேதுவாக) நிகழ்கின்ற காலம் சென்று விட்டமையால், மக்கள் அனுஷ்டிப்பதற் கருமையாய் நஷ்டமடைந்த அந்த யோகங்கள் பிறப்பிற் கேதுவாய இருவினை களும் கெடுதற்குக் காரணமா யிருப்பனவாம். கால விசேஷத்தால் ஒருவரும் அறிதற் கருமையாய் இரகசியமாயுள்ள அந்த உண்மை யான யோகங்களை அர்ச்சுனா! நீ என்னிடத்துப் பேரன்பினைச் செய்கின்ற நண்பனும், சர்வ காரணனுயுள்ள வென்னை யல்லா மல், பொருள் புகழ் புண்ணிய முதலிய வெல்லாவற்றையும் அறி யாத பக்தனுயு மிருக்கின்ற யாதலால், உனக்குக் கூறத் தொடங்கி னேன்; நீ அவற்றைக் கவனமாகக் கேட்கக் கடவா யென்றனர். †

அருச்சுனன் வினா.

பகவானே! தேவரீர் கரும யோகத்தோடு கூடிய இந்த ஞான யோகத்தை வைவஸ்வதமனு முதலிய அரசர்கள் குரு சிஷ்ய பாரம்பரியமாகக் கேட்டனுஷ்டித்து வர, சென்ற சிருஷ்டியின் ஆதி காலத்திலும் யான் சூரியனுக்குக் கூறினேனென்று கூறினீர்; அங்ஙனம் கூறியிருப்பினும், தேவரீர்க்குரிய இவ்வுடம்பு, சிருஷ்டி யின் ஆதி காலத்தில் சூரியனுக்கு அதனைக் கூறிய அவ்வுடம்பன் றும்; அதனால், அவ்வுடம்பிலிருந்து கூறிய அவ்வுபதேசத்தைப் பயனுமாறு எம்மனோர் போன்றுள்ள நீர் நினைத்தல் கூடுமோ? அதற்குத் தேவரீர் விடை கூறல்வேண்டும்.

பகவான் தம்மை மக்களுள் ஒருவராகக் கருதி, அருச்சுனன் வினவிய வினவிற்கு விடை கூறல்.

துளப மாலையை யணிந்த முடியினையுடைய பகவான் சுவர்க்க மத்திய பாதாளமென்னு மூன்றுலகத்திலும் தனது புகழ் நிறைந் துள்ள அருச்சுனன் இவ்வாறு வினவவே, அதற்கு விடைகூறத் தொடங்கி, அருச்சுனனைக் குறிப்பிட்டு நோக்கி, அருச்சுனா! வாசு

---

† இங்ஙனம் பகவான் கூறியதனால் மோட்ச சாதனமாய ஞானயோக மும், அதன் சாதனமாய கர்மயோகமும், அரசர்களிடத்துக் குருசிஷ்ய பாரம்பரியமாகத் தொன்று தொட்டு நடைபெற்று வந்தன வென்பது பெறப்பட்டவாறறிக.

தேவனான எனக்கும் அருச்சுனனான உனக்கும், உலக சிருஷ்டி காலத்திற்கும் இக்காலத்திற்கும் மத்தியில் முறையே லீலா மாத்திரமாகவும், இருவினைகளின் வசமாகவும் வந்தொழிந்த உடம்புகள் அநேகமாயிரமாம். ஈசுரனாயுள்ள நான் அவ்வுடம்பனைத்தையு மறிந்திருக்கின்றேன்; சீவனாயுள்ள நீயோ அவ்வுடம்புகளுள் எதனையு மறியாதிருக்கின்றாய். காண்டீபமென்னும் வில் பொருந்திய தோளையுடைய அருச்சுனா! எனக்கு முனக்கு முள்ள வேறுபாடு இதுவேயாம். ‡

பகவான் தாம் அவதாரஞ் செய்வதற் கேது கூறல்.

(அருச்சுனா! நீ தேவரீர்க்கு எக்காலத்தே எப்பயனைக்கிப் பிறப்புண்டாகின்றதென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.) இறவாதும் பிறவாதும் இருத்தலால் நித்தியனாய், பிரமன் முதல் ஸ்தம்ப மீறாகவுள்ள சர்வப் பிராணிகட்கும் ஈசனாயிருக்கும் நான் தருமத்திற்குக் கேடும், அதருமத்திற்கு ஆக்கமு முண்டாக, அப்போது அவற்றால் அந்தோ சாதுக்களடைகின்ற கொடுந் துன்பங்களைத் தீர்ப்பதற்காக, உண்மையில் பிறப்படையாதிருந்தே என்னிடத்துக் கற்பிதமா யிருக்கின்ற மாயையால் தேகமுடையவன்போல ஒழிவின்றி, யுகந்தோறும் யுகந்தோறும், பல்வேறு வகையினவாய அவதாரங்களைச் செய்கின்றேன்; நான் அவதாரஞ் செய்வதற்குக் காரணம் மற்றொன்றன்றாம். $

பகவான் தமது ஜன்ம கர்மங்களை யுள்ளவா றுணர்பவர்க்கு வரும் பயனைக் கூறல்.

---

‡ எப்போதும் உதயாத்தமன மற்றிருக்கும் சூரியனுக்கு உலக வியவகாரத்தால் உதயாத்தமனம் தோன்றுவதுபோல, எப்போதும் பிறப்பிறப்பற்றிருக்கும் பகவானுக்கும் லீலா மாத்திரத்தால் பிறப்பிறப்புத் தோன்றுகின்றதென்பதிங் குணர்தற்பாலதாம். பற்றின்றிச் செய்யும் வியவகாரம் லீலையாம்.

$ தமதுயிர் நீங்குவதா யிருப்பினும், தமக்குரிய வொழுக்கத்தி னின்றும் நீங்காதவர் சாதுக்களெனப் படுவர். எப்போது தருமத்திற்குக் கேடும், அதருமத்திற்கு ஆக்கமு முண்டாகின்றனவோ அப்போது நான் சாதுக்களை யிரட்சித்தற் பொருட்டும், அசாதுக்களைச் சிட்சித்தற் பொருட்டும், தருமத்தை நிலைபெறச் செய்தற் பொருட்டும் அவதாரஞ் செய்கின்றே னென்று பகவான் கூறினாரென்பதிங் குணர்தற் பாலதாம்.

இவ்வாறு பரமேசுவரனுய வெனது அவதாரங்களையும் கருமங்களையும் லோகானுக்கிரகார்த்தமாமென் றுள்ளவாறுணர்ந்து, அதனுல் தாம் கடைத்தேறுவதற்குக் காரணமாயுள்ள ஞானவடிவத் தவத்தினையடைந்து, அதனுல் துன்பந்தரும் ஆசை, பயம், கோபம் முதலியவற்றினின்றும் நீங்கி, மோட்சமடைந்தவரை இவ்வளவென்று குறிப்பிட்டுரைத்தல் முடியாது. (அருச்சுனு! நீ தேவரீர் *ஞானவடிவத் தவமுடையவரை மோட்சமுறுமாறு செய்து, மற்றவரை அஃதுறுவாறு செய்தலால், உம்மிடத்துப் பட்சபாத முண்டென்று வினவுதல் கூடும்; அதற்குவிடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய். தாம் விரும்பிய பயன்களை விரைவாக வடைதலால்) மெய்யாய தெய்வத்தன்மை யுடையது இத்தெய்வமே யென்று கருதி இந்திரன் முதலிய தெய்வங்களுள் ஒவ்வொரு தெய்வத்தை விரும்பித் தொழுகின்றவர் விரும்பிய பயன்களை அவர்களுக்கு அவ்வத் தெய்வரூபமுமா யிருந்து, கொடுப்பவனும் நானேயாவன்; அதனுல், நான் எவரிடத்தும் பட்சபாத மில்லாதவனுயிருக்கின்றேன்; அருச்சுனு! நீ இதனை யறியக்கடவாயாக. †

[அருச்சுனு! நீ நான்கு வருணங்களின் கர்த்தாவும், அவ்வருணங்களுக் குசிதமாய கர்மங்களை யருளிச் செய்தவரும் தேவரீரேயாகலின், உம்மிடத்துப் பட்சபாதமில்லை யென்பது எவ்வாறு பொருந்துமெனை வினவுதல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.]

அருச்சுனு! பரமேசுவரனுன நான் சிருஷ்டியி னுதிகாலத்திலே சீவர்களது சத்துவம்-இராசதம்-தாமதமென்னும் குணங்

* ஞானவடிவத் தவம்—ஜீவப்பிரஹ்ம ஐக்கியத்தின் தொடர்ந்த சிந்தனையாம். பகவான் இவ்வாறு கூறியதால், பகவான் நிராசையுடையவர்க்கு ஞானவாயிலாக முத்தியையும் ஆசையுடையவர்க்கு அவரவர் உபாசனை செய்த தெய்வங்களின் வடிவமாக விருந்து காணிமனை முதலியவற்றையும் தருகின்றனர்; அவர்க்கு எவரிடத்தும் பட்சபாதமில்லை யென்பது பெறப்பட்டவாறறிக.

† ஆர்த்தன், அர்த்தார்த்தி, ஜிஞ்ஞாசு, ஞானி யென்னும் நால்வகைப் புருஷரிடத்தும் பகவான் பட்சபாதமின்றி யிருக்கின்றனர்; அவரவர் தம் பாவனைக்கேற்ற பயன்களையே பகவான் வாயிலாக அடைகின்றன ரென்பதிங் குணர்தற் பாலதாம்.

(1) துன்ப மடைந்தவன்—ஆர்த்தன்; பொருளை விரும்பியவன்—அர்த்தார்த்தி; தன்னை யறிய விரும்புகின்றவன் ஜிஞ்ஞாசு; தன்னை (ஆத்மாவை) யறிந்தவன்—ஞானி.

களின் வேற்றுமையாலும், சமை-தமை-திதிட்சை-உபரதி-சிரத்தை-சமாதானமென்னும் கருமங்களின் வேற்றுமையாலும், அவர்களைப் பிராமணாதி நான்கு வருணமாயொழுக என் மாயையினால் படைத்தனன். யான் இப்போதும் இனியும் அவர்களைக் காத்தற்குரியவனா யிருக்கின்றேன்; இதனால், என்னிடத்துப் பட்சபாதமில்லையென்பதறியக் கடவாய். ‡

(அருச்சுனா! நீ தேவரீர் நான்கு வருணங்களுக்குங் கர்த்தாவாயின், கரும பலத்தை யனுபவிக்கும் எம்மனோருள் ஒருவராவீர்; அதனால், நீவீர் ஈசுவரனாதலெவ்வாறு மென்று வினவுதல் கூடும்; அதற்கு விடைகூறுகின்றேன், கேட்கக்கடவாய்.) அருச்சுனா! யான் சர்வ பதார்த்தங்களையும் இயல்பாகவே யடைந்திருக்கின்றேனாகலின், யான் விரும்புதற்குரியது ஒன்று மின்றாம்; அதனால், மயக்கத்திற் கேதுவாய கருமப் பயன்களில் இச்சை வையாதிருக்கின்றேன்; அக்காரணத்தால், அச்சிருஷ்டி முதலிய கருமங்கள் தாமரையிலையின்கண் நீர் சம்பந்தியாமைபோல என்கண் சம்பந்தியாமல், எனக் கன்னியமாகவே யிருக்கின்றன. இவ்வாறிருத்தலால், யான் அவற்றிற்குக் கர்த்தாவா யிருப்பினும், உண்மையில் அகர்த்தாவாகவே யிருக்கின்றேன். இவ்வாறிருக்கும் என்னையறிகின்றவர், என்னைப்போல அகர்த்தாவாக விளங்கிக் கரும பந்தத்தினின்றும் நீங்குவர்.

---

‡ சத்துவ குணத்தைப் பிரதானமாக வுடையவன் பிராமணனாவன்; அவனுக்குரிய கருமம் சமை-தமை முதலியனவாம்; இராசத குணத்தைப் பிரதானமாகவும், சத்துவ குணத்தை யப்பிரதானமாகவு முடையவன் க்ஷத்திரியனாவன்; அவனுக்குரிய கருமம் சௌரியம் - தேஜஸ் முதலியனவாம்; இராசத குணத்தைப் பிரதானமாகவும் தாமத குணத்தை யப்பிரதானமாகவு முடையவன் வைசியனாவன்; அவனுக்குரிய கருமம் வர்த்தகம் உழவு முதலியனவாம்; தாமத குணத்தைப் பிரதானமாக வுடையவன் சூத்திரனாவன்; அவனுக்குரிய கருமம் சேவகம் - உழவு முதலியனவாம். இந்நால்வர்க்கும் பொதுவான கருமம், தானம், ஜபம், ஈசுவர பூசை, தியான முதலியனவாம்.

பிராமணாதி வருணங்கட்குக் காரணம் குணபேதமும் கருமபேதமுமன்றி வேறுபேதமில்லையாமென் றிங்குணர்தற் பாலதாம்.

சத்துவ குணத்தின் வடிவம் பிரகாசமாம். இராசத குணத்தின் வடிவம் - பிரவிர்த்தியாம். தாமதகுணத்தின் வடிவம் - மோகமாம். சமை - மனவடக்கம்; தமை - இந்திரிய வடக்கம்; திதிட்சை - துக்கத்தைப் பொறுத்துக்கொள்ளல்; உபரதி - கரும பலனை விரும்பாமை; சிரத்தை - சுருதி குரு வாக்கிய விசுவாசம்; சமாதானம் - குருவினுபதேசத்தை மறவாது சிந்தனை செய்தல்.

யான் கருத்தாவன்று, எனக்குக் கரும பலத்தி
லிச்சையு மின்றென்னும் ஆத்மஞான முடையவர்
கருமபந்த முடையவராகார்; பூர்வம் அநேக மகாத்துமாக்கள்
ஆத்மாவை அகர்த்தாவாகவும் அபோக்தாவாகவு முணர்ந்து
கருமத்தைச் செய்து வந்தனர். அர்ச்சுனு! நீயும் அவ்வாறே
கருமத்தைச் செய்யக் கடவாயென்று பகவான் கூறல்.

பூர்வகாலத்தில் தாம் கடைத்தேறுதற் பொருட்டு ஆத்மாவை அகர்த்தா வென்றுணர்ந்த அதிகாரி புருஷர்களாய ஜனகன் - யயாதி - யது முதலிய அரசர்கள் அகங்கார மின்றிச் செய்யும் கருமங்கள் பந்தத்திற்குக் காரணமாகா வென்பதுணர்ந் தனுஷ்டித்த கருமங்களை அருச்சுனு! நீ அஞ்ஞானியாயின் சித்த சுத்தியின் பொருட்டும், ஞானியாயின் லோக சங்கிரகத்தின் பொருட்டும், செய்ய ஒரே கருத்துடன் முயல்வாயாக.

(கருமத்தை ஞானிகளோடு கூடி யறிந்தே செய்ய வேண்டுமே யன்றி, உலக வழக்கத்தைக் கொண்டு மாத்திரம் செய்தல் கூடாது; கருமமென்பது யாது? அகருமமென்பது யாது? என்பவற்றை யறிதற்கண் விவேகிகளும் மோகத்தை யடைகின்றனர்; ஆகலின்,) கருமம் அகருமம் விகருமமென்னு மிவற்றின் மெய்யான சொரூபத்தையும் பொய்யான சொரூபத்தையும் பகுத்துணர்தல் மிக வருமையானதாம்; அதிகாரி புருஷர்கள் அறியத்தக்க விஷயமும் இக்கருமங்களின் பாகுபாடேயாம்; ஆதலால், அருச்சுனு! இக்கருமங்களின் தன்மையைக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய். ‡

பகவான் விகருமம் நிஷித்த (விலக்கிய) கருமமாகலின்
அதனை யொழித்துக் கரும அகருமங்களின்
வாஸ்தவ சொரூபத்தைத் திருஷ்டாந்தவாயிலாகக் கூறல்.

ஓடுகின்ற நீரையுடைய நதியில் ஓடத்தின் மீதேறிச் செல்லுகின்றவன் அந் நதியினது கரையின்கணிற்கும் மரங்கள் ஓட, தானோடாமல் நிற்கின்றாற்போலத் தோன்றுதலைக் கண்டும், நீண்டு நிற்கின்ற இம்மரங்கள் ஓடாமனிற்கு மியல்புடையனவா யிருக்கின்றன; இந்நதி

‡ மனு முதலிய அறநூல்கள் இது செய்யத் தக்கதென்று விதித்த கருமம் கருமமாம்; விலக்கிய கருமம் விகருமமாம்; அகருமம் - எக்கருமத்தையுஞ் செய்யாமையாம்.

யின்கண் யானே ஓடத்தோடே ஓடுகின்றேனென்பதைத் தனது பகுத்தறிவா லறிந்தாற்போல, (யானிக்கருமத்தைச் செய்கின்றேனென்று தேகாத்மப் பிராந்தியால் கற்பிக்கும் தேகேந்திரிய முதலியவற்றின் வியாபாரமாகிய) கருமங்களினிடத்து நிற்கின்ற ஆத்மாவின்கண் வாஸ்தவமாகக் கருமங்க ளில்லாமையையும், அக்கருமங்களைச் செய்யாத தன்மை யுடையனவாக மயக்க புத்தியால் தோன்றும் தேகேந்திரிய முதலியவற்றின்கண் கருமமனைத்தும் பொருந்தி யிருப்பதையும்,மயக்கமில்லா தெவன் விசாரித் தறிந்தானோ அவனே கருமம் அகரும மனைத்தையு மறிந்த புத்திமானும், சர்வ சங்க பரித்தியாகத்தி லொழுகுகின்ற யோகியும், நற்கருமமனைத்தையும் செய்தவனு மாவன். ¶

பகவான் ஆத்மாவைக் கரும சாட்சியாக வுணர்ந்திருப்பவனுக்கு வரும் பயனைக் கூறல்.

எவரது கருமமனைத்தும் இக்கருமம் எம்மால் செய்யப்படுகின்றதென்னும் அபிமானவடிவ சங்கற்பமும், இக்கருமத்தா லெமக்கு இப்பயனுண்டாகு மென்னும் ஆசையும் அற்றனவாமோ, தத்துவஞான வடிவ அக்கினியால் ஒருமிக்க வெந்தனவாமோ, அக்கருமங்களை யுடையவரே சனன மரண மில்லாதவ ராவர். ‡

¶ மரத்தினது இருப்பு ஓடத்திலும், ஓடத்தினது ஓட்டம் மரத்திலும் தோன்றுவது போல, தேகேந்திரிய முதலியவற்றின் வியாபாரங்களாகிய கருமங்கள் ஆத்மாவிலும், ஆத்மாவின் வியாபார மின்மையாகிய அகருமம் தேகேந்திரிய முதலியவற்றிலும் தோன்றுகின்றன; இவற்றை யாராய்ந்தறிந்து, தான் கரும கர்த்தாவாகாது, தேகேந்திரிய முதலியவற்றின் வியாபாரங்களாகிய கருமங்களுக்குச் சாட்சி மாத்திரமாக விளங்குகின்றவன் விவேகியும் யோகியும் கிருதகிருத்தியனு மாவனென்பதாம்.

‡ இக்கருமத்தை யான் செய்கின்றேனென்னு மபிமானமும், இக்கருமத்தா லெனக்கிப் பயனுண்டாகுமென்னு மாசையு மின்றிக் கருமத்தைச் செய்கின்றவர் கரும சாட்சியாகவன்றி வேறாக விளங்குவ தில்லையாம்; அவர் செய்யும் கருமம் லோகானுக்கிரக மாத்திரமாக விருப்பதாம். ஆத்மா கருமத்தைச் செய்வதில்லை; அதனைத் தேகேந்திரிய முதலியனவே செய்கின்றன வென்பதுணர்ந் திருப்பவர்க்குக் கருமபந்தமின்மையின், அதன் பயனாய சனன மரணமு மில்லையாமென்பன இங்குணர்தற் பாலனவாம்.

அவிவேகிகள் கருதுகின்ற இகபரபோகங்களி லிச்சையும், யானிக்கருமத்தைச் செய்கின்றேனென்னு மபிமானமு மில்லாது, இவன் இந்த நித்திய நைமித்திக கருமங்களைச் செய்கின்றானென்று பெரியோரால் சிறப்பித்துக் கூறப்படுகின்ற இத்தன்மையுடைய பண்டிதன் தான் பின்னனுபவித்தற்குரிய கருமங்கள் தனக்குண்டென்று மறந்தும் அறியமாட்டான்; பிராரத்த கருமங் காரணமாக அவன் செய்கின்ற கருமங்கள் அவனை வருத்துவதில்லையாம். $

பகவான் சர்வசங்க பரித்தியாகஞ் செய்தவன் தன் சரீர ஸ்திதியின் பொருட்டுச் செய்யுங் கருமம் அவனுக்குப் பந்த வேதுவாகா தெனல்.

அர்ச்சுனா ! சுவர்க்காதி போகங்களில் ஆசையில்லாது, அடங்குகின்ற இந்திரியங்களையும் ஒடுங்குகின்ற மனத்தையுமுடைய சந்நியாசி சர்வசங்க பரித்தியாகஞ் செய்திருத்தலால், உடம்பு இக்காரணத்தால் நிலைபெற்றிருக்கின்றதென்ப துணர்ந்து தன் சரீர ஸ்திதியின் பொருட்டுச் செய்கின்ற கருமங்களால் பந்தமடைவ தில்லையாம். ‡

பகவான் மேற்கூறிய சந்நியாசியின் கரும நியமத்தைக் கூறல்.

தனது பிரயத்தனத்தா லன்றிக் கிடைத்த அன்ன வஸ்திர முதலிய பதார்த்தங்களை யேற்றுக்கொண்டு சந்தோஷித்து, இலாப

$ இகபர மென்பன - இவ்வுலகமும் சுவர்க்க வுலகமுமாம். கரும சாட்சியாக விளங்கும் ஞானி பிராரத்த கருமத்திற் கேற்றவாறு கருமஞ் செய்வதன்றித் தானே ஒரு கருமத்தையும் செய்தில்லையாம்; அதனால், அவன்பிறர்க்குக் கருமகர்த்தாவைப்போலத் தோன்றுகின்றான்; அவனுக்குக் கரும சம்பந்த மில்லாமையால் அவன் அதனால் பின் வருந்துதற் குரியவனாகா திருக்கின்றா னென்பதிங் குணர்தற் பாலதாம். இங்குச் சைதன்ய வடிவமாயுள்ள பிரஹ்மத்தை மாத்திரம் விஷயஞ் செய்யும் (அறியும்) அந்தக்கரண விருத்தி (புத்தி அஃதாவது ஞானம்) பண்டாவாம்; அதனை யுடையவன் பண்டிதனென்று கூறப்படுகின்றா னென்க.

‡ சுவர்க்காதி போகங்களில் ஆசையற்றும், இந்திரிய நிக்கிரகமும் மனநிக்கிரகமுஞ் செய்தும், சர்வசங்க பரித்தியாகஞ் செய்துமுள்ள சந்நியாசி யானென தென்னு மபிமான மில்லாதவனா யிருத்தலின், அவன் தன் சரீர ஸ்திதியின் பொருட்டுச் செய்யும் ஐயமேற்றுண்டல், கந்தை யுடுத்தல் முதலிய கருமங்களால் பந்தமடைவதில்லையாமென்பதிங் குணர்தற் பாலதாம்.

கஷ்டங்கள் சம்பவித்த காலத்தில் மகிழ்ச்சி வாட்டமடையாது அவற்றின்கண் சமபுத்தி செய்து, எவரிடத்தும் எவ்வகையாலும் மற்சரம் சிறிதுமில்லாத சந்நியாசி செய்கின்ற பிச்சை யேற்றுண்டல் முதலிய கருமங்கள் அவனுக்குக் குற்றமாவனவன்றும். அந்தக் கருமங்களின் தன்மையைக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய். ¶

பகவான் இல்லற ஞானிகள் செய்யும் கருமங்கள்
அவர்களுக்குப் பந்தமாவதில்லை யெனல்.

(அர்ச்சுனா! நீ யான் துறவற ஞானிகள் தாம்செய்யும் பிச்சையேற்றுண்டல் முதலிய கருமங்களால் பந்தத்தை யடையாரென்று கூறியதால், இல்லற ஞானிகள் தாம் செய்யும் யாக முதலிய கருமங்களால் பந்தத்தை யடைதல் கூடுமேயென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அர்ச்சுனா! கருமமனைத்தையும் யான் செய்கின்றேனென்னு மபிமானத்தைவிட்டு, கருமப் பயன்களில் விருப்பம் வையாது, ஞானாத்மாவினிடத்து(அகம்பிரஹ்மாஸ்மி யென்று)பரிணமித்தெழுகின்ற சித்தவிருத்தி நிலைபெற நிற்கின்ற ஞானி புருஷன் உலகத்தா ருய்தற்

¶ சந்நியாசி தன் சரீர ஸ்திதியின் பொருட்டு, தன் பிரயத்தனத்தாலன்றிக் கிடைத்த அன்ன வஸ்திர முதலியவற்றை யேற்றுக்கொள்ளுதல் அவனுக்கு நியமமாமென்ப திங்குக் குறிப்பித்தவாறுணர்க. சந்நியாசி உற்பாதம், நிமித்தம், நட்சத்திர வித்தை, அங்கவித்தை, அநுசாசனம், வாதமென்பனவற்றுள் எதனாலேனும் அன்ன முதலியவற்றைப் பெறுதல் அவனுக்கு விலக்காம்.

(1) உற்பாதம் - பூகம்ப முதலியவற்றின் சுபாசுபத்தைக் கூறலாம்; (2)நிமித்தம்-கண் முதலியவற்றினது அசைதலின் சுபாசுபங் கூறலாம்;(3) நட்சத்திரவித்தை - நட்சத்திரங்களின் சுபாசுபங் கூறலாம்; (4) அங்கவித்தை - கரரேகையின் சுபாசுபங் கூறலாம்; (5) அநுசாசனம் - இந்நீதிநெறி இவ்வாறும், இந்நீதி நெறியில் இவ்வாறு நடத்தல் வேண்டுமெனக் கூறலாம்; (6) வாதம் - சாஸ்திரார்த்தங் கூறலாம்.

சந்நியாசி வஸ்திரம், கௌபீனம், கம்பளி முதலிய சில கந்தைகள், பாதுகை என்பனவற்றிற்கு மேற்பட்டவற்றை முக்கியமாகக் கிரகித்தல் கூடாதென்பது சாஸ்திர நியமமாம்.

பொருட்டுச் செய்யும் வேள்வி முதலிய கருமங்கள் தமது பயனோடு நாசத்தை யடைவனவாம். †

பகவான் ஞானியின் கருமங்கள் தம் பயனோடு நாசமடைகின்றன வென்பதற் கேது கூறல்.

(அர்ச்சுனா! நீ சுபாசுப கருமங்கள் தம் பயனை யநுபவியாத விடத்து நூறு கோடி கற்பகாலமாயினும் நாசமடைவ தில்லையென்று அறநூல் கூறுதலின், ஞானி செய்யும் கருமங்கள் தம் பயனைத் தாராமலே நாசமடைவனவாமென்ப தெவ்வாறுமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், நீ கேட்கக் கடவாய்.)

அருச்சுனா! பிரஹ்மமாகவே விளங்குகின்ற ஞானிகள் பிரஹ்ம ரூபமாகிய நெருப்பினிடத்துப் பிரஹ்ம ரூபமாகிய மந்திரத்தால் பிரஹ்மரூபமாகிய அன்னம் நெய்முதலிய அவிசைப் பிரஹ்மரூபமாகிய கர்த்தாவினால் ஆகுதி செய்தபின் (கடமுடைந்த பின் கடாகாசம் மகாகாசத்தை யடைவது போலப்)பிரஹ்ம கர்ம சமாதியால் பரமாநந்த வடிவப் பிரஹ்மத்தையே யடைவர்; பிறிதொன்றனையு மடையார். இவ்வாறன்றி வேறு வகையாகவும் யாகஞ் செய்பவ ரிருக்கின்றனர்; அவர்களின் தன்மையையுங் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய். ¶

---

† சுவர்க்காதி போகங்களில் இச்சையும், யான் கருத்தா போக்தா வென்னு மபிமானமு மின்றிச் சீவப் பிரஹ்ம ஐக்கிய ஞான முடையவன் லோகோபகாரமாகச் செய்யும் வேள்வி முதலிய கருமங்கள் கரும சாட்சியாக விளங்கும் அவனுக்குப் பலன் தருவதாகாது நாசமடைகின்றன வென்ப திங் குணர்தற் பாலதாம்.

¶ பிரஹ்ம கர்ம சமாதியாவது பிரஹ்ம ரூபமான கருமத்தில் சித்தம் ஒரு முகப்பட்டிருத்தலாம். நெருப்பு, மந்திரம், அவிசு முதலியவற்றைப் பிரஹ்மரூபமாகக் கூறியதன் காரணம், கயிற்றின்கண் கற்பிதமாயுள்ள பாம்பு கயிற்றைத் தவிர இல்லாமைபோல, பிரஹ்மத்தின்கண் கற்பிதமாயுள்ள அவை பிரஹ்மத்தைத் தவிர வில்லாமை பற்றியாம். யாகாதி கிரியைகள் கர்த்தா, கருமம், கரணம், சம்பிரதானம், அதிகரண மென்னு மிவ்வைவகையாய காரணங்களால் பெறப்படுவனவாம். அவற்றைப் பிரஹ்மஞானி கற்பிதமாக வறிந்திருத்தலின், அவை அவனுக்குப் பயனைத் தாராமலே நாசமடைகின்றன வென்பதிங் குணர்தற் பாலதாம்.

(1) யாகத்தைச் செய்பவன் கர்த்தாவாம்; (2) அக்கினியில் ஆகுதி செய்தற்குரிய நெய் முதலியவற்றை விடுதல் கருமமாம்; (3) மந்திர முதலியன காரணமாம்; (4) இந்திராதி தேவதைகள் சம்பிரதானமாம்; (5) ஆகவனீயாதி அக்கினி (அவிசினை ஆகுதி செய்தற்கு) அதிகரணமாம்.

பகவான் மேற்கூறிய ஞானயாகத்தைத் துதித்தற் பொருட்டு, அதற்குச் சாதனங்களாயுள்ள யாகங்களைக் கூறல்.

அருச்சுனா! தத்துவத்தை யறிந்த சிலர் தத்துவமசி மகாவாக்கியத்தின்கண்ணுள்ள (i) தத்பதார்த்தமாய பிரஹ்ம ரூப அக்கினியினிடத்து அபேதமாகத் துவம்பதார்த்த ரூப ஆத்மாவையே ஓமஞ் செய்வர்; (ii) யோகத்தை யறிந்த சிலர் தமது முயற்சியாற் பொருந்துவதாய சமரூபமாய அக்கினியினிடத்து அடக்கத் தக்கனவாய சுரோத்திராதி யிந்திரியங்களை ஓமஞ் செய்வர்; ‡

சமாதியப்பியாசஞ் செய்யும் சிலர் தாம் செய்யுஞ் சமாதியினின்றும் விழித்த காலத்தில் சாஸ்திர விரோத மில்லாது கவர்தற்குரியனவாய (iii) சப்தாதி விஷய மைந்தனையும் இராகத்துவேஷ மில்லாமலே சுரோத்திராதி இந்திரிய ரூப அக்கினியினிடத்து ஓமஞ் செய்வர்; ஆத்மாநாத்ம விவேகமுடைய சிலர் (iv) சுரோத்திராதி ஞானேந்திரியங்களின் வியாபாரம், வாக்காதி கருமேந்திரியங்களின் வியாபாரம், பிராணாதி வாயுக்களின் வியாபார மனைத்தையும் சீவப்பிரஹ்ம ஐக்கிய ஞானமாகிய நெய்யைச் சொரிந்து, அதனால் விளங்குகின்ற ஆத்ம சம்யம ரூப அக்கினியினிடத்து ஓமஞ் செய்வர். ¶

‡ (i) தத்பதார்த்தப் பிரஹ்மத்தினிடத்துத் துவம்பதார்த்த ஆத்மாவை ஓமஞ் செய்தலாவது சரீரத்திரய விலட்சணமாய் அவஸ்தாத்திரய சாட்சியாயுள்ள சச்சிதாநந்த வடிவ ஆத்மாவைச் சத்திய ஞான அநந்த ஆநந்த வடிவமாய் யாதொரு விசேஷணமு மில்லாதுள்ள பிரஹ்ம ரூபமாகக் காண்டலாம்; (ii) சமரூப அக்கினியினிடத்துச் சுரோத்திராதி யிந்திரியங்களை ஓமஞ் செய்தலாவது சப்தாதி விஷயங்களிற் சஞ்சரிக்கும் சுரோத்திராதி யிந்திரியங்களைக் கிரமமாகத் திருப்புதலாம். இங்ஙனஞ் செய்வது பிரத்தியாகார மெனப்படும். இங்குச் சமமென்பது பிரத்தியாகாரமாம். இஃது இயமம் நியம முதலிய யோகாங்க மெட்டனுள் ஐந்தாவதாம்.

¶ யோகாங்கங்களுள் 6-7-8-வதுமாய தாரணை, தியானம், சமாதி யென்னும் மூன்றும் சம்யமமாம். (1) ஆத்மாவின்கண் இந்திரியங்களோடு மனத்தைச் சேர்த்தல் தாரணையாம்; (2) நானே பிரஹ்மமென் றிடைவிடாது பாவனை செய்தல் தியானமாம்; (3) தியானஞ் செய்த வஸ்துமாத்திரமாக விளங்குதல் சமாதியாம். (iii) சப்தாதி விஷய மைந்தனையும் சுரோத்திராதி இந்திரிய ரூப அக்கினியினிடத்து ஓமஞ்செய்தலாவது இராகத் துவேஷமில்லாது சுரோத்திராதி முதலிய இந்திரியங்களால் சாஸ்திர விரோதமில்லாத சப்தாதி விஷயங்களைக் கிரகித்தலாம். (iv) சுரோத்திர முதலியவற்றின் வியாபார மனைத்தையும் ஞான நெய் சொரிந்து,

ஞானயாகத்திற்குச் சாதனமாயுள்ள நான்கு யாகங்களைத் திருவாய் மலர்ந்தருளிய பகவான் வேறு சில யாகங்களைக் கூறல்.

அருச்சுன! யாம் மோட்சமடைய வேண்டுமென்னுங் கருத்துடைய பலருள் சிலர் தாம் சம்பாதித்த பொருள்களாலும்,சிலர் தாஞ் செய்யா நிற்கும் தவங்களாலும், சிலர் தாம் விரும்பிய யோகங்களாலும், சிலர் வேதாப்பியாசங்களாலும், சிலர் அவ்வேதத்தின் அர்த்த ஞானங்களாலும் தமதறிவாற்றல்களுக் கேற்றவாறாக யாகஞ்செய்வர்; அருச்சுன! இங்கு யாம் கூறிய இவ்வைவரன்றி இவர்போல வேறு சிலர் செய்யும் யாகத்தையுங் கூறுகின்றேன், நீ கேட்கக் கடவாய். †

ஆத்ம சம்யம ரூப அக்கினியினிடத்து ஓமஞ்செய்தலாவது சுரோத்திராதி இந்திரியங்களின் வியாபாரங்களையும் பிராணாதி வாயுக்களின் வியாபாரங்களையும் சற்குரு கூறியவாறு தடுத்து, சீவப் பிரஹ்ம ஐக்கிய ஞானத்தோடு சம்யம மென்னும் தாரணை, தியானம், சமாதி யென்பனவற்றைச் செய்தலாம்.

† (1) பொருள்களால் யாகஞ் செய்தலாவது சாஸ்திர விதியாகப் பூர்த்தம் தத்தம் என்னுங் கருமங்களைச் செய்தலாம். வாவி, கூப, தடாக முதலியவற்றை யுண்டாக்குதல், தேவாலயங்களைக் கட்டுதல், பசித்தார்க் குணவீதல், பிரயாணிகள் வசிக்கச் சத்திரங்கட்டல் என்றற் றொடக்கத்துக் கருமங்கள் பூர்த்தமாம்; அடைக்கல மடைந்தவரைப் பாதுகாத்தல், எந்தப் பிராணிக்கும் இம்சை செய்யாமை என்றற் றொடக்கத்துக் கருமங்கள் தத்தமாம்.

(2) தவங்களால் யாகஞ் செய்தலாவது கிருச்சிரம், சாந்திராயண முதலிய விரதானுஷ்டானமாம்.

(3) யோகங்களால் யாகஞ் செய்தலாவது இயம நியம ஆசன அப்பியாசங்களைச் செய்தலாம்; இயமமாவது கொல்லாமை, பொய்யாமை, திருடாமை முதலியனவாம்; நியமமாவது புலனடக்கம், பெற்றதுகொண் டுவத்தல், ஈசுவர விசுவாச முதலியனவாம்; ஆசனமாவது பத்மம் சுவஸ்திக முதலியனவாம்.

(4) வேதாப்பியாசத்தால் யாகஞ் செய்தலாவது இருக்கு முதலிய வேதங்களைப் பக்தி சிரத்தையோடு அத்தியயனஞ் செய்தலாம்.

(5) வேதத்தினர்த்த ஞானங்களால் யாகஞ் செய்தலாவது புருஷார்த்தத்தை யடைதற் பொருட்டு இருக்கு முதலிய வேதங்களி னர்த்தங்களை யாராய்ந்தறிதலாம்.

இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்னும் யோகாங்க மெட்டனுள், பிராணுயாம மொழிந்த மற்றயவற்றைக் கூறிய பகவான் பிராணுயாம யாகத்தைக் கூறல்.

அருச்சுன! சிலர் இவ்வுலகத்தில் மிகவும் ஊர்த்துவ விருத்தியாக வோடிக்கொண்டிருக்கின்ற பிராணவாயுவை அதோ விருத்தியாக ஓடிக் கொண்டிருக்கின்ற அபான வாயுவினிடத்துப் பூரகப் பிராணுயாம வாயிலாக இழுத்து ஓமஞ்செய்து, அதோ விருத்தியாக ஓடிக் கொண்டிருக்கின்ற அபான வாயுவை ஊர்த்துவ விருத்தியாக ஓடிக் கொண்டிருக்கின்ற அந்தப் பிராண வாயுவினிடத்து ஓமஞ்செய்து, பிராணன் அபானனிரண்டும் முறையே மேல்நோக்கி யோடல் கீழ் நோக்கி யோடலென்னும் வியாபாரங்க ளின்றி யொடுங்கும்படி யிருப் பர். இவ்வாறு பிராண அபான வாயுக்களின் சலனத்தைத் தடுத் திருக்கு மிவர்தாம் பிராணுயாமஞ் செய்வதன் எல்லையைக் கண்டவ ராவர். ‡

பகவான் மேற்கூறிய யாகங்களை யறிந் தனுஷ்டிப்பவர்க்கு வரும் நன்மையையும், அறிந் தனுஷ்டியாதவர்க்கு வரும் தீமையையும் கூறல்.

அர்ச்சுன! இங்கு யான் கூறிவந்த இவர் யாவரும் யாகத்தின் தன்மையை யறிந்தவரே யாவர்; அவர்களே புண்ணிய முண்டாவதற் கேதுவாய யாகங்களைச் செய்வதால் பாவங்களினின்றும் நீங்கியவரா வர். இவர்கள் முடிவில் நித்யப் பிரஹ்மத்தை நிச்சயமாக வடைவர். யான் இங்குக் கூறியவிதமாக இந்த யாகங்களைச் செய்ய முடியாத வர்க்கு எந்த வகையாலும் இவ்வுலக சுகபோகமு முண்டாவ தில்லை யாம்; ஆகவே, பெரும் புண்யசாலிக ளடைதற்குரிய சுவர்க்காதி லோகபோக மெவ்வா றுண்டாம்? உண்டாவதே யில்லையாம். அத ஞல், யான் கூறிய யாகங்கள் எப்போதும் யாவரும் செய்தற்குரிய னவாம். இவற்றை அருச்சுன நீ ஆராய்ந் தறியக்கடவாய்.

---

‡ பிராண வாயுவை அபான வாயுவில் புகவிடுதல் பூரகப் பிராணுயாம மாம்; அபானவாயுவைப் பிராணவாயுவில் புகவிடுதல் ரேசகப் பிராணுயாமமாம்; இவ்விரண்டு வாயுக்களையும் சலனமில்லாவாறு செய்தல் கும்பகப்பிராணுயாமமாம். பிராணுயாமம் - பிராண வாயுவைத் தடுத்தல்.

பகவான் தாமருளிச்செய்த யாகங்களுக்குப் பிரமாணம் வேதமாமெனல்.

(அருச்சுனா! நீ தேவரீரருளிச் செய்த யாகங்கள் உமது கற்பனையேயாகும்; அவற்றிற்குப் பிரமாணமில்லையென்று சங்கித்தல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.) அருச்சுனா! யானிவ்வாறு கூறிய இந்த யாக மனைத்தும் அநாதியாகவே வேதத்தின்கண் விரிவாகக் கூறப்பட்டிருப்பனவாம்; (ஆதலால், அவை என்னாற் கற்பித்துச் சொல்லப்பட்டனவன்றாம்; அங்ஙனமாயினும்) அந்த யாகங்கள் செய்யும்போது காயிக, வாசிக, மானச கர்மங்களால் உண்டாவனவாம்; (ஆத்மாவால் உண்டாவன வன்றாம். ஆத்மா கரும சாட்சியாக விருத்தலின், அவ்வாத்ம விஷயமாய) இணையற்ற ஞானம் விசாரணையா லல்லாமல் கருமங்களால் உண்டாவ தில்லையாம்; ஆதலால், இதனை யுன துள்ளத்தின்கண் யான் கூறிய அவ்வாறே யறிந்து அதிகாரி புருஷரைப்போல நீயும் ஞான நிஷ்டை யுடையவனாகி, பாவ வடிவமாய இச் சம்சாரத்தினின்றும் நீங்கக் கடவாய். †

(அருச்சுனா! நீ தேவரீர் யாக மனைத்தையும் தம்முள் சமமாகத் திருவாய் மலர்ந்தீராகலின், கரும யாகமும் ஞானயாகமும் தம்முள் சமானமேயாமென்று சங்கித்தல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.) அருச்சுனா! அநாதியாகவே வேதப் பிரதிபாத்தியமா யுள்ளனவாக யான் முன்னே கூறிய திரவிய வடிவ யாக முதலிய யாக மனைத்திற்கும் மிக மேன்மையுடையதாக விருப்பது ஞானயாகமே யாம்; (அது பிறவியைத் தருவ தன்றாம்; திரவிய வடிவ யாக முதலியனவோ அதனைத் தருவதாம். நீ திரவிய வடிவ யாக முதலிய யாகங்களி லுண்டாகும்) இச்சையை யொழித்து, அந்த ஞான யாகத்தை அஃதாவது அந்த ஆத்ம ஞானத்தை யடையும் சாதனம்

---

† யான் கூறிய யாக ரூப கருமங்களோ வேதப்பிரதிபாத்தியமாம்; யான் புதுவதாக வொன்றும் கூறவில்லை. அவ் யாகங்கள் காயிக, வாசிக, மானச கருமங்களால் செய்யப்படுவனவாம்; ஆத்மா சர்வ வியாபாரமு மற்ற அசங்க உதாசீனமாக இருத்தலின், அதனிடத்துக் கரும மொன்று மில்லையாம். அதனை யவ்வாறறிந்தால் அருச்சுனா! நீயும் இச்சம்சார பந்தத்தினின்றும் நீங்குவாயென்று பகவான் அருச்சுனனுக் குபதேசஞ் செய்தனரென்க.

யாதென்று வினவுவாயாயின், அச்சாதனத்தையுங் கூறுகின்றேன், கேட்கக்கடவாய். ¶

பகவான் ஆத்ம ஞானத்தை யடையுஞ் சாதனத்தைக் கூறல்.

அருச்சுனா! நீ சாஸ்திர ஞானத்தோடு பிரஹ்மத்தை யறிந்திருப்பவரான ஆசிரியரது கருத்தின் வண்ணம் அவர் இவனென் கண்மணி போன்றவனென்று கருதுமாறொழுகி, (அவர் பிரசன்னராயிருக்கும்போது பகவானே! யான் யார்? எதனாற் கட்டுப்பட்டிருக்கின்றேன்? எதனால் இக்கட்டினின்றும் விடுதலை யடைதல்கூடும்? என்று வினவி,) அவரது தாமரை மலரையொத்த திருவடிகளை உன் முடியின்மீது தரிப்பாயாயின், பிரத்தியகாத்மாவாய்த் துவம்பதத்தினிலக்கியப் பொருளாயுள்ள நீ சராசரப் பிரபஞ்ச மனைத்தும் வாசுதேவனுய வென்னிடத்து அபேதமாக விருக்கின்றன வென்றறிந்து,(பின் வாசுதேவனுய்த் தற்பதத்தி னிலக்கியப் பொருளாயுள்ள என்னிடத்து உன்னை யபேதமாக வறிவாயோ,)பந்துமித்திரர் வதத்தால் ஒரு காலத்தும் சோகமடையாதிருக்குந் தன்மையான துளதாதற்குக் காரணமாய அவ்வொப்பற்ற ஞானத்தை அவர் உனக்கு எஞ்சுதலில்லாது உபதேசிப்பர். ‡

பகவான் ஆத்மஞானத்தின் மகாத்மியங் கூறல்.

(அருச்சுனா! நீ யான் பிரஹ்ம வடிவமாய என்னிடத்துச் சராசரப் பிரபஞ்சமனைத்தையும் அபேதமாகக் காண்டலாகிய ஆத்ம ஞானத்தை யடைந்தாலும், பீஷ்மர் துரோணர் முதலிய ஆசிரியரை

¶ அக்கினி ஹோத்திரம், ஜ்யோதிஷ்டோமம், சோமயாகம், சயனயாக முதலிய சிரௌத கருமங்களும், உபாசனை முதலிய ஸ்மார்த்த கருமங்களும் ஞான சூனிய யாகங்களாம்; அவை நேரே மோட்ச வடிவப் பயனை யளிப்பனவன்றும்; ஆனால், சித்த சுத்தி வாயிலாக அப்பயனை யடைவதற்குக் காரணமா யிருப்பனவாம்; ஞானயாகமோ நேரே மோட்ச வடிவப் பயனை யளிப்பதாம்; அதனால், ஞானயாகம் கரும யாகமனைத்திற்கும் அத்தியந்தம் சிரேஷ்டமாமென்று பகவான் திருவாய் மலர்ந்தருளினாரென்க.

‡ ஆன்ம ஞானம் சற்குருவி னனுக்கிரகத்தா லன்றி வேறெதனாலு முண்டாகாது; அந்த ஞானம் சராசரப் பிரபஞ்ச மனைத்தும் ஆத்மவடிவப் பிரஹ்மத்தின் கண் அபேதமாக விருக்கின்றனவென் றறிதலா மென்று பகவான் கூறினாரென்க.

யும், துரியோதனன் முதலிய உறவினரையும் கொல்வதாலுண்டாகும் பாவத்தினின்றும் விடுதலை யடையமாட்டேனென்று சங்கித்து,) அந்த அபேத ஞானத்தாலுண்டாகும் பயன் யாதென்று வினவுவாயாயின், (அதற்கு விடைகூறுகின்றேன், கேட்கக் கடவாய்.) பிராணிகளை வதைத்தல் முதலிய அந்தியந்தம் பாதக வடிவினராய் ஆராய்ந்தறிதற்கரிய அநேக பேதமாயுள்ள பிறப்பிற்கேதுவாகிய இருவினைக் கடலினிடத்து வீழ்ந்து கிடப்பவரும் திடஞானமென்னும் அழியாத மிதவையினால், தமக்கின்பமுண்டாமாறு அவ்வினைக் கடலினின்றும் மோட்சரூப கரையின் மீதேறுவர். நீ அஃதெங்ஙனமா மென்று வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.¶

அதிகாரி புருஷன் ஆத்ம ஞான வடிவ ஓடத்தால் இருவினைவடிவக் கடலைக் கடந்தாலும், ஓடத்தால் கடலைக் கடந்தாலும் அக்கடலழியாமை போல, அவ்வினை வடிவக் கடலழியாதென்னும் ஆட்சேபத்தை நிவிர்த்தி செய்தற்பொருட்டு, ஆத்ம ஞானத்தால் வினையனைத்தும் நாசமாமென்பதற்கு மற்றொருதிருஷ்டாந்தங் கூறல்.

அருச்சுனா! அக்கினி சுவாலித் தெரித்துக்கொண்டு வருங் காட்டினிடத்து எரிந்து நீறாகாத விருட்சங்க ளெவையாம்? விவேக மில்லாதவரும் அதனை யறிந்திருக்கின்றனர்; இதுபோல, (யான் யார்? எதனால் கட்டுப்பட்டிருக்கின்றேன்? அஃதெதனால் நிவிர்த்தி யாமென்றற் றொடக்கத்து) விசாரணையா லுண்டாகின்ற குணவடிவ மாயுள்ள தத்துவஞான மென்னு மக்கினி பிரதிபந்தமில்லா தோங்கி வளருமாயின், (யான் கர்த்தாவென்னும்) பிராந்தியாலுண்டாகு மிரு வினை வடிவ விருட்சமனைத்தும் எரிந்து நீராய் விடுவனவாம். ஞான வடிவ அக்கினிக்கு வினை வடிவ விருட்சங்களை யெரிப்பது மிகு எளிதாம். †

¶ இதனால் பகவான் அருச்சுனனை நோக்கி அருச்சுனா! நீ பாவிகளுள் பெரும் பாவியாயிருந்தாலும், அந்தப் பாவரூபக்கடலை ஆத்மாஞான மிதவையாலன்றி வேறெதனாலும் கடத்தல் முடியாதென்று கூறினாரென்பது பெறப்பட்டதென்க. இருவினை - நல்வினை, தீவினை; மிதவை - தோணி - அல்லது ஓடம்.

† சரீர வடிவக் காட்டிலுள்ள இருவினை வடிவ விருட்சங்கள் அக்காட்டில் ஞான வடிவ அக்கினி பற்றிப் பரவும்போது எரிந்து நீறாகாதிருப்பதில்லையா மென்பதிங் குணர்த்திய வாறாம். யான் பிரஹ்மமென்னும் தத்துவ ஞானம்

ஆத்மஞான மடைதற்குரியா ரிவரெனல்.

அருச்சுன! புண்ணிய கருமங்களைப் பயனெக்காது செய்பவருள்ளும் சில காலத்திலே தமது நிஜசொரூபமாயுள்ள பிரஹ்மத்தை யறிதற்குரிய அதிகாரி புருஷர் யாரென்று வினவுவாயாயின், (அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.) அவர், சாஸ்திரார்த்தங்களை யுபதேசிக்கும் குருவினிடத்தும் அவருபதேசிக்கும் சாஸ்திரார்த்தங்களிடத்தும் விசுவாசமுடையவரும்,மெய்-வாய்-கண்-மூக்கு-செவி யென்னு மிந்திரியங்களை நிக்கிரகஞ் செய்தவருமாவர். ¶

தத்துவஞானம்: அஞ்ஞானம், சந்தேகம், அசிரத்தை யென்பவற்றுள் எதனையாவதுடையவர்க்குச் சித்தியாதெனல்.

(சாஸ்திர ஞானமும் ஆத்மாநுபவமுமுடைய சற்குருவன்றி மற்றவர்) உபதேசித்தற்கரிய ஞானார்த்தங்களை யறியாதவராகிய அஞ்ஞானிகளும், இலௌகிக வைதிக விஷயங்களுள் பெரியார் யாது கூறினும், அதனிடத்து இதுகொள்ளத்தக்கதோ, கொள்ளத்தக்கதன்றோ வென் றையமுறுகின்றவரும், (பெரியார் கூறும் சாஸ்திரார்த்தத்துள் விபரீத புத்தி செய்து,) அதனிடத்து விசுவாசமில்லாதிருப்பவருமாகிய இம் மூவரும் (அறம் பொருள் இன்பம் வீடென்னும் புருஷார்த்தங்களுள் யாதும்) இல்லாதவராவர்; இவர்களுள், ஐயமுடையவர் (இகலோக பரலோக போகங்களுக்குரிய சாதனங்களுள் எதனையுந் துணிந்து செய்யாமையால்,) இகலோக போகமும் பரலோக போகமும் நிச்சயமாக வில்லாதவராவர். (சமத்துவ புத்தி வடிவ

பிராரப்த கருமத்தினும் வேறாகிய கருமமனைத்தையும் கெடுத்து விடுகின்றது; பிராரப்த கருமம் போகத்தாலன்றிப் பிறிதொன்றால் கெடுவதில்லையா மென்பதிங் குணர்தற்பாலதாம். தத்துவ ஞானத்தால் தன்னை மறைத்த பந்தமாகிய சொரூபாவரண மென்னும் அஞ்ஞானம் கெடுகின்றபோது, அதனை யாசிரயித்திருந்த சஞ்சித கருமமும் கெட்டொழிகின்றது; தத்துவ ஞானிக்கு ஆத்மாவின் கண் யான் கர்த்தா போக்தாவென்னும் பிராந்தியின்மையின், அவனிடத்து ஆகாமிய கருமம் சம்பவிப்பதே யில்லையாமென்பது மிங்குணர்தற் பாலதாம். இதனால், சம்சார காலத்தில் தவம், தானம், விரத முதலியவற்றுள், தத்துவ ஞானத்திற் கொப்பாயது யாது மில்லையாமென்பது பெறப்பட்டவா றறிக.

¶ இந்திரிய நிக்கிரகஞ் செய்து, குருவினிடத்தும், அவர் கூறும் சாஸ்திரார்த்தங்களிடத்தும் விசுவாசமுடையவரே ஆத்மஞானத்தை யடைதற்குரிய அதிகாரி புருஷராவரென்பதிங் குணர்த்திய வாறாம்.

யோகத்தாற் பகவானிடத்துத் தாம் செய்யும் கர்மங்களை யர்ப்பணஞ் செய்பவரும்) ஆத்ம ஞானத்தாற் சந்தேகத்தை நீக்கியுள்ளவருமா யிருப்பவர் தம்மிடத்துப் பிரமாத மின்றியவரா யிருத்தலின், கர்ம மனைத்தையும் விட்டவராவர். †

'உறியார் வெண்ணெய் தோட்டுண்டிவ் வுலகமுண்ட திருவாயான்'
ஆத்ம ஞானத்தால் ஐயத்தை யொழித்துள்ள வித்வானைக்
கருமங்கள் பந்தத்திற்கு உள்ளாக்குவ தில்லையாம்;
அதனால், அருச்சுனா! நீயும் ஆத்ம ஞானத்தா
லையத்தை யொழித்து உனது சுதர்மத்தின்கண்ணே
கருத்துள்ளவ னாவாயென்று கூறல்.

அருச்சுனா! நீ அவிவேக வடிவ அஞ்ஞானத்தினின்றுந் தோன்றி, உனது புத்திவடிவ இருதயத்திலே வளர்ந்து துக்கமனைத் திற்குங் காரணமாயுள்ள சந்தேகமென்னும் விருட்சத்தை யானுப தேசித்த கிரமப்படி உனது ஆத்ம ஞான வடிவ வாளாயுதத்தால் வெட்டித்தள்ளிச் சிறிதுமில்லா தொழித்து, (இப்போர் செய்வது எனக்குச் சுதர்மமாமென்னுங்) கருத்தோடு உனது யுத்த ரூபமான கருமயோகத்தைப் பயனை விரும்பாது செய்யக் கடவாய். ‡

4—சம்பிரதாய அத்தியாயம் முற்றிற்று.

---

† அஞ்ஞானியும் சிரத்தையில்லாதவனும் பரலோக போகத்தை யடையா விடினும், இகலோக போகத்தை யொருவாறடைதற் குரியவராவர்; சந்தேக முடையவனோ எதனையும் துணிந்து செய்யாமையால் எப்போகத்தையு மடைதற் குரியவனாகாதிருக்கின்றான்; அதனால், ஐயம் பெருந்துன்பத்திற் கேதுவாயிருக் கின்ற தென்பதும், நிஷ்காம கருமஞ் செய்து, அதனால் சித்தசுத்தி யடைந்து, அதனால் ஆத்மாவை யறிந்து, சந்தேகமற்றுள்ளவன் கரும சாட்சியாக விளங்கு தலின், அவனைக் கருமம் பந்தத்திற்கு உள்ளாக்குவ தில்லையா மென்பதும் இங் குணர்தற்பாலனவாம்.

‡ அருச்சுனா! நீ இப்போர் முயற்சி நிஷ்பலமாமென்று கருதற்க; இது சித்தசுத்தி வாயிலாக ஆத்ம ஞான முண்டாதற் கேதுவாம்; அதனால், இப் போரை விரைந்து செய்யக்கடவா யென்று பகவானருச்சுனனுக் குபதேசித்தா ரென்க. இந்நான்காவ தத்தியாயத்தில் பகவான் அருச்சுனனுக்கு, தாம் பிரஹ்ம சொரூபமென்பதை விளக்கி, அவனுக்குத் தம்மிடத்துப் பக்தி சிரத்தை யுண் டாகச் செய்து, கருமயோகம் ஆத்ம ஞானத்திற்குக் காரணமாயிருத்தலின், அதனை நீ யவசியம் செய்தல் வேண்டுமென்று திருவாய் மலர்ந்தருளினா ரென் பதாம்.

5—ஞானகரும அத்தியாயம்.

“பூத்தருளி யொருமலராற் புவனமவை யீரேழுங், காத்தருளி விளையாடிக் கடைசாரங் கண்வளருந், தீர்த்த” ஞகிய பகவான் ஆத்ம ஞானமடைதற் பொருட்டுக் கருமத்தையும் அதன் தியாகத்தையும் மறை முறையாகத் திருவாய்மலர்ந்தருளியதன் தாற்பரியத்தை அருச்சுன னறியாது, (பகவானை நோக்கிப் பகவானே! ஆத்மஞான மடைதற் குரிய சாதனங்களாகத் தாங்கள் திருவாய்மலர்ந்தருளிய கருமம் அதன் தியாகமென்னுமிரண்டும் இருளொளிபோலத் தம்முள்விரோதமுடையனவாக விருத்தலின், அவற்றை யதிகாரி புருஷன் ஒரே காலத்தில் மேற்கொண்டொழுகுவதெவ்வாறும்? அதனுல், யான் கருமஞ் செய்வதா? அதன் தியாகஞ் செய்வதா? எனக்கதனைத் திருவாய்மலர்ந்தருளல் வேண்டுமென்று வினவத் தொடங்கி,) அஞ்ஞான முதலிய மலமியல்பாகவே யில்லாதுள்ள பகவானே! தேவரீர் அடியேனுக்கு ஆத்மஞான மடைதற்குக் கருமானுஷ்டானம் நேர் காரணமா யிருக்கின்றதென் றுபதேசிக்கின்றீர்; அதனேடு நில்லாது கரும சந்நியாசத்தையும் பெறுதற்கரிய அமிர்தம் போன்ற சாதனமென்று முபதேசிக்கின்றீர். (தாங்களிவ்வா றுபதேசஞ் செய்வதால்,) யான் அவ்விரண்டனுள் (இது கொள்ளத் தக்கது, இது தள்ளத்தக்கதென்பதறியாது சந்தேகமுறுதற் குரியவனுகின்றேன்; கருமானுஷ்டானம் அதன்தியாகமென்னு மிவ்விரண்டனுள், மிகச் சிரேஷ்டமானதென்று நிச்சயித்திருக்கும்) ஒன்றனை யெனது சம்சார துக்கம் நீங்குமா றுபதேசித்தருள்வீராக என்றனன்.

(அருச்சுனன் தன் சந்தேகம் நீங்காது வினவியதனைத் திருச்செவி சாற்றியருளிய பகவான் அவனுக்குக் கருமானுஷ்டான மித்தன்மையது, கரும சந்நியாச மித்தன்மையதென் றவற்றைக் கூறத்தொடங்கி, அருச்சுனு! நீ வினவியதற்கு யான் கூறும் விடையைக் கவனிக்கக் கடவாயென்று கூறுவாரானுர்.)

ஆத்மஞான மடைதற்குச் சாஸ்திர விதி பூர்வகமாகச் செய்யும் சர்வகருமங்களின் தியாக பூர்வகமான சந்நியாசமும் சிரேஷ்டமானதேயாம்; தீவினையைக் கெடுக்கின்ற கரும யோகமும் சிரேஷ்டமானதே

யாம். கருமானுஷ்டானம், கரும சந்நியாச மென்பவற்றை யாராய்ந்து நோக்கினல், அந்தக்கரண சுத்தியில்லாதவர் செய்யும் கரும சந்நியாசத்தைப் பார்க்கிலும், அவர்க்குக் கருமானுஷ்டான வடிவக் கருமயோகமே மிகச் சிரேஷ்டமானதாம். ஒன்றைப் பெறுவதன்கண் விருப்பும் பிறிதொன்றை யிழப்பதன்கண் வெறுப்புமடையாத நிஷ்காம கருமயோகிகள் பெரும்பான்மையும் கரும சந்நியாசத்தின்க ணிற்பவராவர். கரும சந்நியாசஞ் செய்தும் சுக துக்கங்களிலும் அவற்றிற்குக் காரணமாயிருப்பனவற்றிலும் முறையே விருப்பு வெறுப்புடையவர் துன்பந்தரும் பந்தத்தில் நிற்குந் தொழி லுடையவரே யாவர்.¶

பகவான் கருமயோகம் கரும சந்நியாச மென்பன ஒருகாலத்தி லடைதற்குரியன வன்றும்; ஆனல், காலபேதத்தால் அடைதற்குரியனவாம்; அதனல், அவற்றுள் யாது சிரேஷ்டமா மென்னுஞ் சங்கை அவிவேகிக் குண்டாகுமே யன்றி விவேகிக் குண்டாகாதெனல்.

அருச்சுன! வைராக்கிய முடையவர் கொள்ளுதற்குரியது கரும சந்நியாசமாம்; அஃதில்லாதவர் கொள்ளுதற்குரியது கரும யோகமாம்; இவ்விரண்டனுள், ஒன்றனைத் தமததிகாரத்தை யனுசரித்துச் சாஸ்திர விதி பூர்வகமாக வடைந்தவர் ஆத்ம ஞானத்தை யடைதல் வாயிலாக அவ்விரண்டினது பயனுகிய ஒரே மோட்சத்தை யடைதற்குரியவராவர். கரும சந்நியாசம் கரும யோகமென்னு மவ்விரண்டற்கும்

¶ சாஸ்திரவிதி பூர்வகமாகச் செய்யுங் கருமங்களின் தியாகம் சந்நியாசமாம்; தத்தம் வருணச்சிரம தருமத்திற் கேற்றவாறு நித்திய நைமித்திக கருமங்களைச் செய்தல் கரும யோகமாம்; இவ்விரண்டும் ஆத்ம ஞானமடைதற்குச் சாதனமாம்; இவ்விரண்டனுள், சித்தசுத்தி யில்லாதவன் செய்யும் கரும சந்நியாசம் அவனுக்குப் பயன்தருவதன்றும்; அவன் செய்தற்குரியது கருமமேயாம்; அதனற்றன் அவன் கடைத்தேறுதல் வேண்டும். இவ்வாற்றல் சித்த சுத்தியில்லாதவனுக்குக் கருமானுஷ்டானம் கரும சந்நியாசத்தினும் சிரேஷ்டமா யிருக்கின்றது. பயனேக்காது கருமங்களைச் செய்து, எதனிடத்தும் விருப்பு வெறுப்பில்லாதவன் கரும சந்நியாசியே யாவன்; பயனேக்கிக் கருமங்களைச் செய்பவன் விருப்பு வெறுப்புக்களால் தாக்கப்பட்டுத் துன்பத்தையே யடைதற்குரியவனவன். கருமானுஷ்டானம் கரும சந்நியாசமென்னு மிவ்விரண்டனுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையால் சிரேஷ்டமா யிருக்கின்றதென்று பகவான் அருச்சுனனுக்குபதேசஞ் செய்தாரென்க.

பயன் வெவ்வேறென் றுணரும் அவிவேகிகள் இவ்விரண்டனையும் செவ்வையாக அறிந்தவராகார்; ஆராய்ந்து நோக்குமிடத்துக் கரும சந்நியாசம் கரும யோகமென்னு மிரண்டற்கும் பயனொன்றே யென் றுணர்ந்தவர் சாங்கியம் யோகமென்னு மிவ்விரண்டனையு முறையாக வுணர்ந்தவராவர். †

(அருச்சுனா ! நீ பகவானே ! கரும சந்நியாசம் ஞான நிஷ்டைக் கேதுவாயிருத்தலின், அஃதவசியஞ் செய்தற்குரியதாம்; அதனால், சித்தசுத்தி யுடையவன் ஞானநிஷ்டை செய்தற்பொருட்டுக் கரும சந் நியாசஞ் செய்வதுபோல, சித்த சுத்தி யில்லாதவனும் ஞான நிஷ்டை செய்தற்பொருட்டு, அச்சந்நியாசத்தையே முதலிற் செய்தல் கூடாதோ? என்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா ! முன்னர்ச் சித்த சுத்திக்கேதுவாய நிஷ்காம கருமத் தைச் செய்துவரின், அதனால் சித்தசுத்தி யுண்டாவதாம் ; அஃதுண் டாகவே, கரும சந்நியாசஞ் செய்துகொள்வது சம்பவிப்பதாம் ; அதி காரி புருஷர் யாவரும் அச்சந்நியாசத்தை மேற்கொண்டு, பிரத்தியக பின்ன பரமாத்மாவாய என்னை அதி சீக்கிரமாக வடைவர். இச்சம்சார காலத்தில் நிஷ்காம கருமஞ் செய்வதொழியச் சிந்திப்பதற்கரிய மகி மைவாய்ந்த சாதனம் என்னை யடைதற்கு வேறு வழியாக வுளதென் றுணர்தல் எவ்வாற்றானு மில்லையாம். தமக்குரிய அந்த நிஷ்காம கரு மத்தை முன்னர்ச் சித்த சுத்தியின் பொருட்டுச் செய்பவரே என் னைத் தவறா தடைவர். இதனை நீ யறியக்கடவாய். ¶

---

† பகவான் அருச்சுனனை நோக்கி, அருச்சுனா! விசாரமில்லாதவர் கரும சந்நி யாசம் கரும யோகமென்னு மிரண்டும் வெவ்வேறு பயனுடையன வென்று கூறுகின்றனர் ; விசாரமுடையவர் அவ்வாறு கூறுவதில்லை. கரும சந்நியாசம் கரும யோகமென்னு மிரண்டனுள், ஒன்றனைச் செவ்வையாக அனுஷ்டிப்பவர் மோட்ச வடிவாகிய அவ்விரண்டன் பயனையு மடைவரென் றுபதேசஞ் செய்தா ரென்க.

ஐயந்திரிபின்றிய ஆத்மஞானம் சங்கியையாம் ; அதனை யடைவிப்பது சாங் கியமாம்; அஃதிங்குக் கரும சந்நியாசமாம். பயனோக்காது சாஸ்திரவிதி பூர்வக மாகச் செய்யும் நித்திய நைமித்திக கருமங்கள் இங்கு யோகமாம்.

¶ பகவான் இங்ஙனங் கூறியவாற்றால், கருமயோகம் கரும சந்நியாசமென்னு மிரண்டிற்கும் பயனொன்றே யாயினும், சித்த சுத்தியில்லாதவனுக்குக் கரும சந் நியாசத்தினும் கருமயோகமே அத்தியந்தஞ் சிரேட்டமானதாம்; அதனாலன்றி வேறு சாதனத்தால் அவன் பரமாத்மாவை யடைதல் முடியாதென்பது பெறப் பட்டவாறறிக.

(அருச்சுனு ! நீ சீவர்கள் கருமத்தால் பந்தமடைகின்றன ரென்பது மிகு பிரசித்தமாயிருத்தலின், கருமம் பந்தத்திற்கே காரணமாம்; அதனுல், நிஷ்காம கருமஞ் செய்பவன் என்னைத் தவரு தடைவனென்று தேவரீர் கூறுவது எவ்வாறு பொருந்துமென்று வினவுதல் கூடும் ; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனு ! தம்முள் வேற்றுமையுள்ள சத்துவ ராசத தாமத குணவடிவமாயுள்ள அந்தக்கரணமும் பெரும்பான்மையும் மயக்கஞ்செய்தற்கேதுவாயுள்ள சுரோத்திர முதலிய இந்திரியங்களுமென்னு மிவற்றை யடக்கினவரும், சர்வான்மாவாயுள்ள என்னைத் தமது கூர்மையான புத்தியால் நன்ருக அறிந்தவருமாகிய ஞானிகள் பிறரிகழ்தற்குரிய பந்த சாதனமாயுள்ள கருமங்களைச் செய்தாராயினும், அக்கருமங்கள் கரும சாட்சியாக விளங்குமவர்களைப் பந்தத்திற்குள்ளாக்கி வருத்துவதில்லையாம். அந்தக்கரணம் சுரோத்திர முதலிய இந்திரியங்களென்பவற்றைச் செவ்வையாக வடக்கிய ஞானிகள் கரும சந்நியாசஞ்செய்து, அதனுலடைதற்குரிய பயன் யாதிருக்கின்றது? ஒன்றுமின்ரும். *

ஆத்ம ஞானியின் தன்மையைக் கூறல்.

அருச்சுனு! அந்தக்கரணத்தையும் இந்திரியங்களையும் செவ்வையாக வடக்கிச் சமாதியின்கண் நிலைத்து நின்று சற்குருவருளால் தனது நிஜவடிவத்தை யுள்ளவாறுணர்ந்தவன் கண்களால் உருவங்களைக் காண்

* மனம் புத்தி சித்தம் அகங்காரமென நான்கு பிரிவாகவுள்ள அந்தக்கரணத்தையும் சுரோத்திராதி ஞானேந்திரியங்களையும் வாக்காதி கருமேந்திரியங்களையுந் தத்தம் வியாபாரங்களைச் செய்யாவாறடக்கி, சமாதியில் நிலைத்திருந்து தமது நிஜவடிவமாய ஆத்மாவிற்கு எவ்வாற்ருனும் வேருகாதுள்ள பிரஹ்மத்தை யுள்ளவாறுணர்ந்தவர் கரும சாட்சியாக விளங்குதலின், அவர் எக்கருமத்தையும் யானிக் கரும கர்த்தாவென்னும் பாவனையோடு செய்வதில்லையாம் ; அவர் செய்யுங் கருமமனைத்தும் உலோகோபகாரமாக விருப்பனவாம்; அவர் செய்யும் கருமங்கள் பிறர் கருத்திற்குப் பந்தசாதனமாகத் தோன்றுமாயினும், அவை அவரைப் பந்தத்திற்குள்ளாக்கி வருத்துவதில்லையாம். அந்தக்கரணத்தையும் இந்திரியங்களையு மடக்கிக் கரும சாட்சியாக விளங்குமவர்கள் கரும சந்நியாசஞ் செய்வதால் ஒரு பயனையு மடைவதில்லையாம்; அதனுல், அவர்கள் கரும சந்நியாசஞ் செய்வதாவசியகமாம். வாக்குத் தண்டம், மனே தண்டம், காயத்தண்டமென்பவை நிஷ்காம கருமத்தின் பயனும்; அம்மூன்று தண்டத்தையும் முறையே பெற்றுள்ள ஆத்ம ஞானிக்குக் கருமத்தை விடுவதாலும் பயனில்லையாம், செய்வதாலும் பயனில்லையாம் ; அங்ஙனமாயினும், அவன் உலோகோபகாரமாகக் கருமத்தைச் செய்து வருகின்ருனென்னும் விஷயம் இங்குணர்தற்பாலதாமென்க.

பான்; செவிகளால் சப்தங்களைக் கேட்பான் ; துவக்கால் சீதோஷ்ணங் களை யறிவான்; மூக்கால் வாசனையைக் கிரகிப்பான்; கால்களால் நடப் பான்; புத்தி சோர்வடைந்தால் நித்திரை செய்வான்; மனத்தால் அனு கூலமாகவுள்ள வொன்றனை இதுவேண்டுமென்று விரும்புவான், பிரதி கூலமாகவுள்ள வொன்றனை இது வேண்டாமென்று வெறுப்பான்; மூக் கால் சுவாசம் விடுவான் ; வாக்கால் ஏதாவதொன்றனைப் பேசுவான் ; கண்களைத் திறப்பான், மூடுவான்; ஆடை ஆபரணங்களால் தன் சரீ ரத்தை யலங்கரிப்பான்; இன்னும் பல வியாபாரங்களையுஞ் செய்வான்; இவ்வாறு பல வியாபாரங்களைச் செய்வானாயினும், இவ்வியாபாரமனைத் தும் இந்திரியம் பிராணன் மன முதலியன தத்தமக்குரிய விஷயங்களில் செல்லுவதாலுண்டாகும் அவற்றின் வியாபாரங்களாமென் றுணர்ந்து அவ்வியாபார மனைத்திற்குஞ் சாட்சியாக விளங்கும் நிச்சயமுடையவ னாய், ஸ்தம்பம்போன்றும் மலைபோன்றும் சிறிதுஞ் சலனமில்லா திருப்பன். †

(அருச்சுனா ! நீ தேவரீர் ஆத்ம ஞானிக்குக் கர்த்திருத்துவாபி மான மின்மையின், அவன் எந்தக் கருமத்தைச் செய்பினும், அத னால் பந்த மடைவதில்லை யென்று கூறிபதால், அஞ்ஞானி கர்த்திருத் துவாபிமான வசத்தால், கருமங்களைச்செய்து, அவற்றால் பந்த மடை வனென்பது அறியப்படுகின்றது; அதனால். கருமங்களைச் செய்யும் அஞ்ஞானிக்குச் சந்நியாச பூர்வகமாக வுள்ள ஞான நிட்டை யெவ் வாறு சித்தியாமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின் றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா! யாவர் லௌகிக வைதிகமான கருமங்களுள் எதனை யும் பரமேசுவரனான எனது சந்தோஷத்தின் பொருட்டுச் செய்து, அதன் பயனை விரும்பா திருக்கின்றனரோ அவர் தாஞ் செய்யுங் கரு

---

† காண்டல் கேட்டல் பரிசித்தல் மோத்தலென்பன ஞானேந்திரியத்தின் வியாபாரமாம்;நடத்தல்பேசல் கன்மேந்திரியத்தின்வியாபாரமாம்;நித்திரை விருப்பு வெறுப்பென்பன புத்தியின் வியாபாரமாம்; சுவாசம் விடுதல் கண்களைத் திறத்தல் மூடுதலென்பன வாயுவின் வியாபாரமாம். ஆத்மாவை யறிந்து, அதனால் பரமா நந்த வடிவமாக விளங்கும் தத்துவஞானி சர்வ வியாபாரத்திலும் அவை இந்திரிய முதலியவற்றின் வியாபாரமாமன்றி, ஆத்மாவின் வியாபாரமன்று ; ஆத்மா எவ் வாற்றாலும் கர்த்தாவன்றென்பதை யுள்ளவாறுணர்ந்திருத்தலின், அவன் நேத் திர முதலியவற்றால் காண்டல் கேட்டல் முதலிய வியாபாரங்களுள் எதனைச் செயினும், அதனால் பந்தமுறானென்பதாம்.

மங்களுள் எதனோடும் சம்பந்த மடையார்; இங்ஙன மவர் பொருந்தாத் தன்மையைக் கூறுமிடத்து, தன்னோடு பொருந்தத் தோன்றி யிருந்தும், குளிர்ந்த தாமரையின் பெரிய இலையும் நீரும்போலக் கருமங்களோ டவர் பொருந்தா திருப்பர். அந்தத் தாமரை யிலை நீர் போல விருப்பவர்க்கு லௌகிக வைதிக கருமங்களுள் எதுவும் பந்தத்திற்குக் காரண மாவதில்லையாம்; (ஆனால், பயனோக்காது செய்யுமது சித்த சுத்திக்குக் காரணமாம்.) ‡

பயனோக்காது செய்யுங் கருமம் மோட்ச காரணமா மென்பதைக் கூறல்.

(அருச்சுனா! மோட்ச விருப்ப முடையவர் தமது சித்த சுத்தியின் பொருட்டு, தமது வருணாசிரமங்களுக்குரிய நித்திய நைமித்திக கருமங்களைத்) தம்மோ டிருப்பனவாய இந்திரியங்களாலும், மனத்தினாலும், உடம்பாலும் இவை திரிகரணங்களின் வியாபாரமா மென்று பயனோக்காது ஈசவரப் பிரீதியாகச் செய்யாநிற்பர். (கருமங்கள் பயனோக்கிச் செய்பவர்க்குப் பந்த சாதனமாகவும், பயனோக்காது செய்பவர்க்கு முத்தி சாதனமாகவு மிருத்தலை நீ யறியா திருக்கின்றாய். அருச்சுனா! மோட்ச விருப்புடையவர் மேற் கூறியவாறு கருமங்களைத்) தினந்தோறுஞ் செய்து வந்தாலும், விஷம்போலத் துக்க சாதனமா யுள்ள அக்கருமங்களே பயனோக்காது செய்யுமிடத்து அவர்கட்குச் சித்தசுத்தி வாயிலாக மோட்சத்தைக் கொடுத்தற்குக் காரணமாம். கருமங்களின் பயன்கள் நாமடைதற் குரியனவாமென்று கருதி, கருமங்களைப் பயனோக்கிச் செய்கின்றவர் அக் கருமங்களால் சம்சார பந்த மடைவர். †

‡ லௌகிக வைதிக கருமங்களுள் எதனையும் பயனோக்காது ஈசுவரப் பிரீதியாகச் செய்பவன், அக்கருமத்தால் பந்தமடைவ தில்லை; அவன் தாமரை யிலையினீர்போல அக்கருமத்தோடு சம்பந்த மில்லாதிருப்பன்; அக்கருமம் அவனுக்குப் பந்தசாதன மாகாது, சித்த சுத்தி யுண்டாதற்குச் சாதனமா யிருக்கின்றது; பயனோக்கிச் செய்யும் கருமமே எவர்க்கும் பந்த சாதனமா யிருக்கின்றதென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினரென்க.

† பயனோக்காது கருமங்களை ஈசுவரப் பிரீதியாகச் செய்பவன் முன்னர்ச் சித்த சுத்தியையும், அதன்பின்னர் நித்தியா நித்திய வஸ்து விவேகத்தையும், அப்பால் சந்நியாச பூர்வகமான ஞான நிட்டையையும், அதன் பின் சாந்திவடிவ மோட்சத்தையு மடைகின்றான்; பயனோக்கிக் கருமங்களைச் செய்கின்றவனோ அவற்றால் சம்சார பந்தத்தையே யடைகின்றானென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினரென்க.

இதுகாறும் சித்தசுத்தி யில்லாதவர்க்குக் கரும சந்நியாசத்தினும் கரும யோகமே அத்தியந்தஞ் சிரேட்டமாமென்று கூறிய பகவான் இப்போது சித்தசுத்தி யுடையவர்க்குக் கரும சந்நியாசமே அத்தியந்தஞ் சிரேட்டமா மென்று கூறல்.

பரமேசுவரனான என்னிடத் தன்புள்ள அருச்சுனா! (யான் கூறுவதைக் கவனமாகக் கேட்கக் கடவாய். தேகத்தின் வேறாகத் தேகியைச் செவ்வையாக அறிந்திருப்பவன்) காமக் குரோதாதி விருத்திகளெழாவா றடங்கியுள்ள மனத்தினாலே கரும மனைத்தையும் அவற்றின் பயனையும் விட்டு, நவத்துவாரங்கள் பொருந்தியுள்ள மாயாபுரமென்னு மிவ் வுடம்பி னிடத்துத் துன்ப மென்பது சிறிது மின்றி யின்ப வடிவமாகவே பிறழா திருப்பன். அவன் பிராரத்த கருமவசத்தாலே தன்னெதிரே வந்தடைவனவாய கருமங்களைச் செய்பவனு மாகான், செய்விப்பவனு மாகான். ¶

(அருச்சுனா ! நீ ஒருவனிடத்துள்ள நடத்தற் றொழில் அவனுட்கார்ந்துள்ளபோது நிகழாமைபோல, ஆன்மாவினிடத்துள்ள செய்தல் செய்வித்த லென்னுந் தொழில்கள் சந்நியாச காலத்தில் நிகழவில்லை யென்பது தேவரீரது வாக்கியத்தின் தாற்பரியமா? அல்லது ஆகாயத்தினிடத்துத் தோன்றும் கறுநிறம் கொப்பரை கவிழ்த்தாற்போன்றுள்ள விடமென்பன அதனிடத்துக் கற்பிதமா யிருத்தல்போல, ஆன்மாவிடத்துத் தோன்றும் செய்தல் செய்வித்த லென்னுந் தொழில்கள் அதனிடத்துக் கற்பிதமா யிருக்கின்றன வென்பது தேவரீரது வாக்கியத்தின் தாற்பரியமா வென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

¶ நித்தியம், நைமித்திகம், காமியம், பிராயச்சித்தம் எனக் கருமம் நான்காம்; தேகத்திரய விலட்சணமாய், அவஸ்தாத்திரய சாட்சியாய் ஆத்மாவை யுள்ளவாறறிந்தவன் இவற்றுள் எதனையுஞ் செய்வ தில்லையாம், செய்விப்பது மில்லையாம்; கரும பலத்தைச் சிறிதும் விரும்புவதில்லையாம். அவன் காதிரண்டு, கண்ணிரண்டு , மூக்கிரண்டு, வாயொன்று, பாயு ஒன்று, உபஸ்த மொன்றென நவத்துவாரமுடைய மாயாபுரமென்னு முடம்பில், உலக நோக்க மின்றிச் சச்சிதாநந்த வியாபக வடிவமாகவே விளங்குகின்றான்; அவனுக்குச் சம்சாரபந்தஞ் சிறிது மில்லையாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

(அருச்சுன ! தேகேந்திரிய முதலியவற்றிற்குச் சுவாமியாயுள்ள இவ்வான்மா தேகேந்திரிய முதலியவற்றின் கர்த்திருத் தன்மையை யும், கருமங்களையும், தேகேந்திரிய முதலியவற்றிற்குக் கரும பலங்க ளோடு சம்பந்தத்தையும் செய்வதில்லையாம்; ஆனால்,) இப்பாகுபாடுடை யனவாய கரும மனைத்தும் அஞ்ஞான வடிவ மாயையின் காரியங்களே யாம். ஆத்மாநாத்ம விவேக மில்லாதவர் அக்கருமங்களை யுண்டாக்கும் அஞ்ஞானத்தால்(உண்மையில் அகர்த்தா அபோக்தாவாயும், பரமாநந்த வடிவமாயும், அத்விதீயமாயுமுள்ள ஆன்மாவை) உள்ளவா றுணராது, யானிக்காரியத்தைச் செய்யுங் கர்த்தா, இஃதெனது காரியமாமென் றுணர்ந்து, மித்தையாயுள்ள உலகாசாரத்தால் மோகமுற் றழிகின்ற னர்.¶

சனன மரண வடிவச் சம்சார நிவிர்த்தியின் காரணங் கூறல்.

(அருச்சுன ! நீ அநாதி அஞ்ஞானத்தால் தமது சொரூபத்தை யறியாதுள்ளவர்க்குச் சனனமரண வடிவச் சம்சார நிவிர்த்தி யெவ் வாறுண்டாகுமென்று வினவுதல்கூடும்? அதற்கு விடை கூறுகின் றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுன ! எவர்க்கும் ஆன்ம ஞானத்தால் தன்னை மறைத்த பந்தமென்னுமஞ்ஞான முற்றும் நாசமாவதாம்; அது நாசமாகவே, அவ்வான்மஞான முடையவர்க்கு (எங்கும் கடத்தில் மண்போல நிறைந்து பரிபூரணமாயுள்ள)பிரஹ்மம் ஆகாயத்திற்றோன்றும் சூரியன் போலச் செவ்வையாக விளங்குவதாம்; ஆன்மஞானமே ஆன்மாவிற்கு வேறுகாதுள்ள பிரஹ்மத்தைச் செவ்வையா யறிதற்குச் சாதனமா மென்னும் இவ்வழியால் அப்பரப்பிரஹ்மத்திலேயே நிஷ்டையுடை யவராய், அப்பரப்பிரஹ்மத்தில் ஒரு சிறிதும் வேற்றுமையில்லாதிருப்

¶ஆத்மா அசங்கமா யிருத்தலின், அஃதெக்காரியத்தையும் செய்வது மில்லை யாம், செய்விப்பது மில்லையாம்; ஆனால், அதன் சந்நிதான விசேடத்தால் தேகேந் திரிய முதலியன செய்வது செய்விப்ப தென்னும் கருமங்களுக்குக் கர்த்தாவாக விருக்கின்றன; அக்கருமங்களின் பயனையடைவது அந்தக்கரணத்தின்கண் ஆன் மாவின் பிரதிபிம்ப ரூபமாயுள்ள சீவனேயாம்; எவ்வகையாலும் ஆன்மா அப் பயனை யடைவ தில்லையாம். இக்காரியங்களைச் செய்யச் சீவனை முன்னிட்டு அஞ்ஞான வடிவத் தெய்வீக மாயையென்னும் பிரகிருதியே முயலுகின்றது; இவ் வுண்மையினை யறியாதவர் யானிக் காரியத்தைச் செய்யுங் கர்த்தா, இஃதெனது காரியமாமென்னும் விபரீத புத்தி யுடையவராய்க் கெடுகின்றனரென் றருச்சுன னுக்குப் பகவான் கூறினு ரென்க.

பவர், பிறவிக்குக் காரணமாயுள்ள அஞ்ஞானத்தை யொழித்தவரா யிருத்தலின், இனிப் பிறவாதவரேயாவர். †

ஆன்ம ஞானத்திற்கு விதேகமுத்தி பயனுமென் றருளிச்செய்த பகவான், அதற்குச் சீவன் முத்தியும் பயனுமெனக் கூறல்.

அருச்சுனா! செவ்வையாக வித்தை விநயங்களையுடைய பிராமணன், யானை, பசு, நாய், அந்நாயிறைச்சியை நன்றாகத் தின்றலையுஞ் சண்டாளனென்று சொல்லப்படுகின்ற இப்பாகுபாடுடைய சர்வப் பிராணிகளிடத்தும் ஒன்றன்கண் இருப்பவனன்றென்று கருதாவாறும், பிறிதொன்றன்க ணிருப்பவனென்று கருதாவாறும், அறிவு சொரூபமா யிருக்கின்ற என்னை யெவ்விடத்திலும் ஏகமாகவே காணும் ஞானிபுருஷன் இவ்வுடம்போடு கூடி யிருப்பானாயினும், உடம்பில்லா தவனாவன். (இவன்றான் சீவன் முத்தனென்பவனாவன்.) ‡

(அருச்சுனா! நீ பிராமணன், யானை, பசு, சண்டாளனென்றற் றொடக்கத்துப் பேதபுத்தி தேவரீர் கூறிய புருஷனுக்கிருத்தலின், அவனுக்குப் பிரஹ்மஞானம் சம்பவிப்ப தெவ்வாறுமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா! பாகியமான சப்தாதி விஷயங்களிற் செல்லுகின்ற சுரோத்திராதி இந்திரியங்களாலுண்டாய சுகமனைத்தையும் தம் அந்தக் கரணத்தி னின்றும் செவ்வையாக வொழித்து, அத்தியந்தம் வைராக்

---

† தன்னை மறைத்த பந்தமென்னுமஞ்ஞானம் தன்னை யறிதலென்னுந்தத்துவ ஞானத்தாற் கெடுவதாம்; தன்னை (ஆத்மாவை) யறிந்தவர்க்குப் பரப்பிரஹ்மம் அதற்கு வேறாக விளங்குவதில்லையாம்; அதனால், அவர்க்குப் பரப்பிரஹ்மம் செவ்வையாக விளங்குவதாம். இம்முறையை யறிந்து, பிரஹ்ம நிஷ்டை செய் பவர் அதற்கு வேறாகாது விளங்குவர்; பிறப்பில்லை யென்பது இவர்க்கேயா மென்றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க. பிரஹ்மநிஷ்டையாவது பிரஹ் மைவாகம் (பிரஹ்மமே நான்) என்றிடைவிடாது பாவனை செய்தலாம்.

‡ வித்தை—வேதார்த்தத்தி னுண்மை ஞானமாம், அல்லது பிரஹ்ம ஞான மாம்; விநயம்—இவ்வித்தையை யடைந்திருந்தும் அகங்கார மில்லாதிருத்தலாம்.

சத்வ குணமுடைய பிராமண சரீரத்திலும், இராசத குணமுடைய யானை முதலிய சரீரத்திலும், தாமத குணமுடைய சண்டாள சரீரத்திலும் ஆத்மா ஒன்றாகவே யிருக்கின்றதென் றுணர்ந்து, எங்கும் ஆத்மாவை (தன்னை)யேகாணும் புருஷன்றான் ஆன்மஞானமுடையவனாவன்; இவன் உடம்போடுள்ள காலத் திலும் உடம்பில்லாதவனாவனென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

கியமுடைய தம தந்தக்கரணத்திலே சமாதி யுப்பியாசத்தால் விளங்கு கின்ற பிரஹ்மாநந்தத்தை யடைந்தவர்க்கு நித்தியமாயுள்ள பிரஹ்ம மடையப் பட்டதேயாம். (அவர்க்குப் பேத புத்தி யுண்மையாக வில்லை யாம்.)

(அருச்சுன! விஷயத்திலாசை அவிவேகிகட்கு உண்டாவதன்றி விவேகிகட் குண்டாவதில்லையென்பதை நீ அறியா திருக்கின்றாய்.) விவேகிகள் தம் சித்தத்தின்கண் பொருந்த அனுபவிக்கின்ற இந்திரிய விஷயங்களின் சம்பந்தத்தா லுண்டாகின்ற இன்பங்கள் நாச முடை யனவாமென்றும் இவ்வின்பங்கட்கேற்றவாறாகப் பின்னர்த் துன்பங்க ளுண்டாவனவாமென்றும் நன்குணர்ந்து, அவ்வின்பங்களை யெப் போதும் விரும்பா திருக்கின்றார்கள். †

காமக்குரோத முதலியவற்றை யொழித்தவனே பரம புருஷார்த்தமான மோட்சத்தை யடைவானெனல்.

அருச்சுன! உடம்போடு கூடிச் சீவிப்பவனா யிருந்துகொண்டே, (தம்மை யுடையவரை வருத்துவதில்) விஷத்தை யொத்துள்ள காமக் குரோதங்களால் தோன்றும் வேகங்களால் வேவாவாறு, அக்கா மத்தையும் குரோதத்தையும் ஒழித்தவனே பிரஹ்மத்தை யடையும் ஞானியும், அப்பிரஹ்மா நந்தத்தை யனுபவிப்பவனு மாவன். ‡

---

† விஷய சுகத்தை வெறுத்து, சமாதிகூடிப் பிரஹ்மாநந்தத்தை யடைந்திருப் பவர் பரப்பிரஹ்ம வடிவமாகவே யிருக்கின்றனர்; அதனாலவர்க்குப் பேத புத்தி யென்ப துண்மையிலில்லையாம். விஷய சுகம் துன்பந் தருவதா மென்றுணர்ந்தவ ரதனை யெப்போதும் விரும்புவ தில்லையாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

‡ அனுகூல பதார்த்தங்களைக் கண்டபோதாவது கேட்டபோதாவது நினைக்கும்போதாவது அதனால் அவற்றின்மீது சித்தத்தின்கணுண்டாகு மிச் சையே காமமாம்; அதனாலுண்டாகும் உரோமாஞ்சலி, முகவிலாச முதலியன அக்காமத்தின் வேகமாம். பிரதிகூல பதார்த்தங்களைக் கண்டபோதாவது கேட்ட போதாவது நினைக்கும்போதாவது அதனால் அவற்றின்மீது சித்தத்தின்க ணுண் டாகும் வெறுப்பே குரோதமாம்; அதனாலுண்டாகும் சரீர நடுக்கம், வியர்வை, பற்கடி, பெருமூச்சு, குரூரப்பார்வை முதலியன அக்குரோதத்தின் வேகமாம். இவ்வேகங்களுக்குக் காரணமாயுள்ள காமக் குரோதங்களைத் தேகாபிமானஞ் சிறிதுமின்றிப் பிரயத்ன பூர்வகமாக வொழித்தவன் சமாதி யப்பியாசத்தால், பிரஹ்மத்தை யறிந்தடைந்து, பிரஹ்மாநந்த வடிவமாகவே விளங்குவன்; மோட்ச மென்பது பிரஹ்மாநந்த வடிவமாக விளங்குதலேயாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

(அருச்சுன! நீ காமக்குரோதங்களின் வேகத்தைச் சகித்துக் கொள்வதினாலேயே அதிகாரி புருஷன் மோட்ச மடைதல் கூடுமோ என்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுன! பிரத்தியகாத்மாவையே தமக்குள்ளே விளையும் ஆநந்த மாகவும், அந்தப் பிரத்தியகாத்மாவையே தாம் நிலைத்து நின்று விளை யாடு மிடமாகவும், அந்தப் பிரத்தியகாத்மாவையே தமக்குத் திருஷ் டியாகவும் கொண் டனுபவியா நிற்கும் யோகிகள் அந்தப் பிரத்திய காத்மாவே யாகி விளங்குவர்; தாம் இயல்பாகவே பெற்றுள்ள பரமா நந்த வடிவமாகவே விளங்குவர்.*

பிரஹ்ம ஞானத்திற் கந்தரங்க சாதனமாயுள்ள தியான யோகத்தைச் சங்கிரகமாகக் கூறல்.

(இது 6-வது அத்தியாயத்தில் விரிவாகக் கூறப்படும்.)

சுரோத்திர முதலிய இந்திரிய மைந்தையும் சப்தாதி விஷயங்க ளிற் செல்லாவாறு தடுத்து, தமது பார்வை யிரண்டையும் புருவ நடு வின்கண் பொருந்தவைத்து, அதோ முகமும் ஊர்த்துவமுகமுமாக முறையே ஓடிக்கொண்டிருக்கின்ற அபான வாயுவையும் பிராண வாயு வையும் தமதப்பியாச வலியால் அசையாவாறு கும்பகஞ் செய்து; ஐந்து கூறுபாடாயுள்ள சப்தாதி விஷயங்களின்மீ தெழுகின்ற இச் சையை யடக்கி, மனத்தில் அடிக்கடி எழுகின்ற பயத்தையும் கோபத் தையும் மனத்தை யடக்குதல் வாயிலாக வடக்கி, உணவு கொள்ளுதல் உலாவுதல் என்றற் றொடக்கத்தனவற்றை மிகுதல் குறைத லில்லாது சமமாய்க் கொண்டொழுகும் யோகிகள் யோகசித்தி பெற்று இச்சம் சார வலையினின்றுந் தப்பி, பிறப்பில்லாது விளங்குவார்கள். ¶

---

* பிரத்தியக் - உள். பிரத்தியகாத்மா - சரீரத்திரய விலட்சணமாய், அவஸ் தாத்திரய சாட்சியாய், சச்சிதாநந்த வடிவமாய், பிரஹ்மத்திற்கு வேறுகாதுள்ள ஆத்மா. சப்தாதி விஷயங்களைத் துச்சமாகக் கருதி, காமக் குரோதங்களைத் தடுத்து, எதனிலும் விருப்பமில்லாதிருப்பவர் தமது பிரஹ்ம சொரூப ஆத்மாவையே தமக் குள் விளையும் ஆநந்தமாகவும், தாம் விளையாடுமிடமாகவும், தமக்குத் திருஷ்டி யாகவுங் கொண்டனுபவித்து, சச்சிதாநந்த வடிவமாகவே விளங்குவரென் றருச் சுனனுக்குப் பகவான் கூறினரென்க.

¶ விஷய விருப்பத்தை யொழித்து, பார்வை யிரண்டையும் புருவ நடுவின் கண் நிறுத்தி, அபான பிராண வாயுக்களிரண்டையும் நாசிக்குள் சமமாக நிரோ தம் செய்து, இந்திரியங்களையும் மனத்தையும் பிரயத்ன பூர்வகமாக வடக்கி, பயத் தையுங் கோபத்தையு மொழித்துயோகாப்பியாசஞ் செய்பவர் யோக சித்திபெற்று இச்சம்சார வலையினின்றும் தப்பி, பிறப்பிறப்பில்லாது பரமாநந்த வடிவமாக விளங்குவரென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினரென்க. அதோ முகம் - கீழ் முகம்; ஊர்த்துவ முகம் - மேல் முகம்; நிரோதம் - அடக்குதல்.

(அருச்சுனு ! நீ இந்த யோகி புருஷர் எதனையறிந்து முத்தியடை கின்றன ரென்று வினவுதல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

பிராமணுதி ஜாதி யபிமானமுடையார் செய்யும் ஜ்யோதிஷ்டோம முதலிய கர்மங்களுக்கும், அறிவுடையோர் தமது ஜன்மாந்தர பாவம் நிவிர்த்தியாதற் பொருட்டுச் செய்யும் கிருச்சிரம் சாந்திராயண முதலிய தவங்களுக்கும், ஏழுலகங்களுக் கும் பொருந்திய இடமாயும், உற்பத்தி நாசமின்றி எல்லாப்பொருளுமாயும் உள்ள என்னை வேதங்கூறி முடித்த வாறே உள்ளவாறு தமது ஆன்ம சொரூபமாக யோகசித்தி வாயிலா யுணர்ந்தவர், ஜன்ம காரணமாய அஞ்ஞானமில்லாமையால், மீண்டும் பிறத்தற்குரியராகார்; இதனை நீ அறியக்கடவாய். *

5—ஞான கரும அத்தியாயம் முற்றிற்று.

6—வது யோக அத்தியாயம்.

ஐந்தாவது அத்தியாயத்தி னிறுதியிற் கூறிய யோகார்த்தங்களை விரிவாகக் கூறியருளுதற்பொருட்டு, இவ்வாறுவது அத்தியாயம் பகவானு லாரம்பிக்கப்படுகின்றதென்க.

சித்த விருத்தி நிரோதமென்னும் யோகாப்பியாசஞ் செய்யும் மனமுடையவரது யோகாப்பியாசத்தின் கண்ணே ஏகரசப் பொருளா யிருந்து விளங்கியும், காளிங்கனென்னும் சர்ப்பராஜன் முடியின்மீது

* ஜ்யோதிஷ்டோமாதி கருமங்களுக்கும், கிருச்சிராதி தவங்களுக்கும், உலக மேழிற்கும் பகவான் பொருந்திய இடமாயிருக்கின்றுரென்பதனுல், பகவானது சந்நிதான விசேஷத்தால் சர்வ வியாபாரமும் நடக்கின்றனவென்பது பெறப்படுவ தாமென்க.

யோகிகள் தமது யோகப்பியாசத்தின் பெருக்கத்தால் சச்சிதாநந்த வடிவமாய் ஏகரசமாய், சர்வாத்மாவர்யுள்ள என்னைத் தமதாத்மாவாக வறிந்து, அதனுல் பிறப் பின் காரணமாய அவித்தையைக் கெடுத்து, யானுக விளங்குவரென் றருச்சுன னுக்குப் பகவான் கூறினுரென்க.

பகவான் பல்வேறு திறத்தனவாயுள்ள சாதனுப்பியாசங்களாலுண்டாவதும், அதிகாரிகள் யாவர்க்கும் மோட்ச சாதனமா யிருப்பதுமாய தமது சொரூப ஞானத்தை இவ்வைந்தாவதத்தியாயத்தில் அருச்சுனனுக் குபதேசஞ் செய்தா ரென்க.

நின்று நடனஞ் செய்தருளிய பகவான் அருச்சுனனுக்கு மீண்டும் யோகார்த்தங்களை விரிவாகக் கூறத்தொடங்கி, அருச்சுனா! நீ என்னை நோக்கி, தேவரீர் சர்வ கருமங்களும் தியாகஞ் செய்யத்தக்கனவா மென்று கூறினமையின், அவை சந்நியாசத்தினும் யோகத்தினும் மிகக் கீழாயினவாமென்பது பெறப்படுகின்றது; அதனால்; யான் யுத்த வடிவக் கருமத்தில் பிரவேசிப்பது அநாவசியகமாமன்றோ? என்னை ஏன் தாங்கள் அடிக்கடி யுத்த வடிவக் கருமத்தில் பிரவேசிக்குமாறு வற்புறுத்துகின்றீரென்று வினவுதல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.

அருச்சுனா! தான் செய்தற்குரிய நித்திய நைமித்திக கருமங்களின் பயனை விரும்புவதொழித்து, இவற்றைவிடாமல் சிரத்தா பக்தி பூர்வகமாகச் செய்துவருகின்றவனே பயனை விரும்பி அக்கினிகொண்டு யாகஞ் செய்பவருள் சிறந்தவனாவன்; அவனே தான் கடைத்தேறக் கருதிய யோகியுமாவன், சந்நியாசியுமாவன்.†

நிஷ்காம கருமஞ் செய்பவன் யோகியுமாவன், சந்நியாசியுமாவனென்று கூறுவதற் கேது கூறல்.

அருச்சுனா! தாம் செய்யுங் கருமங்களால் வரத்தக்கனவாய சுவர்க்காதிப் பயன்களிலுள்ள சங்கற்ப மனைத்தையும் தியாகஞ் செய்யாதவர் யாவராயிருப்பினும், அவர் சிறந்த யோகிகளாகமாட்டார்; அவர்கள் யோகிகளாவாராயின், அதற்குக் காரணம் அவர்கள் சுவர்க்காதிப்

---

†அருச்சுனா! சுவர்க்க முதலிய பயனை விரும்பாது சாஸ்திரங் கூறியவாறு அக்னிஹோத்திர முதலிய நித்திய நைமித்திக கருமங்களைச் சிரத்தா பத்தியோடு செய்கின்றவன் கருமியே யாயினும், கருமி யாகான், யோகியுஞ் சந்நியாசியுமாவான். அதனால், நீ உனது சுதர்மமாயுள்ள யுத்த வடிவக் கருமத்தைச் செய்யக்கடவாயென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினாரென்க.

யோக மென்பது சித்தத்தின்கண் விட்சேபமில்லாமையாம்; விட்சேபம் - மனமொருமுகமாகாதிருத்தலாம்; சந்நியாசமென்பது தியாகமாம்; தியாகம்-விடுதல்.

நிஷ்காம கருமஞ் செய்பவனிடத்துத் தான் செய்யும் கருமங்களின் பயனை விரும்பாமையாகிய தியாகமும், பயனை விரும்புதல்வடிவ விட்சேபமுமின்மையின், அவன் அவற்றால் சந்நியாசியும் யோகியுமாயிருக்கின்றானென்று கூறப்படுகின்றானென்க. இதனால், நிஷ்காம கருமஞ்செய்பவன் உண்மை நோக்கில் சந்நியாசியும் யோகியு மாகாவிடினும், சகாம புருஷரை நோக்க யோகியும் சந்நியாசியுமா யிருக்கின்றானென்பதிங் குணர்தற்பாலதாம்.

பயன்களிலுள்ள தமது சங்கற்ப மனைத்தையு மொழித்தலேயாம். சங்கற்பத் தியாகமே ஒழிவதில்லாத சிறந்த யோகமாம். இப் பாகுபாட்டை நீ யாராய்ந்தறியக் கடவாய்.‡

(அருச்சுனா ! நீ தேவரீர் இதுகாறும் திருவாய்மலர்ந்தருளினமையால், நிஷ்காம கருமம் அவசியம் செய்யத் தக்கதாமென்பது பெறப்பட்டது ; அதற்கு முடிவில்லையோ வென்று வினவுதல் கூடும் ; அதற்கு விடை கூறுகின்றேன். கேட்கக்கடவாய்.)

தாம் கடைத்தேறுமாறு யோகாப்பியாசஞ் செய்ய முயலுகின்றவர்க்கு, அதனைத் தம்வச மாமாறு செய்வதற்குக் காரணமா யிருப்பது பயன் நோக்காது செய்யும் நித்திய நைமித்திக கருமமேயாம். உள்ளபடி யோகாப்பியாசம் சித்தியானபின், (ஞானநிஷ்டை யடைதற் பொருட்டு அவர் மேற்கொள்ளத் தக்கது சந்நியாசமேயாம். அவர் யோகாப்பியாசஞ் சித்தித்தபின், சந்நியாசங் கொள்ளாது) உண்மையாகவே செய்யும் நித்திய நைமித்திக கருமங்கள் அவர் செய்யும் யோகாப்பியாசத்திற்குத் தடையாகவே யிருப்பனவாம். ¶

(அருச்சுனா ! நீ தேவரீர் கூறிய அதிகாரி புருஷன் எந்த யோக சித்தியைப்பெற்றுச் சர்வ கரும பரித்தியாகஞ் செய்தற்குரியவனாகின்றானே, அந்த யோகசித்தியை அவனடையும்கால மெப்போதென்று வினவுதல்கூடும் ; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

---

‡நிஷ்காம கருமஞ்செய்பவன் தான் செய்யும் கரும பலத்திலிச்சையற் றிருத்தலின், சந்நியாசியாவன் ; அதனால், அவன் மனம் சலித்தலில்லா திருத்தலின், யோகியுமாவன்; இக்காரணங்களால் நிஷ்காம கருமஞ் செய்பவன் சந்நியாசியென்றும் யோகியென்றும் சொல்லப்படுகின்றானென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

¶விஷய சுகங்களை விஷம்போலக்கருதி வெறுத்திருப்பவர்க்கே யோகாப்பியாசம் சித்திப்பதாம்; அது சித்தித்தபோது, அந்தக்கரண சுத்தி சித்திப்பதாம் ; அது சித்தித்தபோது, சந்நியாசஞ் சித்திப்பதாம்; அது சித்தித்தபோது சிரவண மனன நிதித்தியாசன வாயிலாக ஞான நிஷ்டை சித்திப்பதாம் ; அது சித்தித்தவர்க்கே மோட்சஞ் சித்திக்கும்; யோகாப்பியாசஞ் சித்திக்கும்வரை நிஷ்காம கர்மங்களை அவசியஞ் செய்தல்வேண்டும்; யோகாப்பியாசஞ் சித்தித்தபோது அவற்றைச் செய்வதநாவசியகமாம் ; அவை யோக விக்கினமாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

அருச்சுன! எப்போது அவ்வதிகாரி புருஷன் இழிதகைமை யுடையனவாய சப்த பரிச முதலிய விஷயக் கூறுபாடுகளிலும் பல் திறத்தனவாயுள்ள கருமப் பயன்களிலும் இச்சை வைத்தலாகிய சங்கற்பமில்லாதவனாகின்றானே அப்போது இயல்பாகவே யோகசித்தி யுடையவனாகின்றான். †

யோகசித்தியுடையவர் தம்மைத் தாமே இச்சம்சார வடிவச் சாகரத்தினின்றும் மோட்ச வடிவக் கரையிலேற்றுதற் குரியவராகின்றனர்; மற்றவர் தம்மைத் தாமே இச்சம்சாரவடிவச் சாகரத்தில் மேன்மேலும் மூழ்கச் செய்தற் குரியவராகின்றனரெனக் கூறல்.

அருச்சுன! ஒவ்வொருவர்க்கும் தமது மேன்மையைத் தாமே யல்லாமல் வேறு செய்தற்குரியார் யாவர்? ஒருவருமிலர். ஒவ்வொரு வர்க்கும் தமது கீழ்மையைத் தாமே யல்லாமல் வேறு செய்தற்குரி யார் யாவர்? ஒருவரு மிலர். கொடுநெறியிற் சென்றொழுகுங் காலத்து ஒவ்வொருவர்க்கும் தாமே யல்லாமல் வேறெவர் உண்மையாய பகை வரா யிருக்கின்றனர்; ஒருவருமிலர்; செந்நெறியிற் சென்றொழுகுங்

---

† யோகசித்தி-யோகாப்பியாசம் முற்றுப் பெறுதல். சப்த பரிச முதலிய விஷயங்களிலும் கருமப் பயன்களிலுமுள்ள இச்சையே யோகாப்பியாசம் முற்றுப் பெறுதற்குத் தடையாயிருப்பதாம்; அவ்விச்சை யெப்போதொழிகின்றதோ அப்போது யோகாப்பியாசம் முற்றுப் பெறுவதாம்; யோகசித்தி யுடையவன் செய்தற்குரிய கருமம் ஒன்றுமில்லையென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினா ரென்க.

சப்த முதலிய விஷயங்களும் நித்திய நைமித்திக கருமங்களின் பயன்களும் மித்தையாம்; துக்க சாதனமாயிருப்பனவா மென்னும் விவேகமும், ஆத்மா அகர்த்தாவாயும் அபோக்தாவாயும் பரமாநந்த போதவடிவமாயுமிருக்கின்றதென்னு முள்ளுணர்ச்சியு முடையவராய் யோகாப்பியாசஞ் செய்பவர்க்கே சத்த முதலிய விஷயங்களிலும் கருமப் பயன்களிலும் இச்சை வைத்தலாகிய சங்கற்பமொழிதல் வாயிலாக யோகசித்தி யுண்டாமென்பது இங்குணர்தற்பாலதாம்.

காலத்து ஒவ்வொருவர்க்கும் தாமே யல்லாமல் வேறெவர் உண்மை யாய உறவினராவர்; ஒருவருமிலர். ‡

(அருச்சுனா! நீ யாவர் தமக்குத் தாமே உறவினராவர்; யாவர் தமக்குத் தாமே பகையினராவ ரென்று வினவுதல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா! தானினிப் பிறந்திறவா வண்ணம் தன் மனத்தைச் சப்த முதலிய விஷயங்களிலும் கருமப் பயன்களிலும் இச்சை வைப்ப தொழிந் தடக்குகின்றவ னெவனோ அவன் தனக்குத்தானே யெப் போதும் உறவினனாயிருக்கின்றான்; தம் மனத்தைச் சப்த முதலிய விஷயங்களிலும் கருமப் பயன்களிலு மிச்சைவைப்பதொழிந் தடக்குத லில்லாதவரெவரோ அவர் தமக்குத் தாமே யெப்போதும் பகைவரா யிருக்கின்றனர். யாவரும் ஒழிவின்றி யடைகின்ற சீதம் உஷ்ணம், சுகம் துக்கம், மானம் அவமானமென்றற் றொடக்கத்துத் துவந்துவங் களைச் சிறிதுங் கருதுதலின்றி, தமது நிஜவடிவமாயுள்ள ஆத்மா வொன்றனையே யெப்போது மறவாது விரும்பி யோகாப்பியாசஞ் செய்பவரிடத்து, ஞான வடிவமாயுள்ள ஆத்மா விளங்குவதாம்; அங்

‡ ஒவ்வொருவரும் தமக்கு மேன்மையையோ கீழ்மையையோ செய்துகொ ள்ளுவதற்குக் காரணராயிருப்பவர் தாமேயன்றி மற்றவரல்லர்; ஒவ்வொருவரும் தாம் தீவினைகளைப் புரியும்போது தமக்குத்தாமே பகைவராயிருக்கின்றனர்; நல்வி னைகளைப் புரியும்போது தமக்குத் தாமே நட்பினராயிருக்கின்றனர்; ஒவ்வொருவ ரும் தம்மை யுயர்த்துதற்கும் தாழ்த்துதற்கும் தாமே காரணமாயிருக்கின்றனர்; மற்றவரல்லர்; யோகசித்தியுடையவரோ தம்மை யுயர்த்துதற்குத் தாமே காரண ராயிருக்கின்றனர்; தமக்குத் தாமே நட்பினராகவு மிருக்கின்றனர்; அஃதில்லா தாரோ தம்மைத் தாழ்த்துதற்குத் தாமே காரணராயிருக்கின்றனர்; தமக்குத்தாமே பகைவராயுமிருக்கின்றனரென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரெனக.

இங்கு மேன்மையென்பது சம்சார வடிவச் சாகரத்தினின்றும் மோட்ச வடிவக்கரையிலேறுதலாம்; கீழ்மையென்பது சம்சார வடிவச் சாகரத்தில் மேன் மேலு மூழ்குதலாம்.

சப்த முதலிய விஷயங்களிலும் கருமப் பயன்களிலு மிச்சை யொழிதல் வாயிலாக யோகசித்தி பெற்றவன் ஆத்மஞான வாயிலாக ஜன்ம காரணமான அஞ்ஞானத்தை யொழித்துப் பரமானந்த வடிவமாக விளங்குவானென்பதிங் குணர்தற்பாலதாம்.

னம் விளங்குகின்ற ஆன்மா சீதம் உஷ்ணமுதலிய வடிவமாகவிளங்குகின்ற இவ்வுலகவடிவமாயுள்ள மாயை மறைக்க, மறைவதில்லையாம். *

யோகசித்தியுடையான் உலக வியவகாரத்தில் தாக்கற்றிருப்பானெனல்.

அருச்சுனா! சற்குரு வாயிலாகக் கற்றுணர்தற்குரிய ஞானநூல் பலவற்றையும் ஐயந்திரி பில்லாது கற்று, அந்நூல்களால் உணர்தற்குரிய பயன்களை யுள்ளவாறுணர்ந்து, சப்த முதலிய விஷயங்களில் விரைந்தோடும் சுரோத்திரமுதலிய இந்திரியங்களைப் பிரயத்தனபூர்வகமாக வடக்கி, (சப்த முதலிய விஷயங்கள் தன்னருகே வந்தும், அவற்றை யனுபவித்தற்குரிய சாமர்த்தியம் தன்னிடத்திருந்தும் அவற்றால் தனது) யதார்த்த நிலையினின்றும் பிறழ்தலில்லாது, ஓட்டையும் பொன்னையும் மண்ணென்னும் ஒரு பொருளேயாகச் சமமாக நோக்குகின்றவனே யோகசித்தி யுடையவனாவன். அவனே இவ்வுலகத்தில் யாவரும் யானெனதென்று வியவகரித்தலையும் பெரிய மாயக் கூத்தினைச் செய்யாது, தான் அக்கூத்தினைச் சாட்சியாக விருந்து கண்டு நிச்சலமாகவே யிருப்பான். ¶

---

* மனத்தை யடக்குதலென்பது இங்கு இந்திரியங்களையும் உடம்பையு மடக்குதலையு முணர்த்திநின்றது. மனம் வாக்குக் காயமென்னும் திரிகரணத்தையும் எதனிடத்து மிச்சையில்லாது பிரயத்தன பூர்வகமாக அடக்குகின்றவன் தனக்குத்தானே யெப்போதும் உறவினனாயிருக்கின்றான்; மன முதலியவற்றை யிங்ஙன மடக்காதவர் தமக்குத்தாமே யெப்போதும் பகைவரா யிருக்கின்றனர். மனத்தைக் கலங்கச் செய்வதாகிய சீதம் உஷ்ணம், சுகம் துக்கம், மானம் அவமான மென்றற்றொடக்கத்துத் துவந்துவங்களில் சமபுத்தி வைத்து, மனது தமது வசமாமாறு யோகாப்பியாசஞ் செய்கின்றவர்க்கு அவர் தம் நிஜவடிவ ஆத்மா சொப்பிரகாசமாக விளங்குவதாம்; அவ்விளக்கம் துவந்துவங்கள் சம்பவித்த விடத்தும் மறைவதில்லையாம்; அவ்விளக்க முடையவர்க்கே பிறப்பில்லையாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

¶ சற்குரு வாயிலாகக் கற்றற்குரிய நூல்களைக் கற்று, அவற்றின் பயனை யுள்ளவாறுணர்ந்து, இந்திரியங்களைப் பிரயத்தின பூர்வகமாக வடக்கி, சப்த முதலிய விஷயங்களுள் எதனாலும் கலங்குவதில்லாது யோகாப்பியாசஞ் செய்பவன் யோகசித்தி பெறுதற்குரியவனாவன்; யோகசித்தி பெற்றவன் ஓட்டையும் பொன்னையும் ஒரு பொருளாகவே வெறுப்பு விருப்பின்றிக் காண்பான்; உலக வியவகாரத்தில் பற்றில்லாதவனா யிருப்பன்; சர்வ வியவகாரங்கட்கும் சாட்சியாய் நிச்சலமாயிருப்பனென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

சத்துரு மித்துரு முதலியோரிடத்துச் சமபுத்தி யுடையவனே யோகிகளுள் சிறந்தவனுவனெனல்

பிரதி யுபகாரத்தை விரும்பாது பிறர்க்குபகாரஞ் செய்யும் சுகிர்தன், அன்புள்ள மித்துரு, கொடிய சத்துரு, எதற்குஞ் சித்தங் கலங்குதலில்லாது யாவரிடத்தும் சம நோக்குடையவனுயுள்ள மத்தியஸ்தன், உறவினன், நிந்திப்பவன், சுருதி ஸ்மிருதிகள் கூறுகின்றவாறு புண்ணிய கருமங்களைச் செய்யும் சாது, பாவ கருமங்களைச் செய்யும் பாவியென்றுள்ள இவரிடத்துச் சம நோக்குடையவனுயிருப்பவனே யோகிகளுள் சிறந்தவனுவன். †

யோகாப்பியாசஞ் செய்ய முயலுகின்றவன் செய்தற்குரியனவற்றைக் கூறல்.

அருச்சுன! நீ யான்கூறிய மிகமேன்மையுடையதாகிய இந்தயோகத்தை அப்பியாசஞ்செய்ய முயலுகின்றவன் அதன்கண் நிலைத்து நின்று செய்யும் சாதனங்களைக் கூறுகின்றேன், அவற்றைக் கேட்கக்கடவாய். அவன் கெடுவதின்றி மேன்மேலும் பெருகுகின்ற விஷயவிருப்பத்தை (சப்தாதி விஷயங்கள் அநித்தியமாயிருப்ப துணர்தல் வாயிலாக) முற்றுமொழித்து, யோகாப்பியாசஞ் செய்வதற்குத் தடையாயுள்ளனவற்றுள் எதனையும் தனக்கென்று வேண்டுவதொழிந்து, யோகாப்பியா

---

† சுகிர்தன் முதலியோரிடத்துச் சம நோக்குடையவனு யிருப்பவன் சர்வப்பிராணிகளிடத்துஞ் சமநோக்குடையவனு யிருப்பனென்பதிங் குணர்தற்பாலதாம்.

(1) பிரதி யுபகாரத்தையும் பூர்வ சிநேகிதத்தையும் பூர்வ சம்பந்தத்தையுங் கருதாது பிறர்க்குபகாரஞ் செய்பவன் சுகிர்தனுவன்; (2) பூர்வ சிநேகிதத்தைக் கருதிப் பிறர்க்குதவி செய்பவன் மித்துருவாவன்; (3) தான் பிறர்க்குச் செய்த கொடுஞ் செயல்களைக் கருதாது மீண்டுமவர்க்குக் கொடுஞ் செயல்களைத் தன்னியற்கையாகச் செய்து வருகின்றவன் சத்துருவாவன்; (4) வாதிப் பிரதிவாதிகளிருவர்க்கும் நன்மைசெய்ய விரும்புகின்றவன் மத்தியஸ்தனுவன்; (5) அற்ப சம்பந்தங்கருதிப் பிறர்க்குபகாரஞ் செய்பவன் உறவினனுவன்; (6) பிறர் தனக்குச் செய்த தீமையைக்கருதி, அவரைப் பழிப்பவன் நிந்திப்பவனுவனென்பது மிங்குணர்தற்பாலதாம். சமநோக்கென்பது இங்குச் சுகிர்தன் முதலிய உயர்திணைப் பொருள்களிடத்தும், ஆடு-மாடு முதலிய அஃறிணைப் பொருள்களிடத்தும் விருப்பு வெறுப்பில்லாதிருத்தலாம்.

சஞ் செய்தற்குரியவிடங்களாமென்று யோக சாஸ்திரங்கள் கூறுகின்ற மலைக்குகைமுதலாகவுள்ளவிடங்களுள் இயற்கையாகவாவது செயற்கையாகவாவது சுத்தமாயுள்ள ஓரிடத்தில் வந்து, கொசுகு - மூடு முதலிய பிராணிகள் வருத்தந் தருவதில்லாத அந்த விடத்தில், அதிக வுயரமாகவேனும் அதிகத் தாழ்வாகவேனு மில்லாதவாறு தருப்பையைச் சமமாகப் பரப்பி, அதன் மீது மிக மிருதுவாயுள்ள மான்தோலையாவது புலித்தோலையாவது விரித்து, அதன்மீது மிக மிருதுவாயுள்ள வஸ்திரத்தை விரித்து, தான் அவ்வாறுசெய்த அவ்வாசனத்தின்மீது பதுமாசனமிட்டுட்கார்ந்து, காண்டல் கேட்டல் முதலிய வெவ்வேறு வியாபாரங்களைச் செய்வதோடுகூடிய கண் காது முதலிய இந்திரியங்களை யடக்கி, மிகக் கலக்கமுடைய மனத்தையும் விரிந்தோடாவாறு விழிப்பாக வடக்கி, அந்தக்கரண சுத்தியின்பொருட்டு யோககுரு கூறியவாறு மனத்தை யொருமுகமாக்குத லென்னும் யோகாப்பியாசஞ் செய்தல்வேண்டும். *

ஆசனத்திருந்து யோகாப்பியாசஞ் செய்பவன் செய்யத்தக்கனவற்றைக் கூறல்.

அருச்சுனா ! ஆசனத்திருந்து யோகாப்பியாசஞ் செய்ய முயலுகின்றவன் தான் செய்யுமாறு மேற்கொண்ட இவ்வியோகத்தை எத்தடைக்கு மஞ்சாது செய்தல் வேண்டுமென்னுந் திட நிச்சயமுடையவனாய், தலை கழுத்து உடம்பு என்னுமிந்த மூன்றனையும் தண்டம்போலச் சமானமாகவும் அசையாமலும் நிறுத்தி, அவை அங்ஙனமிருக்கும் நிலையில் தான் சோர்விலாதிருந்து, தன் கண்ணிரண்டையும் தன் மூக்கினுனியின்மீது செவ்வையாக நிறுத்தி, அலைகின்ற கடல்போலச் சஞ்சல வடிவமாயுள்ள ஆசையும், அதனாலுண்டாகின்ற உண்மையான பயமும் தன்னைவிட்டொழியவும், அலைகின்ற மனமானது ஆத்மாவை நோக்கிநின்றடங்கவுஞ்செய்து, சர்வாத்ம வடிவமாயுள்ள என்னைப்பரம்

---

* அந்தக்கரண சுத்தியாவது மனம் ஆசை கோபமுதலியன வில்லாது ஆத்மாவையே நோக்கி நிற்பதற்குத் தகுதியுடைய தாவதாம். யோகாப்பியாசமாவது மனத்தை உலக நோக்கஞ் சிறிதுமின்றி ஆத்மாவையே நோக்கி நிற்கச் செய்தலாம்.

பொருளாக வுணர்ந்து, என்னிடத்துச் சித்தத்தை நிலைபெறச் செய்திருப்பதே யோகமாம். ‡

பகவான் தாமருளிச்செய்த சம்பிரஞ்ஞாத வடிவ யோகத்தின் பயனையும் ஆகாராதி நியம மில்லாவிடத்து அது வாய்க்கா தென்பதையுங் கூறல்.

அருச்சுனா! அப்பியாச வைராக்கியங்களின் மிகுதிப்பாட்டால் சித்தியாதற்குரிய யோகத்தை யான் கூறிய இந்நியமத்தின்படி மேற்கொண்டு, எப்போதும் சோர்வின்றி அப்பியாசஞ் செய்பவர் முடிவில் மனவிருத்தியற்ற நிலையைப் பெறுதல் வாயிலாக மோட்ச சொரூபமாயுள்ள என்னையே வேற்றுமை யின்றி யடைவர்; ஆனால், இந்த யோகம் உணவின்கண் மிக விருப்பமுடையவராய் அதனை மிகுதியாக உண்பவரும், உணவினை முற்றும் விட்டிருப்பவரும், மிகுதியாக நித்திரை செய்பவரும், நித்திரையை முற்று மொழித்திருப்பவருமாய இவர்க்குச் சித்தியாவதில்லையாம். †

---

‡ யோகாப்பியாசஞ் செய்பவன் தலை கழுத்து உடம்பென்னு மிம்மூன்றையும் தண்டம்போலச் சமானமாகவும் அசையாமலு மிருக்கச் செய்தல் வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் பின் பக்கத்திலுமுள்ள பொருள்களைப் பாராமலும் தீண்டாமலு மிருத்தற்கும், கொசுகு, மூடு, எறும்பு முதலியவற்றா லுண்டாகும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதற்குமாம்; கண்களை மூக்கின் நுனியின்மீது நிறுத்துதல் எதிரேயுள்ள பொருள்களை நோக்காதிருத்தற்காம். வெளியிந்திரியங்களுள் கண் தலைமையாயிருப்பதுபற்றி, அஃதிங்குக் குறித்துக் கூறப்பட்டது. கண் உருவ முதலியவற்றைப் பாராதிருப்பதுபோல, காது முதலியனவும் சப்த முதலியவற்றைக் கேளாதிருத்தல் முதலியனவா யிருந்தாற்றான், யோகம் சித்திப்பதா மெண்க.

யோகாப்பியாசஞ் செய்பவனுக்குக் கருமங்களைச் செய்யாதொழிதல் எனக்குரியதோ அன்றோவென் றுண்டாகும் சங்கையே இங்குப் பயமாமெண்க.

இங்குக் கூறிய யோகம் சம்பிரஞ்ஞாத சமாதியாம்.

† ஏகாந்தமான விடத்தின்கண் சுகாசனத்திருந்து, சித்தத்தின்கண் பழக்க வழக்க வசத்தாலெழும் காமாதி விருத்திகளைப் பிரயத்தன பூர்வகமாக வடக்கி யோகாப்பியாசஞ் செய்பவன் பரமாநந்த வடிவமாக விளங்குகின்றான்; அவனிடத்து உணவின் நியமமும் நித்திரையின் நியமமுமில்லையாயின், அவனுக்கது சித்தியாவதில்லையாமென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினாரெனக.

உணவினை மிகுதியாக உண்பவர்க்கும்,முற்றுமுண்ணாதிருப்பவர்க்கும்,உண்ணுமளவாகவுண்ணாது மிகக் குறைவாக வுண்பவர்க்கும், நித்திரையை வேண்டிய

ஆகாராதி நியமமில்லாது யோகாப்பியாசஞ் செய்பவர்க்கு அது சித்தியாவதில்லையா மென்று கூறிய பகவான் அதனை வற்புறுத்துதற் பொருட்டு, ஆகாராதி நியமமுடைய வர்க்கே அது சித்தியாமெனக் கூறல்.

அருச்சுனா! நித்திரையும், உணவும், போதல் வருதல் முதலிய வியாபாரங்களும் மந்திர ஜபம் வேதாந்த பாடமுதலிய வியாபாரங் களுமாய இவற்றை யோகநூல் கூறிய நியமத்திற்கு அதிகமாகாமலும் குறைவாகாமலும் மேற்கொண்டு யோகாப்பியாசஞ் செய்பவனே துக்க மனைத்தையும் கெடுப்பதற்கேற்ற சாதனமாயுள்ள அச்சமாதி யோகத் தைத் தன்னிடத்துத் தவறாதிருக்கச் செய்யுந் தன்மை யுடையவ னாவன். எப்பொழுது அவனது சித்தம் அவனோடு பொருந்தியுள்ள இந்திரியங்களின் வாயிலாக விஷய போகத்தை யனுபவிக்கப்போவ தொழிந்து, அவன்றனது நிஜசொரூபமாயுள்ள ஆத்மாவினிடத்துச் சென்றடங்கி யாதொரு வியாபாரமுமில்லா திருக்குமோ, அப்பொழுது அவனைத் தன் வசமாய யோகத்தில் நிலைபெற் றிருக்கின்றானென்று ஐயந்திரிபின்றிக் கூறலாம். *

வளவாகச் செய்யாது அதனை முற்றும் விட்டிருப்பவர்க்கும், நோய் தவறாதுண் டாவதாம்; நோயுடையவர் யோகாப்பியாசஞ் செய்தற்குரியவராவ தில்லையாம். மிகுதியாக நித்திரை செய்பவர் சோம்பலையே தமக்குச் சொந்தமாக வுடையவரா யிருத்தலின், அவரும் யோகாப்பியாசஞ் செய்வதற் குரியவ ராவ தில்லையா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

* யோகாப்பியாசஞ் செய்பவன் தன்வயிற்றி னரைப் பாகத்தை உணவால் நிரப்பி, காற்பாகத்தை நீரால் நிரப்பி, மற்றைக் காற்பாகத்தைப் பிராணவாயு நன்றாக வுலாவ வைத்தல் வேண்டுமென்பது ஆகாரநியமமாம்; சூரியன் அஸ்தமித்த காலந்தொடங்கி, அவனுதயமாமளவுமுள்ள இராக்காலத்தை தம்முள்ளொத்த மூன்று பாகமாக வகுத்துக் கொண்டு முதற்பாகத்திலும் கடைப் பாகத்திலும் நித்திரை செய்வதொழிந்து, இடைப்பாகத்தில் நித்திரை செய்தல் வேண்டுமென் பது நித்திரையி னியமமாம்; போதல் வருதல் முதலிய வியாபாரங்களை யோசனை தூரவளவிற்குள் செய்தல் வேண்டும், மந்திர ஜபம், வேதாந்த பாட முதலிய வற்றை வாக்கிந்திரியத்திற்கு வருத்தமுண்டாகாவாறு செய்தல் வேண்டுமென் பது வியாபார நியமமாம். இந்நியமங்களை மேற்கொண்டு யோகாப்பியாசஞ் செய் பவனது சித்தம் அதிசீக்கிரத்தில் ஆத்மாவின்கண் நிலைத்து நிற்பதாம்; சித்தம் அவ்வாறு நிற்குங் காலத்தில் அவன் சர்வ துக்கங்களுக்குங் காரணமாயுள்ள அஞ்

யோகாப்பியாசத்தால் ஒரு முகமாய மனம் அநிலம் (காற்று) சேராத விளக்குப்போல விளங்கும்; அதனையுடையவன் தவறாது பரமாநந்தமடைவானெனல்.

அருச்சுனா! யான் கூறிய இங்ஙியமப்பிரகாரம் யோகாப்பியாசஞ் செய்கின்ற யோகி புருஷனது சித்தம் காற்றில்லாத விடத்து அசையாதுள்ள விளக்குப்போல உலக விஷயங்களுள் எதனையும் நினைப்பதின்றி அவன் நிற்கச் செய்தவாறே யுள்ளவாறு நின்றசையாதிருப்பதாம். எப்பொழுது அவனது சித்தம் ஆத்மாவினிடத்துச் சென்று பிரிவின்றி நிற்கின்றதோ அப்பொழுது அவன் ஆத்மாவை யுள்ளவாறறிவதல்லாமல், பரமாநந்தத்தையு மடைகின்றான். ¶

ஒரு முகமாய சித்தமுடைய யோகி பரமாநந்த வடிவமாக விளங்குகின்றானென்பதற் கேது கூறல்.

அருச்சுனா! எந்த ஒன்று இந்தக் கண் முதலிய இந்திரியங்களுக்கு விஷயமாகாததாய் எல்லையில்லாத சுகமாயிருக்கின்றதோ, எந்தச் சுகத்தை யோகாப்பியாச வாயிலாகச் சென்றடைந்தவர் பின் அச்சுகத்தினின்றும் வேற்றுமையடையா திருக்கின்றனரோ, எந்தச் சுகத்தைப் பெற்றவர் இச்சுகத்தினும் மேலா யிருப்பதும் சமமா யிருப்பதுமாய பயன் வேறுண்டென்று கருதமாட்டாரோ, எந்தச் சுகம் யோகாப்பியாசத்தால் காமம் வெகுளி முதலியன வின்றிச் சுத்தமாயிருக்கும் புத்திக்கு விஷயமாயிருக்குமோ, அந்தச்சுகத்தின்கண்ணே நிலைபெற்றிருப்பவர்: வஞ்சகராயினோர் வேற்படையை யெடுத்துத் தம் மார்பின்கண் பாய்ந்துருவுமாறு வீசினாலும், தமதங்கங்கள் குறையுமாறு தம்முடம்பை

ஞானத்தைத் தன்னை யுள்ளவாறுணர்தலென்னும் தத்துவ ஞானத்தால் கெடுத்து, தான் மாத்திரமாக விளங்குகின்றானென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினாரென்க.

¶ யோகாப்பியாசஞ் செய்கின்றவன் அதனைச் சிரத்தா பத்தியோ டிடைவிடாது செய்து வருவானாயின், அவனது சித்தம் காற்றில்லாவிடத்து விளக்கு அசையாதிருப்பதுபோல அசையாதிருப்பதாம்; அவ்வாறுள்ள சித்தம் ஆத்மாவை யடைந்து நிற்பதன்றிப் பிறிதொன்றனை யடைந்து நிற்பதில்லையாம். இவ்வாறு நிற்கும் சித்தமுடைய யோகிபுருஷன் ஆத்மாவை உடல்பொறி முதலியவற்றினும் வேறாக உள்ளவாறுணர்ந்து அதனால் பரமாநந்த வடிவமாக விளங்குகின்றானென்று பகவான் அர்ச்சுனனுக்குக் கூறினாரென்க.

நெருப்புச் சூழ்ந் தெரிந்தாலும், கொடு விஷமுள்ள பாம்பு கடித்தாலும் உடல் பொறி முதலியவற்றிற்கு வேறாக ஆத்மாவை யுள்ளவாறறிந்திருத்தலால் அவற்றிற்குச் சிறிது மஞ்சார்; அவரது சித்தம் அப்போடு கூடிய உப்பு அப்பு மயமாய் விளங்குவதுபோல ஆநந்த மயமாகவே விளங்குவதாம். ‡

(அருச்சுனா! நீ தேவரீரருளிச்செய்த யோகத்தை எவ்வுபாயத்தாலப்பியசித்தல் வேண்டுமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகிறேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா! விவேகத்தோடு கூடிய மனத்தால் பொருள்பற்றியும் காமம்பற்றியு முள்ள சங்கற்பத்தா லுண்டாகின்ற ஆசை யனைத்தையும் அவற்றின் வாசனையோ டொழித்து, சுரோத்திர முதலிய இந்திரியங்களைச் சப்த முதலிய விஷயங்களிற் செல்லுதலினின்றுந் தடுத்து, உன் சித்தத்தின்கண் சத்திய ஞாநாநந்தகனமாய் விளங்குகின்ற பிரத்தியகான்மாவின்கண், (ஆசை யனைத்தையும் அவற்றின் வாசனையோ டொழிப்பதற்கும், இந்திரியங்களை விஷயங்களிற் செல்லாவாறு தடுப்பதற்குஞ் சாதனமாயுள்ள) அம்மனத்தினை அதனது சலனமான தொழிய, அதனோடு மாறுபடுவ தில்லாது பையப்பைய அவ்வாத்மாவோ டொன்றுமாறு நிறுத்தக்கடவாய். *

‡ கண் முதலிய இந்திரியங்களுக்கு விஷயமாகாது, பேரின்ப வடிவமாயுள்ள ஆத்மாவை யோகப்பியாச வாயிலாக வடைந்தவர் அவ்வாத்மாவாகவே விளங்குவர்; அவர் ஆத்மசுகத்திற்கு மேலாகவாவது சமமாகவாவது ஒரு சுகமுண்டென்று கருதுவதில்லை; அந்த ஆத்ம சுகம் யோகாப்பியாசத்தால் சுத்தமாய மனமுடையவர்க்கே வாய்ப்பதாம்; மற்றவர்க்கு வாய்ப்பதில்லையாம்; ஆத்ம சுகத்தை யடைந்திருப்பவர் தம்மைப் பகைவரென் றறியாமையால் நினைத்துத் தம்மீது பிறரெறியும் வேற்படை முதலியவற்றிற்கும், தம்மைச் சூழ்ந்து தீயெரிவதற்கும், தம்மை விஷப்பாம்பு கடிப்பதற்கும், பிறவற்றிற்கும் அஞ்சுவதில்லாதிருப்பர்; அவரது சித்தம் எப்போதும் சாந்தாகாரமாகவே யிருக்குமென்று பகவான் அருச்சுனனுக்குக்கூறினாரென்க. அப்பு—நீர்.

* இவ்வுலகத்தும் சுவர்க்காதி யுலகத்தும் அனுகூலமாகத் தோன்றும் பொருள்கள்மீ துண்டாகும் ஆசைகளை அவற்றின் வாசனையோ டொழித்தும், இந்திரியங்களை விஷயங்களிற் செல்லாவா றடக்கியும், ஆத்மாவினிடத்துச் சித்தத்தை அதனது சலனமொழிய, அதற்கு நட்பாகவே யிருந்து, பையப்பைய நிறுத்திவருதல் வேண்டும்; அங்ஙனம் சித்தத்தை நிறுத்திவரின், அஃது அதி

(அருச்சுனா! நீ உன் மனத்தைப் பிரத்தியக் ஆன்மாவின்கண் அதனோடொன்றுமாறு நிறுத்தும்போது, அஃதுன்னை யேமாற்றி இந்திரியங்களின் வாயிலாக விஷயங்களிற் சென்றோடி விடுவதாம்; அப்போது நீ மிக விழிப்பாக இருந்து,) சுரோத்திர முதலிய இந்திரியங்களின் வாயிலாகச் சப்த முதலிய விஷயங்களிற் சென்றோடி உலாவுகின்ற மனத்தை (சப்த முதலிய விஷயங்கள் அசுத்தமாகவும் துக்க சாதனமாகவும் அநித்தியமாகவு மிருக்கின்றனவென் றவற்றை யாராய்ந்துள்ள விவேகத்தாலும், அவற்றை யெனதென் றபிமாணிக்கும் அபிமானத்தை விடுவதாகிய வைராக்கியத்தாலும்,) உன் வசமாமாறு செய்து, அஃது உன் வசமாவதினின்றும் நீங்கி நித்திரை சோர்வு முதலியன வடைந்தொழியாவாறு கவனித்து, அதனை, உனது நிஜவடிவமாயுள்ள பிரத்தியக் ஆத்மாவின்கண் நிறுத்தி, யோகாப்பியாசத்திற்குத் தீமை தருவனவாயுள்ள விஷய மனைத்தையும் சிறிதுங் கருதுவதில்லா திருப்பதாகிய அப்பியாச மெதுவோ அவ்வப்பியாசத்தை நீ மேற்கொண்டொழுகக் கடவாய். ‡

சீக்கிரத்தில் உப்பளத்திற் சேர்ந்த மாங்காய் உப்பாகாரமாய் விடுதல் போல, ஆத்மாகாரமாய் விடுமென்று பகவான் அருச்சுனனுக் குபதேசித்தாரென்க.

சித்தத்தை ஆத்மாவின்கண் நிறுத்தும்போது அஃது தன்கணில்லாது பூர்வ வாசனையால் விஷயங்களை நோக்கி யோடுவதாம்; அப்போது சித்தத்தைப் பிடிவாதமாக அடக்குவதொழிந்து, அது தான்போன வழியே போக அதற்குச் சிறிதிடங்கொடுத்து, பின் அதனைத் தன் வசமாகச்செய்து, ஆத்மாவின்கண் பையப் பைய நிறுத்திவந்தால், அஃது ஆத்மாவின்கண் அதிசீக்கிரத்தில் பிறழாது நிற்றற் குரியதாய், அதனுகாரமாகி விடுமென்பதிங் குணர்தற்பாலதாம்.

‡ இந்திரியங்கள் வாயிலாக விஷயங்களிற் சென்றோடி யுலாவுகின்ற மனத்தை விவேகத்தாலும், வைராக்கியத்தாலும் திருப்பி யடக்கி, ஆத்மாவின்கண் தொடர்பாக நிறுத்தி வருதலே யோகஞ் செய்தற் குபாயமாம்; அங்ஙனம் செய்து வரும்போது மனம் பாகியாந்தர (வெளி-உள்) விஷயங்களுள் எதனையும் கருதாதிருத்தல் வேண்டும்; கருதுமாயின், அது சித்தியாவதில்லையாம்; மனம் எதனையும் நினைப்பதின்றி ஆத்மாவின்கண் தொடர்ச்சியாக நின்று, அதனுகாரமாய் விடுதலே நிர்விகற்ப சமாதியென்னும் அசம்பிரஞ்ஞாத சமாதியாம். மனம் ஆத்மாவில் நிலைத்து நிற்பதற் குபாயம் ஆசையை யொழித்து, இந்திரியங்களின் வழியாகவுள்ள மனத்தைத் தன் வசமாகச் செய்து, எதனையும் மறந்தும் நினையாதிருப்பதேயா மென்று பகவா னருச்சுனனுக்குக் கூறினாரென்க.

(அருச்சுனு! நீ யோகாப்பியாசத்தால் தன் சித்தத்தை உடல் பொறி முதலிய வனைத்திற்கும் பிரத்தியக்காய் (உள்ளாய்) உள்ள ஆத்மாவின்கண் பிறழாது நிறுத்தி, யாதொரு சங்கற்பமுமின்றி யிருப்பவனுக் குண்டாகும் பயன் யாதென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனு! (யோகாப்பியாசத்தின் மிகுதிப்பட்டால் தாமத குணத்தா லுண்டாகும் அஞ்ஞான மயமான மூடவிருத்தியும், ராசத குணத்தாலுண்டாகும் ராகமயமான குரோத விருத்தியும் நீங்கப்பெற்று, சத்துவகுணத்தா லுண்டாகும் வைராக்கியமயமான சாந்த விருத்தியைப் பெற்று, அதனல் களங்கமற்று நின்ற ஆகாயம்போல) தெளிந்த மனமுடையவனுய், மாயாப் பிரபஞ்சம் தன் சங்கற்ப மாத்திரமாக விருப்பதல்லாமல் அதற்கு வேருக விருக்கின்றதென்பதை யெவ்வகையாலும் கண்டுணர்வதில்லாதுள்ள தனது தத்துவ ஞானத்தால் தடையொன்றுமில்லாது, இந்த வுடம்புடன் கூடியிருந்தே அதற்கு வேருகவுள்ள (பிரத்தியகாத்மாவிற்கு எவ்வகையாலும் வேருகாதுள்ள) பிரஹ்மத்தை யடைந்து யோகசித்தி பெற்றவனே பரமாநந்தமடைவன். ¶

கிரமமாகச் செய்யும் யோகாப்பியாசத்தால் ஆநந்த வடிவமாக விளங்கும் யோகி புருஷனது திருஷ்டியைக் கூறல்.

அருச்சுனு! (யோகாப்பியாசஞ் செய்யும்போதுண்டாகும் விஷய விச்சை, உறக்கம், சோம்பல் முதலிய பிரதிபந்தங்களால் அவ்யோகாப்பியாசத்தி னின்றும் நீங்காது, அப்பிரதிபந்தங்களைப் பிரயத்தன

¶ தத்துவஞானம் - சீவப்பிரஹ்ம ஐக்கிய ஞானமாம். தடையென்ப திங்கு யோகாப்பியாசத்திற்கு விக்கினமாயுள்ள சோம்பல், நித்திரை, பராக்கு முதலியனவாம்.

யோகாப்பியாசத்தால் சித்த சுத்தியைச் செவ்வையாகப் பெற்று, அதனல் தன் சங்கற்பத்தைத் தவிரச் சர்வஜகத்துமில்லை யென்பதைச் சுருதி யுக்தி யனுபவவாயிலாக வறிந்து, காணி மனை முதலியவற்றின்கணுள்ள எனதென்னும் அபிமானத்தையும், உடல் பொறி முதலியவற்றின்கணுள்ள யானெனன்னுமபிமானத்தையு மொழித்து, தன்னை (ஆத்மாவை)ப் பிரஹ்மமாக வுள்ளவாறுணர்ந்தவன் பரமாநந்த வடிவமாகவேவிளங்குவான்; பரமாநந்தவடிவமாகவிளங்குதலேயோகாப்பியாசத்தின் முக்கியப் பயனுமென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினுரென்க.

பூர்வகமாக வொழித்து, யானிதுகாறும் கூறிவந்த) இந்த யோகாப்பி யாசத்தைத் தவறாது செய்து வருகின்றவன் எப்போது மழியாதுள்ள பூரணாநந்தத்தை வருத்தமில்லாதடைவன். அஃதிருக்கட்டும்.

அருக்சுனா! அவன் தன் நிஜவடிவத்தை யுள்ளவா றறிந்திருப்ப தால், சிறிது மாத்திரமாகவேனும் நீங்காது சர்வபூதங்களையும் தன் னுள்ளே யிருப்பனவாகக் காண்பன்; அச்சர்வபூதங்களுள்ளே எவ் விடத்தும் தான் சிறிதும் நீங்காதிருக்கின்ற தன்மையையும் விளக்க மாகக் காண்பன். ‡

தத்துவமசி மகாவாக்கியத்தினது துவம்பதத்தின் இலக்கியப் பொரு ளாய ஆத்மாவின் தன்மையைக் கூறிய பகவான் அதன் தத்பதத்தின் இலக்கியப் பொருளாய பிரஹ்மத்தின் தன்மையைக் கூறல்.

தேவரது பகைவராகிய அசுரர்களை முன்னேவென்று மேம்பட்ட அருச்சுனா! எந்த யோகி புருஷன் தத்பதத்தின் இலக்கியப் பொருளா யுள்ள வென்னைச் சர்வ பூதங்களிடத்திலும், என்னிடத்துச் சர்வ பூதங்களையும் பொருந்துமாறு வேற்றுமையில்லா துள்ளவாறு காண் கின்றானோ அவன் எவ்வகைத்தாய வியவகாரத்தைச் செய்தானாயினும், யான் அவனாகவே யிருக்கின்றேன். அருச்சுனா நீ இவ்விஷயத்தில் சிறிதும் சந்தேகமடைதல்வேண்டாம். ¶

---

‡ யோகாப்பியாசம் செய்யும்போ துண்டாகும் விஷய விச்சை, உறக்கம் முதலிய பிரதிபந்தங்களைப் பிரயத்தன பூர்வகமாக வொழித்து, அதனை மிகு விழிப்பாகச் செய்பவன் வருத்தஞ் சிறிதுமில்லாது பிரஹ்மவடிவ அபரிச்சின்ன சுகத்தையடைவன்; அதனாலவன் தனது நிஜவடிவமாயுள்ள ஆத்மாவை யுள்ள வா றுணர்ந்து, சர்வவுலகத்தினும் சமபுத்தியுடையவனாய், சர்வபூதங்களும் தன்னி டத்திருப்பதையும் தான் அச்சர்வ பூதங்களிலு மிருப்பதையும் சந்தேகவிபரீதமில் லாது கண்டு ஒரு தன்மையனாகவே விளங்குவானென்று பகவான் அருச்சுனனுக் குக் கூறினாரென்க.

¶ பிரஹ்மத்தைச் சர்வ பூதங்களிலும் பிரஹ்மத்தின்கண் சர்வபூதங்களையும் வேற்றுமையில்லா துள்ளவா றுணரும் யோகிபுருஷன் எவ்வியவகாரத்தைச் செய்தானாயினும், யானவனாகவே யிருக்கின்றேனென்று பகவான் அருச்சுன னுக்குக் கூறினாரென்க.

கயிற்றரவென்னும் வியவகாரத்தில் அரவின்கண் கயிறு யதார்த்தமாகவும், கயிற்றின்கண் அரவு கற்பிதமாகவு மிருத்தல்போலச் சர்வபூதங்களிலும் பிரஹ்

யோகசித்தி பெற்றவன் யோகத்தினின்றும் விழித்தபோது சர்வப் பிராணிகளையுந் தானாகவே காண்பனெனல்.

விளங்குகின்ற கூர்மை பொருந்திய வேலையுடைய அருச்சுனா! யோகசித்தி பெற்றவனென்று சொல்லப்படுகின்றவன் துக்கமாவது சுகமாவது யாவர்க்கேனு முண்டாமாயின், அவர்க்குண்டாகின்ற அவற்றைத் தானுமடையா நிற்பன். இதனை நீ உண்மையாக வறியக் கடவாய். †

பகவான் கூறிய உபதேசத்தைக் கேட்ட அர்ச்சுனன் யோகசித்தி பெறுவது எவர்க்கு முடியாததாமெனல்.

அருச்சுனன் துள்சிமாலையைத் தரித்த முடியையுடைய பகவானை நோக்கி, வல்லமை யமைந்த தோள்களையுடைய பகவானே! தேவரீர் எனக்குச் சர்வ பூதங்களையும் சமமாகக் காண்பதுவே யோகமாமென் றருளிச் செய்தீர்; இந்த யோகத்திற்கு ஸ்திரமான நிலையை மனமோய் வின்றி யலைதலால் யான் என்னிடத்துச் சிறிதுங் காணாதிருக்கிறேன். மனமென்று சொல்லப் படுகின்ற இது யாதோரிடத்தும் நிலைபெறுவ தின்றி யலையுமியல்புடையதாய்ச் சுரோத்திர முதலிய இந்திரியங்களைச் சப்தமுதலிய விஷயங்களில் செல்லுமாறு கலங்கச் செய்கின்றது.

மம் யதார்தமாகவும், பிரஹ்மத்தின்கண் சர்வபூதங்களும் கற்பிதமாகவு மிருக்கின் றனவென் றுணர்ந்த யோகி புருஷன் தான் பிரஹ்ம சொரூபமாகவே யிருப் பதையுள்ளவாறுணர்ந் திருப்பதினின்றுந் தவறாது கருமசாட்சியாகவே விளங்குவா னென்பதிங் குணர்தற்பாலதாம்.

கருமசாட்சியாக விளங்குகின்றவர் பிராரப்த கருமவலியால் யாஞ்ஞவல்கியர் முதலியோர் போலக் கரும மனைத்தையும் விடுத்தாயினும், வசிட்டர் - ஜனகர் முதலியோர் போல விகித (விதி) கருமங்களைச் செய்தாயினும், தத்தாத்திரேயர் முதலியோர் போல நிஷித்த (விலக்கு) கருமங்களைச் செய்தாயினு மிருப்பர்; அங்ஙனமிருப்பினும், யாம் பிரஹ்மமென்னும் தத்துவஞானத்தினின்றும் சிறி தும் தவறாதிருப்ப ரென்பது மிங்குணர்தற்பாலதாம்.

† யோகசித்தி பெற்றவன் சர்வப் பிராணிகளையும் தன்னுடைய சொரூப மாகக் காண்டலின், அவையடையும் சுகதுக்கங்களைத் தானுமடைதற்குரியவனாக விருக்கின்றானென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினாரென்க. இதனால் யோகசித்தி பெற்றவன் சர்வசீவ தயாபர மூர்த்தியாக விளங்குவானென்பது பெறப்பட்டதென்க.

அதனால், இம்மனத்தை யொருகண நேரமாயினும் ஒன்றன்கண் ஸ்திரமாக நிறுத்துதல் முடியாதென்றும், இதனை யடக்குதல் காற்றை யடக்குவதற் கொப்பாமென்றும் யானறிகின்றேன். *

அருச்சுனன் யோகசித்தி பெறுவது எவர்க்கும் முடியாததாமென்று தன்னனுபவத்தைக் கொண்டு கூறியதற்குப் பகவான் விடைகூறல்.

'பகவானே! இந்த யோகத்திற்கு ஸ்திரமான நிலையை மனமோய்வின்றி அலைதலால் யான் என்னிடத்துச் சிறிதுங் காணாதிருக்கின்றேன்; மனமென்று சொல்லப்படுகின்ற விது யாதோரிடத்தும் நிலைபெறுவதின்றி யலையு மியல்புடையதாய்ச் சுரோத்திர முதலிய இந்திரியங்களைச் சப்த முதலிய விஷயங்களிற் செல்லுமாறு கலங்கச் செய்கின்றது; அதனால், இம்மனத்தை யொருகண நேரமாயினும் ஒன்றன்கண் ஸ்திரமாக நிறுத்துதல் முடியாதென்றும், இதனை யடக்குதல் காற்றை யடக்குவதற் கொப்பாமென்றும் யானறிகின்றேன்' என்றிங்ஙனம் அர்ச்சுனன் கூற, அதனைக் கேட்ட பகவான், அவனை நோக்கி, அருச்சுனா! நீ வினவியதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.

அருச்சுனா! சுரோத்திரம் (காது)- துவக்கு (தோல்)-சட்சு (கண்)-சிங்குவை (நாக்கு) - கிராணம் (மூக்கு) என ஐந்து வகையாயுள்ள ஞானேந்திரியங்களையும், மனம்-புத்தி-அகங்காரம்-சித்தமென நான்கு வகையாயுள்ள அந்தக்கரணத்தையும் தத்தம் வியாபாரங்களைச் செய்யாவா றடக்குவது எவர்க்கு மிகவரியதாம்; அவை யடக்குவதற் கரியனவா யிருப்பினும், ஒருவன் தான் கடைத்தேறுமாறு சர்வப் பிரகாரத்தாலும் செய்யும் யோகாப்பியாசத்தாலும், தம்முள் ஒவ்வாதுள்ள ஐவகை ஞானேந்திரியங்கள் வாயிலாக வருகின்ற விஷய இன்பமனைத்தையும் சீ! இவை துன்ப சாதனமாமென் றுராய்ந்தறிந்து வெறுப்பதா

---

* அருச்சுனன் பகவானை நோக்கி, தேவரீர் சர்வ பூதங்களையும் சமமாகக் காண்பதுவே யோகமாமென்று கூறினீர்; என்மனம் ஓயாதலைதலால், யோகஞ் செய்வது எனக்கு முடியாதென்று யானுணர்கின்றேன்; மனம் எதனிடத்தும் நிலைபெறுவதின்றி இந்திரியங்களைக் கலங்கச்செய்து சுழன்றுவருதலின், இதனை யடக்குவது காற்றை யடக்குவதற் கொப்பாமென்றுமறிகின்றேனென்று கூறினானென்க.

இதனால் மனத்தை யடக்குவதனருமை காட்டப்பட்டதென்க.

லும், தன் வசமாக விருப்பவரை வருத்துவதில் மிகக் கொடியதாயுள்ள அந்தக்கரணமானது தனதேவலேச்செய்யு மிந்திரியங்களுடனே அடங்குவதாம். அந்தக்கரணத்தை இந்திரியங்களுடன், யோகாப்பியாசம், விஷய வின்பங்களை வெறுத்தலாகிய வைராக்கியமென்னு மிவற்றிற்கு வேருய சாதானங்களா லடக்குவ தருமையாம்; இவ்விஷயத்தில் சந்தேகம் சிறிதுமில்லையாமென் றருச்சுன! நீ அறியக்கடவாய். அதனுல், பையப்பைய ஞானேந்திரிய பஞ்சகம், கன்மேந்திரிய பஞ்சகம், அந்தக்கரண சதுஷ்டயமென்னும் இந்தப் பதினன்கு கரணங்களையும் வைராக்கியத்தால் தமது வசமாகச் செய்தவர், அவற்றை யடக்குதலோடு யோகசித்தியையும் பெறுதற் குரியவராவர். *

---

* மனம் அடக்குதற்கரியதாய்ச் சஞ்சல சுபாவமுடையதா யிருத்தலின், அதனை அதனேவலாள்போ லுள்ள இந்திரியங்களுட னடக்குவது எவர்க்கு மரிதா யிருக்கின்றது ; யோகாப்பியாசமும் வைராக்கியமு முடையவர் அதனை இந்திரியங்களுட னடக்குதல் கூடும் ; இந்திரியங்களையும் மனத்தையும் வைராக்கியத்தா லடக்க முடியாதவர்க்கு எவ்வாற்ருனும் யோகம் சித்தியாது ; அவற்றை வைராக்கியத்தா லடக்குகின்றவர் யோகாப்பியாசஞ் செய்தற்குரியவராய் அதனை முடிவுபெறச் செய்வாரென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினுரென்க.

இங்குக்கூறிய வைராக்கியம்-பர வைராக்கியம் அபர வைராக்கியமென விருவகைத்தாம்; அவற்றுள், அபர வைராக்கியம் யதமானம், வியதிரேகம், ஏகேந்திரியம், வசீகாரமென நால்வகைத்தாம். (1) இவ்வுலகத்தில் கொள்ளத்தக்கது யாது? தள்ளத்தக்கது யாது? என அவற்றைச் சற்குருமூர்த்தி வாயிலாகவும் சாஸ்திர விசார வாயிலாகவுமுணர முயலுதல் யதமான வைராக்கியமாம்; (2) நமது சித்தத்தின்கணுள்ள தோஷங்களுள் இவ்வளவு தோஷம் நாம் மேற்கொண்டுள்ள விவேகத்தால் நிவிர்த்தியாயிற்று ; இன்னு மிவ்வளவு தோஷம் நிவிர்த்தியாகா திருக்கின்ற தெனச் சித்த தோஷங்களின் தன்மையை யாராய்ந்தறிவது வியதிரேக வைராக்கியமாம் ; (3) சித்தத்தின்கண் ஆசை ஸ்தூலமாகவிருந்தும், விஷயங்கள் துக்கசாதனமா மென்றவற்றை யாராய்ந்தறிந்திருத்தலால், அவற்றை யடைய முயலாதிருத்தல் ஏகேந்திரிய வைராக்கியமாம் ; (4) சித்தத்தின்கண் ஆசை ஸ்தூலமாகவிராது, வாசனை மாத்திரமாக அடங்கி யிருத்தல் வசீகார வைராக்கியமாம். வாசனை மாத்திரமாய்ச் சித்தத்தின்க ணடங்கியுள்ள ஆசையும் ஒழிவதே பர வைராக்கியமாம். இவற்றுள், வசீகார வைராக்கியம் யோகாப்பியாசஞ் செய்பவர்க்கு அத்தியாவசியகமாக விருத்தற்குரியதாம். இவ் வைராக்கிய மில்லாதவர்க்கு யோகசித்தி வாய்ப்பதில்லையாம். பர வைராக்கியம் ஆன்ம சாட்சாத்கார

அருச்சுனன் யோகப் பிரிஷ்டனுக்குண்டாகும் பயன் யாதென் றையுற்று வினவுதல்.

பகவான் சுரோத்திர முதலிய பதினன்கு கரணங்களேயும் தமது வசமாக்ச் செய்தவர்க்கு யோகசித்தி யுண்டாமென்று கூறக்கேட்ட அருச்சுனன் பகவானை நோக்கி, பகவானே! ஒருவன் தன் மரணகால மளவும் யோகாப்பியாசஞ் செய்வதிலேயே நிலைத்திருந்து, தான் மரண மாகுங் காலத்தில் யான் பிரஹ்மமென்னும் தத்துவ ஞானத்தை மறந்து மரணமடைவானுயின், அப்போதவன் சென்றடைவது நற்கதி யோ? துர்க்கதியோ? *

அருச்சுனன் தான் ஐயுற்றதன் காரணத்தை வெளிப்படையாகக் கூறல்.

பகவானே! யோகசித்தியான தத்துவ ஞானத்தை யடைதற் பொருட்டு, பரலோக சாதனமாய கருமத்தையும் உபாசனையையு மொழித்தவன் யோகாப்பியாசஞ் செய்வதற்கு முன்னிருந்த மோகமா னது விசாரக் குறைவால் மீண்டும் பெருகுதலால், தான் செய்யத் தொடங்கிய யோகத்தை முற்றுப்பெறச் செய்யாதிறந்தானுயின், கரு மோபாசனைகளின் பயனையும் யோகத்தின் பயனையு மடையாதொழிவ னன்றோ? கருமோபாசனைகளின் பயனும் யோகத்தின் பயனும் தன் னைவிட்டு நிற்க வுள்ள அவன் காற்றால் சிதறுண்ட மேகம்போல நாச மாயொழிவானே? பகவானே! என் மனத்தின்கணுள்ள சந்தேக மிது வேயாம். இச்சந்தேகத்தை யொழிக்க வல்லவர் தேவரீரை யன்றி வேறு யாவரிருக்கின்றனர்? தேவரீரே யான் கடைத்தேற இச்சந்தே கத்தை யொழிக்கும் விதத்தை யுரைத்தருளல்வேண்டும். என்றனன் †

முடையவர்க்கன்றி மற்றவர்க்கு வாய்ப்பதில்லையாம். வசீகார வைராக்கியம் பர வைராக்கிய மென்னு மிரண்டனுள், முன்னது சம்பிரஞ்ஞாத சமாதிக்கு அந்த ரங்க சாதனமாம், அசம்பிரஞ்ஞாத சமாதிக்குப் பகிரங்க சாதனமாம்; பின்னது அசம்பிரஞ்ஞாத சமாதிக்கு அந்தரங்க சாதனமாமென்பதிங் குணர்தற்பாலதாம்.

* பகவானே! யோகாப்பியாசஞ் செய்பவன் மரணகாலத்தில் யான் பிரஹ்மமென்னும் தத்துவ ஞானத்தை யோகாப்பியாசக் குறைவால் மறந்திறப் பானுயின், அவனடையும் கதி யாது என்று பகவானை நோக்கி அருச்சுனன் வின வினனென்க.

† மோகம்-ஜகத் சத்தியமென்னும் விபரீத புத்தியும், சரீரமே ஆத்மாவென் னும் விபரீத புத்தியுமாம்.

யோகப் பிரஷ்டன் இகபரமிரண்டிலும் கேட்டொழிவதில்லை யெனல்.

யோகத்தின்றன்மையை யுள்ளவாறுணர்ந்துள்ள பகவான் அருச்சுனனை நோக்கி, அருச்சுன! உன் சந்தேகம் நிவிர்த்தியாமாறு யான் கூறுவதை நீ கவனமாய்க் கேட்கக் கடவாயெனக் கூறத்தொடங்கி,

அருச்சுன! விசாரிக்குமிடத்து எவ்வாற்றானும் தனக்கென் றொருவடிவ மில்லாது மித்தையாயுள்ள உலகாசாரத்தை மேற்கொள்வ தில்லாத அறிவினையுடைய யோகப்பிரஷ்டர் எப்போதும் சத்தியமாயுள்ள பிரஹ்மத்தை யடையு மார்க்கத் தொழுகுபவரா யிருத்தலின், இகலோகத்திலும் பரலோகத்திலும் காற்றால் சிதறுண்ட மேகம் கெடுவதுபோலக் கெடுவதிலராவர்; இவ்விஷயத்தை நீ செம்மையாக அறியக்கடவாய்; இன்னும் அவரது தன்மையைக் கூறுகின்றேன், கேட்கக்கடவாய். ‡

(அருச்சுன! நீ பழிபாவங்கட் கேதுவாய கருமங்களைச் செய்யாது, புகழ் புண்ணியங்களுக் கேதுவாய கருமங்களையே செய்யும்

யோகாப்பியாசஞ் செய்பவன் மோசத்தின் பெருக்கால் யோகசித்தி பெறு திறப்பானாயின், தான்விட்ட கரும வுபாசனைகளின் பயனையும், தான் மேற்கொண்ட யோகத்தின் பயனையும் பெறுமையால், உபயப் பிரஷ்டனாய்விடுகின்றான்; அதனாலவன் காற்றால் சிதறுண்ட மேகம் கெடுவதுபோலக் கெட்டொழிவனோ என்று பகவானை நோக்கி அருச்சுனன் வினவினனென்க.

காற்றால் சிதறுண்ட மேகம் தான் முன் கூடியிருந்த மேகத்தினின்றும் பிரிந்து வேறுமேகத்தையுமடையாது இடையே கெடுவது போல, யோகப்பிரஷ்டனும் முந்திய கருமோபாசனைகளி னின்றும் நீங்கி, பிந்திய ஞானமார்க்கத்தையு மடையாது இடையே கெடுவானோ வென்பது இங்கு வினாவாம். யோகப் பிரஷ்டன் - யோகத்தினின்றுந் தவறியவன்.

‡ அருச்சுன! நீ யோகப் பிரஷ்டன் இவ்வுலகத்தில் அபகீர்த்தியையும் பரலோகத்தில் நரகத்தையுமடைதல் கூடுமென் றையுற்றிருக்கின்றனை போலும்! யோகநூல் கூறியவா றொழுகிவந்து, யோகத்தை முற்றுப்பெறச் செய்யாதிறந்தவன் பழிபாவங்கட் கேதுவாய கருமங்களைச் செய்யாதவனா யிருத்தலின், அவன் இகலோகத்தில் பழியின் பயனாய அபகீர்த்தியையும், பரலோகத்தில் பாவத்தின் பயனாய நரகத்தினையு மடையான்; இது நிச்சயமாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

யோகப் பிரஷ்டன் இகலோகத்திலும் பரலோகத்திலும் கேடடைவ திலனாயின், அவனடையும் பயன்தான் யாது? என்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுனா! தான் செய்யுமாறு மேற்கொண்ட யோகம் முடிவு பெறாதிருக்க, மத்தியில் மரணமடைந்தவன், மக்கள் உபாசனையோடு அசுவமேத முதலிய யாகங்கள் பலவற்றைச் செய்து, அவற்றாலடை தற்குரியதாயுள்ள சோகமில்நாடு என்னும் பிரஹ்ம லோகத்தை யடைந்து, அவ்வுலகத்தில் பல வருஷகாலம் சிறிதாகவேனுந் துன் பந் தன்னைத் தொடரா திருக்க, இன்பத்தை யனுபவித்திருந்து, பின் தானிருத்தற்குரிய அக்காலம் கழிந்தபின், செல்வம்-குணம்-சுகம் முதலியவற்றாற் சிறந்த அரசரது வம்சத்திலாவது, வித்தை (கல்வி)-விநயம் (அடக்கம்)-விவேகம்(பகுத்தறிவு)-விராகம்(வைராக்கியம்) முத லியவற்றால்சிறந்து மக்களுக்குத் தர்மோபதேசஞ்செய்யும்யோகிகளது வம்சத்திலாவது பிறந்து, அப்பிறப்பில் தான் பெறுதற்குரிய வித்தை-விநயம்-விவேகம்-வைராக்கிய முதலியவற்றை யெல்லாம் குறைவில் லாதடைந்து, பின்னர்த் தான் முற்பிறப்பின் மரணகாலத்தில் மோகத் தின் பெருக்கத்தால் மறந்துவிட்ட யோகத்தை வருத்தமில்லாது அநாயாசமாகச் செய்வான். *

---

* யோகத்தை முற்றுப்பெறச் செய்யாதிறந்த யோகப்பிரஷ்டன் உபாசனை யோடு அசுவமேத முதலிய யாகங்களைச் செய்தவ ரடைதற்குரிய பிரஹ்மலோக த்தை அர்ச்சிராதி மார்க்கமாக வடைந்து, அங்கு அளவிறந்த காலமிருந்து, போகத் தை யனுபவித்து,பின் அஜாத சத்துரு-ஜனகன்முதலாயினோர் போன்றுள்ள அரசர் குலத்திலாவது, யாஞ்ஞவல்கியர் வசிஷ்டர் முதலாயினோர் போன்றுள்ள யோகி கள் குலத்திலாவதுபிறந்து, வித்தை விநயம் விவேக முதலாயினவற்றையெல்லாம் சம்பூரணமாகப் பெற்று, பின் தான் மறந்துவிட்ட யோகத்தைச் செய்யத் தொடங் குவானென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினரென்க. இதனால் யோகப்பிரஷ்ட னுக் குண்டாகும் இருமைப் பயனுங் குறிப்பிட்டவாறறிக.

விஷய விச்சையுடைய யோகப்பிரஷ்டன் அரசர் குலத்தில் பிறப்பான்; வைராக்கியமுடைய யோகப்பிரஷ்டன் யோகிகள் குலத்தில் பிறப்பானென்ப திங் குணர்தற்பாலதாம்.

சூரிய மண்டலத்தைப் பேதித்துக் கொண்டு பிரஹ்ம லோகத்திற்குப் போகும் மார்க்கம் அர்ச்சிராதி மார்க்கமாம்; இது தேவயான மார்க்கமென்றும் சொல்லப்படும்.

(அருச்சுனா! நீ யோகிகள் குலத்திற் பிறந்தவனுக்கு யோகாப்பியாசஞ் செய்வதற்கு இடையூறு யாதுமின்மையின், அவன் தான் மறந்துவிட்ட யோகத்தை மீண்டுந் தொடங்கிச் செய்தல் கூடும்; அரசர் குலத்திற் பிறந்தவனுக்கு யோகாப்பியாசஞ் செய்வதற்கு இடையூறு பல விருத்தலின், அவன் தான் மறந்துவிட்ட யோகத்தை மீண்டுந் தொடங்கிச் செய்வது எவ்வாறுமென்று வினவுதல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுனா! அரசர் குலத்திற்பிறந்த போகப் பிரஷ்டன் யோகாப்பியாசத்தை மேற்கொண் டொழுகுங் குணமில்லாதவனாயிருப்பினும், அவன் முற்பிறப்பில் யோகாப்பியாசத்தால் சீவப் பிரஹ்ம ஐக்கிய ஞானம் தெளிவாக வுண்டாமென் றுணர்ந்து மேற்கொண்ட யோகாப்பியாசமானது முற்பிறப்பில் யோகாப்பியாசஞ் செய்யப் பழகிய பழக்கமுடைய அவ்யோகப் பிரஷ்டனை விலகுதலில்லாது, இப்பிறப்பிலவன் யோகாப்பியாசஞ் செய்யத் தொடங்குதற்கு முன்னரேதானே அவனை யோகாப்பியாசஞ்செய்ய முயல்விப்பதாம். *

யோகஞ்செய்தல் வேண்டுமென்று விரும்புகின்றவனுக்கும் நற்கதி யுண்டாமெனல்.

அருச்சுனா! போகத்தின்கணுள்ள விருப்பத்தைப் பிரயத்தன பூர்வகமாக வொழித்து, அந்த யோகத்தை யானப்பியாசஞ் செய்வேனென்று கருதுகின்ற அந்த யோகப்பிரஷ்டனும் முறை தவறாது கரு

* அரசர் குலத்திற் பிறந்த யோகப் பிரஷ்டன் அரசபோகத்தால் யோகாப்பியாசஞ் செய்ய முயலாதிருப்பானாயினும், அவன் முற்பிறப்பிற் செய்த யோகாப்பியாசமானது அவனை இப்பிறப்பில் யோகாப்பியாசஞ் செய்யுமாறு செய்விக்கின்றது; அதனால், அவன் தான் முற்பிறப்பிற் செய்யத் தொடங்கி முடிவுபெறச் செய்யாதுவிட்ட யோகத்தை முற்றுப்பெறச் செய்ய முயல்கின்றானென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

யாதாவதொரு காரியத்தைச் செய்து வருகின்றவன் தான் உறங்கி விழித்தவிடத்து அக்காரியத்தையே செய்ய முயல்வதுபோல, யோகப்பிரஷ்டனும் முற்பிறப்பிற் செய்த யோகாப்பியாசத்தையே செய்யத் தொடங்குகின்றா னென்பதிங் குணர்தற்பாலதாம்.

மம் பலவற்றைச் செய்து, தான் மேற்கொண்ட வேள்வியை முடித்தவ னடையுங் கதியினும் மேலான கதியை யடைவான். *

தான் மேற்கொண்ட யோகத்தைச்செய்து முடித்தவன் வீடுபேறுவானெனல்.

அருச்சுனு ! விஷய சுகத்தை விரும்பி இந்திரியங்கள் வாயிலாக விரிந்தோடும் தன் மனமானது ஒரு நிலையிலே நிற்கப் பெருதவனுயினும், அம்மனத்தை அலைந்தோடும் மார்க்கத்தில்விடாது வைராக்கியத்தாலடக்கி யோகாப்பியாசஞ் செய்பவன் துன்பமயமான பல பிறப்புக்களை யெடுத்த பின்னுயினும், யோகசித்தியாகிய தத்துவஞானத்தை யடைந்து, அதனுல் மோட்ச மடைகின்ருன். †

யோகி புருஷன் மக்களுள் மிகச் சிறந்தவனுவனெனல்.

அருச்சுனு ! கிருச்சிரம் சாந்திராயண முதலாகவுள்ள தவமனைத்தையும் செய்திருப்பவனிலும், சாஸ்திரமனைத்தையும் கற்றுணர்ந்தவ

---

* சர்வ துக்க நிவிர்த்தி - பரமாநந்தப் பிராப்தி வடிவ மோட்சத்தை யடைதற்கு நேர்சாதனமாயுள்ள தத்துவ ஞானத்தைப் பெறுதற்பொருட்டு, யோகாப்பியாசஞ் செய்தல் வேண்டுமென்றதனைப் போக விருப்பத்தை யொழித்துக் கருதுகின்றவனும், கர்மிகளடையும் கதியினும் மேலான கதியை யடைவானென்றருச்சுனனுக்குப் பகவான் கூறினுரென்க.

இதனுல் மோட்சத்திற்குக் கருமமும் ஞானமும் நேர்காரணமாமெனல் கூடாதென்பது பெறப்பட்டதென்க. கருமம் மோட்சத்திற்குத் தத்துவஞானத்தை முன்னிட்டுக் காரணமாயிருப்ப தன்றி நேரே காரணமா யிருப்ப தில்லையாமென் பதிங் குணர்தற்பாலதாம்.

யோகாப்பியாசஞ் செய்ய வேண்டுமென்று கருதுகின்றவனுக்கே கருமிகளடையுங் கதியினும் மேலான கதி கிடைக்குமாயின், அதனைச் செய்து முடிப்பவன் முத்தனுவனென்பது சொல்ல வேண்டுவ தில்லையா மென்க.

† யோகாப்பியாசஞ் செய்பவன் மிகு முயற்சியோடு மனத்தைத் தன் வசமாகச் செய்தற்குரியவ னல்லனு யிருப்பினும் அதனை வைராக்கியத்தா லடக்கி யோகாப்பியாசஞ் செய்து வருவானுயின், அவன் பல பிறப்புக்களுக்குப் பின்னுவது தான் மேற்கொண்ட யோகத்தை முடிவுபெறச் செய்து அது வாயிலாக வுண்டாகும் தத்துவஞானத்தால் வீடடைகின்ருனென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினுரென்க.

னிலும், தமது பயனைத் தந்தாலன்றி யொழியாத வேள்வி முதலிய கருமமனைத்தையுஞ் செய்தவனிலும், தத்துவத்தையறியும் வன்மை வாய்ந்த யோகிபுருஷன் சிறந்தவனுவ னென்பது எனது கொள்கையாம். ஆதலால், யோகப் பிரஷ்டனுகிய நீ யான்கூறிய இந்த யோகத்தை மிக வருத்தமுற்றுவது மேற்கொண் டப்பியாசஞ் செய்வாயாக. *

யோகிகளுள் மேலான யோகி யிவனெனல்.

ஞானவடிவமா யிருத்தலால் ஆகாய முதலியனபோல அருவமென்றுவது கடம் பட முதலியனபோல உருவமென்றுவது எவரும் அறிதற்கரிய பகவான் அருச்சுனனை நோக்கி, அருச்சுன! அறம் பாவமென் றிரண்டு வகையாயுள்ள கருமங்களை யொழிக்கும் யோகிகள் யாவரினும் தன் மனத்தையும் அன்பையும் அடைவதற்கரிய என்னிடத்துத் தொடர்ச்சியாக வைக்கும் ஞானயோகியொருவனே யான் விரும்புவதற்குரியவனு யிருக்கின்றுன். அவன் அந்த யோகிகள் யாவரினும் சிறந்தவனென்பது எனது கொள்கையாமென்றுகூறினர். ‡

சோக அத்தியாய முதல் யோக அத்தியாய மீறுயுள்ள இது காறும் தத்துவமசி மகா வாக்கியத்தின் துவம்பதார்த்த நிரூபணஞ் செய்யப்பட்டதென்க.

6—யோக அத்தியாயம் முற்றிற்று.

---

* தத்துவத்தை யறிந்த யோகி புருஷன் தவஞ்செய்வோரினும், சாஸ்திர ஞானிகளினும், கருமஞ்செய்வோரினும் மேலானவனுவ னென்பது எனது கொள்கையாம்; அதனுல்,நீ யான் கூறிய யோகத்தைச் செய்து, தவஞ்செய்வோர் முதலாயினோரினும் சிறந்தவனுகக் கடவாயென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினு ரென்க.

‡ சர்வேசுவரனுயுள்ள என்னைச் சகுணமாகவாவது நிர்க்குணமாகவாவது நிரந்தரம் சிரத்தையோடு சிந்திப்பவன் யோகிகளுள் மிகுசிரேட்டவனுவன்; அருச்சுன! நீயு மங்ஙனஞ் சிந்திப்பாயாயின், யோகிகளுள் சிரேட்டனுவையென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினுரென்க.

7-வது மாயா ரூப அத்தியாயம்.

அருச்சுனனுக்குத் துவம்பதார்த்த (ஆன்ம) சொரூபத்தைத் திருவாய் மலர்ந்தருளிய (வைய முண்டுமறை நீர்மையுண் டிடையர் மாதருண்டி ட மலர்ந்திடும், செய்ய தண்பவள வாயையுடைய திருமாது கேள்வனுகிய) பகவான், அவனுக்குத் தத்பதார்த்த (பிரஹ்ம) சொரூபத்தைத் தெரிவித்தற்பொருட்டு, அவனை நோக்கி, அருச்சுன! நீ தேவரீர் 'தன் மனத்தையும் அன்பையும் அடைவதற்கரிய என்னிடத்துத் தொடர்ச்சியாகவைக்கும் ஞானயோகி யொருவனே யான் விரும்புதற்குரியவனுக விருக்கின்றான்' என்றருளிச் செய்தீர்; பகவானுகிய உம்முடைய சொரூபம் எவ்வாறு சேவித்தற்குரியதாம்; உம்முடைய சொரூபத்தில் மனம் எவ்வாறு நிலைபெறுவதாமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.

அருச்சுன! தான் கடைத்தேறுதற் பொருட்டு, பேரன்போடு பரமேசுவரனுன என்னையே யடைதற்குச் சாதனமாயுள்ள யோகாப்பியாசத்தையே செய்யும் யோகி புருஷன் சந்தேகமில்லாம லென்னை யெந்தப் பிரகாரம் அறிவானே அந்தப் பிரகாரத்தைக் கூறுகின்றேன், அதனை நீயு முணரக் கடவாய்.

(அருச்சுன! நீ பரமேசுவரனுனவென்னை யறியுமறிவு சுவர்க்கமிருக்கின்றதென் றதனை யறியு மறிவுபோலப் பரோட்ச ஞானமேயாமென்று கருதுதல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுன! தத்துவஞானத்தால் நிவிர்த்தியாதற்குரிய மாயையால் கலங்குதலில்லாத மனத்தினிடத்துச் சச்சிதாநந்த நித்திய பரிபூரணமாயுள்ள எனதுண்மை வடிவத்தைச் சற்குருவினுபதேச வாயிலாகப் பொருந்துமாறு செவ்வையாக அறிந்தவர் இம்மாயாப் பிரபஞ்சத்தின்கண் அறியாத பொருள் யாதுமில்லையாம்; யான் என்னை யறிபவாது சொரூபமாயிருப்பினும், மின்னலைப் போலத் தோன்றியழியுமியல்புடைய மக்கள் பலருள்ளே என தனுக்கிரகத்திற்குப் பாத்திரமாயுள்ள ஒருவனே சற்குருவினிடத்து என்னை யாராய்ந்துணரவேண்டுமென்னு முயற்சியுடையவனுயிருக்கின்றான்; என்னை யாராய்ந்துணரவேண்டுமென்னு முயற்சியுள்ள அதிகாரி புருஷர் பலருள்ளே ஒரு

வனே என்னை யுள்ளவாறுணர்ந்து, என் வடிவமாக விளங்குதலால் கிருதார்த்தனாகின்றான். *

(அருச்சுனா! எனதுண்மை வடிவத்தை யறிந்தவர் இம்மாயாப் பிரபஞ்சத்தின்கண் அறியாத பொருள் யாதுமில்லையாம் என்று யான் கூறியதை விளக்கமாகக் கூறுகின்றேன், நீ கேட்கக் கடவாய்.)

கைவிடா வேலையுடைய அருச்சுனா! பிருதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம்-மனம்-புத்தி, இவற்றின் கூட்டமாகிய தேகேந்திரிய முதலியவற்றில் யானென்றபிமானத்தைச் செய்யும் அகங்காரமென்னு மிவ் வெண்வகைப் பேதமாயிருப்பதன்றி, காரிய வடிவமாயுள்ள விவ் வெண்வகைப் பேதப் பொருள்களிலும் மேலானதாய், உலகத்தில் சர்வ வியவகாரத்தையும் எனதென்று கொண்டு முன்வந்து, உடம்பினிடத்து நிலைபெற்றுள்ள உயிருமாகிப் பரமேசுவரனான எனது மாயை யிருக்கின்றது. †

---

* மாயாப் பிரபஞ்சம்சத்தியமென்னும் விபரீத புத்தியால் கலங்குதலில்லாத சித்தமுடையவராய்ச் சச்சிதாநந்த நித்திய பரிபூரணமாயுள்ள எனதுண்மை வடிவத்தை ஐயந்திரிபின்றித் தமது ஆத்ம சொரூபமாக வறிபவர், சர்வப் பிரபஞ்சமும் என்னிடத்துக் கற்பிதமாயிருத்தலின், என்னை யறிந்தபோது சர்வத்தையு மறிந்தவரே யாகின்றனர்; யான் என்னை யறிபவரது சொரூபமா யிருப்பினும், மக்களுள் எனதனுக்கிரக முடைய ஒருவனே என்னை யாராய்ந்தறிதற்குரிய அதிகாரியாகின்றான்; அங்ஙனமுள்ள அதிகாரிகளுள் ஒருவனே என்னை யுள்ளவாறுணர்ந்து அதனால் யான் கர்த்தா-போக்தா வென்னும் பிராந்தியகன்று, கிருதார்த்தனாகின்றானென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க. இதனால் ஈசுவரானுக்கிரகமில்லாதவர் பிரஹ்ம விசாரத்திற் கதிகாரியாகா திருக்கின்றனர்; அவருள்ளும் மிகச் சிலரே பிரஹ்ம விசாரத்தை முடிவுபெறச்செய்து, கிருதார்த்தராகின்றன ரென்பது பெறப்பட்டவாறறிக. கிருதார்த்தராதல்-செய்வதனைத்தையும் செய்து முடித்தவராதல்.

† பிரகிருதி-அபரப் பிரகிருதி பரப்பிரகிருதியென விருவகைத்தாம்; இவற்றுள், அபரப்பிரகிருதி: பிருதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம்-மனம்-புத்தி-அகங்காரமென எண்வகைப் பேதமுடையதாம்; பரப்பிரகிருதி—மலின சத்துவகுண மாயையென்னும் அவித்தையில் எனது பிரதிபிம்பமாயுள்ள சீவனும். இச்சீவனே உலக வியவகாரத்தைச் செய்தற்குரியவனா யிருக்கின்றான்; என்னிடத்துக் கற்பிதமாயுள்ள மாயை அபரப்பிரகிருதியாயும் பரப்பிரகிருதியாயு மிருக்கின்றதென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

இப்பூதங்களனைத்தும் அவ்வபரப் பிரகிருதி - பரப்பிருகிருதிகளின் காரியமாம்; எனக் கன்னியமாக ஒரு பொருளுமின்றெனல்.

அருச்சுனு ! நீ மண்ணுலக முதலியவற்றில் இயங்காப் பொருளென்னும் அசேதனம், இயங்கும் பொருளென்னும் சேதனமனைத்தும் அபரப்பிரகிருதி - பரப்பிரகிருதி யென்னு மிவ் விருவகைப் பிரகிருதியாலும் தோன்றும் காரியங்களாமென்றவற்றை யுன்னுராய்ச்சியா லாராய்ந் துணரக் கடவாயாக. உலகம் தனக்குக் காரணமாகப் பொருந்தியிருப்பது பரஸ்பரம் தம்முள் விபரீத சுபாவமுடைய அவ்விருவகைப் பிரகிருதிகளேயேயாம் ; அக்காரணத்தால் உலகத்தினுசத்திற்கும் உற்பத்திக்கும் என்னிடத்துக் கற்பிதமாயுள்ள மாயையோடுகூடி ஈசுவரனென்னும் பெயரைப் பெற்றுள்ள நானே அப்பிரகிருதிகளின் வாயிலாகக் காரணமல்லாமல், வேறு காரணம் ஆராய்ந்தறியுமிடத் தறிவதற் கில்லையாம். மாயை முதலிய எந்தப் பொருளும் அம்மாயைக் கதிஷ்டானமாயுள்ள என்னிலும் வேருக வுண்மையி வில்லையாம். ‡

இக்குப் பிருதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயமென்று கூறிய இவ்வைந்தும் சூக்கும பூதங்களாம் ; இங்கு மனமென்பதன்கண் சித்தம் அந்தர்க்கதமாம். இங்குக் கூறிய அபரப் பிரகிருதி பரப் பிரகிருதி யென்னுமிரண்டனுள் முன்னது க்ஷேத்திர வடிவப் பிரகிருதி யென்றும், பின்னது க்ஷேத்திரஞ்ஞ வடிவப் பிருகிருதி யென்றும் சொல்லப்படும்.

‡ உலக வியவகாரத்திற்கு அபரப் பிரகிருதியும் சீவ வியவகாரத்திற்குப் பரப்பிரகிருதியும் காரணமா யிருக்கின்றன; உலகத்தின் நாசத்திற்கும் உற்பத்திக்கும் நானே காரணமா யிருக்கின்றேன் ; என்னைத் தவிர அவற்றிற்கு வேறு காரணம் நிச்சயமாகவில்லை ; யானே எல்லாப் பொருளுமாய் மாயையின் வாயிலாக விருக்கின்றேன் ; எனக்கன்னியமாக ஒரு பொருளு முண்மையிலில்லையாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினுரென்க.

சொப்பனங் காண்பவனுக்கு அவ்வுலகு உண்மையில் வேருயிராமைபோல், பகவானுக்கு இவ்வுலகு உண்மையில் வேருயில்லையாம்; சொப்பன வுலகத்திற்கு அதனைக் காண்பவன் முதற்காரணமாயும் நிமித்த காரணமாயு மிருத்தல்போல இவ்வுலகிற்குப் பகவான் முதற்காரணமாயும் நிமித்த காரணமாயு மிருக்கின்ருரென்பதிங் குணர்தற்பாலதாம்.

உலகத்தின் நாசத்திற்கும் உற்பத்திக்கும் பகவான் காரணமா யிருக்கின்றமையின், அதன் ஸ்திதிக்கும் அவரே காரணமாயிருக்கின்ருரென்பதுமிங் குணர்தற்பாலதாம். இதனுல் உலகத்தின் தோற்றம், நிலை, கேடென்னு மூன்றற்கும் பகவானே காரணமா யிருக்கின்ருரென்பது பெறப்பட்டதென்க.

நான் உலகத்தின் நாசத்திற்கும் உற்பத்திக்கும் எனது மாயாசத்தி வாயிலாகக் காரணமா யிருப்பதன்றி, அதன் ஸ்திதிக்கும் காரணமா யிருக்கின்றேனென்று பகவான் கூறல்.

அருச்சுனா ! உலகமிருத்தற்கும் விளங்குதற்கும் காரண வடிவ மாயுள்ள யானேயல்லாமல்,உலகத்தில் வியவகார நோக்கத்தால் எனக்கு வேறாகத் தோன்றும் ஆகாய முதலிய பூதங்களைத் தாங்க என்னிலும் வேறாயிருப்பவரில்லை.தேவரீர் ஆகாய முதலிய பூதங்களைத் தாங்குவது எங்ஙனமாமென்று நீ வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின் றேன், கேட்கக் கடவாய். யான் ஆகாய முதலிய பூதங்களைத் தாங்கு வது முத்து - பவள முதலிய பல இரத்தினங்களில் நுழைந்து, அவற் றைத் தாங்குகின்ற கோவையாயுள்ள ஒரு நூலின் தன்மை போல்வ தாம். தம்முள் பேதமாயுள்ள ஆகாய முதலிய பொருள்தோறும் யானுழைந்து, அவற்றைத் தாங்குந் தன்மையை யினி விரிவாய்க் கூறுவேன், கேட்கக் கடவாய். *

(அருச்சுனா! நீ நூலிடத்து மணிகள் கோக்கப்பட்டிருத்தல் போல, தேவரீரிடத்துப் பூதங்கள் கோக்கப்பட்டிருக்கின்றனவென்பது எங் ஙனமாமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா ! ஆகாயத்தி லிடைவிடா தியங்குகின்ற சூரிய சந்திர ரிடத்து விளங்குகின்ற ஒளியும் நானே ; நான்கு வேதங்களுள்ளும்

---

* ஒவ்வொரு பதார்த்தமும் இருத்தற்கும் விளங்குதற்கும் யானே காரணமா யிருக்கின்றேன் ; எனக்கன்னியமாக அதற்குக் காரணமா யிருப்பவர் எவரு மில்லை ; நூலொன்றே முத்துப் பவள முதலிய பல இரத்தினங்களில் நுழைந்து அவற்றைத் தாங்குவதுபோல, யான் சர்வ பூதங்களிலும் நுழைந்து அஃதாவது வியாபித்து, அவற்றைத் தாங்குகின்றேனென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினரென்க.

கடம் இருப்பதற்கும் விளங்குவதற்கும் மண் காரணமாயிருத்தல்போல உலகம் இருப்பதற்கும் விளங்குவதற்கும் பகவான் காரணமாயிருக்கின்றார்;மணி மாலையில் ஒவ்வொரு மணியிலும் நூல் நுழைந்து அதனைத் தாங்குவது போல, உலகத் தில் ஒவ்வொரு பூதத்திலும் பகவான் வியாபித்து அதனைத் தாங்குகின்றாரென் பது இங்குணர்தற்பாலதாம்.

அழகாக விளங்குகின்ற அரிதற்கரிய ஓம் என்னும் பிரணவமும் நானே; சர்வப் புருடரிடத்துமுள்ள புருஷத்தன்மையும் நானே; அப்புவிலுள்ள சுவையும் நானே; பிருதிவியிலுள்ள வாசனையும் நானே; அக்கினியிலுள்ள சூடும் நானே; ஆகாயத்துள்ள ஓசையும் நானே; வாயுவிலுள்ள பரிசமும் நானே. *

அருச்சுனா! கலவி கேள்வி ஒழுக்கங்களால் மேம்பட்ட அறிவுடையாரிடத்துள்ள புத்தியும் நானே; தவஞ் செய்வாரிடத்துள்ள மேலாய தவமும் நானே; நற்குண நற்செய்கை யுடையாரிடத்துள்ள சிறந்த புகழும் நானே; மிகுதியாகத் தோன்றும் பலமுடையாரிடத்துள்ள காமமும் ராகமுமில்லாத பலமும் நானே; சராசர வடிவமாகவுள்ள சர்வப் பிராணிகளிடத்தும் ஆயுள் வடிவமாக நிலைத்துள்ள சீவனமும் நானே. †

---

* மணிமாலையில் நூல் சேர்ந்து அதனைத் தாங்குவதுபோல, சூரிய சந்திரரிடத்து ஒளிவடிவமாகவும், வேதத்தினிடத்துப் பிரணவ வடிவமாகவும், ஆகாயத்தினிடத்து ஒலி வடிவமாகவும், வாயுவினிடத்துப் பரிசவடிவமாகவும், தேயுவினிடத்து ரூப வடிவமாகவும், அப்புவினிடத்து ரச வடிவமாகவும், பிருதிவியினிடத்துக் கந்த வடிவமாகவும் புருஷரிடத்துப் புருஷத் தன்மை வடிவமாகவும் நான் வியாபித்து, அவற்றைத் தாங்குகின்றேனென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினானென்க.

யான் ஒளி வடிவமாகச் சூரிய சந்திரராகவும், பிரணவ வடிவமாக வேதமாகவும், சப்த ஸ்பரிச ரூப ரச கந்த வடிவமாக ஆகாய முதலிய பூதமாகவும், புருஷத்தன்மை வடிவமாகப் புருஷராகவு மிருக்கின்றேன்; அதனால், என்னைத் தவிர அவற்றிற்கு வேறு பொருளில்லை யென்று பகவா னருளிச்செய்தாரென்பது இங்குணர்தற்பாலதாம்.

† நான் அறிவுடையாரிடத்துப் புத்தி வடிவமாகவும், தவஞ் செய்வாரிடத்துத் தவ வடிவமாகவும், நற்குண நற்செய்கை யுடையாரிடத்துப் புகழ் வடிவமாகவும், பலமுடையாரிடத்துப் பல வடிவமாகவும், சர்வப் பிராணிகளிடத்தும் சீவன வடிவமாகவு மிருக்கின்றேனென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினானென்க.

இங்குப் புத்தி யென்றது நித்தியா நித்தியவஸ்து விவேகத்தை. தவம்-பாஹியத் தவம் ஆந்தரத் தவமென் றிருவகைத்தாம்;பாஹியத்தவம்-சுரோத்திர முதலிய இந்திரியங்களை யடக்குதலாம்; ஆந்தரத்தவம்—மனத்தை யடக்குதலாம். சத்துருக்களை யடக்குதல், இரப்போர்க் கில்லையென்னு தீதல் முதலியவற்றால் வரும்

பகவான் இவ்வுலக மனைத்தும் என்னிடத்திருக்கின்றதன்றி யானதனிடத்தில்லை யெனல்.

விவேக மிக்க அருச்சுன! நீ சத்துவம் இராசதம் தாமதமென்னும் முக்குண சுபாவமுடையனவாய்த் தோன்றி யழிகின்ற பொருண் முழுதும் தோன்றுவதும் பரமேசுவரனான என்னிடத்தேயாம்; அவை யிருப்பதும் என்னைப்பற்றியேயாமென் றுணரக்கடவாய்; அப்பொருளிடத்துப் பரமேசுவரனாகிய யானுண்டாவதில்லை; யான் அப்பொருள்களுக்குச் சாட்சியாக விருக்கின்றே னல்லாமல், அப்பொருள்களை யாதாரமாகக் கொண்டு ஆதேய வடிவமாக விருப்பதில்லை. *

கீர்த்தி புகழாம். இஃதெனக்கு வேண்டுமென்னும் விருப்பம் காமமாம்; என்னிடத்துள்ள இது கேடடையாதிருத்தல் வேண்டுமென்னும் விருப்பம் ராகமாம்.

* முக்குண சுபாவமாயுள்ள பொருளனைத்தும் என்னிடத்தே தோன்றி யிருக்கின்றனவல்லாமல், யான் அவற்றின்கண் தோன்றி யிருப்பதில்லை; அவற்றிற்குச் சாட்சியாக விருக்கின்றேனென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினானென்க.

மண்ணிற்றோன்றிய கடத்தில் அம்மண் தனக்காதாரமா யிராமைபோல, பகவானிடத்திற் றோன்றிய வுலகத்தில் பகவான் தனக்காதாரமாக விருப்பதில்லையா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

மனவடக்கமென்னும் சாந்தி—இந்திரிய வடக்கமென்னும் தாந்தி முதலியன சத்துவகுண சுபாவமாம்; களிப்பு-கர்வ முதலியன இராசதகுண சுபாவமாம்; சோகம்-மோக முதலியன தாமதகுண சுபாவமாம். பிராணிகள் தத்தம் கரும வசத்தால் சத்துவகுண சுபாவமுடையனவாகவும், இராசதகுண சுபாவமுடையனவாகவும், தாமதகுண சுபாவமுடையனவாகவும் தோன்றுகின்றனவென்பதிங் குணர்தற்பாலதாம்.

(1) சத்துவகுண சுபாவமுடைய உயர்திணைப் பொருள்கள் தேவர்-ரிஷிகள்-பிராமணர் முதலியோராவரென்றும், சத்துவகுண சுபாவமுடைய அஃறிணைப் பொருள்கள் - சர்க்கரை-பால் முதலியனவாமென்றும், இராசதகுண சுபாவமுடைய உயர்திணைப் பொருள்கள் கந்தருவர்-யட்சர்-க்ஷத்திரியர் முதலியோராவாரென்றும், இராசதகுண சுபாவமுடைய அஃறிணைப் பொருள்கள் மிளகாய்-சுக்கு முதலியனவா மென்றும், தாமதகுண சுபாவமுடைய உயர்திணைப் பொருள்கள்-ராட்சதர்-குறவர்-வில்லியர் முதலியோ ராவாரென்றும், தாமதகுண சுபாவமுடைய அஃறிணைப் பொருள்கள் வெள்ளைப்பூண்டு-வெங்காய முதலியனவாமென் றிங்குணர்தற் பாலனவாம்.

(அருச்சுனா ! நீ சர்வ காரணராயுள்ள தேவரீரை உலகத்தாரெக்காரணத்தா லறியாதிருக்கின்றனரென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

விளங்குகின்ற வேலையுடைய அருச்சுனா ! இருள்போல மயக்கத்தக்க குணங்களாமென்று யானுனக்கு முன்னர் வகுத்துக்கூறிய சத்துவம் - இராசதம் - தாமதமென்னு மிம்மூன்று குணங்களாலும் மயக்கப்பட்டு, இஃதழிவது இஃதழியா தென்னும் விவேகக்கண் கெட்டு, உடம்போடுகூடி வசிக்கின்ற இவ்வுயிரனைத்தும் அம்முக்குணங்களையுங் கடந்து யாதொரு விகாரமுமின்றிச் சொப்பிரகாசமாயுள்ள என்னையறிதற் குரியனவாமோ ? ஆகாவாம். *

(அருச்சுனா ! நீ அநாதிசித்தமான மாயையின் சத்துவ முதலிய குணங்களால் மயக்கப்பட்டுள்ள உயிர்கள் சுதந்தரமற் றிருத்தலின், அவர்களுக்கு அம்முக்குண வடிவ மாயையை நீக்கும் சாமர்த்தியமுண்டாதலில்லையா மென்று வினவுதல் கூடும் ; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

வேலையுடைய அருச்சுனா ! சீவர்கள் சர்வ காரணனாயுள்ள என்னையே யெப்போதும் மெய்யன்போடு தியானிக்கின்ற மனமில்லாதவரா யிருப்பாராயின், இத்தன்மையினவாய சத்துவ முதலிய குணங்களின் வடிவ முடையதாய், யாவராலும் செய்யப்பட்ட தல்லாததாயுள்ள எனது மாயையினால் மயக்கப்பட்டிருப்ப தொழிந்து, இச்சம்சார காலத்தில் பிழைப்பது அவர்களுள் எவர்க்கும் அரியதாம். †

---

* சீவர்கள் முக்குணங்களால் மயக்கப்பட்டு, இது நித்தியம் - இஃதநித்தியமென்னும் விவேகக்கண்ணை யிழந்து, தேகமே ஆத்மா - போகமே மோட்சமென்றவற்றைக் கருதியிருத்தலின், குணரகிதனாய், யாதொரு விகாரமுமின்றிச் சொப்பிரகாசமாயுள்ள என்னை யறியாதிருக்கின்றனர் ; பரமேசுவரனாகிய யான் அச்சீவர்களின் சொரூபமாயிருந்தும், அவர்கள் என்னை யறியாமைக்குக் காரணம் முக்குணங்களால் மயக்கப்பட்டிருத்தலேயாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

† சர்வ காரணனாயுள்ள வென்னையே யெப்போதும் மெய்யன்போடு தியானித்து, அதனால் என்னை யறிந்து என் வடிவமாக விளங்குகின்றவர்க்கன்றி மற்றவர்க்கு முக்குண வடிவமாய் அநாதியாய் என்னிடத்துக் கயிற்றின்கணரவுபோலக் கற்பிதமாயுள்ள மாயையினை யொழிப்பது எவ்வாற்றானு முடியாதாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

(அருச்சுனா ! நீ தேவரீரைத் தியானஞ் செய்வது வாயிலாக மாயை நிவிர்த்தியாமாயின், சர்வ அநர்த்தத்திற்குங் காரணமாயுள்ள அதனை நீக்குதற்பொருட்டு, யாவருமேன் உம்மை யடைக்கலமாக அடையவில்லை யென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா ! சுபாசுப கருமங்களாலே சரீர இந்திரிய முதலியன வாகப் பரிணமத்தை யடைந்து வருகின்ற இம்மாயையினாலே தமது மனம் தெளிவென்பதின்றிச் சூனியமாக, தக்க தின்னது—தகாத தின்னதென் றுணரு முணர்வுகெட்டு, இவ்வுலகத்தில் ஆசுரபாவத் தில் நிற்பவரும், தமது பயனாய துன்பங்களைத் தந்தாலன்றி நீங் குவதில்லாத பாவ கருமங்களையே தமக்குத் தொழிலாகக் கொண்டு செய்கின்றவரும் ஆகிய நராதமரென்னும் கீழ்மக்கள் பரமேசுவரனை என்னைத் தியானஞ் செய்வதிலராவர்; என்னைத் தியானஞ் செய்வாரும் சிலருளர்; அவரைக் கூறுகின்றேன், கேட்கக் கடவாய். *

இருள் வீட்டை யாசிரயித்து நின்று அதனையே மறைப்பதுபோல, மாயை தெய்வத்தை யாசிரயித்து நின்று அதனையே மறைத்தலின், அது தெய் வீகமாயை யென்று கூறப்படுகின்றதென்க.

எப்போதும் மெய்யன்போடு தியானித்தலாவது உறக்கம் வருமளவும் அல் லது மரணம் வருமளவும் அகம்பிரஹ்மாஸ்மி யென்று பாவனை செய்தலாம்; இப்பாவனையின் பயன் தன்னை அஃதாவது சரீரத்திரய விலட்சணமாய் அவஸ் தாத்திரய சாட்சியாயுள்ள ஆத்மாவைப் பிரஹ்ம வடிவமாக வுணர்தலாம் ; இதன் பயன் மாயை நீங்குதலாம் ; இதன் பயன் பிறவி நீங்குதலாம்.

சர்வ காரணமாயுள்ள பிரஹ்மத்தைத் தமது நிஜவடிவ ஆத்மாவாகத் தியானிப்பவர், அதனால் பிரஹ்மத்தைத் தமது நிஜவடிவ ஆத்மாவாக வுணர் ந்து, அதனால் மாயை நீங்கி, மயக்கமற் றிருப்பரென்ப திங்குணர்தற்பாலதாம்.

* ஆசுரபாவ முடையவராயும், தீவினைகளையே செய்து இடம்ப முதலிய தீக்குணமுடையவராயு முள்ள நராதமரென்னும் கீழ்மக்கள் மாயையால் மயக்கப் பட் டிருத்தலினின்றும் நீங்கப் பிரயத்தனஞ் செய்யாதிருத்தலின், அவர்கள் என் னைத் தியானவாயிலாக அடைய, முயலாதிருக்கின்றனரென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினரென்க.

ஆசுரபாவம் - தேகமே யாத்மா, போகமே மோட்சமென்று கருதி யிருத்த லாம்.

(பகவான் ஆசுரபாவ மில்லாதவர் தீவினை செய்வது, இடம்ப முத்லிய தீக்குணங்களை மேற்கொள்வ தென்பவற்றின்கண் தம் கருத்தினைச் செலுத்தாது, தக்க தின்னது, தகாத தின்னதென் றுணருமுணர்வுடையவராய், தமது புண்ணிய கருமத்தின் தாரதம்மியத்திற் கேற்றவாறு பரமேசுவரனாய என்னை நான்கு திறத்தினராக விருந்து தியானஞ் செய்கின்றன ரெனல்.)

அருச்சுனா! ஐசுவரியமடைய விரும்புகின்றவராய அர்த்தார்த்திகளும், துன்பமடைந்தவராய ஆர்த்தரும், ஜனன மரண வடிவத்துக்கத்தைக் கெடுத்தற்பொருட்டுப் பரமேசுவரனான வென்னைத் தியானஞ் செய்வது வாயிலாகத் தத்துவஞானத்தை யடைய விரும்புகின்றவராய சிஞ்ஞாசுக்களும், 'நல்லது' என்னும் என்னுடைய வாஸ்தவ சொரூபத்தை யறிந்த ஞானிகளுமாகிய இந்நால்வரே தமதாற்றலுக் கேற்றவாறு பரமேசுவரனாகிய வென்னைத் தியானஞ் செய்யுந் தவமுடையோராவர். ‡

---

‡ செல்வத்தை விரும்புகின்றவர், துன்பத்தை யடைந்தவர், ஞானத்தை யடைய விரும்புகின்றவர், ஞானத்தை யடைந்தவரென்னு மிந்நால்வரே என்னைத் தியானித்தற் குரியவரா யிருக்கின்றனரென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

மனைவி, மக்கள், மாடு முதலிய போக சாதனங்கள் அர்த்தமாம்; அவற்றை விரும்புவோர் அர்த்தார்த்திகளாவர். அர்த்தத்தை விரும்பிப் பகவானைத் தியானஞ்செய்தவர் துருவன், சுக்கிரீவன், விபீஷணன் முதலியோராவர். பாம்பு, புலி, பிணி முதலியவற்றால் வரும் துன்பம் ஆர்த்தியாம்; அதன் வசமானவர் ஆர்த்தராவர். தமக்கு வந்த ஆபத்தை நீக்குதற் பொருட்டுப் பகவானைத் தியானஞ்செய்தவர் துரோபதை, கஜேந்திரன் முதலியோராவர். எப்போதும் ஆத்மஞானத்தை யடைய விரும்புகின்றவர் சிஞ்ஞாசுக்களாவர்; அதனை யடையப் பகவானைத் தியானஞ் செய்தவர் ஜனகர், உத்தவர் முதலியோராவர். சர்வ பரிபூரண அத்விதீய பரமாத்மாவை நானென் றுள்ளவா றுணரு முணர்வு ஞானமாம்; அதனைப் பெற்றவர் ஞானிகளாவர்; அவர் தமது பரமார்த்த சொரூபத்தை மறவா திருத்தலே இங்குப் பகவத்தியானமாம்; அவர் சுகர் - வாமதேவர் முதலியோராவர். இந்நால்வருள் ஞானிய ரொழிந்தவர் சகாம புருஷராவர், ஞானியர் நிஷ்காம புருஷராவர். கம்சன், சிசுபாலன் முதலியோர் பயத்தாலும் துவேஷத்தாலும் பகவானையே தியானஞ் செய்திருந்தாராகலின், அவரும் ஒருவகைப் பத்தராவரென்ப துணர்க

(அருச்சுனா! நீ தேவரீர்க்கு ஆர்த்தார்த்தி முதலிய பத்தர் நால்வருள் யாவர் சிரேஷ்டராவரென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

நற்குண நற்செய்கைகளையுடைய அருச்சுனா! அர்த்தார்த்தி-ஆர்த்தன்-சிஞ்ஞாசு-ஞானியென்னு மிந்நால்வருள் ஞானி பரப்பிரஹ்ம சொரூபமாயுள்ள என்னோடு சிதாநந்த சொரூபமாகிய தன்னை வேற்றுமையாகக் கருதாமல் ஒற்றுமையாகக் கருதுதலின், அவனே சிரேட்டனாவன்; அந்த ஞானி எனது சொரூபமாக விருத்தலின், எனக்கு அத்தியந்தம் பிரியனாவன்; யான் அவனது சொரூபமா யிருத்தலின், அவனுக்கு நானும் அத்தியந்தம் பிரியனாவன். *

(அருச்சுனா! நீ தேவரீர்க்கு அர்த்தார்த்தி-ஆர்த்தன்-சிஞ்ஞாசு என்னும் மற்ற மூவரும் பிரியரல்லர் போலுமென்று வினவுதல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுனா! (அர்த்தார்த்தி-ஆர்த்தன்-சிஞ்ஞாசுவென்னு மூவரும் பரமேசுவரனாய என்னிடத்துப் பத்தியில்லாத மற்றவரினும் மிகச் சிரேட்டரே யாவர்; ஆயினும்,) குறிப்பிட்டுரைத்தற்கரிய பெருமையுடைய ஞானி (என்னையே சர்வத்தினும் மேலாகிய பல வடிவமா

---

* அர்த்தார்த்தி முதலிய நால்வருள் பரிபூரண அத்துவிதீயப் பிரஹ்மமே நானென்னும் தத்துவஞானி சிரேட்டனாவன்; அவனெனது சொரூபமா யிருத்தலால், அவனெனக்கு அத்தியந்தம் பிரியனாவன், யானவனது சொரூபமா யிருத்தலின், அவனுக்கு நானும் அத்தியந்தம் பிரியனா யிருக்கின்றேனென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

ஞானி நிராசையுடையவனா யிருத்தலின் அதனால் சித்த விகாரக் கலக்கஞ் சிறிது மின்றித் தனது நிஜ வடிவமாயுள்ள ஆத்ம வடிவப் பிரஹ்மம் அல்லது பிரஹ்ம வடிவ ஆத்மாவை மறவாதிருக்கின்றான்; அதனால், அர்த்தார்த்திமுதலியோருள் சிரேட்டனா யிருக்கின்றானென்பதாம். பிரீதி சோபாதிகப் பிரீதி, நிருபாதிகப் பிரீதியென் றிருவகைத்தாம். எப்பொருளில் பிறவற்றின் பொருட்டுப் பிரீதி யுண்டாகின்றதோ அது சோபாதிகப் பிரீதியாம்; அது தனதான்ம சுகத்தின் பொருட்டுக் காணி மனை முதலியவற்றி லுண்டாகும் பிரீதியாம். எப்பொருளில் பிறவற்றின் பொருட்டுப் பிரீதி யுண்டாவ தில்லையோ அது நிருபாதிகப் பிரீதியாம்; அது தனதான்மாவிலுள்ள பிரீதியாம். ஞானிக்கும் பகவானுக்குமுள்ள பிரீதி நிருபாதிகப் பிரீதியாமென்பதிங் குணர்தற்பாலதாம்.

கக்கொண்டு,) எனது வாஸ்தவ சொரூபத்தினிடத்திலேயே அகம் பிரஹ்மாஸ்மி (யான் பிரஹ்மமா யிருக்கின்றேன்) என்னும் பாவனை யுடையவனுயிருத்தலின், (அங்ஙனமில்லாத ஆர்த்தார்த்தி-ஆர்த்தன்-சிஞ்ஞாசு என்பவர்க்கும் சிரேட்டனு யிருக்கின்றான்; அங்ஙனமிருத்த லின், அந்த ஞானி) எனதான்மாவென்பதே எனது நிச்சயமாம். முத்தி பெறுதற்குரியவரென்னும் மக்களுள்ளே ஒருவன் இப்படிப் பட்ட ஞானிபாதலும் அவன் அளவிறந்த ஜனனங்களில் பயன் கரு தாது செய்துவந்த கருமங்களாலேயாம். †

ஞானி என்னையே பல வடிவமாகக் கொண்டிருத்தலின், என்னையே அபேதமா யடைவன்; அப்படிப்பட்ட ஞானியாவான் மிக அரியனென்று பகவான் கூறல்.

கூர்மை பொருந்திய வேலையுடைய அருச்சுன! காணப்படுகின்ற இவ்வுலகத்திலும் கேட்கப்படுகின்ற சுவர்க்காதி அவ்வுலகத்திலும் விஸ்தாரமாக வுணர்ந்த சிறந்த பொருளனைத்தும் சர்வ காரணனென்று கூறுதற்குரிய வாசுதேவனுன வென்னையன்றி யில்லாதிருத்தலைக் காரணகாரிய ஆராய்ச்சி வாயிலாகத் தெளிவாக வறிந்து, பரமேசுவர னுயவென்னைத் தனது ஆத்ம சொரூபமாகப் பாவித்து வருகின்றவன் வாசுதேவனுகிய என்னையே அபேதமாக வடைவன்; அம்மகாத்மா மக்களுள் அடைவதற்கு மிக அரியவனுவன். ‡

---

† அர்த்தார்த்தி முதலியோர் சகாம புருஷராயினும், அவர்கள் என்னிடத துப் பத்தியில்லாத மற்றவரினும் சிரேட்டராவர்; அவர்கள் எப்போதும் என்னை நினைப்பதில்லை; ஞானியே என்னை யெப்போதும் மறவாதிருக்கின்றான்; அதனு லவன் அவர்களினும் சிரேட்டனுவன். அதனுல் அவர்களிடத்து எனது பிரீதி அவரவர்தம் பிரீதிக்கேற்றவாறிருக்கின்றது; ஞானி எனதான்மாவாகவே யிருத் தலின், யானவனிடத்திற் கொள்ளும் பிரீதி நிருபாதிகமா யிருக்கின்றது. ஒரு வன் ஞானியாவது அவன் அளவிறந்த ஜன்மங்களில் செய்துவந்த நிஷ்காம கர் மங்களாலாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினுரென்க. பலம் - பிரயோ சனம்.

‡ காணப்படுகின்ற இகலோகத்திலும் கேட்கப்படுகின்ற பரலோகத்திலு முள்ள இழிந்த பொருளே யல்லாமல் உயர்ந்த பொருளும் சர்வ காரணனென்னு மென்னைத் தவிரவில்லையென்று அவற்றைக் காரண காரிய ஆராய்ச்சி வாயிலாகத் தெளிவாக வுணர்ந்து, இடைவிடா தென்னையே தன்னுடைய சொரூபமாகப் பாவனை செய்கின்றவன் அர்த்தார்த்தி முதலியோர்போலப் பிறப்பினை யடைதற் குரியவனுகாது என்னையே அபேதமாக வடைந்து, யானுகவே விளங்குகின்றான்; அப்படிப்பட்டவன் மிக அரியனுவனென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினு ரென்க.

● பகவான் மோட்ச வடிவப் பரமபுருஷார்த்தமாய பலத்தைத் தருவது என்னுடைய ஆராதனையாமென்பதை வெறுத்துப் பிறவிப் பயனைத் தருவதற்குரிய க்ஷுத்திர தேவதைகளின் ஆராதனையில் மக்களுக்குப் பிரவிர்த்தி யுண்டாதற்குக் காரணம் அவரவர்தம் பூர்வ சம்ஸ்கார வடிவ வாசனு விசேஷமேயாமெனக் கூறல்.

வேலையுடைய அர்ச்சுனு! க்ஷுத்திர தேவதைகளின் பத்தரோ தம் மனத்தின்கண் அழுத்தமாகக் கொண்டுள்ள காமத்தினுலே பகுத்தறிவனைத்துங் கெட்டு, தமக்கு வேண்டுவனவற்றைத் தரும் தெய்வத்தின் ஜபம்-உபவாசம்-பிரதட்சிணம்-நமஸ்கார முதலிய வழிபாடாகிய சிறந்த நியமங்களிலே நிலைத்து நின்று, அத்தேவதைகளை ஆராதனை செய்வார்கள். §

(அருச்சுனு! நீ உமக்கன்னியமாயுள்ள க்ஷுத்திர தேவதைகளை ஆராதனை செய்பவர்க்கும் அத்தேவதைகளின் பிரசாதத்தால், சர்வேசுவரனுயுள்ள உம்மிடத்துத் தவருது பத்திபுண்டாமன்றோ வென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

ஒருவர் பிடித்து மறைத்தற்கரிய இடிபு மஞ்சுமாறு பகைவரோடு போர்செய்யும் அருச்சுனு! எவனொருவன் (இம்மைப் பயன் அல்லது

அளவிறந்த ஜன்மங்களில் நிஷ்காம கர்மங்களைச் செய்து அவற்றுல் சித்த சுத்தி யடைந்தவன், சர்வம் மித்தை, சர்வம் பிரஹ்மம், சர்வம் நானென்றுணர்ந்து, தான் மாத்திரமாகவே விளங்குகின்ருனென்பதிங் குணர்தற்பாலதாம்.

§ தம் மனத்தின்கணுள்ள காமத்தால் பகுத்தறிவனைத்தும் கெட்டிருப்பவர், பூர்வ சம்ஸ்கார வடிவ வாசனு விசேஷத்திற் கேற்றவாறு, தாம் விரும்பிய பயனைப் பெறுதற் பொருட்டு க்ஷுத்திர தேவதைகளை யாராதனை செய்து வருகின்றனரென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினுரென்க. இங்குக் காமமென்றது மாரணம் - மோகனம் - உச்சாடனம் - ஸ்தம்பனம் - ஆகர்ஷணம் - வசீகரண முதலியவற்றை விரும்பும் ஆசையை.

மாரணம் மோகன முதலியவற்றைப் பெற விரும்பி யட்ச ராட்சச முதலிய க்ஷுத்திர தேவதைகளை ஆராதிப்பவர் முடிவில் துக்கத்தையன்றிச் சுகத்தை யடைவதில்லையா மென்பதும், நிஷ்காம கர்மஞ்செய்பவர் க்ஷுத்திர தேதைகளை ஆராதிப்ப தில்லையா மென்பது மிங்குணர்தற் பாலனவாம்.

மறுமைப்பயனை விரும்பி) சிரத்தையோடு யாதேனுமொரு தெய்வத்தை (தன் முற்பிறப்பின் வாசனையின் வலியால் வெளியாய) அன்பு பெருக ஆராதனை செய்ய முயல்கின்றானோ அவனுக்கு வேண்டுவதாகிய நிலை பெற்ற பத்தி (அத்தேவதையி னிடத்து மேன்மேலும்) உளதாவதாக, அதனை முற்றும் சர்வாந்தரியாமியாயுள்ள நானே யுண்டாக்குகின் றேன்; யானுண்டாக்கிய அப்பத்தியுடனே அத்தேவதையை ஒவ்வொரு நாளும் (இதுவே உண்மையாய தேவதையாமென்று நம்பி) பிரியமாய் ஆராதனை செய்கின்றவன் விரும்பியவற்றை யெல்லாம் பிரசித்தமாக அவனுக்குச் சிறிதுங் குறையாது நானே கொடுக்கின்றேன். ¶

(அருச்சுனா ! நீ க்ஷுத்திர தேவதைகளும் தேவரீரது வடிவமே யன்றோ? அங்ஙனமாக, அத்தேவதைகளின் ஆராதனையும் தேவரீரது ஆராதனையாகாதோ ? அத்தேவதைகளை ஆராதனை செய்கின்றவர் பெறும் பயன் குறைவுடையதாமோ? என்று வினவுதல் கூடும் , அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா ! (யான் சர்வான்ம சொரூபமா யிருக்கின்றே னென்ப தறியாது) தமது மனத்தினிடத்து மாரணம் மோகன முதலிய பயன்

¶ எனக் கன்னியமாய தேவதையை யாதாவதொரு பயனை விரும்பிச் சிரத்தையோடு தன் முற்பிறப்பின் வாசனையால் வெளியாய அன்பு பெருக ஆராதனை செய்பவனுக்கு அத்தேவதையினிடத்து நிலைபெற்ற பத்தியுண்டாமாறு நானே செய்கின்றேன்; அவனிடத்துள்ள அப்பத்தியைத் திருப்பி யென்னிடத்துண்டாமாறு நான் செய்வதில்லை; எனக்கன்னியமாயுள்ள தேவதைகளுள் எதற்கும் தனது பத்தர்க்கு அவர் விரும்பியவற்றைக் கொடுக்கும் சாமர்த்திய மில்லை; சீவர்களின் புண்ணிய பாவங்களை யறிந்து, அவ்வற்றிற் கேற்றவா றவர்களுக்குப் பயன் தருபவனும் அத்தேவதைகளுக்கும் அந்தர்யாமியா யிருப்பவனுமாய நானே அத்தேவதைகளின் பத்தர்க்கு அவர் விரும்பிய பயனைக் கொடுக்கின்றேன் ; சர்வேசுவரனுயுள்ள நான் சிலர்க்கு நேராகவும் சிலர்க்குப் பிறிதொன்றன் வாயிலாகவும் அவர் விரும்பிய பயனை அவர் தம் கருத்திற் கேற்றவாறு தருகின்றேனென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினானென்க.

மாரணம், மோகன முதலிய காமிய பதார்த்தங்களை வேண்டி க்ஷுத்திர தேவதைகளை ஆராதனை செய்பவர்க்கு அத்தேவதைகள் வாயிலாக அவற்றை யானே தருகின்றேன்; அத்தேவதைகள் தருவதில்லை யென்பதைப் பகவான் இங்கு விளக்கிக் காட்டினா னென்பதிங் குணர்தற்பாலதாம்.

களைத் தருதற்குரிய யட்ச ராட்சத முதலிய இத்தேவதைகளே உண்மையாய தேவதைகளா மென்று கருதி, அத்தேவதைகளைச் சிறப்பாக ஆராதனை செய்துவருகின்ற மந்த புத்தி யுடையவர் பெறும் பயன் நாசமுடையதாம்; அவர்கள் ஆராதனை செய்யும் தேவதைகளும் நாசமடைவனவாம். †

(அருச்சுனு ! நீ பகவானே ! உமதாராதனை நாசமற்ற உத்தம பலனைத் தருவதாயின், இவ்வுலகத்தாருள் பெரும்பான்மையோர் உம்மை ஆராதனை செய்வதன்கண் பராமுகமாயே யிருக்கின்றன ரென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்)

அருச்சுனு ! விவேகமில்லாதவர் யான் முடிவில்லாதவன், ஒன்றோ டொப்புக் கூறும்படி நின்று பற்றுதற் கரிதாயுள்ள ஆநந்த சொரூபமினென் றென்னைச் சிறிது முணராதிருக்கின்றனர்; ஆனால், இந்தக் கிருஷ்ணன் நந்தகோபன் புத்திரன், ராஜகுலத்திற் பிறந்த

---

† நான் எல்லாப் பொருளுமாயிருக்கின்றேனென்பதை அறியாது, எனக் கன்னியமாக வேறு தேவதைக ளிருக்கின்றன; அவை தரும் பயன்கள் மிக உயர்ந்தனவென்று கருதி, அத்தேவதைகளை ஆராதனை செய்பவர் பெறும் பயன் ஜடபதார்த்தமா யிருத்தலின், அஃதநித்தியமாம்; அத்தேவதைகளும் என்னிடத்துக் கற்பிதமா யிருத்தலின், அநித்தியமாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினுரென்க.

மந்த புத்தியுடையவரென்றது நித்தியா நித்திய வஸ்து விவேக மில்லாதவரை. உண்மைப்பொரு ளாராய்ச்சி யுடையவராய எனது பத்தர் அடையும் மோட்ச வடிவப் பலன் நாசமுறாதிருத்தல்போல, அன்னிய தேவதைளின் பத்தரடையும் மாரணம் மோகன முதலிய பயன்கள் நாசமடையாதிருத்த லில்லை யென்று பகவா னிங்குக் குறிப்பிட்டுக் கூறினுரென்பதிங் குணர்தற்பாலதாம்.

இந்திரன் முதலிய தேவதைகளின் பத்தர்கள் சாத்துவிகராவர்; யட்ச ராட்சதர்களின் பத்தர்கள் ராசதராவர்; பூதப் பிரேதங்களின் பத்தர்கள் தாமதராவர்; இவர்கள் தத்தம் தேவதைகளை ஆராதனை செய்து, அதனுல் அநித்தியப் பயனையே யடைகின்றன ரென்பதும், ஆர்த்தார்த்தி, ஆர்த்தன், சிஞ்ஞாசு ஞானியென்னும் பகவானது பத்தர் நால்வருள், ஞானி யொழிந்தவர் நித்தியப் பயனை அடைவதிலராயினும், அவர்கள் முடிவில் நித்தியப்பயனை யடைதற்குரியவரா யிருக்கின்றன ரென்பதும் இங்குணர்தற்பாலனவாம்.

வாசுதேவன் புத்திரன், நம்மைப்போல் இவனும் நாநா வியவகாரங்களோடு கூடியிருத்தலின், பரமாநந்தமில்லாதவனாவான், சீவருள்ளே ஒருவனென்றறிகின்றனர் ! அதனால் என்னை ஆராதனை செய்வதன்கண் பராமுகமாயிருக்கின்றனர். ‡

(அருச்சுனா ! நீ எவ்வகையாலும் சீவரிடத்துச் சம்பவியாத அளவற்ற திவ்ய குணங்களையுடைய தேவரீரிடத்து அவிவேகிகட்கு மனுஷ்யத்துவ புத்தியும் சீவத்துவ புத்தியுமுண்டாயிருத்தற்குக் காரணம் யாதென வினாவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா ! யான் (என்னிடத்துப் பத்தியில்லாதவர் பரமேசுவரனாகிய வென்னை யுள்ளவாறுணராதொழிக என்னும் எனது சங்கற்பத்தினனுசாரமாகப்) பொருந்தியுள்ள மாயையிற் பொருந்தி அதனால் நன்றாக மறைந்திருக்கின்றேன்; அங்ஙனம் மறைந்திருத்தலால் எனது நிஜவடிவம் எவருமறியுமாறு பிரகாசமாக வெளியாகாதிருக்கின்றது ; அன்றியும் உலகத்தார் யாவரும் உலகத்தில் அஞ்சத்தக்கதாய ஜனன மரண வடிவப் பெரிய சம்சாரப் பிராந்தியின்கண் தமது மனம் அழுந்திநிற்ப ஞானக்கண் மறைந்திருத்தலால், ஜனன மரண வடிவச் சம்சாரப் பிராந்தி சற்றுமில்லாத வென்னை யறியாதிருக்கின்றனர். §

---

‡ விவேகமில்லாதவர் யான் சர்வ ஜகத்திற்குங் காரணமாய் முடிவில்லாதவனாயிருக்கின்றேன், நிரதிசய ஆநந்த வடிவனாயிருக்கின்றேனென்றென்னைச் சிறிதுமுணராது, நந்த கோபன் மகனென்றும், வாசுதேவன் மகனென்றும், ஆநந்தவடிவனன்றென்றும், நம்முள் ஒருவனென்றுமுணர்கின்றனர்; அதனால் என்னை ஆராதிப்பதன்கண் பராமுகமாயிருக்கின்றனரென்றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

பகவானுக்கு ஜகத் காரணமாதற் பொருட்டு மாயையோடு கூடியிருத்தலும் கிருஷ்ணாதி அவதாரங்களும் சோபாதிக வடிவமாம்; அத்விதீய பரமாநந்த நிரதிசய வடிவமாயிருப்பது நிருபாதிக வடிவமாமென்பதினுணர்தற் பாலதாம்.

§ யான் என்னிடத்துப் பத்தியில்லாதவர் என்னையுணராதொழிகவென்னும் எனது சங்கற்பத்தோடுகூடிய மாயையால் மறைந்திருத்தலின், எனது நிஜவடிவம் எவர்க்கும் விளங்காதிருக்கின்றது. உலகத்தார் சம்சாரப் பிராந்தியுடையவராயிருத்தலால் என்னை யறிந்து பூசிக்க விரும்பாது, இந்திராதி தேவர்களைப் பூசிக்கின்றனரென்றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

(அருச்சுனா! நீ தேவரீர் மாயையால் மறைந்திருத்தலின், தேவரீர்க்கு அஞ்ஞான மில்லையோவென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

பெருமை வாய்ந்த வில்லையுடைய அருச்சுனா! (என்னை மறைக்கும் மாயை என்னிடத்துக் கற்பிதமா யென்வசமா யிருத்தலின், அதனால் பரமேசுவரனாய) யானுண்மையில் மறையாது முன் சென்றனவும், இனி வருவனவும், இப்போ திருப்பனவுமாய சர்வப் பிராணிகளையும் செவ்வையாக அறிந்திருக்கின்றேன்; எல்லாப் பொருளுமாக விருக்கின்ற வென்னை (என்னிடத்துப் பத்தியில்லாதவருள்) எவரும் உலகத்தின்கண் அறியா திருக்கின்றனர். உலகத்தார் ஸ்தூல உடம்பைக் கொண்டு பிறக்குங் காலத்தில் விருப்பாலும் வெறுப்பாலு முண்டாகின்ற சுக துக்கம் - பசி தாகம் முதலிய துவந்துவங்களி னிமித்தமாக யான் சுகி - யான் துக்கி யென்றற் றொடக்கத்தனவாக வருகின்ற மோகத்தால் தமது தமது தேகாபிமான புத்தி சம்பவிப்பதால் பரமேசுவரனாகிய வென்னை யறியா திருக்கின்றனர். இத்தேகாபிமான புத்தியும் என்னை யுலகத்தா ரறியா திருத்தற்குக் காரணமாம். ¶

(அருச்சுனா! நீ தேவரீர் இப்போது எவரும் என்னை அறியாரென்று திருவாய்மலர்ந்தருளியது அர்த்தார்த்தி முதலியோர் என்னை

இங்கு உலகத்தாராவார் முற்கூறிய அர்த்தார்த்தி முதலிய நால்வரல்லாதா ராவரென்க.

¶ மாயையால் யான் வாஸ்தவமாக மறைவதில்லை; அதனால் சென்றன வருவன நிகழ்வன வனைத்தையு மறிகின்றேன்; உலகத்தார் பிறக்கும்போதே தேகாபிமான முடையவரா யிருத்தலினால், என்னை யறியா திருக்கின்றனர்; இப்புத்தியும் அவர்களென்னை யறியாமைக்குக் காரணமாமென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

இந்திரசாலஞ் செய்பவனை அவனைச் சேர்ந்தவ ரறிந்தும் மற்றவரறியாதுமிருப்பதுபோல, பகவானை அவனைச் சேர்ந்தவ ரறிந்தும் மற்றவ ரறியாதுமிருக்கின்றன ரென்ப திங்குணர்தற் பாலதாம்.

எனது பத்தரல்லாத உலகத்தார் விருப்பாலும் வெறுப்பாலு முண்டாய வியாகூலமுடையவரா யிருத்தலின், என்னைத் தமதான்மவடிவமாக அறியாதிருக்கின்றனர்; அதனால் ஆராதனஞ் செய்தற்குரிய என்னை ஆராதனஞ் செய்யா திருக்கின்றன ரென்பதிங்குப் பகவானா லுணர்த்தப்பட்டதென்க.

தியானஞ் செய்யுந் தவமுடையோ ராவரென்று முன் திருவாய் மலர்ந்தமைக்கு முரணுமே யென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அறிவுடையார் பலரும் வியந்து கூறுமாறு யாதொரு பயனையும் விரும்பாது கீழ்ப்போன பிறவிகளில் நல்வினைகளைப் பிரயத்தன பூர்வக மாகச் செய்த அதிகாரிபுருஷர் அவற்றால் முன்ஜன்மங்களிற் செய்த துன்பத்தைத் தரப்பொருந்தியுள்ள பாவ கரும மனைத்தையும் மிகவும் தம்மைப்பற்றுதலொழியவிட்டு,நன்மார்க்கத்திலேயே செல்வாராயின், கலக்கத்தையே செய்யும் சோகம் மோக முதலிய துவந்துவ குணங்களா லுண்டாய யான் சுகி - யான் துக்கி யென்றற் றொடக்கத்துப் பிராந்தி யை யடையாதவராய்ப் பரமேசுவரனுயுள்ள வென்னை ஆராதனை செய் யும் மார்க்கத்திலே திட சங்கற்ப முடையவராய் நிலைபெற்று நின்று என்னையே மனத்தின்கண் வைத்துத் தியானஞ் செய்வர். †

யாம் வெவ்வேறாக ஆடும் பழைய மாயக் கூத்தாட்டுவிக்கும் அம்மாயன்,
இனி அருச்சுனன் தாமருளிச்செய்த தத்துவார்த்தத்தைத்
தொடர்ந்து, வினவுதற்பொருட்டுச் சில கூறல்.

அருச்சுனா ! தத்துவஞானத்தா லன்றி, மற்றெதனாலு மொழித் தற்கரிய பிணி - மூப்பு - பிறப்பு - இறப்பென்னு மிவற்றை யொழித் தற் பொருட்டுத் தத்துவஞான முளதாமாறு கருதி, சகுணப் பிரஹ்ம மாகிய வென்னையே யாசிரயித்து, சாஸ்திர விகிதமான கருமங்க

---

† முற் பிறப்பில் பயனுேக்காது நல்வினைகளைச் செய்துவந்தவர் தீவினை களைச் செய்வதொழிந்து, சோக மோக முதலிய துவந்துவமில்லாது என்னையே பரமேசுவரனென் றுணர்ந்து, சர்வப் பிரகாரத்தாலும் தியானஞ்செய்வர் ; மற்ற வர் அங்ஙனஞ் செய்தற் குரியவராகா திருக்கின்றனரென் றருச்சுனனுக்குப் பக வான் கூறினரென்க.

கொலைசெய்தல் கூடாதென்பது யாகத்தின் கண்ணும் யுத்தகளத்தின் கண்ணும் கொலைசெய்வதை நீக்கியிருத்தல் போல, பகவானை யறிந் தாராதனை செய்யா திருக்கின்றனரென்பது பகவத் பத்தரை நீக்கி யிருக்கின்ற தென்பதிங் குணர்தற் பாலதாம்.

நல்வினைகளைப் பயன் கருதாது செய்பவரன்றி மற்றவர் பகவானை யறிந் தாராதனை செய்தற்குரியவராகா திருக்கின்றன ரென்பது மிங்குணர்தற் பாலதாம்.

ளைப் பயன் கருதாது செய்துவரு மதிகாரி புருஷர்கள் அக்கர்மங்களால் சித்தசுத்தி யடைந்து, சற்குருவினுபதேசத்தா லன்றி வேறெதனாலும் உணர்தற்கரிய நிர்க்குணப் பிரஹ்மத்தையும் அதனை இதுவேயென் றதிகாரி புருஷனறிதற்குரிய ஆத்மாவையும் அதிகாரி புருஷர்கள் தமது நல்லறிவின் வழியாக அனுஷ்டித்து வரும் (சிரவண முதலிய சாதன வடிவக்)கரும மனைத்தையும் அறிதற் குரியவ ராவர்; இவற்றை யறிந்தபின் அவர்தமக் குண்டாவதையுங் கூறுகின்றேன், கேட்கக் கடவாய். *

அருச்சுனா! அதிகாரி புருஷர்கள் தாம் கடைத்தேறுதற் பொருட்டாராயும் பழைமையாயுள்ள அதிபூதம், அதிதெய்வம், அதியக்ஞமென்பவற்றோடுகூடி நிற்குந் தன்மையுள்ள பரமேசுவரனாய வென்னை யெப்போதும் தியானஞ் செய்யும் புருஷர் "பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை" என்னும் இந்த வுடம்பு அழியுங்காலத்திலும் எல்லாமா யுள்ள என்னை யுள்ளவா றறிவார் (என்று பகவான் கூறினார்.) †

7 - மாயாரூப அத்தியாயம்

முற்றிற்று.

---

* பிணி மூப்புப் பிறப்பிறப் பென்பனவற்றை யொழித்தற் பொருட்டு, தத்துவ ஞானத்தை விரும்பி, தத்துவமசி மகா வாக்கியத்தின்கணுள்ள தத்பதத்தின் வாச்சியார்த்தமான சகுணப் பிரஹ்மத்தைத் தமக்குப் பற்றுக்கோடாகக் கருதி, பயனேக்காது சுபகருமங்களைச் செய்து வருகின்றவர் தத்பதத்தின் இலக்கியார்த்தமான நிர்க்குணப் பிரஹ்மத்தையும், துவம்பதத்தின் இலக்கியார்த்தமான ஆத்மாவையும், தத்பத இலக்கியார்த்தமான நிர்க்குணப் பிரஹ்மத்தையும் துவம்பத இலக்கியார்த்தமான ஆத்மாவையும் ஏகமாக வுணர்தற்கேதுவாய சிரவணாதி சாதனமனைத்தையு முணர்தற்குரியவராவரென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினரென்க.

இதனால், பிணி மூப்புப் பிறப்பு இறப்பு என்பவற்றை யொழித்தற்குரிய முக்கிய சாதனம் பிரஹ்மமும் ஆத்மாவுமொன்றே யென்றுணரும் தத்துவ ஞானமாம்; அதற்குச் சாதனம் சிரவண முதலியனவாம்; அவற்றிற்குச் சாதனம் பயனேக்காமல் ஈசுவரார்ப்பணமாகச் செய்யும் சுப கருமங்களா மென்பன விளங்கியவா றறிக.

† அதிபூத முதலியவற்றோடு கூடியுள்ள பரமேசுவரனை உள்ளவாறு தியா

8-எழுவகை வினவுரைத்த அத்தியாயம்.

அருச்சுனன் பகவானருளிச்செய்த பிரஹ்ம முதலியவற்றைப்பற்றி, அவரை நோக்கி, எழுவகையாக வினவுதல்.

போர்முகத்தில் ரிஷபத்தை யொத்துள்ள அருச்சுனன் உயிர ஊனத்தையும் தேகாபிமான வடிவக் கயிற்றாற் கட்டி, அக்கட்டில் தாம் சிக்காது, ஆயர்பாடியில் இடையரது மணிக்கயிற்றால் தமது தாயாகிய யசோதைப் பிராட்டியார் கட்ட அக்கட்டில் சிக்கிப் பாலலீலை செய்தருளிய பகவான் தனக்காசிரியராக விருந்து, முன்னர்த் திருவாய் மலர்ந்தருளிய பிரஹ்ம முதலிய பதார்த்தங்களை யறிதற்பொருட்டு, அவற்றை யேதுவாகக் கொண்டு, எழுவகை வினா வினவத் தொடங்கி, பகவானை நோக்கி, பகவானே! (1) முன்னர்த் தாங்களருளிச் செய்த பிரஹ்மம் எத்தன்மையது? (2) அத்தியான்மம் எத்தன்மையது? (3) தேவரீர் விதித்துள்ள கருமம் எத்தன்மையது? (4) தேவரீர் சித்தத்திற் கியைந்த அதிபூதம் எத்தன்மையது? (5) அதிதெய்வம் எத்தன்மையது? (6) அதியக்ஞம் எத்தன்மையது? அவ்வதியக்ஞம் இவ்வுடம்பின்கண் இருத்தல் எவ்வாறு? (7) சீவர்க்குப் பொருந்தியுள்ள உடம்பு மரணமாகுங் காலத்தில் அவர்கள் பர

னஞ் செய்து வருகின்றவர் தம் மரண காலத்திலும் பரமேசுவரனை மறவாதறிதற்குரியராவரென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினரென்க.

பரமேசுவரனை யிடைவிடாது தியானஞ் செய்து வருகின்றவர் இந்திரிய முதலியன தம் வசமாகாது போகும் மரணகாலத்திலும் பரமேசுவரனை அவனருளால் அறிதற்குரியவராகின்றன ரென்பதிங் குணர்தற்பாலதாம்.

இவ்வேழாவ தத்தியாயத்தில் உத்தம அதிகாரிகளைக் குறித்து நிர்க்குணப் பிரஹ்மமும், மத்திம அதிகாரிகளைக் குறித்துச் சகுணப் பிரஹ்மமும் பகவானால் கூறப்பட்டன வென்க.

இனிவரும் எட்டாவ தத்தியாயத்தின் பொருள் முற்றும் இவற்றின் வியாக்கியானமேயாம்.

மேசுவரராய வும்மை யுள்ளவாறுணரும் விதம் எவ்வாறு? இவ் வெழுவகை வினாக்கட்கும் விஸ்தாரமாக விடை கூறுதல் வேண்டும். ‡

‡ (1) தேவரீர் முன்னர் ஞேய வடிவமாகத் திருவாய் மலர்ந்தருளிய பிரஹ்மம் உபாதி யுடையதா? அஃதில்லாததா வென்பது முதல் வினாவாம். ஞானத்திற்கு விஷயமா யிருப்பது ஞேயமெனப்படும். ஒரு பொருளைப் பல பொருள்போலக் காட்டுவது உபாதியாம்; அது கடம் ஆகாயத்தைக் கடாகாயம் மகாகாயமெனக் காட்டுவது போல்வதாம்.

(2) ஆத்ம சம்பந்தமுடைமையால் ஆத்மாவென்று கூறப்படும் உடம்பை ஆசிரயித்துள்ளது அத்தியான்மமாம். அது சுரோத்திர முதலிய கரணக்கூட்டமா? பிரத்தியக் சைதன்னியமா? என்பது இரண்டாவது வினாவாம். பிரத்தியக் - உள்; சைதன்னியம் - ஆத்மா.

(3) கருமமென்பது யக்ஞ (யாக) வடிவமா? அதற்கு வேறாயதா வென்பது மூன்றாவது வினாவாம்.

(4) அதிபூதமென்பது பிருதிவி முதலிய பூதங்களை யாசிரயித்துள்ள அற்ப காரியமா? சம்பூரண காரியமா? என்பது நான்காவது வினாவாம்.

(5) அதிதெய்வ மென்பது தேவதா விஷயமான தியானமா? தேவதைகளின் சூரியமண்டல முதலியவற்றில் அநுகூதமா யிருக்கும் சைதன்யமா? என்பது ஐந்தாவது வினாவாம்.

(6) அதியக்ஞமென்பது யாதாவதொரு தேவதா விசேடமா? பரப்பிரஹ்மமா? அவ்வதியக்ஞம் அதிகாரி புருஷர்க்கு எவ்வாறு சிந்தனை செய்தற் குரியதாம்? அஃதாவது தாதாத்மிய (கற்பித பேத வாஸ்தவ அபேத) மாகச் சிந்தனை செய்தற்குரியதா? அல்லது முற்றும் அபேதமாகச் சிந்தனை செய்தற்குரியதா? அவ்வதியக்ஞம் சர்வப் பிரகாரத்தாலும் உடம்பிலேயே யிருக்கின்றதா? அதற்கன்னியமாக விருக்கின்றதா? அஃதுடம்பின்க ணிருக்கின்ற தெனின், அது புத்தி முதலிய வடிவமாக விருக்கின்றதா? அவற்றிற்கு வேறாக விருக்கின்றதா? என்பது ஆறாவது வினாவாம்.

(7) மரணகாலத்தில் இந்திரிய முதலியன தம் கட்டுவிட்டொழிதலின், அப்போது அதிகாரி புருஷன் தேவரீரை யெவ்வாறுணர்வ னென்பது ஏழாவது வினாவாம்.

பூதங்களை யாசிரயித்திருப்பது அதிபூதமாம்; தெய்வத்தை யாசிரயித்திருப்பது அதிதெய்வமாம்? யக்ஞத்தை யாசிரயித்திருப்பது அதியக்ஞமாம்.

அருச்சுனன் விஞவிய எழுவகை விஞக்கட்கும் பகவான் முறையே விடைகூறல்.

முதல் விஞவிற்கு விடை.

ஆதிசேஷன்மீது யோக நித்திரை செய்கின்ற பகவான் அருச்சுனன் விஞவிய எழுவகை விஞக்கட்கும் விடைகூறத் தொடங்கி, அருச்சுஞ! யான் கூறிய பிரஹ்மம் அதிகாரி புருஷரன்றி மற்றவர் அறிதற்கரியதா யிருப்பதாம்; ஆராய்ந்து கூறுமிடத்து, அட்சரமாம்; சர்வத்திஞும் பெரிதா யிருப்பதாம். இஃதுனது முதல் விஞவிற்கு விடையாம். மற்ற விஞக்களுக்கும் விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய். †

இரண்டாவது விஞவிற்குவிடை.

அருச்சுஞ! அந்தக்கரணங்களி லிருக்கின்ற அட்சரப் பிரஹ்மத்தின் சொரூப பூதமான பிரத்தியக் சைதன்யமே அத்தியான்மமாம். இஃதிரண்டாவது விஞவிற்கு விடையாம். ‡

---

† (1) இங்கு முதல் விஞவிற்கு விடையாகக் கூறிய பிரஹ்மம் நிரூபாதிகப் பிரஹ்மமாம்; சோபாதிகப் பிரஹ்ம மன்ரும். மாயாசகித சேதனம் சோபாதிகப் பிரஹ்மமாம்; மாயாரகித சேதனம் நிரூபாதிகப் பிரஹ்மமாம். அது ஞானத்தாலாவது அஞ்ஞானத்தாலாவது தேசத்தாலாவது காலத்தாலாவது மற்றெதஞலாவது நாசமடையா திருத்தலின், அட்சரமென்று சொல்லப்படுகின்றது; அல்லது நெருப்பு இரும்புப் பிண்டத்தின் உள்ளேயும் வெளியேயும் வியாபகமா யிருத்தல் போல மாயாப் பிரபஞ்சத்தின் உள்ளேயும் வெளியேயும் வியாபகமா யிருத்தலால், பிரஹ்மம் அட்சரமாம். இதன் திரண்டபொருள் உற்பத்தி நாசமின்றி யாண்டும் வியாபகமாயுள்ள பொருள் அட்சரமாமென்பதாம். ஓம் என்னும் பிரணவவெழுத்து அட்சரப் பிரஹ்மத்தின் வாசகமாயிருத்தலின் அதுவும் உபசாரமாக அட்சரமென்று கூறப்படுகிறதென்றும், அவ்வியத்தம் ஆத்மஞான முண்டாமளவும் நாசமாகாதிருத்தல் பற்றி அதுவும் உபசாரமாக அட்சரமென்று கூறப்படுகிறதென்றும் இங்குணர்தற் பாலனவாம்.

‡ (2) அட்சரப் பிரஹ்மத்தின் சொரூப பூத பிரத்தியக் சைதன்யம் இத்தேக வடிவ மித்தியான்மாவை யாசிரயித்துக்கொண்டு போக்தாவடிவமாக விருப்பதால், அத்தியான்மமென்று சொல்லப்படுகின்றது; அச்சைதன்யத்திற்கு வேருயுள்ள சுரோத்திரிய முதலிய கரணங்களின் கூட்டம் அத்யான்மமன்றென்பது இரண்டாவது விடையின் கருத்தாம்.

மூன்ருவது வினுவிற்கு விடை.

இச்சராசர வடிவமாயுள்ள பூதங்களி னுற்பத்தியைச் செய்யும் யாகம் தான முதலியனவே கருமமாம். இது மூன்ருவது வினுவிற்கு விடையாம். †

நான்காவது வினுவிற்கு விடை.

கெடுதற்குரியதா யமைந்த வுடம்பும் அதனை யானென்று கருதும் விபரீதபுத்தியும் அதிபூதமாம். இது நான்காவது வினுவிற்கு விடையாம். ‡

ஐந்தாவது வினுவிற்கு விடை.

உயிர்கள் பந்த மடைதற்குரிய இச்சரீர வடிவமாய சர்வபுரத்திலும் நிறைந்துள்ள இரணியகருப்ப னென்னும் புருஷனே அதிதெய்வமாம். இஃதைந்தாவது வினுவிற்கு விடையாம். §

ஆருவது வினுவிற்கு விடை.

குறைதலில்லாத விஷ்ணுவடிவமாயுள்ள அதியக்ஞும் வாசுதேவனுய யானேயாம். இஃது ஆருவது வினுவிற்கு விடையாம். ¶

---

† (3) உதாசீனக்கிரியை மாத்திரம் இங்குக் கருமமன்ரும்; யக்ஞம், ஓம முதலிய கருமங்களால் சராசரவடிவமாயுள்ள பூதங்களுண்டாகின்றன வென்பது சுருதி ஸ்மிருதிகளில் மிகுபிரசித்தமாம். வைதிகத்தீயில் அன்போடு இடும் ஆகுதி சூக்குமவடிவமாய்ச் சூரியமண்டலத்தில் நிலைத்திருக்கின்றது; அவ்வாகுதியோடுகூடிய சூரிய மண்டலத்திலிருந்து மழையுண்டாகின்றது; அம்மழையிலிருந்து நெல் முதலியன வுண்டாகின்றன; அந்நெல் முதலியவற்றிலிருந்து தாவரஜங்கமவடிவப் பிராணிகளுண்டாகின்றன; அந்நெல் முதலியவற்ருலேயே அந்தப் பிராணிகள் விருத்தியடைகின்றன. இவ்வாறு யக்ஞம், ஓம முதலிய கருமங்கள் சராசர வடிமாயுள்ள பூதங்களி னுற்பத்திக்குக்காரணங்களாமென்பதிங் குணர்தற் பாலதாம்.

‡ (4) பூதத்தை யாசிரயித்துப் பௌதிகமாயிருப்பது இங்கு அதிபூதமாம்; வேறற்பமாய பொருளும் இங்கு அதிபூத மன்ரும். உற்பத்தி நாசமுடைய பொருளனைத்தும் சர்வப் பிராணிமாத்திர வடிவப் பூதத்தை யாசிரயித்துண்டாகின்றனவாதலின், அவை அதிபூதமா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

§ (5) சூரியன் முதலிய தேவதைகளை யாசிரயித்து, சக்ஷு (கண்) முதலிய கரணங்களுக்கு அநுக்கிரகஞ் செய்பவன் இரணியகருப்பனுவன்; அவ்விரணியகருப்பனே இங்கதிதெய்வமாம்.

ஏழாவது வினவிற்கு விடை.

யாவர் தாம் மரணமடையுங் காலத்திலும் சித்தத்தைத் தம்வயத் தனவாகச் செய்யும் பாகிய மார்க்கமனைத்தையும் தடுத்து, தியானஞ் செய்தற்குரியவன் யானே யென்பதுணர்ந்து, சப்த முதலிய விஷய மைந்திலும் முறையே செல்லுதற்குரிய சுரோத்திர முதலிய இந்திரிய மைந்தையும் அடக்கி, தமது சித்தமானது என்னிடத்து நிலை பெற்றிருப்பதாகச் சரீரத்தை விடுதல் வடிவ மரணத்தை யடைகின்றாரோ அவர் என்னையே யடைவர். இதனிற் சிறிதும் ஐயப்பாடின்றாம். அவர்கள் தேவரீரை யடைவ தெவ்வாறுமென்று நீ வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய். §

மரணகாலத்தில் பரமேசுவரனைத்தியானஞ்செய்பவர் தவறாது அவனையே யடைவாரென முன்னர்க் கூறிய பொருளையே விளக்குதற் பொருட்டு, வேறு தேவதைகளைத் தியானஞ் செய்பவரும் தவறாது அத்தேவதைகளையே யடைவாரெனப் பகவான் கூறல்.

அருச்சுனா ! (மரணகாலத்தில் பரமேசுவரனாகிய வென்னைத் தியானஞ் செய்யு மதிகாரி புருஷன் என்னையே யடைவனென்பது நிச்

¶ (6) யாகமனைத்திற்கும் காரணராயும், யாகமனைத்தின் பலன்களை யெல்லாம் தருபவராயும் யாகமனைத்திற்கும் அபிமானியாயுமுள்ள விஷ்ணுவே அதியக்ஞமாம். அவ்விஷ்ணுமூர்த்தி வாசுதேவனாகிய கிருஷ்ண மூர்த்தியேயாம். இதனால், விஷ்ணு மக்க ளுடம்பின்கண்ணே யக்ஞவடிவமா யிருக்கின்றனர்; வியாபகமாயிருத்தலின், பரிச்சின்னமாயுள்ள புத்தி முதலியவற்றினும் வேறாவரென்பது பெறப்பட்டது; படவே, அந்தப் பரப்பிரஹ்மவடிவ விஷ்ணு அத்தியந்தம் அபேதமாகச் சிந்திக்கத் தக்கவரென்பதும் பெறப்பட்ட தென்க.

§ (7)மரணகாலத்தில் அதியக்ஞ வடிவமாகிய சகுணப்பிரஹ்மத்தையே சிந்தித்துத் தம்முடம்பை விடுபவர் தேவயான மார்க்கமாகப் பிரமலோகத்தை யடைந்து முடிவில் பரம அட்சர வடிவமாய நிர்க்குணப் பிஹ்மத்தையே யடைவர்; நிர்க்குணப் பிரஹ்மத்தையே சிந்தித்துத் தம்முடம்பை விடுபவர் தம்முடம்பை விட்டபோதே நிர்க்குணப் பிரஹ்மத்தையே யடைவர்; அவரதற்கு வேறாக வெவ்வாற்றானு மிருப்பதில ரென்பதாம். பிரஹ்மஞானியின் பிராணன் அவனுடம்பினின்றும் வெளியே செல்வதில்லை; அவ்வுடம்பினுள்ளேயே அது தன் காரணத்தின்கண் ஒடுங்கிவிடுகின்றது; அவன் தடையின்றி நிர்க்குணப் பிரஹ்மமாகவே ஆய்விடுகின்றானென்பது சுருதிப் பிரசித்தமாம்.

சயமேயாம் ; ஆயினும்,) எவன் இந்தவுடம்மை விடுவதென்னும் அம் மரண காலத்தில் யாதாவதொரு தேவதையை யாவது, வேறு பிரியம் அல்லது அப்பிரியமான பொருளையாவது தியானஞ் செய்பவனு ய்த் தன்னுடம்பை விடுகிறானே அவன் மரணத்தின் பின் அத் தியானத்தினளவாகவே அத்தியானத்தின் வலியால் அதனையே யடை யா நிற்பான். அதனால், நீ பரமேசுவரனான எனது சொரூபத்தையே யெக்காலத்திலும் மனத்தினிடத்துத் தியானமாகக்கொண்டு, என் னிடத்துள்ள சிந்தனையோடும் யுத்தத்தைச் செய்யக் கடவாய். அங் ஙனஞ் செய்வாயாயின், அதனு லென்னையே யடைவாய். இதிற் சிறிதும் ஐயப்பாடின்றாம். †

---

† மரணகாலத்தில் பரமேசுவரனைத் தியானஞ் செய்துகொண் டிறப்பவன் அவனையே யடைவானென்பது நிச்சயமே யாயினும், பரமேசுவரனை விட்டு வேறுதேவதையையாவது பிரியாப்பிரியப்பொருள்களுள் எதனையாவதுதியானம் செய்துகொண்டிறப்பவன் அதனையே யடைவன். மரணகாலத்தில் பரமேசுவ ரனைத் தியானஞ் செய்வதற்கு அதற்கு முன் வெகு காலம் பரமேசுவரத்தியா னஞ் செய்வது காரணமா யிருத்தலின், அருச்சுன ! நீ யெப்போதும் பரமேசுவ ரனுகிய வென்னையே தியானஞ் செய்துகொண்டு, என்னிடத் தர்ப்பித்த மனம் புத்திகளையுடையவனுய் உனது சுதர்ம மாகிய யுத்தத்தைச் செய்யக் கடவாய் ; அதனுல், என்னையே தவருதடைவா யென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினுரென்க.

பகவானை யிடைவிடாது தியானஞ் செய்பவர் அவன் வடிவமாகின்றன ரென்பது குளவியையே நினைத்துக்கொண் டிருந்த பசும்புழு அக்குளவியே யாவதும், நந்திகேசுவரர் இறைவனை யிடை விடாது தியானஞ் செய்திருந்தமை யால் வேறுடம்பெடாது அவ்விறைவனுக்கொப்பான வடிவமடைந்தனரென்று புராணங் கூறுவதும் இங்குணர்தற் பாலனவாம். இங்குக் கூறிய தியானம் சகு ணப் பிரஹ்மத்தியானமாம். இங்குப் பகவான் அருச்சுனனுக்கு நீ யுத்தஞ் செய் யக்கடவாய் என்று கூறியதற்குக் காரணம் அவனுக்கு அச்சமயம் யுத்தமே நேரிட் டிருந்தமைபற்றியாம்; இதுவே அவனுக்கு அச்சமயம் நித்திய கருமமாம். இக்கரு மமும் சித்தசுத்திக்குக் காரணமாயிருத்தலின், அதனைச் செய்யும்படி அவனுக்குப் பகவான் வற்புறுத்திக் கூறினுரென்க.

இங்ஙனம் அருச்சுனனது எழுவகை வினாவிற்கும் விடைகூறி,
மரணகாலத்தில் பரமேசுவரத்தியான முடையவர்க்குப்
பரமேசுவரனை யடைதலாகிய பயனையுங் கூறிய
பகவான் அதனை விரித்துக் கூறுதற்குத்
தொடங்கல்.

அருச்சுனா! சிறந்த அப்பியாச யோகத்திலும் ஞானயோகத்திலும் செல்லும் தகுதிவாய்ந்த தமது சித்தத்தை அவற்றின்கண் மிகுதியாகச் செலுத்திப் பிறிதொரு விஷயத்தையுஞ் சிந்தனை செய்யாதிருப்பவர் இவ்வளவினதென்று குறிப்பிட்டுச் சொல்லுதற்கரிய சூரியமண்டலம்போல விளங்குகின்ற பழைமையாயுள்ள திவ்விய புருஷனாகிய பரமான்மதேவனை யல்லாமல் பிறிதொன்றனை யடையார்; அப்பரமான்ம தேவன் சொரூபத்தையும் அவனை யடையும் மார்க்கத்தையும் யான் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய். *

முற்கூறிய அதிகாரிபுருஷர்க்குச் சிந்தனை செய்வதற்கும் அடைவதற்கு
முரிய பரம திவ்விய புருஷனைப் பகவான் மீண்டும் பல விசேஷ
ணங்களால் குறிப்பிட்டுக் கூறி, அவனை மரணகாலத்தில்
தவறாது நினைப்பவர் அவனையே யடைவரென்று
வற்புறுத்திக் கூறல்.

போர் செய்தற்குரிய வேலையுடைய அருச்சுனா! மூன்று காலத்திலுமுள்ள பொருளனைத்தையும் அறியும் சர்வஞ்ஞனும், உலகமனைத்திற்கும் காரணமாயிருக்கும் அநாதியும், சூரியர் சந்திரர் முதலிய யாவரையும் தனதாணையில் நிறுத்துகின்ற சர்வநியந்தாவும், உலகமனைத்திற்கும் அபின்ன நிமித்த உபாதான காரணமாயிருத்தலின்

* அப்பியாசயோகமாவது இங்கு உலக விஷயங்களுள் எதனையும் நினையாது பரமேசுவானது திவ்விய மங்கள வடிவத்தைத் தொடர்ச்சியாகச் சிந்தனை செய்திருத்தலாம்; ஞானயோகமாவது இங்குப் பிரயத்தன மில்லாமலே சித்தம் அடக்கமுடையதாய் உலக விஷயங்களுள் எதனையும் சிந்தனை செய்யா திருத்தலாம். கங்கை, யமுனை முதலிய நதிகள் முடிவில் தமது நாம ரூபங்களை யொழித்துக் கடலில் ஏகரூபத்தை யடைதல் போல, இடை விடாது பரமேசுவரத் தியானஞ் செய்பவனும் முடிவில் தனது புண்ணிய பாவங்களை யொழித்துப் பரமேசுவரனிடத்தில் ஏகரூபத்தை யடைகின்றா னென்பதிங் குணர்தற் பாலதாம்.

ஆகாய முதலிய சூக்ஷ்மப்பொருளினும் அத்தியந்தம் சூக்ஷ்மமாயிருப்பவனும், சுபாசுப கருமங்களின் பயனெவ்வளவுண்டோ அவ்வளவு பயனையும் சீவர்களின் கருமானுசாரமாக அவர்கட்குத் தனித்தனியாகக் கொடுப்பவனும், அளவிறந்த மகிமையை யுடையவனுயிருத்தலால் எவர்க்கும் சிந்தனை செய்தற்கரியவனும், எல்லா விடத்திலு முள்ள இருளை நீக்குகின்ற இளஞ்சூரியனைப்போலப் பிரகாசமுடையவனும் ஆகிய பரம திவ்விய புருஷனைப் பொருந்துதற்குரிய அன்பினையுடைய உபாசகர் தம்மரணகாலத்தில் கலங்குதலில்லாத யோகாப்பியாசமுடைய மனத்தாலே, புருவமத்தியிலுள்ள ஆஞ்ஞாசக்கரத்தில் தம்முடைய குற்றமற்ற பிராண வாயுவைச் சுழுமுனை நாடிமார்க்கமாகப் புகுமாறு செய்து நிறுத்தித் தியானித்துத் தமதுடம்பைவிட்டு, பத்தாம்வாயிலென்னும் பிரம ரந்தரத்தால் வெளியாவராயின், இங்குக் கூறிய இந்த யோகத்தினலே அப்பரமான்ம புருஷனைத் தவருது தடைவர்; இப்பொருளினை இன்னும் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய். †

பரமேசுவர பாவத்தை யடைதற் பொருட்டுப் பரமேசுவரத் தியானத்தை விதித்த பகவான், பரமேசுவரனைத் தியானிக்கும்போது அவனை ஓங்காரவடிவப் பிரணவ நாமத்தாலன்றி, வேறு மந்திரங்களால் தியானித்தல் கூடாதென்னும் நியமத்தைக் கூறல்.

அருச்சுன ! எந்த ஓங்கார நாமமுடைய பிரஹ்மத்தை வேதார்த்தங்களை யுள்ளவா றுணர்ந்த பெரியோர் அட்சரமென்றெடுத்துக் கூறுவரோ, எந்த அட்சரத்தை விஷயங்களின் மீதுள்ள விருப்பத்தை யொழித்த சந்நியாசிகள் தமது சொரூபமாக அடையா நிற்பரோ, எந்த அட்சரப் பிரஹ்மத்தை அடைய விரும்பிய சாதக புருஷராய நைஷ்டிகப் பிரஹ்மசாரிகள் காமாதி துர்க் குணங்கள் நீங்கி, குருகுல வாசஞ் செய்து, வேதாந்த சாஸ்திர சிரவண மனன முதலியவற்றைச்

---

† ஏவ்வுபாசகர் மரணகாலத்தில் சர்வஞ்ஞத்துவ முதலிய அளவிறந்த மங்கள குணங்களையுடைய பரமபுருஷனை யோகாப்பியாசமுடைய மனத்தால், தமது புருவங்களினிடையே யுள்ள ஆஞ்ஞாசக்கரத்தில் பிராணவாயுவைச் சுழுமுனை நாடி மார்க்கமாகச் செல்லச் செய்து நிறுத்தித் தியானஞ் செய்து, தம்முடம்பினை விட்டுப் பிரம ரந்தர வாயிலாக வெளியாகின்றரோ, அவ்வுபாசகர் அப்பரம புருஷனைத் தவருது தடைவரென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினரென்க. இது யோகியடையும் பயனைத் தெரிவிப்பதாம்.

செய்வரோ, எந்தப்பொருள் அந்த நிரதிசயாநந்தப் பொருளாமோ அதனையுனக்குச் சுருக்கமாகக் கூறுகின்றேன், நீ கேட்கக் கடவாய். ‡

பகவான் முற்கூறிய அர்த்தத்தைச் சாதனத்தோடு கூறல்.

யாவரினும் மேன்மை பொருந்திய அருச்சுனா! சுரோத்திரம்-துவக்கு-சட்சு-சிங்ஙுவை-கிராணமென்னு மிந்திரியமைந்தும் தத்தம் விஷயங்களில் செல்லாவாறு அவற்றை யடக்கி, மனத்தை யன்னிய விஷயங்களை நினையாதவாறு இருதய கமலத்தின்கண் நிலைபெறச்செய்து, பிராணவாயுவைக் குறைவில்லாது சிரத்தின்கணேறுமாறு செய்து, இதுவே நாம் சம்சாரத்தினின்று முய்ந்து மோட்ச மடையு மார்க்கமாமெனத் தீர்மானித்து, யோகவடிவத் தாரணையைச் செய்து, ஓம் என்னும் பிரஹ்மவடிவ ஏகாட்சரத்தை உச்சரித்தற்குரிய தன்மையோடு வாயாலுரைக்கப் பெற்று, மனம் தனித்து நின்று சராசரமனைத்திற்கும் மேலாயுள்ள பிரணவத்தின் பொருளாய பரமேசுவரனாகிய வென்

---

‡ பகவான் அருச்சுனனுக்கு எவ்வாற்றால் அட்சரப் பிரஹ்மத்தின் ஞானமுண்டாதல் கூடுமோ, அதனை அவ்வாற்றால் கூறத் தொடங்கி, அட்சரப் பிரஹ்மத்தை வேதார்த்த முணர்ந்த பெரியோர் துதி செய்கின்றன ரென்றும், அதனை யுண்மைச் சந்நியாசிக ளடைகின்றன ரென்றும், நைஷ்டிகப் பிரஹ்மசாரிகளதனை யடைய வேதாந்த சாஸ்திர சிரவண மனன முதலியவற்றைச் செய்கின்றன ரென்றும் கூறினா ரென்க.

எவன் அகார, உகார, மகாரமென்னும் மூன்று மாத்திரையுடைய ஓம் என்னும் அட்சரத்தால் பரம புருஷனைத் தியானஞ் செய்கின்றானோ அவன் அப்பரம புருஷனையே யடைகின்றான் என்று சுருதி கூறிய பிரணவோபாசனையே பகவானுக்குப் பிரியமாகலின், இவ்வெட்டா மத்தியாய முடியுமளவும் அவ்வுபாசனையின் பயனும், அதனால் மீண்டும் பிறவாமையும், அதன் மார்க்கமும் பகவானால் கூறப்படு மென்க.

ஓங்கார வடிவப் பிரணவம் பரப்பிரஹ்மத்தின் வாசகமாம், அல்லது சாலிக்கிராம முதலிய பிரதிமைகள் போலப் பிரஹ்மத்தின் பிரதீகமாம். அதனைப் பிரஹ்ம வாசக வடிவத்தாலாவது பிரதீக வடிவத்தாலாவது தியானஞ் செய்பவர் உடனே முத்தி பெறுவதிலர்; தத்துவஞான முண்டாய பிறகே முத்தி பெறுவ ரென்பதிங் குணர்தற் பாலதாம். ஒன்றில் பிறிதொன்றன் கற்பனை பிரதீகமாம்; அது சாலிக்கிராமத்தில் விஷ்ணுவைக் கற்பித்தல் போல்வதாம்.

னைத் தியானிப்பதாக விருக்க, தமதுடம்பை விட்ட வுபாசகர் நாச மாத வில்லாத தன்மை யுடைய வென்னையே யடைவர். §

(அருச்சுனா! நீ யோகாப்பியாச வல்லமை யில்லாமையால், மரண காலத்தில் பரவசராய்த் தமது தேகத்தைவிடு முபாசகர் யாது பயனை யடைவரென்று வினவுதல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா! (இந்திரிய நிக்கிரகஞ் செய்து மனத்தை யிருதயத்தின்க ணிறுத்தி, பிராண வாயுவை யுச்சியின்க ணேற்றி, ஓம் என்று உச்சரித்துக் கொண்டு என்னைத் தியானஞ் செய்தல்வேண்டுமென்று யான் முற்கூறிய) இவ்விதமாகப் பிரணவ வுபாசனையை ஒரு வருஷம் செய்தல் வேண்டும், ஆறுமாதஞ் செய்தல் வேண்டு மென்று கருதாது எப்பொழுதும் என்னுடைய சொரூபத்தையே தியானஞ் செய்கின்றவர் தம் மரண காலத்தில் சுவாதீனராகவாவது பராதீனராகவாவது தம்முடம்பை விடுவாராக; இவர்க்கு யான் சர்வப்பிரகாரத்தானும் மிகு எளிதாகக் கைவசமாவேன். எப்போதும் என்னைத் தியானஞ் செய்து எனது சொரூபத்தையே யடைய வுள்ள அவ்வுபாசகர் பொய்ப் பிறவியானது மீண்டு மடைதலைப் பொருந்தார்; எவற்றினும் மேலாய சின்மாத்திரமாயுள்ள யானாகவே விளங்குதலாகிய மோட்சத்தை யடைவர். ¶

---

§ இந்திரிய நிக்கிரகஞ் செய்து மனத்தை யிருதயத்தின்க ணிறுத்தி, பிராணனை உச்சியி லேற்றி, ஓமென் றுச்சரித்துக் கொண்டு பிரணவப் பொருளாகிய வென்னைத் தியானஞ் செய்துகொண்டே யிறப்பவர் என்னை யன்றிப் பிறிதொன்றை யடைவதில்லை யென்று பகவா னருச்சுனனுக்குப் கூறினாரெனக.

யோகவடிவத் தாரணையாவது யோககுரு கூறியவாறு மனத்தைக் குறித்த இலட்சியத்தில் வைத்தலாம்.

யோகாப்பியாசத்தோடு பிரணவ மந்திர ஜபம் செய்வதோடொழியாது அம்மந்திரத்தி னர்த்தமாகிய பரமேசுவரனைத் தியானஞ் செய்து கொண்டே மரணகாலத்தில் சுழுமுனை யென்னும் நாடி மார்க்கமாகத் தம்முடம்பை விட்டுச் செல்லு முபாசகர் தேவயான மார்க்கமாகப் பிரஹ்மலோகத்தை யடைந்து, அங்குள்ள போகங்களை யனுபவித்து, முடிவில் அகம் பிரஹ்மாஸ்மி யென்னும் தத்துவஞானத்தால் பிரஹ்ம பாவத்தை யடைகின்றன ரென்பதிங் குணர்தற் பாலதாம்.

¶ தம் மரண பரியந்தம் வேறொதனையும் தியானம் செய்யாது என்னையே

பரமேசுவர வுபாசனையால் பரமேசுவரனை யடைந்து தத்துவஞான மடைந்தவர் மீண்டும் பிறப்பதில்லை யெனக் கூறிய பகவான் பரமேசுவர வுபாசனை யில்லாமையால் தத்துவஞான மடையாதவர் தாமடைந்துள்ள பிரம்ம லோகத்தினின்றும் திரும்பி மீண்டும் பிறப்பரெனக் கூறல்.

அருச்சுனா! பிரம்ம லோகத்தை யடைந்தவரும், தம்மால் முன்பு செய்யப்பட்டுப் பொருந்திய வினைகளின் பயனை யனுபவித்துத் தீர்ந்த காலத்தில் மீண்டும் பிறப்பர். (பரமேசுவரனாகிய வுன்னை யடைந்தோரும் அவர்போன்று மீண்டும் பிறப்பாரோ வென்று நீ வினவ வேண்டாம்;) உண்மையாகப் பரமேசுவரனாகிய வென்னை யடைந்து பரமானந்தத்தைப் பெற்றிருப்பவரே மீண்டும் பிறவாத மார்க்கத்தை யடைந்தவராவர்.(பிரம்மலோகமும் காலத்தினால் முடிவுடையதாகலின், மீண்டும் பிறப்பதாமென்பதனைக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய்.) சூரிய சந்திராது கதியைக்கொண்டறியும் பகலிரவினும் வேறாய பிரம்மாவின் பகலிரவைக் கூறுமிடத்து, அவனுக்கு ஆயிரம் சதுர்யுகங்கொண்டகாலம் ஒரு பகலாம்; இங்ஙனமே ஆயிரம் சதுர்யுகங்கொண்ட காலம் ஓரிரவாம். இங்ஙனமாய பகலிரவுகளைக் கொண்ட நூறு வருஷ காலம் அப்பிரமனுக்குக் குறையாதுள்ள ஆயுட்காலமாம். எண்பத்துநான்கு லட்சம் யோனிபேதமுடைய பிராணி யனைத்தும் அந்

தியானஞ் செய்து வருகின்றவர்க்கு யான் சுலபமாக விருக்கின்றேன்; அவர்க்குப் பிறப்புண்டோ? இல்லையோ வென்று நீ ஐயுறல் வேண்டாம். என்னை யடைந்த அவர்கள் மீண்டும் எவ்வகைத் துக்கத்திற்கு மிருப்பிடமாயும் அநித்தியமாயுமுள்ள பிறப்பினை யடையார்; சின்மாத்திரமாய் விளங்குவதாய மோட்சமே யடைவரென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினா ரென்க.

இங்குக் கூறிய வுபாசகர் தமது மரணகாலத்தின் பின் தமது உபாசனையின் வலியால் தேவயான மார்க்கமாகப் பிரம்மலோகத்தை யடைந்து, அங்குப் பலவகைத் திவ்விய போகங்களை யடைந்து, முடிவில் தத்துவஞான முடையவராய்க் கைவல்ய மோட்ச மடைவ ரென்பதிங் குணர்தற் பாலதாம்.

பிரம்மலோக மென்பதொன்றே சிவோபாசகர்க்குச் சிவலோகமாகவும், விஷ்ணு உபாசகர்க்கு விஷ்ணு லோகமாகவும் தோன்றும் மகிமை யுடையதாமென்பது மிங்குணர்தற் பாலதாம்.

தப் பிரம்மனது ஒருநாளின் முற் பகுதியாகிய பகலிற்றோன்றிப் பிற் பகுதியாகிய இரவிலழியும் தன்மை யுடையனவாம். *

* இங்குக் கூறிய பிரமலோகம் ஏனைய சுவர்க்க முதலியவற்றிற்கு முபலட்சண மாம்.

பிரம்ம லோக முதலியவற்றைத் தாம் செய்துள்ள புண்ணிய கருமத்தாலடைந்தவர்கள் அக்கருமத்தின் பயனை யனுபவித் தொழிந்த பின் மீண்டும் பிறப்பர்; பரமேசுவரனாகிய வென்னை யடைந்து பரமாநந்தத்தைப் பெற்றிருப்பவரே மீண்டும் பிறவாத மார்க்கத்தை யடைந்தவராவர்; பிரம்மன் குறிப்பிட்ட நூறு வயதுள்ளவனாவன்; பிராணி யனைத்தும் அவனது பகற்காலத்திற் றோன்றி யிராக்காலத்தி லழியுந் தன்மையுடையனவா மென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினரென்க.

பிரணவோபாசனையால் தேவயான மார்க்கமாகப் பிரம்மலோகத்தை யடைந்தவர் அங்குண்டாய தத்துவஞானத்தால் பிரம்மனோடு மோட்ச மடைவர்; அவர்க்குப் பிறப்பில்லை; பஞ்சாக்கினி வித்தை முதலிய சாதனங்களால் பிரமலோகத்தை யடைந்தவர்க்கு அங்குத் தத்துவஞான முண்டாவதில்லையாம்; அதனால், அவர் மீண்டும் பிறப்பர்; சுவர்க்கலோக முதலியவற்றை யடைபவர் தவறாது மீண்டும் பிறப்பரென்னும் விஷயம் இங்குணர்தற் பாலதாம்.

சத்திய யுகமென்னும் கிரேதாயுகத்திற்கு வருஷம் பதினேழு லட்சத்து இருபத்தெண்ணாயிரமாம்; திரேதா யுகத்திற்கு வருஷம் பன்னிரண்டு லட்சத்துத் தொண்ணூற்றாறாயிரமாம்; துவாபர யுகத்திற்கு வருஷம் எட்டுலட்சத்து அறுபத்தெண்ணாயிரமாம்; கலியுகத்திற்கு வருஷம் நான்கு லட்சத்து முப்பத்தீராயிரமாம். பிரம்மாவிற்கு இச்சதுர்யுகம் ஆயிரங்கொண்ட காலம் பகலாம்; இங்ஙனமே இச்சதுர் யுகம் ஆயிரங்கொண்ட காலம் இரவாம்; இங்ஙனம் பகலு மிரவுங் கொண்ட நாள் பதினைந்து பட்சமாம்; இப்பட்ச மிரண்டு கொண்ட காலம் மாதமாம்; இம்மாதம் பன்னிரண்டு கொண்ட காலம் வருஷமாம். இவ்வருஷம் நூறுகொண்ட காலம் பிரம்மாவின் பரமாயுளாம். இந்த நூறுவருஷ காலத்தில் முன் ஐம்பதுவருஷ காலம் பிரதம பரார்த்த மென்றும், பின் ஐம்பது வருஷ காலம் துவிதீய பரார்த்த மென்றும் சொல்லப்படுகின்றன. இந்த நூறு வருஷமான பின் பிரம்மா நாசமடைகின்றன னென்னும் கிரமமும், அந்தப் பிரமாவினும் தாழ்ந்தவராகிய இந்திரன் முதலிய தேவர்களும் மற்றப் பிராணிகளும்அப்பிரம்மாவினது பகற்காலத்திற் றோன்றி யிராக்காலத்தி லழிகின்றன ரென்னுங் கிரமமும் இங்குணர்தற் பாலனவாம். பிரம்மாவின் பகலென்னும் சிருஷ்டி காலத்திலும் இராவென்னும் பிரளய காலத்திலும் ஆகாயாதி பூதங்கள் உற்பத்தி நாசமின்றித் தாமிருந்த படியே யிருக்கு மென்பது மிங்குணர்தற் பாலதாம்.

பகவான் உண்மையாகப் பரமேசுவரனாகிய வென்னை யடைந்து பரமா நந்தத்தைப் பெற்றிருப்பவரே மீண்டும் பிறவாத மார்க்கத்தை யடைந்தவ ராவ ரேன்று முன்னர்க் கூறியதை விவரித்துக் கூறல்.

அருச்சுனா ! முற்கூறிய கிரமத்தில் தோன்றுகின்ற வியத்தத் துடன் அவ்வியத்தத்தை யடையாத சத்தா வடிவப் பாவமென்றும், இந்திரிய வுணர்வு கெடுதற்குரிய உடம்பினிடத்து அழியாதுள்ள உணர்வென்றும், புதுவதாகத் தோன்றிய தன்றென்றும், இந்திரிய வாயிலாக அறிதற் கரிய தென்றும், அழியாத பொருளென்றும், தன்னை யடைந்த அதிகாரிபுருஷர் பின்னர்ப் பிறப்பினை யடையாத ஸ்தானமென்றும் பெரியோர் கூறுவது எனது சொரூபத்தையேயாம். இதனை நீ அறிவாயாக. †

முன்னர்க் கூறிய பத்தி யோகமே பரம கதி யென்னும் மோட்ச மடைதற்கு உபாயமா மெனப் பகவான் கூறல்.

அருச்சுனா! எவ்வகைப்பட்ட பூதங்களும் எந்தப் புருஷனிடத் தொடுங்கி யிருக்கின்றனவோ, சர்வ பூதங்களிலும் எந்தப் புருஷன் வியாபித் திருக்கின்றானோ, அந்த நிரதிசய பரமான்ம புருஷனாயுள்ள வென்னை அநந்நிய பத்தியாலேயே அடைதல் வேண்டும்; அந்நிய

---

† வியத்தம் அவ்வியத்த மென்றது இங்குப் பிரமாவின் சகலாவஸ்தையும் கேவலாவஸ்தையுமாம். சகலாவஸ்தை யென்பது நனவென்னும் சாக்கிராவஸ் தையாம் ; கேவலாவஸ்தை யென்பது உறக்கமென்னும் சுழுத்தியவஸ்தையாம். சொப்பனம் சகலாவஸ்தையி லந்தர்க்கதமாம்.

வியத்தம் அவ்வியத்த மென்பன வற்றிற்கு வேறா யிருத்தலால் சத்தாவடிவப் பாவமாய், சரீரம் நாசமடையினும் உணர்வு மயமாய்த் தான் நாசமடையாதிருத்த லின் நித்தியமாய், புதுவதாகத் தோன்றா திருத்தலின் சநாதனமாய், சுரோத்திர முதலிய விந்திரியங்கட்கு விஷய மாகாதிருத்தலின் அவ்வியத்தமாய், அழியாது என்று மிருத்தலின் அட்சரமாய், தன்னை யடைந்த அதிகாரி புருஷர் பின் னர்ப் பிறப்பினை யடையாத ஸ்தானமா யிருப்பது எனது சொரூபமா மென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினாரென்க. எனது சொரூபமெனப் பகவான் கூறியது என துயிர், இராகுவின் தலை என்றாற் போல்வதாம். பிரஹ்மம் உருவ முதலிய குணங்களில்லா திருத்தலின், நேத்திர முதலிய இந்திரியங்களுக்கு விஷயமாகா திருக்கின்ற தென்க.

பத்தியா லடைதல் முடியாது. எம்மார்க்கத்திற் செல்லுங் காலம் வரும்போ திறந்தவர் பிறவாதவ ராகின்றனர்; எம்மார்க்கத்திற் செல்லுங் காலம் வரும்போ திறந்தவர் பிறக்கின்றனரென்று நீ வினவுவாயாயின், அவர் அம்மார்க்கத்திற் செல்லுங் காலத்தை உனக்கு விளங்கக் கூறுகின்றேன், நீ அதனைக் கேட்பாயாக. §

பகவான் முன்னர்த் தேவயானமார்க்கத்தையும் அதனைத் துதிசெய்தற் பொருட்டுப் பின்னர்ப் பிதிருயான மார்க்கத்தையும் கூறல்.

அருச்சுனா! ஜோதி வடிவமாய அக்கினி யபிமான தேவதையும், பகலும் சுக்கிலபட்சமு மென்னும் காலங்களி னபிமான தேவதைகளும் ஆகிய அத்தேவதைகளோடுகூடி ஆறுமாத காலத்தில் உத்தராயண மென்னும் தேவயான மார்க்கத்தில் மரணமாய்ச் சென்று சகுணப் பிரஹ்மத்தை யடையும் சகுணப்பிரஹ்ம வுபாசகர் மீண்டும் பிறப்பதில ராவர்; தூமாபிமான தேவதையும், இராத்திரியும் கிருஷ்ண பட்சமு மென்னும் காலங்களி னபிமான தேவதைகளுமாகிய அத்தேவதைகளோடுகூடி ஆறுமாத காலத்தில் தட்சிணாயன மென்னும் பிதிருயான மார்க்கத்தில் மரணமாய்ச் செல்லும் கருமயோகி புருஷன் (சுவர்க்க மென்னும் பெயருடைய சந்திரலோகத்தில் தான் செய்துள்ள புண்ணிய கருமங்களின் பயனை யனுபவித்த பின்னர் எஞ்சியுள்ள கருமங்களின் வசத்தால்) எவ்விடத்தும் பிறத்தற் குரியவனாவன். ¶

---

§ பரமேசுவரனிடத் தன்றி மற்றவற்றின்க ணுண்டாகாத பிரேமை யென்னும் அன்பே இங்கு அநந்நிய பத்தியாம். சர்வ பூதங்களும் எவனிடத் தடங்கியிருக்கின்றனவோ, எவன் சர்வ பூதங்களிலும் வியாபாகமா யிருக்கின்றானோ, அந்த நிரதிசய பரமான்ம புருஷனாகிய வென்னை அநந்நியமான பத்தியினாலேயே அடைதல்வேண்டும், பிறிதொரு பத்தியினா லடைதல் கூடாது; இறந்தபின் இம்மார்க்கத்திற் செல்பவர் பிறவாதவராகின்றனர்; இம்மார்க்கத்திற் செல்பவர் பிறக்கின்றனரென்பதனையும் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாயென்று பகவா னருச்சுனனுக்குக் கூறினாரென்க.

¶ எம் மார்க்கத்தில் ஜோதி வடிவமாய அக்கினி யபிமான தேவதையும் பகற்கால அபிமான தேவதையும் சுக்கிலபட்ச அபிமான தேவதையும் ஆறுமாதமாகிய உத்தராயணமு மிருக்கின்றனவோ அம்மார்க்கம் தேவயான மார்க்கமாம்; அம்மார்க்கத்தில் தாமிறந்தபின் செல்லும் சகுணப் பிரஹ்ம வுபாசகர் அச்சகுணப்

பிரஹ்மத்தையே யடைகின்றனர்; அவர்கள்மீண்டும் பிறப்பதில்லை. எம்மார்க்கத்தில் புகையென்னும் தூமத்தி னபிமான தேவதையும் இராக்கால அபிமானதேவதையும் கிருஷ்ணபட்ச அபிமான தேவதையும் தட்சிணயனமு மிருக்கின்றனவோ அம்மார்க்கம் பிதிருயான மார்க்கமாம். அம்மார்க்கத்தில் தாமிறந்த பின் செல்லும் கருமயோகிகள் சுவர்க்கமென்னும் சந்திரலோகத்தை யடைந்து, அங்குச் சுகத்தை யடைதற் கேதுவாயுள்ள கருமபலத்தை யனுபவித்தபின்னர் யாண்டேனு மோரிடத்தில் தமது கருமத்திற் கேற்றவாறு பிறக்கின்றனரென்று பகவா னருச்சுனனுக்குக் கூறினரென்க.

தை-மாசி-பங்குனி-சித்திரை-வைகாசி-ஆனியென்னு மிவ்வாறுமாதகாலமும் உத்தராயண காலமாம்; ஆடி-ஆவணி-புரட்டாசி-ஐப்பசி-கார்த்திகை-மார்கழியென்னு மிவ்வாறுமாத காலமும் தட்சிணயன காலமாம். உத்தராயணம், தட்சிணயனமென்று மேற்கூறியிருப்பதற்கு, அவற்றின் அபிமான தேவதைகள் என்று பொருள் கொள்க.

உத்தராயண மார்க்கத்திற்கு அக்கினி யபிமானதேவதை முதலிய நான்கு தேவதைகள் கூறப்பட்டிருப்பினும், வருஷாபிமான தேவதை முதலிய தேவதைகளும், பிதிருயான மார்க்கத்திற்குத் தூமாபிமானதேவதை முதலிய நான்கு தேவதைகள் கூறப்பட்டிருப்பினும் பிதிர்லோகாபிமான தேவதை முதலிய தேவதைகளும் இங்குக் கொள்ளற் பாலனவாம். தாமிறந்தபின் சகுணப்பிரஹ்ம வுபாசகர் தேவயான மார்க்கமாகப் பிரஹ்மலோகத்திற்குச் செல்லுங் கிரமம் வருமாறு:—

(1) சகுணப்பிரஹ்ம உபாசகர் மரணமாங்காலத்தில் அர்ச்சியென்னும் அக்கினி யபிமான தேவதை அவரை அவர் தம் சரீரத்தினின்றும் வெளியாக்கி, தன்னுலகத்திற்குக் கொண்டுபோகின்றது; (2) பின், பகலபிமான தேவதை அவரை அங்கிருந்து தன்னுலகத்திற்குக் கொண்டுபோகின்றது; (3) பின், சுக்கிலபட்ச அபிமானதேவதை அவரை யங்கிருந்து தன்னுலகத்திற்குக்கொண்டுபோகின்றது; (4) பின், உத்தராயண கால அபிமான தேவதை அவரை யங்கிருந்து தன்னுலகத்திற்குக் கொண்டுபோகின்றது; (5) பின், வருஷ அபிமானதேவதை அவரை யங்கிருந்து தன்னுலகத்திற்குக் கொண்டுபோகின்றது; (6) பின், தேவலோக அபிமானதேவதை அவரை யங்கிருந்து தன்னுலகத்திற்குக் கொண்டுபோகின்றது; (7) பின், வாயு அபிமானதேவதை அவரை அங்கிருந்து தன்னுலகத்திற்குக் கொண்டுபோகின்றது; (8) பின், சூரியதேவதை அவரை யங்கிருந்து தன்னுலகத்திற்குக் கொண்டு போகின்றது; (9) பின், சந்திர தேவதை அவரை யங்கிருந்து தன்னுலகத்திற்குக் கொண்டு போகின்றது; (10) பின், மின்னலபிமான தேவதை யவரை அங்கிருந்து தன்னுலகத்திற்குக் கொண்டுபோகின்றது; (11) பின், அவ்வுலகத்தில் இரணிய கருப்பரது கட்டளையால் இரணியகருப்ப லோகவாசியும் அவ்விரணிய கருப்பரை யொத்த வடிவமுடையவனுமாகிய அமானவ

புருஷனென்னும் ஒரு திவ்விய புருஷன் அவர் முன்வந்து, அவரை வருணலோகத்திற்குக் கொண்டுபோகின்றான்; மின்னலபிமான தேவதை அவனுடனே செல்லும்; (12) பின், அவ்வமானவ புருஷன் அவரை வருணலோகத்திலிருந்து இந்திரலோகத்திற்குக் கொண்டுபோகின்றான்; வருண தேவதையும் இந்திர லோக பரியந்தம் அந்த அமானவ புருஷனும் அவ்வுபாசகருடனு மிருக்கின்றது; (13) பின், இந்திரதேவதை அமானவ புருஷனும் உபாசகருமாகிய அவ்விருவரோடும் பிரஜாபதி யுலகம்வரையிற் செல்லும்: (14) பின், பிரஜாபதி அவ்விருவரோடும் பிரஹ்மலோகத்திற்குப் போவதற்குச் சாமர்த்திய மில்லாதவனுவன்; அதனுல், அவ்வுபாசகரை அந்த அமாநவபுருஷன் பிரஹ்ம லோகத்திற்குக் கொண்டுபோகின்றான். இவ்வாறு சகுணப்பிரஹ்ம வுபாசகர் தாமிறந்தபின் பிரஹ்மலோகத்தை யடைகின்றன ரென்பதிங் குணர்தற்பாலதாம். அவ்வுபாசகர் அங்குச் சகுணப்பிரஹ்ம மென்னும் இரணியகருப்பரை யடைந்து, பின் அது வாயிலாக நிர்க்குணப் பிரஹ்மத்தை யடைந்து பிறப்பில்லாதவ ராகின்றன ரென்க.

பிரஹ்மலோகத்தி னதிபதி இரணியகருப்பராவர்; சூட்சும சமட்டியி னபிமான சேதனம் இரணிய கருப்பரென்று கூறப்படுகின்றது. காரியப் பிரஹ்மமென்றது இரணிய கருப்பரையாம். பிரஹ்ம லோக மென்பது இரணிய கருப்பரிருப்பிடமாம்.

கருமயோகிகள் தாமிறந்தபின் பிதிருயான மார்க்கமாகச் சுவர்க்கலோகத்திற்குச் செல்லுங் கிரமம் வருமாறு:—

(1) கருமயோகிகள் தாம் மரணமடைந்தபின், தூமாபிமான தேவதையை யடைகின்றனர்; (2) பின், இராத்திரி யபிமான தேவதையை யடைகின்றனர்; (3) பின், கிருஷ்ணபட்சாபிமான தேவதையை யடைகின்றனர்; (4) பின், தட்சிணயன அபிமான தேவதையை யடைகின்றனர்; (5) பின், பிதிர்லோகாபிமான தேவதையை யடைகின்றனர்; (6) பின், ஆகாசாபிமான தேவதையை யடைகின்றனர்; (7) பின், சந்திரனை யடைகின்றனர். இவ்வாறு கருமயோகிகள் தாமிறந்தபின் சுவர்க்கமென்னும் சந்திரலோகத்தை யடைகின்றனரென்பதிங் குணர்தற்பாலதாம். அக்கருமயோகிகள் அங்குத் தாம் அனுபவித்தற்குரிய கருமங்களின் பயனை யனுபவித்தபின், தமது எஞ்சிய கருமத்திற்கேற்றவாறு எங்கேனு மோரிடத்திற் பிறக்கின்றனரென்க.

இஷ்டம்-பூர்த்தம்-தத்தமென்னும் மூவகைக் கருமங்களைச் செய்தவரே இங்குக் கருமயோகிகளென்று கூறப்படுகின்றனர்.

(1) அக்னிஹோத்திர முதலிய கருமங்கள் இஷ்ட கருமமாம்; (2) எரி-கிணறு-குளம்-தருமசாலை முதலியவற்றை யமைக்கும் கருமங்கள் பூர்த்த கரும

பகவான் அந்தத்தியானவடிவ யோகத்தில் அதிகாரிகட்கு விசுவாசத்தை மிகுதியாக வுண்டாக்குதற்பொருட்டு, மீண்டு மதனைத் துதித்தல்.

அருச்சுனா! (தேவயான மார்க்கமென்னும் சுக்கிலமார்க்கம் கிரமமுத்தியைத் தருவதாம்; பிதிருயானமார்க்கமென்னும் கிருஷ்ணமார்க்கம் மீண்டும் பிறவியைத் தருவதாமென் றிங்ஙனம்) இவ்விரண்டு மார்க்கங்களையும் ஆராய்ந்தறியும் சகுணப் பிரஹ்மத்தியான பராயண புருஷன் பிதிருயான மார்க்கத்திற் செல்லுதற்குரிய இஷ்ட பூர்த்த தத்தகருமங்களே யான் செய்தற்குரியனவாமென்னும் விபரீதபுத்தி யடைவதில்லாது, இருக்கு முதலிய வேதங்களை யத்தியயனஞ்செய்து, அசுவமேத முதலிய யாகங்களும், பசு சுவர்ணமுதலிய தானங்களும், கிருச்சிரம்-சாந்திராயண முதலிய தவங்களும் செய்திருப்பவர் வசிப்பதற்குக் காரணமாயுள்ள சிறந்த பதவிகளையடைந்து, முடிவில் சிறந்தனவென்பவற்றுளெல்லாம் மிகச் சிறந்ததாயுள்ள மோட்சத்தையு மடைவான். ஆதலால் நீ அந்தத்தியான யோகத்தை யனுஷ்டிப்பாயாக என்றருளிச் செய்தனர். *

8-எழுவகை வினவுரைத்த அத்தியாய முற்றிற்று.

மாம்; (3) தக்கார்க்கு அறநெறியாற் றேடிய பொருளைத் தானஞ்செய்தல் தத்த கருமமாம்.

சுவர்க்கலோகமென்பது சந்திரமண்டலமா மென்பதிங்குக் குறிப்பிட்டறிதற்பாலதாம். இங்குக்கூறிய தேவயானமார்க்கம் பிதிருயானமார்க்கமென்னு மிரண்டனுள், முன்னது புனராவிருத்தியில்லாததாயும், பின்னது அஃதுடையதாயுமிருத்தலின், முன்னது மிகச் சிரேஷ்டமானதாம். புனராவிருத்தி-மீண்டும் திரும்பி வருதல். இவ்விரண்டு மார்க்கமேயன்றி வேறிரண்டு மார்க்கமு முண்டு. அவை ஜாயஸ்வமிரியஸ்வமார்க்கம், பிரஹ்மஞானமார்க்க மென்பனவாம். இவற்றுள், முன்னது அடிக்கடி ஜனன மரணங்களுக்குக் காரணமான யமலோகத்திற்குச் செல்லு மார்க்கமாம்; பின்னது சர்வதுக்க நிவிர்த்தி-பரமாநந்தப் பிராப்தி வடிவமோட்ச மார்க்கமாம். அது யான் பிரஹ்மமென்றுணரும் தத்துவஞானமாம்.

* தேவயானமார்க்கம் பிதிருயானமார்க்கமென்னு மார்க்க மிரண்டனையும் ஆராய்ந்து விபரீதபுத்தி யில்லாதிருப்பவன், வேதாத்தியயனம், யாகம், தவமுதலியவற்றைச் செய்தவ ரடையும் புண்ணிய லோகத்தை யடைந்து, முடிவில் மோட்சத்தையும் அடைகின்றான். அதனால், அருச்சுனா! நீ அந்தத்தியான யோகத்தையே செய்யக்கடவாயென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினாரென்க.

9 - மாயாவிகார அத்தியாயம்.

எட்டாவ தத்தியாயத்தில் யோகத்தால் தனதிச்சையை முன்னிட்டுத் தேகத்தினின்றும் நீங்கித் தேவயான மார்க்கத்தால் பிரஹ்ம லோக மடைந்த உபாசக புருஷன் அவ்வுலகத்தின்கண் திவ்விய போகங்களை யனுபவித்த பின்னர்ப் பிரஹ்ம ஞான மடைவது வாயிலாக அவ்வுலகத்திற்கு நாச முண்டாம் போது பிரஹ்மப் பிராப்திவடிவ மோட்ச மடைகின்ருனென்று பகவா னருளிச் செய்ததன்கண் ஓர் ஐயப்பாடு நிகழ்வதாம்; அஃது அவ்வுபாசக புருஷனுக்கு மோட்சம் தேவயான மார்க்கத்தி லன்றி வேறு மார்க்கத்தினு முண்டா கின்றதா என்பதாம். அவ்வையப்பாட்டை நீக்குதற்பொருட்டு இவ்வத்தியாயம் ஆரம்பிக்கப்படுகின்றது. முன் னத்தியாயத்தில் தியேயப் பிரஹ்மத்தை நிரூபித்து, அதனைத் தியானஞ் செய்கின்றவ ரடையும் பயன் கூறப்பட்டது; இவ் வொன்பதாவ தத்தியாயத்தில் ஞேயப் பிரஹ்மத்தை நிரூபணஞ் செய்வது வாயிலாக ஞான நிஷ்டர்க ளடையும் பயன் கூறப்படுகின்றது.

தான் அந்தரியாமியாக விருந்தும் கருமுகி லெழுந்தாற்போலத் தன்னை அருச்சுனன் கண் டன்புற்றுக் களிப்படைந்துயர, வெளிப்

தேவயானமார்க்கம்ஞானவடிவப் பிரகாச மதிகமாகவுடைய அக்கினிமுதலிய தேவதைகளை யுடையதாயும் பிரகாசவடிவச் சகுணப்பிரஹ்ம வுபாசனையாலடைவதாயும் பிரகாசவடிவப் பல வுலகங்களுடையதாயும் சுயம்பிரகாசமாய பிரஹ்மத்தை யடைவதற்குக் காரணமாயு மிருத்தலின் சுக்கிலமார்க்கமென்றும், பிதிருயான மார்க்கம் ஞானமயப் பிரகாச மில்லாமையால் தமோமயமாயும், அப்பிரகாச வடிவப் புகை இரவு முதலியவற்றுடன் கூடியதாயும், மீண்டும் பிறத்தற்குக் காரணமாயு மிருத்தலின் கிருஷ்ண மார்க்கமென்றும் கூறப்படுகின்றனவென்க.

இவ்வெட்டாவது அத்தியாயத்தின்கண் பகவான் தியானிக்கத்தக்கவாறு கத் தத்பதார்த்தத்தை அருச்சுனனுக்குத் திருவாய் மலர்ந்தன ரென்க.

இவ்வெட்டாவதத்தியாயத்தில் அருச்சுனன் வினவிய எழுவகை வினக்கட்கும் பகவான்கூறிய விடைகளை நன்குணர்ந்து, உணர்ந்தவாறொழுகுபவர் வேதாத்தியயனஞ்செய்தல் முதலிய புண்ணிய கருமங்களின் பயன்களையெல்லா மடைவாரென்பதிங் குணர்தற்பாலதாம்.

பட்டுத் தோன்றி, அவனது தேரிற் பூட்டியுள்ள வெள்ளைக் குதிரைகளை அவற்றின்கடிவாளத்தைப்பற்றுதல் வாயிலாகச்செலுத்த அதன்கணெழுந்தருளியுள்ள பகவான், சித்தத்தை வருத்தும் வலிய துன்பங்களை நீக்கும் பதம் முன் னத்தியாயத்திற் கூறிய கிரமமுத்தியோ பிறிதொன்றோவென்று தன்னிடத் தன்புகொண்டுள்ள அருச்சுனன் தன்னகத்தின்கண் கொண்டுள்ள சந்தேகத்தை அவனது முகக்குறிப்பாலறிந்து, அதனை நீக்குதற்பொருட்டுச் சில கூறுகின்றார்:—

மோட்ச மடைதற்குச் சகுணப் பிரஹ்மத் தியானம் பரம்பரா சாதனமாயும், ஆத்மஞானம் நேர் சாதனமாயு மிருக்கின்றன; அதனால், அவ்விரண்டனுள் பின்னதே சிரேட்டமாமென்பது தோன்றப் பகவான் அதனைத் துதிசெய்தல்.

அருச்சுன! உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் வருகின்ற ஞான மனைத்தினுக்கும் தலைமை பெற்று அனுபவ சகிதமா யுள்ள ஞானத்தை, குய்யமாயுள்ள பொருளனைத்திற்கும் தலைமைபெற்று மிகக் குய்யமாயுள்ள பொருளை, மேன்மை பொருந்திச் சிறிதளவாக வேனும் துன்பந்தருவதென்ப தின்றி முன்னே பொருந்தி யிருப்பதை, அடையப்படுவதும் அடைந்திருப்பதுமாகிய பாவனைகளனைத்தும் ஒழியும்படி உத்தமமான பவித்திரமா யிருப்பதைக் கூறுகின்றேன்; அதனை நீ கவனமாகக் கேட்கக்கடவாய். (குய்யம் - இரகசியம்) †

மீண்டுமேதனையே துதிசெய்தல்.

அருச்சுன! இவ்வாத்ம ஞானமானது அழிவில்லாத பயனைத் தருவதாம்; சுதர்மத்தின் பயனாக வுண்டாவதாம்; சற்குருவின்

---

† ஆத்மஞானம் மற்ற ஞானங்களைப் போலாகாது அஞ்ஞானத்தை அதன் காரியத்தோடு கெடுப்பதா யிருத்தலின் ஞானங்களுள் தலைமைபெற் றிருக்கின்றதென்றும், அடைதற்கரியதா யிருத்தலின் மிகக் குய்யமா யுள்ளதென்றும், சிறிதளவும் துன்ப மில்லாத நிலையைத் தருதற்குரியதா யிருத்தலின் துன்பமில்லா திருப்பதென்றும், கருமங்கள் பாவனை யுள்ள பதவிகளைத் தருதல் போலாகாது பாவனையற்ற நிலையைத் தருதலின் உத்தமமான பவித்திரமா யிருக்கின்றதென்றும் கூறப்பட்டதென்க. அனுபவசகிதமா யுள்ள ஞானம் - நான் பிரஹ்ம சொரூப னென்னும் அபரோட்சானுபவ பரியந்த முள்ள ஞானமாம்.

கருணையைச் சம்பூர்ணமாக வுடையவர்க்கு மிகவெளிதாகப் பெறுதற் குரியதாம்.

(அருச்சுனா! நீ ஆத்மஞான மித்தன்மையதாயின், அதனை யாவரு மடைய ஏன் முயற்சி செய்யா திருக்கின்றன ரென்று வினவு தல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுனா! இத்தன்மையதாய ஆத்மஞானத்தின்கண், அதனைப் பெறுதற்கு வழியாயுள்ள சிரத்தை யில்லாதவர் பரமேசுவரனாயுள்ள வென்னை யெவ்வுலகத்திலு மடையாமல் இழிவைத் தருகின்ற ஜனனத்தை யடைந்தும் மரணத்தை யடைந்தும் இவ்வாறே யுழன்று இகத்திலும் பரத்திலும் தமது கருமத்திற் கேற்றவாறமைந்த கீட பதங்க முதலிய யோனிகளிற் பிறந் தலைவர். ‡

முன்னர்ப் பிரதிஞ்ஞை செய்த ஆத்மஞானத்தை உடன்பாட்டு வாயி லாகவும் எதிர்மறைவாயிலாகவும் துதித்து, அதனிடத் தருச்சுனனை யபிமுகமாக்கிய பகவான் இப்போததனைக் கூறுகின்றார்.

அருச்சுனா! யாவராலும் சட்சுமுதலிய கரணங்களால் அறியப் படாமையால் அவ்வியக்த மூர்த்தி யென்னும் சொப்பிரகாச அத்விதீய சச்சிதாநந்த சொரூபத்தையே எனக்கு வடிவமாகவுடைய பரமேசு வரனாகிய நான் ஆதேயமாக என்னிடத்தில் தங்கியுள்ள உலகங்களை முற்றும் இருத்தல் விளங்கலென்னும் சத்தாஸ்பூர்த்தியினால் நிறையச் செய்திருக்கின்றேன். அங்ஙனமிருத்தலினால், உலகிலுள்ள சராசரப்

---

‡ ஆத்மஞானம் ஞானம் பலவற்றுள்ளும் மிகச் சிரேஷ்டமாயும், இரகசியப் பொருள்களுள் மிக விரகசியப் பொருளாயும், தத்துவமசி யென்னும் பிரத்தியட்சப் பிரமாண வாக்கியத்தா லுண்டாவதாயும், உத்தம பவித்திரமா யுள்ளவற்றுள் மிக வுத்தம பவித்திரமாயும், அழியாத பயன் தருவதாயும், சுதருமத்தா லுண்டா வதாயும், மிக வெளிதிற் பெறுதற் குரியதாயு மிருக்கின்றது; ஆனா லது தன் மீது விசுவாச மில்லாதவர் பெறுதற்கு மிக வரிதா யிருப்பது; அதனைப் பெறா தவர் என்னை யெவ்விடத்து மடையாது, சம்சார மண்டலத்தில் உருமாறிப் பல பிறப்பும் பிறந்துஞ் செத்தும் உழன்று வருகின்றன ரென்று பகவான் அருச் சுனனுக்குக் கூறினாரென்க.

சம்சார மண்டலத்தில் சுழல்வதற்குக் காரணம் ஆத்மஞானத்தின்கண் சிரத்தை யில்லாமையேயா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

பொருளனைத்தும் என்னையே பொருந்தி யிருக்கும்; அவற்றை யான் பொருந்தி யிருப்பவ னல்லன். (அருச்சுன! நீ எனது தேரினிடத்துக் கண்ட வடிவா யெழுந்தருளியுள்ள நீர் யான் சர்வ வியாபகமா யிருக்கின்றேனென்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? அது பிரத்தியட்ச விரோதமாமென்று வினவுவாயாயின், அதற்கு விடைகூறுகின்றேன், கேட்கக்கடவாய்.) யான் பிரபஞ்சத்தில் பொருந்தும்படி நிற்கின்றாற்போல எனது அவ்வியக்த சொரூபத்தையறியாதவரது ஊனக் கண்ணுக்கு எனது வடிவம் விளங்கு கின்றது. (அதனை யறிந்தவர்க்கோ அஃ தவ்வாறு விளங்குவ தில்லையாம்.) $

(அருச்சுன! நீ தேவரீர் உண்மை நோக்கில் அவ்வியக்த மூர்த்தி யாகலின், உலகின்கண் வாஸ்தவமாக இருத்தல் கூடாதென்பது ஒக்குமாயினும், உலகு தேவரீரிடத்தில் வாஸ்தவமாக இருத்தல்கூடு மன்றோ வென்று வினவுதல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுன! சிருஷ்டிக்குமுன் பரமேசுவரனாகிய யான் யாதொன்றோடும் சம்பந்த மில்லாமலே யிருப்பன்; (பின், கயிற்றிற் றோன்றும் அரவின் வடிவ முற்றும் கயிறேயாய் நின்றாற்போல) சர்வப் பிரபஞ்சமு

$ அவ்வியக்த மூர்த்திவடிவப் பரமேசுவரனாகிய யான் உலகனைத்திலும் வியாபித்திருக்கின்றேன்; அதனால் உலகனைத்தும் என்னிடத்திருப்பனவாம்; நானோ அவ்வுலகின்க ணிருப்பவனல்லன்; இவ்வுண்மை எனது அவ்வியக்த சொரூபத்தை யறிந்தவர்க்கு விளங்கும்; மற்றவர்க்கு விளங்காதென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினாரென்க. சட்சுமுதலிய கரணங்கட்கு விஷயமாகாத சுயம் பிரகாச அத்விதீய சச்சிதாநந்தமூர்த்தி - அவ்வியக்த மூர்த்தியாமென்க. கயிற்றின்கண் கற்பிதமாயுள்ள அரவு - மாலை - தண்டம் - நீர்த்தாரை முதலியவற்றின்கண் கயிறு இதுவென்னும் வடிவத்தால் வியாபித்திருத்தல் போல, பிரஹ்மத்தின்கண் கற்பிதமாயுள்ள உலகின்கண் பிரஹ்மம் இருத்தல் விளங்குத லென்னும் வடிவத்தால் வியாபித் திருக்கின்ற தென்பதும், பிரஹ்மம் உலகின்கண் அவதார வடிவத்தால் வியாபித்திருத்த லில்லை; அவ்வியக்தவடிவத்தால் வியாபித்திருக்கின்ற தென்பதும், இங் குணர்தற்பாலனவாம். கற்பிதமாயுள்ள உலகிற்கும் அகற்பிதமாயுள்ள பிரஹ்மத்திற்கும் யாதொரு சம்பந்தமும் உண்மையிலில்லையாம்; அதனால், உலகின்கண் பிரஹ்மத்தி னிருப் பில்லை யென்பது மிங் குணர்தற்பாலதாம்.

மாய் நின்ற அத்தன்மையினால், உலகமானது என்னோடு தனது அவயவத்தால் சம்பந்தித்து நில்லாது. இஃதென்ன அற்புதம்? அதனால், நீ என்னுடைய பிரபாவத்தைச் சூக்கும விசாரத்தால் அறியக் கடவாயாக. என்னுடைய மாயையானது பெற்ற அகங்கார தத்துவமுதலாயுள்ள இச்சர்வப் பிரபஞ்சத்தையும் படைப்பவனும் யானே; (தாரணம் செய்பவனும் யானே. அங்ஙனமாயினும் யான் அப்பிரபஞ்சத்தில் ஆதேயவடிவனாக இருப்பவ னல்லன்.) §

(பரமேசுவரனாகிய எனக்கும் இப்பிரபஞ்சத்திற்கும் உண்மையில் சிறிதும் சம்பந்த மில்லை; ஆயினும், யான் அப் பிரபஞ்சத்தின்கணிருப்பவன், என்னிடத்து அப்பிரபஞ்ச மிருப்பதாமென்று யான் கூறியதுபற்றி, அருச்சுனா! நீ பரமேசுவரனாகிய உமக்கும் இப் பிரபஞ்சத்திற்கும் உண்மையிற் சம்பந்தம் இன்றாயின், உமக்கும் அப் பிரபஞ்சத்திற்கும் ஆதார ஆதேய பாவம் எவ்வாறு பொருந்துமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

விளங்குகின்ற வேற் படையையுடைய அருச்சுனா! அசங்க சுபாவ முடைய பரமேசுவரனான எனது சொரூபத்தில் வாஸ்தவமாக ஒரு காலத்திலும் சம்பந்த மடையாமலும் என்னைத் தவிரப் பிறிதொன்றி னிடத்துத் தோன்றாமலு முள்ள பிரபஞ்ச மனைத்தும் என்னைச் சம்பந்தித் திருக்குந் தன்மையானது கருதுதற்குரிய ஸ்தல

---

§ சிருஷ்டிக்கு முன் யான் எதனோடும் சம்பந்தமுறா திருப்பன்; பின் யான் சர்வப்பிரபஞ்சமுமாய் நின்றகாலத்தும் அஃதென்னோடு சம்பந்தித் திருப்பதில்லையாம்; யான் பிரபஞ்சத்தை யுண்டாக்கித் தாங்குங் காலத்திலும் அப்பிரபஞ்சத்தி லிருப்ப தில்லை யென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினா ரென்க. சச்சிதாநந்த வடிவப் பிரஹ்மம் சர்வப் பிரபஞ்சத்திற்கும் முதற் காரணமும் நிமித்த காரணமுமாக விருந்தும், உண்மையில் அசங்க அத்விதீய சொரூபமாக விருத்தலின், அவை அதனிடத் திருப்பதில்லை; சர்வப் பிரபஞ்சமும் பிரஹ்மத்தின்கண் கற்பிதமா யிருத்தலின், அது அவற்றினிடத்து வாஸ்தவமாக இருப்பதில்லை யென்பதிங் குணர்தற்பாலதாம். சொப்பனங் காண்போ னொருவன் உண்மையில் அச்சொப்பனப் பொருள்களோடு சம்பந்த மில்லா திருத்தல்போல,பிரஹ்மமும் உண்மையில் இப்பிரபஞ்சத்தோடு சம்பந்த மில்லா திருக்கின்ற தென்பதுமிங்குணர்தற் பாலதாம்.

மனைத்திலும் நிறைந்து விளங்குகின்ற அசங்க சுபாவமுடைய ஆகாயத்தின்கண் எவ்விடத்திலும் நெருங்கிச் சஞ்சரிக்கும் சலன சுபாவம் பொருந்திய காற்றினது இருப்புப்போல்வதாம். ¶

பிரபஞ்சத்தை யுண்டாக்குங் காலத்திலும் பாதுகாக்குங் காலத்திலும் அதனோடு தனக்குச் சம்பந்தமில்லாமையைக் கூறிய பகவான் பிரளயகாலத்திலும் அதனோடு தனக்குச் சம்பந்தமில்லையெனக் கூறல்.

மலையையொத்த அருச்சுனா! இங்கே காணப்படுகின்ற ஆகாய முதலிய பதார்த்த மனைத்தும் பிரளய காலத்தில் பரமேசுவரனாகிய எனது முக்குண வடிவமா யுள்ள பிரகிருதியினிடத்தே சூட்சும ரூபமாக லய பாவத்தை யடைகின்றன; சிருஷ்டிகாலத்தில், பிரளய காலத்தில் பிரகிருதியில் சூட்சும ரூபமாக லயபாவத்தை யடைந்திருந்த அவ்வாகாசமுதலிய பதார்த்தங்கள் உண்டாகுங் கிரமப்படியே பரமேசுவரனாயவென்னால் மீண்டு முண்டாக்கப் படுவனவாம்; அதனால், உண்மையாக ஆராய்ந்து நோக்குமிடத்து, எவ்விடத்தும் பூதங்களை உண்டாக்கிக் காத்தழித்து வருகின்றவன் யானே யாவன். *

¶ காற்று ஆகாயத்தை யிடமாகக்கொண் டிருப்பதுபோல, சர்வப் பிரபஞ்சமும் பரமேசுவரனாகிய வென்னை யிடமாகக் கொண் டிருக்கின்றனவென்று பகவா னருச்சுனனுக்குக் கூறினாரென்க.

அசங்க சுபாவ முடைய ஆகாயத்தில் உண்மையில் காற்றின் சம்பந்த மில்லாதிருந்தும், காற்று ஆகாயத்திலிருக்கின்றதென்று கூறப்படுதல் போல, அசங்க சுபாவமுடைய பிரஹ்மத்திலும் உண்மையில் பிரபஞ்சத்தின் சம்பந்த மில்லாதிருந்தும், பிரபஞ்சம் பிரஹ்மத்தி லிருக்கின்றதென்று கூறப்படுகின்ற தென்பதிங்குணர்தற்பாலதாம்.

பிரஹ்மம் சர்வப் பிரபஞ்சத்திற்கும் ஆதாரமா யிருக்கின்றதென்பதும், சர்வப் பிரபஞ்சமும் பிரஹ்மத்தின்கண் ஆதேயமா யிருக்கின்றதென்பதும், வியவகார திருஷ்டியினா லன்றிப் பாரமார்த்திக திருஷ்டியினா லன்றாமென்பது இங்குணர்தற்பாலதாம்.

* பிரளயகாலத்தில் ஆகாயாதி பூத மனைத்தும் பரமேசுவரனாய என்னுடைய எனது சக்தியான சத்துவம் இரசசு தமசு என்னும் முக்குண வடிவப் பிரகிருதியின்கண் சூட்சும வடிவத்தால் லயபாவத்தை யடைகின்றன ; மீண்டும் சிருஷ்டி காலத்தில் சீவர்களின் கருமத்தை யனுசரித்து அவற்றை யானுண்டாக்குகின்றேன் ; ஆகாசாதி பூதங்களின் சிருஷ்டி முதலியவற்றைச் செய்பவர்

சொப்பன திருஷ்டாவாகிய புருஷனுக்குச் சொப்பன வுலகத்தின் தோற்றம் நிலை ஒடுக்க மென்பன பந்த காரண மாகாமை போலப் பரமேசுவரனாகிய எனக்கும் இவ்வுலகத்தின் தோற்றம் நிலை ஒடுக்க மென்பன பந்த காரணமாவ தில்லையா மெனப் பகவான் கூறல்.

அருச்சுனா! யான் பலத்தில் இச்சையும், ஒருவனிடத்து விருப்பும் மற்றொருவனிடத்து வெறுப்பும் ஆகிய இவற்றை யொழித்து, மித்தியா வடிவமா யுள்ள சிருஷ்டி முதலிய கருமங்களைச் செய்து வருகின்றேன்; அக் காரணத்தால் பரமேசுவரனாகிய என்னை அச் சிருஷ்டி முதலிய கருமங்கள் பந்தப் படுத்துவன வன்றாம்; கோசகாரப் புழு தன் வாயால் நூல் நூற்று அந்த நூலால் தான் பந்திக்கப்படுவதுபோலக் கருத்திருத்துவ அபிமானத்தோடு கூடித் தாம் செய்யும் கருமங்களின் பயன்களை யடையக் கருதுகின்றவர் அக்கருமங்களால் பந்திக்கப்பட்டு, அக்கரும பலங்களி லகப்பட்டுத் துன்புறுவர். †

என்னை யன்றிப் பிறரில்லை யென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினா ரென்க

சொப்பன திருஷ்டாவாகிய புருஷன் கற்பனா மாத்திரத்தால் சொப்பன வுலகத்தின் தோற்றம் நிலை ஒடுக்க மென்பவற்றிற்குக் காரணமா யிருத்தல் போல, பரமேசுவரனும் கற்பனா மாத்திரத்தால் இவ்வுலகத்தின் தோற்றம் நிலை ஒடுக்கமென்பவற்றிற்குக் காரணமா யிருக்கின்றான்; உண்மையில் அவனுக்கு எதனோடுஞ் சம்பந்த மின்றா மென்ப தீங்குணர்தற்பாலதாம்.

† இதனால் நான் செய்கின்றவ னென்னும் கருத்திருத்துவ அபிமானமும், தான் செய்யும் கருமத்தின் பயனில் விருப்பமு மில்லாதவன் எக்கருமத்தைச் செயினும், அதனாலவன் பந்திக்கப்பட்டு வருத்த முறுவதில னென்பது பெறப்படு மாறுணர்க.

கோசகாரப்புழு உலண்டு என்பன ஒரு பொருட்கிளவிகளாம்.

பலத்தில் இச்சை, விருப்பு, வெறுப் பென்பன வின்றி யான் சிருஷ்டி முதலியவற்றைச் செய்கின்றேன்; அதனால், அக்கருமங்கள் என்னைப் பந்த முடையவனாகச் செய்வதற்குத் தகுதியற் றிருக்கின்றன; பலத்தி லிச்சை முதலியவற்றோடு கருமங்களைச் செய்பவர்தாம் அவற்றால் கட்டுப்பட்டு வருத்த முறுதற் குரியவரா யிருக்கின்றன ரென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினா ரென்க.

சொப்பன திருஷ்டாவாகிய புருஷன் சொப்பனத்தில் பல்வேறு கருமங்களைச் செய்யினும் அவற்றால் பந்தப்படுவ தில்லையா மாறுபோல, பரமேசுவர

நித்திய - சுத்த - புத்த - முக்த சுபாவமும், சர்வப் பிராணிகளின் ஆத்மாவும், ஆநந்தகனமும், தேச கால வஸ்து பரிச்சேத ரகிதமுமா யுள்ள பரமேசுவரனாகிய என்னை அவிவேகி புருஷர் மானுடனாகக் கருதி, அன்பு செய்யாது நிந்திக்கின்றன ரேன்று பகவான் கூறல்.

சராசர வடிவமாகப் பிரபஞ்சத்தைப் படைக்கின்ற பரமேசுவரனாய வென்னை எல்லாவற்றினும் மேலாகிய உண்மைப் பொருளாகத் தாம் மேன்மை யடைய அறியாத அவிவேகிகள், இந்தக் கிருஷ்ணனும் நம்மைப் போல மானுடருள் ஒருவனேயென்று கருதி நிந்தை செய்து வருகின்றனர்; (இவர்கள் எப்போதும் நரகத்திலே வசித்தற் குரியவராவர்.) அருச்சுனா! நீ அவர்கள் யாரென்று வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.

அவர்கள் நரக மடைதற்குக் காரணமாகத் தம் மனத்தின்கண் ஆசைகளையும் கருமங்களையும் மிகுதியாகச் செய்து வருபவராவர்; அவர்தாம் இராக்கதரும் அசுரருமாவர். ‡

னாகிய யானும் பல்வேறு கருமங்களைச் செய்யினும் அவற்றால் பந்தப்படுவதில்லை; யானெப்போதும் அசங்கனாகவே யிருக்கின்றேன்; என் சந்நிதான விசேடத்தால் எனது மாயாசத்தி சிருஷ்டி முதலியவற்றைச் செய்கின்ற தென்பதைப் பகவா னிங்கு விளக்கி யருளினா ரென்க.

‡ சராசர வடிவமாகப் பிரபஞ்சத்தைப் படைக்கின்ற பரமேசுவரனை என்னைச் சர்வத்திலும் மேலாகிய வுண்மைப்பொருளென் றுணராத அவிவேகிகள் இவனும் நம்மனோருள் ஒருவனேயாவனென்று கருதி யென்னை யலட்சியஞ் செய்து வருகின்றனர்; அவர்கள் இராக்கத சுபாவ முடையவரும் அசுர சுபாவ முடையவருமா யிருப்பர்; எப்போதும் ஆசைக்கும் கருமங்களுக்கும் அடிமையா யிருந்து, நரகமடைதற் குரியவரா யிருக்கின்றன ரென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினாரென்க.

பகவான் நம்மனோரைக் காத்தற் பொருட்டு, இராம கிருஷ்ணாதி யவதாரங் கொண்டமையை யறியாதவர்கள், அவ் வவதார விசேடங்களை நிந்தித்து, தம் பிறப்பின் பயனை யடையா தொழிகின்றன ரென்பதிங் குணர்தற் பாலதாம்.

இங்கே ஆசை யென்றது, பரமேசுவரன் வேண்டிய தில்லை; கேவலம் கருமமே பலத்தைக் கொடுக்கின்றது என்று கருதி, அப்பலத்தை விரும்புதலாம்; கரும மென்றது, பரமேசுவர னுண்டென நம்பாது செய்யும் அக்கினி ஹோத்

என்னை விரும்பி யொழுகுகின்றவரே புருஷார்த்த மனைத்து மடைந்து வருத்தமுறா திருப்பரெனப் பகவான் கூறல்.

அருச்சுனா! சற்குருவின் கருணையோடு சற்சாஸ்திரங்களின் விசாரத்தா லுண்டாகும் பகுத்தறிவினால் பரமேசுவரனாகியவென்னைச் சர்வ பூதங்கட்குங் காரணனாகவும் நாசமற்றவனாகவு முணர்ந்து, இராசத தாமத குணங்களடங்கி யுள்ள மனத்தினாலே சப்தாதி விஷயங்களிற் செல்லும் சுரோத்திராதி இந்திரியங்களை யடக்கி, எப்போதும் சற்குரு வடிவமாயுள்ள என்னையே காயத்தா லர்ச்சித்து வணங்கி, வாக்கால் சுருதி கூறிய வழியால் துதித்து, பரப்பிரஹ்ம வடிவமான என்னையே மனத்தாற் றியானஞ் செய்து, பரமப் பிரேம வடிவப் பத்தியோடு கூடியிருக்கும் இம் மகாத்மாக்களே தேவர்கள் போல விளங்குதற்குரியவ ராவர். §

திராதி கருமங்களாம். இராக்கத ரென்பார் தாமத குண முடையவ ராவார்; அசுர ரென்பார் இராசத குண முடையவராவர். இராக்கதர் இம்சைக் கேதுவாய செயல்களையும், அசுரர் விஷயபோகத்திற் கேதுவாய செயல்களையும் செய்து வருவ ரென்பதிங் குணர்தற் பாலதாம்.

§ பல பிறப்புக்களிற் செய்த புண்ணிய கருமங்களால் சுத்தமானதும், காமக் குரோத முதலியவற்றின் வசமாகாததுமாய சித்தத்தை யுடையவர் இங்கு மகாத்மாவாவ ரென்க.

குரு சாஸ்திரங்களா லுண்டாகும் விவேகத்தால் பரமேசுவரனாய வென்னைச் சர்வ பூதங்கட்குக் காரணனாகவும் நாச மில்லாதவ னாகவு மறிந்து, மனத்தையும் இந்திரியங்களையு மடக்கி, காயத்தால் வணங்கியும் வாக்கால் துதித்தும் மனத்தால் தியானித்தும் வருபவர் மாகாத்மாவாவர்; இவர்கள் தேவர்கள் போலச் சர்வ புருஷார்த்தத்தையு மடைந்து வருத்த மின்றி யிருப்பரெனப் பகவான் அருச்சுனனுக்குக் கூறினாரென்க.

இங்கு மனத்தினாலே இந்திரியங்களை யடக்கி யென்பது சிரவணாதிகளின் சாதனத்தையும், என்னையே வணங்கி யென்பது குரு சேவையையும், வாக்கால் துதித்து மனத்தால் தியானஞ் செய்தென்பது ஞான சாதனங்களான சிரவண மனன நிதித்தியாசனங்களையுங் குறிப்பித்து நின்றனவென்க.

பல பிறப்புக்களிற் செய்த புண்ணியங்களை யுடையவர்களே தெய்வ சம்பத்துடையவ ராவர்; அவர்தாம் மனவடக்க முதலியவற்றை யுடையவராய், சற்குருவை யடுத்தொழுகிச் செய்யும் சிரவண மனன நிதித்தியாசனங்களின் வாயிலாகத் தத்துவ ஞானமடைந்து, சர்வ துக்க நிவிர்த்தி - பரமாநந்தப் பிராப்தி வடிவ மோட்சமடைதற் குரியவ ராவரென்பதிங் குணர்தற்பாலதாம்.

தத்துவ ஞான சாதனமான சிரவண மனன நித்தியாசனங்களைச் செய்தற்குரிய சாமர்த்திய மில்லாதவர் உத்தமர், மத்திமர், மந்தரென மூவகையராய்த் தத்தம் புத்தியி னனுசாரமாகப் பரமேசுவரனுகிய வென்னையே சிந்தனை செய்கின்றன ரென்று பகவான் கூறல்.

அருச்சுன ! நித்தியமா யிருத்தலின் காலத்தாலும், வியாபகமா யிருத்தலின் தேச (இட) த்தாலும், சர்வாத்மாவா யிருத்தலின் வஸ்து வாலும் பரிச்சின்ன (கண்ட) மாகக் கருதுதற் கரியதாகிய பிரஹ்ம சொரூபமா யுள்ள என்னை உலகத்துள் தம்முள் வேற்றுமை யுடைய வரா யுள்ள அதிகாரி புருஷர்கள் பரமார்த்த தரிசனத்தால் அபேத மாகவும், சூரியன் முதலிய வடிவங்களால் பேதமாகவும், தம் மனத் துட்கொண்டு, ஸ்துதித்தற்கரிய ஞான யாகங்களாலே மிகு பிரியமாகச் சிந்தனை செய்திருக்கின்றனர்; அவர் தம் தன்மையினைக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாயாக. $

$ கால தேச வஸ்து பரிச்சேத மின்றிப் பிரஹ்ம சொரூபமாயுள்ள என்னைச் சிலர் பரமார்த்த தரிசனத்தால் அபேதமாகவும், சிலர் சூரியன் முதலிய வடிவ ங்களால் பேதமாகவும் சிந்தனை செய்கின்றனர் ; இதுவே அவர் செய்யும் ஞான யாகமாமென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினுரென்க.

(1) பரமார்த்த தரிசனத்தால் பகவானை (அகம்பிரஹ்மாஸ்மி யென்று) அபேதமாகச் சிந்தனை செய்தல் அகங்கிரக வுபாசனையாம்.

(2) சூரியன் முதலிய வடிவங்களால் பகவானைப் பேதமாகச் சிந்தனை செய்தல் பிரதீக வுபாசனையாம்.

(3) இவ்விரண்டனுள் ஏதையேனும் செய்யச் சாமர்த்திய மில்லாதவர் பல வகையாகப் பரமேசுவரனைச் சிந்தனை செய்கின்றன ரென்பதிங் குணர்தற் பாலதாம்.

தியேய ஸ்வரூபத்தைத் தன்னோடபேதமாகத் தியானஞ் செய்வது அகங்கி ரக வுபாசனையாம் ; அந்நிய வஸ்துவை அன்னிய வடிவமாகத் தியானஞ் செய்வது பிரதீக வுபாசனையாம்.

காணப்படுவன வனைத்தும் பிரஹ்ம சொரூபமே யென் றுணரு முணர்வே இங்கு ஞான யாகமாம் ; அதுபற்றி நிகழும் உபாசனைகளும் இங்கு ஞான யாகமாமென்று கூறப்படுகின்றன வென்பதிங் குணர்தற் பாலதாம்.

பகவான் உபாசகர்கள் தத்தம் புத்தியி னனுசாரமாகப் பலவகையாக உபாசனை செய்யினும் அவர் யாவரும் என்னையே உபாசனை செய்கின்றன ரென்பதற்கேது கூறல்.

அருச்சுனா! சுருதிகள் கூறும் சிரௌத கரும மென்னும் அக்னிஷ்டோமாதி யாக வடிவக் கிருதுவும், ஸ்மிருதிகள் கூறும் ஸ்மார்த்த கருமமென்னும் வைசுவ தேவாதி மகா யக்ஞமும், பிதிர்க்களின் பொருட்டுக் கொடுக்கும் சிரார்த்த முதலியனவும், ஆகவநீய முதலிய அக்கினி நெய் அந்நமென்னு மிவற்றினாற் சிரத்தை மிக்க அதிகாரி புருஷர்கள் செய்கின்ற கிரியைகளும் ஆகிய இவையனைத்தும் மந்திர முதலிய பதார்த்தங்களும் பரமேசுவரனாகிய நானேயாம். ¶

அருச்சுனா! இன்னு மாராய்ந்து நோக்குமிடத்துப் பிராணிகளை யுண்டாக்கிச் செவ்வையாக வளர்க்கும் மாதாவும் பிதாவும் அவர்தம் பிதாமகரும் பரமேசுவரனாகிய நானே யாவன். முற்பிறப்பிற் செய்த புண்ணிய பாவ கருமங்களின் பயனான சுகதுக்கங்களைப் பிராணிகளுக்குக் கொடுப்பவனும் நானேயாவன்; அதர்வண வேதத்தோடு கூடியுள்ள இருக்கு யசுர் சாம வேதங்களுடன், ஓம் என்னும் பிரணவாட்சரமும் நானே யாவன். அருச்சுனா! யாவர்க்கும் கதி வடிவமா யிருப்பவனும் நானே யாவன்; நல்வினை தீவினை யென்னும் இருவினையின் வழியே யாவரையும் போஷணஞ் செய்பவனும் நானே யாவன்; யாவர்க்கும்

சூரியன் முதலியோரைப் பிரஹ்மமாகத் தியானஞ் செய்யும் பிரதீக வுபாசனை நான் பிரஹ்மமா யிருக்கின்றே னென்று தியானஞ் செய்யும் அகங்கிரக வுபாசனைக்கும், அது காணப்படுவன வனைத்தும் பிரஹ்ம சொரூபமே, அது நானே யென்றுணரும் தத்துவ ஞானத்திற்கும் காரணமாம்; பிரதீக வுபாசனைக்குப் பல வகையாகப் பரமேசுவரனைத் தியானஞ் செய்வது காரணமா மென்பது மிங் குணர்தற் பாலதாம்.

¶ சுவாகா, சுவதா என்னும் சப்தங்கட் கிடையிலுள்ள எவ் வேத வாக்கியங்களைக் கூறித் தேவதைகட்கும் பிதிர்கட்கும் ஹவிசு கொடுக்கப்படுமோ அவ்வாக்கியங்கள் இங்கு மந்திரமாம். முதலிய பதார்த்தங்களும் என்றமையால் நோய் நீக்கும் ஔடத முதலியவற்றையுங் கொள்க.

கிரியைகளும் அவற்றின் காரணங்களும் அவற்றின் பயன்களும் பரமேசுவரனது சொரூபமேயா மென்பதிங் குணர்தற் பாலதாம்.

பிரபுவா யிருப்பவனும் நானே யாவன்; சர்வப் பிராணிகட்கும் சாட்சியா யிருப்பவனும் நானே யாவன்; யாவர்க்கும் போகஸ்தானமாயிருப்ப வனும் நானே யாவன்; யாவர்க்கும் துன்பத்தை நீக்குகின்றவனும் நானே யாவன்; யாவர்க்கும் சுகிருதுவாயிருப்பவனும் நானே யாவன்; எவ்வகைப் பொருட்கும் பீஜமாயிருப்பவனும் நானே யாவன். *

அருச்சுனா! இங் குண்மையாக ஆராய்ந்து நோக்குமிடத்து முன் வருஷித்தமையால் பூமியிலுள்ள நீரை யெல்லாம் சூரியனாய் அப்பூமியி லிருந்து கிரகிப்பவனும் மீண்டும் அந்நீரை மழையாகக் கொடுக்கின்ற வனும் நானே யாவன். நான் இங்ஙன மிருத்தலால், மிக இழிவான எந்தத் தெய்வத்தையேனும் ஆராதனை செய்கின்றவரும் என்னையே ஆராதனை செய்கின்றனரென்று நீ யறியக் கடவையாக. †

அகங்கிரக உபாசனை, பிரதீக உபாசனை, இவற்றிலும் வேறாய உபாசனை யென்பனவற்றுள் எதனாலேனும் பரமேசுவரனாகிய வென்னை நிஷ்காமமாகச் சிந்தனை செய்யாது, சகாமராய்த் தாம் விரும்பிய சுவர்க் காதிபோக வடிவப் பயனை யடைதற்பொருட்டு, காமிய கருமங்களைச் செய்பவர் சித்தசுத்திக் கேதுவாய நிஷ்காம கருமத்தின் அபாவத்தால், தத்துவஞான சாதனமாயுள்ள சிரவண மனன முதலியவற்றைச் செய் வதற்குத் தகுதியற்றவராய், அடிக்கடி ஜனன மரண வடிவச் சம்சா ரத்தை யடைகின்றனரெனப் பகவான் கூறல்.

அருச்சுனா! அசுப கரும மொழியப்பெற்றுள்ள புருஷர் சொப்பிர காச வடிவமாய் ஏகமாயுள்ள பரமேசுவரனான வென்னையே இந்திரன்-வசு-ருத்திரன்-ஆதித்திய னென்னும் பல வடிவமாக அக்கினிஷ்டோம முதலிய காமிய யக்ஞத்தால் ஆராதனஞ் செய்து, அவ்வாராதனத்தால் சுவர்க்கத்தை யடைந்து, அங்குள்ள திவ்விய போகங்களை யனுபவித்து வாழ்ந்திருந்து, அவ்வாராதன வடிவப் புண்ணிய கருமம் நாசமான

---

* கருமத்தா லடையும் சுவர்க்க முதலிய பயன்கள் இங்குக் கதியாம்; கைம் மாறு கருதாது உதவி செய்பவன் சுகிருது வாவன்; உற்பத்திக் கேதுவா யிருப்பது பீஜமாம்.

† நான் எல்லாப் பொருளுமாயிருத்தலின், மக்கள் எதனை ஆராதனை செய் யினும், அஃதெனது ஆராதனையேயா மென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினாரென்க.

போது, அங்கிருந்து மண்ணுலகத்திலே வீழ்ந்து, மீண்டும் அத் திவ்விய போகங்களின் மீதுள்ள இழிவாகிய இச்சையினாலே அக் காமிய யக்ஞத்தைச் செய்து, அடிக்கடி இம் மண்ணுலகத்திலிருந்து அச் சுவர்க்க லோகத்திற்குப் போவதும், அச் சுவர்க்கலோகத்தி லிருந்து இம் மண்ணுலகத்திற்கு வருவதுமாக அலையா நிற்பர். ‡

தத்துவ ஞான மில்லாத சகாம புருஷரின் கதியைக் கூறிய பகவான் தத்துவ ஞான முடைய நிஷ்காம புருஷரின் கதியைக் கூறல்.

மின்னலை யொத்து விளங்குகின்ற வேலை யுடைய அருச்சுனா! பரப்பிரஹ்மரூபமான வென்னைத் தமது ஆத்மாவாக வுணர்ந் திடைவிடாது சிந்தனை செய்கின்றவர் விரும்பிய அன்ன பானாதி யனைத்தையும் பின்னர்க்கொடுப்போமென்று கருதாது அப்பொழுதே அவர்க்குக் கொடுத்து, அவற்றைப் பரமேசுவரனான யானே காப்பாற்றுகின்றேன்.

(அருச்சுனா! நீ உமக் கன்னியமாயொரு பொருளு முண்மையி லின்மையின், அவ்விந்திரன் முதலியோரும் உமது சொரூபத்திலும் வேறானவ ரல்ல ராவர்; அதனால், உமது பக்தர்க்கும் அவ்விந்திரன் முதலியோரது பக்தர்க்கும் சிறிதும் வேற்றுமை யில்லையாம்; ஆகவே, அவ்விந்திரன் முதலியோரது பக்தர் அடிக்கடி ஜனன மரண வடிவச் சம்சாரத்தை யடைகின்றனரென்று தேவரீர் கூறுத லெவ்வாறு பொருந்துமென்று நீ வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுனா! தேவ ராஜனாகிய இந்திரன் முதலியோரைச் சிரத்தையோடு அக்கினிஷ்டோம முதலிய காமிய யக்ஞத்தால் ஆராதனை

‡ மக்களுக்குக் கிடைக்காத போகம் திவ்விய போகமாம்; அது பிராணிகள் தேவ சரீரத்தாலேயே அனுபவித்தற் குரியதாம்.

சகாம புருஷர் இந்திரன் முதலியோரை அக்கினிஷ்டோம முதலிய காமிய யக்ஞத்தால் ஆராதனை செய்வதும் அவ் விந்திரன் முதலியோரது வடிவமாக வுள்ள பரமேசுவரனது ஆராதனையா மென்பதும், சகாம புருஷர் காமிய கருமத்தால் சுவர்க்கத்தை யடைகின்றனர்; அக் கருமம் நாசமான பின் அங்கிருந்து மண்ணுலகத்திற்கு வந்து பூர்வ சம்ஸ்காரத்தால் மீண்டும் அக் கருமத்தைச் செய்து சுவர்க்கத்தை யடைகின்றனர்; மீண்டும் மண்ணுலகத்தை யடைகின்றனர்; இவ்வாறவர்க்குக் கருப்பவாச முதலிய பல்வேறு திறத்ததாய துக்கப் பிரவாகம் தொடர்ச்சியா யிருக்கின்றதென்பது மிங்குணர்தற் பாலனவாம்.

செய்கின்றவரும், அவ்விந்திரன் முதலியோரது சொரூபமா யுள்ள என்னையே தாம் அறியாமலே ஆராதனை செய்கின்றனர். இதனை நீ ஆராய்ந் தறிவாயாக. §

இந்திரன் முதலிய அன்னிய தேவதைகளை ஆராதனஞ் செய்பவர்க்குச் சம்சார மில்லா திருக்கும் பயனில்லை யாயினும், அத் தேவதைகள் ஆராதனையி னனுசாரமாக அற்பப் பயனுண்டாமெனவும் எனது பக்தர்க்கு மகத்தான பயனுண்டா மெனவும் பகவான் கூறல்.

இந்திராதி தேவதைகளை ஆராதனஞ் செய்பவர் அத்தேவதைளே யாவர்; அக்கினிஷ்வாத்தாதி பிதிர்க்களைப் பொருந்துமாறு ஆராதனஞ் செய்பவர் அந்தப் பிதிர்க்களாய் விளங்கா நிற்பர்; எவர் மாதிர்கணாதி பூதங்களுள் எந்தப் பூதத்தினிடத் தன்புடையவராய் அதனை ஆராதனஞ் செய்கின்றனரோ அவர் அப்பூதமே யாவரென்று கூறப்படுமாயின், பரமேசுவரனாகிய என்னை ஆராதனஞ் செய்

§ எங்கும் அத்துவிதீய ப்ரஹ்மத்தையே யறிந்து யாதொரு போகத்திலு மிச்சை யில்லாது, வாசுதேவனான நானே சர்வான்ம ரூபன், எனக் கன்னியமாக உண்மையி லொன்று மில்லை யென்று நிச்சயஞ் செய்து, நிச்சயஞ் செய்தவாறே சிந்தனை செய்து வருகின்றவர் விரும்புகின்றனவற்றைப் பகவா னுடனே அவர்க்குத் தந்து, அவற்றைப் பாதுகாத்து வருகின்றன ரென்பதும், இந்திரன் முதலியோரை ஆராதனஞ் செய்பவரும் தாமறியாமலே பரமேசுவரனை ஆராதனஞ் செய்கின்றன ரென்பதும், அவர் அவ்விந்திரன் முதலியோரைப் பரமேசுவரனுக் கன்னியமாகக் கற்பித்து ஆராதனை செய்து வருதலினால் சம்சாரத்தை யடைந்து வருகின்றன ரென்பதும், பரமேசுவரன் ஞானிகளுக்கு முயற்சியைத் தோற்றுவியாமலே அவர் விரும்பியவற்றைத் தருகின்றனர், மற்றவர்க்கு முயற்சியைத் தோற்றுவித்தே அது வாயிலாக அவர் விரும்பியவற்றைக் கொடுக்கின்றன ரென்பதும், எல்லாவற்றையும் பரமேசுவர வடிவமாகக்கண்டு பலனை விரும்பாது அக்கினிஷ்டோம முதலிய கருமங்களைச் செய்து, அவற்றைப் பரமேசுவரனுக் கர்ப்பணஞ் செய்பவர் அக்கரும பலத்தால் அர்ச்சிராதி மார்க்கமாகப் பிரஹ்ம லோகத்தை யடைந்து, அங்குத் தத்துவ ஞானத்தைப் பெற்று, அவ் வுலகத்திற்கு முடிவுண்டாம்போது கைவல்லிய மோட்ச மடைகின்று ரென்பது மிங்குணர்தற்பாலனவாம்.

பவர் பரமாநந்த வடிவினனான யானே யாவதற்கு யாதேனும் சந்தேக முண்டோ? இல்லையாம். †

அந்நிய தேவதைகளி னாராதனத்தில் திரவியச் செலவு முதலிய பல துன்பங்க ளிருத்தல் போல என தாராதனத்தில் துன்பங்க ளில்லை; அதன்கண் ஆயாசமின்றென்று அது செய்யும் பிரகாரத்தினைப் பகவான் கூறல்.

அருச்சுனா! சுத்த மனமுடைய பக்தர்கள் சுலபமாகக் கிடைத்தற்குரிய பத்திரம் புஷ்பம் பழம் தோய (ஜல) முதலியவற்றுள் தாம் பெற்ற தெதுவோ அதனைக் கொண்டு, பரமேசுவரனாகிய என்னை ஆராதனஞ் செய்து, நிரதிசய பக்தியோடு எனக்கர்ப்பணஞ் செய்ததையே யான் மிகு பிரியமா யேற்றுக்கொள்வன்; அதனால், (எவ்வாராதனத்தால் யான் பிரசன்ன மாவேன், அஃ தெவ்வாறு செய்வதாமெனச் சிந்தனை செய்யாது,) நீ ஈவன நோற்பன உண்பன என்ற இவற்றினையே ஆராதனஞ் செய்தற்குரிய திரவியமாகக் கொண்டு, இவற்றை யெல்லாம் என்னிடத் தன்புடையவனாய் எனக் கர்ப்பணஞ் செய்வையாயின், கரும பந்தத்தினின்றும் நீங்கிப் பரப் பிரஹ்மமாயுள்ள என்னையே யடைதல் கூடும். $

---

† (1) இந்திராதி தேவதைகளை அக்கினிஷ்டோம முதலிய கருமங்களின் வாயிலாக ஆராதனஞ் செய்பவர் தெய்வ விரதிகளென்று சொல்லப்படுவர்; இவர் அத்தேவதைகளையே யடைவர்; இவர் சாத்துவிக ராவர்; (2) அக்கினிஷ்வாத்தாதி பிதிர்க்களைச் சிரார்த்த முதலிய கருமங்கள் வாயிலாக ஆராதனஞ் செய்பவர் பிதிரு விரதர்களென்று சொல்லப்படுவர்; இவர் அப்பிதிர்க்களையே யடைவர்; இவர் இராசத ராவர்; (3) யட்ச ராட்சச மாதிர்கண முதலிய பூதங்களை ஆராதனஞ் செய்பவர் பூதபூஜகரென்று சொல்லப் படுவர்; இவர் அப்பூதங்களையே யடைவர்; இவர் தாமத ராவர். இந்திராதியோரிடத்தும் மற்றெவ்விடத்தும் பரமேசுவரனை வியாபகமாகப் பார்த்து, இடைவிடா தாராதனஞ் செய்பவர் அப் பரமேசுவரனையே அபேதமா யடைவர்; இவர் மத்யாஜி என்றுசொல்லப்படுவ ரென்ப திங்குணர்தற்பாலதாம்.

$ சுத்த மன முடையவர் அன்போடர்ப்பணஞ் செய்கின்ற எதனையும் பகவான் மிகு பிரியமா யேற்றுக்கொள்ளுகின்றன ரென்பது ஸ்ரீதாமப் பிராமணர் அன்போடளித்த நெல்லையும், சபரர் அன்போடளித்த நெல்லிப் பழத்தையும் பகவான் மிகு பிரியமா யேற்றுக்கொண்டாரென்று புராணங் கூறுவதால் நன்கு விளங்குவதாம்.

(அருச்சுனு ! நீ தேவரீர் உமதன்பர்க் கனுக்கிரகஞ் செய்து, மற்றவர்க் கனுக்கிர்கஞ் செய்யா திருப்பீராயின், தேவரீரும் எம்மனோர் போல இராகத் துவேஷ முடையீ ராவீர் ; அதனுல் நீவீர் பரமேசுவரராதல் யாங்ஙனமா மென்று வினவுதல் கூடும் ; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனு ! பரமேசுவரனுகிய நான் என்னிடத் தன்புள்ள அல்லது அன்பில்லாத சர்வப் பிராணிகளிடத்தும் வேற்றுமை யின்றி யிருத்தலால் எனக்கு யாவரும் சமான முடையவரே யாவர் ; அதனுல் இவர் என் பிரியத்திற்கு விஷயமானவர் ; இவர் என் பிரியத்திற்கு விஷய மாகாதவரென ஒருவரும் எனக்கில ராவர். அங்ஙன மிருப்பினும், என்னை யிவ்வாறறிந்து ஆராதனஞ் செய்யும் பக்தரிடத்து யானும் அவர்க்கனுக்கிரகஞ் செய்திருப்பன் ; அவ்வாறென்னை ஆராதனஞ் செய்கின்ற அப்பத்தரும் என்னிடத்து அவ்வாறே பொருந்தி யிருப்பார். *

இங்கு ஈவனவென்பது அதிதியர் பிராமணர் முதலியோர்க்குக் கொடுக்கும் அன்னம் சுவர்ண முதலியனவும், நோற்பன வென்பது பாப நிவிர்த்தியின் பொருட்டுச் செய்யும் சாந்திராயண விரத முதலியனவும், உண்பன வென்பது திருப்தியின்பொருட் டுண்ணும் அன்ன முதலியனவுமாம்.

இந்திரன் முதலிய தேவதைகளி னுராதனத்தில் திரவியச் செலவு சரீர வருத்த முதலியன விருத்தல் போல, பகவானது ஆராதனையில் அன்பொன்றே யிருத்தல் வேண்டும்; மற்றையவை வேண்டுவன வன்று மென்பதிங் குணர்தற்பாலதாம்.

* அவ்வாறே பொருந்தி யிருத்தலாவது கருமபந்த நீங்கிப் பிரஹ்ம சொரூபமா யிருத்தலாம். வேற்றுமையின்றி யிருத்தலாவது, பகவான் தனது சுவபாவிகமான அஸ்தி பாதிப் பிரியமென்னும் சச்சிதாநந்த வடிவத்தாலும், மயோபாதியாலாகிய அந்தர்யாமி வடிவத்தாலும் எல்லாப் பிராணிகளிடத்தும் கடங்களில் மண்போலவும், மணிகளில் நூல்போலவு மிருத்தலாம் ; இவ்வாற்ருல் பகவானுக்கு எவரும் பிரீதிக்கு விஷயமானவரு மன்ரும், அப்பிரீதிக்கு விஷயமானவரு மன்ரும். பகவா னங்ஙனமிருப்பினும், சூரிய வொளி கண்ணுடி முதலியவற்றி லன்றி மற்றவற்றில் பிரதிபிம்ப ரூபமாக விளங்காமைபோலப் பக்தரிடத்தன்றி மற்றவரிடத்து ஆநந்த வடிவமாக விளங்கா திருக்கின்ருனென்பதும், அக்கினியும் கற்பக விருட்சமும் எவரிடத்தும் ராகத் துவேஷமில்லா திருப்பனவாம் ; அங்ஙன மிருப்பினும், அக்கினி தன்னை யடைந்தவரது சீதத்தைப்

சர்வப் பிராணிகளிடத்தும் சமானமா யுள்ள என்னிடத்து விஷமத் தன்மையைக் காட்டுவது எனது பக்தியின் பிரபாவமா மென்று அதனைப் பகவான் கூறல்.

வல்லமைவாய்ந்த தோள்களையுடைய அருச்சுனா!எப்போதும் தாம் அனுபவித்தற்குரிய உணவு முதலாகவுள்ள பொருள்களைப் பரமேசுவரனான என்னிடத் தர்ப்பணஞ் செய்து, அநந்நிய சித்தமுடையவராய் என்னை ஆராதனஞ் செய்கின்றவர் நாணத்தை யொழித்துச் செய்யும் துராசார முடையவரா யிருப்பினும், அவர்கள் சாதுக்களே யாவர். (அருச்சுனா! நீ அவர்கள் சாதுக்களாவ தெவ்வாறுமென்று சங்கித்தல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுனா! வெகுகாலம் துராசாரமுடையவரா யிருந்த அவர்க்கு எனது ஆராதனத்தின் பிரபாவத்தால் என்றுங் கெடுத லில்லாத நிரதிசயாநந்தவடிவ மோட்ச முண்டாவதே யல்லாமல், எவ்விடத்தும் யாதொரு துர்க்கதியு முண்டாவதில்லையாம்; இது சத்தியமாம். ‡

போக்குவதன்றி, அடையாதவரது சீதத்தைப் போக்காததாயும், கற்பகவிருக்ஷம் தன்னை யடைந்தவரது தரித்திரத்தைப் போக்குவதன்றி, அடையாதவரது தரித்திரத்தைப் போக்காததாயு மிருக்கின்றன; அங்ஙனமே எவரிடத்தும் ராகத்துவேஷ மின்றி யிருக்கும் பகவானும் தன்னை யடைந்தவர்களுக் கனுக்கிரகஞ் செய்தும், அடையாதவர்களுக் கனுக்கிரஞ் செய்யாது மிருக்கின்றான்; அதனால் பகவான் சீவர்கள்போல இராகத் துவேஷ முடையவனாகா னென்பதுமிங் குணர்தற்பாலனவாம்.

சர்வப் பிராணிகளிடத்தும் யான் வேற்றுமை யின்றி யிருத்தலால், எனக்கிவர் நல்லவர், இவர் கெட்டவ ரென்னும் வியவகாரம் சிறிது மில்லையாம்; அங்ஙன மிருப்பினும், யானிவ்வா றிருக்கின்றே னென்பதை யுணர்ந்து, என்னை யன்போ டாராதனஞ் செய்கின்றவ ரிடத்து யானிருக்கின்றேன், அவரும் என்னிடத் திருக்கின்றன ரென்று பகவா னருச்சுனனுக்குக் கூறினாரென்க.

‡ அஜாமிளன், கஜேந்திரன் முதலியோர் துராசார முடையவரா யிருந்தும் பகவானது ஆராதனத்தால் பரமபத மடைந்தனரென்று புராணங் கூறுவதும், பூர்வ புண்ணிய பரிபாகத்தால் அநந்நிய சித்தமுடையவராய்ப் பகவானை ஆராதனஞ் செய்கின்றவர் துராசார முடையவரா யிருப்பினும், அவர் அவ்வாராதனத்தின் பிரபாவத்தால் துராசாரத்தை யொழித்து, சாதுவாய், நற்கதியை யடைவதன்றித் துர்க்கதியை யடைவதில்லையென்பதும் இங்குணர்தற் பாலனவாம்.

என்னை ஆராதனஞ் செய்பவர் யாவரா யிருப்பினும் அவர்க்குக் கேடுண்டாவ தில்லை யென்று பக்தியின் பிரபாவத்தைப் பகவான் கூறல்.

அருச்சுனா! வணிகரும், வேளாளரும், மகளிரும் பக்தியுடனே பரமேசுவரனான என்னை ஆராதனஞ்செய்து, எனது பக்தியின் பிரபாவத்தால் கரும பந்தத்தை யொழித்துப் பரகதி யடைவாரென்று சொல்லப்படுமாயின், மணிமுடி யரசரும் மேன்மை பொருந்திய அந்தணரும் எனது பக்தராய் என்னை ஆராதனஞ் செய்வாராயின், அவர்கள் எனது பக்தியின் பிரபாவத்தால் நீக்குதற்கரிய பிறவி யொழிந்து பரகதியடைவ ரென்பதுபற்றிச் சொல்லவேண்டுவது மிருக்கின்றதோ? இல்லையாம். †

இவ்வுலக வாழ்வு மின்னலை யொத்ததாகலின், நீ விரைந்து என்னை ஆராதனஞ் செய்தடையக்கடவாயென்று பகவான் கூறல்.

இலங்குவாட்கண் பின்னையேய் முறுவலோடும் பேய்முலையுண்ட பெம்மானாகிய பகவான், அருச்சுனா! மின்னலை யொத்துப் பொய்யாயுள்ள இவ்வுலக வாழ்வில் அதனை நம்பி யிருக்கின்ற நீ பக்தியுடனே என்னையே வணங்கி, என்றும் என்னையே தியானஞ் செய்வாயாயின், முடிவில் பரமாநந்த வடிவனான என்னையே அபேதமா யடைவாய் என்று கூறினார். *

(பின்னை-இலக்குமி; பேய்-பூதகி; முறுவல்-புன்சிரிப்பு.)

9 - மாயாவிகார அத்தியாயம் முற்றிற்று.

---

† பகவானை ஆராதானஞ் செய்பவர் யாவராயிருப்பினும், அவர்க்கு நற்கதி உண்டாவதன்றித் துர்க்கதி உண்டாவதில்லையா மென்பதிங்குக் கவனித்தற்குரியதாம்.

* உயிர்கள் மோட்சமடைதற்குரியதாயுள்ள மானுட சரீரத்தை நிலையென்று கருதுதல் வேண்டாம்; அது மின்னலைப்போன்று விரைந்து கெடு மியல்புடையதாம்; அதனால் நீ விரைந்து என்னை வணங்கித் தியானித்தென்னை யடையக்கடவாய்; என்னை யடையாவிட்டால் மானுடசரீரம் பெற்றது பயனில்லாததாமென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினரென்க.

10 - விபூதியோக அத்தியாயம்.

7-8-9-வது அத்தியாயங்களில் தத்துவமசி யென்னும் மகா வாக்கியத்தி லுள்ள தற்பதப் பொருளான பரமேசுவரனுடைய சோபாதிக வடிவத்தையும் நிருபாதிக வடிவத்தையும் திருவாய்மலர்ந் தருளிய பகவான், அத் தத்பதப் பொருளான பரமேசுவரனுடைய விபூதிகள் சோபாதிக வடிவத் தியானத்திலும் நிருபாதிக வடிவ ஞானத்திலும் காரணமா யிருத்தலின், ஏழாவ தத்தியாயத்திலும் ஒன் பதாவ தத்தியாயத்திலும் சுருக்கமாகக் கூறிய அவ்விபூதிகளைத் தியா னத்தின் பொருட்டும் ஞானத்தின் பொருட்டும் விஸ்தாரமாகக் கூற விரும்பி, அருச்சுனன் தமது விபூதிகளை வினவாதிருக்கவும், அவ ற்றை அவனுள்ளத்தி லுற்சாக முண்டாகுமாறு அவனுக்குப் பத்தாவ தத்தியாயத்தில் கூறுகின்றார்.

வேதத்தி னுச்சியில் வீற்றிருக்கும் கருமுகில் போன்ற நிற முடைய பகவான் அருச்சுனனை நோக்கி, தமது செந்தாமரை மலர் போன்ற வாயினால், அருச்சுனா! எவரு மறிதற்கரிய பரமேசுவர னான எனது விபூதியை முன்பு சுருக்கமாகக் கூறினேன்; அதனைக் கேட்டு உன் வசமாக நின்ற மனத்தின்கண் சாந்த மிகுமாறு சந்தோ ஷமடைந் துள்ள உனக்கு இப்போதவ் விபூதியை விஸ்தாரமாகக் கூறுகின்றேன்; அதனை நீ கேட்கக் கடவாயென்று அதன்கண் அவ னுக் கன்பு மிகுமாறு கூறுவாரானார்:—

பகவான் மீண்டும் தனது பிரபாவத்தைக் கூறுதற்குக் காரணங் கூறல்.

அருச்சுனா! இந்திரன் முதலிய தேவர்களும் - பிருகு முதலிய மகரிஷிகளும் - அசுரர்களும் - சித்தர்களும் மற்றவர்களும் எனது பழைமையான சொரூபத்தின் காரியமாயிருத்தலின், எனது பிரபா வத்தை யறியார்கள்; (எனது சொரூபம் அவர்கட்குக் காரணமா யிருப்பதால் காரியமாயுள்ள அவர்கள் எனது கிருபையா லன்றி யெனது பிரபாவத்தை யறிதற்குரியவராகார்.) (அருச்சுனா! நீ தேவரீரது பிரபாவத்தை அறிவதால் வரும் பயன் யாது என வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

சாதலும் பிறத்தலு மில்லாது சர்வலோகங்கட்கும் மகேசுவரனு யுள்ள என்னைத் தமதான்மாவோடு அபேதமாக அறியத்தக்கவர் பாவ கரும மனைத்தையும் தம்மைவிட் டொழியுமாறு நீக்கி நிரதிசயாநந்த வடிவ மோட்சத்தை யடைவர். †

பகவான் தனது மகேசுரத் தன்மையை விரித்துக் கூறல்.

அருச்சுன! புத்தி, பொறுமை, தவம், ஞானம், புகழ், பழி, தீக்கொலை யொழிவு, சத்தியம், சமை, தமை, ஜபம், தானம், மர ணம், ஜனனம், நிறைவு, சுகம், துக்கம், அஞ்சுதல், அஞ்சாமை யென்னும் லோகப்பிரசித்தமான இவ்வளவு காரிய விசேஷங்களும் சர்வப்பிராணிகட்கும் பரமேசுவரனான என்னிடத்திருந்தே தத்தமது காரணங்களோ டுண்டாகின்றனவென்பதை நீ உணரக்கடவாய். ¶

---

† பரமேசுவரனது பிரபாவம் உலகனைத்திற்கும் காரணமாதல், சிஷ்டரைக் காத்தல், துஷ்டரை யொழித்தல், மச்ச—கூர்மாவதார முதலிய விசேஷங்கள் முதலியனவாம்.

¶ (1) சூக்குமப் பொருளை ஆராய்ந்துணரும் அந்தக்கரணத்தின் விசேட வடிவம் புத்தியாம்; (2) சித்தம் விகாரமடையா திருத்தல் பொறுமையாம்; (3) விரதங்களால் சரீரத்தையும் இந்திரியங்களையும் இளைக்குமாறு செய்தல் தவ மாம்; (4) நித்தியா நித்திய விவேகம் ஞானமாம்; (5) தருமவடிவ நிமித்தத்தா லுண்டாகுங் கீர்த்தி புகழாம்; (6) அதரும வடிவ நிமித்தத்தா லுண்டாகும் அகீர்த்தி பழியாம்; (7) மனம் வாக்குக் காயமென்னு மிவற்றுள் எதனாலும் எப்பிராணிக்குந் தீமை செய்யா திருத்தல் தீக்கொலை யொழிவாம்; (8) தனக் கும் பிறர்க்கும் தீமை தருவ தில்லாத சொற்களைக் கூறுதல் சத்தியமாம்; (9) அந்தக்கரணத்தை விஷயங்களில் செல்லாவாறு தடுத்தல் சமையாம்; (10) சுரோத்திர முதலிய இந்திரியங்களைச் சத்த முதலிய விஷயங்களி னின்றுந் திருப்புதல் தமையாம்; (11) ஈசுவரநாம முதலியவற்றை வாயாற் சொல்லுதல் அல்லது மனத்தால் சிந்தித்தல் ஜபமாம்; (12) உத்தமமான தேசத்தில் உத் தமமான காலத்தில் தக்கார்க்குச் சிரத்தையோடு அந்நம் சுவர்ணம் முதலிய வற்றை ஈதல் தானமாம்; (13) ஸ்தூல வுடம்பை விடுதல் மரணமாம்; (14) ஸ்தூலவுடம்பைப் புதுவதாக அடைதல் ஜனனமாம்; (15) பெற்றது கொண்டு மகிழ்தல் நிறைவாம்; (16) சுகம் இன்பமாம்; (17) துக்கம் துன்பமாம்; (18) பயமடைதல் அஞ்சுதலாம்; (19) பயமடையாமை அஞ்சாமையாம்.

புத்தி முதலியவற்றிற்குக் காரணமா யிருத்தலினுல் மாத்திரம் என்னிட
த்துச் சர்வலோக மகேசுரத் தன்மை யில்லை; மற்றே, பிருகுமுதலிய
மகரிஷிகளுக்கும் மற்றவர்க்கும் காரணமாவதாலும் என்னி
டத்துச் சர்வலோக மகேசுரத் தன்மை உண்டெனப்
பகவான் கூறல்.

அருச்சுனு ! எவ்வகைத்தாய தவத்தினையு முடைய பிருகு முத லிய சப்த மகரிஷிகளும், உலகனைத்தையும் நிற்பன நடப்பனவாகப் படைத்த சுவாயம்பு முதலிய பதினுன்கு மனுக்களும், சநகர் முத லிய நான்கு மகரிஷிகளும், சிருஷ்டியி னுதிகாலத்தில் இரண்ணிய கர்ப்ப ரூபனுன எனது சங்கற்ப மாத்திரத்தா லுண்டாயின ரென்ப தையும் நீ யறிவாயாக. *

சர்வலோக மகேசுரத் தன்மை யென்னிடத் துண்டென்பதை
யறிந்தவர் என்னை இவ்வாறு பஜிப்பரெனப் பகவான்
கூறல்.

அருச்சுனு ! யானே சர்வ லோகத்திற்குங் காரணன்; அவை யென் சந்நிதான விசேஷத்தாலேயே நடைபெறுகின்றனவென் றிவ் விதமாகச் சர்வ லோகத்திற்கும் மகேசுவரனுன என்னைச் சற்குரு வாயிலாகவும் சற்சாஸ்திர வாயிலாகவு முள்ளவா றறிந்த அதிகாரி புருஷர்கள் என்னிடத்திலேயே தமது பிராணனுடன் சிந்தையை வைத்துத் தியானஞ் செய்வர் ; என்னை யறியாதுள்ள தமது மாணுக் கர்களையும் தாம் தியானஞ் செய்யும் அவ்விதமாகவே தியானஞ்செய்யு மாறு செய்வர்; தம்மை யொத்தார் வரின் அவருடன் என்னையே சுருதி

* இந்திரன் முதலிய தேவர்களும் பிருகு முதலிய மகரிஷிகளும் பிறரும் என்னிடத்துத் தோன்றி யிருத்தலினுற்முன், எனது பிரபாவத்தை யறியா திரு க்கின்றனர் ; என்னுடைய கிருபையா லென்னைத் தமக் கபேதமாக அறிந்தவர் சர்வபாவரகிதராய்ப் பரகதி யடைவர் ; நான் புத்தி பொறை முதலியவற்றிற்கே யன்றி, பிருகு முதலிய சப்த மகரிஷிகளுக்கும், சுவாயம்பு முதலிய பதினுன்கு மனுக்களுக்கும், சநகர் முதலிய நான்கு மகரிஷிகளுக்கும் காரணமா யிருத்த லின், சர்வலோகத்திற்கும் ஈசனு யிருக்கின்றே னென்று பகவான் அருச்சுன னுக்குக் கூறினுரென்க.

யுத்தி வாயிலாக வெடுத்துப் புகழ்ந்து பேசுவர்; இவ்வாறு பஜிப்பதினால் சந்தோஷமடைந்து, இன்பவடிவமாக விளங்குவர். †

இவ்வாறென்னைப் பஜிப்பவர் எனது நிர்க்குண வடிவத்தை அடைவாரெனப் பகவான் கூறல்.

அருச்சுன! இவ்வா றெப்போதும் பரமேசுவரனான என்னைப் பிரீதி பூர்வமாகப் பஜனஞ் செய்பவர்க்கு, யான் அவர்தம் கிலேசத்தை யொழிக்க, எனது வாஸ்தவ சொரூபமாகிய நிர்க்குண வடிவத்தை ஆராய்ந் தறிதற்குரிய புத்தியைக் கொடுத்துக் காத்து, அவர் விரும்பும் வரங்களையும் குறைவறத் தந்து, அவ்வாறு தந்த வரங்களால் அவர் அறியும் பொருளாய், (யானே பரவாசுதேவனென்று சிந்தனைசெய்யும் அவரது சித்தத்தின்கண் நிலைபெற்று நின்று), அவரது மனத்தின்கணுள்ள அஞ்ஞானத்தா லுண்டாய ஆவரண வடிவ இருளனைத்தையும் மறைதலில்லாத (யானே பரவாசுதேவனென் றுணரும் தத்துவ) ஞான வடிவ விளக்கின் பிரகாசத்தினாலே நாசமாகுமாறு செய்வேன்; (அதனால், அவர்கள் பரவாசுதேவனை யானாகவே விளங்குவர்) என்று கூறியருளினர். §

---

† பிராணனுடன் சிந்தையை வைத்துத் தியானஞ் செய்தலாவது யோகாப்பியாசத்தோடு பகவானைத் தியானஞ் செய்தலாம். யோகாப்பியாச முடையவர் இந்திரிய வியவகாரஞ் செய்வ தொழிந் திருப்பரென்பதிங் குணர்தற் பாலதாம்.

§ கிலேசமென்பது இங்கு அதற்கேதுவான காம வெகுளி மயக்கங்களை. ஆவரணம்-மறைப்பு; அஃதிங்கு ஆத்மா இல்லை, இருந்தால் தோன்றாதா வென்பதாம். அவர் விரும்பும் வரங்கள் - சிரவண - மனன - நிதித்தியாசனங்களாம். விளக்கின் பிரகாசத்தாலே ஓரறைக்க ணிருந்த இருள் முற்றுங் கெடுவதுபோல யானே பரவாசுதேவனென் றுணரும் தத்துவ ஞானத்தின் திடத்தாலே ஒரு சித்தத்தின்க ணிருந்த அஞ்ஞான காரியமான ஆவரண முற்றும் கெடுவதாமென்பதும், விளக்கால் இருள் கெட்டபோது, அவ்விருளா லறியாதிருந்த பொருளே விளங்குதல் போலத் தத்துவ ஞானத்தால் ஆவரணங் கெட்டபோது, அவ்வாவரணத்தா லறியாதிருந்த பரவாசுதேவ வடிவ ஆத்மாவே விளங்குகின்றதென்பதும் இங்குணர்தற் பாலனவாம்.

இவ்வாறு பகவானது விபூதியையும் சர்வஞ்ஞத்துவ முதலிய ஐசுவரியமாகிய யோகத்தையும் சாமானியமாகக் கேட்ட அருச்சுனன் அவற்றை விசேஷமாகக் கேட்க விரும்பி, பகவானைத் துதித்தல்.

பகவானே! தம்முள் வேற்றுமையுடைய பிறப்பில்லாதவன், இருசியப் பொருள்களுள் எதனிடத்திலும் நீங்கா துள்ள வியாபகன், பேரானந்த வடிவினன், சர்வ ஜகத்திற்குங் காரணமா யுள்ள சொப்பிரகாசன், பரபிரஹ்மம், நாசமற்றவன், வேதங்கள் குறிப்பிட்டுக் கூறுதற்கரிய புருஷோத்தமன், எல்லாவற்றையும் பெற்றவன் என்றிவ்வாறு தேவரீரை நாரதர்-அசிதர்-தேவலர்-வியாசர் முதலிய ஞான நிஷ்டையுடைய முனிவர் யாவரும் என்னிடத்துக் கூறிய அனைத்தையும் தேவரீரே அடியேனிடத்து நேரே கூறியருளிச் செய்தீர்.

குரு சாஸ்திரங்கள் கூறும் பொருளில் அதிகாரி புருஷன் ஒரு போதும் சந்தேக மடைதல் கூடாது; அப்பொரு ளுண்மையேயென்று கொள்ளல் வேண்டும் என்று அருச்சுனன் குறிப்பிக்க, அப்பொருளில் தனக்குள்ள சத்தியத்வ புத்தியைக் கூறல்.

சர்வ பூதங்கட்கும் ஒப்பிலா துள்ள காரணனே! சர்வ பூதங்கட்கும் ஈசனே! உத்தமர்கள் துதிக்கின்ற சூரியன் முதலிய தேவதைகட்கும் உலகங்களுக்கும் தலைவனே! 'நிருபாதிகனும் சோபாதிகனுமான **என்னை** *யானறிவித்தா லல்லாமல், அறிதற் குரியவர் எவர்? குருவின் உபதேச மின்றி என்னை யானே யறிவன்' என்று தேவரீர் அருளிச் செய்த வாக்கியங்களா லுணரத்தக்கனவாகவுள்ள அப் பொருளனைத்தும் உண்மையேயாம்; அடியேனும் அவ் வுண்மையை நிச்சயித் துணர்ந்து சந்தேகத்தினின்றும் நீங்கினேன்.* †

எவ்வெப் பொருள்களை உமது விபூதியென்று சிந்தனைசெய்தால் என் சித்தம் ஒரு முகமாமோ அவ்வப் பொருள்களை விரிவாகத் திருவாய் மலர்ந்தருளல் வேண்டுமென்று அருச்சுனன் பிரார்த்தித்தல்.

பகவானே! உலகத்தின்கண் தம்முள் வெவ்வேறு தன்மையனவாக விருக்கும் பொருள்களுள் எப்படிப்பட்ட வடிவங்கள் உண்மை

---

† *ஈசன் - நியமிப்பவன். பகவானது நிர்க்குண வடிவம் நிருபாதிக் வடிவமாம்; சகுண வடிவம் சோபாதிக வடிவமாம். மாயா ரகித சேதனம் நிருபாதிகப் பிரஹ்மமாம்;மாயா சகிதசேதனம் சோபாதிகப் பிரஹ்மமா மென்பதிங்குணர்தற்பாலதாம்.*

யாக வுள்ள தேவரீரது விபூதிகளாமென்பதை மந்த புத்தி யுள்ள யான் உணரா திருக்கின்றேன்; அப்படிப்பட்ட தேவரீரது விபூதி அனைத்தையும் தேவரீரையே தஞ்சமாக நம்பியுள்ள எனக்குச் சிறிதும் மறைக்காது யான் சிந்தனை செய்து கடைத்தேறும் மார்க்கமாகத் திருவாய் மலர்ந்தருளல் வேண்டும்.

பகவான் 7-வது அத்தியாயத்திலும் 9-வது அத்தியாயத்திலும் சுருக்கமாகக் கூறிய விபூதியோகங்களை விரிவாக அருளிச் செய்தல் வேண்டுமென்று தான் பிரார்த்தனை செய்தமைக்கு அருச்சுனன் காரணங் கூறல்.

பகவானே ! மொழிக்குமொழி தித்திக்கும் உமது திருவாக்காகிய மேன்மை யுடைய அமிர்தத்தைக் காதிந்திரிய வாயிலாகப் பானஞ்செய்கின்ற எனக்கு அதனால் ஒருபோதும் திருப்தி உண்டாகாம லிருக்கின்றது; அக்காரணத்தால் தேவரீரது விபூதி யோகங்களை அடியேனுக்குத் தேவரீர் விரிவாகக் கூறியருளல் வேண்டும்.

இறப்பு எதிர்வு நிகழ்வு என்னுங் கால மூன்றிலும் சங்கோச விகாசமில்லாதுள்ள பகவான் அருச்சுனன் வினவியதற்கு விடை கூறல்.

அறஞ் செயவிரும்பும் அந்தக்கரணத்தையுடைய அருச்சுன ! விஸ்தாரமா யுள்ள எனது விபூதிகட்கு ஓரள வில்லையாம்; அதனால், தோன்றி யுள்ள அவ் விபூதிகளை முடிவுபெறக் கூறுதல் கூடாததாம்; அக்காரணத்தால், அவ் விபூதிகளில் சிறந்தனவா யுள்ள சிலவற்றைக் கூறுகின்றேன்; அவற்றை நீ உன் சித்த மொருமுக மாதற் பொருட்டுக் கேட்கக்கடவாய்.

சிறந்தனவாக வுள்ள விபூதிகளுள் உத்தம - மத்திம - மந்த அதிகாரிகள் சிந்திக்கத்தக்கனவற்றை முறையாகப் பகவான் கூறல்.

அருச்சுன ! (சிறந்தனவா யுள்ள எனது விபூதிகளுள் முன்னர் முக்கியமாகச் சிந்தனை செய்தற்குரிய விபூதி யாதோ அதனைக்) கூறுமிடத்து, அஃது எங்கும் பரவியுள்ள பிராணி அனைத்திற்கும் இருதயத்தின்கணுள்ள பிரத்தியகாத்மாவாம்; அது நானேயாம்; தம்முள் வேறுபாடுடையனவாயுள்ள இப்பிராணி அனைத்திற்கும் உற்பத்தியும் ஸ்திதியும் நாசமும் பரமேசுவரனாகிய நானேயாவன்; பன்னிரண்டு சூரியர்களுள் விஷ்ணுவென்னும் பெயருடைய சூரியனும் நானேயாவன்; தேவதைகளுள் ஒரு வகுப்பாயுள்ள சப்த மருத்துக்களுள் மரீசியென்னும்

மருத்துவும் நானேயாவன்; அக்கினி முதலிய ஒளிப் பொருள்களுள் எங்கும் பிரகாசிக்கின்ற சூரியனும் நானேயாவன். †

பகவான் பாகியத் தியானங் கூறல்.

அருச்சுனா! அசுவினி முதலிய நட்சத்திரங்களுள் அவற்றிற்குத் தலைவனா யுள்ள சந்திரனும் நானே; இருக்கு-யசுர்-சாமம்-அதர்வண மென்னும் வேதம் நான்கனுள் கானத்தின் மதுரத் தன்மையால் மிகப் பிரியமா யுள்ள சாமவேதமும் நானே; அக்கினி-வாயு முதலிய தேவதைகளுள் அத் தேவதைகட்குத் தலைவனா யுள்ள இந்திரனும் நானே; சுரோத்திர முதலிய இந்திரியங்களுள் அவற்றிற்குத் தலைமையா யுள்ள மனமும் நானே; யந்திரம்போலச் சுழலுகின்ற சரீர வடிவமா யுள்ள பூதங்களுள் புத்தி விருத்தி வடிவச் சேதனமும் நானே; ஏகாதச (பதினொரு) உருத்திரருள் தன தன்பர்க்கு நிரதிசய வடிவ மோட்சத்தைத் தரும் சங்கரனென்னும் மந்திர ரூபமான உருத்திரனும் நானே; யட்ச ராட்சதருள் சர்வ தனத்திற்குந் தலைவனாயுள்ள குபேரனும் நானே.‡

(இரத்தின மயமான சிகரங்களையுடைய) மலைகளுள் மகாமேரு மலையும் நானே; அஷ்ட வசுக்களுள் அக்கினியும் நானே; சேனாபதிகளுள் தேவ சேனாபதியான சண்முகனும் நானே; நீர்நிலைகளுள் கட

---

† இங்குப் பிரத்தியகாத்மா பிரஹ்மமே; அஃதாவது நானே பிரஹ்மமென்று அபேத சிந்தனஞ் செய்வது உத்தமாதிகாரிக் குரியதென்றும், பிராணிகளின் உற்பத்தி - ஸ்திதி - நாசங்களுக்குக் காரணன் பரமேசுவரனென்று காரணகாரிய நோக்கம் பற்றிச் சிந்தனஞ் செய்வது மத்திம அதிகாரிக் குரியதென்றும், சூரியருள் விஷ்ணுவா யிருக்கின்றான் பகவானென்றற் றொடக்கத் தனவாகப் பாகியமாய்ச் சிந்தனஞ் செய்வது மந்தாதிகாரிக் குரியதென்றும் இங்குணர்தற் பாலனவாம். இனி இவ்வத்தியாய முற்றும் கூறப்படுவன மந்தாதிகாரியின் தியானத்திற் குரியனவாம்.

‡ ஆதித்தியருள் விஷ்ணுவும், மருத்துக்களுள் மரீசியும், ஒளிப் பொருள்களுள் சூரியனும், நட்சத்திரங்களுள் சந்திரனும், வேதங்களுள் சாமவேதமும், தேவர்களுள் இந்திரனும், இந்திரியங்களுள் மனமும், சரீரரூபமாயுள்ள பூதங்களுள் புத்தியும், உருத்திரருள் சங்கரனும், யட்ச ராட்சதருள் குபேரனும், பரமேசுவரனது விபூதிகளுள் சிறந்தவரா யிருத்தலின், அவ்விஷ்ணு முதலியோர் பரமேசுவர வடிவமாகத் தியானஞ் செய்வதற் குரியவரென்பதும், இனிக் கூறப்படுவனவும் பரமேசுவரனது விபூதிகளுள் சிறந்தனவாம்; அவையும் பரமேசுவர வடிவமாகத் தியானஞ் செய்தற் குரியனவாமென்பது மிங்குணர்தற்பாலனவாம்.

னும் நானே; தமது பயனைத் தருவதில் கெடுதலில்லாத அசுவமேதம் சோதிஷ்டோம முதலிய யாகங்களுள் ஹிம்சை முதலிய தோஷங்களுள் யாதொன்று மில்லாமையால் மிகச் சுத்தமாயுள்ள ஜபவடிவ யாகமும் நானே; உலகத்தினுள் நிலைபெற்றிருப்பனவென்று கூறப்படுகின்ற ஸ்தாவரப் பொருள்களுள் இமாலய பர்வதமும்நானே; பிரஹ்ம புத்திராய மகரிஷிகளுள் பிருகு மகரிஷியும் நானே; மண்ணுலக விண்ணுலக வேந்தரின் புரோகிதருள் இந்திரனது புரோகிதரான பிருகஸ்பதியும் நானே; அர்த்த வாசகமாகப் பொருந்திய பதவடிவ வாக்குக்களுள் பிரஹ்மவாசகமாகிய ஓம் என்னும் ஏகாட்சரவடிவப் பிரணவ பதமும் நானே; வனஸ்பதி யென்னும் விருட்சங்களுள் பிப்பல விருட்சமென்னும் அரச மரமும் நானே; தேவர்களாயிருந்து வேத மந்திரத்தின் தரிசனத்தால் ரிஷிகளாகிய தேவரிஷிகளுள் தமக் குவமை சொல்லற்கரிய நாரதரும் நானே; கானஞ்செய்யும் பாக்கியத்தைப் பெற்ற கந்தருவருள் சித்திரரதனும் நானே; இப்பிறப்பின்கண் யாதொரு முயற்சியும் செய்யா திருந்தும் சன்மாந்தரத்திற் செய்துள்ள முயற்சியாலே தரும-ஞான-வைராக்கிய - ஐசுவரியத்தன்மை முதலிய குணங்களைப் பெற்றுப் பரமாத்மாவை நிச்சயித் துணர்ந்திருப்பவராய சித்தர்களுள் கபில முனிவரும் நானே; குதிரைகளுள் பாற்கடலை அமிர்தம் பெறுதற்பொருட்டுத் தேவாசுரர்கள் கடைந்த காலத்தில் அதி லுண்டாய உத்தம சாதியாய உச்சைச் சிரவமென்னும் குதிரையும் நானே; யானைகளுள் பாற்கடலிற் பிறந்த ஐராவதமென்னும் யானையும் நானே; மன வுணர்வுடைய மக்களுள் யாவரையும் அறநெறியிற் செலுத்தி-மறநெறியிற் செல்லாவாறு தடுக்கும் வேல்வேந்தரும் நானே; பகைவரை அழித்தற்குரிய ஆயுதங்களுள் ததீசி முனிவரின் எலும்பினின்று முண்டாய வச்சிராயுதமும் நானே; சர்ப்பங்களுள் சர்ப்ப ராஜனான வாசுகியும் நானே; சிறந்த நாகங்களுள் தனக்குவமை சொல்லற்கரிய நாகராஜனான அநந்த னென்னும் ஆதிசேஷனும் நானே; பசுக்களுள் விரும்பியவற்றைக் கொடுக்கும் காமதேனுவும் நானே. இவை அனைத்தையும் யான் கூறிய முறையாக யானென்றே நீ அறிவாயாக. ¶

¶ சர்ப்பம் விஷமுடையதாம்; நாகம் விஷமின்றியதாம். காமதேனு வசிஷ்டருக் குரியதா யிருப்பதாம்.

போர்செய்யும் வன்மை பொருந்திய தோளையுடைய அருச்சுனா! நீர்நிலைகளில் வசிக்கும் பிராணிகளுள் அப்பிராணிகளுக் கரசனான வருணனும் நானே! தண்டஞ் செய்பவருள் யமனும் நானே; புணரும் வேட்கைவடிவ எல்லை யில்லாத காமங்களுள் புத்திரோற்பத்தியின் பொருட் டுண்டாகும் காமமும் நானே; திதியின் வம்சத்திற் பிறந் துள்ள தைத்தியருள் தனது சாத்துவிகத் தன்மையால் யாவர்க்கும் மேன்மையைச் செய்கின்ற பிரகலாதனும் நானே; மிகுதியாகப் பொருள்களைக் கணக்கிடும் பொருள்களுள் காலமும் நானே.

அருச்சுனா! பறவைகளுள் தனது பகையைப் போர்செய்தழித்து வருகின்ற பறவை வேந்தாகிய கருடனும் நானே; மிருகங்களுள் பிறர் நெருங்குதற்கரிய மிருக வேந்தாகிய சிங்கமும் நானே; வேகமுடைய பொருள்களுள் வாயுவும் நானே; போரில் மிகு பிரிய முடையவராய்த் தம் பகைவர் மீது பிரயோகிக்கின்ற ஆயுதபாணிகளா யுள்ள வீரருள் தசரத புத்திரனான சீராமனும் நானே; மீன்களுள் சுறுமீனென்னும் மகரமச்சமும் நானே; யமுனை - கோதாவரி முதலிய புண்ணிய நதிகளுள் மிகு சிரேட்டமா யுள்ள கங்கையும் நானே; வாதம் - ஜல்பம் - விதண்டை யென்னும் கதைகளுள் மேலா யுள்ள வாதமும் நானே; வித்தைகளுள் அதிகாரி புருஷரன்றி மற்றவர் பெறுதற்கரிய அகம் பிரஹ்மாஸ்மி (நான் பிரஹ்மமா யிருக்கிறேன்) என் றுணர்வதாகிய பிரஹ்ம வித்தையும் நானே; வர்ண வடிவமாகவுள்ள அட்சரங்களுள் சர்வ வாக்குக்களின் வடிவமா யுள்ள அகரமும் நானே; (முற்கூறிய நாசமுடைய காலமேயன்றி) நாசமில்லாத காலமும் நானே; நான் அங் ஙனமாக விருப்பதன்றி, வேற்றுமைத் தொகை முதலிய அறுவகைத் தொகையுள் மேலாய உம்மைத் தொகையும் நானே; பயன் தருபவருள் இருவினைப் பயனனைத்தையும் சீவர்க்குத் தரும் அந்தர்யாமி யென்னும் ஈசுவரனும் நானே; சம்மாரஞ்செய்பவருள் நிலைபெற்ற உயிரனைத்தையும் சம்மாரஞ் செய்யும் யமனும் நானே; அவ்வுயிர்களைப் பிறக்கச் செய்பவனும் நானே.§

---

§உண்மைப் பொருளை யறியும் விருப்பமுள்ளாரிருவரிடத் துண்டாகும் வினா விடையாகிய கதை வாதமாம்; யுக்திப் பிரமாணங்களில் வல்ல பண்டிதர்களின் வாதம் ஜல்பமாம்; யுக்திப் பிரமாணங்களில்லாத மூடாது வாதம் விதண்டையாம். சொல்வார் பலரை யுடையதாய்ப் பூர்வோத்தர பட்சத்தைப் பிரதிபாதிக்கும்

எனக் கன்பனு யிருப்பதன்றி நண்பனுயு மிருக்கும் அருச்சுன ! பெண்களுள் புகழ் - திரு - வாக்கு - மேதை - பொறை - திண்மை - நினைப்பு என்றெண்ணப்படுகின்ற சப்த மாதரும் நானே ; கார் - கூதிர் - முன்பனி -பின்பனி-இளவேனில்-முதுவேனில் என்னும் பெரும்பொழு தாறனுள் நறு மண முள்ள மலர்களுக் கிடமாக வருகின்ற இளவேனிற் கால மென்னும் வசந்த ரிதுவும் நானே; கானஞ் செய்தற்குரிய சாமமேழனுள் சிறந்த பிருகத் சாமமும் நானே; தாம் செய்யும் உபகாரத்தால் உலகத்தார் களிப்படையுமாறு வருகின்ற சித்திரை முதலிய மாதங்களுள் மிக்க தட்ப வெப்பங்க ளின்மையால் சுகத்திற்கேதுவாய் யாவரும் புகழ வருகின்ற மார்கழி மாதமும் நானே ; பின் கூறப்படும் விபூதிகளும் நானே. ¶

பின் கூறப்படும் விபூதிகளும் நானே யென்பதைப் பகவான் கூறல்.

மலைபோலும் தோளையுடைய அருச்சுன! சந்தசுக்களுள் காயத்திரிச் சந்தசும் நானே; வஞ்சனை செய்யும் தொழில்களுள் பழைமையாயுள்ள சூதாடுந் தொழிலும் நானே; தாம் மேற்கொண்ட காரியத்தைச் செய்து முடிக்க நிச்சயித்திருப்பவரது முயற்சிகளுள் தவறாது பயனையடைவித்தற் கேதுவாயுள்ள முயற்சியும் நானே; தம் பகைவரை வெல்வாரிடத்துள்ள சத்துரு ஜயமென்னும் வெற்றியும் நானே ; மிக்க வல்

வாக்கியக் கோவை கதையாம். நாசமில்லாத காலமென்றது இங்கு க்ஷணம்-கடிகை முதலிய வடிவமா யுள்ள காலமனைத்தையு மறியும் காலகாலனு யுள்ள பரமேசுவரனையாம். வேற்றுமைத் தொகை முதலிய அறுவகைத் தொகையுள் உம்மைத் தொகை அனைத்து மொழியினும் பொருள் சிறப்புடையதா யிருத்தலின், அது மற்றத் தொகையினுள் சிறப்புடையதாயிற்று. உம்மைத் தொகைக்கு உதாரணம்:—கபிலபரணர், புலிவிற்கெண்டை என்றற்றொடக்கத்தனவாம்.

¶புகழ் - கீர்த்தியாம், அஃதாவது பிரக்கியாதியாம்; தர்ம அர்த்த காம மூன்றும் திருவாம், இது ஸ்ரீ எனப்படும்; சர்வார்த்தத்தையும் விளக்கும் சம்ஸ்கிருத பாஷைவடிவச் சாஸ்வதி வாக்காம்; பன்னூற்பொருளையும் கிரகிக்கும் சக்தி மேதையாம்; மகிழ்ச்சியுற்ற காலத்திலும் வாட்டமுற்ற காலத்திலும் சித்தம் விகாரமடையாதிருத்தல் பொறையாம்; பல திறத்தனவாய துன்பங்கள் நேரிட்டகாலத்தினும் தேகேந்திரியங்களை ஸ்திரமாகச் செய்யுஞ் சக்தி திண்மையாம், இது திருதியெனப்படும்; முன்னனுபவித்த பொருள்களைப் பின்னர் நினைப்பது நினைப்பாம், இது ஸ்மிருதி யெனப்படும். சர்வத்தையும் ஈசுவரவடிவமாக இந்திரன் துதிசெய்த சாமவேதத்தின் ஒருபாகம் இங்குப் பிருகத் (பெரிய) சாமமாம்.

லமை யுடையாரிடத் துள்ள வல்லமையும் நானே; சத்துவ குண முடையா ரிடத்துள்ள (அக்குணத்தின் காரியமான) தர்ம - ஞான - வைராக்கிய - ஐசுவரியங்களும் நானே; ஞானிகளிடத் துள்ள சீவப் பிரஹ்ம ஐக்கிய ஞானமும் நானே.*

யாதவர்களுள் வசுதேவனது புத்திரனெனப் பிரசித்தமாகச் சொல்லப்பட்டு, உனக்குப் பிரஹ்ம வித்தையைப் போதிக்கின்ற இந்தக் கிருஷ்ணனும் நானே; சூக்குமமாக நூற்பொருள்களைப் பகுத்தறியும் தன்மையுள்ள கவிகளுள் சுக்கிரனென்னும் கவியும் நானே; பெருங் கருணை பொருந்திய பாண்டவருள் அருச்சுனனென்னும் நீயும் நானே; பெருமை பொருந்திய மனனசீலரென்னும் முனிவருள் வேதவியாச முனியும் நானே; எண்ணுதற்கரிய இரகசியப் பொருள்களுள் வாக்கிந்திரிய நிக்கிரகவடிவ மௌனமும் நானே. $

அருச்சுனா! மிகப் பெரிய இவ்வுலக மனைத்திற்கும் சேதனவடிவக் காரணமும் நானே; பரமேசுவரனான என்னைத் தவிர யாதொரு பொருளு மில்லை. சர்வஞ்ஞரா யிருப்பவர்க்கும் வருத்தமுற்றாயினும் பரமேசுவரனாகிய எனது திவ்விய விபூதிகளின் முடிவை யறிதலும் முடியாது, சொல்லுதலும் முடியாது. எனது முடிவில்லாத விபூதிகளை யானுனக்கு ஏகதேசமாக வகுத்துக் கூறினேன். இவ்வுலகத்திலே பெருமை பொருந்திய ஐசுவரியத்தை யுடையன இவை, மெய்ம்மையான பெரு முயற்சி யுடையன இவை யென்று கூறப்படும் இவ்வரிய பிராணி யனைத்தும் எனது சக்தியி னம்சத்தா லுண்டாயினவாமென்று நீ அறியக்கடவாயாக.¶

---

* நியமமாக அட்சரங்களையும் பாதங்களையு முடையன சந்தசுக்களாம்; அவற்றுள் இருபத்துநான்கு அட்சரங்களையுடையது காயத்திரிச் சந்தசுவாம். இச் சந்தசுக்களனைத்தும் மந்திரங்களாம். இதனால் வேத மந்திரங்களுள் காயத்திரி மந்திரமாகப் பகவானிருக்கின்றாரென்பது பெறப்பட்டதென்க.

$ வாக்கிந்திரிய நிக்கிரகமென்னும் மௌன(பேசாவிரத) முடையவனது உட்கருத்து எவர்க்கு மரிதற்கரியதாயிருத்தலின், அது மிக இரகசியமானதாமென்க.

¶ விருட்சங்க ளுண்டாதற்கு விதைகள் காரணமா யிருத்தல் போல இவ்வுலக முண்டாதற்குப் பகவான் காரணமா யிருக்கின்றார்; பகவான் தமது காரியமாயுள்ள உலகத்தில் இருத்தல் விளங்குதல் வடிவமாகவியாபித்திருத்

அருச்சுனனுக் கிவ்வாறு தமது விபூதிகளை யேகதேசமாகக் கூறிய பகவான் உலகனைத்தும் எமது விபூதியேயாமெனக் கூறல்.

"கஞ்சன் ஆருயிர் போய்த் துஞ்ச (சாவ), அலைகடல் வளராதே போந்து (வந்து) ஆயர் (இடையர்) பால் வளர்ந்த" பகவான் அருச்சுனா! இனிப் பலவாறாக என்னுடைய விபூதிகளை யெடுத்துரைப்பதால் எனது உத்தம பக்தனா யுள்ள உனக்கு யாது பயனும்? இந்தப் பல திறத்தனவாக வுள்ள பிராணியனைத்தும் உலகனைத்தும் பரமேசுவரனான எனது அவித்தியாபாத மென்னும் ஏகதேச பாகத்திலே அடங்கி யிருப்பனவாம்; (அதனா லவை யனைத்தும் எனது விபூதிகளேயாம்); (கயிற்றின் ஏகதேச பாகத்தில் தோன்றும் பாம்போடு கயிறு உண்மையில் கலவா திருத்தல்போல) நான் அவற்றோடு கலவா திருக்கின்றேன் என்றருளிச் செய்தனர். *

10 — விபூதியோக அத்தியாயம்

முற்றிற்று.

தலின், அவரைத் தவிர யாதொரு பொருளுமில்லை; பகவானது விபூதிகள் எல்லையற்றனவா யிருத்தலின், அவற்றைச் சர்வஞ்ஞரா யுள்ள முனிவர்க்கும் அறிதலு முடியாது, உரைத்தலு முடியாது; பெருஞ் செல்வமுடையவரும் பெரு முயற்சி யுடையவரும் பகவானது சக்தியின் அம்சத்தா லுண்டா யிருப்பவ ராவரென்பன இங்குணர்தற்பாலனவாம்.

* பரமான்மாவிற்கு நான்கு பாதமுண்டு; அவற்றுள், மூன்று பாதம் சத்-சித்-ஆநந்தமாம்; நான்காவது பாதம் அவித்தையோடுகூடி உலக காரணமா யுள்ள சேதனமாம். இஃது அவித்தியாபாதமென்று சொல்லப்படுகின்றது.

நிரவயவ-நிராகாரமா யுள்ள ஆத்மாவிற்குப் பாதம் அஃதாவது அம்சம்-அல்லது பாகம் உண்டென்பது பொருந்தாதாம்; ஆனால் கடமென்னும் உபாதி (தடை) நோக்கத்தால் ஆகாயத்திற்குக் கடாகாயம் மகாகாயமென்னும் கற்பனை சம்பவித்திருத்தல்போல, அவித்தை யென்னும் உபாதி நோக்கத்தால் ஆத்மாவிற்கும் அவித்யா பாதம்-சத்-சித்-ஆநந்தபாத மென்னும் கற்பனை சம்பவித்திருக்கின்றதென்ப திங்குணர்தற் பாலதாம்.

ஆதித்தியருள் விஷ்ணுவென்னுஞ் சூரியன் நானே யென்றதற்றொடக்கத்தனவற்றைக் கூறியது மந்தாதிகாரியை நோக்கியாம்; நீ இவ்வாறு நோக்குவதொழிந்து, உலகு உயிரனைத்தும் எனது விபூதிகளேயாமென்று என்னைத் தியானஞ் செய்வாயாக வென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினரென்க.

11 — விசுவரூப அத்தியாயம்.

பத்தாவது அத்தியாயத்தில் பகவான் தமது நாநாவிதமா யுள்ள விபூதிகளை யருளிச் செய்து முடிவில் உலகு உயிரனைத்தும் எனது ஏகதேசபாகத்தில் ஒடுங்கி யிருப்பனவாம்; யானோ அவற்றோடு கலவாதிருக்கின்றே னென்று தமது சர்வ விசுவான்மக சொரூபத்தை யருளிச் செய்தமையைக் கேட்ட அருச்சுனன் அதனால் பரமாநந்த மடைந்து, பகவானது சர்வ விசுவான்மக சொரூபத்தைத் தரிசித்தல் வேண்டுமென்னு மிச்சை கொண்டு பகவான் பூர்வம் அருளிச்செய்த பொருளை வியந்து துதித்தல்.

துளசிமாலை யணியப்பெற்றுச் சுருளாகப் பொருந்தி யிருக்கின்ற முடியை உடையவரே! சொல்லும் மனமுஞ் சென்று பற்றுதற் கரிய வரே! வண்டி வடிவமாக உருண்டு வந்த சகடா சூரனைச் சாமாறு உதைத்துக் கொன்றவரே! உயிர் அனைத்திற்கும் அந்தரான்மாவா யிருப்பவரே! சோக மோகங்கள் நிறைந்துள்ள சம்சாரக் கடலில் முழுகி வருந்துகின்ற என்னிடத் திரக்கங் கொண்டு தேவரீர் கூறி யருளிய உமது திருவாக்காகிய அரிய அமிர்தத்தை யெனது காதிந் திரியமாகிய வாயினால் நிறைய உண்டு, அதனால் மோகம் நீங்கினவ னானேன். *

விசுவரூப தரிசனத்தில் விருப்பம் மிக்க அருச்சுனன் பகவானை நோக்கி அவ் விசுவ ரூபத்தைக் காட்டல் வேண்டுமென்று பிரார்த்தித்தல்.

வாக்கும் மனமும் எட்டி அறிதற்கரிய புருஷோத்தமரே! நீர் எவரது திருஷ்டிக்கும் தோன்றுவாறு எவ்விடத்தும் வியாபித்து, ஞானம் - ஐசுவரியம் - சக்தி - பலம் - வீரியம் - தேஜசு என்றற் றொடக்கத்துக் குணங்களோடு கூடி யிருக்கின்ற அந்தத் திருக்கோலமானது உள்ளபடி அடியேனுக்கும் தரிசித்தற் குரியதாமோ? உரியதாமாயின், தேவரீர் எனக்கு அதனைக் காட்டி யருளல் வேண்டும். †

---

* இங்கு மோகமாவது யான் இந்தப் பீஷ்மர் துரோணர் முதலாயினோரைக் கொல்வேன், அவர்கள் என்னால் கொல்லப்படுவ ரென்றற் றொடக்கத்து விபரீத புத்தியாம்.

† புருஷோத்தமர் - புருஷருள் மேலாக இருப்பவர். அந்தத் திருக்கோல மென்றது பகவானது விசுவரூபத்தை.

பழமறைமேதர் கரியானான பகவான் விசுவ ரூபத்தைத் தரிசித்தல் வேண்டு மென்னும் பிரியத்தால் வருந்துகின்ற மனமுடைய அருச்சுனனுக்குத் தமது விசுவ ரூபத்தைக் காட்ட விரும்பிக் கூறல்.

அருச்சுனா! உலகுயிர் அனைத்துமாய் விளங்கும் எனது விசுவ ரூபம் பல திறத்தனவாய் அளவின்றி யுள்ள அவயவ விசேஷங்களை யுடையதாம்; அளவின்றி யுள்ள நீல பீதாதி நாநா வர்ணங்களை யுடையதாம்; ஒருவரால் கற்பித் துண்டாக்கப்படாததாம்; ஆகாயத்தின் வியாபகம் தன்னை நோக்க வியாப்பியமாமாறு வியாபகமா யிருப்பதாம்; கண்ணாற் காண்டற் கரிதா யிருப்பதாம். இவ்வாறுள்ள எனது விசுவ ரூபத்தைக் காட்டுகின்றேன், நீ காண்பாயாக. ¶

பகவான் மேற் குறிப்பிட்டுக் கூறிய தமது விசுவ ரூபத்தில் சிலவற்றைக் குறிப்பிட்டுக் கூறல்.

அருச்சுனா! (எவ்வேழு வகையாயுள்ள) நாற்பத்தொன்பது மருத்துவரும், பன்னிரண்டு சூரியரும், அஷ்ட வசுக்களும், ஏகாதச ருத்திரரும், (அசுவினிகுமாரர் இருவரும்) என் விசுவ ரூபத்திலேயே யிருக்கின்றனர்; பூர்வம் காணாமையால் யாவரும் காண விரும்பும் அற்புதமாய பல வடிவங்களும் என் விசுவ ரூபத்திலேயே யிருக்கின்றன; அந்த மருத்துவர் முதலாயினோரையும் அற்புதமாய வடிவங்களையும் உன் மனத்துட் பொருந்தக் காணக் கடவாய். $

¶ எனது விசுவரூபம் விசித்திரமாய் அளவு கடந்த அவயவங்களையும் வர்ணங்களையு முடையதாம்; எனக்கு மேலொரு கர்த்தா வின்மையின், எவராலும் சிருஷ்டிக்கப்படாததாம்; ஆகாயமும் அணுவென்று கூறும்படி வியாபகமா யிருப்பதாம்; கண்ணால் காண்டற் கரியதாம்; அதனை யான் காட்டுகின்றேன்; நீ காண்பாயாக வென்று அருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

$ அற்புதமாய வடிவங்க ளென்பது மருத்துவர் முதலாயினோர் ஒழிந்த இந்திரன் முதலாயினோரும், மேருமலை முதலாயினவும், வெற்றி தோல்விகளும் பிறவுமாம்.

நூறுகோடி வருஷ பரியந்தம் தேடிச் சென்று காண முயற்சி செய்தாலும் காண்டற்கரிய சராசரப் பொருளனைத்தையும் எனது திருமேனியிலுள்ள ஒரு நக நுனி மாத்திரமான அவயவத்தின்கண் காண்பாயாகவென்று அருச்சுனனுக்குப் பகவான் குறிப்பிட்டுக் கூறினாரென்க.

சஞ்சயன் திருதராஷ்டிரனுக்குப் பகவான் தமது விசுவ ரூபத்தை அருச்சுனன் காண, அவனுக்கு ஞானக்கண் தந்தமையைக் கூறல்.

திருதராஷ்டிரரே! மகா யோகீசுவரனான கிருஷ்ணபகவான் என்றிவ்வாறு கூறி, அவ்வருச்சுனனது பிரகிருதி சம்பந்தமாயுள்ள கண் இரண்டும் தமது விசுவ ரூபத்தை நன்றாக அறியமாட்டாவென்று கருதி, அவனுக்குத் திவ்விய நேத்திரமென்னும் ஞானக் கண்ணைக் கொடுத்து, அப்போதவனுக்குக் கூறியவாறே விசுவ ரூபராய் அருச்சுனன் தவிர, அங்குள்ள மற்றவர்க்கு விளங்காவண்ணம் நின்றனர்.

பகவான் அருச்சுனனுக்குத் தமது விசுவ ரூபத்தைக் காட்டிய விதத்தைச் சஞ்சயன் கூறல்.

திருதராஷ்டிரரே! அக் குருக்ஷேத்திரத்தில் பகவான் அருச்சுனன் பொருட்டுக் கொண்டருளிய விசுவ ரூபத்தை இங்கு எவர்க்கும் அளவு செய்து கூறுதல் ஒருவாற்றானும் முடியாததாம்; ஆயினும், யான் சிறிது கூறுகின்றேன்; பகவான் வண்டுகள் தங்கித் தேனுண்ணும் புஷ்ப மயமாயுள்ள திவ்விய மாலைகளும், பீதாம்பர முதலிய திவ்விய வஸ்திரங்களும் சந்தனம் கருப்பூர முதலியகலவைப் பூச்சுக்களும் தரித்துள்ள விசுவ ரூபத்தைக் கொண்டு அருச்சுனனுக்கு அதனைக் காட்டியருளினார். அவ் விசுவ ரூபம் எல்லை யில்லாமல் எவ்விடத்தும் நிறைந்திருந்தது. அதன் பிரகாசம் அளவில்லாத பல்கோடிசூரியர்கள் மேகமுடைய ஆகாயத்தில் ஏக காலத்தில் வந்து உதயமாவதை யொத்திருந்தது. அவ் விசுவ ரூபத்தினது நல்லிலக்கண மமைந்து பொருந்தி யிருக்கின்ற கால்களும் கைகளும் அளவிறந்தனவாம்; அழகமைய அணிந்துள்ள ஆபரணங்களும் அளவிறந்தனவாம்; வாய்களும் அளவிறந்தனவாம்; மிகப் பிரகாச முள்ள முகங்களும் அளவிறந்தனவாம்; சக்கரம் கதை முதலிய ஆயுதங்களும் அளவிறந்தனவாம்; இன்னுமுயர்வான அற்புத வஸ்துக்களும் அளவிறந்தனவாம்.*

* பகவான் கொண்ட விசுவ ரூபத்தை அளவிட்டு முற்றுங் கூறல் எவர்க்கு முடியாது; பகவான் மலர்மாலை, மணிமாலை, பீதாம்பரம், கலவைக் குழம்புகளணிந்த வடிவமாகத் தமது விசுவ ரூபத்தை அருச்சுனனுக்குக் காட்டியருளினார்; அவ் வடிவம் எல்லையின்றி யெங்கும் வியாபகமா யிருந்தது; அதன் பிரகாசத்திற்கு எண்ணில் கோடி சூரியப் பிரகாசமும் ஒப்பாகாது; அவ் வடிவம் அளவிறந்த கால் கை முதலியவற்றை உடையதா யிருந்ததென்று திருதராஷ்டிரனுக்குச் சஞ்சயன் கூறினனென்க.

பகவானது கட்டளையின்படி, அவர்தம் விசுவ ரூபத்தைத் தரிசித்த அருச்சுனனது செயலைச் சஞ்சயன் கூறல்.

திருதராஷ்டிரரே! பகவான் மேற்கூறியவாறு கொண்டருளிய அவ்விசுவரூபத்தின் ஏகதேச பாகத்திலே எப்படிப்பட்ட தன்மையுமுடையனவா யுள்ள பொருளனைத்தையும் அருச்சுனன் நேரே தரிசித்து, இனி யான் பிழைக்குந் தன்மையனாயினே னென்று கூறி, ஆநந்தப் பெருக்குண்டாக, அதனால் தான் செய்யத் தக்கது இன்னதென் றுணராமல், அவ் விசுவரூபங்கொண்ட பகவானை, தனது சிரசு பூமியிற் பொருந்துமாறு விழுந்து வணங்குவான்; தன்னுடம்பு முற்றும் மயிர்சிலிர்ப்ப நிற்பான்; தன் கண்ணும் மனமும் கரைந்து உருகுமாறு தன்னிரண்டு கைகளையும் குவித்து உலகனைத்தையும் உயிரனைத்தையும் சிருஷ்டி காலத்திலே சிருஷ்டித்த பகவானெதிரே நின்று, இந்திரன் முதலிய இமையவர்யாவரும் வணங்கும் கடவுளே! உமது விசுவரூபத்திலே எத்தன்மை யுடையாரும் அளவிட்டு எல்லை காண்பதில்லாத சராசரப் பொரு ளனைத்தையும் செவ்வையாகக் காண்கின்றனன்; அய னரி யர னென்னும் மும்மூர்த்திகளுள் உலகத்தைப் படைத்தல்பற்றி முதலாகவுள்ள பிரமனை வசிஷ்டர் முதலிய முனிவர்களுடனே காண்கின்றனன்; பிறர் நெருங்குதற் கரிய வாசுகி முதலிய சர்ப்பங்களையும் காண்கின்றனன்; வசு - உருத்திரர் - ஆதித்தியர் முதலிய தேவதைகளையும் காண்கின்றன னென்று கூறினான்; பின்னர் அவன் பகவானை நோக்கி, சர்வேசுவரனே! தண்ணிய கிரணத்தையுடைய இரத்தின கிரீடத்தையும், கதாயுதத்தையும், சக்ராயுதத்தையும் தரித்துப் பிரகாசத்தால் சூரியனையும் அக்கினியையும் ஒத்து ஏகமாய் விளங்குகின்ற உமது விசுவ ரூபத்திலே ஆராய்ந்து நோக்கி, கண்களும் வயிறுகளும் தோள்களும் முகங்களும் அநேகமாக உடையனவாகிய உருவங்கள் பலவற்றையும் யான் காண்கின்றேன் என்றுங் கூறினான். இங்ஙனங் கூறிய அருச்சுனன் பின்னரும், பகவானே! தேவரீர் அடியேன் பொருட்டுக் கொண்ட இந்த வடிவம் இத்தன்மையதாய வடிவ மென்பதைக் குறிப்பிட்டு அறிதற் கியலாதவனா யிருக்கின்றேன்; இவ்வடிவத்தின் முடிவு - நடுவு - முதலனைத்தையும் அறியாதிருக்கின்றேன்; தன்னிலையி னின்றும் நழுவுத லில்லாததும், நான்கு வேதங்களும் ஆராய்ந்து நிச்சயித்து அதிகாரி புருஷர் அறியுமாறு

உபதேசித்தபொருளும், ஜகத்தைத் தருகின்ற மாயைக்கு அதிஷ்டான மா யிருப்பதும், எக்காலத்து மிருப்பதும், சாசுவதமான தரும மனைத் தையும் தம் நிலையி னின்றும் வேறுகாதவாறு நிலைபெறச் செய்யும் மார்க்கமா யிருப்பதாகிய வாழ்வும், ஒரு காலத்திற் பெருகி மற்றொரு காலத்தில் சுருங்கா திருப்பதுமாகிய எனது அநாதியாயுள்ள தெய்வத் தைக் கன்றைத் தொடர்ந்து நிற்கும் பசுவைப் போலத் தொடர்ந்து நின்று என்னெதிரே காண்கின்றேன்.

பகவானே! யான் வெற்றியைத் தரும் பராக்கிரம முடையதும், பூமண்டலத்தைச் சுற்றி வருகின்ற சூரிய சந்திரர்களையே விரிந் தெழு மாறு கண்களாகக் கொண்டு விழிப்பதும், தன்னைச் சேர்ந்தாரைச் சுடும் நெருப்பை மலர்ந்து விளங்கும் முகமாக உடையதும், உலக முற்றும் மயங்குமாறு வியாபித்து, அவற்றைத் தனது தேஜசால் தகிப்பதுமா யுள்ள உமது விசுவ ரூபத்தை வியப்படைந்து என் னெதிரே காண்கின்றேன்.

பகவான் தந்த திவ்விய சட்சுவால் அவரது விசுவரூபத்தைத் தரிசித்த அருச்சுனன், அவ் விசுவ ரூபம் சர்வ வியாபகமாக இருக்கின்ற தெனக் கூறல்.

ஐயனே! தேவரீர் மண்ணுலகும் விண்ணுலகும் நிறையுமாறு வியாபித்து, திக்குக்களில் நேரே சென்று விலகுத லில்லாவாறு உமது திருமேனியை விரியச் செய்வீராயின், அற்புதமாயும் உக்கிரமாயு முள்ள உமது திருமேனியைக் கண்டு துன்ப மடையாதவர் யாவர்? உலக முற்றும் உமது திருமேனியின் தரிசனத்தால் கலக்க மடைந் திருக்கின்றன; உலக முற்றும் கலக்கமடைந் திருத்தலைக் காண்பீராக.†

யான் பூபாரந் தீர்த்தற்பொருட்டு அவதாரஞ் செய்திருக்கிறே னென்பதைத் தமது விசுவரூபத்தால் வெளிப்படையாகக் காட்டும் பகவானை அருச்சுனன் நோக்கி யான் உமது விசுவ ரூபத்தில் இன்னார் இன்னாரைக் காண்கின்றே னெனக் கூறல்.

பகவானே! உமது விசுவ ரூபத்தில் தேவகணங்கள் பயத்தினால் தேவரீரைச் சரணமாக அடைந்து வணங்கவும், அருமையான பெருந்

---

† இங்ஙனம் அருச்சுனன் கூறியது பகவான் தாம் கொண்ட விசுவ ரூபத்தை மறைத்தருளல் வேண்டுமென்பதைக் குறிப்பித்து நின்றது.

தவத்தினையுடைய நாரதர் முதலிய முனிவர்கள் தமது கரங்களைக் கூப்பி நின்று உலகத்தார்க்கு நன்மை யுண்டாமாறு உம்மை ஸ்துதிக் கவும், கூட்டமாகக் கூடிநின்று ஜய ஜய என்று உம்மை வியந்து புகழ்ந்து பேசுகின்ற கபிலர் முதலிய சித்தர் குழாங்களையும் (அவர் களோடு) காண்கின்றேன்; சோர்வடையு முயிரை யுடைய விரோச னன் முதலிய அசுர கணங்களையும், கந்தருவர்களையும், இத்தன்மைய ரென்று நெருங்கி அறியத் தகாதவர்களையும் என்னெதிரே காண்கின் றேன்.

பகவானது விசுவரூபத்தைத் தரிசித்த அருச்சுனன் அதனால் தனக்குண்டாய பயத்தை வெளிப்படையாகக் கூறல்.

எமது தந்தையா யுள்ள பகவானே! ஆகாய முற்றும் வியாபித் ததாய், பல நிறங்களை உடையதாய், பேயின் நடையை விரும்பினதாய், பிறை மதிபோல் வளைவான பற்களையும் பெரிய வாய்களையு முடைய தாய், பல முகங்களையு முடையதாய்ப் பலவாக விரியா நிற்கும் இவ் விசுவரூபம் யான் பய மின்றி அடைதலாகும் தன்மையின தன்றாம். ¶

எனக்கருள் செய்தல் வேண்டுமென்று பகவானை நோக்கி அருச்சுனன் பிரார்த்தித்தல்.

உலகனைத்துமாய் விளங்கும் எமது தந்தையே! சராசர வடிவமா யுள்ள இவ் வுலகனைத்திற்கும் தேவரீர் ஆதாரமா யிருக்கின்ற தன் மையை யானிப்போது இவ்விசுவ ரூபதரிசனத்தா லறிந்தனன்; இவ் விசுவ ரூப தரிசனத்தால் சோக மோகங்களி னின்றும் நீங்கிக் கடைத் தேறினவ னானேன்; அங்ஙனமாயினே னாயினும், உம்முடைய இவ் விசுவ ரூபத்தை உற்றுப் பார்க்கப் பார்க்கச் சிவனோடு போர் செய்த காலத்தும் அஞ்சாத என் மனமும் நடுங்கி உடம்பைத் தாங்கி நிற்கத் தைரிய மடையா திருக்கின்றது; அதனால், யான் இது வடக்கு, இது கிழக்கென்று யாதொரு திசையையும் அறியா திருக்கின்றேன். அரு சுனா! நீ இவ் விசுவ ரூபத்தைக் கண்டு பயமுறல் வேண்டா மென்று தேவரீ ரெனக் கருள் செய்தல் வேண்டும்.

¶ பேயின் நடையை விரும்பினதாதல் - பேரச்சத்தைத் தருதற்குக் காரண மாதல். அருச்சுனன் இங்ஙனம் கூறியதால், அவன் தைரியமும் சாந்தமு மடையாது கலக்கமுற்றன னென்பது பெறப்படுவதாம்.

பகவானே! உமது விசுவரூபத்தில் எனது வெற்றியையும் எனது பகைவரது தோல்வியையும் யான் காண்கின்றேனென் றருச்சுனன் கூறல்.

பகவானே! திருதராஷ்டிரனது புத்திரராய துரியோதனன் முதலிய நூற்றுவரும், அவரது சேனைகளும், அந் நூற்றுவர் பொருட்டுப் போர் செய்தலை மேற்கொண்டு எங்களை யெதிர்த்து வந்துள்ள சல்லியன் முதலிய அரசரும், திருஷ்டத்துய்மன், சிகண்டி முதலாயினோரைப் பிரதானமாகக் கொண்டுள்ள எனது சேனைகளும் தேவரீரது யமனை யொத்துள்ள கோரப்பற்களி லகப்பட்டுப் பின்னமடைந்த உடம்புடையவராய் நின்று, காற்றோடு கூடிய நெருப்பை யொத்து விளங்குகின்ற உம்முடைய முகங்களில் (வாய்களில்) விழுகின்றமையை அடியேன் காண்கின்றேன்.

துரியோதனன் முதலாயினோர் புத்தி பூர்வகமாகவும் அபுத்தி பூர்வகமாகவும் தேவரீரது வாயில் விழுகின்றனரென் றருச்சுனன் திருஷ்டாந்தத்தோடு கூறல்.

பகவானே! இவ்வளவினவாய மகிமை யுடையனவென்று குறிப்பிட்டுச் சொல்லுதற்கரிய கங்கை யமுனை முதலிய நதிகளெல்லாம் அபுத்தி பூர்வகமாகக் கடலை நோக்கிச் சென்று அதனையடைதல்போல, உம்மிடத்தினின்றுந் தோன்றியுள்ள துரியோதனன் முதலிய சூரவீரர் யாவரும் அபுத்தி பூர்வகமாகத் தேவரீரது வாய்களை நோக்கிச் சென்று அவற்றை யடைதலை அடியேன் காண்கின்றேன்; திருமகள் தலைவனே! கொழுந்துவிட் டெரிகின்ற அக்கினியில் மிகு வேக முடையனவாய்த் தமது நாசத்தின்பொருட்டுப் புத்தி பூர்வகமாக விட்டிற் பறவைகள் விழுவதுபோல, தேவரீரது வாய்தம்முள்ளே மிகு வேக முடையவராய்த் தமது நாசத்தின்பொருட்டுப் புத்தி பூர்வகமாகத் துரியோதனன் முதலிய சூரவீரர் யாவரும் விழுந்து சாதலையும் அடியேன் காண்கின்றேன். *

பகவானது வாய்தம்முள் துரியோதனன் முதலாயினோர் விழுந்து மடிகின்றனரென்று கூறிய அருச்சுனன், அவர் விழுந்து மடியும் போது பகவான் செய்யும் செயலைக் கூறல்.

எங்கும் வியாபகமாக வுள்ள பகவானே! நீர் அக்கினிபோலப் பிரகாசம் பொருந்திய உம்முடைய முகங் (வாய்) களால், மிகு வேகமா

* ஒன்றனிடத் தொருவர் இஃதின்னதென்றுணராது பிரவேசித்தல் அபுத்தி பூர்வகமாம்; உணர்ந்து பிரவேசித்தல் புத்தி பூர்வகமாம்.

கத் தமது நாசத்தின்பொருட்டு விழுகின்ற துரியோதனன் முதலிய சூரவீரர் யாவரையும் உணவாக உண்டொழித்து, அவர் யாவரும் பூரண உணவாதற்குப் பற்ருமையால் வெளியே நாக்கை நீட்டி நீட்டி உதட்டை நக்கி நக்கி வெறுஞ்சுவை கொள்ளுகின்றீர். யான் இத்தன்மை வாய்ந்த உக்கிரவடிவங் கொண்டுள்ள உம்மைக் குறிப்பிட்டு இன்னுரென்று தெளிவாக அறியாதிருக்கின்றேன்; தேவரீரது செயலையும் குறிப்பிட்டு அறியாதவனு யிருக்கின்றேன்; (தேவ தேவரே! உமக்கு நமஸ்காரஞ் செய்கின்றேன்; நீர் யார்? தேவரீரை அறிய விரும்பியுள்ள) அடியேனுக்கு உம்மை இன்னுரென்று தேவரீர் கிருபை வைத்து உள்ளபடி கூறுவீராக.

நீர் யார்? உமது செயல் எத்தன்மையது? என்று நமஸ்காரஞ்செய்து
விறுவிய அருச்சுனனுக்கு எல்லாப் பொருளுமாயும் எல்லை
இல்லாது வியாபகமாயு முள்ள பகவான் தமது
சொரூபத்தையும் செயலையும் கூறல்.

அருச்சுனு! நான் உன்னைத் தவிர, பூமிக்குப் பாரமாயுள்ள துரியோதனன் முதலாயினோ ரனைவரையும் கொன்று அவர்தம் முயிர்களை உண்ண முயற்சி செய்திருக்கின்றேன்; யுகாந்தமானது கிட்டிய அப்போது உலகனைத்தையும் அழிக்கும் காலரூபமான பரமேசுவரன் யானே யாவேன்; இவ்வாருய என்னையும் எனது செயலையும் நீ அறிவாயாக. *

(யான் யுத்தஞ் செய்யாவிடினும், துரியோதனன் முதலாயினோர் தேவரீரால் கொல்லப்பட்டவராக விருக்க, தேவரீர் யாது பற்றி எனக்கு அடிக்கடி யுத்தத்திற் பிரவிர்த்திக்குமாறு கூறுகின்றீரென்று அருச்சுனு! நீ வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

---

* யுக முடிவில் உலகனைத்தையுமழிக்கும் காலரூப பரமேசுவரனுகிய யான் இப்போது பூமிக்குப் பாரமாயுள்ள துரியோதனன் முதலாயினோ ரனைவரையும் கொல்ல முயற்சி செய்திருக்கின்றேன்; நீ யுத்தஞ் செய்யாவிட்டாலும் இவரினிப் பிழைத்திருத்தல் முடியாதென்று பகவான் அருச்சுனனுக்குக் கூறினுரென்க.

அருச்சுன! நீ இந்த யுத்த பூமியிலுள்ள துரியோதனன் முதலிய உனது சத்துருக்கள் யாவரும் காலரூபமென்னும் பரமேசுவரனாகிய என்னால் கொல்லப்பட்டவரே யாவரென் றுணரக் கடவாய்.(இவர் தம் மரணத்திற்கு நீ நிமித்தமாத்திரமே யாவாய்; இவ்வாறு நிமித்த மாத்திரமாய் நின்று துரோணர் - பீஷ்மர் - ஜயத்திரதன் - கர்ணன் முதலாகவுள்ள) இப்பகைவரை நீ கொல்வாயாயின், அந்தச்சத்துரு ஜயமானது உனக்குத் தர்மமும், இராச்சிய லாபமும், சாசுவதமான கீர்த்தியுமாம்; அதனால், ஐசுவரியங்களுள் சிறப்புடையதாய இராச்சியலாபத்தையும், ஜயலட்சுமியையும், மண்ணுலகிற் பிறந்தோரடையாத பெரும் புகழினையும் இந்த யுத்தத்தா லடைய விரும்பக்கடவாய்.

துரியோதனன் தான் வெற்றிபெறுதற்குக் காரணபூதராகக் கருதி யிருக்கும்
துரோணர், பீஷ்மர், ஜயத்திரதன், கர்ணன் முதலாயினோர் போர்
முகத்தி லிறந்தபின், நிச்சயமாக இறந்து போவா
னென்றும், இத்திருதராஷ்டிரன் தான் வெற்றிபெற
வேண்டுமென்னும் விருப்பத்தை யொழித்து,
பாண்டவரோடு சிநேகங் கொள்வானாயின், இந்த யுத்தம் நின்றுபோம்;
அதனால், பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் சாந்தி யுண்டாகு
மென்றும் சிந்தனை செய்திருக்கின்ற சஞ்சயர், தம்மை
நோக்கிப் பின் நடைபெற்ற விருத்தாந்தம்
யாது என்று வினவிய திருதராஷ்டிரனை
நோக்கிக் கூறல்.

திருதராஷ்டிரரே! (பூமிக்குப் பாரமாயுள்ள இத் துரியோதனன் முதலாயினோர் யாவரையும் யான் கொல்ல முயற்சி செய்திருக்கின்றேன்; நீ அதற்கு நிமித்தமாத்திரமாக நிற்கக்கடவாய்; அதனால்,பூமி-புகழ்-புண்ணிய முதலியவற்றை யடைவாயென்று) இவ்வாறு பகவான் கூற, அதனைக் கேட்ட அருச்சுனன் தனது கையிரண்டையும் தலைமீது கூப்பி, வார்த்தை தடுமாற, கண்ணீர் முத்து முத்தாக மெல்ல மார்பின்மீது விழ, அச்சத்தோடும் அன்போடும், கோவர்த்தன கிரியைக் குடையாக வெடுத்த பகவானது பெருமையைத் துதிக்கத் தொடங்கினவனாகி, சுரோத்திர முதலிய ஞானேந்திரிய பஞ்சகம் - வாக்கு முதலிய கர்மேந்திரிய பஞ்சகம் - மன முதலிய அந்தக்கரண சதுஷ்டய மினைத்திற்கும் தலைவராயிருந்து, அவற்றை நடத்துகின்ற

வரே! குற்றம் பொருந்திய வினை விலங்கை அன்பர்க் கொழிப்பவரே! உமது புகழைக் கேட்டவிடத்து, இந்திரன் முதலிய தேவர்களும், கபிலர் முதலிய சித்தர்களும், அகமலர்ச்சி யடைந்து சந்தோஷமடைகின்றனர்; அசுரரும் இராக்கதரும் மரண துக்க மடைகின்றனர். கையும் காலும் வாயும் கண்ணும் செந்தாமரை மலர்போலச் சிவந்துள்ள கடவுளே! பூதபஞ்சகம்-ஞானேந்திரிய பஞ்சகம் - கர்மேந்திரிய பஞ்சகம் - பிராணாதி பஞ்சகம் - அந்தக்கரண சதுஷ்டயம்-இவற்றிற்குக் காரணமாயுள்ள மூலப் பிரகிருதியென்னும் இருபத்தைந்து தத்துவங்களாலும் அறிதற் கருமையா யிருப்பவரே!பிரஹ்மாவிற்குங் காரணரா யிருப்பவரே! முடிவில்லாதவரே! சத்தும் அசத்துமாகா திருப்பவரே! சத்தும் அசத்துமென்னு மெல்லாப் பொருளுமாய் வியாபித்திருப்பவரே! தாம் கடைத்தேறக் கருதியவருள் குருவடிவமாயுள்ள தேவரீரை வணங்காதவ ரிருக்கின்றனரோ? இலரன்றே? †

சர்வத்திற்கும் முதற் கடவுளா யிருப்பவரும் நீரே யாவீர்; சர்வ சரீரத்திலும் சீவ ரூபமாய் நிறைந்திருக்கின்ற அரிய புருஷரும் நீரே யாவீர்; பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களுள் ஏதனாலு மறியப்படாதவரும் நீரேயாவீர்; (உற்பத்தி யில்லாதிருப்பவரும் நீரே யாவீர்); பிரபஞ்சமனைத்தும் முடிவில் ஒடுங்குதற்கிடமா யிருப்பவரும் நீரே யாவீர்; சர்வத்தையு மறிகின்றவரும் நீரே யாவீர்; அறிவாலறிதற்குரிய பிரபஞ்ச சொரூபமா யிருப்பவரும் நீரே யாவீர்; (மோட்சவடிவமா யிருப்பவரும் நீரே யாவீர்;) நீதியுடைய யமனாயிருந் துலகை யழிப்பவரும் நீரே யாவீர்; வருணன்-வாயு-அக்கினி-சூரியன்-சந்திரன் முதலிய தேவதைகளின் வடிவமா யிருப்பவரும் நீரே யாவீர்; பொருந்துமாறு இவ்வுல கனைத்தையும் எப்போது முண்டாக்குகின்ற மாதாவும் பிதாவுமான பிரஜாபதியுமா யிருக்கின்றவரும் நீரே யாவீர்; அப்பிரஜாபதியின் தந்தையின் தந்தைக்குத் தந்தையா யிருக்கும் பிரபிதாமகரும் நீரே யாவீர். நான் ஆராய்ந்துணரும்படி அத்தேவதைகளின் வடிவமாயு மிருந்தும் உண்மையில் அத்தேவதைக ளாகாதுள்ள ஆரியரே! உம்மை அடியேனாகிய நான் எனது மாறுந் தன்மையுள்ள

---

† உண்டென்னுஞ் சொல்லுக்குப் பொருளா யிருப்பது சத்தாம்; அது கடம் படம் என்றற்றொடக்கத்தனவாம்; இல்லையென்னுஞ் சொல்லுக்குப் பொருளா யிருப்பது அசத்தாம்; அது கடமில்லை படமில்லை யென்றற் றொடக்கத்தனவாம்.

பிறவித் துன்பம் நீங்குதற் பொருட்டு இலட்சக்கணக்காக நமஸ்காரஞ் செய்கின்றேன். ‡

எந்தையே! எனது மகத்தாகிய சம்சார துன்பம் கெடும்படி இன்னும் உம்மை நமஸ்காரஞ் செய்கின்றேன்; உம்மை உமது முன்பக்கத்திலேயும் நமஸ்காரஞ்செய்கின்றேன்; உம்மை உமது பின்பக்கத்திலேயும் விதிப்படி நமஸ்காரஞ் செய்கின்றேன்; எனதன்பின் வடிவமாயிருப்பவரே! அடியேனது அரிய ஆன்ம வடிவமாயிருப்பவரே! (தன்னை யறிதலாலன்றி வேறெதனாலும்) நீங்காத இப் பெரிய பிறவியினது வலிமை கெடும்படி உம்மைச் சர்வ திக்குக்களிலும் மீண்டும் மீண்டும் நமஸ்காரஞ் செய்கின்றேனென் றிங்ஙனம் கூறினான். இங்ஙனங் கூறிய அருச்சுனன் மீண்டும் பகவானை நோக்கி, தேவர்க்குத் தேவரா யிருப்பவரே! உம்மைத் தவிர வேறு தேவர் யார்? இலரன்றோ? உம்மைத் தவிரப் பிறர்செய்யும் பாவமேது? புண்ணியமேது? பந்தமேது? மோட்சமேது?சாவதேது? வாழ்வதேது? இவை யெல்லாமா யிருக்கு மியல்புடையவர் நீரே யாவீரன்றோ? மாயனென்னுந் திருநாமத்தை உடையவரே! உம்முடைய மகிமைகளுள் யாதொன்றையும் அடியேன் செவ்வையாக அறியாதிருந்தேன்; மாயனென்னுந் திருப்பேருடையவரே! விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் தேவரீரை ஒழுங்குடைய வேதங்கூறும் முறையாகத் தியானஞ் செய்து, உள்ளம் மிகக் கசிந்து உருகப்பெற்று, பலமுறை புகழ்ந்துபேசி அறிந்த உம்மை, உயர்திணை - அஃறிணை யென்னும் சாதிபேத முடையனவாயிருக்கின்ற சராசரப் பொருளனைத்திற்கும் ஆதிகாரணப் பொருளென்றிதுகாறும் நான் அறியாதிருந்தேன்; மாயனென்னும் மகிமை பொருந்திய நாமத்தை உடையவரே! சாயையை யொத்துள்ள குடும்ப வாழ்வு-மாடு-வீடு - தந்தை - தாயென்னும் அநித்தியப்பொருள்களைச் சீவர்கள் நித்தியப்பொருள்களென்று கருதி, அதனால் உயர்ந்து தாழ்ந்து பிறந்திறந்துவருகின்றனர். இச் சீவர்கள் இவ்வாறு பிறந் திறந்து வருவதனைத்தும் சுத்தமாய் எதனது சம்பந்தமு மின்றி யுள்ள உம்முடைய மாயையின் காரியமா மென்பதனை யானிதுகாறு மறியா திருந்தேன்;

‡ பிரஜாபதி யென்பது இரணியகர்ப்பர் முதலாயினோரையும், பிரபிதாமகரென்பது அவர் தமக்குக் காரணமாயுள்ள பிரஹ்மத்தையு முணர்த்தி நின்றனவென்க.

தேவரீர் நப்பின்னைப் பிராட்டியின் பொருட்டு எழுவிடை தழுவி, கஞ்ச வஞ்சன் அனுப்பிய மல்லரைக் கொன்று, ஆயரைக் காப்பது பற்றிக் கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்த சரித்திரத்தை எண்ணி எண்ணித் தமது துன்ப மொழியத் தேவர்கள் துதிக்கின்ற கருணையங் கடலே! மாயனென்னு மபிதான முடையவரே! நீர் இவ்வுலகத்திற்கு வேறுமல்ல; இவ்வுலகப் பொருள்களுள் ஒன்றுமல்ல; மெய்ந்நூல் கூறும் அம் மெய்ப்பொருளை யடையும்சாதனமு மல்ல வென்பதனை யானிது காறு மறியாதிருந்தே னென்றும் கூறினன்.

உமது மகிமையை யறியாம லடியேன் செய்த அபராதங்களைத் தேவரீர் பொறுத்தருளல் வேண்டுமென்று அருச்சுனன் பிரார்த்தித்தல்.

மாய னென்னும் திருநாமத்தை உடையவரே! யான் தேவரீரது மகிமையை யறியாமல், அடா யாதவா! அடா என் மைத்துனா! அடா அசோதைப் பிராட்டியார்க் கின்னுயிர் போலும் பிரியபுத்திரனாய இடையனே! பசு நிரை மேய்த்த ஆயனே! அடா கிருஷ்ணா! அடா கிருஷ்ணா! என்று சொல்லத் தகாதவற்றைச் சொன்னதே யன்றி, அவற்றின் மேலும் கூறிய பொல்லாங்காய சொற்க ளனைத்தையும் ஐயோ! இதுகாறும் சொல்லத்தகாதனவாமென் றறியாது போனேன்.

அச்சுத மூர்த்தியே! தேவரீரை அடியேன் என்னுடைய தோழனென்றும் மாமன் மகனென்றும் எனக்கொத்த வயதுடையவனென்றும் கருதி, எவ்வகையாலும் தேவரீரது மகிமையைச் சிறிது முணராது, பிடிவாதத்தால் தேவரீரது வார்த்தைகளை மறுத்து, அவற்றிற்கு மாறாகக் கூறிய எனதிழிவாய சொற்களனைத்தையும் தேவரீர் பொறுத்தருளல் வேண்டும். கிருஷ்ணனென்னுந் திருநாமத்தை உடையவரே! கருணாகரரே! யான் தேவரீரோடு உணவுண்டல், விளையாடுதல், ஒரு சயனத்திற் படுத்துறங்குதல், சிம்மாசன முதலியவற்றின்க ணிருத்தல் முதலிய செயல்களைச் செய்த காலத்தில், தேவரீரது பழைமையான மகிமையை ஆராய்ந் தறியாமையால் செய்த தவறனைத்தையும் தேவரீர் பொறுத்தருளல் வேண்டும்.

அருச்சுனன் பகவான் சிந்தனை செய்தற்கரிய மகிமையுடையவரென்று விளக்கமாகக் கூறல்.

ஒப்பு முயர்வு மில்லாத மகிமை உடையவரே! தோன்றியுள்ள சராசர வடிவமா யுள்ள உலக மனைத்தையும் படைத்தவரும் நீரே யாவீர்;

பெரியோர்யாவராலும் உலகனைத்திற்கும் பிதாவாயுள்ள உமதுண்மை வடிவத்தை யறிந்து, சிறப்பித்துக் கூறிக் கொண்டாடப்படுகின்றவரும் நீரே யாவீர்; அதிகாரி புருஷர்க்குத் தத்துவோபதேசஞ் செய்தற் பொருட்டுக் குரு வடிவமாக வந்து, அவர்தமக் குண்மை யுபதேசஞ் செய்து, அவரது அவிச்சை முதலிய கிலேசங்களை நீக்குகின்றவரும் நீரே யாவீ ரென்று உணர்வுடையார் தேவரீரைச் சிறப்பித்துக் கூறினு ராயினும், வேத மனைத்தும் ஒருமுகமாக நின்று தேவரீரினும் மேலாக இருப்பவரில்லை யென்று ஏதுக்கள் பலவற்றை யெடுத்துக் கூற, அவற் றைத் தாமறிந்தாலும்,உமதருள் பெறுதவர் குருடர் வெண்மை கருமை முதலிய நிறங்களை யறியாமைபோலத் தேவரீரது சிந்தனை செய்தறிதற் கரிய மகிமையை அறியாதவரா யிருக்கின்றனர். †

அருச்சுனன் பகவானது திருவடிகளில் விழுந்து வணங்கி என் பிழை யைப் பொறுத்தருளல் வேண்டுமென்னும் பிரார்த்தனையை முடித்தல்.

பகவானே! விபர மறியாத பால்யபருவமுள்ள புத்திரன் செய்த குற்றத்தை அவனருமையான தந்தை பொறுப்பதுபோலவும், உயிர் போலப் பிரியாதுள்ள தோழன் செய்த குற்றத்தை நட்பின் தன்மை யையறிந்துள்ள பெரியோர்கள் பொறுப்பதுபோலவும், அடியேன் யாது மறியாதவனுய்த் தேவரீரை யொருபொருளாகக் கருதாது செய்துவந்த குற்றமனைத்தையும் தேவரீர் குணமாகக் கொண்டருளல் வேண்டும்.

என் பிழையைப் பொருத்தருளல் வேண்டுமென்று தன் பிரார்த்தனையைக் கூறி முடித்த அருச்சுனன், அச்சுத மூர்த்தியே! தேவரீர் இவ்விசுவரூப த்தை மறைத்து, முந்திய ரூபத்தை அடியேனுக்குக் காண்பித் தருளல் வேண்டு மெனல்.

தேவதேவேச! என் மனம் முன்னே ஒரு காலும் கண்டு தரிசி யாத உமது பழைய விவ்விசுவரூபத்தை யிப்போது தரிசித்துச் சந் தோஷமடைந்தது; ஆனல், பயத்தால் வியாகூல மடைந்திருக்கின்றது; அதனல், தேவரீர் கிரீடமும் சக்கரமும் சங்கும் கதையும் தரித்துச்

---

† அருச்சுனனிங்ஙனங் கூறியதனல், பகவானே! யானுமதருள் பெற்றமை யினல் உமதுமகிமையை யறிதற்குரியவனனே னென்பதைக் குறிப்பித்தானென் பது பெறப்பட்டதென்க.

சதுர்ப் புஜத்தோடுங் கூடியுள்ள தமது கிருஷ்ணவதார வடிவத்தையே கொண்டு, அடியேனுக்கருள் செய்வீராக என்றான் அருச்சுனன். ¶

எவ்வகையான உருவங்களும் தம்முருவமாகக்கொண்டு நின்ற பகவான், அருச்சுனன் வேண்டுகோட்கிரங்கி, அவனுக்குச் சந்தோஷமுண்டாவதற் கேதுவாயவற்றைக் கூறல்.

அருச்சுனா! பூரணப் பிரகாச முடையதாயும், சிருஷ்டியி னுதியில் உலகனைத்தையு முண்டாக்கும் முதற்பொருளாயும், அவ் வுலகமனைத்துமாயு மிருக்கின்ற பரமேசுவரனான எனது விசுவரூபத்தை யான் உன் மீது வைத்துள்ள கருணையால் உனக்குக் காட்டினேன்; உனக்கு முன் எவராலும் இவ் விசுவரூபம் காணப்படாததாம். §

பகவான் அருச்சுனா! நீ எனதருள் பெற்றமையால் இவ் விசுவரூப தரிசனமுனக்குக் கிடைத்ததென்று தமது விசுவரூபத்தி னருமையைக் கூறல்.

அருச்சுனா! இம்மண்ணுலகின்கண் வேதாத்தியயனஞ் செய்வதாலும், சிறந்த யாகங்களைச் செய்வதாலும், பெருந்தவத்தைச் செய்வதாலும், பலவகையான தானங்களைச் செய்வதாலும் பரமேசுவரனான என்னைத் தரிசிக்க விரும்பி யிருப்பவர் தரிசித்தற்குக் கூடாத இவ் விசுவரூபத்தைக் குற்றஞ் சிறிது மில்லாத எனது யோக மாயையின் சாமர்த்தியத்தால் யான் காட்ட நீ கண்டு கிருதார்த்தனானாய்.

சஞ்சயர் திருதராஷ்டிரனுக்குக் கூறல்.

திருதராஷ்டிரரே! வாசுதேவனான ஸ்ரீ கிருஷ்ணபகவான் இவ்வாறாய வாக்கியங்களை அருச்சுனனுக் கருளிச் செய்து, சங்கு - சக்க

¶ பகவான் அருச்சுனனுக் கெப்போதும் சதுர்ப்புஜத்தோடுங் கூடிய வடிவமாகவே யிருந் தனுக்கிரகஞ்செய்து வந்தாரென்பதிங் குணர்தற்பாலதாம்.

§ பகவான் பாண்டவர் பொருட்டுத் துரியோதனனிடத்துத் தூதாகச் சென்றபோது துரியோதனனது இராஜசபையில் பீஷ்மர் முதலியோர் தரிசிக்குமாறு காட்டிய விசுவரூபமும், அசோதைப் பிராட்டியார்க்கும் அக்குரூரர்க்கும் காட்டிய விசுவரூபமும், அருச்சுனனுக்குக் காட்டிய விசுவரூபத்தினும் சிறந்தன வன்றாம்; இவ் விசுவரூபத்தி லிடைப்பட்டனவாய சொரூபமாம்; அருச்சுனன் தரிசித்த விசுவரூபம் பீஷ்மர் முதலியோர் தரிசித்த விசுவரூபமன்றா மென்பன இங்குணர்தற்பாலனவாம்..

ரம் - கதை - தாமரைமல ரென்பவற்றைத் தரித்துள்ள சதுர்ப்புஜ முடையதாய், கிரீடம் - மகாராகாரகுண்டலம் - ஸ்ரீவத்ஸம் - கௌஸ்துபம் - துளசிமாலை - பீதாம்பர முதலியவற்றால் விளங்குகின்ற அந்தப் பூர்வ ரூபங் கொண்டருளி, கோரமாய விசுவரூப தரிசனத்தாலுண்டாய அவனது மனோவியாகூலத்தை யொழித்து, அவனுக்குச் சந்தோஷ முண்டாக்கினார்.

பகவானது சதுர்ப்புஜ வடிவத்தைத் தரிசித்துப் பயமற்று, பகவானை நோக்கி பகவானே! உமது திவ்வியமாய இம்மானுட வடிவத்தைக் கண்டு இப்போது வியாகூலம் நீங்கினேன், சந்தோஷமடைந்தேனென்று கூறிய அருச்சுனனை நோக்கி, அவனுக்குச் சம்மதமாம் படி தமக்கொப்பாரும் மிக்காரு மில்லாதவரும் பசுக் கூட்டத்தை மேய்த்தவருமாகிய பகவான் தமது விசுவ ரூபத்தி னருமையையும் தம்மை யபேதமா யடைதற்குரிய சாதனத்தையும் கூறல்.

அருச்சுனா! நீ முன் தரிசித்த என்னுடைய இவ் விசுவரூபத்தை வேதாத்தியயன முதலியவற்றால் தரிசித்தவர் இம் மண்ணுலகத்தில் இலராவர்; இவ்விசுவரூபத்தைத் தரிசித்தற்கு இந்திரன் முதலிய இமையவரும் விரும்பி யிருக்கின்றனர்; (அதனால், எனது விசுவ ரூப தரிசனம் மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் பெறுதற் கரியதாயிருப்பதாம்); ஆனால், என்னிடத் தன்பு மிக்க பக்தருமாய், பரமேசுவரனை என்னை யல்லாமல் யாதொரு சம்பந்தமு மில்லாமையைக் கொண்டவருமா யிருப்பவர் என்னை உள்ளவா றறிந்து அபேதமாக அடைவர்; இதற் கையப்பாடு சிறிது மில்லையாமென்று கூறியருளினார்.

11—விசுவரூப அத்தியாயம் முற்றிற்று.

12 - பக்தியோக அத்தியாயம்.

பதினோராவது அத்தியாயத்தி னிறுதியில்‘பரமேசுவரனான என்னையல்லாமல் யாதொரு சம்பந்தமு மில்லாமையைக்கொண்டவருமாயிருப்பவர் என்னை உள்ளவாறறிந்து அபேதமாக அடைவர்’ என்று பகவான்பொதுப்படக்கூறினமையால், அருச்சுனனுக்கு ‘ என்னை ’ என்னும் சொற்குப் பொருள் சாகார வஸ்துவா ? நிராகார வஸ்துவா ? என்று சந்தேக முண்டாயிற்று ; இச் சந்தேகத்திற்குக் காரணம் பூர்வம் பகவான் அங்கங்கே சாகார வஸ்து, நிராகார வஸ்து என்னு மிரண்டனையும் அருச்சுனனுக் குபதேசித்தமையே யாம். யான் சாகார வஸ்துவை உபாசனை செய்தற் குரியவனு? அல்லது நிராகார வஸ்துவை உபாசனை செய்தற் குரியவனு? என்று சந்தேகங் கொண்ட அருச்சுனன் எனக்கு அவ்விரண்டு உபாசனைகளில் எதன்கண் அதிகார மிருக்கின்றது? யான் அவ் விரண்டு உபாசனைகளையும் நன்றாக அறிதல் வேண்டுமென்று விருப்பங்கொண்டு பகவானை நோக்கி வினவுதல். $

தமியேனுக்குத் தாயை யொத்துள்ள பகவானே! யோக மறிந்த பெரியோ ராவார் என் மனத்திற்குப் பொருந்துமாறு யான் நேரே தரிசித்த பரமேசுவரரான உமது திவ்விய மங்கள சொரூப சாகார வடிவத்தையே நிரந்தரம் தியானஞ் செய்பவரோ ? பரிசுத்தமான வேதம் நான்கிற்கும் விஷயமாகா துள்ள அட்சர மென்னும் நிர்க்குணப் பிரஹ்மமாகிய உம்மையே நிரந்தரம் தியானஞ் செய்பவரோ? அவ்விருவருள் எவர் பெரியோராவார் ? அவரைக் கூறியருளல் வேண்டும். ¶

$ *சாகாரவஸ்து - சகுணப்பிரஹ்மமாம் ; நிராகாரவஸ்து - நிர்க்குணப் பிரஹ்மமாம். சகுணப் பிரஹ்ம உபாசனையும் நிர்க்குணப் பிரஹ்ம உபாசனையும் முறையே சகுண வித்தையென்றும் நிர்க்குண வித்தையென்றும் சொல்லப்படும்; அதிகாரிகளின் பக்குவம் நோக்கி, சகுணப் பிரஹ்ம உபாசனையும் நிர்க்குணப் பிரஹ்ம உபாசனையும் கூறப்படுகின்றனவென்பன இங்குணர்தற் பாலனவாம்.*

¶ *யோகத்தை விசேஷமாக உணர்ந்தவர் சகுணப் பிரஹ்ம உபாசகரோ? நிர்க்குணப் பிரஹ்ம உபாசகரோ ? அவர்தம்மைக் கூறியருளல் வேண்டு மென்று அருச்சுனன் பகவானை நோக்கி வினவினு னென்க. எக்காலத்தும் கேடில்லா திருப்பது அட்சரமாம் ; அல்லது தனது இருத்தல் விளங்கல் வடிவத்தால் எங்கும் வியாபகமா யிருப்பது அட்சரமாம்.*

தானேர் ஆய (இடைய)னும் நிரைகளை (பசுமந்தைகளை) மேய்த்த மாயன் அருச்சுனனுக்குச் சகுண வித்தையிலேயே அதிகார மிருக்கின்றதென்ப துணர்ந்து, அதனிடத் தவனுக்கு விருப்ப முண்டாக்குதற் பொருட்டு அவ் வித்தையைத் துதி செய்து அதுவே வித்தைகளுள் சிரேட்டமானதெனக் கூறல்.

அருச்சுனு! நீ தரிசிக்குமாறு பரமேசுவரனுய யான் முன்னே உனக்குக் காண்பித்த சாகாரமான எனது விசுவ ரூபத்தை மிகு பிரியத்தோடு மனதால் தியானஞ் செய்தலும் வாக்கால் ஸ்துதி செய்தலு முடையார் யாவரும் பரமேசுவரனுன என்னையே அடைவதல்லாமல் வேறெதனையு மடைய மாட்டார். அவர் யோகத்தை உணர்ந்தவர் யாவரிலும் சிரேஷ்டராவர். இங்குக் கூறிய சகுண உபாசகரை யல்லாமல் மற்ற நிர்க்குண உபாசகரது நெறியையுங் கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.

நிர்க்குணப் பிரஹ்ம உபாசகரடையும் பயனைப் பகவான் கூறல்.

அருச்சுனு! யாதாவதொரு சப்தத்தாலும் வசனிப்பதற் கரியதாய், மனத்தினு லறிதற்கு அசக்கியமாய், எவ்விடத்தும் இடைவெளி யின்றி வியாபித்து, போதல் வருதலாகிய தொழி லில்லாது விளங்குகின்றதாகிய நிர்குணப் பிரஹ்மத்தை, தடுப்பதற் கரியனவாயுள்ள சுரோத்திர முதலிய இந்திரியங்களைத் தத்தம் சப்தாதி விஷயங்களில் செல்லாவாறு தடுத்து, சந்தேக விபரீதமில்லாது தனது ஆன்மாவாக அறிபவன் பிரஹ்மரூபமாகிய யானே யாவன்; அவனை யென்னிலும் வேருனவனென்று சொல்லுதல் கூடுமோ? கூடாது. *

(சகுணப் பிரஹ்ம உபாசகர் யோகத்தை உணர்ந்தவர் யாவரிலும் சிரேஷ்டராவர் என்று முன்பு கூறி, பின்பு நிர்க்குணப் பிரஹ்ம உபாசகர் நிர்க்குணப் பிரஹ்மமே யாவர் என்று கூறுவது எவ்வாறு பொருந்து மென்று அருச்சுனு! நீ வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனு! தனக் கொரு காரண மில்லாதும், பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களுள் எதற்கும் விஷயமாகாது முள்ள நிர்க்

* நிர்க்குணப் பிரஹ்மம் சப்தத்தின் சக்தி விருத்திக்கும்,சமதமாதி சாதனங்களின்றிய மனத்திற்கும் விஷயமாகா தென்பதிங் குணர்தற் பாலதாம்.

குணப் பிரஹ்மத்தை அடைபவரது கிலேசம் வேறொரு கிலேசத்தோடு சேர்த்துச் சொல்லப்படுவதன்றாம்; (அக் கிலேசம் மிகப் பெரியதாம்). அறிதற்கரியதாகிய இந் நிர்க்குணப் பிரஹ்ம உபாசனை யானெனதென் னும் பற்றோடு வாழும் மக்களால் செய்யப்படுவதன்றாம்; அவர் நிர்க் குணப் பிரஹ்ம உபாசனையைப் பெறுவாராயின், அவரது மகிமையை அளவு செய்து கூற வல்லவர் யார்? ஒருவரு மிலர். *

என்னுடைய பக்தர் என்னுடைய கருணையால் கிலேசமில்லாது மோட்ச வடிவப் பயனை யடைவ ரென்று பகவான் கூறல்.

அருச்சுனா! யாவர் சிலர் தாம் செய்யும் கரும மனைத்தையும் சகு ணப் பிரஹ்மமாகிய என்னிடத்து அர்ப்பணஞ் செய்து, தம்முடைய மனத்தை யென்னிடத்துப் பிறழாது நிறுத்துகின்றாரோ அவர் தம்மைச் சாதலைத் தலைமையாகக் கொண்டுள்ள துன்பக் கடலி னின்றும் காப் பாற்றுதற் குரியவனா யிருக்கின்றேன் யான்; அவர் யாவரா யிருப்பினும் அவர் தம்மைச் சிறிது காலத்திற்குள்ளே பிறவிப் பெருங்கடலி னின் றுங் கடக்கச் செய்கின்றேன். ‡

---

* நிர்க்குணப் பிரஹ்மத்தை யானெனதென்னும் பற்றொழியாதவர் உபா சிக்கும்போது பெரிதுங் கிலேச மடைகின்றனர்; யானெனதென்னும் பற் றொழியப் பெற்று நிர்க்குணப் பிரஹ்ம உபாசனை செய்பவரது மகிமை அள விடற்கரியதா மென்று அருச்சுனனுக்குப் பகவான் கூறினாரென்க.

சகுணப் பிரஹ்ம உபாசகர்க்கு அவ்வுபாசனை செய்யும்போதுண்டாகும் கிலேசத்திலும், நிர்க்குணப் பிரஹ்ம உபாசகர்க்கு அவ்வுபாசனை செய்யும்போ துண்டாகும் கிலேசம் மிகப் பெரிதாயிருத்தலின், அதுபற்றிச் சகுணப்பிரஹ்ம உபாசகர் நிர்க்குணப் பிரஹ்ம உபாசகரினும் சிறந்தவராவரென்று கூறப்படு கின்றன ரென்பதும், இவ் வுபாசகரிருவரு மடையும் பயன் ஒன்றே யென்ப தும், நிர்க்குணப்பிரஹ்ம உபாசகர் அடையும் பயனைச் சகுணப் பிரஹ்ம உபாச கர் காலக் கிரமத்தில் அடைகின்றன ரென்பது மிங்குணர்தற் பாலனவாம்.

‡ மரணத்தோடு கூடிய மித்தையாயுள்ள அஞ்ஞானமும், அதன் காரியமாகிய பிரபஞ்சமும் பிரசித்தமான கடல் போன்று கடத்தற்கரியனவா யிருத்தலின், சாதலைத் தலைமையாகக்கொண்டுள்ள துன்பக்கடல் என்று கூறப்பட்டன வென்க.

சகுணப் பிரஹ்ம உபாசனையைத் துதி செய்த பகவான், அது செய்யும் வகையினையும் அதனைச் செய்தற்கு வலியிலாதார் செய்தற் குரியவற்றையும் கூறல்.

அருச்சுனா! நீ உன் மனத்தைச் சப்தாதி விஷயங்களில் வையாது சகுணப் பிரஹ்மமாய என்னிடத்து உண்மையாக (வைத்து என்னைத் தியானஞ் செய்யக் கடவாயாக; அவ்வாறு) வைத்துத் தியானஞ் செய்வாயாயின், (எனது கருணையால் தேகாந்தத்தில் ஆத்ம ஞானமடைந்து நிர்க்குண சுத்தப் பிரஹ்மமான)என்னின் வேறுகாம லென்னோடு ஒன்றுதற்குச் சந்தேகமில்லையாம். அருச்சுனா! உனக்குச் சகுணப் பிரஹ்ம உபாசனை செய்வது முடியாதாயின், நீ (என்னை யடைதற்பொருட்டு) அப்பியாச யோகத்தையே யிடைவிடாது செய்துவரக்கடவாயாக; அருச்சுனா! நீ அவ் வப்பியாசயோகத்தையும் உண்மையாகச் செய்தற் காற்றலில்லாதிருப்பாயாயின், உனது கரணங்களால் செய்யும் வினைகளை என் சந்தோஷத்தின் பொருட்டாகப் பஜனரூப கருமங்களாகச் செய்யக் கடவாயாக; அருச்சுனா நீ உன் கரணங்களால் செய்யும் அக் கருமங்களை அவ்வாறு செய்தற் காற்ற லில்லா திருப்பாயாயின், (என்னைச் சரணமடைந்து மனத்தின் வழிச் செல்வ தொழிந்து,) பயனோக்காது கருமங்களைச் செய்யக் கடவாயாக. *

---

* அப்பியாச யோகமாவது இங்குப் பொன் வெள்ளி முதலியவற்றால் செய்துள்ள சிவ விஷ்ணு முதலிய திவ்ய மங்கள விக்கிரகங்களில் சித்தத்தைச் சிதறாவாறு நிறுத்தி, அவற்றைத் தியானஞ் செய்தலாம்.

பஜனரூப கருமங்கள் ஒன்பதாம். அவை வருமாறு:—(1) பகவானது நாமங்களைப் பிறர் கூறக் கேட்டல், (2) பகவானது நாமங்களைத் தான் கூறுதல், (3) பகவானை இடைவிடாது தியானஞ் செய்தல், (4) பகவானது திருவடிகளை வணங்குதல், (5) சந்தனம்-அட்சதை-புஷ்பம்-தூபம்-தீப முதலியவற்றால் பகவானைப் பூசித்தல், (6) மனம் வாக்குக் காயமென்னும் முக்கரணத்தாலும் பகவானை வணங்குதல், (7) பகவானுக்கு அடிமையாதல், (8) பகவானுக்குத் தோழனாதல், (9) சரீரரூப ஆத்மாவைப் பகவானுக்கர்ப்பணஞ் செய்தல். இங்குக்கூறிய இவ்வொன்பதனுள்வணங்குதலும் பூசித்தலும் பகவான் சர்வவியாபகனா யிருத்தலால், அவர்க்குச் செய்த லமையாதாம். ஆயினும் பகவானுக்குச் சாஸ்திரங்கள் கூறும் சலம்-அசலமென்னு மிரண்டு வடிவங்களுள், சந்நியாசி சல வடிவமாகவும், பொன் வெள்ளி முதலியவற்றால் செய்துள்ள சிவவிஷ்ணு முதலிய திவ்யமங்கள விக்கிரகங்கள் அசலவடிவமாகவு மிருத்தலின், சந்நியாசிகளை வணங்குதலும் பூசித்தலும்

சகுணப் பிரஹ்ம உபாசனை முதல் நிஷ்காம கரும மீறகக் கூறிய நான்கனுள் நிஷ்காம கருமத்துள் மற்றைய மூன்று மடங்குவனவா யிருத்தலின், அதனிடத்து அருச்சுனனுக்குப் பிரியமுண்டாக்குதற் பொருட்டு, அதனைப் பகவான் துதிசெய்தல்.

அருச்சுன! அப்பியாச யோகத்தினும் ஞானம் சிரேஷ்டமான தாம்; அந்த ஞானத்தினும் பிறழ்ச்சி யின்றிய தியானம் சிரேஷ்டமான தாம்; அந்தத் தியானத்தினும் பிறப்பிற்குக் காரணமாய கரும பலத்தைத் தியாகஞ் செய்தல் சிரேஷ்டமானதாம்;கரும பலத் தியாகத்தின் பின் சித்த சாந்தியென்னும் மோட்ச முண்டாவதாம்.¶

விக்கிரகங்களை வணங்குதலும் பூசித்தலும், பகவானை வணங்குதலும் பூசித்தலுமா மென்பதிங் குணர்தற் பாலதாம். இப்பஜனரூப கருமங்கள் பாகவத தருமங்களாம்.

¶இங்கு அப்பியாச யோக மென்றது ஞானமடையுமாறு செய்யும் சிரவணத்தின் அப்பியாசமும், ஞானமென்றது சிரவணத்தாலும் மனனத்தாலு முண்டாகும் ஆத்ம நிச்சயமும், தியான மென்றது நிதித்தியாசனமும் ஆம். ஆத்ம தரிசனத்திற்குச் சிரவணமும் மனனமும் நிதித்தியாசன வாயிலாகக் காரணமாம்; நிதித்தியாசனமோ நேர் காரணமாம். இவ்வகையால் ஆத்ம நிச்சயத்தினும் நிதித்தியாசன வடிவத் தியானம் சிரேஷ்டமா யிருக்கின்ற தென்க. இங்குக் கூறிய தியானம் ஆத்ம தரிசன சாதனங்களுள் சிரேஷ்டமா யிருப்பினும், அஞ்ஞானி செய்யும் கரும பலத் தியாகம் அவனுக்கு அந்தத் தியானத்தினும் சிரேஷ்டமா யிருத்தலின், அதுபற்றி, தியானத்தினும் கரும பலத் தியாகம் சிரேஷ்டமாமென்று அதனைப் பகவான் துதிசெய்தாரென்க. கருமபலத் தியாகம் சிரவணஞ் செய்வதற்கும், அது மனனஞ் செய்வதற்கும், அது நிதித்தியாசனஞ் செய்வதற்கும், அஃதாத்ம தரிசனஞ் செய்வதற்கும் காரணமாமென்ப திங்குணர்தற்பாலதாம். ஆசையற்றவன் அமிர்தமயனுகின்றா னென்பது சாஸ்திர சம்மதமாம். பயனேக்கிக் கருமஞ் செய்பவன் ஆசையுடையவனு யிருப்பதன்றி, அஃதில்லா திருப்ப தில்லையாம் ; பயனேக்காது கருமஞ் செய்பவனே ஆசை யுடையவ னுவதில்லையாம் ; அதனு லவன் இந்திரிய வடக்கம் மன வடக்கம் முதலியவற்றை விரைவாகப் பெற்றுச் சற் குருவை யடைந்து, அவரிடத்துச் சாஸ்திரார்த்தங்களைக் கேட்டு, அவற்றைச் சிந்தனை செய்து நோக்கித் தெளிந்து, தனதாத்ம சொரூபத்தில் சித்தத்தை நிறுத்திச் சமாதி செய்து, அதனுல் ஆத்ம சொரூபத்தை உள்ளவா றறிந்து, பந்தபாசங்களி னின்றும் நீங்கி அமிர்தமய னுகின்றா னென்ப திங்குச் சாஸ்திரார்த்தமாம்.

நிர்க்குணப் பிரஹ்ம உபாசனை செய்யும் ஆற்றலில்லாதவர்க்குச் சகுணப் பிரஹ்ம உபாசனையையும், அது செய்யும் ஆற்றலில்லாத வர்க்கு அப்பியாச யோகத்தையும், அது செய்யுமாற்ற லில்லாதவர்க்குப் பாகவத தருமங்களையும், அவை செய்யு மாற்ற லில்லாதவர்க்கு நிஷ்காம கருமத்தையும் அருச்சுனனுக் குபதேசஞ் செய்வது வாயிலாக விதித்த பகவான் யான் சகுணப் பிரஹ்ம உபாசனையை உயர்த்திக் கூறியது நிர்க்குணப் பிரஹ்ம உபாசனையைக் குறைத்துக் கூறுதற் பொருட்டன்றாம்; நிர்க்குணப் பிரஹ்ம உபாசகனே யாவரினு முயர்ந்தோனாவான். அருச்சுன! நீயும் நிர்க்குணப் பிரஹ்ம உபாசனை செய்தற்குரிய அதிகாரத்தைச் சம்பாதித்துக் கொண்டு அதனைச் செய்தல் வேண்டுமென் றவனுக்குக் குறிப்பிப்பவராய் நிர்க்குணப் பிரஹ்மோபாசகரைத் துதிசெய்தல்.

அருச்சுன! சராசர ரூபமாயுள்ள இருவகைப் பிராணிகளிடத்தும் சிநேகமுடையவனாய், இது சுகம் இது துக்கம், இது யான் இஃதெனதென்றவற்றைத் தனக்கு வேறாக அறியாது, (சர்வத்தையும் தானாக அறிகின்றமையால்) எந்தப் பொருளாலும் குறைவில்லாது, தன் மனமும் ஒரு வழியாக நின்று ஆத்மாவையே நோக்கிச் செல்ல, ஆத்மாவே உள்ளதென்னும் ஒப்பற்ற நிச்சயமும், துக்கிப் பிராணிகளிடத்துக் கருணை செய்தலும் பொருந்தி, இந்திரிய வாயிலாகச் சப்தாதி விஷயங்களை ஆராய்ந் தறிகின்ற புத்தி விருத்தியைச் சுத்தப் பிரஹ்மமான என்னிடத்தே பொருந்தவைத் தொழுகுகின்ற யோகியே எனக்கு மிகு பிரியனா யிருப்பவனாவன்.

பகவான் நிர்க்குணப் பிரஹ்மோபாசகரது தன்மையை விவரித் துரைத்தல்.

அருச்சுன! உலகமும் தானு முண்மையி லங்கியமாக வில்லாமையால் தான் எந்தப் பிராணிக்கு மஞ்சாதும், எல்லை யில்லாதுள்ள பிராணிகளிடத்துத் தான் நேசபாவ முடையவனா யிருத்தலின் அந்தப் பிராணிகளும் தன்னைக் குறித் தஞ்சாதும், அறிவுடையோர் (தன் நற்குண நற்செய்கைகளை யறிந்து, தன்னைக் குறித்துப்) புகழ்ந்து பேசுமாறும், தன் மனத்தின்கண் பொறாமையும் மயக்கமும் களிப்பு மில்லாதுமுள்ள யோகியே எனக்கு மிகப் பிரியனாவன். *

* பிறர்க் கிலாபம் வந்தமை கண்டு சகியாமை பொறாமையாம்; பயமுதலிய வற்றா லுண்டாகும் மனத் திகைப்பு மயக்கமாம்; இலாபம் வந்தபோ துண்டாகு முற்சாகம் களிப்பாம்.

அருச்சுன ! எப்போதும் எந்தப் பொருளி னிடத்தும் ஆசை வையாதும், இந்திரியங்களின் வழியே தான் செல்லாது அவற்றை யடக்கியும், பிறர் செய்யு முபகாரத்தையும் அபகாரத்தையும் சமமாகக் கொண்டும், சுகசாதனமாகிய நல்வினையும் துக்க சாதனமாகிய தீவினையும் பிறப்பிற்குக் காரணமா யிருத்தலின், அவ்விரண்டனையும் புத்தி பூர்வகமாகச் செய்வதொழிந்தும், எவராலேனும் எதனாலேனும் தன்னுடம்பு அழிவதா யிருப்பினும் அது பற்றித் துன்புற்றிரக்கங் கொள்ளாதும், பிரிய வஸ்து கிடைத்த விடத்து மகிழ்தலும் அப்பிரிய வஸ்து கிடைத்த விடத்து வாடுதலு மில்லாதும், தான் முன்பு இழந்து விட்ட பொருள் பற்றி இரக்கங் கொள்ளாதும், இனி வருதற்குரிய பொருளிடத் திச்சைவையாதும், இவர் சத்துரு இவர் மித்துருவென்பதின்றியாவரிடத்தும் சமபுத்தி வைத்தும், இன்ப துன்பம்-மானம் அவமானம் - சீதோஷ்ணம்-துதிநிந்தை என்றற் றொடக்கத்துத் துவந்துவங்களில் சமபுத்தி வைத்தும், தான் பொருந்தி வாழ்தற்குரிய இடமென்ப தொன்று நியமமாக வில்லாமலும் விளங்குகின்ற யோகியே எனக்கு மிகப் பிரியனாவன். *

நிர்க்குணப் பிரஹ்ம உபாசகாது குணங்களைத் தாம் மேற்கொண் டொழுக முயலுவோர்களும் எனக்குப் பிரியாரவரென "மயக்கற ஒருவராலு மறிவரி தூய மாயோன்" கூறல்.

அருச்சுன! முயற்சியாற் சம்பாதிக்கத் தக்கதும், தன்னை யடைந்தவர் தமது சம்சாரத் துன்பம் நீங்கி உய்ய அவரை அச் சம்சாரத் துன்பத்தி னின்றும் முத்தியிற் கொண்டுபோவதுமாய (இதுகாறும் யான் கூறி வந்த தருமவடிவ) அமிர்தத்தை யான் கூறியவாறு தமக்கியல்பாகப் பொருந்தச் சிரத்தையோடு முயற்சியா லுணர்ந்து சம்பாதிக்கும் முமுட்சுக்களாகிய பக்தர்களுக்கும் யான் மிகப் பிரியனாவேன். இதனை நீ குறிக்கொண் டுணர்வாயாக என்றருளிச் செய்தனர். §

---

* உபகாரஞ் செய்யும் பிராணி மித்துருவாம் ; அபகாரம் செய்யும் பிராணி சத்துருவாம். நிர்க்குணப் பிரஹ்ம உபாசகன் எப்போதும் சமபுத்தி உடையவனா யிருத்தலின், சுகதுக்க முதலிய துவந்துவங்கள் காரணமாகத் தன்னிலையி னின்றும் பிறழ்வதில்லையா மென்ப திங்குணர்தற்பாலதாம்.

§ தரும வடிவ அமிர்தமென்றது சராசர ரூபமாயுள்ள இருவகைப் பிராணி களிடத்தும் சிநேக முடையவனாய் என்றற் றொடக்கத்தனவாகக் கூறியவற்றை யாம். இவை அமிர்த வடிவ மோட்சத்தைப் பெறுதற்குச் சாதனமா யிருத்தலின், உபசார வழக்கால் அமிர்தம் என்று கூறப்பட்டனவென்க.

சகுணப்பிரஹ்ம உபாசனையைச் செவ்வையாகச் செய்து முடித்தவன் நிர்க்குணப் பிரஹ்ம உபாசனையைத் தவறாது செய்து, அதனால் தத்துவசாட்சாத்காரம் (ஆத்ம தரிசனம்) பெற்று, அதனால் முத்தி பெறுவ னென்பதிங் குணர்தற்பாலதாம்.

12 - பக்தியோக அத்தியாயம் முற்றிற்று.

13 - க்ஷேத்திர க்ஷேத்ரக்ஞ
விபாகயோக அத்தியாயம்.

முதலாவது அத்தியாய முதல் ஆறவது அத்தியாய மீறயுள்ள முதலாவது ஷட்கத்தில் துவம்பதார்த்த நிருபணத்தையும், ஏழாவது அத்தியாயமுதல் பன்னிரண்டாவது அத்தியாய மீறயுள்ள இரண்டாவது ஷட்கத்தில் தத்பதார்த்த நிருபணத்தையும் திருவாய்மலர்ந்தருளிய பகவான் பதின்மூன்றவது அத்தியாய முதல் பதினெட்டாவது அத்தியாய மீறயுள்ள மூன்றவது ஷட்கத்தில் தத்பதார்த்த துவம்பதார்த்தங்களின் ஐக்கியத்தைக் கூறத்தொடங்கி, அதனை அருச்சுன னுணர்தற்பொருட்டு முன்னர் க்ஷேத்திரம் இத்தன்மையது, க்ஷேத்திரக்ஞன் இத்தன்மையனென்று கூறல் $

"விடம்படு பணமுடி யரங்கின்மிசை யேறி, நடம்பயிலு நாயகன் மறித்துமிகு ஞானம், சடம்படு பிணிப்பிறவி யென்றிவை தரிக்கும், உடம்பொடுயி ரானவை யுரைத்தருள லுற்றான்" †

பகவான் ஏழாவது அத்தியாயத்தின் தொடக்கத்தில் பிரகிருதி பரை அபரை யென இருவகைத்தாம்; அவற்றுள், பரையென்னும் பிரகிருதி சீவனும்; அபரை யென்னும் பிரகிருதி உடம்பாமெனக் குறிப்பித்திருப்பதை விளங்கக் கூறல்.

அருச்சுன ! சீவன் தன் கருமத்திற் கேற்றவா றனுபவிக்கும் சுக துக்க மனைத்தையும் (பூமி ரூபமான க்ஷேத்திரம் போல) மிகுதியாக உண்டாக்குதலால், எதிரே காணப்படுகின்ற இச்சரீரம் க்ஷேத்திர மென்று கூறப்படுகின்றது; சாமானியமாகவும் விசேஷமாகவும் இச் சரீர ரூபமான க்ஷேத்திரத்தை ஆராய்ந்தறியும் சீவனை இந்த க்ஷேத் திரத்தின்கண் பொருந்திய க்ஷேத்திரக்ஞனென்று பண்டிதர் கூறுகின் றனர். ‡

$ *இம்மூன்றாவது ஷட்கம் தத்பதார்த்த துவம்பதார்த்தங்களின் ஐக்கியத் தைப் போதிப்பதும் தத்துவ ஞானத்தைப் பிரதானமாக வுடையதுமா மென் றிங்குணர்தல் வேண்டும்.*

† *அரங்கு - சபை, நாயகன் - கண்ணபிரான், உடம்பு - க்ஷேத்திரம், உயிர் - க்ஷேத்திரக்ஞன்.*

‡ *சுரோத்திர முதலிய பத்திந்திரியங்கள், மன முதலிய அந்தக்கரணங் கள், பிராணவாயு முதலிய ஐந்து பிராணன்களென்னு மிவற்றோடு கூடிச் சீவன்*

சரீரவடிவ க்ஷேத்திரம் வேறு, அதனை யுடைய க்ஷேத்திரக்ஞன் வேறு
அவன் சொப்பிரகாச வடிவனென் றருளிச்செய்த பகவான்
க்ஷேத்திரக்ஞனென்னும் சீவன் யதார்த்தமாகப்
பிரஹ்ம சொரூபமேயாமெனக் கூறல்.

அருச்சுன ! சரீரவடிவ க்ஷேத்திர மனைத்திலும் அவற்றிற் கதிஷ்டானமாகப் பொருந்திச் சொப்பிரகாச சைதன்யமாய் நிலை பெற்று, அந்த க்ஷேத்திரத்தை யானென்றெதன் றபிமானஞ் செய் துள்ள க்ஷேத்திரக்ஞன் அத்விதீயப் பிரஹ்ம சொரூபமான யானே யாவன். க்ஷேத்திரம் க்ஷேத்திரக்ஞனென்னு மிவ்விரண்டனையும் அவற்றின் தன்மைகளோடு ஒரு புண்ணிய விசேஷ காலத்தில் யாதொன் றறியுமோ அதனையே (அவித்தையின் விரோதியான) தத்துவஞான மென்று உணரக்கடவாய்; இது சுருதி சம்மதமா யிருப்ப தால் பரமேசுவரனுன வெனக்குஞ் சம்மதமானதாம். *

சுக துக்கங்களை அனுபவித்தற் கிடமாயுள்ள சரீரம் க்ஷேத்திரமாம்; இது போகா யதன மென்றும் கூறப்படும். இதனுளிருந்து சுக துக்க வடிவ போகத்தை யனு பவிக்கும் சீவன் க்ஷேத்திரக்ஞனும்; இவன் போகத்தை யனுபவிப்பது காரண மாகப் போக்தாவென்றும் கூறப்படுவன். சரீர வடிவ க்ஷேத்திரத்தினு ளிருந்து பேதைமையால் அதனிடத்து நானென் றபிமானஞ் செய்துவருஞ் சீவன் விளை நிலத்தில் பயிர்செய்வோன் அந்நிலத்தின் பயனை யனுபவிப்பதுபோல க்ஷேத்திர வடிவச் சரீரத்தின் பயனுகிய சுகதுக்கங்களை யனுபவித்து வருகின்றனென்ப தும், சரீரரூபமான க்ஷேத்திரம் நான் மனுஷனெனச் சாமானிய வடிவமாக வும், நான் பிராமணன்-க்ஷத்திரிய னென்றற் றொடக்கத்தனவாக விசேட வடிவ மாகவும் சீவனு லறியப்படுகின்றதென்பதும், க்ஷேத்திர மித்தன்மையது, க்ஷேத் திரக்ஞ னித்தன்மைய னென்பவற்றைச் செவ்வையாக விசாரித்தறிபவர் சீவப் பிரஹ்ம ஐக்கிய ஞானத்தை யெளிதிலடைந்து பிறவாநிலையை யடைவரென் பது மிங்குணர்தற் பாலனவாம்.

* *பிரஹ்மன் முதல் ஸ்தம்ப பரியந்தமான சரீர மனைத்திலும் பிரஹ்மமே அவித்தை அல்லது அந்தக்கரண உபாதி பேதத்தால் சீவ ரூபமா யிருக்கின்றது ; அச் சீவன் உண்மையில் பிரஹ்மமேயாம் ; க்ஷேத்திரமென்னு முடம்பையும் க்ஷேத்திரக்ஞனென்னும் சீவனையும் அவற்றின் தன்மைகளோடு தமது புண்ணிய கரும பரிபாக காலத்தில் சற்குருவி னனுக்கிரகத்தா லறிகின்றவர் அறிவே தத் துவ ஞானமாம் ; அந்த ஞானமே ஜன்ம காரணமா யுள்ள அஞ்ஞானத்திற்கு விரோதியாம் ; மற்ற ஞானங்கள் அஞ்ஞானத்திற்கு விரோதிக ளாகாமையின்*

க்ஷேத்திரம் க்ஷேத்திரக்ஞ னென்பவற்றின் தன்மையைச் சுருக்க மாகக் கூறிய பகவான் அதனை விரித்துக் கூறத்தொடங்கி, அதனை வசிஷ்டர் முதலிய மகரிஷிகளும் பலவிதமாகக் கூறி யிருக்கின்றன ரேனல்.

அருச்சுனா! சரீரவடிவ இந்த க்ஷேத்திரத்தினது உற்பத்தியை யும், அதனது தர்மத்தையும், அது தோன்றி யடையும் விகாரத் தையும், க்ஷேத்திரக்ஞனது சொப்பிரகாசத் தன்மையையும், சிறந்த தவத்தையுடைய வசிஷ்டர் முதலிய மகரிஷிகள் (தாமருளிச் செய்த நூல்களில்) பலவிதமாகக் கூறியிருக்கின்றனர். பரமேசுவரனாகிய நானும் அவற்றைச் சுருங்கச் சொல்லலும் விளங்க வைத்தலுமாகக் கூறுகின்றேன்; அவற்றை நீ கவனமாய்க் கேட்கக் கடவாய். *

க்ஷேத்திர க்ஷேத்ரக்ஞனது சொரூபத்தை உணர்வதன்கண் அருச்சுன னுக்கு வேட்கையுண்டாக்கிய பகவான் அவனுக்கு முன்னர் க்ஷேத்திரத்தின் சொரூபத்தைக் கூறல்.

சிறந்த தவத்தையுடைய அருச்சுனா! தமது காரியமாயுள்ள எந்தப் பொருளினிடத்தும் வியாபித்து எவ்விடத்து மிருக்கின்ற பிருதிவி - அப்பு - தேயு - வாயு - ஆகாயமென்னும் ஐம்பெரும் பூத மும், அப்பூதங்களைத் தருகின்ற (துன்பந் தருவதற்கண் தனக்கொன்

தத்துவ ஞான மன்று மென்பதும், க்ஷேத்திரக்ஞன் அவித்தை அல்லது அந்தக்கரண உபாதியால் கர்த்திருத்துவ போக்த்திருத்துவ முதலிய தருமங்க ளுடையவனாய் விளங்குகின்றான்; அவித்தை அல்லது அந்தக்கரண உபாதி யைக் கழித்து நோக்கினால் அவன் பிரஹ்ம சொரூபமாக விளங்குவ தன்றி வேறு சொரூபமாக விளங்குவதில்லை யென்பதும், சர்வ க்ஷேத்திரமும் பிரஹ்மத்தின் கண் கயிற்றின்கண் பாம்புபோலக் கற்பிதமா யிருத்தலின், அவை உண்மையில் பிரஹ்மத்தைத் தவிர இல்லையாம்; க்ஷேத்திரம் கற்பிதமா யிருத்தலால் அது காரணமாகப் பிரஹ்மத்திற்கு க்ஷேத்திரக்ஞனென்று வந்த பெயரும் கற்பிதமா மென்பது மிங்குணர்தற் பாலனவா மென்க.

* *சரீரவடிவ க்ஷேத்திரத்தின் சுபாவம்-ஜடம், திருசியம், பரிச்சின்ன முத லியனவாம்; தர்மம்-இச்சை துவேஷ முதலியனவாம்; விகாரம்-இந்திரிய முத லியனவாம். க்ஷேத்திரக்ஞன் தன் சொரூபத்தால் சொப்பிரகாச சைதன்ய ஆநந்த சுபாவ முடையவன்; ஆனால், உபாதியால் கருத்திருத்துவாதி குண முடையவன் என்பன இங்குணர்தற் பாலனவாம்.*

ருப்பாகாதுள்ள) அகங்காரமும், அவ்வகங்காரம் அப்பூதங்கட்கு முன்னே வந்து தோன்றுவதற்கு விரோதமாகாதுள்ள மித்தையா யுள்ள புத்தியும், அப்புத்திக்குக் காரணமாயுள்ள அவ்வியக்தமும் என்னுமிவ் வெண்வகைப் பிரகிருதிகளும், நல்வினை - தீவினைகளைச் செய்தற்குக் காரணமாயுள்ள மனமொன்றும், தனித்தனியாக விருத் தலின் ஒரு வடிவமென் றுரைப்பதற் கரிய சுரோத்திராதி ஞானேந்திரிய மைந்தும், அவ்விந்திரியங்களால் அனுபவித்தற்குரிய (அவிவேகிகள் துன்ப சாதனமாதலை யறியாதுள்ள) சப்தாதி விஷயங்களைந்தும், சுரோத்திரிய முதலிய இந்திரியங்களாலும் சப்த முதலிய விஷயங்களா லும் தீவினைகளைச் செய்கின்ற வாக்காதி கருமேந்திரிய மைந்துமாகிய இவையனைத்தும் விருப்பு வெறுப்பு - சுகம் துக்கம் - தைரிய முத லியனவும் நெருங்கிப் பொருந்தியுள்ள விகாரத் தன்மைகளோடு கூடிய இக்கூட்டமே க்ஷேத்திரமென்று சொல்லப் படுவதாம்; இதனை நீ அறி வாயாக; இனி க்ஷேத்திரக்ஞனை யறிதற்குரிய அமானித்துவ முதலிய குணங்களையும் கூறுகின்றேன், நீ கேட்கக் கடவாய். †

---

† பிருதிவி முதலிய ஐம்பெரும் பூதங்கள், அகங்காரம்-புத்தி-அவ்வியக்த மென்னும் எண்வகைப் பிரகிருதிகள், ஞானேந்திரிய-கருமேந்திரியங்கள், மனம், சப்தாதி விஷயங்கள், விருப்பு வெறுப்பு - இன்பம் துன்பம் - தைரிய முதலிய வற்றின் கூட்டமாயுள்ள சரீரமே க்ஷேத்திரமா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

" ஐம்பெரும் பூதங்கட்குக் காரணம் அகங்காரமாம்; அதற்குக் காரணம் புத்தி யாம்; அதற்குக் காரணம் அவ்வியக்தமாம்.

இங்கு அவ்வியக்த மென்பது பரமேசுவரனது சக்தி வடிவமா யுள்ள மாயை யாம்; புத்தி யென்பது உலகப் படைப்பின் தொடக்கத்தில் பரமேசுவரனுக்கு யானிவ் வுலகத்தைப் படைப்பேனென் றுண்டாகும் ஞானமாம்; அகங்காரமென் பது அந்த ஞானத்தின் பின் யானெல்லாப் பொருளு மாவேனென் றுண்டாகும் சங்கற்பமாம்.

பிருதிவி முதல் தைரிய மீறுயுள்ள பதார்த்த மனைத்தும் சேதனத்தால் விளங்குதற் குரியனவா யிருத்தலின், அவை சேதனத்திலும் வேறும்; அதனால் அவை க்ஷேத்திரமென்றும், சேதனம் க்ஷேத்ரக்ஞ னென்றும் கூறப்படுகின்றன வென்க.

க்ஷேத்திரத்தின் சொரூபத்தைத் திருவாய் மலர்ந்தருளிய பகவான் க்ஷேத்திரத்திற்குச் சாட்சியாயுள்ள க்ஷேத்திரக்ஞன், அதனிலும் வேறென்று அருச்சுனனுக்கு விரிவாகத் தெரிவித்தற் பொருட்டு க்ஷேத்திரக்ஞனை க்ஷேத்திரத்தினின்றும் வேறு பிரித்தறிதற்குரிய அமானித்துவ முதலிய ஞான சாதன குணங்களைக் கூறல்.

அருச்சுனா! தனது குணத்தைச் சிறப்பித்துப் பேசுவதாகிய மானமும் - பிறர் தன்னை நன்கு மதிக்குமாறு தனது தர்மத்தைக் காண்பிப்பதாய இடம்பமும்-மோட்ச மார்க்கத்தி லொழுகுவ தில்லாத குறைபாடும்-எறும்பு முதலிய பிற பிராணிகட்கு இம்சை செய்தலும்-தானல்லாத உடம்பில் யானென்னும் அகங்காரமும் - இகலோக பரலோக விஷயபோகங்களி லுண்டாகும் பேராசையும் என்னுமிவற்றை யொழிக்கும் வல்லமையும், தானடைந்துள்ள சிறந்த கிருகத்தோடு மனைவி மக்கள் முதலியோரிடத்துப் பொருந்தி யெழுகின்ற ஆசையை நீக்குதலும், சரீர சுத்தியும், மோட்ச மடைதற்குத் தடையாயுள்ள சப்தாதி விஷயங்களில் தேகேந்திரியங்கள் சென்று சுழலுதலும்-பிறர் செய்யும் அபராதங் காரணமாக உண்டாகின்ற கோபமும் - கீழ்மக்களோடு சேர்தலு மென்னுமிவற்றை யொழித்தலும், ஒப்பற்ற பரம் பொருளாய வாசுதேவனாய என்னையே எல்லாவற்றினும் மேலாய பொருளாகவும் பரம கதியாகவும் தீர்மானித்துச்சித்தத்தின்கண்வைத் துத்தியானிக்கும் நிரதிசயப் பிரீதிரூபமான பக்தியும், நல்வினை-தீவினைகளை அவற்றின் காரணமாய அஞ்ஞானத்தோடு தத்துவ ஞானத்தால் நீக்கி யிருக்கும் பெரியார் வசிக்கும் ஆற்றங்கரை - மலைக்குகை முதலிய விடங்களை யடைதலும், சற்குரு மூர்த்தியை மிகு பிரியமாக வணங்கி அவர்க்குத் தொண்டுசெய் தொழுகு மியல்பும், யாதொரு குற்றமு மில்லாதுள்ள ஆத்மாவையும்-குற்ற மெல்லாம் நிறைந்துள்ள அநாத்மாவையும் உள்ளபடி பிரித் தறியும் விவேகமும், முன்னே தோன்றுகின்ற பிறப்பு - மூப்பு - இறப்பென்பவற்றால் வந்தடைகின்ற துன்பங்களை அடிக்கடி சிந்தனைசெய்து நோக்குதலு மென்னு மிவை யனைத்தும் ஞானசாதன குணங்களாம். இனி இந்த ஞான சாதனமாயுள்ள குணங்களால் சென்றடைதற்குரிய ஞேய வஸ்துவாய பொரு

ளைக் கூறுகின்றேன், அதனை நீ ஆராய்ச்சி செய்து கேட்பாயாக. *

மான மில்லாமை, இடம்ப மில்லாமை முதலியவற்ரு லறிந் தடைதற் குரிய ஞேய வஸ்துவின் தன்மையைப் பகவான் கூறல்.

அருச்சுன ! அந்த ஞேய வஸ்து தோற்ற வொடுக்க மில்லாத தாம்; எங்கும் பிரிவின்றி அழியாது நிற்கும் தன்மையதாம்; சத் அசத் என்று கூறத்தக்க குறைபாடில்லாது விளங்குவதாம்; தான் சர்வப் பிரபஞ்சமுமாகி அப்பிரபஞ்ச மெங்கும் வியாபகமா யிருத்தலின் இவ்வள வென்று வரையறை செய்து கூறுதற்கரிய கை - காது - தலை- கால் - முக முதலியவற்றை எவ்விடத்து முடையதாம். ‡

அந்த ஞேய வஸ்துவிற்கு உண்மையில் கை செவி முதலியன இல்லை; அவை அவ்வஸ்துவினிடத்து உபாதியால் கற்பிக்கப்பட் டிருக்கின்றன வென்று பகவான் கூறல்.

அருச்சுன ! அந்த ஞேயப் பிரஹ்மம் சப்தாதி விஷயங்களை யறிதற்குரிய சுரோத்திராதி யிந்திரிய மனைத்திற்கும் அறிவாய் நின்று, அவ் விந்திரியங்களின் கேட்டல் முதலிய வியவகாரங்களை யுடையதாகத் தன்னைத் தோற்றுவிப்பதாம்; பிராணிகள் விரும்புகின்ற அவ் விந்திரியங்களுள் ஒன்றும் தனக்கு உண்மையி லில்லாமல் பொருந்

---

* மானமில்லாமை, இடம்பமில்லாமை, மோட்சமார்க்கப்பிரவிர்த்தி, பிராணிகட் கிம்சை செய்யாமை, அகங்கார மில்லாமை, இகபரலோக போகங்களில் விருப்பமில்லாமை, காணி மனை முதலியவற்றின் கண்ணும் மனைவி மக்கள் முதலியோரிடத்தும் தொடர்ந்து தொடர்ந் தெழுகின்ற ஆசையை யகற்றல், தேகசுத்தி, இந்திரிய நிக்கிரகம், சினத்தை யொழித்தல், தீவினையாளரோடு சேர்தலை நீக்குதல், பரவாசுதேவனை மறவாது தியானஞ் செய்தல், பெரியாரிருக்கு மிடத்திற் சென்று வசித்தல், குருவழிபாடு, ஆத்மாநாத்ம விவேகம், பிறப்பு முதலியவற்றால் வரும் துன்பங்களை அடிக்கடி சிந்தனை செய்து நோக்குதலென்பன க்ஷேத்திரக்ஞனை உள்ளவாறு க்ஷேத்திரத்திலும் வேருக அறிதற்குச் சாதனங்களாக விருத்தலின், இவை ஞான சாதன குணங்களென்று கூறப்பட்டன. இவற்றிற்கு மாருயுள்ள குணமனைத்தும் அஞ்ஞானம் அபிவிருத்தி யாதற்குச் சாதனங்களாக விருத்தலின், அவை அஞ்ஞான சாதனங்களா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

‡ ஞேயவஸ்து வென்ப திங்குக் காலத்தாலும் தேசத்தாலும் பொருளாலும் முடிவுடைய தாகாதுள்ள பரப்பிரஹ்மமாம்.

தூந் தன்மை யுடையதாம்; தான் அசங்கமா யிருத்தலின், எப்பொருளி டத்தும் பொருந்தும் சம்பந்தம் தனக்கு உண்மையாக வில்லாது சர்வப் பிரபஞ்சத்தையும் தானே சத்ரூபத்தால் தரித் திருப்பதாம்; சத்துவம் - இராசதம் - தாமத மென்னும் குண மூன்றும் தனக்கு உண்மையாக வில்லாமலே அக்குணங்களின் காரியமாயுள்ள சுக - துக்க-மோகங்களைச் சப்த - பரிச முதலிய விஷயங்களின் வாயிலாகப் பொருந்தி யனுபவிப்பதாம் †

அந்த ஞேய வஸ்து விளங்கும் நிலையினைப் பகவான் கூறல்.

அருச்சுனா! இன்னும் அந்த ஞேயப் பிரஹ்மம் இவ்விபவகார தசையில் தனது கற்பித காரியமாயுள்ள பிருதிவி - அப்பு - தேயு - வாயு - ஆகாயமென்னும் ஐம்பெரும் பூதங்களின் உள்ளிலும் வெளியிலும் (தன் காரியமான கடத்தில் மண் வியாபித்திருப்பதுபோல) வியாபித் திருப்பதாம்; தனது சொரூபத்திற்குக் கேடில்லாமல் நடப்பன வென்னும் சங்கம ரூபமாயும் நிற்பனவென்னும் தாவர ரூபமாயு மிருப்பதாம். (அருச்சுனா! நீ அஃது தவ்வாறிருப்பதாயின், எம்மனோர்க்கு எக்காரணத்தால் விளங்காதிருக்கின்றதென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.) அந்த ஞேயப் பிரஹ்மம் சர்வான்மாவாக விருந்தும் இத் தன்மையதென்று கூறுவதற்கும் அறிதற்கு மரிதாமாறு மிகு சூக்குமமா யிருப்பதாம்; (அதனால், சீவர்களுக்கு விளங்காதிருக்கின்றது.) அந்த ஞேயப் பிரஹ்மம் உண்மையில் தாவர - சங்கம ரூபமா யுள்ள பிராணிகளிடத்து ஏக ரூபமாகவே யிருந்தும், தேகாத்மப் பிராந்தியால் பேதமுடையதுபோலச் சரீரந்தோறும் நின்று விளங்குவதாம். ‡

---

† ஞேயப் பிரஹ்மம் உண்மையில் சுரோத்திர முதலிய இந்திரியங்களும், பிறவு மில்லாதிருந்தும் மாயையென்னு முபாதியால் அவற்றை யுடையதுபோல விளங்குகின்றதென்பதிங் குணர்தற்பாலதாம்.

‡ ஆத்மா உண்மையில் ஒன்றாகவே யிருந்தும், தேகாத்மப்பிராந்தியுடையார்க்குப் பலவாக விளங்குகின்றது; தேகாத்மப் பிராந்தி நீங்கினவர்க்கு ஒன்றாகவே விளங்குகின்றதென்பதிங் குணர்தற்பாலதாம்.

பகவான் ஞேயப்பிரஹ்மத்தின் தடத்த விலக்கணத்தைக்கூறி முடித்து அதன் சொரூப விலக்கணத்தைக் கூறல்.

அருச்சுனா ! அந்த ஞேயப் பிரஹ்மம் உருவ முதலிய குணங்களில்லாததாய் விவேகம் வைராக்யம் முதலிய சாதனமில்லாதார்க்கு எட்டுதற் கரியதா யிருத்தலின், இலக்ஷங்கோடி யோசனை தூரமுடைய தேசம்போல அத்தியந்தம் தூரமாயிருப்பதாம்; விவேகம் வைராக்ய முதலிய சாதனங்கள் நிறைந்துள்ளவர்க்குச் சர்வமுந் தானாய் அவர்தம் ஆத்மவடிவமாக விளங்குதலால் அத்தியந்தம் சமீபமா யிருப்பதாம் ; தாவர சங்கமரூபமாயுள்ள பொருளனைத்தையும் படைக்க வேண்டிய காலத்தில் படைத்து, மீண்டும் அவற்றை யழிக்க வேண்டிய காலத்தி லழிப்பதாம்; (இங்ஙனம் உலகத்திற்கு உற்பத்தி-ஸ்திதி - லய காரணமா யிருத்தல் அதன் தடத்த விலக்கணமாம். இனி அதன் சொரூப விலக்கணத்தைக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய்.)

அருச்சுனா ! அந்த ஞேயப் பிரஹ்மம் தமக்கொப்பாவதில்லாத சூரியன் - சந்திரன் - அக்கினி - மின்னல் முதலிய வெளி ஒளிப் பொருள்களுக்கும், மனம் - புத்தி முதலிய உள் ஒளிப்பொருள்களுக்கும் உள்ளொளியாகியே விளங்குவதாம் ; இவ் வுலகத்தின்கண் பிராணிகளின் புத்தி விருத்தியின்கண் பேதமற்ற ஞானமாயும் அந்த ஞானத்தின் விஷயமாயும் பொருந்தி யிருப்பதாம். †

பகவான் க்ஷேத்திர முதலியவற்றைக் கூறிப் பூர்வப் பிரசங்கத்தை முடித்தல்.

குற்றமற்ற மனமுடைய அருச்சுனா ! இவ்வாறாகக் கூறியதாய இந்த ஞேயப் பிரஹ்மம் முன்னர்க்கூறிய அமானித்துவ முதலிய

---

† (1)எது ஒருகாலத்திருப்பதாய்த் தன்னை யுடையதை மற்றவற்றினின்றும் வேறு பிரித் தறிவிக்கின்றதோ அது தடத்த விலக்கணமாம்; இதற்கு உதாரணம் இவன் நாமக்கார னென்றாற் போல்வதாம். (2) எது எப்போது மிருப்பதாய்த் தன்னை யுடையதை மற்றவற்றினின்றும் வேறு பிரித் தறிவிக்கின்றதோ அது சொரூப விலக்கணமாம்; இதற்கு உதாரணம் தீ சூடுடைய தென்றாற் போல்வதாம். ஞேயப் பிரஹ்மம் சூரியன் முதலிய ஒளிப் பொருள்களுக்கும், மன முதலிய ஒளிப்பொருள்களுக்கும் உள்ளொளியா யிருப்பதா மென்றமையின், அது சொப்பிரகாசவடிவமா மென்பது பெறப்பட்டது; படவே, அதனிடத்து அஞ்ஞான முண்மையி லின்றாமென்பது பெற்றாமென்க.

ஞான சாதன குணங்கள் வாயிலாக அதிகாரி புருஷர் தமதாத்மாவாக அபரோட்சமா யறிதற்குரிய பொருளாம். உனக்கு யான் க்ஷேத்திர சொரூபத்தையும், அந்த க்ஷேத்திரத்தின்கண் பொருந்திய அமானித்துவ முதலிய ஞான சாதன குணங்கள் முழுவதையும், அந்த ஞான சாதன குணங்கள் வாயிலாக அபரோட்சமாக அறியப்படும் ஞேயப் பிரஹ்மத்தி னிலக்கணத்தையும் இதுகாறும் குறைவற்ற வகையாகச் சுருக்கமாய்க் கூறினேன்; இனிக் கூறுவதையும் நீ கேட்கக் கடவாய்.†

பகவான் எனது பத்தரே க்ஷேத்திர முதலியவற்றை உள்ளவாறுணர்ந்தென்னை யடைந்து பிறவித்துன்பத்தினின்றும் நீங்குவரெனக் கூறல்.

அருச்சுனா ! என்னிடத்துக் கொண்ட அருமையால் எனது வாக்கை யிகழ்வதொழித்து, யான் முன்பு கூறிய க்ஷேத்திரம் - ஞானம் - ஞேயமென்னு மிப்பொருள் மூன்றனையு முள்ளபடியெனது பத்தர்களே யறிந்து, நால்வகைப் பிறப்புக்களென்று கூறப்படுகின்ற குற்றம் நிறைந்துள்ள மாயையாகிய கடலைக் கடந்து, பிறவிக்கஞ்சுகின்றவர் விரும்புகின்ற நிரதிசயாநந்த வடிவமாயுள்ள என்னை அபேதமா யடைவர். க்ஷேத்திரம் க்ஷேத்திரக்ஞ னென்பனவற்றைப் பற்றி இன்னும் சில கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய். §

பிரகிருதி பரை - அபரையென இருவகைத்தாம். அவற்றுள், அபரை க்ஷேத்திரமாம்; பரை க்ஷேத்ரக்ஞனும் ; அவை சர்வபூதங்கட்கும் காரணமாமென மாயாரூப அத்தியாயத்தில் கூறிய பகவான் அவை அநாதியென்பதையும் அவற்றின் காரியங்களையுங் கூறல்.

அருச்சுனா! யான் கூறிய க்ஷேத்திரத்திற்கும் க்ஷேத்ரக்ஞனுக்கும் வாஸ்தவமாகக் காரணத்தை ஆராய்ந் தறிபவர் ஒருவரு மிலராவர்; (அதனால், க்ஷேத்திரத்தையும் க்ஷேத்ரக்ஞனையும் அநாதியென்றும், விகாரங்களையும் குணங்களையும் க்ஷேத்திரமென்னும் பிரகிருதியின் காரியமாமென்றும் நீ உணர்வாயாக.)

---

† அமானித்துவம் - மானமின்மை. அபரோட்சம் - பிரத்தியட்சம்.

§ பத்தரென்றது பத்தியோக அத்தியாயத்திற்கூறிய இலக்கண முடைய பத்தரை. அருமை - பொறுமை. நால்வகைப் பிறப்பு - சராயுஜம்(பையிற் பிறப்பது), அண்டஜம் (முட்டையிற் பிறப்பது), சுவேதஜம் (வியர்வையிற் பிறப்பது), உத்பிஜ்ஜம் (நிலத்தைப் பிளந்துகொண்டு பிறப்பது) என்பனவாம்.

அருச்சுனா ! நீ குற்றமற்ற அவ்விரண்டனது காரிய மெவை யென வினவுதல் கூடும். சுருதியனுசாரமாக இவ்விரண்டன் காரியங்களையும் உனக்கு விளங்கக் கூறுகின்றேன் கேட்கக் கடவாய். *

அருச்சுனா ! சுக-துக்க-மோக ரூபமாகப் பொருந்திய சத்துவம்-இராசதம்-தாமதமென்னு முக்குணங்களின் சாமியாவஸ்தைக்கு வேறாகப் பிரகிருதி யில்லை; அக்குணங்களின் சாமியாவஸ்தையே பிரகிருதி யென்று கூறப்படுவதால், கருதத்தக்க காரியவடிவச் சரீரம் - சுக துக்க சாதனமாயுள்ள இந்திரியவடிவக் காரணமென்பனவற்றிற்கு மாயாரூபப்பிரகிருதியே காரணமாம் ; பிரகிருதியின் காரியமாகக் கருதுகின்ற சுக துக்கமென்னு மிவற்றை அனுபவிக்கும் காரணம் புருஷனும். ‡

(பகவானே ! தாங்கள் 'சுக துக்க மென்னு மிவற்றை அனுபவிக்கும் காரணம் புருஷனும்' என்று முன்பு க்ஷேத்திரக்ஞனை புருஷன் சுக துக்கங்களை அனுபவிக்கின்றானென்று கூறினீர்; அவன் அவற்றை அனுபவிப்பதற் கொருகாரண முண்டா? இல்லையா? யாதொரு காரண

---

* அநாதி - உற்பத்தியில்லாதது. விகாரங்கள்-ஆகாசாதி பூதங்கள், சுரோத்திராதி ஞானேந்திரியங்கள், வாக்காதி கருமேந்திரியங்கள்,மனமென்பனவாம்; குணங்கள் - சுக துக்க மோக வடிவமாகப் பொருந்திய சத்துவம் - இராசதம்-தாமத மென்னுங் குணங்களாம். க்ஷேத்திரமென்னும் அபரைப் பிரகிருதிக்கும், க்ஷேத்ரக்ஞனென்னும் பரைப் பிரகிருதிக்கும் உற்பத்தி யின்மையின், அவை அநாதியாம். அவை உற்பத்தி யுடையன வென்பதற்கு யுக்தியொன்று மில்லையாம். அபரைப் பிரகிருதிக்கு (மாயைக்கு) உற்பத்தி கூறின், அதற்குக் காரணம் யாது? அக்காரணத்திற்குக் காரணம் யாது? என முடிவின்றிச் சேறலென்னும் அநவஸ்தா தோஷம் சம்பவிப்பதாம்; க்ஷேத்ரக்ஞனுக்கு (ஆத்மாவிற்கு) உற்பத்தி கூறின், அதற்கு மித்தோஷம் சம்பவிப்பதாம்; இதுவேயுமன்றிக் கிருதநாசம் (செய்த கன்மம் அனுபவியாமல் நாசமாதல்), அகிருதாப்பியாகமம் (செய்யாத கருமம் அனுபவிக்குமாறு வருதல்) என்னுந் தோஷ மிரண்டும் சம்பவிப்பனவாம். இதனால், பிரகிருதி (மாயை) புருஷன் (ஆத்மா) என்னும் இரண்டு மநாதியா மென்பது பெறப்பட்டதென்க.

‡ சாமியாவஸ்தை-ஒத்த நிலைமை; புருஷன் (க்ஷேத்ரக்ஞன்) சொரூபத்தில் அகர்த்தா வடிவினனா யிருந்தும், பிரகிருதியின் கற்பித சம்பந்தத்தால், சுக துக்கங்களை யனுபவிக்கும் கருத்தாவைப் போல விளங்குகின்றா னென்பதிங் குணர்தற்பாலதாம்.

மின்றி அவை அவனிடத்துச் சம்பவிக்கின்றன வென்றுலோ, பந்த காலத்திலேயன்றி மோட்ச காலத்திலும் அவனுக் கவை சம்பவித்தல் வேண்டும்; இத்தோஷத்தை நீக்குதற்பொருட்டு அவன் சுக துக்கங் களை அனுபவிப்பதற்கு யாதாவதொரு காரணத்தை அங்கீகரித்தல் வேண்டும்; அக்காரணம் யாதென்று அருச்சுனா! நீ வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுனா! இந்த க்ஷேத்திரக்ஞனென்னும் புருஷன் இம்மாயா வடிவப் பிரகிருதியின்கண்ணே (விபரீத புத்தியால் அதனோடு ஒற்றுமை யுடையவனாய்) இருந்து, அந்தப் பிரகிருதி தருகின்ற சுக துக்கங்களை அனுபவிக்கின்றான்; இந்தப் பிரகிருதியின் காரியமான குற்றமுடைய பொருள்களில் இது நான், இவை யென்னுடையன வென்று விபரீத புத்திகொண் டிருத்தலால், இறக்கின்றான், பிறக்கின்றான்.*

(க்ஷேத்ரக்ஞனுக்குச் சம்சாரம் வருதற்குரிய காரணத்தைத் தேவரீரருளிச்செய்தீர்; அதனா லவன் தன் சொரூபத்தால் சம்சார மில்லாதவ னாவ னென்பது பெறப்பட்டது; அவனது சொரூபம் எத் தன்மைய தென்று அருச்சுனா! நீ வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

---

* க்ஷேத்ரக்ஞனென்னும் புருஷன் மாயாரூபப் பிரகிருதியின்கண் விபரீத புத்தியால் அதனோடு வேற்றுமை யில்லாதவனா யிருந்து அதனா லுண்டாகின்ற சுக துக்கங்களை அந்தக்கரண விருத்தியா லனுபவிக்கின்றான்; அந்தச் சுக துக்கங் களை யனுபவித்தற் பொருட்டு, சத்-அசத்-சதசத் யோனிகளிற் பிறக்கின்றான், இறக்கின்றான். அவனது ஜனன மரணவடிவச் சம்சாரத்திற்குக் காரணம் அவன் தேகேந்திரிய முதலியவற்றின்கண் யானெனதென்று கொண்டுள்ள விபரீத புத்தியேயா மென்பதும், இந்திரன் முதலிய இமையவர் சரீரங்கள் சத்யோனி யிற் றோன்றினவையாம்- பசு பட்சி முதலிய சரீரங்கள் அசத் யோனியிற் றோன் றினவையாம்-மானுட சரீரம் சத் அசத் யோனியிற் றோன்றியதாம். இம்மூன்று சரீரங்களும் முறையே பெரும்பான்மையும் சுகத்தையும் துக்கத்தையும் அவ்வி ரண்டையும் க்ஷேத்ரக்ஞனனுபவித்தற் குரியனவா யிருக்கின்றன வென்பதும், சத்துவ குணத்தின் மிகுதியால் சத்யோனியிற் பிறத்தலும் - தாமதகுணத்தின் மிகுதியால் அசத்யோனியிற் பிறத்தலும் - இராசத குணத்தின் மிகுதியால் சத் அசத் யோனியிற் பிறத்தலும் க்ஷேத்திரக்ஞனுக்குச் சம்பவிக்கின்றன வென்ப தும், பெரும்பான்மையும் க்ஷேத்ரக்ஞன் பிரகிருதியின் சத்துவகுணத்தால் சுகத்தையும் - தாமதகுணத்தால் துக்கத்தையும் - இராசத குணத்தால் சுக துக்க மிரண்டையு மனுபவிக்கின்றா னென்பது மிங்குணர்தற் பாலனவாம்.

என் நண்பனுயுள்ள அருச்சுனு! இத் தேகமே யானென்னும் அபிமான வடிவச் சங்கற்பத்தைச் செய்துகொண்டு, இத் தேகத்திலே சீவ வடிவமாகி, உண்மையில் அதற்கு வேறு யிருக்கின்ற க்ஷேத்ரக்ஞனென்னும் புருஷன் அனுபவித்தற் குரியனவாயுள்ள சுக துக்க முதலிய அனைத்தையும் அனுபவிப்பவனுயும், தன்னுடம்பின்கண் உள்ள சுரோத்திர முதலிய இந்திரியங்களின் வாயிலாகக் கடபட முதலிய சர்வ பதார்த்தங்களையும் காண்பவனுயும், சர்வ பதார்த்தங்களுக்கும் காரணமாய்ப் பொருந்தியிருக்கும் மகேசுவரனுயு மிருக்கின்றான். †

† அனுபவிப்பவன் - போக்தாவாம்; காண்பவன்-உபதிருவ்ஷ்டாவாம். க்ஷேத்ரக்ஞன் போக்தாவாயும், உபதிருவ்ஷ்டாவாயும், மகேசுவரனுயு மிருக்கின்றானென்று கூறியதன்கண் அவன் அநுமந்தாவாயும், பர்த்தாவாயும், பரமான்மாவாயு மிருக்கின்றானென்பதும் அடங்கி யிருக்கின்ற தென்பதிங் குணர்தற்பாலதாம்.

மாயாவடிவப் பிரகிருதியின் காரியமாய சரீரத்தில் சீவ ரூபமா யிருக்கும் க்ஷேத்ரக்ஞன் உபதிருவ்ஷ்டாவாகவும், அநுமந்தாவாகவும், பர்த்தாவாகவும், போக்தாவாகவும், மகேசுவரனுகவும், பரமாத்மாவாகவு மிருக்கின்றானென்று பகவான் கூறினமையின், அவன் உண்மையில் சம்சாரமற்றவனுய் அசங்கனு யிருக்கின்றானென்பது பெறப்பட்ட தென்க.

(1) க்ஷேத்ரக்ஞன் தேகேந்திரிய முதலியவற்றில் தான் வியாபார முடையவனுகாது, அவற்றிற்கு வேறுய் அவ்வியாபாரமுடைய தேகேந்திரிய முதலியவற்றை அவற்றின் சமீபத்திலிருந்து பார்த்துக்கொண்டிருத்தலின், உபதிருவ்ஷ்டாவாம்; அதனுல், அவைபோலக் கர்த்தாவன்றாம்.

(2) க்ஷேத்ரக்ஞன் தேகேந்திரிய முதலியவற்றின் பிரவிர்த்தியில் தான் பிரவிர்த்தி யில்லாதவனுயிருந்தும், பிரவிர்த்தி யுடையவன்போல அவற்றின் சமீபத்திலிருக்குங் காரணத்தால் அவற்றின் பிரவிர்த்திக் கனுகூலனு யிருத்தலின், அநுமந்தாவாம்.

(3) க்ஷேத்ரக்ஞன் சேதனத்தி னுபாசத்தோடு கூடிய தேகேந்திரிய முதலியவற்றைத் தனது சத்தாஸ்புரணங்களால் தாரணஞ் செய்வதாலும் போஷணஞ் செய்வதாலும் பர்த்தாவாம். சத்தாஸ்புரணம் - இருத்தல் - விளங்கல்; போஷணம் - புவ்ஷ்டிசெய்தல்.

(4) க்ஷேத்ரக்ஞன் புத்தியின் சுக-துக்க-மோக வடிவ விருத்திகளைத் தனது சைதன்ய சொரூபத்தால் பிரகாச முறச்செய்து, நிர்விகாரமா யிருத்தலின், அவற்றின் உபலப்தாவாம்; அதனுல், போக்தாவாம்.

(5) க்ஷேத்ரக்ஞன் சர்வத்திற்கும் ஆன்மவடிவமாக விருத்தலின், மகேசுவரனும். மகானுகிய ஈசுவரன் மகேசுவரனுவன்.

பகவான் க்ஷேத்திர - க்ஷேத்ரக்ஞ விவேக ஞானியைத் துதிசெய்தல்.

அருச்சுனா! யான் மேற் கூறியவாறு உபதிருஷ்டா முதலிய வடிவனாய க்ஷேத்ரக்ஞனையும் சுக துக்க முதலிய குணங்களோடு கூடிய க்ஷேத்திரத்தையும் குரு சாஸ்திரங்களி னுபதேசவாயிலாக உள்ளவா றுணர்ந்தவன் மிகு பிரபலமாயுள்ள பிராரத்த கரும வசத்தால் தான் விரும்பிய போகங்களை அனுபவித்து, சாஸ்திர விதியை யனு சரியா தொழுகினாலும் மீண்டும் பொய்யாயுள்ள பிறப்பின்கண் செல்ல மாட்டான். ‡

---

(6) க்ஷேத்ரக்ஞன் தேகேந்திரிய முதலியவற்றிற்கு மேலாய், வேறாய், சேதன வடிவமா யிருப்பதால் பரமான்மாவாம்.

இவ்வறுவகைப் பொருள்களால் க்ஷேத்ரக்ஞனது உண்மை வடிவம் நன்கு விளங்குவதாம்.

க்ஷேத்ரக்ஞன் அநுமந்தா - பர்த்தா - போக்தா என்னும் வியவகாரத்தால் பந்தமுடையவன் போலவும், உபதிருஷ்டா - மகேசுவரன் - பரமான்மா என்னும் வியவகாரத்தால் பந்தமில்லாதவன் போலவும் விளங்குகின்றான்; உண்மையி லவனுக் கிவ்விரண்டு மில்லையாம்.

‡ க்ஷேத்திரத்தையும் க்ஷேத்ரக்ஞனையு முள்ளவா றுணர்தலாவது க்ஷேத்தி ரத்தை மித்தையென்றும் க்ஷேத்ரக்ஞனை நானென்றும் சந்தேக விபரீதமின்றி அறிதலாம். இவ்வாறுணர்ந்தவன் சாஸ்திர விதியை யனுசரியா தொழுகினும் பிறப்பின்கண் செல்லமாட்டா னென்றமையால், சாஸ்திர விதியை யனுசரித் தொழுகுகின்றவன் பிறப்பின்கண் செல்லமாட்டா னென்பதற்குத்தடையொன்று மில்லையாம். க்ஷேத்ரக்ஞனாகிய நான் பிரஹ்ம வடிவமாக விருக்கின்றேன், க்ஷேத்திரம் என்னிடத்துக் கயிற்றின்கண் பாம்புபோல மித்தையா யிருக்கின்ற தென்று குரு சாஸ்திர உபதேசவாயிலாக உள்ளவா றுணர்ந்தவனுக்குப் பிறப்பின் காரணமாயுள்ள அஞ்ஞானம் விளக்கின்முன் இருள்போலக் கெட்டொழிந்தமை யின், அவனுக்குப் பிறப்பு வருவ தில்லையாம்.

தேவராஜனாய இந்திரன் பிரஹ்மஞானியா யிருந்தமையால், சாஸ்திரவிதி யைக் கடந்து, தேவர்களுக்குக் கேடு சூழ்ந்த விசுவரூபனென்னும் பெயருடைய தனது புரோகிதனையும் கூடா வொழுக்கமுள்ள சந்நியாசிகள் பலரையும் கொன் றும், கொலைப்பாவத்திற் குரியவனாகா னாயின னென்று புராணங் கூறுவதிங் குணர்தற்பாலதாம்.

தாம் முன்பு அருளிச்செய்த பலத்தோடுகூடிய ஆத்ம ஞானத்தில் அதிகாரிகளின் பேதத்தால் சாதன விகற்பங்களைப் பகவான் கூறல்.

அருச்சுன! பிரஹ்மன் முதல் ஸ்தம்ப மீறுயுள்ள சரீரமனைத்தி லும் நிறைந்துள்ள பிரத்யக் சைதன்யம் (உள்ளுணர்வு) என்னும் இவ் வாத்மாவைச் சில அதிகாரிகள் தியான வடிவ ஆத்ம சிந்தனத்தால் தமது புத்தியின்கண்ணே அறிவர்; சில அதிகாரிகள் அறிதற்கரிய சாங்கிய யோக மார்க்கத்தால் சர்வ வியாபகமாய் நிற்கத் தமது புத்தி யின்கண்ணே தியானத்தி னுற்பத்தி வாயிலாக அறிவர்; சில அதி காரிகள் தமது வருணச் சிரமத்திற்குரிய வேத விகித கருமங்களைப் பயனோக்காது ஈசுரார்ப்பணமாகச் செய்வதா லறிவர்.

தியானயோகம்-சாங்கியயோகம்-கருமயோக மென்னும் பெருமை பொருந்திய இம்மூன்று சாதனங்களாலும் பிரத்தியக் சைதன்யமென்னு மிவ்வாத்மாவை யறிதற்கு விசாலமான புத்தியில்லாத சில அதிகாரி கள் பரம காருண்யனான ஓராசாரியன் இதுவே தெய்வம், இதனை நீ இவ்வாறு சிந்தனைசெய்தல் வேண்டுமென்று உபதேசித்த ஒரு பொரு ளையே மிகு சிரத்தையோடு சிந்தனை செய்வார்கள்; அச் சிந்தனையின் மகிமையால் அவரும் பிறவியை யடையார். ¶

¶ இங்குக் கூறிய நான்கதிகாரிகளுள் முதலாவதாகக் கூறிய தியானயோகி கள் உத்தம அதிகாரிக ளாவர்; இரண்டாவதாகக் கூறிய சாங்கிய யோகிகள் மத்தியம அதிகாரிக ளாவர்; மூன்றாவதாகக் கூறிய கரும யோகிகள் மந்த அதிகாரிக ளாவர்; நான்காவதாகக் கூறியவர் மந்ததர அதிகாரிக ளாவர்.

தியானயோகமாவது உலகசிந்தனையில்லாது தைல தாரைபோலத் தொடர்ந் துள்ள ஆத்ம சிந்தனமாம். இது சிரவண - மனனங்களின் பலவடிவமான நிதித் தியாசனமாம்; உடல் பொறி முதலியவற்றின்க ணுள்ள ஆன்ம புத்தி வடிவ விபரீதபாவனையை யொழிப்பதாம். இந்தத் தியானயோக முடையார் தமது புத்தி யின்கண்ணே பிரத்யகாத்மாவைத் தியானமுடைய தம் மனத்தால் அறிவர்.

சாங்கிய யோகமாவது சிரவண மனன வடிவ ஆத்ம சிந்தனமாம். இச்சாங் கிய யோகமுடையார் தமது புத்தியின்கண்ணே பிரத்யகாத்மாவைச் சர்வ வியா பகமாகத் தியான யோகத்தின் உற்பத்திவாயிலாக அறிவர். சிரவணம் பிர மாணத்திலுள்ள சந்தேகத்தையும், மனனம் பிரமேயத்திலுள்ள சந்தேகத்தையும் ஒழிப்பனவாம். இங்குப் பிரமாணம் உபநிஷத்துக்களாம்; பிரமேயம் அவற்று லறியப்படும் பொருள்களாம்.

அதிஷ்டானப் பிரஹ்மத்தின் ஆசிரயமாய் அதனையே விஷயஞ் செய்வ (மறைப்ப) தாய அநிர்வசநீய அவித்தையினலே இச் சம்சார முண்டாயிற்று; ஆதலால், அவ்வதிஷ்டானப் பிரஹ்மத்தை விஷயஞ் செய்வ (அறிவ) தாய அகம் பிரஹ்மாஸ்மி (நான் பிரஹ்மமா யிருக்கின் றேன்) என்னும் பிரஹ்ம ஞானத்தாலே அவ் வஞ்ஞானம் நீங்கிய அதி காரி புருஷனுக்கு மோட்ச முண்டா மென்னு மர்த்தத்தை நிச்சயஞ் செய்தற் பொருட்டு இவ்வத்தியாய முடியு மளவும் சம்சாரத்தையும் அதனை நீக்குவதாய ஆன்ம ஞானத்தையும் விஸ்தாரமாகக் கூறத் தொடங்கிய பகவான் இப்போது யானென தென்னு மபிமானமே சம் சார காரணமா மென்று முன்னர்க் கூறியதையே விளக்கமாகக்கூறல்.

அருச்சுன! சீவர்கள் யாவரும் சராசர வடிவமாயுள்ள உடம்புக ளைத் தரித்துக்கொண்டு துன்ப மடைகின்றார்கள்; அவர்கள் சராசர

கருமயோகமாவது பயனேக்காமல் ஈசுவரார்ப்பணமாகச் செய்யும் தத்தம் வருணச்சிரமங்களுக்குரிய வேத விகித கருமங்களாம்; இந்த யோகமுடையார் தமது புத்தியின்கண்ணே சித்தசுத்தி - சிரவணம் - மனனம் - நிதித்தியாசன மென்பனவற்றி னுற்பத்தி வாயிலாகப் பிரத்யகாத்மாவை யறிவர்.

தியானயோகம் முதலியவற்ருல் பிரத்தியகாத்மாவை யறிதற்குரிய புத்தியில் லாதவர் தமது சற்குரு கூறிய உபதேசப்பொரு ளொன்றையே நம்பி, அதனையே சிந்தனைசெய்து வருவாராயின், அவரும் அதனல் பிரத்யக்காத்மாவை யறிந்து பிறப்பில்லாதவ ராவர். இவர்க்குச் சித்தசுத்தியின் பொருட்டுக் கருமங்களி னபேட்சையு மில்லையாம்; வேதங் கூறும் தத்துவத்தின்கண் திட நிச்சய மிருப்ப தால் சந்தேக நிவிர்த்தியின் பொருட்டுச் சிரவண மனனங்களி னபேட்சையு மில்லை யாம்.

தியானயோகம்-சாங்கியயோகம்- கருமயோகமென்னு மிம்மூன்றனுள், எதனை யும் மேற்கொண்டொழுகச் சாமர்த்திய மில்லாதவரும் பிறவியை யடையா ரென்ற மையால், தியான யோக முதலியவற்றை யுடையவர் பிறப்பை யடையா ரென்ப தற்கு யாதொரு தடையு மில்லையாம்.

பிரத்யக் ஆத்மாவை யறிதற்குத் தியானயோகம் காரணமாயும், தியான யோகத்திற்குச் சாங்கிய யோகம் காரணமாயும், சாங்கியயோகத்திற்குக் கரும யோகம் காரணமாயு மிருக்கின்றன வென்பதும், நான்காவதாகக் கூறிய சாதனம் தியானயோகமுதலிய மூன்றையும் தன்னுளடக்கிக்கொண் டிருக்கின்ற தென் பது மிங்குணர்தற் பாலனவாம்.

‡ *கற்பித வஸ்து இருத்தற்கும் விளங்குதற்கும் காரணமாயுள்ள யதார்த்த வஸ்து அதிஷ்டானமாம்.*

வடிவ உடம்புகளைத் தரித்துக்கொண்டு துன்ப மடைதலாகிய இவ் வெல்லாவற்றிற்குங் காரணம், அவர்கள் பொருந்துதற்கரிய க்ஷேத்திரம் இத்தன்மையது, க்ஷேத்ரக்ஞ னித்தன்மையன் என்று அவ்விரண்டனது வேற்றுமையை மாயா வசத்தால் விசாரித் தறியாதவோர் அவிவேகமேயாம்.*

சம்சார முண்டாதற்குக் காரணம் க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாகஞான மில்லாமையா மென்றருளிச் செய்த பகவான் இப்போது அச்சம்சார நிவிர்த்தியின் பொருட்டுப் பிரகிருதிக்கு வேறுயுள்ள ஆத்மாவைத் தரிசிக்கும் விதத்தைக் கூறல்.

அருச்சுன! க்ஷணந்தோறும் கெடு மியல்பினவாயுள்ள பிருதிவி முதலிய பூதந்தோறும் கெடாததாய், யாதொரு தோஷமு மில்லாது சமமாய் நிர் விகாரமா யிருக்கின்ற வேதப் பொருளான பரமேசுவர வடிவ மென்னும் ஆத்மாவைச் சர்வ பூதங்களிலும் ஏக வடிவமாய் யாதொரு வியவகாரமுமில்லாததா யிருப்பதென்று சாஸ்திர வாயிலாக அறிந்தவன் நல்லனவென்று கூறப்படுகின்ற அனைத்தையும் கடுவினள வாவது தவறு துணர்ந்தவ னுவன். †

ஆத்ம தரிசனத்தை அதன் பலத்தோடு பகவான் துதிசெய்தல்.

அருச்சுன! சராசர வடிவமா யுள்ள சர்வ பூதங்களிலும் சமமாய் நிறைந்திருக்கின்ற ஒருமைப்பொருளாய ஆத்மாவை அவ்வாறுக அறியும் அதிகாரி புருஷனே மரித்தும் ஜனித்தும் சுழலாதவாறு தன்

*சராசர வடிவமாகவுள்ள பொருளனைத்தும் க்ஷேத்திரத்திற்கும் க்ஷேத்ரக்ஞனுக்கு முள்ள சம்பந்தத்தாலுண்டா யிருக்கின்றன; இவ்விரண்டன் வேற்றுமையை உள்ளவாறு விசாரித்துணர்ந்தவர்க்கு ஜனன மரண வடிவச் சம்சார முண்டாவதில்லையா மென்பதிங் குணர்தற் பாலதாம். அஞ்ஞானமும் அதன் காரியமாய உலகும் க்ஷேத்திரமாம்; அதற்கு வேறுயும், அதனை விளக்குவதாயும், சுயம்பிரகாச பரமார்த்த சத்தாயும், அசங்க உதாசீனமாயும், ஒருதர்மமுமில்லாததாயுமுள்ள அத்துவீதிய சைதன்னியம் க்ஷேத்ரக்ஞனும். தனதுண்மை வடிவத்தின் ஞான மில்லாதவனுக்குச் சம்சார முண்டாகின்றது; தன துண்மை வடிவத்தின் ஞான முடையவனுக்குச் சம்சாரம் நாசமாகின்றதென்பது இங்கு முக்கியப் பொருளாம்.

† நல்லனவென்பது துக்க நிவிர்த்தி - சுகப் பிராப்தி முதலியனவாம்.

னைத் தன்னாலேயே மெய்யான மோட்ச கதியிலே செல்ல விடு கின்றான். †

(புண்ணிய பாவகருமங்களைச் செய்வதும் அவற்றின் பயனாய சுக துக்கங்களை யனுபவிப்பதுமாய்த் தேகந்தோறும் வெவ்வேறாயுள்ள ஆத்மாவைச் சர்வ பூதங்களிலும் ஏகமாய்க்காண்ட லெவ்வாறாமென்று அருச்சுனா! நீ வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

கொத்தாகிய மலர்களால் தொடுத்த மாலையையுடைய கிரீடத்தை யணிந்துள்ள அருச்சுனா! க்ஷேத்ரக்ஞனான புருஷன் அவிகாரி யென்றும், லௌகிக வைதிகமான கரும மனைத்தும் உடல் பொறி முதலிய வடிவமாகப் பரிணமித்துள்ள பிருகிருதியினு டனே சம்பந்த முடையன வென்றும் அவ்விரண்டனையும் சாஸ்திர விசார வாயிலாக உள்ளவா றுணர்ந்தவனே தவறுத லில்லாமல் உண் மையை யறிந்தவனாவன்.(அருச்சுனா! நீ ஆத்மா தன்னியல்பால் அகர்த் தாவாயினும், சரீரத்தோடு கூடி யிருத்தலால் கர்த்தாவாதல் கூடாதோ என்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன் கேட்கக் கடவாய்.)சரீரம் தனது சந்நிதான விசேஷத்தால் சர்வ கருமங்களையுஞ் செய்தாலும் ஆத்மா நிர்க்குணமா யிருத்தலின், அக்கருமங்களோடு சம் பந்த முறுவ தில்லையாம்.*

---

† ஒருமைப்பொருள்—யாதொரு சம்பந்தமுமின்றித் தான்மாத்திரமா யுள்ள பொருள்.

தமது நிஜவடிவ ஆத்மாவை உள்ளவா றுணராதவர் தம்மைத்தாமே கெடுக் குந் தன்மைய ராகின்றனர்; உணர்ந்தவர் தம்மைத்தாமே கடைத்தேறச் செய்யுந் தன்மைய ராகின்றன ரென்பதிங் குணர்தற்பாலதாம்.

* ஆகாயம் ஒன்றாயிருத்தலின், தன்னோடு தான் வேற்றுமையுடையதா யிருப்ப தில்லையாம்; ஆனால், கட பட முதலிய உபாதிகளால் வேற்றுமை யுடையது போல விளங்குகின்றது; அங்ஙனமே, ஆத்மாவும் ஒன்றாயிருத்தலின், தன்னோடு தான் வேற்றுமை யுடையதா யிருப்ப தில்லையாம்; ஆனால், மானுடசரீரம் மிருக சரீர முதலிய உபாதிகளால் வேற்றுமை யுடையதுபோல விளங்குகின்றது; அங் ஙன மிருத்தலால், அதற்குக் கருத்திருத்தன்மை முதலியனவு மில்லையாமென் பதும், ஆத்மா அவிகாரியாதலால் ஒரு கருமத்தையும் செய்வதில்லை, செய்யின் விகாரியாம்; நிர்க்குணமா யிருத்தலின், கருமங்களோடு கூடுவதில்லை; அதனால்,

பகவான் ஆன்மா சரீரத்தின்க ணிருப்பினும் அசங்கமேயாம் ; அதனுல், அச்சரீர கருமங்களோடு சம்பந்தமடைவ தில்லையா மென்று முன்னர்க் கூறியதைத் திருஷ்டாந்த வாயிலாகக் கூறல்.

அருச்சுனு ! ஆராய்ந்தறியத்தக்க ஆகாயம் எவ்விடத்தும் நீங்குத லில்லாது வியாபித் திருப்பினும், தனது அசங்கத் தன்மையால் பிற பொருளோடு சம்பந்தமடைவ தில்லையாம்; . கூறிய இவ்வாகாயம் போல, நிலைபெற்ற ஆத்மாவும் எல்லா உடம்புகளிலும் வியாபித் திருப்பினும், தனது அசங்கத்தன்மையால் அவ்வுடம்புகளோடு சம்பந்த மடைவ தில்லையாம் ; அதனுல், அவ்வுடம்புகளின் கருமங்களோடும் சம்பந்தமடைவ தில்லையாம். *

பகவான் ஆத்மா அசங்கத் தன்மையா லன்றிப் பிரகாச வடிவமாக விருப்பதாலும் எதனேடும் சம்பந்தமில்லா திருக்கின்றதென்பதைத் திருஷ்டாந்த வாயிலாகக் கூறல்.

அருச்சுனு ! சூரியன் தானெருவனுகியே யிருந்தும் இவ்வுலகத் தின்கண் எப்பொருளிலும் பொருந்தியுள்ள இருளை நீக்கி அப்பொருளை விளங்கச் செய்வதுபோல, யான் முன்னர்ப் புகழ்ந்து கூறிய ஆத்மாவும் தானென்றுகியே யிருந்தும் தம்மைப் படைப்பதற்கு ஆத்மா தவிர வேறு யாவரும் முன்னில்லாதுள்ள சராசர வடிவமாயுள்ள தேக மனைத்திலும் வியாபித்து, அவற்றை விளங்கச் செய்கின்றது. †

அகர்த்தாவாம் என்பதும், ஆத்மாவின் சந்நிதானத்திலே உடல் பொறி முதலியன தத்தம் வியாபாரங்களைச் செய்கின்றன ; ஆத்மா ஒன்றும் செய்வதில்லை யென்பது மிங்குணர்தற் பாலனவாம்.

* ஆகாயம் நல்லனவும் தீயனவுமாய கடபட முதலிய மூர்த்தத் திரவியமனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித் திருப்பினும், தனது அசங்கத்தன்மையால் அத்திரவியங்களோடும் அவற்றின் நறு நாற்றம் தீ நாற்ற முதலியவற்ருேடும் கூடா திருப்பது போல, ஆத்மாவும் நல்லனவும் தீயனவுமாய தேவ - மநுட - பசு முதலிய தேகமனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்திருப்பினும், தனது அசங்கத் தன்மையால் அத்தேகங்களோடும் அவற்றின் கருமங்ளோடும் கூடா திருக்கின்றதென்பதிங் குணர்தற்பாலதாம். மூர்த்தத் திரவியம் - கண்டப்பொருள்; அசங்கம் - பற்றிலாதது.

† ஒன்றுகவேயுள்ள சூரியன் உடம்பு முதலிய எல்லாப் பொருள்களையும் விளங்கச் செய்கின்ருன்; ஆனுல், அவற்றின் கருமங்களோடு சம்பந்த முறுவ

பார்த்தன் (அருச்சுனன்)தேரின்மேல் நின்றே வேத சிரத்தின்மேலிருக்குஞ் சீரோனுகிய பகவான் இப் பதின்மூன்றுவது அத்தியாயப்பொருளை அதன் பயனேடு கூறி முடித்தல்.

அருச்சுன ! ஆராயுமிடத்துத் தேகேந்திரிய முதலிய அனைத்திற்கும் அதீதமாய் நிற்கின்ற க்ஷேத்ரக்ஞ னென்னும் ஆத்மாவோடு க்ஷேத்திர மென்னும் உடம்பையும் அவ்வுடம்பிற் குரிய பெயரோடு பிறப்பு - இறப்பு-மூப்பு என்னு மிவற்றையும் வேருக உலகத்தில் ஞானக்கண்ணு லறிகின்றவர் சர்வ துக்க நிவிர்த்தி - பரமாநந்தப் பிராப்தி வடிவ மோட்சத்தை யடைவர். இதனை நீ உணர்ந்து, அதற் கேற்றவா ெருழுகுவாயாக வென்றருளிச் செய்தனர். ‡

13 - க்ஷேத்திர க்ஷேத்ரக்ஞ விபாகயோக அத்தியாயம் முற்றிற்று.

---

14 - குணத்ரய விபாகயோக அத்தியாயம்.

13-வது அத்தியாயத்தில் பகவான் க்ஷேத்திரம் க்ஷேத்திரக்ஞ னென்னும் இரண்டனது சம்பந்தத்தால் சர்வ தாவர சங்கம பூதோற் பத்தியா மென்றருளிச் செய்து, அதனுல் ஈசுவரனை அங்கீகரியாத நிரீசுர சாங்கிய மதத்தை மறுத்து, அந்த க்ஷேத்திரம் க்ஷேத்ரக்ஞ னென்னு மிரண்டனது சம்பந்தம் ஈசுவரனது வசமா யிருப்பதா மென் றும், அபிமான ரூப குண சங்கமே ஜன்ம காரணமா மென்றும், அருளிச் செய்தமையின், எந்தக் குணம் எவ்வாறு சங்கமாம் ? அந்தக் குணம் யாது ? அஃதெவ்வாறு சீவனைப் பந்திக்கின்றது ? என்பதும்,

---

தில்லையாம்; அப்பொருள்களின் வேற்றுமையால் தான் வேற்றுமை யடைவது மில்லையாம். அங்ஙனமே, ஒன்றுகவேயுள்ள ஆத்மாவும் சராசர வடிவமாயுள்ள தேக மனைத்தையும் விளங்கச் செய்கின்றது; ஆனல், அவற்றின் தருமங்களோடு சம்பந்த முறுவதில்லையாம்; அத்தேகங்களின் வேற்றுமையால் தான் வேற்றுமை யடைவது மில்லையா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

‡ க்ஷேத்திரத்தையும் க்ஷேத்திரக்ஞனையும் ஞானக் கண்ணுல் பிரித்தறிபவர் மோட்சமடைவ ரென்பதாம். பிரித்தறிதலாவது க்ஷேத்திரம் - சடமாயும் கர்த்தா வாயும் விகாரியாயும் கண்டமாயு மிருக்கின்ற தென்றும், க்ஷேத்ரக்ஞன் - சேதன மாயும் அகர்த்தாவாயும் அவிகாரியாயும் அகண்டமாயு மிருக்கின்றுனென்றும் அவ்விரண்டனையு' முணர்தலாம்.

அதிகாரி புருஷனுக்குச் சத்துவ முதலிய முக்குணங்களி னின்றும் எவ்வாற்றால் முத்தியா மென்பதும், அந்த முக்த புருஷனது இலக்கண மித்தன்மைய தென்பதும் அத்தியாவசியகமாகக் கூறுதற் குரியன வாம். இவ்வர்த்த மனைத்தையும் விரிவாக அருளிச் செய்தற் பொருட்டுப் பகவான் இப்பதினான்காவது அத்தியாயத்தைக் கூறுகின்றா ரென்க.

"செய்ய மாமலர் மேலுறை செல்வியும், வைய மாமட வாளு மகிழ்ந்ததோள், ஐயன் மெய்யையன் பாலடி யோமெலாம், உய்ய மீள வுரைக்கத் தொடங்கினான்":—

பகவான் தாம்கூறும் பொருளில் அருச்சுனனுக்குப்
பிரியமுண்டாகும் பொருட்டு, அதனைத் துதிசெய்தல்.

வளப்பம் பொருந்திய தோள்களையும் கிரீடத்தையு முடைய அருச்சுனா ! யான் சொல்லத் தொடங்கிய அந்த ஞானத்தின் நிச்சயம் யக்கிய - தான முதலிய ஞானத்தின் பகிரங்க சாதன மனைத்தி னுள்ளும் உத்தமமானதாம் ; துன்பம் நீங்கிய தவ சிரேஷ்டர்க்குத் தத்துவ ஞானமா யிருப்பதாம். §

பகவான் சாதன வடிவ ஞானத்தை யடைந்தவர்க்கு
மோட்ச வடிவப் பரம சித்தி தவறா துண்டாமெனக் கூறல்.

அருச்சுனா ! இவ்வாறாய தன்மையை யுடைய ஞானத்தினை இயல்பாகவே அனுஷ்டிப்பதன் வாயிலாக அத்விதீய நிர்க்குண சொரூபமாயுள்ள என்னை அத்தியந்தம் அபேதமாக அடைந்த வித்வான்கள் மீண்டும் இவ்வுலகின்கண் வந்து பிறவார் ; இறவார். அருச்சுனா ! நீ இந்த ஞானத்தின் தன்மை யாதென்று வினவுவாயாயின், அதனையும் கூறுகின்றேன், கேட்கக் கடவாய். ¶

---

§ தத்துவஞானமாவது ஆத்மாவைப் பிரஹ்மமாக அறியும் ஞானமாம். பகவான் எந்தச் சாதன வடிவ ஞானத்தைச் சிரத்தையோடும் பத்தியோடும் அனுஷ்டித்து மனன சீலரென்னு முனிவர் சர்வ துக்க நிவிர்த்தி - பரமானந்தப் பிராப்தி வடிவ மோட்ச மடைந்தாரோ அதனை அருச்சுனா! உனக்குக் கூறுகின்றேனென்று தொடங்கி, அதனைத் துதிசெய்தாரென்பதிங் குணர்தற் பாலதாம்.

¶ இச்சாதனவடிவஞானத்தைச்சிரத்தையோடும் பத்தியோடு மனுஷ்டித்து, அதனால் அத்விதீய நிர்க்குண சொரூபமாயுள்ள என்னை அத்தியந்தம் அபேதமா யடைந்தவர் அஃதாவது யானே அத்விதீய நிர்க்குணப் பிரஹ்ம சொரூபனென்று

தத்துவ ஞானத்தைத் துதி செய்வது வாயிலாக, அதனைக் கேட்பதன் கண் அருச்சுனனை விருப்ப முடையவனுக்கிய பகவான் பரமேசுவரனது அதீனமாயுள்ள பிரகிருதி-புருஷர்களே சர்வ பூதங்களி னுற்பத்திக்கும் காரணமாம்; நிரீசுர சாங்கிய மதங்கூறுவதுபோலச் சுவ தந்திரமாக அவ்விரண்டற்கும் சர்வ பூதங்களி னுற்பத் திக்கும் காரணமாத லில்லையா மென்று கூறல். *

பெருந் தவத்தை யுடைய அருச்சுன ! சத்துவம் - இராசதம் - தாமத மென்னும் குண மூன்றாலும் பேதமாகப் பரிணமத்தை யடையும் கருப்பாதானத்திற்கு ஸ்தானமான எனது மாயையின் கண்ணே உலகத்தைப் படைப்பா மென்னும் விருப்பத்தால் யான் சங்கற்பவடிவமான கருப்பத்தை வைப்பேன்; அக்கருப்பாதானத்தாலேயே பூத மனைத்து முண்டாகின்றன. ¶

தமது ஆத்மாவை அத்விதீய நிர்க்குணப் பிரஹ்ம சொரூபமாக உணர்ந்த வித்வான்கள், சிருஷ்டியிலும் உற்பத்தியாவ திலராவர்; சங்காரத்திலும் லயமடைவ திலராவரென் றருச்சுனனுக்குப் பகவான் கூறினரென்க.

* பிரகிருதி - க்ஷேத்திரம், புருஷன் - க்ஷேத்ரக்ஞன்.

¶ முக்குணவடிவ மாயை பரமேசுவரன் கருப்பாதானம் செய்யும் ஸ்தானமாம்; அதனிடத்துப் பரமேசுவரன் யானுலகத்தைப் படைப்பேனென்று சங்கற்பரூப கருப்பத்தை வைக்கின்றார்; அக்கருப்பாதானத்தாலேயே சர்வ பூதங்களு முண்டாகின்றனவென்க.

இவ்வுலகத்தின்கண் பிதா ஒருவன் புண்ணிய பாவங்களோடு கூடியவனும் நெல் - கோதுமை முதலிய ஆகாரவடிவமாகத் தன்னிடத்து லீனமடைந்துள்ளவனுமான புத்திரனை ஸ்தூலசரீரத்தோடு சம்பந்தமுடையவனுக்குதற் பொருட்டு, தனது மனைவியின் யோனியில் வீரியத்தை விடுவது வாயிலாகக் கருப்பாதானஞ் செய்கின்றான்; அதனால், அப்புத்திரன் ஸ்தூலசரீர சம்பந்தமுடையவனாகின்றான்; அச்சரீர சம்பந்தத்தின் பொருட்டு அவனுக்கு இடையே கலிலம் (கலங்குதல்), புத்புதம் (குமிழி) முதலிய பல அவஸ்தைக ளுண்டாகின்றன; அங்ஙனமே, பிரளயகாலத்தில் பரமேசுவரர் தம்மிடத்தில் லீனமாயிருந்த அவித்தை-காம-கருமங்களையுடைய க்ஷேத்ரக்ஞரென்னும் சீவர்களைச் சிருஷ்டி காலத்தில் காரிய காரணசங்காத வடிவப் போக்கிய க்ஷேத்திரத்தோடு சம்பந்தமுண்டயவராக்குதற் பொருட்டு மாயாவடிவ யோனியில் சிதாபாசவடிவ வீரியத்தை விடுவது வாயிலாக மாயா விருத்தி வடிவக் கருப்பத்தை வைக்கின்றார்; அந்தச்சரீர

(அருச்சுன! நீ தேவர் முதலியோரது சரீரங்கட்கு வேறு காரணங்களு மிருத்தலின், மாயாரூப யோனியில் தேவரீர் செய்த கருப்பாதானத்தால் சர்வ பூதங்களி னுற்பத்தியும் எவ்வாறு கூடுமென்று வினவுதல்கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுன! முற்கூறிய விதமாக இவ்வுலகத்தின்கண் தேவர் பிதுரர் மநுடர் பசு முதலிய சர்வ யோனிகளிலும் உண்டான சரீரமனைத்தையும் உண்டாக்கும் கருப்பாதான கருத்தாவாய பிதா பரமேசுவரனான நானே யாவன்; அச்சரீரங்களைப்பெற்று வளர்க்கின்ற மாதா என்னுடைய அவ்வியாகிருதமென்னும் அந்த மாயையேயாம். §

பரமேசுவரனது அதீனமாயுள்ள பிரகிருதி புருஷரது வாயிலாகப் பிராணிகளி னுற்பத்தியை நிரூபணஞ் செய்த பகவான் பிரகிருதியின் சம்பந்தத்தால் புருஷனுக்குச் சம்சார வடிவ அவஸ்தை யுண்டாகின்ற தென்பதைக் கூறல்.

அருச்சுன! முன்னர் யான் குணமாக அங்கீகரித்துக் கூறிய மூன்றும் ஈசுவரனது மாயை யென்னும் பிருகிருதியினின்று முண்டாயிருப்பனவாம். அவை அவ்வியயமாயுள்ள சீவான்மாவைப் பிடித்து இத் தேகத்தின்கண்ணே உறுதியாகப் பந்தித்திருக்கின்றன. இனி அக் குணங்களின் பெயரையும் அவை சீவான்மாவைப் பந்திக்கும் பிரகாரத்தையும் நீ அறியுமாறு கூறுகின்றனன்; அவற்றைக் கேட்பாயாக. †

சம்பந்தத்தின் பொருட்டு இடையே ஆகாய முதலிய பூதங்களினுற்பத்தி உண்டாகின்றது; அந்த மாயாரூப யோனியினிடத்துப் பரமேசுவரராற் செய்யப்பட்ட கருப்பாதானத்தினாலேயே சர்வபூதங்களு முண்டாகின்றன வென்பதிங் குணர்தற்பாலதாம்.

§ தேவர் - பிதுரர் - மநுடர் - பசுமுதலிய சரீரங்கட்கு லோகப் பிரசித்தமாயுள்ள காரண மனைத்தும் மாயையின் அவஸ்தா விசேஷமாமென்பதிங் குணர்தற்பாலதாம்.

† வீடு முதலிய அசேதனப் பொருள்கள் சேதனனாகிய வீட்டிலுள்ள புருஷன் பொருட்டேயாம்; அங்ஙனமே, சத்துவ முதலிய முக் குணங்களும் அசேதனமா யிருப்பதால் புருஷன் பொருட்டேயாம்; அதனால், அவை எப்போதும் சுதந்தரமாக விருப்பன வன்றாமென்பதும், சத்துவ முதலிய குணங்கள் மாயா

பகவான் அக்குணங்களின் பெயர் இவையெனக் கூறல்.

அருச்சுனா ! சீவான்மாவைப் பந்தித்து நிற்கும் குணங்கள் சத்துவம் - இராசதம் - தாமத மெனப் பொருந்தி வந்த பெயருடையனவாம்; சுகம் துக்கம் - இலாபம் நஷ்டம் முதலிய எவ்வகையன வாய துவந்துவங்களையும் சீவான்மாவிற்குத் தருவனவாம். அக்குணங்களின் செயலினது வேறுபாட்டைக் கூறுகின்றேன், அதனை நீ கேட்பாயாக. ‡

பகவான் சத்துவகுணத்தின் சொரூபத்தையும் அது சீவான்மாவைப் பந்திக்கும் பிரகாரத்தையும் கூறல்.

அருச்சுனா ! சத்துவ குணம் நிர்மலமா யிருப்பதால் ஸ்படிக மணிபோலப் பிரகாசமா யிருப்பதாம்; சீவான்மாவிற்கு அநுகூல மான சிறந்த ஞானத்தை யுண்டாக்குவதாம்; எப்போதும் சுகம் வெளியாதற்குக் காரணமா யிருப்ப தல்லாமல் துக்கத்தைச் சிறிதாகவேனும் தருவதில்லாததாம். ¶

வடிவப் பிரகிருதியினும் வேறாக விருப்பன வன்றாம்; அவை பிரகிருதியின் வடிவமேயா மென்பதும், மாயா வடிவப் பிரகிருதியி னின்றும் சத்துவ முதலிய குணங்கள் தம்முள் அங்காங்கித் தன்மையாகவும் விஷமத் தன்மையாகவும் பரிணாம மடைதலே பிரகிருதியி னின்றும் சத்துவ முதலிய குணங்க ளுண்டாதலா மென்பதும், நீரில் பிரதிபிம்பித்துள்ள சூரியனை அந்நீர் காற்றின் வாயிலாக அசை வுடையதாகக் காட்டுதல்போல, அவித்தையில் பிரதிபிம்பித்துள்ள சேதனத்தை அது சத்துவ முதலிய குணங்களின் வாயிலாகச் சம்சார முடையது போலக் காட்டுகின்றது; அதுவே சீவான்மாவைப் பந்திப்பதாம்; உண்மையில் சேதனத்திற்குப் பந்த மில்லையா மென்பது மிங்குணர்தற் பாலனவாம்.

அவ்வியயம் - சனனமரண முதலிய விகாரங்க ளில்லாமை. அங்கம் - காரணம்; அங்கி - காரியம். விஷமம்-வேறுபாடு.

‡ துவந்துவம்-இருமை. அந்தக்கரணத்தின் தருமமான சுக துக்க முதலிய துவந்துவங்கள் பிரகிருதியின் குணமென்னும் சத்துவ முதலியவற்றால் சீவான்மாவினிடத்துத் தோன்றுகின்றன வென்பதிங் குணர்தற்பாலதாம்.

¶ சத்துவ குணம் சீவாத்மாவிற்கு ஞானத்தையும் சுகத்தையும் தருவது வாயிலாக அதனைப் பந்தமுறச் செய்கின்ற தென்பதிங் குணர்தற் பாலதாம். இங்குக் கூறிய ஞானம் சுகமென்பன ஆன்மாவின் சொரூபமான ஞானமும் சுகமு மன்றாம்; அந்தக்கரணத்தின் பரிணாமமான ஞானமும் சுகமுமாம். பரிணாமம்-திரிபு.

பகவான் இராசத குணத்தின் சொரூபத்தையும் அது சீவான்மாவைப் பந்திக்கும் பிரகாரத்தையும் கூறல்.

அருச்சுனா! இராசத குணம் திருஷ்ணை-ஆசங்க மென்னு மிரண்டையு முண்டாக்குவதால் இராகவடிவமாக விருப்பதாம்; காவிக்கல் போன்று செந்நிற முடையதாம்; மதி மயக்கஞ் செய்யும் லௌகிக-வைதிக கருமங்களோடு சீவான்மாவைப் பந்திப்பதற்குக் காரணமா யிருப்பதாம். *

பகவான் தாமத குணத்தின் சொரூபத்தையும் அது சீவான்மாவைப் பந்திக்கும் பிரகாரத்தையும் கூறல்.

அருச்சுனா! தாமத குணம் கறுநிற முடையதாய்ப் பிரமாதமும், குற்றமில்லாத நல்லொழுக்கங்களை யிகழாநிற்கும் ஆலசியமும், நித்திரையும் என்னுமிவற்றால் திடமாகச் சீவான்மாவைப் பந்தித்து வருத்துவதாம். †

பகவான் சத்துவ - இராசத - தாமதகுண வியாபாரங்களைத் தொகுத்துக் கூறல்.

பூமியின்கண் நிறைந்த புகழையுடைய அருச்சுனா! சீவனை யான் முன்னர்க் கூறிய சத்துவகுணம் சுகத்திற் பொருந்தச் செய்வதாம்; இராசத குணம் லௌகிக - வைதிக கருமங்களிற் பொருந்தச்

---

* கிடையாத பொருள் கிடைத்தல் வேண்டுமென்னும்விருப்பம் திருஷ்ணையாம்; கிடைத்த பொருளிலுள்ள விருப்பம் ஆசங்கமாம்; சப்த பரிச முதலிய விஷயங்களி லுண்டாகும் பிரியம் இராகமாம்.

உண்மையில் அகர்த்தாவாயுள்ள புருஷனை இராசத குணம் திருஷ்ணை-ஆசங்க மென்பனவற்றை யுண்டாக்குவது வாயிலாகச் சகல கருமங்களிலும் விருப்பமுடையவனாகச் செய்வதே அது சீவான்மாவைப் பந்தமுறச் செய்வதா மென்பதிங் குணர்தற் பாலதாம்.

† பொருள்களைப் பிரித்தறியுஞ் சாமர்த்திய மில்லாமை பிரமாதமாம்; சன்மார்க்கத்திலொழுக முயற்சி செய்தற்கு வலியின்மை ஆலசியமாம்; நித்திரை தூக்கமாம். தேகாபிமானிகளா யுள்ள சர்வ சீவர்க்கும் அவிவேக வடிவத்தால் விபரீத புத்தியை யுண்டாக்கும் தாமத குணம் அவர்களைப் பிரமாதம் - ஆலசியம் - நித்திரை யென்பனவற்றால் பந்திப்பதே அது சீவான்மாவைப் பந்தமுறச்செய்வதா மென்பதிங் குணர்தற் பாலதாம்.

செய்வதாம்; தாமத குணம் அவனுக்குப் பிரமாதத்தைச் செய்து, மறைப்பு வடிவமாய் நல்லோ ரிணக்கத்தா லுண்டாய ஞானத்தை மறைப்பதாம். ‡

(அருச்சுனா! நீ சத்துவ முதலிய குணங்கள் தத்தங் காரியங்களை யெக்காலத்தில் செய்கின்றன வென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுனா! சீவர்களின் புண்ணிய பாவமென்னும் அதிர்ஷ்ட வசத்தால், சத்துவகுணம் (எழுந்து) இராசத குணம் தாமத குண மிரண்டையும் ஓங்காவா றடக்கி விருத்தி யடையும்; தாமத குணம் விருத்தி யடையுமாயின், இராசத குணமும் சத்துவ குணமும் அடங் கிப் போவனவாம்; இராசத குணம் விருத்தி யடையுமாயின், சத்துவ குணமும் தாமதகுணமும் அடங்கிப் போவனவாம். இங்ஙனம் அம் மூக் குணங்களுள் இரண்டு குண மடங்கி நிற்க ஒருகுணம் மேம்பட்டு நிற்பதாம்; இவ்வாறு மேம்பட்டு நிற்கும்போது அக் குணங்கள் தத் தங் காரியங்களைச் செய்கின்றன.

புருஷன் சத்துவ முதலிய குணங்களின் விருத்தியை யறிந்தா லல்லது அவற்றை நீக்குதல் முடியாதாகலின், விருத்தியடைந்துள்ள அக்குணங்களின் இலிங்கத்தை (அடையாளத்தை)ப் பகவான் கூறல்.

அருச்சுனா! எப்போது சமமாய்ச் சுரோத்திரிய முதலிய சர்வ இந்திரியங்களிலும் சிறந்த ஞான வடிவப் பிரகாச முண்டாகின்றதோ அப்போது சத்துவ குணம் விருத்தியடைந் திருப்பதாம்; தாங்குதற் கரிய பிரவிர்த்தி - ஆரம்பம் - கருமமென்பனவற்றை யுண்டாக்கிக் கொண்டு, புருஷனை அவற்றில் செலுத்தி, ஆசை யுண்டா யதிகரிக்க

‡ தேகாபிமானியாய சீவனைச் சத்துவ குணம் மேம்பட்ட போது துக்க காரணத்தை யழுந்தச்செய்து சுகத்திற் செலுத்துகின்றது; இராசத குணம் மேம் பட்ட போது சுக காரணத்தை யழுந்தச் செய்து, லௌகிக - வைதிக கருமங் களிற் செலுத்துகின்றது; தாமத குணம் மேம்பட்டபோது நல்லோ ரிணக்கத்தா லுண்டாய ஞானத்தை மறைத்துப் பிரமாதத்திற் செலுத்துகின்ற தென்க. பிர மாதம்-அவசியமாக அறிவதற்குரியதை அறியாமையாம்.

உலோபம் வந்தடைந்தபோது இராசத குணம் மிக விருத்தி யடைந்திருப்பதாம்; இவற்றை நீ அறியக்கடவாய். ‡

அருச்சுனா! யாதாவதொன்றனை இது தக்கது, தகாததென்று தான் அறியாத காலத்திலும், எவ்வகையாயுள்ள கருமங்களிலும் முயற்சி செய்யாதுள்ள காலத்திலும், மெய்ம்மயக்கத்துடனே நித்திரை வந்த காலத்திலும் தாமத குணம் விருத்தியடைந் திருக்கின்றதென்று நீ அறியக்கடவாய். (மெய்ம்மயக்கம் - தேகநினைப்பில்லாமை)

மரண காலத்தில் சத்துவ முதலிய முக்குணங்களில் எக் குணம் விருத்தி யடைந் திருக்கின்றதோ அக் குணத்திற் கேற்றவாறு சீவர்க்குப் பிறப்புண்டாகின்றதெனல்.

அருச்சுனா! மேலாய சத்துவ குணம் விருத்தியடைந்தபோது இறந்தவர் தேவ யோனிகளிலே பிறப்பர்; இராசத குணம் விருத்தி யடைந்தபோது இறந்தவர் மானுடயோனிகளிலேபிறப்பர்; மிகுதியாக வெழுகின்ற தாமத குணம் விருத்தி யடைந்தபோது இறந்தவர் பசு முதலிய விலங்கு யோனிகளிலே பிறப்பர். உனக்குச் சம்மதமாக இக் குணங்களின் பயன்களையும் விளங்கக் கூறுகின்றேன்; இவற்றையும் நீ அறியக்கடவாய்.

---

‡ சுரோத்திர முதலிய இந்திரியங்களில் கடபடமுதலிய விஷயங்களை அறியும் ஞான வடிவப் பிரகாச முண்டாமாயின், அதனால் சத்துவ குணம் விருத்தி யடைந்திருக்கின்ற தென்றும், உலோப முதலியன உண்டாமாயின், அவற்றால் இராசத குணம் விருத்தி யடைந்திருக்கின்ற தென்று முணர்தல் வேண்டுமென்க. நெருப்புண் டென்பதை யறிதற்குப் புகை ஞானம் சிறந்த அடையாளமா யிருத்தல்போல, சத்துவ குணம் விருத்தி யடைந்திருக்கின்ற தென்றுணர்வதற்கு ஞானப் பிரகாசமும், இராசத குணம் விருத்தியடைந் திருக்கின்ற தென்றுணர்வதற்கு உலோப முதலியனவும் சிறந்த அடையாளமா யிருக்கின்றன வென்பதாம்.

ஞான வடிவப் பிரகாசம்-சப்த முதலிய விஷயங்களின் வடிவமாய புத்தியாம். பிரவிர்த்தி-இடை விடாத முயற்சியாம்; கருமம்-லௌகிக வைதிக கருமங்களாம்; ஆரம்பம்-அக்கருமங்களைச் செய்யத் தொடங்கலாம். உலோபம்-பெரும்பொருள்கள் கிடைத்திருப்பினும், மேலும் மேலும் அவை கிடைக்க வேண்டு மென்னும் விருப்பமாம்.

சத்துவ முதலிய குணங்கள் தத்தம் தருமானுசாரவாயிலாக விசித்திரப் பயன் தருவதற்குக் காரணமா யிருத்தலைப் பகவான் தொகுத்துக் கூறல்.

அருச்சுனா! அடைதற்கரிய சத்துவ குண தருமத்தின் பயன் சித்தம் நிர்மலமாதலாம்; இராசத குண தருமத்தின் பயன் சீவன் பெருந் துன்பத்தை யனுபவித்தலாம்; தாமத குண தருமத்தின் பயன் அவனுக்குப் பேதைமை யுண்டாதலாம். முற்கூறிய கிரமப்படியே அதிர்ஷ்ட வசத்தாற் பொருந்திய இம் மூன்று குணங்களாலும் சீவரனைவர்க்கும் முறையே சுரோத்திர முதலிய இந்திரியங்களின் வாயிலாக வரும் சிறந்த ஞானமும் உலோபமும் அஞ்ஞானமு மென்னு மிவை யுண்டாவனவாம்.†

சத்துவ முதலிய முக்குணங்களின் பயன்களை உத்தம - மத்திம - அதம பாவமாகப் பகவான் கூறல்.

அருச்சுனா! சத்துவகுணத்தைப்பிரதானமாக வுடையவர் பிரஹ்மலோக மீறுயுள்ள உத்தம லோகத்தை யடைவர்; தாமதகுணத்தைப் பிரதானமாக வுடையவர் பசு முதலிய யோனிகளின்கண்ணே பிறப்பர்; இராசதகுணத்தைப் பிரதானமாக வுடையவர் இவ்விருவகைப் பிறப்பிற்கும் நடுவிலுள்ள மாநுடப் பிறவி யெடுத்து வாழ்வர். (அருச்சுனா! யானிதுகாறும் பிரகிருதியின் குண சம்பந்தத்தால் சீவர்க்குச் சம்சார முண்டாவதைக் கூறினேன்; இப்போது பிரகிருதி புருஷ விவேகத்தால் அவர்க்கு மோட்சமுண்டாமென்பதைக் கூறுகின்றேன்; அதனை நீ கவனமாகக் கேட்கக்கடவாய்.)

---

†சத்துவகுண தருமம்,இராசதகுண தருமம்,தாமதகுண தருமம் என்று கூறியது அவற்றின் காரியமாய கருமங்களையாம். இம் முக் குண கருமங்களின் பயன் 18-வது அத்தியாயத்திலும் கூறப்படும். பேதைமை - எதனையும் செவ்வையாக அறியாமை. சத்துவகுண தருமம் ஞானத்தைத் தருவது வாயிலாக நிர்மலத்தையும்,இராசதகுண தருமம் உலோபத்தைத் தருவது வாயிலாகத் துக்கத்தையும், தாமதகுண தருமம் பேதைமையைத் தருவது வாயிலாகப் பிரமாதம் மோகமென்னும் தீயகுணங்களையும் தருவனவா மென்பதும், சத்துவகுண தருமம் துக்கக் கலப்பில்லாத சுகத்தையும், இராசதகுண தருமம் துக்கத்தோடு கலந்த சிறிது சுகத்தையும், தாமதகுண தருமம் அவிவேகத்தோடு கூடிய துக்கத்தையும் தருவனவா மென்பது மிங்குணர்தற் பாலனவாம்.

அருச்சுனா ! இப்புத்தி முதலிய வடிவமாகப் பரிணாம மடைந்துள்ள சத்துவகுண முதலிய வடிவங்களே லௌகிக வைதிக கரும மனைத்திற்கும் கர்த்தாவாம் ; அவற்றிற்கு வேறாக ஒரு கர்த்தாவுமில்லை ; அவற்றிற்குச் சாட்சியாயுள்ள நான் அகர்த்தாவென்று கர்த்தா - அகர்த்தா வென்னுமிவற்றை உள்ளவாறாக உணர்ந்தவன் உணர்ந்தபோதே மோட்ச வின்ப மடைந்தவனாவான். *

(தடங்கடலிடையே வளர்ந்த பகவானே! சத்துவ முதலிய குணங்களைக் கர்த்தாவென்றும், தன்னை அகர்த்தாவென்று முணர்ந்தவன் உணர்ந்தபோதே மோட்சவின்பத்தை யெவ்வாறடைகின்றா னென்று அருச்சுனா ! நீ வினாவுதல் கூடும் ; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுனா ! உடம்போடு கூடியிருந்தே சம்சார காரணமாகக் கூறிய சத்துவ முதலாகவுள்ள இம்மூன்று குணங்களையும் மாயாமயமென் றுள்ளவா றுணர்ந்து, அவற்றின் சம்பந்தமின்றி அவற்றிற்குச் சாட்சியாக விளங்குகின்றவன் பிறப்பு - மூப்பு - இறப்பு முதலியவற்றை யுடையதாகக் கூறப்படுகின்ற விஷத்தையொத்த சரீர துக்கமனைத்தையும் நீக்கி மோட்ச வின்ப முண்டாகப் பெறுவன்; இதற்கையப்பாடு யாது மில்லையாம்.†

சத்துவ முதலிய குணங்களைக் கடந்தவன் தன் சீவன காலத்திலேயே வீட்டின்பத்தை யடைகின்றானென்று பகவான் திருவாய்மலர்ந்தருளியதைக் கேட்ட அருச்சுனன் குணங்களைக் கடந்தவனென்னும் குணாதீதனது இலக்கணத்தையும் - அவனது ஆசாரத்தையும்-குணங்களைக்

---

*யான் சர்வ சாட்சி; எதற்கும் எவ்வாற்றானும் கர்த்தா வாவ தில்லை; எனது சந்நிதானத்தில் புத்தி முதலிய வடிவமாகப் பரிணாம மடைந் துள்ள சத்துவகுண முதலியன கர்த்தா போல விளங்குகின்றன வென்று தன்னையும் சத்துவ முதலிய குணங்களையும் பிரித் துள்ளவா றுணர்ந்தவன் உணர்ந்தபோதே பரமாநந்த வடிவமாக விளங்குகின்றா னென்ப திங்குணர்தற்பாலதாம்.

†சம்சார முண்டாதற்குக் காரணமாயுள்ள குண மூன்றையும் மாயாமயமென் றுணர்ந்து, அவற்றிற்குச் சாட்சியாக விளங்குகின்றவன் யானெனதென்னு மபிமான மில்லா திருத்தலின், பரமாநந்த வடிவினனாக விளங்குகின்றா னென்ப திங்குணர்தற் பாலதாம்.

கடக்குஞ் சாதனத்தையும் அறிய விருப்பங்கொண்டு, பகவானை நோக்கி, " எண்ணிய வுலகு முலகில்வா முயிரு மிருவினை யாக்கையு மாகப், பண்ணியு மழித்து மேவிளை யாடும் பரம" புருஷோத்தமரே ! தேவரீர் சீவர்கள் மோட்ச சாம்பிராச்சிய மடைதற்குக் காரணமாயிருக்கின்றதென்று ஆன்றோரால் கருதப்படுகின்ற இவ்வுலகத்தில் அதிகாரிகளல்லாதவர் கடப்பதற் கரியனவாயுள்ள சத்துவம் - இராசதம் - தாமதமென்னும் குணங்கள் மூன்றையும் கடந்து அவற்றிற்குச் சாட்சியாயுள்ள புண்ணிய புருஷரது ஆசாரத்தையும், அவர்கள் அக்குணங்களைக் கடந்திருக்கும் சாதனத்தையும், அவர்களது இலக்கணமாய லிங்கத்தையும் அடியேனுக்குத்திருவாய்மலர்ந்தருளல் வேண்டுமென்றான்.

இந்நூலி னிரண்டாவது அத்தியாயமாய சாங்கிய யோகத்தில் குணாதீதனுடைய திடப் பிரக்ஞனது இலக்கண முதலியவற்றை அருச்சுனனது வினாவிற்கு விடையாகக் கூறிய பகவான் அவற்றை வேறு பிரகாரமாகக் கூறக் கருதி, முன்னர்க் குணாதீதனது இலக்கணத்தைக் கூறல்.

அருச்சுனா! மாயாமயமா யுள்ள சத்துவ முதலிய முக் குணங்களின் காரியமாய்த் தோன்றுகின்றவை பிரகாசமும் பிரவிர்த்தியும் மோகமுமாமென்று யான் முன்னர்க் கூறிய இம்மூன்று பகுதியையும் இவை சாட்சியாயுள்ள வெனக்குத்தூரமாயிருப்பனவாமென்றுணர்ந்து, அந்தப் பிரகாச முதலியவற்றைப் பெறாதபோது சுக புத்தியா லவற்றை விரும்புதலும் அந்தப் பிரகாச முதலியவற்றைப் பெற்றபோது துக்க புத்தியா லவற்றை வெறுத்தலுஞ் செய்யா திருப்பவன் குணாதீத னென்று சொல்லப்படுவான்.‡

‡ சத்துவ குணத்தின் காரியம் பிரகாசம், இராசத குணத்தின் காரியம் பிரவிர்த்தி, தாமத குணத்தின் காரியம் மோகமென்று கூறப்பட்ட தாயினும், இனம் பற்றி அக்குணங்களின் வேறு காரியங்களும் இங்குக் கொள்ளற்பாலனவாம்.

சத்துவ முதலிய குணங்களின் காரியங்களில் விருப்பும் வெறுப்பு மில்லாதிருத்தலே குணாதீதனது இலக்கணமாம். இவ் விலக்கணம் குணாதீதனுக்குப் பிரத்தியட்சமாம் ; மற்றவர்க்குப் பிரத்தியட்சமாவ தின்றாம். ஒருவனது சித்தத்தி லுள்ள விருப்பு - விருப்பின்மை - வெறுப்பு - வெறுப்பின்மை யென்பன அவனுக் கன்றி மற்றவர்க்குப் பிரத்தியட்ச மாவதில்லை யாகலின், இக் குணாதீதனது

பகவான் குணாதீதனது ஆசாரத்தைக் கூறல்.

அருச்சுனா! உதாசீன புருஷன்போல விருப்பு வெறுப்புக்களை யடையாது சாட்சியாய், சுக துக்க முதலிய வடிவமாய்ப் பரிணாம மடையா நிற்கும் சத்துவ முதலிய குணங்களோடு கூடியிருந்தே அவற்றால் தனது நிலையினின்றும் சலியா திருப்பவன் குணாதீத னென்று சொல்லப்படுவன். மானம் - அவமானம், சுகம்-துக்கம், மண்-பொன், பிரியம்-அப்பிரியம், சத்துரு-மித்துரு, ஸ்துதி-நிந்தை யென்னுந் துவந்துவங்களுண்டாய காலத்தில் அவற்றில் சமபுத்தி யுடையவன் குணாதீத னென்று சொல்லப்படுவன். ¶

இலக்கணம் சுவார்த்த இலக்கணமாம்; பரார்த்த இலக்கண மன்றாம். எவ்விலக்கணம் தன்னாலேயே உணரப்பட்டதாமோ அது சுவார்த்த இலக்கணமாம்; எவ்விலக்கணம் பிறரானு மறியப்பட்டதாமோ அது பரார்த்த இலக்கணமாம். சுவார்த்த இலக்கணம் சுவசம்வேத்திய மென்றும், பரார்த்த இலக்கணம் பரசம்வேத்திய மென்றும் சொல்லப்படும்.

¶தம்முள் விவாதஞ்செய்யு மிருவருள் எவர் பட்சத்தையும் அங்கீகரியா திருப்பவன் உதாசீனனாவன்; அவனைப்போல எவன் விருப்பு வெறுப்பில்லாது தனது சச்சிதாநந்த வடிவத்தின்க ணிலைத்து, சுகதுக்க முதலிய வடிவமாகப் பரிணாம மடைந்துள்ள சத்துவ முதலிய குணங்களால் தனது நிலையினின்றும் சலியா திருப்பன் அவன் குணாதீதனாவன். இவன் தேகேந்திரிய முதலிய வடிவமாகப்பரிணாம மடைந்துள்ள சத்துவ முதலிய குணங்களே தம்முள் சாதக-பாதக பாவங்களாகவும், கிராகிய-கிராகக-பாவங்களாகவும், உபகாரிய உபகாரக பாவங்களாகவு மிருக்கின்றன; இவற்றை யெல்லாம் பிரகாசிக்கச் செய்பவன் நானே; எனக் கவற்றோ டுண்மையி லொரு சம்பந்தமு மில்லை; அவை கனாப் பொருள் போல என்னிடத்துக் கற்பிதமாமென் றிருப்ப னென்பதிங் குணர்தற்பாலதாம்.

ஆதரவெனப்படும் சத்காரம் மானமாம்; அநாதர வெனப்படும் திரஸ்காரம் அவமானமாம்.

உதாசீனன் போல விருப்பு வெறுப் படையாது விஷயங்களோடு கூடியிருந்தும் அவற்றால் சலனமடையாது மானம் அவமான முதலிய துவந்துவங்களில் சமபுத்தியா யிருத்தல் குணாதீதனது ஆசாரமாம். உபேட்சை முதலிய தருமங்கள் தத்துவ ஞான மடைவதற்கு முன் அதிகாரி புருஷர்க்குப் பிரயத்ன சாத்தியமா யிருப்பனவாம்; தத்துவஞான மடைந்தபின் பிரயத்னமின்றி யிருப்பனவாம்.

பகவான் சத்துவ முதலிய குணங்களைக் கடத்தற்குரிய உபாயத்தைக் கூறல்.

*அருச்சுனா! எவ்வாற்றாலும் தடையில்லா துண்டாகின்ற அநந்நிய பக்தி யோகத்தால் ஒப்புயர்வில்லாத பரமேசுவரனாகிய என்னைச் சிந்தனை செய்பவர் முற்கூறிய தன்மைகளோடு கூடித் தோன்றும் சத்துவ முதலிய குணங்களைக் கடந்து, உண்மைத் தன்மையதாய பெரிய மோட்சத்தை யடைவர்.**

சுழியாநின்ற பெருவெள்ளத் திடையே பண்டு துயில்கொண்டானாகிய பகவான் என்னைத் தியானஞ் செய்கின்றவர் மோட்சத்தையே யடைவரென்று கூறிய அர்த்தத்தில் தமது மகத்துவ வடிவக் காரணத்தைக் கூறல்.

ஒழிவில்லாது எப்போதும் யாவர்க்கும் தத்துவங்களை யானே போதித்து வருதலால், கெடாத ஞானமும், அமிர்தமயமான மோட்சமும், நிரதிசயாநந்தமும், சாசுவதமான தருமமும் என்னிடத்தினின்றுமுண்டாவனவாம்; அதனால், அதிகாரி புருஷர்க்கு எனது பக்தியால் மோட்ச முண்டாகின்றதென்றருளிச் செய்தனர். $

14 - குணாதீத அத்தியாயம் முற்றிற்று.

---

*குணங்களைக் கடப்பதற்குரிய உபாயம் எப்போது மிடைவிடாது பரமேசுவரனைச் சிந்தனை செய்தலாமென்க. அநந்நிய பக்தி யோகமாவது உலக எண்ணமின்றிப் பரமேசுவரனைப் பேரன்போடு தனக் கபேதமாகப் பாவனை செய்தலாம்.

$ யான் எப்போதும் யாவர்க்கும் நீக்கமின்றித் தத்துவங்களைப் போதித்து வருதலால், ஞானமுதலியன உண்டாதற்குக் காரணம் என்னை யன்றிப் பிறிதில்லையாம்; அதனால். என்னைத் தியானிப்பவர்க்கு மோட்சம் நிச்சயமாக உண்டாகுமென்று பகவான் கூறினானென்க. இங்கு அறநெறியி லொழுகுவதால் பக்தியும், அதனால் ஞானமும், அதனால் அஞ்ஞான நீக்கமும், அதனால் நிரதிசயாநந்தவடிவமாக விளங்குதலு முண்டாகின்றன வென்பதிங் குணர்தற்பாலதாம்.

15 - பிரபஞ்ச அத்தியாயம்.

பதினான்காவது அத்தியாயத்தி னிறுதியில் அநந்நிய பக்தி யோகத்தால்
பரமேசுவரனாகிய என்னைச் சிந்தனை செய்பவர்க்கு எனது கருணையால்
ஞானவாயிலாக முத்தி யுண்டாகு மென் றருளிச்செய்த பகவான்
அவ்வநந்நிய பக்தியும் ஞானமும் சம்சாரத்தில் வைராக்கிய
மடைந்தவர்க்கன்றி மற்றவர்க் குண்டாவதில்லை யாகலின்,
அருச்சுனனுக்கு வைராக்கிய பூர்வகமாக ஞானோபதேசஞ்
செய்ய வேண்டுமென்னும் விருப்பத்தால் இப் பதி
னைந்தாவது அத்தியாயத்தில் முன்னர்ச் சம்
சாரத்தை விருட்ச வடிவமாகக் கூறல்.

"சாயை யன்னவென் வினைத்தளை யறுக்கவோ தகவில், பேயை யின்னுயிர் செருக்கவோ பிள்ளையாய் வளர்ந்தான், வேயை யொன்றிய வரிசிலை விசயற்கு மீள, மாயை தன்னையோர் மரமொக்க வருணிக்க லுற்றான்". ¶

அருச்சுனா! என்னிடத்துக் கற்பிதமாக வுள்ள மகா மாயையினால் கற்பிக்கப்பட்ட சம்சாரமென்னும் பெரிய விருட்சமானது வேரை மேலாக வுடையது; தலையைக் கீழாகவுடையது; (தத்துவஞான முண்டாமளவும்) நாசமாகாதிருப்பது; வேதத்தின் கர்ம காண்ட வாக்கியங்களை அழகு பொருந்திய இலைகளாக வுடையது; எங்கும் நிறைந்துள்ள அசுவத்த மென்று சுருதி ஸ்மிருதிகளனைத்தும் கூறுதலால் அசுவத்த விருட்சமென்னும் பெயருடையது. *

¶ *சாயை-தேகச்சாயை; வினைத்தளை - கருமக்கட்டு; பேய்-பூதகி; வேய் - மூங்கில்; மாயை-சம்சாரவடிவ மாயை.*

* *அசுவத்த விருட்சம் - அரசமரம். சம்சாரம் நிலையற்றதா யிருத்தலின், அஃது அசுவத்தமென்று கூறப்படுகின்றது. அசுவத்த மென்பதன் பொருள் நிலையற்ற தென்பதாம்.*

சம்சார விருட்சத்திற்கு வேர் மாயா விசிட்ட (மாயையோடு கூடிய) பிரஹ்மமாம்; தலை கிளைகளாம். அவை மகத் தத்துவம், அகங்கார தத்துவ முதலியனவாம். விருட்சத்தை அழியாமற் செய்வதற்கு அதனது இலைகள் காரணமா யிருத்தல்

பகவான் சம்சார விருட்சம் வேரை மேலாக வுடைய தென்பதை விளக்கமாகக் கூறல்.

கூர்மை பொருந்திய வாட் படையையும் வல்லமையையு முடைய அருச்சுனா ! நீ இங்ஙனம் சுருதி-ஸ்மிருதிகள் கூறிய இச் சம்சார விருட்சத்தின்கண் இயல்பாக வுள்ள கூறுபாடுகள் எவையென்று வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய். யாதொரு பொருளும் தனக் கொப்பாகாவாறு வியாபகமாயுள்ள பிரஹ்ம சொரூபத்தின்க ணின்றும் உண்டாகுங் கிரமப்படியே உண்மைபோலத் தோன்றும் ஆகாய முதல் ஸ்தூல தேக மீறு யுள்ள உலக மனைத்தும் தோன்றுகின்றன வாதலால், இச் சம்சார விருட்சத்திற்குச் சர்வத்திற்கும் மேலாயுள்ள பிரஹ்மம் வேராம்.

பகவான் சம்சார விருட்சம் தலையைக் கீழாக வுடையது, நாசமாகா திருப்பதென்று கூறியதை விளக்கமாகக் கூறல்.

அருச்சுனா! இச் சம்சார விருட்சம் சீவர்களது அறம் பாவ மென்னும் அதிர்ஷ்ட வசத்தால் தோன்றுகின்ற உலகங்களாகியும் பிராணிகளாகியு முண்டாவதால், மகத்தத்துவம் - அகங்கார தத்துவம் - பஞ்சபூத முதலியவற்றைத் தலையாக வுடையதாம் ; உற்பத்தி - ஸ்திதி - நாசமென்பனவற்றின் பெருக்கத்தை யுடையதாய்ப் பந்தரூபமா யுள்ள அச் சம்சார விருட்சத்தின் பிரவாகம் (தத்துவ ஞான முண்டா மளவும்) ஒரு காலத்திலும் முற்றும் பாழாகுமாறு அபாவமாகா திருத்தலின் ஒருதன்மையதாக அழியாதிருப்பதாம்.

போலச் சம்சாரத்தை அழியாமற் செய்வதற்கு வேதத்தின் கர்மகாண்ட வாக்கியங்கள் காரணமா யிருத்தலின், அவை சம்சார விருட்சத்திற்கு இலைகளா யிருக்கின்றன வென்று கூறப்பட்டது. இதன்தாற்பரியம் கரும முள்ள வளவும் சம்சார மிருக்குமென்பதாம். கங்கையின் அலையால் மோதப்பட்ட உயர்ந்த கரையினின்றும் காற்றால் கீழே தள்ளப்பட்ட பெரிய அரசமரம் வேர் மேலாகவும் தலை கீழாகவு மிருத்தல் போல இச் சம்சார விருட்சமும் வேர் மேலாகவும் தலை கீழாகவு மிருக்கின்றதென்ப திங்குணர்தற் பாலதாம்.

பகவான் சம்சார விருட்சம் வேதத்தின் கரும காண்ட வாக்கியங் களை இலைகளாகவுடையது; அசுவத்த மென்னும் பெயரை யுடைய தென்பதை விளங்கக் கூறல்.

அருச்சுனா! அச் சம்சார விருட்சம் கருப்பத்தி லுண்டான கால முதற்கொண்டே அறம் பாவ மென்னுங் கருமங்களால் வளரா நிற்கும் அபேட்சை யுடையதாயிருத்தலினால், ஓதி உணர்தற் கரிய நான்கு வேதங்களின் கரும காண்ட வாக்கியங்களே தருமா தருமங்களைப் பிரகாசிப்பிக்கும் வாயிலாக அதற்கு இலைகளாம்; பொருள்களின் தொழில் வேறுபாட்டால் பல திறத்தனவாக வருகின்ற நாள்களிலே ஒருநா ளிருக்குமென்னும் ஸ்திரத்தன்மை யின்மையினாலே அச் சம் சார விருட்சம் உலகப் பிரசித்தமாக அசுவத்த மென்னும் பெய ருடையதென்று கூறுவதற்குரிய தாயிற்று. †

பகவான் சம்சார விருட்சத்தை அதன் காரணத்தோ டுணர்ந்தவர் வேதார்த்த மனைத்தையு முணர்ந்தவ ராவரெனல்.

*வேரை மேலாக வுடையது, தலையைக் கீழாக வுடையது, நாச மில்லாதது, கருமங்களை இலைகளாக வுடையது, அசுவத்த மென்னும் பெயரை யுடையதென் றிவ்வாறு விளங்குகின்ற இச் சம்சார விருட் சத்தின் சுபாவமாகிய கூறுபாடு இவையல்லாமல் வேறில்லாமையினா லே இங்குக் கூறியவாறு இச் சம்சார விருட்சத்தை ஆராய்ந்தறி பவர் வேதார்த்த மனைத்தையு முணர்ந்தோராவர். இத்தன்மையதான இப் பெரிய சம்சார விருட்சத்தின் கூறுபாடாய அவயவ கற்பனைக ளின்னுஞ் சில விருக்கின்றன; அவற்றையுங் கூறுகின்றேன், நீ கேட் கக்கடவாய். **

---

† வேதத்தின் கரும காண்ட வாக்கியங்கள் தருமம், அதருமம், அவற்றின் காரணம், அவற்றின் பல மென்னு மிந்நான்கையும் விளங்கச் செய்தலின், அவை சம்சார விருட்சத்திற்கு இலைகளாமென்று கூறப்படுகின்ற தென்பதாம்.

** சம்சார விருட்சத்தின் வேர் பிரஹ்மம்; தலை மகத்தத்துவ முதலியன; அஃது அநித்தியமா யிருப்பினும் பிரவாக ரூபத்தால் நித்தியமா யிருப்பது, கருமத் தால் விருத்தி யடைந்து வருகின்றதென்பதுவே வேதத்தின் நிச்சயமான பொரு ளானதால், இச் சம்சார விருட்சத்தை அதன் காரணத்தோடுணர்ந்தவர் வேதார்த்த மனைத்தையு முணர்ந்தவ ராகின்றன ரென்பதிங் குணர்தற்பாலதாம்.*

பகவான் சம்சார விருட்சத்தின் மற்றொருவகை அவயவ கற்பனைகளைக் கூறல்.

எனது கண்மணியும் என்னை யொத்தவனுமாய அருச்சுனா! இச் சம்சார விருட்சம் நாநாவித யோனிகளாகிய கதிகளின் வழியே மண் முதலிய கீழுலகத்தில் வளர்வனவும் விண்முதலிய மேலுலகத்தில் நெருங்கி நிற்பனவுமாய அளவிறந்த பிறவிகளாகிய கிளைகளோடு கூடி யிருக்கும்.†

அருச்சுனா! விண் முதலிய மேலுலகத்திலும் மண் முதலிய கீழ் உலகத்திலும் சீவர்க ளனுபவித்த பலவிதமாய போகானுபவ வாயிலாக உண்டாகின்ற இராகத் துவேஷாதி வாசனைகளென்னும் வேரானது வருணாச்சிரம முதலிய பல பாகுபாட்டுடன் பொருந்திய மண்ணுல கத்திலே அஞ்ஞானத்தோடு மிகு ஸ்திரமாய் வீழ்ந்திருத்தலால், இச் சம்சார விருட்சத்திற்கு வேர் கீழேயு மிருப்பதாம்; தம்முள் விட்டுப் பிரியா தெழுகின்ற சத்துவம் இரசசு தமசு என்னு முக்குணத்தால் நீரால் விருட்சம் வளர்வதுபோல இச் சம்சார விருட்சம் வளர்வதாம். சப்த ஸ்பரிச ரூப ரச கந்த மென்னும் விஷயங்களை இச் சம்சார விருட்சம் தளிர்களைப்போல அழகாகப் பொருந்தி யிருப்பதாம். ¶

பகவான் சம்சார விருட்சம் தனக்கெனப் பொரு ளுண்மையி லில்லாத தெனக் கூறல்.

அருச்சுனா! இச் சம்சார விருட்சம் உண்மையில் பொய்யாக விளங்குகின்ற சொப்பன பதார்த்தமும், கானனீரும், கந்தர்வ நகரமும்

---

† மண் - பூமி; விண் - ஆகாயம்.

சீவர்கள் புண்ணிய பாவ வசத்தால் மேலுலகத்திலும் கீழுலகத்திலும் பிறந்து வருகின்றார்கள்; இவர்கள் இவ்வாறு பிறந்து வருதலே சம்சார விருட்சத் திற்குக் கிளையா யிருக்கின்றதென்பதிங் குணர்த்தப்பட்டதென்க.

¶ சம்சார விருட்சத்திற்குப் பிரஹ்மம் முக்கிய வேரென்றும், இராகத் துவேஷாதி வாசனைகள் அமுக்கிய வேரென்றும் இங்குணர்தல் வேண்டும். வேர் - மூலம். இராகத் துவேஷாதி வாசனைகள் அஞ்ஞானத்தோடு மண்ணுலகத் தில் பிறப்பனவா யிருத்தலின், அவை மண்ணுலகத்தில் வீழ்ந்திருக்கின்றன வென்று கூறப்படுகின்றது. கருமாதிகாரம் மனுஷர்க்கன்றி மற்றவர்க் கில்லை யென்பதும், கருமங்கள் இராகத்துவேஷ முதலியவற்றை முன்னிட்டு நிகழ்கின் றன வென்பதும் மிகு பிரசித்தமாம். அஞ்ஞானம் - விவேக மின்மை.

போலத் தோன்றி அழிவதால், உண்மையில் தனக்கென் ெறாரு வடிவம் சிறிதாகவேனு மில்லாததாம்; முன்னே தானில்லாதிருந் துண்டாகும் ஆதிகாலத்தோடு தான் அபாவமாகும் அந்த (முடிவு)க் காலமுமில்லாமையினாலே அச் சம்சார விருட்சத்தினது ஆதியு மந்தமும் எந்தப் பிராணிக்கும் அறிதற்குரியன வன்றாம். ‡

பகவான் சம்சாரவடிவ விருட்சத்தைச் சேதித்தற்குரிய உபாயத்தைக் கூறல்.

அருச்சுனா ! அதிகாரி புருஷர் அசுவத்தமென்று வேதங் கூறும் இரகசியமாயுள்ள இச்சம்சாரவிருட்சத்தைத் தமது திட வைராக்கிய மென்னும் வாட்படையால் சேதித்துப் பிரஹ்ம பதத்தை உணர்தல் வேண்டும். (அந்தப் பிரஹ்மபதம் எவ்வுபாயத்தா லுணரத் தக்கதென்று நீ வினவுவாயாயின், அதற்கு விடைகூறுகின்றேன், கேட்கக்கடவாய்.) பிரஹ்ம சொரூபமாகவே யிருந்து இந்திரஜாலம் போல மாயாமயமான இப்பிரபஞ்சமனைத்தையுந் தோன்றச்செய்கின்ற முடிவிலாத வென்னைச் சரணமடைதலே அதிகாரிபுருஷர் பிரஹ்ம பதத்தை யறிதற்குரிய உபாயமாம். †

---

‡ ஆதி - முதல் ; அந்தம் - கடை. சம்சார விருட்சத்திற்கு ஆதியும் அந்தமும் சித்தியாமையினாலே அதன் மத்தியமும் சித்தியா தென்பதும், ஆதி அந்த மென்பனவற்றை முன்னிட்டே மத்தியம் கருதப்படுகின்றதென்பதும், இச்சம்சார விருட்சத்தின் வேர் தலை முதலியனவற்றைப் பிராணிக ளுணரா திருத்தலின், அதன் ஆதியும் அந்தமும் அப்பிராணிகளுக்கு விளங்கா திருக்கின்றன வென்பதும், இச் சம்சார விருட்சம் சொப்பன பதார்த்தம் - கானனீர் - கந்தர்வ நகரம் போலத் திருஷ்ட நஷ்ட சொரூப முடையதா யிருக்கின்ற தென்பதும் இங் குணர்தற் பாலனவாம்.

எது காணும்போதே கெடுகின்றதோ அது திருஷ்ட நஷ்ட சொரூப முடையதாம்.

† இங்கு வைராக்கியமாவது மனைவி மக்கள் பொருள்களின்மீதுள்ள ஆசையை விடுதலாம் ; அல்லது ஆசை கோப மகந்தை யனைத்தையும் விடுதலாம். கோடரி முதலியன மரத்தை வெட்டுதற்குச் சாதனமா யிருத்தல்போலச் சம்சார விருட்சத்தை வெட்டுதற்கு வைராக்கியம் சாதனமா யிருக்கின்றதென்பதும், வைராக்கிய முடையவர் சற்குருவி னனுக்கிரகத்தால் நானே பிரஹ்ம மென்று சிந்தனை செய்வதன்கண் நழுவாதிருத்தலின், அவர் அச் சிந்தனையா லுண்டா

பகவான் பிரஹ்மரூபமென்னும் வைஷ்ணவ பதத்தை யடைதற்குரிய மற்றோருபாயத்தையும், அவ்வைஷ்ணவ பதத்தின் விசேஷணத்தையுங் கூறல்.

அருச்சுனா! இருவினை வசத்தால் தம்மை வந்தடைகின்ற இராகத் துவேஷ முதலியவற்றை யொழித்த ஞானிகள் தரிசிக்குமாறு தோன்றா நிற்கும் வைஷ்ணவ பதமான எனது சொரூப சுபாவம் எத்தன்மைய தென்று நீ வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய். வேதங்கள் உலகனைத்தையும் பிரகாசிக்கச் செய்கின்ற நிலை பேறுடைய சூரியன் சந்திரன் அக்கினி யென்னும் ஒளிப்பொருள் களால் பிரகாசிக்கப்படாத தன்மையுடைய சொப்பிரகாச வடிவமாய் விளங்குகின்றவனென்றும், (என்னை) வந்தடைந்தவர் கடலை யடைந்த ஆறுகள்போலப் பின்னர்த் தமதியல்பு வேறொருவிதமாகாதுள்ள தன் மையனென்றும், என்னைக் கூறும். ¶

பகவான் சுவர்க்க முதலிய உத்தம லோகங்களை யடைந்தவர் மீள்வது போலும், சுழுத்தியிலும் பிரளயத்திலும் ஆத்ம சுபாவத்தை யடைந்தவர் மீள்வதுபோலும் எமது பதத்தை யடைந்தவர் மீளாரென்று கூறல்.

அருச்சுனா ! கடந்தோறும் அதனிடத்து வளைவுபட்டதாகத் தோன்றுகின்ற கடாகாயமும், தடாகந்தோறும் அதன் நீர் அசைதற் கேற்ப அதிற் பிரதிபிம்பித்துத் தோன்றுகின்ற சந்திரனும்போல, நான் சரீரந்தோறும் அச்சரீரத்திற்கு வேறாய்ச் சீவன்போல நின்று அச்சரீ ரங்களில் அடங்கியுள்ள ஆறிந்திரியங்களையும் (சுக துக்கங்களை யனுப வித்தற்கேதுவாயுள்ள கருமம் உதயமாம்போது அச்சுக துக்கங்களை அனுபவித்தற்பொருட்டு அவ்விந்திரியங்களுக்குரிய) விஷயங்களில் செலுத்துகின்றேன். $

கும் நான்பிரஹ்மமென்றுணரும் தத்துவ ஞானத்தால் பிறத்தல் இறத்தல் வடிவச் சம்சாரத்திற்குக் காரணமாயுள்ள அஞ்ஞானத்தைக் கெடுத்தற்குரியவ ராகின்றன ரென்பது மிங்குணர்தற்பாலனவாம்.

¶ இராகத்துவேஷ முதலிய வென்றமையின், மானம் - மோகம் - சீதோ ஷ்ண முதலியவற்றையும் இங்குக் கொள்ளல்வேண்டும். சூரியன் - சந்திரன் - அக் கினி யென்பன பரமாத்மாவால் விளங்குகின்றன ; அவை பரமாத்மாவை விளங் கச் செய்வதில்லை யென்பது வேத சித்தாந்தமாம்.

$ ஆறிந்திரியங்கள் - சுரோத்திரம் - துவக்கு - சட்சு - சிங்நுவை - கிரா ணம் - மனமென்பனவாம். கடம் நாசமாயபோது கடாகாசம் மகாகாசமாக விளங்

பகவான் சீவாத்மா மன முதலிய ஆறிந்திரியங்களையும் கிரகித்துக்கொண்டு செல்லுங் காலத்தைக் கூறல்.

அக்கினியைப்போல விளங்குகின்ற வேற்படையையுடைய அருச்சுனா!மோதுகின்ற காற்று மலரினிடத்துப் பரிமளிக்கின்றவாசனையைக் கிரகித்துக்கொண்டு செல்லுந் தன்மையைப்போல, தேகேந்திரிய முதலியவற்றிற்குச் சுவாமியா யிருத்தலால் ஈசனென்று கூறப்படுகின்ற சீவன் கரும வசத்தால் ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரத்தை யடையும்போதும் அச்சரீரத்தை விட்டுப் பரலோகத்திற்குச் செல்லும் போதும் ஒழிப்பதற்கரியனவாயுள்ள மன முதலிய ஆறிந்திரியங் களையும் கிரகித்துக்கொண்டு செல்லுகின்றான். ¶

பகவான் சீவாத்மா மன முதலிய ஆறிந்திரியங்களையும் மரணகாலத்தில் கிரகித்துக்கொண்டு செல்வதன் காரணத்தைக் கூறல்.

அருச்சுனா! எதுவும் தனக் கொப்பாகாதுள்ள சீவன் மின்னலைப்போல விரைந்து தோன்றி யழியுந் தன்மையுள்ள உடம்பினைக் கருமவசத்தால் மாறிமாறி விடுவதும் கொள்வதுமாய்ச் சப்த ஸ்பரிச முதலிய விஷயங்களை மன முதலிய இந்திரியங்களை யாசிரயித் தனுபவிக்கின்றான். (இவ் வனுபவத்தின் பொருட்டே அவன் அவ் விந்திரியங்களைக் கிரகித்துக்கொண்டு செல்லுகின்று

குதல்போலும், தடாகநீர் வற்றியபோது அதில் பிரதிபிம்பித்துள்ள சந்திரன் யதார்த்த சந்திரனுதல்போலும், சீவன் தத்துவஞானத்தால் காரண சரீர மென்னும் அஞ்ஞானத்தைக் கெடுத்தபோது பிரஹ்ம சொரூபமாக விளங்குகின்றான் ; அவன் மீண்டும் சீவவடிவ மாதலில்லை யென்பது இங்குணர்தற்பாலதாம்.

¶ ஒரு சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்தை யடைதல் பிறப்பும், அதனை விடல் இறப்புமாமென்க.

வாயு மலரிலுள்ள வாசனைவடிவச் சூட்சும அம்சங்களைக் கிரகித்துக்கொண்டு செல்வதுபோலச் சீவன் மரணகாலத்தில் ஸ்தூல சரீரத்திலுள்ள மன முதலிய ஆறிந்திரியங்களையுங் கிரகித்துக்கொண்டு பரலோகத்திற்குச் செல்லுகின்றானென்பதிங் குணர்தற்பாலதாம். மன முதலிய ஆறிந்திரிய மென்பது இங்குப் பிராணன் முதலியவற்றையும் குறிப்பித்து நின்றதென்க.

சீவன் மரணகாலத்தில் சூட்சும சரீரத்தைக் கிரகித்துக்கொண்டு, மீட்டும் தான் விட்ட ஸ்தூல தேகத்திற்கு வாராவண்ணம் செல்லுகின்றானென்பது இங்குச் சாஸ்திரார்த்தமாம்.

னென்று நீ அறியக்கடவாய். அருச்சுன! நீ இவ்வான்மாவை யாரறி வார்; யாரறியா ரென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின் றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுன! ஒரு சரீரத்தை விடுவதும் மற்றொரு சரீரத்தைக் கொள்வதும் இந்திரியங்களால் விஷயங்களை யனுபவிப்பதுமாயுள்ள அச் சீவாத்மாவின் தன்மையை ஆசை கோப முதலியவற்றால் அசுத்தமாய அந்தக்கரண முடைய அவிவேகிகள் எம் முயற்சியாலும் அறியாதிருக் கின்றனர்; இவர்கள் தம் வடிவமாயுள்ள சீவாத்மாவை யறியாதிருக்கு மிது வியக்கத்தக்கதேயாம்; ஆசை கோப முதலியன வில்லாமையால் சுத்தமாய அந்தக்கரண முடைய விவேகிகள் சமாதி யப்பியாசத்தாலே அதனைப் பிரத்தியட்சமாக அறிவர். இவ்வான்மாவின் தன்மையை நீ தெளிவாக உணரக்கடவாய்; இன்னும் இவ்வான்மாவின் தன்மையைக் கூறுகின்றேன், கேட்கக்கடவாய். $

அருச்சுனனுக்கு வைஷ்ணவ பதமென்னும் பிரஹ்ம ரூபம் சூரியன் முதலியவற்றால் விளங்காது சோப்பிரகாசமா யிருக்கின்றது; அதனை யடைந்தவர் பிறப்பதில்லை; தேகத்திற் கன்னியமாய்ச் சீவாத்மா விருக்கின்றது; அதனியல்பை அவிவேகிக ளறியார், விவேகிக ளறிவாரென் றருளிச்செய்த பகவான் அவனுக்குத் தமது சர்வாத்மத் தன்மையையும் சர்வ வியவகாரங்களின் சாதனத் தன்மையையும் விளங்க உணர்த்தக் கருதி, தமது விபூதிகளைச் சுருக்கமாகக் கூறல்.

தூணியைந்தாற் போன்றுள்ள தோள்களையுடைய அருச்சுன! சட்சு முதலிய இந்திரியங்களுக்கும் மனத்திற்கும் வாக்கிற்கும் தத்தம் விஷயங்களை விளங்கச் செய்யும் சாமர்த்திய வடிவ ஒளிப்பொருளும் நானே யாவன்; இந்திரியங்களுக் கனுக்கிரகஞ் செய்யும் சூரியன் - சந் திரன் - அக்கினி யென்னும் ஒளிப்பொருள்களிடத்துத் தோன்றி விளங்கும் பிரகாசமும் நானே யாவன்; பிருதிவி வடிவமாக விருந்து கந்த முதலிய குணங்களை யதற்குக் கொடுத்து, எனது பலத்தையும் அதனிடத்து வைத்து, (அதனால் அதனை உறுதி யுடையதாகச் செய்து

$ சீவாத்மா சப்த முதலிய விஷயங்களை அந்தக்கரண சதுஷ்டயம், ஞானேந்திரிய பஞ்சகம், கருமேந்திரிய பஞ்சகம், பிராண பஞ்சக மென்பனவற் றைத் துணையாகக் கொண்டனுபவிக்கின்ற னென்பதிங் குணர்தற்பாலதாம்.

அதிலுள்ள ஸ்தாவர சங்கம வடிவமாயுள்ள) இப்பூதங்களேயெல்லாந் தாங்குகின்றவனும் நானே யாவன். ‡

பூத வரிசைகளுள் முதலாவதாகவுள்ள ஆகாயத்தின்கண் சர்வ ரசங்களுக்கும் ஆதாரமாயுள்ள சந்திரன் வடிவமாகவிருந்து, உண்ணு தற்குரிய நெல் கோதுமை முதலிய உணவுப் பொருளனைத்திற்கும் அவ்வவற்றிற்குத் தகுதியுடையனவாகப் பொருந்துகின்ற இரசங் களைக்கொடுத்து, அவ்வுணவுப்பொருள்களிலே அவ்விரசங்கள் கெடா தபடி அவற்றை விருத்திசெய்கின்றவனும் நானேயாவன்.

அருச்சுனா! தின்பனவும் நக்குவனவும் சுவைப்பனவும் உண்பன வுமா யிருந்து சிறந்த பயனைச் செய்கின்ற நால்வகை உணவுகளையும் சுகத்திற்குக் காரணமாம்படி பிராணிகளின் சரீரந்தோறும் ஜாடராக் கினி வடிவமாய்ப் பிராணன் அபானன்களோடு கூடியிருந்து சீரணிக்கச் செய்கின்றவனும் நானே யாவன். *

போர்முகத்துச் சிறந்து விளங்குகின்ற வில்லமைந்த தோள்களே யுடைய வீரருள் அதி வீரனான அருச்சுனா! நல்வினைகளைச் செய்கின்ற புண்யவான்களது பேரறிவும், நல்வினைகளைச் செய்வ தில்லாத பாவிக ளது சிற்றறிவும் நானே யல்லாமல் வேறில்லை யென்பதை நீ அறியக் கடவாய். ‡

---

‡ காற்றானது மேகமண்டலத்திற் பிரவேசித்துத் தனது வலியால் அதன்க ணுள்ள நீரைத் தாங்குவதுபோல, பகவான் (பிருதிவி தேவதா வடிவால்) பிருதிவியிற் பிரவேசித்துத் தனது வலியால் (அதனை உறுதி யுடையதாகச் செய்து)அதன்கணுள்ள சராசரப் பொருளெல்லாவற்றையுந் தாங்குகின்றா னென் பதிங் குணர்தற்பாலதாம்.

* தின்பன முதலிய நான்கும் பட்சியம் - போஜ்யம் - லேகியம் - சோஷ்ய மென்றும் சொல்லப்படும்; அப்ப முதலியன பட்சியமாம்; பாயச முதலியன போஜ்யமாம்; வெல்ல முதலியன லேகியமாம்; கரும்பு முதலியன சோஷ்யமாம்.

‡ பிரஹ்மன்முதல் தாவரமீறாய் மேலும் கீழுமாயுள்ள பிராணிகளின் புத்தி யில் பரமாத்மா சீவவடிவமாய்ப் பிரதிபிம்பித் திருக்கின்றது; அதனால், சீவாத் மாக்கள் பரமாத்மாவைத் தவிர உண்மையி லில்லை யென்பதிங் குணர்தற் பாலதாம்.

அறிவென்று கூறினமையின், ஸ்மிருதியையும் ஞானத்தையும் கொள்ளல் வேண்டும். முன்னனுபவித்த வஸ்துவை விஷயமாக வுடைய சம்ஸ்காரஜந்நிய அறிவு ஸ்மிருதியாம்; இந்திரிய விஷய சம்பந்தமுதலியவற்றாற் றோன்றும் அறிவு ஞானமாம்.

கெடுதலில்லாத நான்கு வேதங்களின் பொருள்களையும் அறிபவனும் நானே யாவன்; அவ்வேதங்களின் பழிப்பற்ற உண்மைப் பொருளும் நானே யாவன்; அவ்வேதங்களைச் சிஷ்யர்களுக்கு உண்மையமைந்த சுரங்களா லெடுத்துப் போதிக்கும் சாம்பிரதாயப் பிரவர்த்தகனான குருவும் நானே யாவன். அருச்சுனா! இன்னும் வேறொரு பொருளையுங் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய். $

சக்ஷு முதலிய இந்திரிய முதலியவற்றை விளங்கச்செய்யும் சாமர்த்திய
வடிவ ஒளிப் பொருளும் நானேயாவ னென்றற்றோடக்கத்தன
வாகத் தமது சோபாதிக வடிவத்தை அருச்சுனனுக் கருளிச்
செய்த பகவான் அவன்மீது தாம்கொண்டுள்ள கருணை
யால் அவனுக்கு க்ஷரம் அக்ஷரமென்னும் காரிய
காரணவடிவ இருவகை உபாதியுமற்ற தமது
நிருபாதிக சுத்த சொரூபத்தைக் கூறல்.¶

அருச்சுனா! சராசர வடிவமாகப் பொருந்தியுள்ள இவ்வுலகத்தின் கண் அழிதலையே வடிவமாக முதன்மையாக வுடைய ஒரு பொருளிருப்பதே யல்லாமல், அருவமாய்த் தத்துவ ஞானத்தா லன்றி வேறெக் காரணத்தாலும் அழிவில்லாமையையே பொருந்தி யிருப்பதாய மற்றொரு பொருளு முண்டு. †

$ பகவான் இங்ஙனம் கூறியதால், உலகமும், ஜீவர்களும், ஜீவர்களுக்கு வேதார்த்தங்களை உபதேசிக்கும் குருவும் உண்மையில் பிரஹ்மமேயாம்; அதனைத் தவிர யாதும் தனக்கென்றொரு வடிவமில்லாததா மென்பது பெறப்பட்டவாறறிக.

¶ க்ஷரம் - நாசமுடையது; அக்ஷரம் - (சம்சாரகாலத்தில்) நாச மில்லாதது; சோபாதிகம் - உபாதி யுடையது; நிருபாதிகம் - உபாதி யில்லாதது. ஒரு பொருளைப் பலபொருள் போலத் தோன்றச் செய்வதிங் குபாதியாம்.

† சம்சார காலத்தில் க்ஷரமென்றும் அக்ஷரமென்று மிருவகைப் பொருளுண்டு; அவற்றுள், காரிய வடிவமாயுள்ள சர்வ பூதங்களும் க்ஷரமாம்; சேதனத்திற் குபாதியாக விருப்பது வாயிலாக இப்பூதங்களுக்குக் காரணமா யுள்ள மாயை அக்ஷரமாம். இம்மாயை சம்சார காலத்தில் நாசமாகா திருப்பதுபற்றி அக்ஷரமென்று கூறப்படுகின்றது; இது தத்துவ ஞானத்தாலன்றி வேறெக்காரணத்தாலும் நாச முறுவதில்லையாம். இங்குக் கூறிய க்ஷரம் - அக்ஷரமென்னும் காரிய காரண வடிவ உபாதிகளால் எஞ்ஞான்றும் ஒன்றாகவேயுள்ள சேதனம் பலவாகத் தோன்றுகின்றதென்க.

பகவான் க்ஷரம் - அக்ஷரமென்பனவற்றின் சொரூபத்தை வெளிப்படையாகக் கூறல்.

அருச்சுனா! க்ஷரம் - அக்ஷரமென்று கூறப்படுகின்ற இவ்விரண்டு பொருள்களையும் செவ்வையாகப் புத்தியா லுள்ளவாறு பொருந்த ஆராய்ந்து நோக்கினால், அழிவதென்னும் க்ஷரப்பொருள் ஆக்கை முதலாகச் சர்வ பூதங்களுமாம்; அழியாத தென்னும் அக்ஷரப் பொருள்(காரிய வடிவமாகவுள்ள சர்வ பூதங்களுக்குங் காரணமாயுள்ள) உயிரென்று கூறப்படும் மாயையாம். $

பகவான் க்ஷரம் - அக்ஷரமென்னு மிரண்டு உபாதிகட்கும் வேறாய் மித்தையாயுள்ள அவற்றின் தோஷம் சிறிதாகவேனு முண்மையி லில்லாத தமது சுத்த-புத்த-முக்த சுபாவசொரூபத்தைக் கூறல்.

*அருச்சுனா! க்ஷரம்-அக்ஷரமென்னு மிவ்விரண்டிற்கும் வேறாய், அவ்விரண்டு உபாதிகளிலு முள்ள யாதொரு தோஷமு மில்லாமல், நாச மில்லாமல், எப்பொருள்களும் தன்னிடத்துக் கற்பிதமாக வன்றி உண்மையாக வில்லாமல், யாதொரு குறைவு மில்லாமல் சுவர்க்க-மத்திய-பாதாளமென்னு மூன்று உலகத்திலும் வியாபித்து அவற்றைத் தாங்கி நிற்பதொன்றுண்டு; அது யாதொரு விசேஷணமு மில்லாத ஆநந்தவடிவப் பிரஹ்மமாம். **

பகவான் தமது யதார்த்த வடிவத்தை அறிந்தவர்க்கு வரும் பயனைக் கூறல்.

இவ்வாநந்தவடிவப் பிரஹ்மமாகிய என்னை உள்ளபடி தமது சித்தத்தினிடத்துத் தமதான்ம வடிவமாகத் தெளிவாக அறிந்தவர் சம்சார பந்த மடையார்; இவ்வா றறிவ தல்லாமல் எனது யதார்த்த

$ *சம்சார காலத்தில் மாயை உயிர்போல அழிவில்லாததாகத் தோன்றுதலின், உயிரென்று கூறப்படுகின்றதென்க. ஆக்கை - உடம்பு.*

* *எதற்கு நாச மில்லையோ அதற்கு உற்பத்தி யில்லை யென்பது ஞான சாஸ்திர நிச்சயமாம். க்ஷரம் - அக்ஷரமென்னு மிரண்டிற்கும் வேறாய், அவற்றின் தோஷ மில்லாமல், நாசமின்றி, க்ஷராக்ஷரங்களுக் கதிஷ்டானமாய், பூரணமாய், உலக மூன்றிலும் கடத்தில் மண்போல வியாபித்து அவற்றைத் தாங்கி நிற்பது யாதோரடையாளமு முண்மையிலில்லாத பிரஹ்மமாம்; அதுவே பகவானது யதார்த்த வடிவமாமென்பதிங் குணர்தற் பாலதாம்.*

வடிவமாகிய அநாதியா யுள்ள இப் பிரஹ்மப் பொருளுக்கு அந்தமும் ஆதியும் வேறே உண்டென் றறிதல் எவர்க்கு முடியாது. ‡

பகவான் தமது யதார்த்த வடிவத்தை யறிவது மிக அருமையா மெனக் கூறல்.

அருச்சுனு! அதி ரகசியமா யுள்ள எனது யதார்த்த சொரூபத்தை இருக்கு முதலிய வேதம் நான்கும் ஒரே முகமாக விருந்து சொல்லத் தொடங்கினுலும் சிறிதும் சொல்லத் தக்கனவன்ரும்; வேதங்களே சொல்லத்தக்கனவன்ருயின், உலகத்தா ரதனை அறிதற் குரியவராவரோ? ஆகார். அருச்சுனு! நீ பரமேசுவரனு யுள்ள எனக்கு மிகப் பிரிய நண்பனு யிருத்தலால் கருணையாலுனக்கு நான் எனது யதார்த்த சொரூபத்தை அறியுமா றுபதேசித்தேன். †

''வெண்ணெயோ விதுரனிட்ட விருந்தையோ வேலை சூழ்ந்த, மண்ணையோ வுண்டு முன்னுள் வருபசி தீர்த்தமாயோ''னுகிய பகவான் தமது யதார்த்த சோரூபத்தில் சித்தத்தைச் சிதருது வைப்பவர் கிருதகிருத்திய ராவரேனக் கூறல்.

அருச்சுனு! எவரேனு மொருவர் தமது புத்தியை எவ்விஷயத்திலும் வையாமல், (எனது யதார்த்த சொரூபமாகிய) அந்த நிரதிசயாநந்த வடிவப் பிரஹ்மத்திலேயே வைப்பாராயின், அஃதவர்க்கு அவர் ஆசைப் பெருக்கோடு செய்கின்ற சாஸ்திர விகித கருமங்களின் பயனையெல்லாம் கொடுக்கும் என்றருளிச் செய்தனர். ¶

15 - பிரபஞ்ச அத்தியாயம் முற்றிற்று.

---

‡ ஆதியந்தமற்று நிரதிசயாநந்த வடிவமா யுள்ள பிரஹ்மத்தைச் சற்குருவின் கருணையால் தமது ஆத்மாவாக அறிந்தவர் சாதல் பிறத்தலென்னும் சம்சாரமடையா ரென்பதிங் குணர்தற்பாலதாம்.

† பரமார்த்த சொரூபத்தைச் சற்குருவி னனுக்கிரகத்தா லன்றி வேதார்த்தங்களை யறிதல் மாத்திரத்தா லுள்ளவா றுணர்தல் எவர்க்கு முடியாதென்பதும், அருச்சுனனுக்குப் பகவான் சற்குரு மூர்த்தியாக விருந்து, பரமார்த்த சொரூபத்தை உபதேசித்தாரென்பது மிங்குணர்தற் பாலனவாம்.

¶ நிரதிசயாநந்த வடிவப் பிரஹ்மத்தில் சித்தத்தைச் சிதருது வைத்திருப்பவர் அதனுல் தாமே நிரதிசயாநந்தப் பிரஹ்மமென்று தம்மையுணர்ந்து கிருத

16 - தேவாசுர சம்பத்து விபாகயோக அத்தியாயம்.

பதினைந்தாவது அத்தியாயத்தில் சீவர்கள் மாநுட தேகத்திலே பூர்வஞ் செய்துள்ள சுபாசுப கருமானுசாரமாக உண்டாகும் சுபாசுப வாசனைகளை அவர்தம் சம்சார விருட்சத்திற்கு அவாந்தர காரணமாக அருளிச்செய்த பகவான்,ஒன்பதாவது அத்தியாயத்தில் அவ்வாசனை களையே தெய்வ சம்பத்து - அசுர சம்பத்து - இராட்சத சம்பத்தென மூவகையாகக் குறிப்பித்திருத்தலை இப் பதினாறுவது அத்தியாயத்தில் தெய்வ சம்பத்தைத் தெய்வ சம்பத்தென்றும்,அசுர சம்பத்து-இராட்சத சம்பத்தென்னு மிரண்டனையும் ஒன்றாகக்கொண்டு அவற்றை அசுர சம்பத்தென்றும் வகுத்து, தெய்வ சம்பத்தென்னும் சுபவாசனை மோட்ச காரணமா யிருத்தலாலும், அசுர சம்பத்தென்னும் அசுபவாசனை பந்தகாரணமா யிருத்தலாலும், அதிகாரி புருஷர் சுப வாசனையைக் கொள்ளல் வேண்டும்; அசுப வாசனையைத் தள்ளல் வேண்டு மென்னும் கருத்துடையவராய், சுப வாசனையைக் கொள்ளு தலும் அசுப வாசனையைத் தள்ளுதலும் அவற்றின் சொரூபத்தை யறிந்தாலல்லது கூடாமையின், அவ்வாசனைகளின் சொரூபத்தைக் கூறல்.

> ''மறந் திருந்த மனத்திருள் நீங்கிடத்
> திறந்தி றப்படச் செப்புதல் மேயினன்
> அறந்தி றந்தெரிந் தாக்குதற் காகவே
> பிறந்தி றந்துழல் கின்றபே ராளனே''. ‡

கிருத்தியராவரென்பதாம். எவனுக்கினிச் செய்யத்தக்க கருமமில்லையோ அவன் கிருத கிருத்தியனாம். தத்துவ ஞானிக்குச் செய்யத்தக்க கருமமொன்று மின் மையின், அவன் கிருத கிருத்திய னவனென்க.

இப்பதினைந்தாவது அத்தியாயத்தில் இக்கீதையின் அர்த்த முழுதும் சுருக்கமா யிருப்பதிங் குணர்தற்பாலதாம்.

‡ அதிகாரி புருஷர் வேத விகிதமான அறத்தின் பாகுபாடுகளை யறிந்து, அவற்றைச் செய்துய்தற் பொருட்டுத் தமதிச்சையால் பிறந்திறந்து நடித்து வருகின்ற பேரருள் மூர்த்தியாகிய பகவான் ஆத்மாவைப் பிரஹ்ம வடிவமாக உணரா திருந்த மனவிருள் கெடும்படியும் ஆத்மஞான சாதனங்கள் திடமாகும்படியும் தேவாசுர சம்பத்து விபாகயோகத்தை அருச்சுனனுக்குச் சொல்லத் தொடங்கி னார்.

அருச்சுனா! இவ்வுலகத்திலுள்ள மக்கள் யாவரும் தேவர் அசுர ரென்றிருதிறத்தினராக விருக்கின்றனர்; அவர்தம் சுபாவங்களைக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய்.

பகவான் தெய்வ சம்பத்தினைக் கூறல்.

போர்முகத்தில் பிறரழித்தற்கரிய காண்டீபமென்னும் வில்லை யுடைய அருச்சுனா! பயமில்லாமை, அந்தக்கரணத்தைத் தூய்தாக்கல், சித்தத்தைச் சிதாத்மாவின்கண் ஒருமுகமாம்படி செய்தல், ஆன்ம சொரூபநிச்சயம் எதனாலும் கெடாமை, நீட்டித்த கோப மென்னும் சினமில்லாமை, உண்மை கூறல், மறுமைக்குத் துணையாக யாகஞ்செய்தல், தவஞ் செய்தல், வேதாத்தியயனஞ்செய்தல், தன்னை உயர்ந்தவனாக வெண்ணாமை, கோட் சொல்லாமை, பிராணிகளை யிம்சை செய்யாமை, பிறர் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொள் ளல், பெருமையைத்தரும் தியாகம் - ஆர்ஜவம் - சாந்தி - அலோலுத்துவம் - மார்த்தவம் - இலச்சை - அசாபலம் - தேஜஸு - அத்துரோகம் - திருதியென்னும் நல்லொழுக்கம், அறங்களுள் வன்மை யுடையதான தானஞ் செய்தல், துக்கிகளிடத்துக் கருணை செய்தல், காய மனச் சுத்தம், சுரோத்திர முதலிய இந்திரியங்களை அவற்றின் விஷயங்களிற் செல்லாவாறு தடுத்து ஒரு முகமாக்குதல் என்பன வனைத்தையும் தம்முள் கொண்டுள்ள கரும மனைத்தையும் தெய்வத் தன்மை யுடையோரிடத்துப் பொருந்திய செயல்களாமென்று நீ நிச்சயித்துணர்வாயாக. *

---

* சாஸ்திரம் கூறும் பொருளில் ஐயமின்றி அதனையனுஷ்டித்தலில் கருத்துடைமை பயமில்லாமையாம்; அந்தக்கரணத்தை ஆன்மாவை யறிதற்குச் சாதனமாகக் காமக்குரோத முதலியன எழும்பாவாறு செய்தல் அந்தக்கரணத்தைத் தூய்தாக்கலாம்; பிறர் நிந்தித்த போதும் வருத்திய போதும் கோப முண்டாகாமை சின மில்லாமையாம்; இதமாயும் மிதமாயும் வஞ்சனை கலவாததாயுமுள்ள சொற்களைக் கூறல் உண்மை கூறலாம்; சந்நியாசம் தியாகமாம்; வக்கிரத்தன்மை யின்மை ஆர்ஜவமாம், அஃதாவது விசுவாசத்தோடு கேட்பவரிடத்து நிச்சயித்த பொருளை மறையாமையாம்; மனவடக்கம் சாந்தியாம்; விஷயங்கள் சமீபமாக விருந்தும் அவற்றை யனுபவிக்கும் சாமர்த்திய மிருந்தும் அவற்றின்கண் இந்திரியங்கள் செல்லாதிருத்தல் அலோலுத்துவமாம்; குரூர சுபாவ மின்மை மார்த்தவமாம்; செய்தற்குரிய வாகாத காரியங்களைச் செய்ய நாண முறுதல் இலச்சையாம்;

கொள்ளத்தக்க பயமில்லாமை முதலிய தெய்வ சம்பத்தை யருளிச்செய்த பகவான் தள்ளத்தக்க அசுர சம்பத்தைக் கூறல்.

அருச்சுனு ! தீயனவற்றைச் செய்யும் அசுர சம்பத்துடையோர் செயல்களைக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய். அவ்வசுரசம்பத் துடையார் புண்ணியகருமங்கள் செய்யத்தக்கனவா மென்றும் பாவ கருமங்கள் செய்யத்தகாதனவா மென்றும், புண்ணிய பாவங்களின் தன்மையைச் சிறிது முணர்தலில்லாதிருப்பர்; அதனுல், காய மனச் சுத்தங்களையும் அறநூல்கள் கூறும் புனிதமாய ஆசாரங்களையும் மேற் கொள்ளாதிருப்பர்; ஒருவாற்ருனும் உண்மை யுரை கூருர்; அவி வேகமே பொருந்த விருப்பர். †

பகவான் அசுர சம்பத்துடையாரது கொள்கையைக் கூறல்.

அருச்சுனு ! அசுர சம்பத் துடையார் சுருதி - ஸ்மிருதி - புரா ணம் - இதிகாச முதலிய பிரமாணங்களை அங்கீகரியாமையால், காரிய வடிவமாகக் கருதுதற்குரிய உலகமும் அவ்வுலகிற்குக் காரணமா யுள்ள ஈசனும் அவ்வுலக வேறுபாட்டிற்குக் காரணமா யுள்ள அறம்பாவங் களும் அசத்திய மென்றே கொள்வர்; பெண்ணும் ஆணும் தம்முள் பிரியமாகக் கூடுந் தன்மையால் பிராணிக ளனைத்து முண்டாகின்றன; அதனுல், பிராணிகளி னுற்பத்திக்குக் காமமே காரணமாம்;பிறிதன்று மென்றும் கூறுவர். ¶

பயன் தருதலில்லாத காரியங்களைச் செய்யாமை அசாபலமாம்; பிறரால் அவமா னஞ் செய்யப்படாமை தேஜஸாம் ; பிராணிகளைக் கொல்ல விரும்பி ஆயுத மெடாமை அத்துரோகமாம்; வியாகூலம் நேரிட்டபோதும் தேகம் மன முதலிய வற்றை ஸ்திரமாகச் செய்யுமுயற்சி திருதியாம்; நீரால் உடம்பைச் சுத்தமாக்கு தல் காயச் சுத்தமாம்; உண்மை யுரைப்பதால் மனத்தைச் சுத்தமாக்குதல் மனச் சுத்தமாம்.

† அசுர சம்பத்துடையார் புண்ணிய பாவ கருமங்களைச் செய்வதற்கண் விப ரீத புத்தி, காய மனச் சுத்தமில்லாமை, அநாசாரம், உண்மையுரையாமை, அவி வேகமென்பனவற்றை யுடையரா யிருப்பரென்பதாம்.

¶ அசுர சம்பத்துடையார் உலகம் காரிய வடிவ மன்று;அதனுல், அதற்குக் கர்த்தாவாய ஈச னில்லை; உலகம் என்று மிருப்பதாம்; உலகம் வேறுபாடுடையதா யிருப்பது அதனியல்பு; அவ் வேறுபாட்டிற்குக் காரணம் அறம்பாவமன்று ;

பகவான் அசுரசம்பத்துடையாரது கோள்கை அங்கீகரிக்கத்தக்க தன்றுமெனக் கூறல்.

அருச்சுன! அசுரசம்பத்துடையார் தேகான்மவாதியராக விருத்தலின், அறநூல்கள் கூறும் வருணாச்சிரம ஆசாரங்களைச் சிறிதும் விரும்பாம லொழித்து விடுவர்; உண்மை கூறுவதையும் சுத்தமாயிருத்தலையும் ஒழித்துவிடுவர்; (காமம் - குரோதம் - உலோபம் - மோக முதலியவற்றால்) பெறத்தக்க பெரும் பயனை விவேகமில்லாதிருப்பர்; அற்பபுத்தி யுடையவரா யிருப்பர்; பெரும் பழிகளைத் தருவனவாய பாவ கருமங்களையே எப்போதுஞ் செய்வர்; (தாம் செய்யும் தொழில்களாலுண்டாகும்) நஷ்ட லாபங்களில் ஒன்றையும் அறியாதிருப்பர்; அதனால் அவர் கெடுத்தற்கரிய சத்துருக்களாய் இவ்வுலகத்துள்ள பிராணிகளை யெல்லா மழித்தற் பொருட்டே புலி - பாம்பு முதலிய பிராணிகளாகப் பிறப்பர். ‡

அசுர சம்பத்துடையார் தமது தீய செயல்களால் புலி-பாம்பு முதலியவற்றின் பிறப்புக்களை யடைந்து வருந்தி வருங்காலத்தில் யாதேனு மொரு கரும வசத்தால் மக்களாய்ப் பிறந்தாலும், மீண்டும் தமக்குத் தீமை தரத்தக்க காரியங்களையே செய்வரெனப் பகவான் கூறல்.

அருச்சுன! அவர்கள் யாதேனுமொரு கருமவசத்தால் மக்களாய்ப் பிறந்தாலும் நூறுகோடி வருஷமானாலும் விஷய போகங்களால் பூரணமாகாத காமபோகத்தைப் பூரணமாக்க விரும்பி மறைத

பிராணிகளி னுற்பத்தி பெண்ணும் ஆணும் தம்முள் விரும்பிக் கூடுதலாலுண்டாகின்றது; அதற்குக் காமந் தவிர வேறு காரண மில்லையென்று கூறுகின்றன ரென்பதாம்; இவ்வாறு கூறுவோர் தேகான்ம வாதியராய உலகாயதராவரென்பது இங்குணர்தற்பாலதாம்.

‡ மிகத் துச்சமாயுள்ள மாலை - சந்தன முதலிய போகப்பொருள்கள் அற்பமாம்; அவற்றில் பற்றுள்ள புத்தி அற்ப புத்தியாம்; அல்லது மலம் - மாமிச முதலியவற்றின் கூட்டமான உடம்பு அற்பமாம்; அதில் நானென்று கொண்டுள்ள புத்தி அற்ப புத்தியாம். அசுர சம்பத்துடையார்க்கு வரும் பிறப்புப் புலி பாம்பு முதலியனவா யிருத்தலின், அசுர சம்பத்தை விவேகிகள் சர்வப் பிரகாரத்தாலும் ஒழித்தல் வேண்டுமென்பதிங் குணர்தற்பாலதாம்.

வில்லாத மானத்தோடு மதத்தையும் தம்பத்தையும் பொருந்தி நின்றும், குறைத வில்லாத அவிவேகத்துடனே கோபத்தை யடைந்து நின்றும், ஏற்றுக்கொள்ளுதற்குரிய தாகாத அசுசி விரதத்தை மேற்கொண்டு பொய்த் தவஞ் செய்து வருவர். *

பகவான் அவ் வசுர சம்பத் துடையார் செயலை மீண்டும் விரித்துக் கூறல்.

அருச்சுனா! அவ் வசுர சம்பத்துடையார் தாம் பிறந்து மரணமாகு மளவும் அடைந்தனவும் அடையாதனவுமாய பொருள்களையே சிந்தித்துக்கொண் டிருப்பர்; தாமனுபவிக்குமாறு வருகின்ற மாலை சந்தன முதலிய பொருள்களையே யல்லாமல், மறந்தாயினும் அறம் பாவம், ஆத்மா - ஈசனென்றற்றொடக்கத்தனவற்றுள் ஒரு பொருளாவது அம்மாலை முதலியவற்றிற்கு வேறாக வில்லையென்று கூறுவர்; பேராசை யென்னும் கயிற்றால் கட்டுப்பட்டவராய், பெரும் போகங்களை யனுபவித்தற்பொருட்டு அநியாய வழியாகப் பொருள் தேடா நிற்பர். §

---

* ஒருவன் தான் பிறர் பூசித்தற்குரியவனாகாதிருந்தும், பலர் முன் தன்னைப் பூசித்தற்குரியவனாகக் காட்டுதல் மானமாம்; ஒருவன் தன்னிடத்து மேன்மை யில்லாதிருந்தும், அதனைத் தன்னிடத்துக் கற்பித்துக் கொள்ளுதல் மதமாம்; ஒருவன் தான் தருமகுண முடையவனல்லாதிருந்தும் பிறர்க்குத் தன்னைத் தருமகுண முடையவனாகக் காட்டுதல் தம்பமாம்; இஃது இடம்பமாம். சுடுகாடு முதலிய விடங்களில் மது - மாம்ச முதலியவற்றோடு பகவதிக்குச் செய்யும் பூசை அசுசி விரதமாம்; இது வேத விருத்தமா யிருத்தலின் பொய்த்தவமாம்.

அசுர சம்பத்துடையார் காமபோகத்தைப் பூரணமாக அனுபவிக்க விரும்பி, மானம் - மதம் - இடம்பம் - அவிவேகம்-கோபமென்பனவற்றை மேற்கொண்டு, வேத விருத்தமான விரதமுடையவரா யிருப்ப ரென்பதாம்.

§ அடையாத பொருளை யடைதல் யோகமாம். அதனைக் காத்தல் க்ஷேமமாம். இவ்வியோகக்ஷேம விசாரத்தை அசுர சம்பத் துடையார் அபரிமிதமாக வுடையவரா யிருப்பர்; அவர் தேகாத்ம வாதியராயிருத்தலின், அறம்பாவ முதலியன வில்லை யென்னுந் தீர்மானமுடையவரா யிருக்கின்றனர்; ஆசையால் கட்டுப்பட்டிருத்தலின், காம போகத்தை மிகுதியாக அனுபவித்தற்பொருட்டுப் பொருள்களை அநியாய வழியாகத் தேடுகின்றனரென்பதாம். அநியாயவழி - வஞ்சகம் - களவு - பலாத்கார முதலியனவாம்.

அசுர சம்பத் துடையாரது மநோராஜ்ஜியத்தையும் அவரடையும் கதியையும் பகவான் கூறல். [மநோராஜ்ஜியம்-வீணெண்ணம்.]

அருச்சுனா! அவ் வசுரசம்பத் துடையார் இந்தத் திரவியத்தை இப்போது யாம் இவ்வுபாயத்தா லடைந்தோம்; இத்திரவியத்தினும் வேறாக (மனக் களிப்பை யுண்டாக்கும்) திரவியத்தை யினியதிசீக்கிரமாக இவ்வுபாயத்தால் அடைவோமென்றும், இப்போதிப்பகைவனை இவ்வுபாயத்தா லழித்துவிட்டோம்; மற்றப் பகைவரையும் இனி யிவ்வுபாயத்தால் அநாயாசமாக அதிசீக்கிரத்தி லழித்துவிடுவோமென்றும், சப்தாதி விஷய போகங்களை யனுபவிப்பவருள் எம்மைப்போல அவற்றை யனுபவிக்கத்தக்க சமர்த்தர் எவருமில்லையென்றும், எம்மை யொத்தாரும் எம்மினு மிக்காரும் இருக்கின்றனரோ! இல்லையென்றும் மநோராஜ்ஜியஞ் செய்து வருவர்.

(அருச்சுனா! அவ்வசுரசம்பத்துடையார் இவ்வாறு மநோராஜ்ஜியஞ் செய்து வருவதன் காரணத்தைக் கூறுகின்றேன், நீ கேட்கக் கடவாய்.)

அருச்சுனா! அவர் யாம் ஜநக்கூட்டமும் தேகவலியும் மனவலியும் ஆரோக்கியமும் பெற்றிருக்கின்றோம்; பெருந் திரவியமுடையவரா யிருக்கின்றோம்; அதனால், எம்மை யொத்தாரேயன்றி எம்மினு மிக்காரு மில்லை; அவ்வாறிருப்பதால் யாமே யாவர்க்கும் ஈசனாவோமென்று தம்மைத்தாமே வியந்து பேசிக்கொள்வர். இன்னுமவர் யாம் எமது சித்தம் களிப்படைவதற்குரிய வேள்வியைச் செய்வோம்; வேள்வி செய்யும்போது திரவியங்களை அந்தணர்களுக்கு மேகம் பெருமழை பெய்வதுபோல மிகுதியாகக் கொடுப்போமென்று இவ்வாறு நாடோறும் மநோராஜ்ஜியஞ் செய்து வருவதல்லாமல், அவற்றைச் (சுருதி கூறியவாறு) செய்யார்.

அருச்சுனா! பந்தம் ஒழிவதற்குக் காரணமாக இல்லாத பல வகையாயுள்ள துஷ்ட சங்கற்பங்களென்று முன்னர்க் கூறிய சுழியைப் பொருந்தியே சுழலா நிற்பவரும் அடக்குவதற்கரியதாயுள்ள மோகமென்று சொல்லப்படுகின்ற வலையுள்ளே அகப்பட்டு நிற்பவருமாய அவ்வசுர சம்பத்துடையார் சரீரமாகிய சிற்றில்லினது ஆயுளாகிய புல்நுனியின் பனிநீர் யமனாகிய வெயிலால் வற்றிவிடுமாயின், தம்

உயிர் நடுக்கமடைய இறந்து, கடப்பதற்கரியவாய அசுசி நரகங்களென்று சொல்லப்படுகின்ற கடல்களிலே வீழவே கடமை யுடையவராவர். *

(அருச்சுன! நீ அவ்வசுர சம்பத்துடையாருள் சிலர் வேள்வி முதலிய சுப கருமங்களைச் செய்தலின், அவர் நரகத்தை யடைதலெவ்வாறுமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.)

அருச்சுன! அவ் வசுர சம்பத்துடையார் தம்மைத் தாமே உத்தமகுண மனத்தையு முடையவராக மதித்து வியந்து, உண்மை யுணர்ந்த பெரியோராகிய சாதுக்களைத் தம்மினும் மேலானவராக மதித்துப் பாராட்டுதலில்லா திருப்பர்; தாம் விரும்பிய பயனை யடைய வெண்ணி, சிறப்புள்ள வேள்வி முதலியவற்றைச் செய்த தீட்சிதர் - சோமயாஜி யென்று தம்மைப் பிறர் ஸ்துதி செய்தற் பொருட்டு, பரமேசுவரன் ஒவ்வொரு சிருட்டியி னாரம்பத்திலும் கூறி வருகின்ற அநாதியாய வேதங்கள் விதித்தவாறு (திரவியம் - தேவதை - மந்திரம் - தட்சிணை முதலிய யக்ஞ அங்கங்களோடு) செய்யாமலே யாகங்களைச் செய்வர். †

---

* இப்பொருள் இத சாதனமாம், இப்பொருள் அகித சாதனமாமென்னும் விவேக மின்மை யிங்கு மோகமாம். இதம் - நன்மை; அகிதம் - தீமை. வலையிலகப்பட்ட மீன் முதலியன சுதந்தரமற் றிருத்தல்போல மோகவலையி லகப்பட்டிருப்பவரும் சுதந்தரமற் றிருப்ப ரென்பதாம். மலம், மூத்திரம், கோழை, உதிர முதலியன நிறைந்துள்ள வைதரணி முதலியன அசுசி நரகங்களாம்.

அசுர சம்பத்துடையார் மோகத்தால் சுதந்தரமற் றிருப்பதால், விஷய போகத்திலே ஆசையுடையவராய், தீவினைகளை மறவாது செய்து அதனுல் நரகத்தை யடைதற்குரியவராகின்றன ரென்பதிங் குணர்தற் பாலதாம்.

† வேதங்கள் விதித்தவாறு செய்யாது வேறுவிதமாகச் செய்யும் யாகம் நாம யக்ஞமென்று சொல்லப்படும். அசுர சம்பத் துடையார் இடம்பம் - மானம் - மத மென்பனவற்றை யுடையவரா யிருத்தலின், உண்மை யுணர்ந்த பெரியோராகிய சாதுக்களைத் தம்மினும் மேலானவராக மதித்துப் பாராட்டுதலில்லாதிருக்கின்றன ரென்பதாம்.

வேதங் கூறியவாறு வேள்வியைச் செய்யாது வேறுவிதமாகச் செய்பவர் அதன் பயனை யடையாரென்ப திங்குணர்தற்பாலதாம்.

மோட்சத்தின் பகிரங்க சாதனமாயுள்ள யாக தான முதலிய கருமங்கள் சித்தியாதுள்ள அசுர சம்பத்துடையார்க்கு அதன் அந்தரங்க சாதனமாயுள்ள விசாரம்-வைராக்கியம்-பகவத்பத்தி முதலியன ஒருவாற்றானும் சித்திப்பதில்லையா மெனப் பகவான் கூறல்.

அருச்சுனா! நிலைபெற்ற களிப்பும் - வலியும்-காமமும் நிறைந்து, (யானெனும்) அகங்காரமாகிய பெருமயக்கம் பொருந்தியுள்ள அவ்வசுர சம்பத்துடையார் தமது தேகத்திலும் மனைவி - மக்கள் முதலிய மற்றவர் தேகத்திலும் புத்தி முதலியவற்றிற்குச் சாட்சியாயும் மிகு பிரியத்திற்கு விஷயமாயு முள்ள பரமேசுவரனை எனது சுபாவத்தைத் தமக் கன்னியமாக வெண்ணிக்கொண்டு என்னைத் துவேஷித்து வருகின்றனர். *

(அருச்சுனா ! நீ பரமேசுவரராய உமது கருணையால், அசுர சம்பத் துடையார்க்கு யாதாவதொரு காலத்தில் கடைத்தேறுதல் சம்பவியாதோ வென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

வெற்றியுள்ள அருச்சுனா! இம்மக்கள் யாவர்க்கும் கீழாயிருப்பவரும் பிராணிகளை யிம்சிக்கும் குரூரத்தன்மையால் சர்ப்பத்தை

*சாதுக்களை அவமதித்தற்குக் காரணமாயுள்ள சித்தத்தின் தோஷ விசேஷம் களிப்பாம்; பிராணிகளை வருத்துதற்பொருட்டுத் தேகத்திலுள்ள சாமர்த்திய விசேஷம் வலியாம்; இஷ்ட வஸ்துவின்மீ துள்ள பிரியம் காமமாம்; தன்னிடத்தில்லாத குணங்களைக் கற்பித்துக்கொண்டு, அவற்றால் தன்னை மேலானவனாகக் கருதுதல் இங்கு அகங்காரமாம்; பரமேசுவரனது ஆக்ஞா ரூபமா யுள்ள சுருதி ஸ்மிருதிகள் கூறியவற்றை அனுஷ்டியாமல் வெறுப்பதே பரமேசுவரனைத் துவேஷித்து வருதலாம்; அல்லது சர்வ சரீரத்திலும் பரமேசுவரன் ஆத்ம வடிவமா யிருத்தலை யறியாமல், அப் பரமேசுவரனை ஆத்மாவினும் வேறாகக் கருதி, பிராணிகளை விதியின்றி இம்சித்தலே பரமேசுவரனைத் துவேஷித்தலாம். அசுர சம்பத் துடையார் சற்குருமுதலிய பெரியாரிடத் துள்ள கருணை முதலிய குணங்களில் வஞ்சக முதலிய தோஷங்களைக் கற்பித்து, அவர்தம் வார்த்தையில் சிரத்தையின்றி யிருத்தலின், தம்மை நன்னெறியிற் செலுத்துவா ரின்றி யிருக்கின்றனர்; அதனா லவர் மோட்ச சாதனங்களுள் ஒன்றுமின்றி நரகத்தையே யடைதற் குரியவரா யிருக்கின்றன ரென்பதாம்.

யொத்திருப்பவருமாகிய அவ்வசுர சம்பத்துடையவரைச் சோர்வில்லாத துன்பங்க ளடையா நிற்கும்; அவர்தம்மைப் பரமேசுவரனுய நானே புலி பாம்பு முதலிய பிறப்புக்களாகிய புற்றுத்தோறும் அடிக்கடி புகுமாறு வீழ்த்துகின்றேன். †

(அருச்சுனு! நீ அவ் வசுர சம்பத்துடையார்க்குக் கிரமமாகப் பல பிறப்புக்களுக்குப் பின்னுவது கடைத்தேறுதல் சம்பவியாதோ வென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனு! இவ்வாறடிக்கடி புலி பாம்பு முதலிய பிறப்புக்களை யடைந்துவரும் அசுர சம்பத்துடையார் அப் பிறப்புத்தோறும் இது நித்தியம், இஃதநித்தியமென்று பொருள்களைப் பகுத்துணரும் தத்துவஞானம்(மெய்யுணர்வு)இல்லாமையால், தாம் கடைத்தேறுதற்குரிய வேத மார்க்கத்தை யடையாது முன்னடைந்த பிறப்பினும் கீழாய கிருமி கீடாதி அதோகதிதோறும் சுழன்று திரிந்து வருந்துவர்; (அதனுல், அவர்க்குக் கடைத்தேறுதல் சம்பவிப்ப தில்லையாம்.) ‡

---

† அசுர சம்பத்துடையார் சாஸ்திரப் பிரதிபாதகமாயுள்ள சன்மார்க்கத்திற் செல்லாம லதனை நிந்தித்து வருதலின், அவரிடத்துப் பரமேசுவரனது கருணை யுண்டாவ தில்லையாம்; ஆனுல், அவர்தம்மைப் பரமேசுவரன் அவர்தம் கருமத்திற் கேற்றவாறு நன்மை தீமைகளையடையச் செய்கின்றனன்; அதனுல், பரமேசுவரனிடத்து விஷமத்தன்மை - தயை யின்மை யென்பன சம்பவிப்ப தில்லையா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

இம்மக்கள் யாவர்க்குமென்றது தெய்வ சம்பத்துடையாரை.

அசுர சம்பத்துடையார் பரமேசுவரனையும் சாதுக்களையும் நிந்தித்து, சீவவதையிற் பிரீதியுற்று நராதமராய், சாஸ்திரம் விலக்கிய கருமங்களைச் செய்து வருதலின், அவர்க்கு அவர் செய்த கருமத்திற்கேற்றவாறு பலன் கொடுக்கும் பரமேசுவரன், அவர்தம்மை முன்னர் நரகத்திற் றள்ளிப் பலகாலம் வருத்தமுறச் செய்து, பின்ன ரவர்க்கு அவர்தம் கரும வாசனைக் கேற்றவாறு புலி பாம்பு முதலிய பிறப்புக்களைக் கொடுக்கின்றுன்; இவ்வாறவர்தம்மைப் பரமேசுவரன் செய்தலே அவர்மீது கருணை செய்யாமையா மென்பது மிங்குணர்தற் பாலதாம்.

‡ புலி - பாம்பு - கிருமி - கீடம் முதலிய பிறப்புக்களுள் உயிர்களுக்கு வேத மார்க்கத்தை யடைதற்குத் தகுதி யின்மையின், அவற்றிற்குக் கடைத்தேறுதல் சம்பவியாதிருக்கின்ற தென்பதாம்.

(அருச்சுனா ! நீ பலவகையா யுள்ள அவ்வசுர சம்பத்துக்கள் எவ்வாறு நீங்குமென்று வினவுதல் கூடும்; அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.)

அருச்சுனா ! ஒருவனை அத்தியந்தம் அதம யோனிகளை யடையுமாறு செய்வதும் எப்போதும் மீளுதற் கரிய நரகத்தின்க ணடையச் செய்வதுமாக வருகின்ற மார்க்கங்கள் மூன்றுண்டு ; அம்மூன்றனையும் ஒரு கிரமமாகக் கூறி உனக்கறிவிக்கின்றேன் ; அவற்றை நீ கேட்பாயாக.

அருச்சுனா ! விஷயங்களின் மீதுள்ள பிரியத்தா லுண்டாகிய காமமும், குற்றம் பொருந்தச் சுடுகின்ற அக்கினியை யொத்த கோபமும், உலோபமும் அசுர சம்பத்துக்களை மேன்மேலு முண்டாக்குவது வாயிலாக எவர்க்கும் நரகத்தை யடைதற்கும் நாசத்தை யடைதற்குங் காரணமாம் ; அக்காரணத்தால், காமம் - கோபம் - உலோபமென்னும் இம் மூன்றனையும் விவேகத்தால் பரித்தியாகஞ் செய்தவர் சர்வ அநர்த்தங்களு மொழிந்த நிரதிசயாநந்த வடிவ மோட்ச மென்னும் பெருவீட்டினைத் தமக்குளதாகப் பெற்றவராவர். §

சாஸ்திர விதியைக் கடந்து தம்முடைய இச்சையின்படி நடப்பவர் யாதொரு புருஷார்த்தத்தையு மடையாரெனப் பகவான் கூறல்.

அருச்சுனா ! இது செய்யத்தக்கது, இது செய்யத் தகாததென்று சாஸ்திரம் கூறும் மார்க்கத்தில் சேர்ந்தொழுகுவதை விரும்

§ காமக் குரோத லோபமென்பன நரக வாயில்களாம்; அசுர சம்பத்துக்களுண்டாதற்குச் சிறந்த காரணமா யிருப்பனவாம் ; அசுத்த வாசனைகளை யுண்டாக்குவது வாயிலாக நரகத்தையும், மிகக் கீழாய பிறப்புக்களையும் மக்க ளடைதற்குக் காரணமாயிருப்பனவாம்; அவற்றை விவேகத்தால் பரித்தியாகஞ் செய்தவர் வைராக்கிய முதலிய சாதனங்களைக் கிரமமாகப் பெற்று, அவற்றால் ஆத்மஞான முடையவராய், மீட்சியில்பதமென்னும் மோட்சத்தைப் பெறுவ ரென்பதாம்.

காமக் குரோத முலோப மென்பன பலவகையாயுள்ள அசுர சம்பத்துக்களுக்குக் காரணமா யிருத்தலின், அவை நீங்கியபோது அசுர சம்பத்துக்கள் தாமே நீங்கிவிடுமென்பதிங் குணர்தற்பாலதாம்.

காமக் குரோதம் உலோப மென்பனவற்றைப் பரித்தியாகஞ் செய்தலாவது விவேகத்தால் அவற்றைத் தடுத்துத் தடுத்து வருதல் வாயிலாக அவை சித்தத்தின்க ணெழாதிருக்கச் செய்தலாம்.

பாது தம்மனத்திற்குத் தோன்றியவாறு எதனையும் செய்து வருபவர் இகலோகமும் இதற்கு வேருய இயல்பைப் பொருந்தியுள்ள பரலோகமும் உண்டாக்கும் சுகங்களையும் மற்ற அந்தக்கரண சுத்தியையும் அதன் பயனுய முத்தியையும் எவ்வாற்ருனு மடையார். †

"பூதமுதலானவை போறுத்தருளு"கின்ற பகவான் சாஸ்திரம் விதித்தவா ரோழுகாதவர் யாதோரு புருஷார்த்தத்தையும் பெறுதற் குரிய ரல்லராகலின், அதிகாரி புருஷர் சாஸ்திரம் விதித்தவா ற்றொழுகுதல் வேண்டுமென்னும் பொருளைக் கூறுபவராய் இவ்வத்தியாயத்தை முடித்தல்.

அருச்சுனு! முற்கூறிய காரணத்தால் இது செய்யத் தக்கது, இது செய்யத்தகாதது என்பனவனைத்தையும் அறிதற்குப் பிரமாணமாயுள்ள சுருதி - ஸ்மிருதி - புராணம் - இதிகாச முதலிய சாஸ்திரங்கள் கூறியவாறு குற்றம் நோக்காது, சித்தசுத்தி யுண்டாமளவும் உனது யுத்தமுதலிய கருமங்களையே நீ செய்யக் கடவாயென் றருளிச் செய்தனர். ‡

16 - தேவாசுர சம்பத்து விபாகயோக அத்தியாயம் முற்றிற்று.

---

† தன்னைப் படிப்பவர்க்கு அவரறியாத அர்த்தங்களை யறிவிப்பது சாஸ்திரமாம். சுருதி - ஸ்மிருதி - புராணம் - இதிகாச முதலிய சாஸ்திரங்கள் கூறிய வழியிற் சென்றொழுகாது, தமதிச்சையின்படி யொழுகுகின்றவர் காமக்குரோத லோபமுடையவராய், அசுபவாசனைகளுக் கடிமையாயிருப்பர்; அதனுல், அவர்இகலோக சுகத்தையும், பரலோக சுகத்தையும், அந்தக்கரண சுத்தியையும், மோட்சத்தையும் பெறுதற்குரியவராகா திருக்கின்றன ரென்பதாம். இகலோகம் - இவ்வுலகம்; பரலோகம் - சுவர்க்காதி யுலகம்.

‡ அசுரசம்பத்தும், பல வேறு இழிபிறப்பும், பல வேறு துன்பங்களு முண்டாதற்குக் காரணமா யுள்ள காமக்குரோத மூலோபமென்பனவற்றை விவேகத்தாலொழித்துச் சாஸ்திரம் விதித்தவா றொழுகுகின்றவர் தெய்வ சம்பத்துடையவராய், இம்மைப்பயன் - மறுமைப்பயன் - மோட்சமென்னு மூன்றனையும் தவறாது பெறுவரொன்பதிங் குணர்தற்பாலதாம்.

17 - குண விகார அத்தியாயம்.

பதினாறுவது அத்தியாயத்தின் முடிவில் சாஸ்திர விதியை யனுசரியாது தமது விருப்பத்திற் கேற்றவாறு கருமங்களைச் செய்பவர்க்குத் தத்துவஞான முண்டாகாதென்று பகவான் கூறியதைக் கேட்ட அருச்சுனன், சாஸ்திர விதியை ஆலசிய முதலிய தோஷங்களின் வயத்தா லொழித்துத் தமது பிதா - பிதாமகன் முதலிய பெரியோரது வியவகாரத்தாலேயே நிஷித்த கருமங்களைச் செய்வ தில்லாது சிரத்தையோடு விகித கருமங்களைச் செய்து வருபவர் தெய்வ சம்பத்துடையவர் அசுர சம்பத்துடையவ ரென்னு மிருவரினும் வேறானவரா யிருத்தலின், அவர்க்குச் சாஸ்திரங்கள் கூறும் சாதனங்களுள் அதிகார முண்டா ? இல்லையா ? என்றையுற்றுப் பகவானை நோக்கி வினாவுதல்.

"உண்டு மீள வொளித்துல கியாவையும்
கண்டு காப்பவன் கட்டுரைத் திட்டதே
கொண்டு பார்த்தனக் கொண்டல்வண் ணன்றனைத்
தொண்டு கூறிப் பணிந்திது சொல்லுவான்" †

குளிர்ச்சி பொருந்திய பெருங்கடல்போலத் திருமேனியை யுடைய பகவானே! உலகத்தாருள் சிலர் சுருதி - ஸ்மிருதி - புராண - இதிகாச முதலிய சாஸ்திரங்கள் கூறிய விதியைப் பரித்தியாகஞ் செய்து, சிரத்தையோடு கூடிச் செய்யும் தேவ பூசை யக்ஞம் முதலிய கருமங்கள், சம்சாரத்தைத் தரும் தோஷ முடையனவாய சாத்துவிகம் - இராசதம் - தாமதமென்னும் குண மூன்றனுள், எக்குணத்தின் காரியமாம் ? இதற்கு விடையருளல் வேண்டும். $

---

† அருச்சுனன் உலகனைத்தையும் சங்காரகாலத்தி லுண்டு மறைத்து மீண்டும் சிருஷ்டிகாலத்தில் படைத்துக் காக்கும் பகவான் சாஸ்திர விதியை யொழித்தவர் எப்பயனையும் பெறாரென்று கூறியதைச் சங்கையாகக்கொண்டு, அம் மேகவண்ணனாகிய பகவானை வணங்கி, பகவானே! யான் உமதடிமையாவே னென்று கூறி யிதனை வினாவுவானாயினான்.

$ சாஸ்திர விதியை ஆலசிய முதலியவற்றால் பரித்தியாகஞ் செய்து பிதா - பிதாமகன் முதலிய பெரியோரது வியவகாரத்தால் சிரத்தையோடுகூடித்

பகவானது விடை.

அருச்சுனா ! தேகாபிமான முடைய சகல புருஷர்க்கும் பூர்வ கரும சம்ஸ்கார வாயிலாக உண்டாகின்ற சிரத்தையின் வேறுபாடனைத் தையும் கூறுமிடத்து, அச்சிரத்தை சாத்துவிகி, இராசசி, தாமசி யென்று கூறப்படும் இப்பேதத்தால் சத்துவம் - இராசதம் - தாமத மென்னும் மூவிதக் குணங்களுமாய் நிற்கு மல்லாமல் மற்றொன்முக முடிவு பெற்று நிற்ப தில்லையாம் ; பொருந்துதற்கரிய அக்குணங்க ளின் வேற்றுமையா லுண்டாய சிரத்தையின் வேறுபா டனைத்தை யும் உனக்கு விளங்குமாறு கூறுகின்றேன், அவற்றை நீ கேட்கக் கடவாய்.

பகவான் சாத்துவிக முதலிய குண பேதங்களை அவற்றின் காரிய பேதத்தால் விரிவாகக் கூறல்.

அருச்சுனா! சொல்லுதற்கரிய இக் குண மூன்றனுள், சாத்துவிக குணமுடையவர் இவரெமக்கு மோட்சந்தருங் கடவுளாவரென்று நம்பி வசு உருத்திரர் முதலிய சாத்துவிக குணமுடைய தேவர்களையே சரணமாக அடைந்து பூசிப்பர் ; இராசத குணமுடையவர் இவர் தாம் எம்மை யிரட்சிக்கும் கடவுளாவரென்று நிச்சயித்து, இராசத குணமுடைய குபேரன் முதலிய இயக்கரையும் நிருதி முதலிய இரா க்கதரையும் சரணமாக அடைந்து பூசிப்பர் ; தாமத குணமுடைய வர் இவை யெம்மைப் பாதுகாப்பனவா மென்று கருதித் தாமத குண முடைய பேயும் பூதமுமா யுள்ளனவற்றைச் சரணமாக அடைந்து பூசிப்பர். ¶

தேவபூசை யக்ஞ முதலியவற்றைச் செய்பவர் தெய்வசம்பத்துடையாரினும் அசுர சம்பத்துடையாரினும் வேறானவராயிருத்தலின், அவர்க்குச் சாஸ்திரங் கூறிய சாதனங்களுள் அதிகாரமுண்டா ? இல்லையாவென் றருச்சுனன் பகவானை நோக்கி வினவினனென்பதாம்.

¶. சாஸ்திரஞானமின்றித் தமக்கியற்கையாகவுள்ள சிரத்தையால் வசு-உருத் திரர் முதலிய சாத்துவிகதேவர்களைப் பூசிப்பவர் சத்துவகுண முடையாராவர்; சாஸ்திர ஞானமின்றித் தமக் கியற்கையாகவுள்ள சிரத்தையால் இராசத குண முடைய குபேரன் முதலிய இயக்கரையும் நிருதி முதலிய இராக்கதரையும் பூசிப் பவர் இராசத குண முடையாராவர்; சாஸ்திர ஞான மின்றித் தமக் கியற்கையாக

சுருதி ஸ்மிருதி முதலிய சாஸ்திர விதியைப் பரித்தியாகஞ் செய்தவர் சத்துவம் - இராசதம் - தாமதமென்னுங் குணத் திரயத்துள் யாதாவதொன் றுடையவரா யிருத்தலே அவர்தம் தேவபூசை முதலியவற்றால் குறிப்பித்துக் கூறிய பகவான் இராசத குண முடையாருள்ளும் தாமத குண முடையாருள்ளும் சிலர் பூர்வபுண்ணிய கரும பரிபாகத்தாலே சத்துவ குண முடையவராய், சாஸ்திரங் கூறிய சாதனங்களி லதிகார முடையவராவர் ; துராக்கிரகத்தாலும் பூர்வஞ் செய்த பாவ கரும பரிபாகத்தா லடைந்துள்ள துஷ்டரோடு கூடுதல் முதலிய தோஷங்களாலும் இராசத குணத்தையும் தாமத குணத்தையும் பரித்தியாகஞ் செய்யா திருப்பவர் சாஸ்திரங் கூறிய சன்மார்க்கத்தி னின்றும் தவறி, சாஸ்திர நிஷித்தமாயுள்ள துன்மார்க்கத்திற் சென்றுழுகி, இகலோகத்திலும் பரலோகத்திலும் துக்கத்தையே யடைதற்குரியவராவரெனக் கூறல்.

அருச்சுனா ! நீ அகங்காரம் - இடம்பம் - காமம் - இராகம் - பலமென்னு மிவை யடங்குத லில்லாதும், சுருதி - ஸ்மிருதி - புராணம்- இதிகாச மென்றற் றொடக்கத்தனவாய் விரிவாகப் பொருந்திய சாஸ்திரங்களின் விதியை யனுசரியாதும், தமது சரீரத்தையும் அதனுள் போக்திருவடிவமாயுள்ள பரமேசுவரனான என்னையும் மெலியச் செய்கின்ற கோரமான தவத்தைத் தொடங்கிச் செய்கின்றவரை அசுரயோனியிற் றோன்றினவரென் றுணரக்கடவாய் †

வுள்ள சிரத்தையால் தாமத குண முடைய பேய் பூதங்களைப் பூசிப்பவர் தாமத குண முடையாராவரென்பதிங் குணர்தற்பாலதாம்.

தமது தருமத்தினின்றும் தவறிய பிராமணர் முதலியவர் தமது தேகம் விழுந்தபின் வாயுமய தேகத்தை யடைந்து, கொள்ளிவாய் முதலிய பெயருடைய பேய்வடிவராவரென்பதாம். இப்பேய் பிரேதமென்றும் சொல்லப்படும்.

† யானே யாவரினும் குணங்களெல்லாவற்றாலும் சிறந்தவனென்னும் துஷ்ட அபிமானம் அகங்காரமாம்; யாவரும் தன்னைத் தரும சொரூபியென்று மதித்தல் வேண்டுமென்று கருதி, பலரிடத்தும் யான் தருமஞ் செய்பவனாயிருக்கின்றேனென்று கூறல் இடம்பமாம்; காணி மனை முதலியவற்றின்மீதுள்ள இச்சை காமமாம்; அக்காணி மனை முதலியவற்றின்கண் அழுத்தமாயுள்ள ஆசை இராகமாம்; காணி மனை முதலியவற்றை யானவசியம் சம்பாதித்தல் வேண்டுமென்னும் பிடிவாதம் பலமாம்; சுடுபாறையிற் கிடத்தல் முதலியன கோரமான தவமாம்.

சத்துவ குண முடையார் தேவராவர், இராசத - தாமத குண முடையார் விபரீதபுத்தி யுடையவரா யிருத்தலின் அசுர ராவரெனக் குறிப்பித்த பந்தமும் வீடும் - உறவும் பகையு மோருசிறிது மில்லாத பகவான் சத்துவகுண முடையாரை யறிதற்பொருட்டும், இராசத-தாமத குணமுடையாரை நீக்குதற்பொருட்டும் அவர்தம் ஆகாரம்-யாகம் - தவம் - தானமென்னும் நான்கும் மும்மூன்று வகையா யிருத்தலைக் கூறல்.

அருச்சுனா! சர்வப் பிராணிகட்கும் பிரியமாயுள்ள ஆகாரமும், யாகமும், யாவரும் செய்தற்குரிய தவமும் தானமு மென்று சிறப்புப் பொருந்தக் கூறப்படும் இந்நான்கனுள் ஒவ்வொன்றும் மேன்மைபொருந்திய சத்துவ குணம்-இராசத குணம்-தாமத குண மென்னும் குணத்திரயத்தாலே மும்மூன்று வகையாம்; அவற்றைக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய். ¶

அசுரசாதிய ரல்லாத மாநுட ரிடத்து நேரே அசுரத் தன்மை யின்றாம்; ஆயினும், அவர் ஆசுர நிச்சயமுடைமையாலும் துஷ்ட கருமங்களைச் செய்வதாலும் அசுர யோனியிற் றோன்றினவரென் றுபசாரமாகக் கூறப்படுகின்றன ரென்க. துஷ்ட கருமங்களைச் செய்பவர் ஆசுர நிச்சய முடையவரா யிருப்ப ரென்பதிங் குணர்தற்பாலதாம். வேதார்த்தங்கட்கு விரோதமான நிச்சயம் ஆசுர நிச்சயமாம்.

சுடுபாறையிற் கிடத்தல் முதலிய வேத விருத்தமாய கோர தவங்களைச் செய்பவர் தமது சரீரத்தையும் அது வாயிலாக அதனுள் போக்திரு வடிவமாயுள்ள பரமேசுவரனையும் வீணே யிளைக்கச் செய்கின்றனர்; அத் தவங்களால் அவர்க்கு வரும் பயன் துன்பமேயா மென்பதும், போக்திரு வடிவமா யுள்ள பரமேசுவரனை யிளைக்கச் செய்வது அப்பரமேசுவரன் கூறிய சாஸ்திர விதியைக் கடப்பதா மென்பதும், பரமேசுவரன் அந்தக்கரணத்தில் சீவ ரூபமாகப் பிரதிபிம்பித்து அச் சீவ ரூபத்தால் போக்திரு வடிவமா யிருக்கின்றா னென்பது மிங்குணர்தற்பாலனவாம். போக்திரு - போகத்தை யனுபவிப்பவன்; போகம்-சுக துக்க அனுபவம்.

¶ தின்பன, நக்குவன, சுவைப்பன, உண்பனவென்று ஆகாரம் நான்கு வகையா யிருப்பினும், அவை (சர்வ பதார்த்தமும்) முக்குண வடிவமாக விருத்தலின், அக் குண பேதத்தால் மூன்று வகையாகவே யிருக்கின்றனவென்பதும், யாகம் - தவம் - தானம் என்பனவும் குணபேதத்தால் மும்மூன்று வகையாகவே யிருக்கின்றனவென்பதும் இங்குணர்தற் பாலனவாம்.

பகவான் ஆகாரம் குண பேதத்தால் மூன்று வகையா யிருத்தலைக் கூறல்.

சத்துவகுண முடையாரது ஆகாரம்.

போரில் பின் வாங்காமையால் சிங்கவேற்றை யொத்த அருச்சுனா! சத்துவ குண முடையார்க்குப் பிரியமாயுள்ள ஆகாரங்களை யுரைக்குமிடத்து, அவை: பார்த்த வளவில் சித்தத்திற்குப் பிரியத்தை யுண்டாக்கு மழகைப் பொருந்தி, மதுரமான சுவையினை யுடையனவாய், நெய்யின் சம்பந்தத்தால் பசையா யிருப்பனவாய், சிநேகத்தோடுகூடிச் சரீரத்திற்குச் சாமர்த்தியத்தையும் நோயில்லாமையையும் பெருகச் செய்து, உற்சாகத்தையும் பூரண ஆயுளையும் இன்பத்தையும் விருத்தியாகச் செய்வனவாம். இவ்வாறாய ஆகாரமே சத்துவகுண முடையார்க்குரிய ஆகாரமாம். ‡

இராசத குண முடையாரது ஆகாரம்.

வேற்படையை யுடைய அருச்சுனா! இங்ஙனமாய ஆகாரமன்றி, இவற்றிற்கு வேறாயுள்ள இராசதகுண முடையார்க்குப் பிரியமாயுள்ள ஆகாரங்களைக் கூறுமிடத்து, அவை: கைப்பனவும், புளிப்பனவும், உவர்ப்பனவும், உறைப்பனவும், மிக வெப்பம் பொருந்திய நெய்யோடு கூடினவாய் நெருப்புப்போல மிகுதியாகச் சுடுவனவுமாக இருப்பனவாம். இவ்வாகாரங்களாலே உடம்பிலே (வாத பித்த சிலேத்தும முதலிய தாதுக்களின் வேறுபாடுவாயிலாகக்) கொடிய நோய்களும், சித்தத்திலே பெருந் துக்கமு முண்டாவனவாம். †

தாமத குண முடையாரது ஆகாரம்.

அருச்சுனா! இராகத் துவேஷ முதலிய தோஷங்களை யடைந்துள்ள சித்தமுடைய தாமத குண முடையார்க்குப் பிரியமாயுள்ள ஆகா

---

‡ சிநேகம் - பிரிவின்மை; இன்பம் - உண்டபின் உண்டாகும் மகிழ்ச்சி.

† வேம்பு முதலிய ஆகாரங்கள் கைப்பனவாம்; கைப்பு - கசப்பு. எலுமிச்சை முதலிய ஆகாரங்கள் புளிப்பனவாம்; உப்பு முதலிய ஆகாரங்கள் உவர்ப்பனவாம்; மிளகாய் முதலிய ஆகாரங்கள் உறைப்பனவாம்; உண்ணும்போது மிகுவெப்பம் பொருந்திய நெய்யோடு கூடிக் கையும் வாயும் சுடுதற்கேதுவாய ஆகாரங்கள் மிகச் சுடுவனவாம். இவ்வாகாரங்கள் ரோகத்தையும் சோகவடிவ துக்கத்தையும் தருதற் கேதுவா யிருத்தலின், இவை விடுதற்குரியனவாமென்க.

ரங்களைக் கூறுமிடத்து, அவை: ஊசிய பழஞ்சோறும், எச்சிற்சோறும், தேவர்களின் ஆராதனத்திற் காகாதனவும், இகழ்தற்குரிய மாமிச முதலியனவும், செவ்வையாக வேகாதனவும் பிறவுமாம். இவ்வாகாரங்களாலே பிறரை வெறுத்தற் கேதுவாய சின முதலியனவும் துன்பங்களு முண்டாவனவாம். ‡

பகவான் சாத்துவிக முதலிய மூவகை யாகங்களைக் கூறல்.

சாத்துவிக யாகம்.

மாலையால் விளங்குகின்ற மார்பை யுடைய அருச்சுனா! "கிரமமறு சகமெய் யென்றும் தேகநா னென்று முள்ளே விரவிய மோகத்தாலடையப்படும் பயனைச் சிறிதுங் கருதாது, இவை நம்மால் அத்தியாவசியகமாகச் செய்யத்தக்கனவாமென்று நிச்சயித்து, விளக்கமாகச் சாஸ்திர விதிப்படி செய்கின்ற யாகங்கள் சாத்துவிக யாகமாம்.

இராசத யாகம்.

சுவர்க்காதிப் பயன்களை விரும்பியாவது பலர் புகழவேண்டி இடம்பத்தின் பொருட்டாவது செய்கின்ற யாக மனைத்தும் இராசத யாகமாம்.

தாமத யாகம்.

சாஸ்திரங்கள் கூறும் விதி யில்லாமலும், அந்த யாகம் செய்வதன் கண் நுட்பமாய தேர்ச்சி யுடைய ருத்துவிக்குக்களின் தாற்பரிய மில்லாமலும் (அந்த ருத்துவிக்குக்களிடத்துச் சிரத்தை யில்லாமலும்), கிரமமாக ஜபிக்கத்தக்க மந்திர மில்லாமலும், வந்து யாசிப்பவர்க்கு யாதொன்றுங் கொடுத்த லில்லாமலும் செய்கின்ற யாகங்கள் தாமத யாகமாம். *

‡ பிறவும் என்றமையால், இரசமற்ற ஆகாரமும், தீ நாற்றமுடைய ஆகாரமும் கொள்ளற்பாலனவாம். இங்குக் கூறிய ஆகாரங்கள் ரோகம் சோகம் துக்க முதலியவற்றைத் தருவனவாமென்பது மிகு பிரசித்தமா யிருத்தலின், இவையும் விடுதற்குரியனவாமென்க.

* அக்கினிஹோத்திரம் - தரிசபூரண மாசம் - சாதுர்மாசியம் - ஜோதிஷ்டோம முதலிய யாகங்களைச் சுவர்காதிப் பயன் கருதாது செய்தவிடத்து அவை சாத்துவிக யாகமாம்; அவற்றைச் சுவர்க்காதிப் பயனை யுத்தேசித்தாவது இடம்பத்தை யுத்தேசித்தாவது செய்தவிடத்து அவை இராசத யாகமாம்; அவ்வக்கினி

பகவான் சத்துவகுண தவம், இராசதகுண தவம், தாமதகுண தவமெனத் தவத்தை மூன்று வகையாகக் கூறுதற்பொருட்டு, வாக்கு - மனம் - காயமென்னும் திரிகரண பேதத்தாலே தவம் மூவகையா மெனக் கூறல்.

அக்கினிபோல விளங்கும் வேற்படையை யுடைய அருச்சுனு! தவத் தொழில் வாக்கால் வசனித்தல், மனத்தாற் செய்தல், காயத்தாற் செய்தல் என மூவகையா யிருப்பதாம். ஆராய்ச்சி வாயிலாக வாக்கு - மனம் - காயமென்னு மித் திரி கரணங்களாலு முண்டாகுந் தவங்களை நுட்பமாகக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய்.

வாக்காற் செய்யும் தவம்.

பரிசுத்தனுன அருச்சுனு! கேட்பார் யாவர்க்கும் அவர்தம் செவிக்குப் பிரியமான பெருமை பொருந்திய அமிர்தமே யென்று சொல்லத்தக்கதாய வார்த்தைகூறுதலும், ஆராய்ந்து சத்திய வசனத்தைக் கூறுதலும், வேத மோதுதலும் வாக்காற் செய்யும் தவமாம். $

ஹோத்திர முதலியவற்றைச் சாஸ்திர விதி முதலியனவில்லாது செய்தவிடத்தோ அவை தாமத யாகமாம். இம் மூவகை யாகங்களுள், சாத்துவிக யாகம் சித்த சுத்தியையுண்டாக்குவதற்கு முக்கிய காரணமாக விருப்பதாம்;இராசத யாகம் சித்த சுத்தியை யுண்டாக்குவ தன்றும்; ஆனல், சுவர்க்காதிப் பயனை யடையச் செய்வதற்கேதுவாய தருமம் அல்லது அறமென்னும் அபூர்வத்தை யுண்டாக்குவதாம்; தாமத யாகம் எந்தத் தருமவடிவ அபூர்வத்தையு முண்டாக்குவ தன்றும்; ஆனல், அதருமம் அல்லது பாவமென்னும் அபூர்வத்தை யுண்டாக்குவதற்கு முக்கிய காரணமாக விருப்பதாம். அதருமத்தால் துக்கமன்றிப் பிறிதொன் றுண்டாவ தில்லை யென்பது மிகு பிரசித்தமாம்.

$ தன்னைக் கேட்பவர்க்கு வருத்தத்தைச் செய்யாததும், சுகத்தைத் தருவதும், அமிர்தம்போல எப்போது மின்பத்தைத் தருவதுமாய வார்த்தையைக் கூறுதலும், பிரமாண முடையதும் பிறிதொரு பிரமாணத்தால் மாறுவதாகாததுமாய சத்திய வசனத்தைக் கூறுதலும், வேதாத்தியயனம் செய்தற்குரிய நியமந் தவருது வேதாத்தியயனஞ் செய்தலும் வாக்காற் செய்யும் தவமாமென்க.

ஒருவர் மற்றொருவர்க்கு யாதாவதொன்றனைக் கூறுமிடத்துத் துக்கத்தை யுண்டுபண்ணுததாயும், சத்தியமாயும், பிரியமாயும், இதமாயும், மிதமாயுமுள்ள வார்த்தையைக் கூறல் வேண்டு மென்பதாம்.

மனத்தாற் செய்யும் தவம்.

அருச்சுனா! விஷய இச்சையால் தெளிவடையாதுள்ள மனத்தைத் தெளிவடையுமாறு சமாதியப்பியாசத்தால் வசமாக்குதலும், சப்தாதி விஷயங்களில் செவி முதலிய இந்திரியங்களின் வாயிலாகச் சென்றடைந்து மயங்கும் மனத்தை அம் மயக்கத்தினின்று நீக்குதலும், குரூர விருத்தியை மனத்தில் கொள்ளாதிருத்தலும் செய்தற்கரிய மாநச தவமாம். ¶

காயத்தாற் செய்யும் தவம்.

வில்வீரருள் தலைவனாக வுள்ள அருச்சுனா! சதாசார முடைய பிராமணரிடத்தும், பிரஹ்மா - விஷ்ணு - சிவன் - சூரியன் - அக்கினி - துர்க்கை முதலிய தேவதைகளிடத்தும், தந்தை - தாய் - ஆசிரியர் - தத்துவஞானிகள் முதலிய குரவரிடத்தும், மயக்கமின்றித் தொண்டு செய்தலும், பிராணிகளை யிம்சை செய்யாமையும், சாஸ்திர நிஷித்தமா யுள்ள மைதுனத்தை யொழித்தலும் காயத்தாற் செய்யும் தவமாம். †

¶ சமாதியாவது மனம் ஒருமுகமாய் ஆத்ம சிந்தனை செய்வதாம். மனத்தைச் சமாதி யப்பியாசத்தால் தன்வசமாக்குதலும், அது விஷயங்களிற் சென்று மயங்குதலை விசாரணையா லொழித்தலும், அதனிடத்தெழும் குரூர விர்த்தி யென்னும் கோபத்தைப் பெருகாவா றடக்குதலும் மனத்தாற் செய்யும் தவமா மென்க.

† தத்துவ ஞானிகள் எச்சாதியாரிலு முண்மை பற்றி, அவர் குரவருள் ஒருவராகக் கூறப்பட்டனர். இதனால், தத்துவ ஞானிகள் பிராமணராகவே யிருத்தல் வேண்டுமென்னும் நியம மின்றாமென்பது பெறப்பட்டவாறறிக.

சதாசாரமுடைய பிராமணரையும், தேவதைகளையும், குரவரையும் பூசித்தலும், கொலை செய்யாமையும், சாஸ்திரநிஷித்தமாய புணர்ச்சி யின்மையும் காயத்தாற் செய்யுந் தவமாமென்க.

சதாசாரமுடைய பிராமணர் முதலாயினோர்க்குச் சாஸ்திரம் விதித்தவாறு சிரத்தை பக்தியோடு அவரவர்தம் தகுதிக்கேற்ப நமஸ்காரம் - சேவை - தட்சிணை - அன்னதான முதலியவற்றைச் செய்தலே அவாவர்க்குத் தொண்டு செய்தலாம்.

சாஸ்திர நிஷித்தமாயுள்ள மைதுனத்தை யொழித்தலும் பிரஹ்மசரியமா மென்பதிங் குணர்தற்பாலதாம். நிஷித்தம் - விலக்கு. இங்குக் கூறிய பிராணி

வாக்கு, மனம், காயமென்னும் பேதத்தால் தவத்தை மூன்றுவகையாகக் கூறியருளிய பகவான் அத்தவம் சாத்துவிகம், இராசதம், தாமத மென்னும் குணபேதத்தாலும் மூன்று வகையாமெனக் கூறல்.

சாத்துவிக தவம்.

அக்னிபோல விளங்கும் கூர்மைவாய்ந்த வேற்படையை யுடைய அருச்சுன! யாம் கூறிய வாக்கு - மனம் - காயமென்னு மிம்மூன்று லும் உலகத்தார் மகிழ்வடையச் செய்கின்ற அரிய தவங்களுள், ஒருவன் எனதென்னும் அபிமானத்தால் தன்னைப் பந்தித் துண்டாகும் பயனை விரும்பாது செய்கின்ற அரிய தவமானது சாத்விக தவமென்று தக்கோரால் சொல்லப்படுவதாம். ‡

இராசத தவம்.

அருச்சுன! இவர் குற்ற மில்லாத தவமுடைய ரென்று உலகத்தார் சிறப்பித்துக் கூறுதற் பொருட்டும், அவிவேகிகள் செய்யும் பூசையை விரும்புதலுடன், பிறரிடத்துப் பொருளைத் தானமாகப் பெறுதற் பொருட்டும் இடம்பமாகச் செய்கின்ற தவத்தை மிகப் பெரியோர் செய்தாராயினும், இதனை இராசத தவமென்று நீ பொருந்து மாறு உணர்வாயாக. *

களை யிம்சை செய்யாமையும் - சாஸ்திர நிஷித்தமாயுள்ள மைதுனத்தை யொழித்தலு மாகிய விரண்டும்: பிறர் பொருளைக் களவு செய்யாமையையும், பிறரிடத்தொன்றை யிரவாமையையும், மண்ணாலும் நீராலும் உடம்பைச் சுத்தி செய்தலையும் உணர்த்தி நின்றன வென்க.

‡ ஒருவர் பயனை விரும்பாது மன வொருமையோடு மிகு சிரத்தையாக வாக்கு - மனம் - காயபேதத்தால் மூன்று வகையாக வுள்ள தவத்தைச் செய்வாராயின், அது சாத்துவிக தவமாமென்க.

*அவிவேகிகள் செய்யும் பூசையாவது ஆசனத்திருத்திப் பாதபூசை செய்து வணங்குதலாம்.

உலகத்தார் கொண்டாடுதற்பொருட்டும், அவிவேகிகள் செய்யும் பூசையின் பொருட்டும், பிறரிடத்துப் பொருளைத் தானமாகப் பெறுதற்பொருட்டும் செய்கின்ற தவம் இராசத தவமாமென்க. இது சாத்துவிக தவம்போல இம்மைப் பயன், மறுமைப்பயன், மோட்சமென்னு மூன்றையும் தருவதற்குக் காரணமாவ தில்லையாம்; ஆனால், இம்மைப் பயனொன்று மாத்திரம் தருதற்குக் காரணமாவ தாம்; அதனையும் நியமமாகத் தருவதற்குக் காரணமாவ தில்லையா மென்க.

தாமத தவம்.

பூந்தாது சிந்துகின்ற மலர் மாலை பொருந்திய நீண்ட முடியை யுடைய அருச்சுனா! ஒருவன் அவிவேகத்தை மிகவு முடையவனாய், தனக்கும் பிறர்க்கும் குற்ற மிக்க பெருந் துக்கத்தையும் நாசத்தை யுமே செய்வதாகப் பகலில் சூரியனாலும் இரவில் பனியினாலும் உடல் வருத்தமுறச் செய்கின்ற அரிய தவமானது தாமத தவமாம். $

பகவான் தானமும் சாத்துவிக முதலிய குணபேதத்தால் மூன்று வகையாமெனக் கூறல்.

சாத்துவிக தானம்.

அருச்சுனா! ஒருவன் முன்னே தனக்கொருவர் ஒரு காரியஞ் செய்திருப்பதன்பொருட்டு அவர்க்குத் தானஞ் செய்வ தில்லாமலும், தானத்தைச் செய்து முடித்து, இத்தானத்தால் பின்னே ஒப்பற்ற சிறந்தபொருள்களுண்டாகு மென்பதை விரும்பாமலும், (இத் தானம் அத்தியாவசியகமாகச் செய்யத் தக்கதா மென்று நிச்சயித்து,) உத்தம காலத்திலே உத்தம தேசத்திலே உத்தமர்க்குத் தன்னுடைய பொருளைக் கொடுப்பதே சாத்துவிக தானமாம். §

இராசத தானம்.

திக் கெட்டும் நிறைந்த புகழை யுடைய அருச்சுனா! ஒருவன் இத் திரவியத்தைக் கொண்டு நாம் அத்தியாவசியகமாகச் செய்யத்

$ ஒருவன் அவிவேகத்தின் மிகுதியால் தனக்கும் பிறர்க்கும் துக்கத்தை யும் நாசத்தையும் தரும் தவத்தைப் பகலில் வெயிலாலும் இரவில் பனியாலும் தன்னுடல் வருந்தச் செய்வானாயின், அது தாமத தவமாமென்க. இத்தவம் இம்மையிலும் மறுமையிலும் துன்பந் தருவதற்கே காரணமாக விருப்பதாம்.

§ தனக் கொருவ ருபகாரஞ் செய்திருப்பது நோக்கி, அவர்க்குத் தானஞ் செய்வதும், தானத்தால் வரும்பயனை நோக்கி அதனைச் செய்வதும் சாத்துவிக தானமன்றாம்; ஆனால், தனக் கொருவ ருபகாரஞ் செய் திருப்பதையும் தனக்குப் பின்வரும் பயனையும் நோக்காது, உத்தம காலத்திலே உத்தம தேசத்திலே உத்த மர்க்குச் செய்யும் தானமே சாத்துவிக தானமா மென்க. உத்தம காலம் - சூரிய கிரகணமுதலிய காலமாம்; உத்தமதேசம் - குருக்ஷேத்திர முதலியனவாம்; உத்த மர் - வித்தையும் தவமுமுடையவர். பின்னே ஒப்பற்ற சிறந்த பொருள்க ளுண் டாகு மென்பது மறுமையிலே சுவர்க்கங்கிடைக்கும்; நல்ல மனைவி மக்கள் முத லாயினோருண்டாவர்; பூரணமாக ஐசுவரிய முண்டாகும் என்பதாம்.

தக்க காரிய மிதுவா மென்னுங் கருத் தொன்று மில்லாது, முன்னே சிலர் தனக் குபகாரஞ் செய்திருப்பதற்குப் பிரதி யுபகாரமாக அவர்க் குப் பிரியத்தோடு செய்கின்ற தானங்களும், இத்தானம் செய்வதால் மறுமைப்பய னுண்டாகுமென் றாராய்ச்சி செய்து செய்கின்ற தானங்க ளும் இராசத தானமாம்.¶

தாமத தானம்.

தளர்வற்ற பெருந் திறலுடைய அருச்சுனா! ஒருவன் தனக்கு நியாய வழியில் கிடையாததாகிய ஒரு பொருளைத் தானஞ் செய்தற் குரியதாகாத காலத்திலே தானஞ் செய்தற் குரியதாகாத விடத்திலே கீழ் மக்களுக்கு அவிவேகத்தோடும் அப்பிரியத்தோடும் கொடுத்தல் தாமத தானமாம். $

ஆகாரம் - யாகம் - தவம் - தானமென்பன சத்துவ முதலிய குண பேதத்தால் மும்மூன்று வகையாம்; அவற்றுள், சத்துவ ஆகாரம், சத்துவ யாகம், சத்துவதவம், சத்துவ தான மென்பனவே சிறந் தனவாமென்று குறிப்பித் தருளிய பகவான் சத்துவ ஆகாரம் ஒரு வகையால் சித்த சுத்தியைத் தருவதாயினும் சுவர்க்க முதலிய பயனை யடைதற்குக் காரண மாகாமையின், அதனை யொழித்து, சத்துவ யாக முதலியன யாதேனு மொரு தோஷ முளதாயின், புண்ணியப் பயனைத் தருதற் குக் காரணமாகா தொழிதலின், அவற்றைச் செய் யும்போது பிரமாதத்தா லுண்டாகும் தோஷம் நீங்குதற் பொருட்டு ஓம் தத் சத் என்று உச்சரித்துக்கொண்டு அவற்றைச் செய்யத் தொடங்கல் வேண்டுமென்று கூறல்.

¶ பிரதி யுபகாரத்தின் பொருட்டாவது சுவர்க்காதிப்பயன்களின் பொருட் டாவது செய்யும் தானம் இராசத தானமாமென்க.

$ இங்கு உத்தம காலத்திலே உத்தம தேசத்திலே உத்தமர்க்கு ஒருவர் அவி வேகத்தோடும் அப்பிரியத்தோடும் பொருளைக் கொடுப்பாராயின், அதுவும் தாமத தானமா மென் றுணர்தல் வேண்டும். தானஞ் செய்தற் குரியதாகாத காலம் ஆசௌச காலமாம்; ஆசௌசம் - தீட்டு. தானஞ் செய்தற் குரியதாகாத விடம் துஷ்டர்களின் சம்பந்தத்தாலாவது இயல்பாகவாவது பாவத்தை யுண்டாக்கு வதற் கேதுவாய இடமாம்; கீழ்மக்கள் - நடர் விடர் முதலாயினோர். நடர் - கூத்தாடிகள்; விடர் - தூர்த்தர்.

அருச்சுன ! சத்துவ குண முதலியவற்றின் வேறுபாட்டால் தம்முள் ஒப்பாதலில்லாத ஆகாரம் - யாகம் - தவம் - தானமென்பன மும்மூன்று வகையாக விருக்குமென்று பெரியார் கூறிய அந்த வகையனைத்தையும் உனக்கு விளங்குமாறு கிரமமாகக் கூறினேன். சுருதி சம்மதமும் பெரியோர் சம்மதமாயு முள்ள சாத்துவிக யாகம் - சாத்துவிக தவம் - சாத்துவிக தான மென்பவற்றைச் செய்ய அவற்றால் மோட்சமடைதற்குரிய உயர்ந்த தருமமான துண்டாவ தெவ்வாறு மென்று நீ வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக் கடவாய்.

மணிமாலையும் மணம் பொருந்திய மலர்மாலையும் தரித்த மார்பினையுடைய அருச்சுன ! ஓம் என்னும் ஏகாட்சரமும், துதி செய்தற் கரிய தத் என்னும் பதமும், சத் என்னும் ஒப்பற்ற பதமுமா மென்று கூறப்படுகின்ற ஓம் தத் சத் என்னும் இம்மூன்றும் பரப்பிரஹ்மத்தின் பெயர்களாம். ஓம் தத் சத் என்னு மிவற்றாலேயே பிராமணர் முதலிய கருமகர்த்தாவும், யாம் முன்பு உணர்ந்துள்ள கரண ரூபமான வேதமும், கரும ரூபமான யாகமும் சிருட்டியி னுதி காலத்திலே பிரஹ்மாவின் வாயிலாக வுண்டாயின வென்பதை நீ அறியக்கடவாய். §

---

§ பிரஹ்மா சிருட்டியினுதிகாலத்தில் பிராமணர்முதலிய கருமகர்த்தாவையும் கரணரூப வேதத்தையும் கருமரூப யாகத்தையும் ஓம் தத் சத் என்னும் பரப்பிரஹ்மத்தின் பெயராலேயே படைத்தன ரென்பதாம். பரப்பிரஹ்மத்திற்கு அகார- உகார - மகார மென்னு மூன்றவயங்களுடைய ஓம் என்னும் பிரணவம் பெயராயிருத்தல்போல, ஓம் தத் சத் என்னு மூன்றவயவமுடைய ஓம் தத் சத் என்பதும் பெயரா யிருக்கின்றமையின், ஓம் தத் சத் என்று ஸ்மரணஞ் செய்துகொண்டு, யாகம் - தவம் - தானமென்பவற்றைச் சத்துவகுண பூர்வகமாகச் செய்ய முயல்பவர்க்கு அவை பிரமாதத்தாலுண்டாகும் தோஷம் நீங்கப்பெற்றுத் தம் பயனைத் தவறு தளிப்பனவா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

பிராமணர் முதலிய என்றமையால், க்ஷத்திரியரையும் வைசியரையுங் கொள்க.

பிரஹ்மா சிருஷ்டியி னுதி காலத்தில் பிராமணர் முதலிய கருமகர்த்தாவையும் கரணவடிவ வேதத்தையும் கரும வடிவ யாகத்தையும் உண்டாக்குவதற்கு ஓம் தத்சத் என்னும் பரப்பிரஹ்மத்தின் பெயர் காரணமாயிருந்தமையின், ஓம் தத்சத் என்று ஸ்மரித்துக்கொண்டு, யாக முதலியவற்றைச் செய்தல் அவை தோஷமின்றி முற்றுப் பெறுதற்குக் காரணமா யிருக்கின்ற தென்பது பெறப்படுவதாமென்க.

பகவான் ஓம் தத் சத் என்னும் பரப்பிரஹ்ம நாமத்தின் மேன்மையை அருச்சுனனுக்குத் தெரிவித்தற்பொருட்டு ஓம் தத் சத் என்பவற்றைத் தனித்தனியே துதிசெய்தல்.

கதிர்விட்டு விளங்கும் வேற்படையை யுடைய அருச்சுனா! தானல்லாத உடம்பை யானென்றும் - தன்னுடையதல்லாத பொருளை யெனதென்றுங் கருதி அவற்றின்கண் பற்றுச் செய்தற் கேதுவாய மயக்கத்தைத் தத்துவ ஞானத்தா லொழித்திருப்பவர் உலோகோபகாரமாக யாக- தான- தவவடிவக் கிரியைகளைச் செய்யும்போது, அவற்றை எப்போதும் ஓம் என்னும் சப்தத்தை உச்சரித்துக்கொண்டே செய்யா நிற்பர்; மோட்ச மடைதற்குரிய தகுதி வாய்ந்த முமுட்சுக்கள் யாம் முன்னர்க் கூறிய தத் என்னுஞ் சப்தத்தை உச்சரித்துக் கொண்டே பலவகையாகவுள்ள யாக - தான - தவவடிவக் கிரியைகளைப் பயன் கருதாமலே செய்யா நிற்பர். யாகம் - தானம் - தவமென்னு மூன்றனது இருப்பும், அவற்றைச் செய்வதற் கனுகூலமாயுள்ள கருமங்களும் சத்தென்றே கூறப்படுவனவாம். பெரியோர் சத்பாவத்திலும் சாதுபாவத்திலு மன்றி விவாக முதலிய சுப கருமங்களைச் செய்யும்போதும் அந்தச் சத்தென்னும் சப்தத்தை உச்சரியா நிற்பர். *

---

* ஓம் என்று உச்சரித்துக் கொண்டும், தத் என்று உச்சரித்துக் கொண்டும், சத் என்று உச்சரித்துக் கொண்டும், யாகம்-தவம் - தானமென்றற்றொடக்கத்தனவற்றைச் செய்பவர்க்கு அவை தடையின்றி முற்றுப்பெற்றுப் பயன் தருமென்பதும், ஓம் தத் சத் என்று உச்சரித்துக்கொண்டு யாக முதலியவற்றைச் செய்பவர்க்கு அவை தடையின்றி முற்றுப் பெற்றுப் பயன் தருமென்பதுபற்றிச் சொல்லவேண்டிய தொன்று மில்லை யென்பது மிங்குணர்தற் பாலனவாம்.

யாதாவதொன்ற னிருப்பிற் சங்கை யுண்டாமிடத்து, அதற் கிருப்புண்டென்று சத் சப்தத்தைக் கூறுதல் சத்பாவமாம்; எவராவ தொருவரிடத்துச் சாதுத் தன்மையிற் சங்கை யுண்டா மிடத்து, அவர்க்குச் சாதுத்தன்மை யுண்டென்று சத் சப்தத்தைக் கூறுதல் சாதுபாவமாம். ஓம் என்பதும், தத் என்பதும், சத் என்பதும் பரப்பிரஹ்மத்தின் நாமங்களாம்; இவற்றுள், எதனையாவது உச்சரித்துக்கொண்டு யாகம்-தவம்-தானம்-விவாக முதலிய கருமங்களைச் செய்தல் வேண்டும்; அங்ஙனம் செய்வதால் அவை தடையின்றி முற்றுப் பெறுவனவாம்; ஓம் - தத்-சத் என்று உச்சரித்துக் கொண் டவற்றைச் செய்வது பல்லாற்றானும் சிரேஷ்டமாமென்க.

"தீதிலா வுலகம் தன்னுளே யுதிப்பத் தேவகி திருவயிற் றுதித்தோ" ஞகிய பகவான் சிரத்தையோடு ஓம் தத் சத் என்னும் பரப்பிரஹ்மத்தி ஞமத்தை உச்சரித்துக்கொண்டு யாகம் - தவம் - தான முதலியவற்றைச் செய்பவர்க்கு அவை முற்றுப்பெற்றுப் பயன் தருவனவாம்; சிரத்தை யின்றி அந் நாமத்தை உச்சரித்துக்கொண் டவற்றைச் செய்பவர்க்கு அவை முற்றுப் பெற்றுப் பயன் தருவ தில்லையா மென்று கூறி, இவ் வத்தியாயத்தை முடித்தல்.

அருச்சுன! தக்காரிடத்து ஞான சாஸ்திரங்களைப் படித்து, அவற்றின் பொருள்களை உணர்ந்த அதிகாரிகள் சிரத்தையோடு ஓம் தத் சத் என்னு மிம் மூன்று பதங்களையும் அவற்றின் பொருளோடும் உச்சரிக்கும்வகையோடு முச்சரித்துக்கொண்டு யாகம் - தவம் - தான முதலியவற்றை யொழியாது செய்வார்; அவ்வாறு செய்வதால் அவை அசத்தாவ தில்லையாம்; ஆதலால், சிரத்தையோடு பரப்பிரஹ்மத்தின் நாமமான இந்த ஓம்-தத்-சத் என்னும் பதங்களை உச்சரித்துக் கொண்டே ஒவ்வொருவரும் தத்தம் வருணச்சிரமத்திற் குரிய கருமங் களைச் செய்தல் வேண்டுமென் றருளிச்செய்தனர்.†

17 - குணவிகார அத்தியாயம் முற்றிற்று.

---

† அசிரத்தையோடு யாகம் - தவம் - தான முதலியவற்றைச் செய்பவர்க்கு அவை முற்றுப் பெற்றுப் பயன் தாராமையின், அசத்தாம்; அதனலவர்க்கு இக் லோகத்தின் பயனும் பரலோகத்தின்பயனு மில்லையாமென்பதும், ஓம்-தத்-சத் என்று உச்சரித்துக்கொண்டு கருமத்தைச் செய்பவர் அதன்கண் சிரத்தையில்லா தவ ராயின், அவற்றை உச்சரித்தல் அவர்க்குப் பயன் தருவதாகா தென்பது மிங்குணர்தற் பாலனவாம்.

ஆலசிய முதலிய தோஷங்களால் சாஸ்திர விதியைப் பரித்தியாகஞ்செய்து, பிதா-பிதாமகன் முதலிய பெரியோரது வியவகார மாத்திரத்தால் யாகம்-தவம்- தான முதலியவற்றைச் செய்பவரிடத்துச் சாஸ்திரவிதியைப் பரித்தியாகஞ் செய் வதாகிய அசுர தருமமும், சிரத்தையோடு கருமங்களைச் செய்வதாகிய தேவதரும மும் காணப்படுதலின், அவர் அசுரரா? - தேவரா? என் றிவ்வா றுண்டாய அருச் சுனனது சம்சயத்தைத் தீர்த்தற்பொருட்டு, இராசத-தாமத சிரத்தை வாயிலாக இராசத-தாமத வடிவ யாக முதலியவற்றைச் செய்பவர் அசுரராவர்; அவர் சாஸ் திரங் கூறும் ஞான சாதனங்களுக் கதிகாரி யாகார்; சாத்துவிக சிரத்தை வாயி

18 - சஞ்சேப அத்தியாயம்.

பகவான் அருச்சுனனுக்குத் திட நிச்சய முண்டாதற் பொருட்டு இவ்வத்தியாயத்தின்கண் சோக அத்தியாய முதல் குணவிகார அத்தியாய பரியந்தங் கூறிய அர்த்தங்களைச் சங்கிரகித்துக் கூறல்.

அருச்சுனன் வினா.

ஏகமே கருதுவா ரிதயமே விளைவதோர் போகமே! உலகிலோர் பொருவிலா வொருவனே! நாகமே யமளியாய்! நளினமே மலர்வதோர் மேகமே! வன்னிவாயு வானமாகி மண்ணு நீரு மாகி யோனே! தேவரீ ரிதுகாறும் கூறியவற்றுள், சந்நியாச மென்பதையும் தியாக மென்பதை யும் யான் முறையாக அறியாதிருக்கின்றேன்; உள்ளவா றவற்றை அடி யேனுக்குத் திருவாய்மலர்ந்தருளல் வேண்டும். ‡

பகவான் விடை.

அருச்சுனா! பழைமையாயுள்ள சந்நியாசம்-தியாக மென்பனவற் றின் பொருள்களைச் சங்கிரகமாகத் தனித்தனி கூறுகின்றேன், நீ கேட் கக்கடவாய்.

அருச்சுனா! புருஷாது விருப்பத்திற்குரிய விஷயங்களென்று கூறப்படுகின்ற மக்கள் மனை பசு முதலிய பயன்களைத் தரும் கரும மனைத்தையும் அவற்றின் பயனோடு முற்றும் விட்டுவிடுவது சந்நியாச சப்தத்தின் பொருளாம்; இவ்வுலகத்தில் யாதொரு மயக்கமு மில்லாது கரும பல னனைத்தையும் இவை துன்பந் தருவனவாமென் றுணர்ந்து முற்றும் விட்டுவிடுவது தியாக சப்தத்தின் பொருளாம். ¶

லாகச் சாத்துவிக வடிவ யாக முதலியவற்றைச் செய்பவர் தேவராவர்; அவர் சாஸ் திரங் கூறும் ஞான சாதனங்களுக் கதிகாரி யாவரென் றிவ்வாறுய நிர்ணயம் பக வானால் அருளிச்செய்யப் பட்டதென்க.

‡ ஏகம் - பரம்பொருள்; இதயம் - சித்தம்; போகம் - பேரின்பம்; பொரு விலா - ஒப்பிலாத; நாகம் - ஆதிசேஷன்; அமளி - பாய்; நளினம் - செந்தாமரை மலர்; வன்னி - தீ; வானம் - ஆகாயம்.

¶ காமிய கரும மனைத்தையும் விட்டுவிடுதல் சந்நியாசமாம்; கருமங்களை விடாமல் அவற்றின் பயனை மாத்திரம் விட்டுவிடுதல் தியாகமாமென்பதிங் குணர் தல் வேண்டும்.

பகவான் சந்நியாச சப்தத்திற்கும் தியாக சப்தத்திற்கும் தாம் கூறிய பொருள்களை வற்புறுத்துதற்பொருட்டு, சாங்கியர் முதலாயினோரது மதங்களைக் களைய அவர்தம் மதங்களைக் கூறல்.

சாங்கிய மதம்.

அருச்சுனா! சாங்கிய சாஸ்திரத்தைப் படிக்கும் தவமுடைய பெரியார் துன்பங்களைச் செய்கின்ற பல்வேறு திறத்தனவாயுள்ள பாவ கருமங்களை விட்டுவிடுதல் போல இவ்வுலகத்தில் கருமாதிகாரி புருஷர் செய்கின்ற பல்வேறு திறத்தனவாயுள்ள புண்ணிய கரும மனைத்தையும் அவை பந்த காரணமா யிருத்தலால் அந்தக்கரணசுத்தி யில்லாத கருமாதிகாரிகளும் அனுஷ்டியாது விட்டுவிடுதலையே சந்நியாச-தியாக சப்தங்களின் பொருளாகக் கூறுகின்றனர். §

பூர்வமீமாம்சக மதம்.

அருச்சுனா! பூர்வமீமாம்சகர் யாக - தான - தவ ரூபமாயுள்ள கருமங்கள் அந்தக்கரணசுத்தி தருவது வாயிலாகத் தத்துவஞான முண்டாதற்குக் காரணங்களா யிருத்தலின், இவற்றைப் பரித்தியாகஞ் செய்வது எவர்க்கும் தகுதியுடைய தன்றா மென்று கூறுவர். அவர்

சுவர்க்க போக முதலியவற்றை விரும்பிச் செய்யும் சோதிஷ்டோம முதலியன காமிய கருமமாம். சோதிஷ்டோம முதலியன தம்மைப் பயனோக்கிச் செய்யும்போது காமிய கருமமாய்ச் சுவர்க்காதி போகத்தைத் தருவது வாயிலாகப் பந்த வேதுவாயும், பயனோக்காது செய்யும்போது நிஷ்காமிய கருமமாய்ச் சித்தசுத்தி தருவது வாயிலாக மோட்சவேதுவாயுமிருக்கின்றன வென்றும், நித்திய - நைமித்திக கருமங்களும் தம்மைப் பயனோக்கிச் செய்யும்போது காமிய கருமமாயும் பயனோக்காது செய்யும்போது நிஷ்காமிய கருமமாயுமிருக்கின்றன வென்றும், காமிய கருமத்தை விடுதல் சந்நியாசமாமென்றும், நிஷ்காம கருமத்தைச் செய்தல் தியாகமாமென்று மிங்குணர்தற்பாலனவாம்.

§ சாங்கிய நூலார் நித்திய-நைமித்திக-காமிய-பிராயசித்த முதலிய கரும மனைத்தும் தம்மைச் செய்கின்றவனுக்குப் பந்தவேதுவாக விருத்தலின், தோஷ முடையனவாம்; அதனால், அந்தக்கரணசுத்தி யில்லாத கருமாதிகாரிகளும் கரும மனைத்தையும் பரித்தியாகஞ் செய்தல் வேண்டும்; இதுவே சந்நியாசமும் தியாகமுமாமென்று கூறுகின்றனரென்ப திங் குணர்தற்பாலதாம். தீவினைகளைச் செய்யா தொழிதல்போல நல்வினைகளையும் செய்யா தொழிதலே சந்நியாசமும் தியாகமுமா மென்பது சாங்கியரது கொள்கையாம்.

அங்ஙனங் கூறுங் காரணத்தால், அறிய வேண்டிய ஆத்மாவை யானுக் அறிந்து மன மொழி மெய்க ளடங்கி யிருப்பவர்க்கல்லாமல் மற்றவர்க்கு யாக-தான-தவ ரூபமாயுள்ள கருமங்களை விட்டிருத்தல் கூடாது; அவற்றை விடின், அஃதவர்க்கு இழிவைத் தருவதாம். $

கருமத் தியாகத்தில் வாதிகளின் கொள்கையைக் கூறிய பகவான் தமது துணிபைக் கூறல்.

அருச்சுனா! கருமத்தியாகம் தாமத-இராசத-சாத்துவிகமென்னு முக்குண பேதத்தால் மூவகைத்தாம்; அவற்றைக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய்.

யாகம்-தானம்-தவமென்னு மிம்மூன்றும் தம்மைப் பயனோக்காது செய்பவரது சித்தத்தின் மயக்கத்தை யொழிப்பனவாம்; அக் காரணத்தால் ஆராய்ந்து கூறுமிடத்து யாகம் தான முதலிய கருமங்களை யெவரும் விடுதல் கூடாது. *

அருச்சுனா! நீ யாக தான முதலியவற்றை அதிகாரி புருஷர் எவ்வாறு செய்தல் வேண்டுமென்று வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய்.

$ பூர்வ மீமாஞ்சகர் யாக-தான-தவ ரூபமாயுள்ள கருமங்கள் அந்தக்கரண சுத்தி தருவது வாயிலாகத் தத்துவஞான முண்டாதற்குக் காரணமா யிருத்தலின், அவற்றை யெவரும் பரித்தியாகஞ் செய்தல் கூடாது; செய்யின், அவர் பதிதராய் விடுவ ரென்று கூறுகின்றன ரென்பதிங் குணர்தற்பாலதாம்.

பகவான் சாங்கிய மதம் - பூர்வ மீமாஞ்சக மத மென்னு மிரண்டனுள், முன்னதை யங்கீகரியாது பின்னதை யங்கீகரித்து, அஃது ஆத்ம ஞானிகளுக்கு வேண்டியதன்றாம்; மற்றவர்க்கு வேண்டுவதாமெனக் கூறினாரென்க.

* எவரு மென்றது சித்த மயக்கமுடையவரை. சித்த மயக்கம்-மனம் காமம் வெகுளி முதலியவற்றால் கலக்கமுற் றிருப்பதாம். இங்குக் கூறிய கருமத் தியாக மூன்றனுள், தாமத கருமத் தியாகமும் இராசத கருமத் தியாகமும் கொள்ளப் படுவன வன்றாம்; மற்றது கொள்ளப்படுவதாமென்ப துணரற்பாற்றாம்,

யாக தான முதலிய கருமங்களை விபரீத புத்தியால் செய்யா தொழிதல் தாமத கருமத் தியாகமாம்; துன்பந் தருவதென்னும் புத்தியால் செய்யா தொழிதல் இராசத கருமத்தியாகமாம்; அந்த யாகம் தான முதலியவற்றைப் பயனை விரும்பாது செய்தல் சாத்துவிக கருமத் தியாகமாம்.

யாகம் தான முதலிய இவ் வினைகளால் மறுமைக்கண் ணடையும் சுவர்க்காதி பலன்களையும் யானிக்கருமங்களைச் செய்கின்றேனென்னும் அபிமானத்தையும் விட்டு அந்த யாக முதலியவற்றை எவரும் செய்தல் வேண்டுமென்பது பூர்வாசாரியர்க்கும் பரமேசுவரனு னெனக்கும் சம்மதமானதாம். ‡

பகவான் தாமத கருமத் தியாகத்தைக் கூறல்.

கீர்த்தியுடைய அருச்சுனு! நித்தியம் முறையாகச் செய்தற் குரியதாய கருமத்தை யொருவன் உன்மத்தரைப்போல விபரீத புத்தியால் செய்யா தொழிவதைத் தாமதத் தியாகமென்று சாஸ்திரங் கூறுகின்றது. ¶

---

‡ யாகம்-தானம்-தவமென்னுங் கருமங்களை இவற்றை யான் செய்கின்றேனென்னும் கர்த்திருத்துவ அபிமானத்தை விட்டும் சுவர்க்காதி பலத்தை விரும்பாதும் செய்தல் வேண்டுமென்பது பரமேசுவரனது சம்மதமும் பூர்வாசிரியரது சம்மதமுமாமெனக.

காமிய கருமங்களாலும் மனத்தூய்மை யுண்டாவதாம்; அத்தூய்மை போக சித்திக்குக் காரணமா யிருப்ப தன்றி ஞான சித்திக்குக் காரணமா யிருப்ப தில்லையாம்; நிஷ்காம கருமங்களா லுண்டாகும் மனத்தூய்மையோ போக சித்திக்கும் ஞான சித்திக்கும் காரணமா யிருப்பதாமென்பதிங் குணர்தற்பாலதாம்.

¶ நித்தியம் முறையாகச் செய்தற்குரியதாய கருமம் நித்திய கருமமாம். நித்திய கருமம் - அக்கினிஹோத்திரம் - சந்தியாவந்தன முதலியனவாம். நித்திய கருமத்தைத் தியாகம்செய்தல் வேண்டுமென்பவர் சாங்கிய நூலாராவர். அவர் காமிய கருமந் தோஷ முடையதாவதுபோல நித்திய கருமமும் தோஷமுடையதாம்; நித்தியகருமஞ் செய்யும்போது நெல் முதலியவற்றைக் குத்துவதாலும், யாகசாலையைச் சுத்தஞ் செய்வதாலும், அக்கினியில் ஹோமஞ் செய்வதாலும் பிராணிகட்குத் துன்ப முண்டாகின்றது; அதனுல், காமிய கருமத்தை விடுதல் போல நித்திய கருமத்தையும் விடுதல் வேண்டும்; சித்த சுத்தியின் பொருட்டுக் காயத்திரி முதலிய மந்திர ஜபஞ் செய்தல் வேண்டும்; அதனுல், சித்த சுத்தி யுண்டாவதாமென்று கூறுகின்றனர். காயத்திரி முதலிய மந்திர ஜபம்போல நித்திய கருமமும் சித்த சுத்தி தருவதாமென்னு முணர்வில்லாமையாலே அவர் அங்ஙனங் கூறுகின்றனர். அவர் வேதவிகிதமான நித்திய கருமத்தில் நிஷித்த வுணர்வும், அநர்த்தத்திற்குக் காரணமாகாத அதில் அநர்த்தகாரண வுணர்வும், தருமமான அதில் அதரும வுணர்வும், அனுஷ்டானஞ் செய்தற்குரிய அதில்

பகவான் இராசத கருமத் தியாகத்தையும் சாத்துவிக கருமத் தியாகத்தையும் கூறல்.

அருச்சுனா! நித்திய கருமத்தைச் செய்வதால் சரீரத்திற்கு வருத்தமுண்டாகின்றதென்ப துணர்ந்து, அதனைச் செய்யா தொழிவது சந்தேக மின்றி இராசதத் தியாகமாம். மறுமையிலே சித்திக்கும் சுவர்க்காதி பலத்தி லாசையும் இக் கருமத்தை யான் செய்கின்றே னென்னும் கர்த்திருத்துவ அபிமானமும் ஒழியும்படி செய்யத்தக்க நித்திய கருமத்தை இது யான் செய்தற்குரியதே யென்று கருதிச் செய்வது சாத்துவிகத் தியாகமாம். §

பகவான் சாத்துவிகத் தியாகமுடையானது தன்மையைக் கூறல்.

அருச்சுனா! வேதங் கூறும் விதி நிஷேதங்களுள் யாதொன்றன் கண்ணும் ஐயப்பாடு சிறிதுமில்லாது குற்றமற்ற தத்துவ ஞானியும் சாத்துவிகத் தியாகியுமா யிருப்பவன் இன்ப முண்டாதற்குக் காரண மாய சோபன கருமத்தில் பிரியத்தையும் துன்ப முண்டாதற்குக் காரண மாய அசோபன கருமத்தில் அப்பிரியத்தையும் விட்டிருப்பன். $

இஃதனுஷ்டானஞ் செய்தற் குரிய தன்றென்னுமுணர்வு முடையவராய், நித்திய கருமத்தை விடுதற் குரியவ ராயினரென்க.

சாங்கியர் தாமத குண ரூபமான விபரீத புத்தியால் நித்திய கருமத் தியாகஞ் செய்தலின், அது தாமதத் தியாகமாயிற்றென்க.

§ முற்கூறிய விபரீத புத்தியில்லாதும் சித்தசுத்தி யில்லாது முள்ள கருமா திகாரி நித்திய கரும மனைத்தும் துக்க சாதனமா மென்று கருதி, அவற்றைச் செய்வதா லுண்டாகும் சரீர வருத்த பயத்தாலே அவற்றைச் செய்யா தொழிதல் இராசதத் தியாகமாம். துக்கம் இராசத குண வடிவமாகலின், இத் தியாகம் இராசதத் தியாகமாயிற் றென்க. இவ் விராசதத் தியாகமுடையவன் சாத்து விகத் தியாக முடையவ னடையும் ஞான நிஷ்டை வடிவப் பயனை யொருபோது மடைவ தில்லையாம்.

பலத்தி லிச்சையும் அபிமானமுமின்றி நித்திய கருமத்தைச் செய்தல் சாத்து விகத் தியாகமாம்.

பலத்தி லிச்சை யின்மையும் அபிமான மின்மையும் சாத்துவிக குண வடிவ மாகலின், இத்தியாகம் சாத்துவிகத் தியாகமாயிற் றென்க.

$ சாத்துவிகத் தியாக முடையவன் சத்துவ குணம் மிகுதியாக விளங்கப் பெற்றிருத்தலின், தத்துவஞானியாகி வேதங் கூறும் விதி நிஷேதங்களுள்

பகவான் கருமப் பிரவிர்த்திக்குக் காரணமாய இராகத் துவேஷங்கள் தத்துவ ஞானியின்க ணில்லாமையால், அவனுக்குச் சர்வ கருமங்க ளின் பரித்தியாகம் சம்பவிக்கும்; அஞ்ஞானிக்குச் சர்வ கருமங்க ளின் பரித்தியாகம் சம்பவியாதெனக் கூறல்.

அருச்சுன! இவ்வுலகத்தில் ஒருவர் தேகாபிமானத்தோடுங் கூடி யிருப்பாராயின், அவரால் புண்ணிய பாவமென்னு மிருவினைக ளும் முற்றும் நீக்கப்படுவன வல்லவாம்; அவர் பந்தத்திற்குக் காரண மாய கருமத்தின் பலனைத் தியாகஞ் செய்து விடுவாராயின், தியாகஞ் செய்தற்குக் கூடாத கரும மனைத்தையும் தியாகஞ் செய்தவ ராவ ரென்று கூறுதற் குரியவராவர். †

யாதொரு சந்தேகமு மின்றி, சோபன கருமத்தில் பிரியமும் அசோபன கருமத் தில் அப்பிரியமு மில்லா திருப்ப னென்பதாம்.

(1) நித்தியகருமம் சித்த சுத்தி தருவது வாயிலாக ஆத்ம சாட்சாத்காரத்திற் குக் காரணமா யிருத்தலின், அது சோபன கருமமாம்; (2) காமிய கருமமும் நிஷித்த கருமமும் பந்தத்திற்குக் காரணமா யிருத்தலின், அவை அசோபன கருமமாம். சாட்சாத்காரம் - பிரத்தியட்சம்.

நித்திய கருமத்தைப் பலத்திலிச்சையும் அபிமானமு மின்றிச் செய்யும் சாத்துவிகத் தியாகி சத்துவ குணத்தின் மிகுதியால் தத்துவ ஞானியாயபோது சர்வ கரும ரகிதனாய் விளங்குதலின், அவனுக் கொரு கருமத்தில் பிரீதியும் மற் றொரு கருமத்தி லப்பிரீதியு முண்டாவ தில்லையா மென்பதிங் குணர்தற் பால தாம்.

† தேகாபிமான முடையவர் இராகத்துவேஷமில்லாதிருப்பதுகூடாதாகலின், அவர் கருமங்களை முற்றும் விடுவது முடியாதாம்; அவர் தாம் செய்யும் கருமங் களைப் பயனை விரும்பாது செய்வாராயின், அவரும் தியாகியே யென்று கூறுதற் குரியவராவ ரென்பதாம். இங்கு ஞானி தேகாபிமான மில்லாதவனா யிருப்பன்; அஞ்ஞானி அஃதுடையவனா யிருப்ப னென்ப துணர்தற் பாலதாம்.

கருமத்தியாகம் ஞானிக்கல்லது அஞ்ஞானிக்குச் சம்பவியாதாம்; அங்ஙன மாக, இங்கு அஞ்ஞானியைத் தியாகியென்று கூறுவது உபசார வழக்காலா மெனக.

தேகாபிமான முடைமையால் ஆத்மஞான மில்லாத கருமி பலத்தி லிச்சை யின்றிக் கருமத்தைச் செய்யின், அவன் கௌண சந்நியாசியாம்; தேகாபிமான மின்றிப் பரமாத்ம சொரூபமாய் விளங்கும் ஞானி யாதொரு கருமத்தையு முண் மையிற் செய்யாமையின், அவன் முக்கிய சந்நியாசியா மெனக,

பகவான் கௌண சந்நியாசிக்கும் முக்கிய சந்நியாசிக்கும் கருமபலத் தியாகம் சமமா யிருப்பினும், அவ்விருவர்க்கும் வரும் பயன் வெவ்வேறேயா மெனல்.

அருச்சுன! பாவமும் - புண்ணியமும் - இவ்விரண்டுங் கூடிக் கலந்த மிசிரமுமாகக் கருதுகின்ற கருமங்கள் மூன்றும்; அம்மூன்று கருமங்களும் அவற்று லுண்டாகின்ற முடிந்த பயனாகிய அநிஷ்டம் - இஷ்டம் - மிசிரங்களாய சரீரப் பிராப்திகளும் பொன்னும் பூஷணமும் போலக் காரண காரிய வடிவமா யிருப்பனவாம்; இம் மித்தையான சரீரப் பிராப்திகள் ஆத்ம சாட்சாத்கார மில்லாதவராய கௌண சந்நியாசிகட்கே அவர்தம் மரணத்திற்குப் பின் வருவனவாம்; ஆத்ம சாட்சாத்காரமுடையவராய முக்கிய சந்நியாசிகட்கு அச் சரீரப் பிராப்திகள் அவர்தம் மரணத்திற்குப் பின் மீண்டு முள்ளனவாகத் தோன்றுவாம். *

கருமஞ் செய்வதற்குக்காரணமாயுள்ள அதிஷ்டானமுதலிய ஐந்துபதார்த் தங்களின் தாதான்மிய அபிமானமே அஞ்ஞானிகள் கருமஞ் செய் வதற்குக் காரணமாமெனப் பகவான் கூறல்.
(தாதான்மியம் - ஒருமைப்பாடு.)

அருச்சுன! தன் காரணமாயுள்ள அஞ்ஞானம் கெடுமளவும் பெருகி வருகின்ற இவ்வுலகத்திலே உயர்வாய நன்மையைத் தருகின்ற புண்ணிய கருமங்களும் தாழ்வாய தீமையைத் தருகின்ற பாவ

---

* கன்மமும் சன்மமும் பொன்னும் பணியும் போலக் காரண காரிய வடிவமா யிருக்கின்றன; சன்மம் தத்துவத்தை யறியாதார்க்கன்றி அறிந்தவர்க்கு வருவ தில்லையா மென்பதாம்.

கௌண சந்நியாசிகட்கு ஜன்ம காரணமாய அவித்தை-காம-கருமங்கள் தத்துவ ஞானத்தால் நசியாமையால் பிறப்புண்டாகின்றது; முக்கிய சந்நியாசிகட்கு ஜன்ம காரணமாய அவித்தை முதலியன தத்துவ ஞானத்தால் நசித்துவிட்டமையால் பிறப்பு வருவ தில்லையா மென்பதிங் குணர்தற்பலாதாம்.

பாவத்திற் கநிஷ்டபலமாம்; புண்ணியத்திற் கிஷ்டபலமாம்; இவ்விரண்டற்கும் மிசிரபலமாம். (1) அநிஷ்டபலம்-பசு பட்சி முதலிய சரீரப் பிராப்தியாம்; (2) இஷ்டபலம்-தேவாதி சரீரப் பிராப்தியாம்; (3) மிசிரபலம்- மனுட சரீரப் பிராப்தியாம்.

கருமங்களுமாகிய சர்வ கருமங்களையும் அஞ்ஞானிகள் செய்தற் பொருட்டுச் சாங்கிய சாஸ்திரத்திலே யான் கூறிய அதிஷ்டான முதலிய சாதன மைந்தனையும் நீ இப்போது உணருமா றெடுத்துக் கூறுகின்றேன், கேட்கக் கடவாய். *

அவ் வதிஷ்டான முதலிய ஐந்து சாதனங்க ளிவை யெனப் பகவான் கூறல். (சாதனம் - காரணம்).

அருச்சுன ! அதிஷ்டானமாய ஸ்தூல சரீரமும், கருமங்களைச் செய்யும் அகங்காரவடிவக் கருத்தாவும், மன முதலிய பல வகையாய கரணமும், பிராணாதி வாயுக்களால் வேறு வேறாக வருகின்ற சேஷ்டைகளும், இத்தூல சரீர முதலியவற்றின்மீ தனுக் கிரகஞ் செய்கின்ற தெய்வங்களின் வகையொன்று மாகக் கரும காரணங்கள் ஐந்தாம். †

---

* பிரஹ்மாநந்த வடிவ நிரதிசய புருஷார்த்தத்தை யடைதற் பொருட்டும், ஜனன மரணாதி சர்வ துக்க நிவிர்த்தியின் பொருட்டும் பெறுதற்குரிய ஜீவப் பிரஹ்ம ஐக்கிய ஞானத்திற்கு உபயோகமா யுள்ள சிரவணாதி சாதனங்களைக் கூறும் சாஸ்திரம் சாங்கிய சாஸ்திரமாம் ; அஃது உபநிஷத்தாம். அத்விதீய ஆன்மப் பிரதிபாதனத்திலே தாற்பரிய முள்ள அது கரும காரணமாய அதி ஷ்டான முதலியவற்றைக் கூறுதல் அசங்கான்மாவின்கண் கரும சம்பந்த மின் மையைத் தெரிவித்தற் பொருட்டாமென்க.

† கரும காரணங்கள் அதிஷ்டானமும், கருத்தாவும், கரணமும், சேஷ்டை யும், தெய்வமு மென ஐந்தாம்.

(1) பஞ்சீகிருத பூதங்களின் காரியமாய் இச்சை, துவேஷம், சுகம், துக் கம், ஞான முதலிய தருமங்கள் வெளியாதற் கிடமாயுள்ள ஸ்தூல சரீரம் அதிஷ் டானமாம்; (2) அபஞ்சீகிருத பூதங்களின் காரியமாய் நான் கருத்தாவென் றபி மான முடைய அகங்காரம் கருத்தாவாம்; (3) அபஞ்சீகிருத பூதங்களின் காரிய மாயுள்ள சுரோத்திராதி ஞானேந்திரிய மைந்தும் வாக்காதி கன்மேந்தி ரிய மைந்தும், மனமும், புத்தியுமாக வுள்ள பன்னிரண்டும் கரணமாம்; (மனமும் புத்தியும் அகங்கார விருத்தி விசேஷமாம்; சித்தம் மனத்தி லந்தர்க்கதமாம்). (4) அபஞ்சீகிருத பூதங்களின் காரியமா யுள்ள பிராணாதி வாயுக்களின் தொழில் சேஷ்டையாம் ; (5) ஸ்தூல சரீர வடிவ அதிஷ் டான முதலியவற்றை யியக்கும் தேவதை தெய்வமாம். அதிஷ்டான வடிவ ஸ்தூல சரீரத்திற்குத் தெய்வம்-பிருதிவியாம் ; கருத்தா வடிவ அகங்காரத்திற்குத் தெய்வம் உருத்திரனும் ; சுரோத்திரம் - துவக்கு - சட்சு - ரசனம் - கிராண

பகவான் அதிஷ்டானம் கருத்தா முதலிய வைந்துமே சர்வ கருமங்கட்குங் காரணமா மெனல்.

பகைவர்தம் வன்மையை யழிக்கும் நீண்ட வில்லை யுடைய அருச்சுனா! இவ்வுலகத்தில் யாவரும் தமது வாக்காலாவது மனத்தாலாவது காயத்தாலாவது நல்வினை - தீவினை யென்னு மிரண்டனுள் ஒன்றைச் செய்யத்தொடங்குங் காலத்தில் முற்கூறிய அதிஷ்டானம் கருத்தா முதலிய ஐந்து காரணங்களும் அவர்க்கு வேண்டும். *

மென்னும் ஞானேந்திரிய மைந்தனுள், சுரோத்திரத்திற்குத் தெய்வம் திக்காம், துவக்கிற்குத் தெய்வம் வாயுவாம், சட்சுவிற்குத் தெய்வம் சூரியனும், ரசனத்திற்குத் தெய்வம் வருணனும், கிராணத்திற்குத் தெய்வம் அசுவநியாம்; வாக்கு-பாதம் - பாணி-பாயுரு - உபஸ்த மென்னும் கருமேந்திரிய மைந்தனுள், வாக்கிற்குத் தெய்வம் அக்கினியாம், பாதத்திற்குத் தெய்வம் இந்திரனும், பாணிக்குத் தெய்வம் உபேந்திரனும், பாயுருவிற்குத் தெய்வம் மித்திரனும், உபஸ்தத்திற்குத் தெய்வம் பிரஜாதிபதியாம்; மனத்திற்குத் தெய்வம் சந்திரனும், புத்திக்குத் தெய்வம் பிருகஸ்பதியாம்; பிராணன் - அபானன் - வியானன் - உதானன்-சமானனென்னும் பிராணாதி வாயுவைந்தனுள், பிராணனுக்குத் தெய்வம் சத்தியோஜாதனும், அபானனுக்குத்தெய்வம் வாமதேவனும், வியானனுக்குத்தெய்வம் அகோரனும், உதானனுக்குத் தெய்வம் தற்புருஷனும், சமானனுக்குத் தெய்வம் ஈசானனும்.

இங்குக் கூறிய அதிஷ்டானம், கருத்தா, கரணம், சேஷ்டை, தெய்வமென்னு மைந்தும் அநான்ம வடிவமும் பௌதிகமும் மாயா கற்பிதமுமா மென்பதிங் குணர்தற்பாலதாம். அநான்மா-ஆன்மா வல்லாதது; பௌதிகம்-பூதகாரியம்; மாயா கற்பிதம்-மாயையால் சேதனத்தில் மித்தையாகத் தோன்றுவது.

* யாவரும் வாக்கு மனம் காயமென்னு மூன்றனுள் யாதேனு மொன்றால் யாதேனு மொரு கருமத்தைச் செய்யத் தொடங்கும்போது, அவர்க்கு அதிஷ்டான முதலிய ஐந்து காரணமும் அத்தியாவசியகமாக வேண்டும்; அவற்றுள், ஒன்று குறையினும் அவர் யாதொரு கருமத்தையும் செய்தல் முடியாதென்பதாம். வாக்காற்செய்யும் கருமம் பேசுதல், கூவுதல் முதலியனவாம்; மனத்தாற் செய்யுங் கருமம் நினைத்தல் நிச்சயித்தல் முதலியனவாம்; காயத்தாற் செய்யுங் கருமம் ஓடல் உலாவல் முதலியனவாம்.

பிராணிகள் பிழைத் திருத்தற்குக் காரணமா யுள்ள உசுவாசம்-நிசுவாச முதலிய கருமங்களும் அறம்பாவங்களின் காரியமாயிருத்தலின், அவையும் நல்வினை-தீவினை யென்பனவற்று ளடங்குவனவாம்.

பகவான் அதிஷ்டான முதலிய ஐந்த னிரூபணத்தின் பயனை ஆத்மாவைக் கர்த்தாவாகக் கருது மூடரை யிகழ்வது வாயிலாகக் கூறல்.

அருச்சுனு ! முற் கூறியவாறு அதிஷ்டானம் கருத்தா முதலிய ஐந்து காரணங்களாலு முண்டாகின்ற நல்வினை-தீவினை யிரண்டையும் செய்கின்றவன் உண்மையாக யானே யல்லாமல் கருமங்களுக்கு வேறு காரண மில்லை யென்று அசங்க உதாசீன வடிவமா யுள்ள ஆத்மாவைக் கருத்தாவாக அறிகின்றவன், தானுய்யுமாறு உள்ளவாறு ஆத்மாவை யறியாதவனுவன் ; குரு சாஸ்திர வாயிலாக வுண்டாகும் பகுத்தறிவென்னும் விவேக மில்லாதவனுமாவன். ¶

ஆத்ம ஞானி எக் கருமத்தையு முண்மையிற் செய்வ தின்மையின், அவனைக் கருமபலம் பற்றுவ தில்லையா மெனப் பகவான் கூறல்.

அருச்சுனு ! எந்த விவேகி தன் னுடம்பை யானென்று கருதும் விபரீத புத்தி நீங்கியவனு யிருக்கின்ருனே, எந்த விவேகி

¶ எவன் சர்வ கருமங்கட்கும் அதிஷ்டான முதலிய ஐந்துமே காரண கருத்தாவாக விருக்கின்றனவென்ப துணராது, அவற்றிற்குக்கருத்தா ஆத்மாவாமென் றுணர்ந்து, அஃதசங்க வுதாசீன வடிவமா யிருக்கின்ற தென்பதை அறியா திருக்கின்ருனே அவன் மூடனுவன், துர்மதியாவன், குரு சாஸ்திர வாயிலாக வுண்டாகும் விவேக மில்லாதவ னுவனென்பதாம்.

ஜலம் - கண்ணுடி முதலியவற்றிற் பிரதிபிம்பித்து, அவற்றை விளங்கச் செய்யும் சூரியனை அவற்ருேடு அபேதமாகக் காணும் மூடர் சூரியன் நீரில் விழுந்து தத்தளிக்கின்ருன், கண்ணுடி யுள்ளே புகுந்திருக்கின்ரு னென் றுணர்வதுபோல, அதிஷ்டான முதலியவற்றிற் பிரதிபிம்பித்து, அவற்றை விளங்கச் செய்யும் ஆத்மாவை யவற்ருேடு அபேதமாகக் காணும் அவிவேகிகள் ஆத்மா கரும கருத்தாவாக விருக்கின்றது; அதன் பலனை யனுபவிக்கின்ற தென் றுணர்ந்து, அதனுல் ஜன்மாதி துக்கத்தை யனுபவித்து வருகின்றன ரென்பதிங் குணர்தற்பாலதாம்.

நித்தியாநித்தியவஸ்து விவேக முதலியன வில்லாதவர் மயங்கிய புத்தி யுடையவரா யிருத்தலின், அவர் சச்சிதாநந்த அசங்க உதாசீன ஆத்மாவை நான் கருமத்தைச் செய்கின்றேனென்று கரும கருத்தாவாக வுணர்ந்து, சரீர வடிவ அதிஷ்டான முதலியவற்றிற்கும் ஆத்மாவிற்கு முள்ள வேற்றுமையை யுணராது, வாதை பலவற்றை மாரு தடைந்து வருகின்றன ரென்பது மிங்குணர்தற்பாலதாம்.

தனது அந்தக்கரணம் எவ்வகைத்தாய கருமத்தோடும் சம்பந்தப்படுத லில்லாதவனு யிருக்கின்றானோ, அந்த விவேகி இவ் வுலகனைத்தையும் அழித்தானுயினும் அதனு லவனுக்கு யாதொரு பாவமு முண்டாவ தில்லையாம்; அவன் தான் உலகனைத்தையும் அழித்ததனு லுண்டாகும் பழியையு மடைவ தில்லையாம். ஆத்ம ஞானத்தின் மகிமை யிவ்வா றிருத்தலை நீ சிந்தனை செய்து உணரக் கடவாய். *

---

* எந்த விவேகி தன் தேகத்தில் யானென்னும் பாவனையை யொழித்து, யான் கருத்தா வென்னும் விபரீத புத்தி யில்லாது, கருமஞ் செய்வதன்கண் தன் புத்தியைச் செலுத்தாது தனது ஆத்ம சொரூபமாக விருக்கின்றானோ, அவன் ஞானியாவன்; அவன் யான் அசங்கனென்னும் ஞான முடையவனு யிருத்த லின், உண்மையில் யாதொரு கருமத்தையும் செய்வ தில னவன்; அவன் உலக நோக்கத்தால் உலகனைத்தையும் அழித்தவனுகத் தோன்றுவானுயினும், அவனை அதனு லுளவாகும் பாவமும் பழியும் பற்றுவ தில்லையாம். இவ் வுலகனைத்தையும் அழித்தானுயினும் என்ற உம்மை "மறப்பினு மோத்துக் கொளலாகும்" என்னும் திருக்குறளி லுள்ள உம்மைபோ லெதிர்மறை உம்மையாம். ஆகவே, ஞானி கரும சாட்சியாக விளங்குதலின், யாதொரு கருமத்தையும் செய்வ தில்லை யாம்; அங்ஙனமாயினும், ஞானி இவ்வுலகனைத்தையும் அழித்தானுயினும் அத னல் அவனுக்கு பாவமும் பழியு முண்டாவ தில்லையா மென்பது தத்துவ ஞானத் தின் மகிமையை விளக்குதற் பொருட்டா மென்க.

ஞானி அதிஷ்டானம் (தேகம்) முதலியனவே கருமங்களுக்குக் காரண கருத்தாவாக விருக்கின்றன; யான் அவற்றிற்குச் சாட்சியாய், அசங்கனய், காரண காரிய ரகிதனு யிருக்கின்றேன்; கருமங்களின் காரண கருத்தாவான அதிஷ்டான முதலியன என்னிடத்துக் கயிற்றின்க ணரவுபோலக் கற்பிதமா யிருக்கின்றன; அவை யானல்ல; என்னைத் தவிர அவை யில்லை; யானெப்போதும் ஏகரூபனு யிருத்தலால், எதுவு மென்னிடத் தில்லை; எதனிடத்தும் யானில்லை யென்ப துணர்ந்து தன்மயமாகவே யிருத்தலின், அவனைப் பழி பாவம் - புண்ணியம் புகழ் முதலிய துவந்துவங்களுள் எத் துவந்துவமும் அக்கினியைக் குளிர்ச்சி பற்றுமைபோலப் பற்றுவ தில்லையாமென்பதும், ஜநகர் - அஜாதசத்துரு - பிரக லாதர் - விதுரர் - பீஷ்மர் முதலாயினோர் தமது கருமங்களைச் செய்தும் செய்யா தவரே யாயினர்; அதற்குக் காரணம் அவர்கள் தத்துவஞானிகளா யிருந்தமை யேயாமென்று புராணங்கள் ஆங்காங்குக் கூறுவதும், இக்கீதாசாஸ்திரம் அஞ்ஞானிக்கு அவன் செய்த கருமத்திற் கேற்றவாறு பழி பாவம் - புண்ணியம் புகழ் முதலியன வுண்டாகின்றன; அவற்றால் அவன் ஜனன மாணுதிகளை யடைந்து துன்புற்று வருகின்றான்; ஞானி கரும சாட்சியாய் விளங்குதலின், அவனுக்குக் கரும காரியமான பழி பாவம் முதலியன உண்டாவ

கருமங்களின் காரண கருத்தாவா யிருப்பன அதிஷ்டான முதலிய ஐந்துமேயாம்; ஆத்மாவிற்குக் கரும சம்பந்தம் சிறிது மில்லையா மேன் றருளிச் செய்த பகவான் அவற்றை வேறுவகையாக அருச்சுனன் புத்தி திடமாதற் பொருட்டுக் கூறல்.

அருச்சுன! ஞானமும் ஞேயமும் ஞாதாவுமாயுள்ள இம் மூன்று வழியில் கருமங்களைச் செய்ய விதிக்கின்ற வேத விதியி னியல்பு நிலைபெற் றிருப்பதாம்; செயப்படு பொருளென்னும் கரும மும், அதனைச் செய்கின்ற கருத்தாவும், அதனைச் செய்தற்குரிய கரு வியுமா யுள்ள இம் மூவகைக் குறியில் கருமங்களின் முடிவு நிலைபெற் றிருப்பதாம். இன்னும் சிலவற்றைக் கரும காரணமாகக் கூறுகின் றேன், அவற்றையும் நீ கேட்கக் கடவாய். * (கருவி - காரணம்.)

தில்லையாம்; அவற்றாலவன் ஜனனமரணாதிகளை யடைந்து துன்புறுவதில்லையா மென்று கூறுகின்ற தென்பதும் இங்குணர்தற் பாலனவாம்.

* கடத்தை யானறிந்தேன் என்புழிக் கடமென்பது அறிபடு பொரு ளென்னும் ஞேயமாம்; அறிவென்பது ஞானமாம்; யானென்பது அறிவா னென் னும் ஞாதாவாம். ஞாதா வென்பது பரிஞாதாவென்றும் கூறப்படும். ஞானம் ஞேயம் ஞாதாவென்னு மூன்றும் கருமங்களைச் செய்வதற்குக்காரணமாம்; கருவி- கருமம் - கருத்தாவென்னு மூன்றும் கருமங்களுக் காசிரயமாம். கடத்தை யான் திகிரியால் செய்தே னென்புழிக் கடமென்பது செயப்படுபொருளென்னும் கருமமாம்; திகிரியா லென்பது கருவியாம். திகிரி - சக்கரம்.

ஞானம் ஞேயம் ஞாதாவென்னும் மூன்றும் கருமப் பிரவர்த்தகமாயும், கருவி - கருமம் - கருத்தாவென்னு மூன்றும் கருமாசிரயமாயு மிருக்கின்றன; ஆத்மா அசங்கமா யிருத்தலின், அது கருமப் பிரவர்த்தகமாவதும் கருமாசிரிய மாவது மில்லையாம்; அதனால், அதனைக் கருமபல னடைவதில்லையென்பதாம். இங்குக் கருவி யென்றது ஞானேந்திரியம் - கருமேந்திரியம் - அந்தக்கரண மென்பனவற்றை; ஞாதாவென்றது சீவனை.

ஞானம் ஞேயம் ஞாதா வென்னு மூன்றனுள் ஒன்றிலதாய வழி மற்றவை கருமப் பிரவர்த்தகமாவ தில்லையா மென்றும், கருவி - கருமம் - கருத்தாவென்னு மூன்றனுள் ஒன்றிலதாயவழி மற்றவை கருமாசிரய மாவ தில்லையா மென்று மிங்குணர்தல் வேண்டும்.

ஞாதுதி மூன்றையும் கரணுதி மூன்றையு மருளிச் செய்த பகவான் ஞான முதலியவற்றுள், ஒவ்வொன்றும் சத்துவம் - இரசசு - தமசென்னு முக்குண சம்பந்தத்தால், மும்மூன்று வகையாமெனக் கூறல்.

அருச்சுன ! நிறைந்த ஞானமும், கருமமும், அக் கருமத்தைச் செய்யும் கருத்தாவும், விஷயங்களை யழுந்த அறியும் புத்தியும், திருதியும், விளங்குமா றுண்டாகும் சுகமும் என்று கூறப்படுவன வற்றுள் ஒவ்வொன்றும் முன்னர் யான் (14-வது 17-வது அத்தியாயங்களில்) கூறிய சத்துவம் - இரசசு - தமசென்னும் முக்குணத்தின் சம்பந்தத்தாலே மும்மூன்று வகையாம். அவற்றின் தன்மைகளைக் கூறுகின்றேன், நீ கேட்கக்கடவாய். *

பகவான் தாம் கூறியவற்றுள் ஞானத்தை மூன்று வகையாகக் கூறத் தோடங்கி, சாத்துவிக ஞானத்தின் சோரூபத்தைக் கூறல்.

அருச்சுன ! அதிகாரி புருஷர் ஆநந்தமாய், சித்கனமாய், யாண்டும் கட கலசாதிப் பலவிதமாய் விரிந் தழியு மியல்புள்ள பிருதிவி-அப்பு - தேயு - வாயு ஆகாயமென்னும் பூதபஞ்சகத்துள் ஒவ்வொன்றிலும் பொன்று (அழியா)ப் பொருளென்னுங் கூடஸ்த நித்தியமாய் ஏகரசமாயிருக்கும் அத்விதீய பிரத்தியகாத்மாவை அஃதுள்ளவாறே அறியு மறிவினை இது கொள்ளத்தக்கதன்று, இது கொள்ளத் தக்கதா

---

* நிறைந்த ஞானமென்ப திங்குப் பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களாலுண்டாகும் பதார்த்தங்களின் விளக்க வடிவ அந்தக்கரண விருத்திவடிவ ஞானமாம்; புத்தியென்பது இங்குச் சிந்தனை - ஸ்மிருதி முதலியனவாம். திருதி - தைரியமாம். பகவான் 14-வது அத்தியாயத்தில் சத்துவ முதலிய குணங்கள் பந்த காரணமா மென்று கூறியது குணுதீத னென்னும் சீவன் முத்தனது தன்மையை நிரூபித்தற் பொருட்டா மென்றும், 17-வது அத்தியாயத்தில் சத்துவ குணமுடையார் தேவரை யடைவரென்றற் றொடக்கத்தனவற்றைக் கூறியது அதிகாரி புருஷர் இராசத தாமத ஆகார முதலியவற்றை யொழித்துச் சத்துவ ஆகார முதலியவற்றை மேற்கொள்ளல் வேண்டுமென்னும் பொருட்டாமென்றும், இப் பதினெட்டா மத்தியாயத்தில் சத்துவ முதலிய குணங்களைக் கூறுவது இயல்பாகவே குணுதீதமாய் அசங்கமா யுள்ள ஆத்மாவிற்குக் கிரியை-காரகம் - பல மென்பவற்றோடு சிறிதும் சம்பந்த மின்றென்பதை யுணர்த்துதற் பொருட்டாமென்று மிங்குணர்தல்வேண்டும். இதனுல் கூறியது கூறலென்னுங் குற்ற முண்டாகாமை யுணர்க. கிரியை - தொழில்; காரகம் - செய்வது.

மென்னும் பேத புத்தி உண்மையி லில்லாத பெரியோர் சாத்துவிக ஞானமென்று கூறுவர். *

பகவான் இராசத ஞானத்தின் சொரூபத்தையும் தாமத ஞானத்தின் சொரூபத்தையுங் கூறல்.

அருச்சுன ! அநதிகாரி புருஷர் தம்முள் வேற்றுமை யுடையன வாயுள்ள இவ் வுடம்புதோறும் அகண்ட ஏகரசமாயுள்ள பிரத்யகாத் மாவை அஃதுள்ளவாறே அறியாது, அந்தக்கரண தர்மமாயுள்ள சுக துக்க முதலியவற்றின் வேறுபாட்டால், சரீரந்தோறும் வெவ்வேறாக அறிவது இராசதஞானமாம்; அங்ஙனமன்றி,உடம்பனைத்திலும் ஞான வடிவமாய் அகண்ட ஏகரசமாயுள்ள பிரத்தியகாத்மாவை அஃதுள்ள வாறே அறியாது, ஒருடம்பிலும் ஒருருவிலுள்ள விக்கிரகத்திலும் முறையே ஆத்மா இவ்வுடம்பளவாகவே யிருப்பது, ஈசுவரன் இவ்விக் கிரக வளவாகவே யிருக்கின்றான், இத்தேக வளவிற்கும் இவ்விக்கிரக வளவிற்கும் வேறாக ஆத்மா இல்லையாம், ஈசுவர னில்லையாமென் றறி வது தாமத ஞானமாம். ‡

---

* ஞானாநந்தமாய், தம்முள் பேதமுடைய சர்வ பூதங்களிலு மிருப்பதாய், கூடஸ்த நித்தியமாய், ஏகரசமாயுள்ள அத்விதீய பிரத்தியகாத்மாவை யுள்ளவா றதிகாரிபுருஷன் உணருமுணர்வே சாத்துவிக ஞானமா மென்பதாம். எனவே, இஃதொழிந்த ஞான மனைத்தும் இராசத தாமத ஞானங்களாமாகலின், அவை சம்சார காரணமா மெனப் பெறப்பட்டவாறறிக.

‡ சுக துக்காதிகள் சேதனத்தின் சாயை அல்லது பிரதிபிம்பத்தோடு கூடிய அந்தக்கரணத்தின் தர்மங்களாம்; சுக துக்காதிகளின் வேறுபாட்டால் அந்தக்கர ணம் பலவாயிருக்கின்றன ; சேதனவடிவ ஆத்மா பலவாக விருப்ப தில்லை; அஃ தெப்போதும் அகண்ட ஏகரச சிதாநந்த வடிவமா யிருப்பதாமென்பதை ஞான சாஸ்திரவிசாரவாயிலாக அறியாதவருள் சிலர் சுக துக்காதிகளை ஆத்ம தர்மமாகக் கொண்டு, சுக துக்காதிகளின் வேறுபாட்டால் ஆத்மா பலவா யிருக்கின்றதென் றதனைப் பலவாக உணர்கின்றனர்; அவர் அவ்வா றுணர்வது இராசத ஞானமாம். ஆத்மா ஞானவடிவமாய் அகண்ட ஏகரசமா யிருப்பதாமென்பதை ஞான சாஸ்திர விசார வாயிலாக அறியாதவருள் சிலர் சீவ ஈசுவர பேதம் அவித்தை - மாயை யென்னு முபாதிகளால் கற்பிதமாயிருக்கின்றது; உண்மையில் சீவ ஈசுவர பேத மின்றென்பதை யறியாமையால், ஆத்மா தேக வளவாக விருக்கின்றது; அவ்வள விற்கு வேறாக அஃதில்லை; ஈசுவரன் விக்கிரக வளவாக விருக்கின்றான்; அவ்வள விற்கு வேறாக அவனில்லை யென் றதனைப் பலவாக வுணர்கின்றனர்; அவரவ்வா

சாத்துவிக ஞானம், இராசத ஞானம், தாமத ஞான மேன்பவற்றின் சொரூபங்களைக் கூறி, அவற்றுள் சாத்துவிக ஞானம் மோட்ச சாதனமா யிருத்தலின் கொள்ளத்தக்கதாம்; இராசத ஞானமும் தாமத ஞானமும் பந்த சாதனங்களா யிருத்தலின் தள்ளத் தக்கனவாமேன்று குறிப்பித்த பகவான் கருமம் சத்துவ முதலிய குண பேதத்தால் மூவகையா மேன்று கூறத் தொடங்கி, அக்கருமங்களின் சொரூபங்களைக் கூறல்.

சாத்துவிக கருமம்.

அருச்சுனா! நிஷ்காம புருஷர் எமக் கொப்பா யிருப்பவ ரொரு வரு மிலரென்னுங் கெடுதலில்லாத அகங்காரமும், இனி யாம் கரும பலத்தை யனுபவிப்போ மென்னுங் கருமபலத்தி லிச்சையும், மனைவி-மக்கள் முதலாயினோ ரிடத்தும் காணி - மனை முதலியவற்றி னிடத்து முள்ள பிரீதிவடிவ இராகமும், பகைவ ரிடத்தும் துஷ்டப் பிராணிக ளிடத்துமுள்ள அப்பிரீதிவடிவ துவேஷமுமாகிய இவற்றுள், ஒன்று மில்லாது செய்யும் யாக - தான - ஓம முதலிய நித்தியகருமம் சாத்து விக கருமமாம்.

இராசத கருமம்.

சகாம புருஷர் இனிச் சிறப்பாய் வரும் சுவர்க்காதி பலன்களி லிச்சையோடும் எமக் கொப்பா யிருப்பவரொருவரு மிலரென்னு மகங் காரத்தோடும் மிகு வருத்தத்தோடு செய்யும் காமியகரும மனைத்தும் இராசத கருமமாம்.

தாமத கருமம்.

காரியாகாரிய மறியாதவர் தாம் நடுங்குமாறு பின்னடையும் அசு பப் பயனும், எவர்க்கும் அவர் வருந்துமாறு தாம் செய்யும் இம்சையும், தமது திரவிய முதலியவற்றின் நாசமும், தமது சாமர்த்தியமுமாகிய இவற்றை, பெரியோர் கூறிய நியாயத்துடனே சாஸ்திரப் பொருள்களை விசாரித் துணர்தல் வாயிலாக உள்ளவா றுணராது அவிவேகத்தால் தமது மேன்மை குன்றுமாறு செய்யுங் கரும மனைத்தும் தாமத கரும மாம். †

றுணர்வது தாமதஞானமாம். இவ்விரண்டு ஞானமும் சம்சார வேதுவா மென் பதிங் குணர்தற்பாலதாம்.

† நிஷ்காம புருஷர் - பயனைக்காது கருமஞ் செய்பவர்; சகாம புருஷர்- பயனைக்கிக் கருமஞ் செய்பவர்; காரியாகாரிய மறியாதவர் - இது செய்யத்

பகவான் கருத்தா சத்துவ முதலிய குண பேதத்தால் மூன்று வகையாமென்று கூறத் தொடங்கி, அக்கருத்தாக்களின் சொரூபங் களைக் கூறல்.

சாத்துவிக கருத்தா.

அருச்சுனு! கருமபலத்தி விச்சையையும் கர்வ வசனத்தையும் தனது குற்றமொழிய வொழித்து, யாக - தான - ஓம முதலிய கரும மனைத்தையும் பயனேக்காது செய்ய வேண்டுமென் றழுந்தி யெழுகின்ற முயற்சியோடும் தைரியத்தோடும் பொருந்தி, எப்பொழுதும் தான் செய்யுங் கருமங் காரணமாக வுண்டாகின்ற பேறிழவுகளில் இஃது இன்ப சாதனமாம், இது துன்பசாதனமாமென்று கருதி, ஒரு சிறி தும் விகார மடையாதுள்ள புருஷன் சாத்துவிக கருத்தாவாவன். ‡

தக்கது, இது செய்யத் தகாததென் றுணராது, தாங் கருதியவற்றைக் கருதிய வாறே துரியோதனன்போல் செய்பவர். யாக - தான - ஓம முதலியவற்றைப் பயனேக்காது செய்பவர்க்கு அவை நிஷ்காம கருமமாம் ; அஃதாவது சாத்து விக கருமமாம் ; பயனேக்கிச் செய்பவர்க்கு அவை சகாம கருமமாம்; அஃதாவது இராசத கருமமா மென்க.

(1) கர்வமென்னு மகங்காரமும், கர்மபலத்தி விச்சையும், ஒன்றன்கண் பிரியமும், பிறிதொன்றன்கண் அப்பிரியமு மின்றிச் செய்யுங் கருமம் சாத்து விக கருமமாம் ; (2) கருமபலத்தி விச்சையோடும் அகங்காரத்தோடுஞ் செய்யுங் கருமம் இராசத கருமமாம் ; (3) பின்வரும் துக்கம், பிறர்க்கு வரும் துக்கம், தன நாசம், தனது சாமர்த்திய மென்பவற்றைப் பெரியார் கூறிய நியாயத்துடனே சாஸ்திரார்த்தங்களை ஆராய்ந் துணர்தல் வாயிலாக உள்ளவா றறியாமல் அவி வேகத்தால் செய்யுங் கருமம் தாமத கருமமா மென்பதிங் குணர்தற்பாலதாம்.

‡ பேறு - இலாபம் ; இழவு - நஷ்டம். விகாரமடையாமையாவது கரு மத்தின் பயனை யடைவதால் முகமலர்தலும், அடையாமையால் முகங்கூம்புத லும் உண்டாகாமையாம்.

கருமபல விச்சையும் கர்வவசனமு மின்றி, சுப கருமங்களைப் பயனேக்காது செய்யவேண்டுமென் றெழுகின்ற முயற்சியும் தைரியமும் பெற்று, தான் செய்யுங் கருமங் காரணமாக உண்டாகின்ற லாப நஷ்டங்களால் முறையே சுகதுக்கமும், முகமலர்தலும் கூம்புதலு மடையா திருப்பவன் சாத்துவிக கருத்தா வாவ னென்பதாம்.

இராசத கருத்தா.

அருச்சுன ! கரும பலன்களை விரும்புதலும், மனைவி - மக்கள் முதலாயினோரிடத்தும் காணி - மனை முதலியவற்றினிடத்தும் ஆசையும், எவ்வளவாகவேனும் எவர்க்கு மொன்றனைக் கொடாமையாகிய உலோபத்துவமும், சுத்த மில்லாமையும், பேறிழவு காரணமாக முறையே சித்தத்தின்கண் மகிழ்ச்சி வாட்ட மடைதலுமாகிய விவற்றோடிருப்பவன் இராசத கருத்தாவாவன். *

தாமத கருத்தா.

அருச்சுன! தான்செய்யுங்கருமங்களில் ஒருமுகமாம்படி மனத்தையடக்குதலும், மேன்மை பொருந்திய ஞானசாஸ்திரங்களை இவையே எனக்குப் பெருஞ் செல்வமாமென் றுட்கொண்டு கற்றலும், சாதுக்கள் சங்கம் மகிழ்தற்குரிய வணக்கமுமாகிய இவற்றுள் ஒன்று மின்றி ஒரு நாளில் செய்து முடித்தற்குரிய காரியத்தைச் சோம்பல் காரணமாக ஒரு மாதத்திலுஞ் செய்யா திருப்பவன் தாமத கருத்தாவாவன். ¶

ஞானம், கருமம், கருத்தாவென்பனவற்றுள் ஒவ்வோன்றும் சத்துவம்-
இராசதம் - தாமதமென்னு முக்குண பேதத்தால் மும்மூன்று
மென்பதைத் திருவாய்மலர்ந்தருளிய பகவான், புத்தி - திருதி
யென்பனவற்றுள் ஒவ்வோன்றும் அக் குணபேதத்தால்
மும்மூன்றுமென அவற்றின் சோரூபங்களைக் கூறல்.

சாத்துவிக புத்தி.

அருச்சுன ! இழிவற்ற துறவற மித்தன்மையது, இல்லற மித்தன்மையது, மோட்ச மித்தன்மையது, பந்த மித்தன்மையது, இது

---

* சுத்தம் - தேகச் சுத்தம் மனச் சுத்தமென விரண்டாம் ; அவற்றுள், தேகச் சுத்தம் நீரா லுண்டாவதாம் : மனச் சுத்தம் உண்மை யுரைத்தல் முதலியவற்றா லுண்டாவதாம்; சுத்தமென்பது கலப்பில்லாமையாம்.

கருமபலத்தி லிச்சை, மனைவி - மக்கள்-பொருள்களின்மீ தாசை, எவர்க்கும் யாது மீயாமை, சுத்த மின்மை, மகிழ்ச்சி வாட்டமடைத லென்பவற்றை யுடையவன் இராசத கருத்தாவாவ னென்பதாம்.

¶ மன மடக்கல், சாஸ்திராப்பியாசஞ் செய்தல், தக்காரிடத்து வணக்கமுடைமை முதலியன சிறிது மில்லாது, சோம்பல் காரணமாகத் தான் விரைந்து அத்தியாவசியகமாகச் செய்தற்குரிய காரியத்தை விரைந்து செய்யா திருப்பவன் தாமத கருத்தாவாவ னென்பதாம்.

செய்யத்தக்கது, இது செய்யத்தகாதது, இவை அஞ்சத்தக்கனவாம், இவை அஞ்சத்தகாதனவாமென் றிவற்றை யுள்ளவா றறியும் புத்தியே சாத்துவிக புத்தியாம். †

இராசத புத்தி.

அருச்சுன ! தர்மாதர்மங்களையும், தான் செய்தற் குரியனவா யுள்ள கருமங்களையும், செய்யத் தகாதனவா யுள்ள கருமங்களையும் மிகு நுட்பமாக உள்ளவா றறியாத புத்தியே சந்தேகவடிவமாய இராசத புத்தியாம். ‡

---

† மோட்ச காரணமா யுள்ள நிவிர்த்தி மார்க்கமாகிய துறவறத்தையும், பந்த காரணமாயுள்ள பிரவிர்த்தி மார்க்கமாகிய இல்லறத்தையும், தன்னை (ஆத்மாவை)ப் பிரஹ்ம மென் றுணரும் தத்துவ ஞானத்தின் பயனாகிய சர்வ துக்க நிவிர்த்தி - பரமாநந்தப் பிராப்திவடிவ மோட்சத்தையும், யான் கர்த்தா - போக்தாவென்று கருதும் அபிமானவடிவப்பந்தத்தையும், செய்யத்தக்கது ஈசுவர உபாசனை முதலிய புண்ணிய கருமமாம், செய்யத்தகாதது பிறரை வஞ்சித்தல் முதலிய பாப கருமமா மென்பவற்றையும், அஞ்சத்தக்கன கர்ப்பவாச முதலிய துக்கங்களாம், அஞ்சத் தகாதன கர்ப்பவாச முதலியவற்றின் அபாவங்களா மென்பவற்றையும் உள்ளவா றறியும் புத்தியே சாத்துவிக புத்தியாமென்க. கரண வடிவ புத்தியை இங்குக் கருத்தாவடிவமாகக் கூறியது கருத்தாவின் வியாபாரத்தைக் கரணத்தின்மே லேற்றிக் கூறிய வுபசார வழக்காம். யான் கண்ணால் கடத்தைக் காண்கின்றே னென்புழி, யானென்பது கருத்தாவாம்; கண்ணாலென்பது கரணமாம். யான் கண்ணால் கடத்தைக் காண்கின்றேனென்று கூறுபவன் ஒவ்வோரிடத்து என் கண் கடத்தைக் காண்கின்றதென்று கூறுவது மிகு பிரசித்தமாமன்றோ? அங் ஙனமே, கருத்தா (சீவன்) தன் புத்தியால் துறவறம் இல்லற முதலியவற்றை உள்ளவா றறிவதை அவன் புத்தி யறிகின்றதென் றிங்குக் கூறப்பட்டதென்க. இம்முறையை யினிக் கூறுவனவற்றிற்குங் கொள்க.

‡ தர்மா தர்மங்களையும் காரியா காரியங்களையும் உள்ளவா றறியாத புத்தியே இராசத புத்தியாமென்க. சுருதி ஸ்மிருதிவடிவச் சாஸ்திரங்கள் கூறும் அக்கினி ஹோத்திர முதலிய விதி கருமங்களும், கொலை - களவு முதலிய நிஷித்த கரு மங்களும் முறையே தருமத்தையும் அதருமத்தையு முண்டுபண்ணுவனவாம். தருமத்தால் சுகமும், அதருமத்தால் துக்கமு முண்டாவனவாம். தர்மாதர்மங்கள் அதிருஷ்ட பலனையும், காரியாகாரியங்கள் திருஷ்ட பலனையும் தருவனவா மென் றிங்குணர்தல்வேண்டும். திருஷ்டம் - பிரத்தியட்சம், அதிருஷ்டம் - அப்பிரத் தியட்சமாம். காரியம் - செய்யத்தக்க கருமமாம்; அகாரியம் - செய்யத்தகாத

தாமத புத்தி.

அருச்சுனா! தருமத்தை அதருமமாக உணர்தலும், செய்யத் தகாதனவாய காரியங்களை இவை செய்யத்தக்க காரியங்களா மென் றுணர்தலும், தனக்குத் துன்பத்தைச் செய்கின்ற சிந்தனையோடு தீய காரியங்களைச் செய்வதன்கண் செல்லுதலுமுடைய புத்தியே தாமத புத்தியாம். *

சாத்துவிக திருதி.

(திருதி - தைரியம்.)

அருச்சுனா! மனம் செய்யுந் தொழில்கள், பிராணவாயுக்கள் செய்யுந் தொழில்கள், ஓரினமாயுள்ள சுரோத்திர முதலிய இந்திரி யங்கள் செய்யுந் தொழில்களென்னும் இத்தொழில்களாகிய சேஷ்டை கள் பாரமாக அதிகரித்தாலும் அவற்றை ஆத்ம தருமமாகக் காணாது, மனமுதலியவற்றின் தருமமாக உள்ளவாறுணர்ந்து, சித்தவிருத்தி யைத் தடுத்தலென்னும் யோகாப்பியாசத்தால் தடுத்தலும், பிறர்மீது எக்காரணம் பற்றியேனும் கோபஞ் செய்யாமையுமாகிய திருதியே சாத்துவிக திருதியாம். ¶

கருமமாம். செய்யத்தக்க கருமம் புகழ் புண்ணியங்களுக் கேதுவாய கருமமாம்; செய்யத்தகாத கருமம் பழி பாவங்களுக் கேதுவாய கருமமாம். இராசத புத்தி தர்மா தர்மங்களையும் காரியாகாரியங்களையும் உள்ளவா றறியாமையால், கொள்ளத் தக்க திதுவோ தள்ளத்தக்க திதுவோவென் றெவற்றிலுஞ் சந்தேகமுற் றிருத்த லின், என்றும் கலக்க முடையதாகவே யிருப்பதாம்.

* தருமத்தை அதருமமாகவும் செய்யத்தகாததைச் செய்யத்தக்கதாகவும் அறிவதும், தீயகாரியங்களைச் செய்வதன்கண் செல்லுதலுமுடைய புத்தியே தாமத புத்தியாம். இது தாமத குணத்தால் மூடப்பட்டிருத்தலின், தருமாதரும முதலியவற்றை விபரீதமாக வுணரு மியல்புடையதா யிருக்கின்றதென்க. இஃ தாம், இஃதன்றென்னும் விசேஷ தரிசனத்திற்கு விரோதமா யிருப்பது தாமத குணமாம்.

¶ சினமின்றி மனப் பிராண இந்திரியங்களின் சேஷ்டைகளை யோகாப்பி யாசத்தால் தடுக்கும் திருதியே சாத்துவிக திருதியாம். மனத்தின் சேஷ்டை - நினைத்தல் முதலியனவாம்; பிராணவாயுக்களின் சேஷ்டை - உசுவாச நிசுவாச முதலியனவாம்; இந்திரியங்களின் சேஷ்டை - காண்டல் கேட்டல் முதலி யனவாம்.

இராசத திருதி.

அருச்சுனா! ஒருவன் தனக் கின்பந் தரும் சுவர்க்க முதலிய பதவிகளை யடைதற்பொருட்டு அப்பதவிகளை யடைதற் கேதுவாய கருமங்களைச் செய்து, யானத்தியாவசியகமாகச் சம்பாதித்தற்குரியன தரும காம அர்த்தங்களே யென்று சிந்தித்து, அவற்றைப் பெற முயலும் திருதியே இராசத திருதியாம். *

தாமத திருதி.

அருச்சுனா! ஒருவன் தனது புத்தியில் சோகம் - களிப்பு - உறக்கம் - பய மென்பனவற்றை யெப்போதுங்கொண்டு, அவற்றை விடாதுள்ள திருதியே தாமத திருதியாம். ‡

பகவான் ஞானம் - கருமம் - கருத்தா - புத்தி - திருதியென்பனவற்றுள் ஒவ்வொன்றும் சத்துவகுண முதலியவற்றின் பேதத்தாலே மும்மூன்று யிருத்தல்போல, கருமவடிவக் கிரியையின் காரியமாயுள்ள சுகமும் அக்குணங்களின் பேதத்தாலே மூன்று யிருக்கின்ற தெனல்.

சாத்துவிக சுகம்.

அன்பனே! அதிகாரிபுருஷ ரியாவர்க்கும் அவர் ஞான - வைராக்கியங்களால் செய்யும் தியான - சமாதிகளி னாரம்ப காலத்தில் மிகு வருத்தத்தோடு பெறுதற்குரியதா யிருத்தலின், விஷம்போலத் துன்பந்

---

* சுவர்க்காதி போகங்களி லிச்சை கொண் டொருவன் யானத்தியாவசியகமாகச் சம்பாதித்தற்குரியன தரும காம அர்த்தங்களென்றெண்ணி, அவற்றைப் பெறக் கொள்ளும் தைரியமே இராசத திருதியாம். யாகாதி கருமங்களா லுண்டாகும் புண்ணிய வடிவ அபூர்வம் தருமமாம்; சப்தாதி விஷயங்களா லுண்டாகு மின்பம் - காமமாம்; காணி - மனை முதலிய பொருள்கள் அர்த்தமாம்.

‡ சோகம் - களிப்பு - உறக்கம் - பயமென்பனவற்றை யெப்போதும் விடாதுள்ளவனது தைரியமே தாமத திருதியாம்.

இஷ்ட வஸ்துவின் பிரிவா லுண்டாகுங் கவலை சோகமாம்; சாஸ்திர நிஷித்தமாய விஷயங்களை யனுபவிக்க வுண்டாகு மதம் களிப்பாம்; உறக்கம்- நித்திரையாம்; புலி - பாம்பு முதலிய பிரதிகூல வஸ்துக்களைக் காண்டலா லுண்டாகும் அச்சம் பயமாம்.

தருவதாய், அவை பரிபாகமானபோது இன்பமாய், பெறுதற்கரிய அமிர்தமேயென்று சொல்லுதற்குரியதாகிய சுகமே சாத்துவிக சுகமாம்.*

இராசத சுகம்.

இந்திரியங்களுடன் விஷயங்களிற் சம்பந்தமாய் அனுகூலமாக வெழுந்து, ஆரம்ப காலத்தில் பெறுதற்கரிய அமிர்தமென்று கூறுவதற்குரியதாய், முடிவில் வெறுத்தற்குரியதாய், விஷயம்போலப் பிரதிகூலமாயுள்ள சுகமே இராசத சுகமாம். ¶

தாமத சுகம்.

பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) தொடர்ந்துள்ள நித்திரை - பிரமாதம்- ஆலசிய மென்பனவற்றால் பொருந்தத் தோன்றியதாய், ஆரம்ப காலத்திலும் முடிவுக் காலத்திலும் தனது கடமையாக விரைவாய் மோகத்தை யுண்டாக்கும் சுகமே தாமத சுகமாம். †

---

* மக்கள் ஞான வைராக்கியங்களால் தியான சமாதிகளைச் செய்யத் தொடங்கிய காலத்து, அவர்க்குப் பெரு வருத்தத்தோடு பெறுதற்குரியதா யிருத்தலின் விஷம் போல்வதாய், அந்த ஞான முதலியன பரிபக்குவமான காலத்து அமிர்தம் போல்வதா யுள்ள சுகமே சாத்துவிக சுகமாம். இச்சுகம் ஆத்மாவை நோக்கி மனமசையாது நின்ற காலத்து விளங்கும் சுகமாமென்றிங் குணர்தல் வேண்டும். இதனால் இது சமாதியின்கண் விளங்கும் ஆநந்தமா மெனப் பெறப்பட்டதென்க.

புத்தி இராசத தாமத குணங்கள் ஞான வைராக்கியங்களா லடங்கப்பெற்று ஆத்மாவையே நோக்கி நின்றபோது விளங்கும் சுகம் சாத்துவிகசுகமாம் ; விஷய இந்திரிய சம்பந்தத்தால் விளங்கும் சுகம் இராசத சுகமாம். நித்திரை ஆலசிய முதலியன வுண்டாய காலத்து விளங்கும் சுகம் தாமத சுகமாமென்று இங்குத் தொடர்புபற்றி உணர்தல் வேண்டும்.

சுகம் ஆத்மவடிவமா யிருப்பினும், அது சத்துவ முதலிய குண பேதங்களால் மூன்று வகையாக விளங்குவதா யிருக்கின்றதென்க.

¶ விஷய இந்திரியங்களின் சம்பந்தத்தால் அனுகூலமாக வுண்டாகி, ஆரம்பகாலத்தில் அமிர்தம்போல்வதாய் முடிவில் விஷம்போல்வதாயுள்ளசுகமே இராசத சுகமாம். இது பெரும்பான்மையும் காதலனும் காதலியும் கூடுங் கூட்டத்தில் விளங்கும் சுகமாமென்க.

† நித்திரை - பிரமாதம்-ஆலசியமென்பனவற்றால் தோன்றி ஆரம்பத்திலும் அந்தத்திலும் மோகத்தைச்செய்யும் சுகமே தாமத சுகமாம். மோகம் - மதிமயக்கம்; நித்திரை - உறக்கம்; ஆலசியம் - தாமதம்; பிரமாதம் - இது செய்யத்தக்கதென்னும் நிச்சயமில்லாது வீணெண்ணங் கொள்ளலென்னும் மனோராச்சியமாம்.

சத்துவ குண முதலிய பேதத்தால் ஞான முதலியன மும்மூன்றுமெனக் கூறிய பகவான் சத்துவ குண முதலியவற்றின் சம்பந்த மில்லாதவர் யாண்டு மிலர்; அந்தணர் - அரசர் - வணிகர் - சூத் திர ரேன்னும் நான்கு வருணத்தாரும் தத்தங் குணத் திற் கேற்றவாறு கருமங்களை யுடையவரா யிருக் கின்றன ரேனக் கூறல்.

கிரீடியே! (14-வது அத்தியாயத்திற் கூறிய) இச் சுபாவ மென் னும் பிரகிருதியா லுண்டாயுள்ள சத்துவம் - இராசதம் - தாமத மென்னும் குண மூன்றனையும் விட்டவர் இம் மண்ணுலகத்தி லன்றி விண் ணுலகத்திலு மிலராவர். அந்தணர் - அரசர் - வணிகர் - சூத் திர ரென்னும் நான்கு வருணத்தார்க்கும் தத்தம் சுபாவங்களா லுண் டா யுள்ள சத்துவ முதலிய குணங்களின் தன்மையால் உண்டாயுள்ள கருமங்களின் பாகுபாட்டைக் கூறுகின்றேன், நீ கேட்கக் கடவாய். †

அந்தணரது சுபாவ குண கருமங்களைக் கூறல்.

அருச்சுனா! மனம் - புத்தி - சித்தம் - அகங்காரமென்னும் நான்கு அந்தக்கரணத்துடனே தீமையை விளைவிக்கும் சுரோத்திரம் - துவக்கு - சட்சு - சிங்குவை - கிராணமென்னும் ஐந்து பாகியேந்திரி யங்களையும் அவை தத்தம் விஷயங்களிற் செல்லுந்தோறும் செல்லுந் தோறும் அடக்குதலாகிய சமமும், தமமும், தவமும், தூய்மையும்,

† பிரகிருதியா லுண்டாயுள்ள சத்துவம் - இராசதம் - தாமதமென்னும் குண மூன்றனையு மென்றது சத்துவ முதலிய முக்குணங்களின் சாமிய அவஸ் தை வடிவப் பிரகிருதியி னின்றும் வைஷம்மிய அவஸ்தையை யடைந்த சத்துவ முதலிய முக்குணங்களையாம். சாமிய அவஸ்தை - ஒற்றுமை நிலே; வைஷம் மிய அவஸ்தை - வேற்றுமை நிலே.

சத்துவ முதலிய குணங்களை விட்டவர் மண்ணுலகத்திலும் விண்ணுலகத் திலு மிலரென்று உயர்திணையாற் கூறப்பட்டதாயினும், அஃறிணையிலும் சத்துவ முதலிய குணங்களை விட்டபொருள் யாண்டு மில்லையாமென்றுங் கொள்க. சத்துவ குணப் பிரதானர் அந்தணராவர்; சிறிது சத்துவகுணங் கலந்த ரஜோகுணப் பிர தானர் அரசராவர்; சிறிது தமோகுணங் கலந்த ரஜோகுணப் பிரதானர் வணிக ராவர்; சிறிது ரஜோகுணங்கலந்த தமோகுணப் பிரதானர் சூத்திராரவரென்ப தும், இந்நான்கு வருணத்தார்க்கும் ஜன்மாந்தர சம்ஸ்காரத்தா லுண்டாகும் இக் குண வேறுபாட்டால் கருமவேறுபா டுண்டாகின்ற தென்பதும் இங்குணர்தற் பாலனவாம்.

பொறுமையும், கல்வியும், ஆத்மானுபவமளவும் பொருந்தியுள்ள ஞான மும் (ஆர்ஜவமும், ஆஸ்திக்யமும்) ஆகவுள்ள ஒன்பதும் அந்தணரது சுபாவ குண கருமங்களென்று சாஸ்திரங்களால் வகுத்துச் சொல்லப் பட்டனவாம். ‡

அரசரது சுபாவ குண கருமங்களைக் கூறல்.

மலையை யொத்த தோளையுடைய அருச்சுனா! ஈசுவர பாவமும், தானமும், ஒன்றற்கு மஞ்சாத சாமர்த்தியமும், தைரியமும், பகைவர்க் கடங்காத மனத்தி னுயர்ச்சியும், கொலை செய்தற்குரிய போர்க்களத் தில் தோற்றோடாமையுமாகிய இவை அரசரது சுபாவ குண கருமங்க ளாம். *

வணிகரது சுபாவ குண கருமங்களைக் கூறல்.

அருச்சுனா ! பூமியை உழுது பயிர் செய்தல், பசுக்களைப் பாது காத்தல், கிரய - விக்கிரய வடிவ வியாபாரத்தை வழுவின்றிச் செய்த லென்னுமிவை வணிகரது சுபாவ குண கருமங்களாம். ¶

---

‡ மன முதலிய அந்தக்கரணங்களை யடக்கல் சமமாம்; சுரோத்திர முத லிய பாகியேந்திரியங்களை அடக்கல் தமமாம்; மன மொழி மெய்களி னடக்கம் தவமாம்; நீரால் உடம்பைச் சுத்தி செய்தலும், பொய் யுரையாமை முதலியவற் றால் மனத்தைச் சுத்தி செய்தலும் தூய்மையாம்; பிறர் செய்யு மவமான முத லியவற்றைச் சகித்தல் பொறுமையாம்; சாஸ்திர ஞானம் கல்வியாம்; ஆத்மா வின் ஒருமை யனுபவம் ஞானமாம்; குடிலமென்னும் வஞ்சகத்தன்மை யில் லாமை ஆர்ஜவமாம்; சுவர்க்காதி உண்டென்னும் நம்பிக்கை ஆஸ்திக்கியமாம். இவ்வொன்பதும் சத்துவ குணத்தைப் பிரதானமாக வுடைய யாவரிடத்தும் மாறு பாடின்றி யிருப்பனவாமென்க.

* அரசன் குடிகளைப் பாதுகாத்தற் பொருட்டுத் தனது சேவகரிடத்துத் தனது தலைமைத் தன்மையை வெளியாக்குதல் அல்லது சாஸ்திர நிஷித்த மார்க் கத்தில் செல்லும் துஷ்டரை யடக்கும் சக்தி ஈசுவர பாவமாம்; பொன் - பசு - பூமி முதலியவற்றை அந்தணர் முதலியோர்க் கீதல் தானமாம்; பேராற்ற லுடையவனையும் அடித்தோட்டும் வல்லமை சாமர்த்தியமாம்; எத்தன்மையதாய விபத்து நேரிட்ட காலத்திலும் மனங் கலங்காதிருத்தல் தைரியமாம்; பகைவரால் அவமான மடையாத சாமர்த்தியம் மனத்தி னுயர்ச்சியாம்.

¶ பொருள் விர்த்தியாதற்பொருட்டு அதனை நியாயமான வட்டிக்குக் கொடுத்தலும், கொள்வது மிகையும் கொடுப்பது குறைவுமாகா தாராய்ந்து செய் தலும் வியாபாரத்தில் அடங்குமென்க.

சூத்திரரது சுபாவ குண கருமங்களைக் கூறல்.

அருச்சுன ! அந்தணர் - அரசர் - வணிகரென்னு மிவர் தம்மைக் குற்றமில்லாது பாதுகாத்தலாகிய சிறந்த தொழில்களே சூத்திரரது சுபாவ குண கருமங்களாம். †

பகவான் அந்தணர் முதலிய நான்கு வருணத்தாரது சுபாவ குண கருமங்கள் அவர்கள் தத்துவஞான மடைதற்குக் காரணமா யிருக்கின்றனவென்று கூறல்.

அருச்சுன ! அந்தணர் முதலிய நான்கு வருணத்தாரும் தத்தம் வருணத்திற்குரிய கருமங்களை யெவ்வாற்றானும் பிறழாவாறு செய்வாராயின், அவர்க ளவ்வாறு செய்யு மக் கருமங்கள் சர்வப்பிரபஞ்சத்திற்கும் அபின்ன நிமித்த உபாதான காரணனாயுள்ள நாராயணனென்னும் பரமேசுவரனுக்குப் பூசையாம் ; அப் பூசை காரணமாக அப் பரமேசுவரனே தத்தங் கருமங்களைப் பிறழாது செய்யு மவர்தமக்குப் பிறவாநெறியாகிய வரத்தைக் கொடுத்தருள்வான். ‡

பகவான் அந்தணர் முதலிய நான்கு வருணத்தாரும் பரமேசுவரப் பிரசாதத்தை யடைதற்கு அவர்தம் சுபாவ குண கருமங்களே காரணமாம் ; அதனாலவர்கள் தத்தம் சுபாவ குண கருமங்களையே செய்தல் வேண்டுமெனக் கூறல்.

அருச்சுன ! பெரியோர் சுருதி - ஸ்மிருதிவடிவச் சாஸ்திரங்கள் கூறும் கருமங்களுள் தமக்குரியனவாகாத கருமங்கள் தாமனுஷ்டிப்பதற்குத் தகுதியுடையனவா யிருப்பினும், அவற்றைச் செய்யார் ; அவர்

---

† சூத்திரர் அந்தணர் முதலாயினோரைப் பாதுகாத்தலாவது அவர்தமக்காவனவற்றை வஞ்சக மில்லாது செய்தலாம்.

‡ சர்வப் பிரபஞ்சத்திற்கும் அபின்ன நிமித்த உபாதான காரணனாயுள்ள பரமேசுவரனைத் தத்தங்கருமங்களைப் பயனோக்காது செய்வது வாயிலாக மகிழ்விப்பவர், அவனது கருணையினாலே பிரஹ்மாத்ம ஐக்கியஞானநிஷ்டைக்குத் தகுதியாய சித்தசுத்தியை யடைவர் ; அதனால், சர்வதுக்க நிவிர்த்தி - பரமானந்தப் பிராப்தி வடிவ மோட்சமடைதற்குரியவராகின்றன ரென்பதாம். சொப்பனங் காண்பவன் அச் சொப்பன உலகத்திற்கு முதற்காரணமாயும் நிமித்தகாரணமாயு மிருத்தல் போல, பரமேசுவரன் சர்வப் பிரபஞ்சத்திற்கும் முதற்காரணமாயும் நிமித்தகாரணமாயு மிருக்கின்றா னென்பதிங் குணர்தற்பாலதாம்.

அக்கருமங்களைச் செய்வதினும் தொன்றுதொட் டனுஷ்டித்துவரும் தமது வருணத்தார்க்குரிய கருமங்கள் பொல்லாதனவாகத் தோன்று மாயினும், அவற்றையே செய்தல்வேண்டும். ¶

பகவான் கருமமனைத்தும் தோஷமில்லா திருப்பன வன்றும்; அதனால், ஆத்ம ஞான மில்லாது வருணாச்சிரம அபிமான முடையவரா யிருப்பவர் தமது சுபாவ குண கருமங்களை ஒருகாலத்திலும் விடுதல் கூடாதெனக் கூறல்.

அருச்சுனா! கொழுந்துவிட்டெரிகின்ற அக்கினி புகையோடல்லா மல் எவர்க்கும் தம்மெதிரே காணப்படுவ தில்லையாம்; அதுபோல, கரும மனைத்தும் தோஷங்களோடல்லாமல் தத்துவ விசாரமுடை யார்க்குத் தம்மெதிரே காணப்படுவ தில்லையாம்; அக்காரணத்தால் சித்த சுத்தி யில்லாதவர் அக்கருமங்களைத் தோஷமுடையனவென்று கருதி யிகழ்ந்துவிடுதல் கூடாது; அதனால், ஒவ்வொருவரும் தத்தம் வருணாச்சிரமத்திற்குரிய கருமங்களை யெல்லாம் தாம் சிந்தனை செய் தற்கரிய தருமமாமென் றுட்கொண்டு செய்தல்வேண்டும்; அங்ஙனஞ் செய்தலே அவர்க்குச் சிறந்த அறமாம். *

¶ அந்தணர் முதலாயினோருள் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய கருமங்களையே செய்தல்வேண்டும்; பிறர்க்குரிய கருமங்களைச் செய்தல்கூடாது; செய்யின், அவை பாவவேதுவாம்; தமக்குரிய கருமங்கள் பொல்லாதனவாகத் தோன்றுமா யினும் அவற்றைச் செய்தல் பாவவேது வாகாதென்பதாம். இதன் கருத்தாவது அந்தணர்க்குரிய கருமம் சிரேட்டமாகத் தோன்றினும் அதனை அரசர் மேற் கொள்ளுதல் கூடாது; அரசர்க்குரிய கருமம் தீயதாகத் தோன்றினும் அதனை அரசர் விடுதல் கூடாது; இங்ஙனமே மற்றவரும் தத்தமக்குரிய கருமங்களைச் செய்தல்வேண்டும், பிறர்க்குரிய கருமங்களை மேற்கொள்ளுதல் கூடாதென்ப தாம். அருச்சுனா! நீ செய்யவிருக்கும் இப்போர்த்தொழில் உனக்குப் பொல் லாததாகத் தோன்றினும் அதனையே செய்தல் வேண்டும்; அஃதுனக்குப் பாவ வேதுவாகாது, புண்ணியவேதுவாம்; செய்யாவிடிலோ, பாவவேதுவாமென்று பகவான் அருச்சுனனுக்குப் போர் செய்தற்கண் ஊக்க முண்டாகக் கூறினாரென் பது இங்குணர்தற்பாலதாம்.

* யாகஞ் செய்தல்-போர் புரிதல் முதலிய கருமங்கள் கொழுந்துவிட் டெரி கின்ற தீ புகையோடு கூடி யிருத்தல்போலக் கொலை-வதை முதலிய தோஷங் களோடு கூடி யிருப்பனவாம்; அக்கருமங்கள் அங்ஙன மிருப்பினும் சித்தசுத்தி உண்டாதற்குக் காரணமா யிருத்தலின், அவற்றைச் சித்தசுத்தி யில்லாதவர்

அசுத்தாந்தக்கரண முடையவன் கரும மனைத்தையும் விடுவதிற் சமர்த்தனுகான்; சுத்தாந்தக்கரண முடையவனே கரும மனைத்தையும் விடுவதிற் சமர்த்தனுவ னெனப் பகவான் கூறல்.

அருச்சுனு! தன்வசமாகச் செய்த அந்தக்கரண முடையவனுய், அதனுல் தனக்கன்னியமாயுள்ளனவற்றுள் யாதொன்றனையும் இதற்குரியன் யான், இஃதென்னுடைய தென்று அபிமானஞ்செய்யாது, துன்பத்தை யிடைவிடா துண்டாக்கும் தேகத்தின் ஜீவனகாரணமாயுள்ள அன்ன முதலியவற்றிலுள்ள இச்சையையும் செவ்வையாக வொழித்தவன் சிகை - யக்ஞோபவீத முதலியவற்ரேடு கரும மனைத்தையும் காலக்கிரமத்தி லொழித்தற்குரியவனுவன்; அங்ஙனஞ் செய்வதனுல் அவனது மனமுதல் சித்த மீருயுள்ள அந்தக்கரணம் நான்கும் சுத்தமாவனவாம். ¶

அருச்சுனு! அவ்வதிகாரி புருஷன் தன்னந்தக்கரண நான்கும் சுத்தமாகவே, அவ்வந்தக்கரண சுத்தியால் நினைத்தற்கரிய பெருந் தைரியமுடையவனுவன்; அத்தைரியத்தால் அவன் தான் செய்யும்

இகழ்ந்து விடுதல்கூடாது; அவற்றைச் செய்தலே அவர்க்குச் சிறந்த அறமாமென்பதாம்.

அக்கினி புகையாகிய தோஷத்தோடு கூடி யிருப்பதுபற்றி அதனை யெவரு மிகழாது இருள் குளிர்கள் நீங்குதற்பொருட்டு ஏற்றுக்கொள்வதுபோல, கருமங்கள் கொலை வதை முதலிய தோஷங்களோடுகூடி யிருப்பதுபற்றி அவற்றைச் சித்தசுத்தியில்லாதவ ரிகழாது பாவநீங்குதற் பொருட்டு ஏற்றுக்கொள்ளல் வேண்டுமென்பது இங் குணர்தற்பாலதாம்.

அந்தணர் தமது சுபாவ குண கருமமாகிய வேள்வி முதலியவற்றைச் செய்தல், அரசர் தமது சுபாவ குண கருமமாகிய போர் முதலியவற்றைச் செய்தல், வணிகர் தமது சுபாவ குண கருமமாகிய உழுது பயிரிடல் முதலியவற்றைச் செய்தல், சூத்திரர் தமது சுபாவ குண கருமமாகிய அந்தணர் முதலாயினுரைப் பாதுகாத்தல் முதலியவற்றைச் செய்தல் சித்தசுத்தி யுண்டாதற்குச் சிறந்த காரணமா யிருத்தலின், அக் கருமங்கள் விடத்தக்கனவன்று மென்க.

¶ அந்தக்கரணத்திற்குச் சுத்தம் அவற்றின்கண் ஆசை - கோபம் - லோப முதலியன எழாதிருத்தலாம். இச்சுத்தாந்தக்கரணமே அதிகாரி புருஷனுக்கு அவன் சமாதி செய்வது வாயிலாக ஆத்மாவை உள்ளவாறறிதற்குச் சாதனமாக விருப்பதாம்.

தியான யோகத்திற்குத் தடையாயுள்ள சப்த-பரிச - ரூப - ரச - கந்த மென்னும் பாகிய விஷய மைந்தனேயும், இராகம் - துவேஷமென்னும் ஆந்தர விஷய மிரண்டனேயும் அவை தன்னே வருத்தாவாறு பரித் தியாகஞ் செய்தற்குரியவனுவான்; அவன் அவற்றைச் செவ்வையாகப் பரித் தியாகஞ் செய்தற்பொருட்டு, புலி-சிங்க முதலிய துஷ்டமிருகங் கள் வந்து வருத்துவதில்லாத காடும்-மலேயும் - மலேக்குகையும் - ஓடு கின்ற நீரை யுடைய நதியும் என்பனவற்றைத் தன்னுட்கொண்டுள்ள இடத்தையே தான் வசித்தற்குரிய இடமாகக்கொண்டு, தான் தேடுதற் குரிய பொருளிஃதென ஒரு பொருளிடத்து மாசை யில்லாது மிகு வைராக்கிய முடையவனுய் நித்திரை - ஆலசியமுதலியன உண்டாதற் குக் காரணமாயுள்ள உணவை உண்ணுமல், இதமாயும் சுத்தமாயுமுள்ள உணவை மிதமாகப்புசித்து, தியான யோகஞ் செய்துகொண்டிருப்பன்; அதனுல், அவ்வதிகாரி புருஷன் வெளிமுகமாக எங்குஞ் சென்றுலாவு கின்ற மனம் வாக்குக் காயமென்னு மூன்றும் தன் வசமாக விருத்தற் குரியவனுவன். *

அருச்சுன ! அவ்வதிகாரி புருஷன் மனம் - வாக்கு - காய மென்னு மிம்மூன்றும் தன்வசமா யடங்கிடவே, அறநெறியைக் கடந்து சந்தோஷத்தாற் றோன்றும் மதமும், விஷய இச்சையும், சர்வ அநர்த்தங்களும் வருதற்கு முதன்மையாயுள்ள யான் எனதென் னும் அபிமானங்களும், அக்கினிபோன்று வருத்துகின்ற கோபமும், சாஸ்திர விரோதமாகப் பிறரிடத்தொன்றனேப் பெறுதல் முதலிய துராக்கிரகமாகிய வல்லமையு மாகிய இவற்றை நினேப்பது மின்றிச் சாந்தியடைவன்; அச்சாந்தியை யடையவே, எவ்விடத்தும் வேற்றுமை யின்றி ஏகரசமாயுள்ள பிரஹ்மத்தின் பூரண நிலேயை அகம்பிரஹ் மாஸ்மி யென்னும் பாவனே வாயிலாக அறிந்து, பிரஹ்மமாகவே நிச் சலமா யிருத்தற்குச் சமர்த்தனுவன்.

அருச்சுன ! அவ்வாறிருக்கும் அவ்வதிகாரி புருஷன் பிறகு, உடல் பொறி முதலியவற்றுள் எதனிடத்தும் யான் எனதென் றெழு மபிமான மில்லாமையால், தனது சம்சார விஷயத்தில் யாது நஷ்ட

---

*இங்குத் தைரியமாவது மனம்-வாக்கு-காயங்களேச் சாஸ்திர நிஷித்த மார்க் கத்தில் செல்லாவாறு தடுக்கும் சாமர்த்தியமாம்.

முண்டாயினும் துன்ப மடையான்; இவ்வுலகத்துள்ள சர்வப் பிராணிக ளிடத்தும் இவை யெல்லாம் பிரஹ்மமேயாமென் றுணருஞ் சமபுத்தி யுடையவனு யிருப்பன். இவ்வாருய நிஷ்டையை யுடைய இவன் சம் சார பந்த சங்கற்ப மனைத்தையும் பிரயத்ன பூர்வகமாக வொழித்து, பரப்பிரஹ்மமாயுள்ள என்னை உள்ளவாறு தானக அறிதற்குரிய எனது பத்தியை யடைவன் ; அந்தப் பத்தியினல் தனது சித்தத்தின் கண் என்னை உள்ளவாறு தானகவே அறிவன்; அவ்வாறறிவதால் என்னையே யடைந்து யானகவே விளங்குவன்.†

பகவான் சுதர்மானுஷ்டானமான ஈசுவர ஆராதன முடையவனுக்குத் தவருது முத்தி யுண்டாமென்று வற்புறுத்திக் கூறல்.

அருச்சுன ! எவனயினு மொருவன் பரமேசுவரனை என்னை ஆதாரமாகப் பற்றிக்கொண்டு நின்று, பயனேக்காது தான் செய்தற் குரிய கரும மனைத்தையுஞ் செய்து வருவானயின், அவன் பின்ன ரெனது கருணையினலே பிறவாப் பெரும்பத மென்னும் மோட்சத் தைப் பெறுதற்குரியவனவன்; அதனல், க்ஷத்திரியனய உன்னைத் தொடர்ந்துள்ள கரும மனைத்தையும் நீ பயன்கருதாது என்னைத் தியா னித்துச் செய்து வருவாயாயின், என்னுடைய பிரசாதத்தால் கரும மனைத்தையும் நீக்குதற்கரிய துன்பமனைத்தையும் கடத்தற் குரியவ னவாய். ‡

பகவான் அருச்சுன! நீ யான் கூறியதை மேற்கோண் டொழுகாயாயின், உனக்குத் தீமையன்றி நன்மை யுண்டாகா தெனல்.

அருச்சுன ! நீ பரமேசுவரனய யான் கூறிய உண்மையைக் குவிந்த மனத்தினலே இது நன்மையைத் தருவதென் றுணராது, உன் சித்தத்திற் ருேன்றியவா ருெழுகுவாயாயின், முடிவில் நாசத் தையே யடைவாய்; ஈதல்லாமலும், அரசர் யாவர்க்கும் பொருந்திய

† இங்குப் பத்தியென்றது சமாதி அப்பியாசத்தை.

‡ தான் செய்தற்குரிய கருமத்தைப் பயனேக்காமல் ஈசுவரப் பிரீதியாகச் செய்து வருகின்றவன், ஈசுவரப் பிரசாதத்தைப் பெறு மதிகாரியாகி, காலக்கிர மத்தில் அகம்பிரஹ்மாஸ்மி யென்னும் தத்துவ ஞானத்தைப் பெறுதல் வாயி லாகச் சாசுவதமான மோட்ச மடைதற்குரியவ னகின்ருனென்பதிங் குணர்தற் பாலதாம்.

பயனுயுள்ள சத்துரு ஜயமென்னும் வெற்றியை விரும்பாதுள்ள உனக்கு இனி உண்டாகும் வேறு துன்பங்களையுங் கூறுகின்றேன், கேட்கக்கடவாய். ¶

யான் எனது சுதர்மத்தினின்றுந் தவறுதல் எனது பந்து மித்துரு ஜனங்களைப் பாதுகாப்பதாக விருத்தலின், யான் போர் செய்யேனென்னும் அருச்சுனனை நோக்கிப் பகவான் கூறல்.

வாசனை வீசுகின்ற மலர்மாலையைத் தரித்த அருச்சுனு! நீ பந்து மித்துரு ஜனங்களோடு உனது சுதர்மமான யுத்தத்தைச் செய்ய விரும்பா திருப்பாயாயினும், அரசர்க்குரியதென்று வரையறை செய்துள்ள இராசதகுண வடிவப் பிருகிருதி உன்னை யுத்தத்தில் நிச்சயமாகப் பிரவேசிக்கச் செய்யும். அருச்சுனு! நீ அரசரது சுபாவ குணமாயுள்ள ஆண்தன்மையானது அவர்தம்மை வாள் முதலியவற்றைக் கொண்டு கொலை வதை முதலியவற்றைச் செய்கின்ற யுத்தத்தில் க்ஷண காலத்தில் புகச்செய்துவிடுமென்பதையும் சிந்தனைசெய்து நோக்குவாயாக.

பகவான் சீவர்களைப் பரமேசுவரன் அவர்தம் கருமத்திற் கேற்றவா ருட்டுகின்றனன்; அதனுல் அவர்க்குத் தமக்கெனச் சுதந்தர மில்லையெனக் கூறல்.

அருச்சுனு! மர முதலியவற்றைக் கொண்டு செய்துள்ள யானை-குதிரை முதலிய பிரதிமைகளுள்ளே மறைந்துநின்று, அவற்றினுறுப்புக்களாயுள்ள கை - கால் - காது முதலியவற்றின் செயலனைத்தையும் தனது இயக்கும் சத்தியினுல் யாவருங் காணச் செய்விக்கின்ற சூத்திர தாரியைப்போல, பரமேசுவரனும் சீவர்களது உடம்புதோறும் மறைந்து நின்று தனது மாயாசக்தியினுல் அவர்களது சுபாசுப கரும

¶ அருச்சுனு! நீ எனது வாக்கியத்தில் நம்பிக்கை கொள்ளாது, யான் மிகக் கற்றவனென்னுங் கர்வத்தால் இப்போது ஏற்பட்டுள்ள சுவதருமமாகிய போர் செய்தலை யொழித்து, சந்நியாச தருமத்தை மேற்கொள்வாயாயின், அதனுலுனக்கொரு நன்மையு முண்டாவதில்லையாம்; தீமையே யுண்டாவதாமென்று பகவான் அருச்சுனனை நோக்கிக் கூறினு ரென்பதிங் குணர்தற்பாலதாம்.

மனைத்தையும் செய்வித்துவருகின்றானென்று நீ உன்மனத்திற் கொள்ளக் கடவாய். $

பகவான் கீதாசாஸ்திரப் பொருளனைத்தையு முடித்தருளக் கூறல்.

அருச்சுனா! வேறொருவர்க்கு மினி உபதேசிக்கத் தகாத மந்திர யோகாதி ரகசியார்த்தங்களிலும் அதிரகசியமான ஞானார்த்த மனைத்தையும் உனக்கு யான் கருணையோடு கூறினேன்; நீ எனது தாற்பரியமாயுள்ள இவ்வர்த்தங்களைச் செவ்வையாக ஆராய்ந்து நோக்கி உன் விருப்பத்திற்குப் பொருந்தியபடி ஒழுகக்கடவாய். ‡

பகவான் கீதா சாஸ்திரத்தின் சாரார்த்த மனைத்தையும் தொகுத்துக் கூறல்.

அருச்சுனா! நீ இப்பகவான் கருணை செய்வானாயின், தீமைகள் நீங்காவென்று கூறுதற்குரியனவாமோ வென்று நிச்சயித்து, வாக்காற் றுதித்தலினாலும் மனத்தாற் சிந்தித்தலினாலும் பரமேசுவரனான என்னைத்தவிரப் பிறிதொரு தெய்வத்தை யறியா திருக்கின்றாய்; அக்காரணத்தால், யாவரும் அறியாதுள்ள ஒப்பற்ற அத்தியந்த ரகசியத்தை உன்மீதுள்ள பிரியத்தா லுனக் கின்னுங் கூறுகின்றேன்; அதனை மனத்தி லுறுதியாகக் கொள்வாயாக.

அருச்சுனா! நீ வாசுதேவனென்னு மென்னையே நினைந்தொழும்படி உன்மனத்தை யென்னிடத்தே மிகு பிரியமாக வைக்கக்கடவாய்;

$யானை-குதிரை முதலிய பிரதிமைகளை அவற்றினுள்ளேயிருக்கும் சூத்திரதாரி சுழலச் செய்வதுபோல், சீவர்க ளுடம்புகளையும் அவற்றுள்ளே யிருக்கும் பரமேசுவரன் சுழலச் செய்து வருகின்றான்; அதனால், சீவர்கள் தமக்கெனச் சுதந்தரமில்லா திருக்கின்றன ரென்பதும், சூரியப்பிரகாச மெங்கு மிருப்பினும் கண்ணாடி முதலியவற்றில் விசேஷமாக விளங்குவதுபோல, பரமேசுவரன் எங்கு மிருப்பினும் சீவர்களின் சூக்கும சரீரத்தின் ஒருபகுதியாகிய அந்தக்கரணத்தில் விசேஷமாக விளங்குகின்றானென்பதும், அவனவ்வா றிருப்பதே மறைந் திருப்பதாமென்பது மிங் குணர்தற் பாலனவாம்.

‡இவ்வுலகத்தில் இரகசியமாக வைக்கத்தக்க மந்திர-தந்திர-மணி-இரசாயன முதலிய அனைத்திலும் இக்கீதையினர்த்தம் அதி ரகசியமானதா மென்றும், மந்திர - தந்திர முதலியன அநித்திய சுகத்தை யடையச் செய்யும்; இக் கீதார்த்தம் நித்திய சுகத்தை யடையச்செய்யுமென்றும் இங்குணர்தல் வேண்டும்.

எப்போது மென்னையே தியானஞ் செய்திருக்கக்கடவாய்; இவை சித்தி யாதற்பொருட்டு, எப்போதும் எனக்கே பூசை செய்யக்கடவாய்; அப்பூசை சித்தித்தற்பொருட்டுப் பரமேசுவரனுன என்னையே சற் குருமூர்த்தியாகக் கொண்டு நவவிதமான பத்தியால் வழிபாடு செய்யக் கடவாய்; எப்போதும் இந் நவவித பத்தியைச் செய்துகொண்டிருப்பா யாயின், அப்பத்தியால் முடிவில் வேதாந்த வாக்கியங்களா லுண்டா கும் ஆத்ம சாட்சாத்காரத்தால் அபேதமாக அத்விதீய நிர்க்குணப் பரப்பிரஹ்மமாயுள்ள என்னையே வந்தடைவாய். இது சத்தியம், இது சத்தியம். *

பகவான் அதி ரகசியமான அர்த்தத்தைக் கூறல்.

பிரகாசம் பொருந்திய வேற்படையை யுடைய அருச்சுனு ! நீ தரு மம் அதருமமென இரண்டு கூறுபாடுடையனவாயுள்ள வெவ்வேறுன கருமமனைத்தையும் இனி யான் செய்யேனென் றுட்கொண்டு முற்று மொழித்து, மாயையால் மறைத்தற்கரிய அத்துவிதீயனுன என்னையே நானே நீ யென்னும் பாவனையால் சரண மடையக் கடவாய்; அவ்வா றென்னைச் சரணமடைவாயாயின், யானுன்னைப் பிறவிப்பெருங்கடலைக் கடந்து கரையேறும்படி உனக் கனுக்கிரகஞ் செய்வேன்; அதனு லுனது சோகத்தை யொழிக்கக்கடவாய். ¶

---

*நவவிதபத்தியாவது பகவானது நாமங்களைக் கேட்டல், சொல்லுதல், தியா னஞ்செய்தல், அப் பகவானது திருவடிகளை வணங்கல், அப்பகவானைச் சந்தனம்-அட்சதை-புஷ்பம், தூபம்-தீப முதலியவற்றுல் அர்ச்சித்தல், மனம் வாக்குக் காயங்களால் அப்பகவானை நமஸ்கரித்தல், அப்பகவானுக் கடிமையாதல், அப் பகவானேடு நட்புக்கொள்ளல், அப்பகவானுக்குச் சரீர ரூப ஆத்மாவை அர்ப் பணஞ் செய்த லென்பனவாம்.

நமஸ்காரம் - நிஷ்காம கருமம் - பகவத்பத்தி என்னுஞ் சாதன மூன்றன் வாயிலாக அகம்பிரஹ்மாஸ்மி யென்று ஞானநிஷ்டை யடைந்தவன் கடாகாயம் கடவுபாதி நீங்கியவிடத்து மகாகாயமாகவே விளங்குவதுபோலே, தேகவுபாதி நீங்கியவிடத்து அகண்டேகரசப் பிரஹ்மமாகவே விளங்குவா னென்பதிங் குணர் தற்பாலதாம்.

¶ எக் கருமத்திலு மாதரவின்றிப் பகவானை நானே நீ யென்னும் பாவனை யோடு சரண மடைந்தவனைப் பகவான் பிறவிக் கடலைக் கடக்கச் செய்கின்று ரென்பதாம். சரணம் - அடைக்கலம்.

பகவான் பிரஹ்ம வித்தியாவடிவக் கீதா சாஸ்திரத்தின் சம்பிரதாய விதியைக் கூறல்.

அருச்சுனா! உனக்கு யானுபதேசித்த இக் கீதா சாஸ்திரத்தின் இரகசியார்த்தங்களைத் தவமில்லாதவர்க்கும், தம்மை யடுத்த சிஷ்யர்களின் தோஷமனைத்தையும் நீக்கி அவர்க்குச் சீவப்பிரஹ்ம ஐக்கிய ஞானத்தை உபதேசஞ் செய்கின்ற சற்குருவிற்கு வழிபாடு செய்யாதவர்க்கும், என்னிடத்துப் பொறாமையால் துவேஷ மனமுடைய மூடர்க்கும், என்னிடத் தன்பில்லாதவர்க்கும் பிறவியச்ச மொழிய ஆராய்ந்துபதேசித்தல் ஒருவகையாலும் கூடாது; இதனை நீ அறிவாயாக. †

பகவான் கீதா சாஸ்திரத்தின் சம்பிரதாயப் பிரவர்த்தகரது பயனைக் கூறல்.

அருச்சுனா! இரகசியார்த்த மனைத்திலும் பரமரகசியமான இக் கீதார்த்தத்தைப் பரமேசுவரனான எனது பத்தர்க்கு அவர்தம் மனத்திற் பொருந்துமாறு தமது வாக்காற் போதித்தறிவிப்பவர் என்னிடத்து மேலாய பத்திகொண்டு, அதி சீக்கிரத்தில் சனன மரணாதி சம்சார மொழிய என்னையே அபேதமாக அடைவர்; நல்லவரென்று சொல்லப்படுகின்றவருள் பரமேசுவரனான எனக்குச் சந்தோஷமாகிய நன்மையைச் செய்கின்றவரும் அவரே யாவர். இக் கீதையை யென்னன்பர்க்கு உபதேசஞ் செய்யாதவர் இந்நிகழ்காலத்திலும் என்னைச் சந்தோஷப்படுத்துகின்றவ ராகார்; இனிமேலு மவர் என்னைச் சந்தோஷப்படுத்துகின்றவ ராகார்.

பகவான் கீதா சாஸ்திரத்தை யோதுகின்றவர்க்கும் கேட்பவர்க்கு முண்டாகும் பயனைக் கூறல்.

அருச்சுனா! நாமிருவரும் பொருந்துமாறு பேசிய அறநூலென்னும் இக்கீதா சாஸ்திரத்தினைக் குருமுகமாகக் கேட்டு நியமமாகப் படித்து வருபவர் யாக்ங்களுள் சிறந்ததாய ஞானயாகத்தால் பரமேசுவரனாய என்னையே ஆராதனஞ்செய்கின்றவராவ ரென்பது எனது நிச்சயமாம். இக்கீதாசாஸ்திரத்தைப் படிப்பவர்மீது தோஷத்தைக் கற்பிக்கும் பொறாமையை யொழித்துச் சிரத்தையோடு இக்கீதா சாஸ்திரத்தை

---

† பகவா னிங்ஙனங் கூறியதினால் தவமில்லாமை முதலிய தோஷமில்லாதவர்க்கு இக்கீதாசாஸ்திரம் உபதேசிக்கத்தக்கதா மென்பது பெறப்பட்டதெனக. தவமாவது இந்திரிய - மனங்களின் அடக்கமாம்; அல்லது சுதர்மவடிவக்கருமமாம்.

அதனர்த்த ஞானமின்றிக் கேட்பவரும் பாவ கருமமனைத்தையு மொழித்து அசுவமேத யாக முதலிய புண்ணிய கருமங்களைச் செய்தவ ரடையும் உத்தமலோகங்களை யடைவார். *

பகவான் புன்னகைகொண்டு நின்று அருச்சுனனை நோக்கி அருச்சுனா! யான் கூறிய இக்கீதையா லுனக்குச் சந்தேக விபரீத மில்லாத ஞான முண்டாயிற்றா வென்று வினவல்.

அருச்சுனா! பிரஹ்ம வித்யாவடிவமாயுள்ள எனது கீதையால் பரமேசுவரனாகிய நானுபதேசித்த ஞானத்தாலே உனக்கு அஞ்ஞானத்தா லுண்டாய விபரீத ஞான மனைத்தும் தமதுகாரணமாய அஞ்ஞானத்தோடு நாசமாய்விட்டனவா? யானுபதேசித்த இவ்வர்த்தங்களை யெல்லாம் ஒருமுகமாய மனத்தால் நிச்சயஞ் செய்தனையோ? இவற்றிற்கு நீ விடை கூறுவாயாக. ‡

அருச்சுனன் தன்னக மகிழ்ந்து பகவானை நோக்கி, உமதருளாலெனக்குச் சந்தேக விபரீதமில்லாது ஞானமுண்டாயிற்றென்று கூறல்.

என் மன்னவனே! மாயவனே! மதுசூதனனே! சதுர்வேதங்களின் சம்பிரதாய கர்த்தாவே! தேவரீ ரருளிச்செய்த சிறந்த வாக்கியங்க

---

* ஞானயாகத்தின் தன்மையை யிக்கீதையி னொன்பதாமத்தியாயத்திற் காண்க. இக்கீதையைப் பொறாமையின்றிச் சிரத்தையுடன் அதனர்த்த ஞானமின்றிக் கேட்பவரும் உத்தம லோகங்களை யடைவாராயின், இதனைப் பொறாமை யின்றிச் சிரத்தையுடன் அதனர்த்த ஞானத்தோடு கேட்பவர் உத்தம லோகங்களை யடைவா ரென்பதற்கு யாதோரையப்பாடு மின்றா மென்க. அஜாமிளனென்பவன் தனது புத்திரன்மீதுள்ள விருப்பத்தாலே அவனது பெயராகிய நாராயணனென்னும் நாமத்தை மரணகாலத்திற் கூறினமையால் நற்கதியை யடைந்தானென்று புராணங் கூறுவது மிங் குணர்தற்பாலதாம்.

‡ இங்கு விபரீதஞான மனைத்துமென்றது அநான்மவடிவத்தேகேந்திரிய முதலியவற்றில் ஆத்மத்துவ புத்தியும், சுதர்மமான போரில் அதருமத்துவ புத்தியுமாம்.

அஞ்ஞானத்தாலுண்டாய விபரீத ஞானங்கள் உனக்கு யான் கூறிய கீதையால் தமது காரணத்தோடு நஷ்டமாகா திருக்குமாயின், மீண்டும் உபதேசஞ் செய்வேனென்னுங் கருத்தால் பகவான் அருச்சுனனை நோக்கி இருவகை வினாக்களை வினவினாரென் பதிங் குணர்தற்பாலதாம்.

ளாலே உமது பக்தனாகிய எனக்கு இனி இதனைச் செய்யவேண்டும், இதனை யறியவேண்டு மென்னுங் குறை யாதுண்டு? சிறிது மில்லையாம்.

அருச்சுனன் மீண்டு மெனக்குத் தேவரீரது உபதேசத்தி னபேக்ஷை யில்லையெனக் கூறல்.

பகவானே! தேவரீர் உலக முழுதையுந் திருவமுது செய்தரு ளிய உமது திருவாயைத் திறந்து, அடியேன் பிழைத்தற்பொருட்டு, முன்னே கருணையினா லருளிச்செய்த கீதா சாஸ்திரத்தாலே சந்தே கத்தையும்விபரீதத்தையுமுற்று மொழித்து, ஆத்மஞான வடிவ எனது ஸ்மிருதியையும் அடையப் பெற்றேன்; இனி என்னுயிருள்ள வள வும் யான் செய்வது உமது கட்டளையின்படியேயாம்.*

அருச்சுனன் மீண்டும் பகவானை ஸ்துதி செய்தலை முன்னிட்டுத் தனதநுபவத்தையும் தான் போர் செய்தற் குடன்பட் டிருத்தலையுங் கூறல்.

படத்தையுடைய ஆதிசேஷன்மீது இனிமையாக யோகநித்திரை செய்கின்ற பகவானே! தேவரீர் தொன்றுதொட்டு உலகத்தையும் இவ்வுலகத்தில் நிலைபெற்றுவாழும் சர்வப் பிராணிகளையும் படைப் பது மழிப்பதுமாகிய இவற்றை உண்மையாக ஆராய்ந்து நோக்கின், அவை தேவரீரது லீலையாமன்றோ! †

அழகமைந்த பெருமையுடைய பரஞ்சோதி சொரூபனே! நிர்மல சொரூபனே! தேவரீரது உபதேசத்தாலே நான் அளவிடுதற்கரிதாய சனன சாகரமென்னும் பிறவிக்கடலைக் கடத்தற்குரியவனாயினேன்; என்னை அநாதிகாலமாகப் பந்தித்து வந்த மகாமாயா மோகமானது நஷ்டமாய்விட்டது; அதனால், எனது தலைவனே! யான் தேவரீர் கட்டளையிட்ட காரியத்தைச் செய்வதல்லாது, அதற்கு வேறாகச் செய்யத்தக்க காரியம் எனக்கு ஒன்றுமில்லையாம்.

---

* ஸ்மிருதி - நினைவு; அஃதாவது அஹம்பிரஹ்மாஸ்மி யென்னும் பாவனையாம்.

† யோகநித்திரை - சித்தம் உலக நாட்ட மின்றி உணர்வு நாட்ட முடைய தாக விருத்தலாம். இஃது அறிதுயிலென்றும், நனவிற்சுழுத்தியென்றும், விழித் திருந் துறங்க லென்றும் சொல்லப்படும். லீலை-பற்றின்றிச் செய்யுந் தொழிலாம்.

அநாதிகாலமாக என்னைக் கட்டுப்படுத்திவந்த பிறவியென்னும் பெரிய விலங்கினைத் தறித்தெறிந்து எனது விவேக மில்லாமை யென்னும் பெரிய நோயினை யொழித்த இறைவனே! எனக்குத் தக்கதாக அல்லது தகாததாகச் சாஸ்திரங்கள் நிச்சயித்த வலிய பெருஞ் சண்டையினை நீ ஆரம்பித்துச் செய்யக்கடவாயென்று தேவரீ ரிங்குக் கட்டளையிட்ட வேலையை யான் செய்வதற்குச் சித்தமா யிருக்கின்றேனென்றான் அருச்சுனன்; (என்றிங்ஙனம் கூறியபின் கௌரவரோடு போர்செய்து, கிருஷ்ண சகாயத்தால் வெற்றிபெற்று, தனது சகோதரருடன் வாழ்ந்துவந்து முடிவில் உத்தம கதியை யடைந்தான்.)

சஞ்சயரே! தூர தேசத்தில் நடைபெற்ற கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்தை நீரேவ்வாறு கேட்டீரென்று திருதராஷ்டிரன் வினவியதற்குச் சஞ்சயர் விடை கூறல்.

திருதராஷ்டிரன் வினா?

ஸ்ரீ கிருஷ்ண பகவானும் அருச்சுனனும் தம்முள் இனிமையாகப் பேசிய மிகு ரகசியமான யோகத்தை நீரறிந்தவிதம் எப்படி?

சஞ்சயர் விடை.

திருதராஷ்டிரரே! யான் வேத வியாசருடைய கருணையை மிகுதியாகப் பெற்றிருக்கின்றேன்; அதனால், கிருஷ்ணார்ச்சுன சம்வாதமாகிய தத்துவ சாஸ்திரத்தை யறிந்தனன்; அதனை வேத வியாசரது கருணையாலன்றி வேறுவகையா லறியுந்தன்மை யெனக்கில்லையாம். †

---

† சஞ்சயர் வேதவியாசர் தந்த திவ்விய சட்சுவாலும் திவ்விய சுரோத்திரத்தாலும் குருக்ஷேத்திரத்தில் நடைபெற்ற கிருஷ்ணார்ச்சுன சம்வாதம் பகவானது விசுவரூப முதலியவற்றை யறிந்தனரெனக.

பகவத்கீதை நியம வாயிலாகச் சித்த நிரோதயோகத்தை யுண்டுபண்ணுவதாயிருத்தலின் யோகசாஸ்திரமென்றும், சீவப்பிரஹ்ம ஐக்கிய ஞானத்தை யுண்டுபண்ணுவதாயிருத்தலின், தத்துவசாஸ்திர மென்றும் கூறப்படுகின்றதென்பதிங் குணர்தற்பாலதாம். சட்சு - கண், சுரோத்திரம் - காது, சித்த நிரோதம் - மனவடக்கம், நியமம் - யோகாங்கங்களுள் ஒன்றாம்.

சஞ்சயர் கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்தையும் கிருஷ்ணபகவானது விசுவரூபத்தையும் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் தமக்குண்டாகும் சந்தோஷத்தைக் கூறல்.

திருதராஷ்டிரரே! (என்ன புண்ணியஞ் செய்தேனோ! என்ன தவஞ் செய்தேனோ! என்ன தானஞ் செய்தேனோ! அச்செயலால்) யான் அப்புண்ணிய வடிவமாய கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்தை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் எனக்கு அற்புதமாய மனமகிழ்ச்சியும் சரீரப் புளகமு முண்டாகின்றன;

கிருஷ்ண பகவான் தான் சர்வ உலகமுமா யிருக்கின்ற தன்மையை அருச்சுனனுக்கு விரித்துக் காட்டிய ஒப்பற்ற அற்புதமாய விசுவரூபத்தை யான் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் சொல்லுதற்கரிய பெருஞ் சந்தோஷம் என் சித்தத்துள்ளே விளங்குகின்றது.

சஞ்சயர் கௌரவர்க்கு வெற்றி யுண்டாகாது, பாண்டவர்க்கே வெற்றி யுண்டாகுமெனக் கூறல்.

துரியோதனன் முதலிய நூற்றுவர்க்குத் தந்தையா யுள்ள திருதராஷ்டிரரே! குறைவற்ற கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்தின் பொருளனைத்தும் முற்கூறிய வேதவியாசரது கருணையினாலே யானறிதற்குரியன வாயின; அதனால், பிறரை வஞ்சிப்பதையே தமக்குக் கண்ணாகக் கொண்டு வாழ்கின்ற உமது புத்திரரைப் பார்க்கிலும் பாண்டுவின் புத்திரராய தருமன் முதலியோரே வலியவராவ ரென்பதுணர்ந்தனன்.

திருதராஷ்டிரரே! இராச்சிய லட்சுமியும், தருமமும், நீதியும், சத்துரு ஜயமும், கீர்த்தியுமாகிய இவை யனைத்தும் பொருந்துதற்கரிய மாயையைச் செய்கின்ற ஸ்ரீ கிருஷ்ணபகவானும், சத்தியத்தையும் தருமத்தையும் விட்டு நீங்காத அருச்சுனனு மென்று சொல்லப்படுகின்ற இவ்விருவரு முள்ளவிடத் திருப்பனவா மென்பது எனது நிச்சயமாம். (அதனால், நீர் பாண்டவரோடு சமாதானஞ் செய்து கொள்வது நலமா மென்றனர் சஞ்சயர்.)

கிருஷ்ணார்ச்சுன சம்வாத வடிவப் பகவத்கீதையைத் தமிழில் செய்யுள் வடிவமாக மொழிபெயர்த்தருளிய ஸ்ரீபட்டர் தங் கருத் துரைத்தல்.

" என்ற பொருட்டிற மிப்படி யேயாக்
குன்ற மெடுத்தருள் கோண்டல் பணிப்பான்
வென்ற புலத்து வியாதன் விரிப்பான்
நின்ற வருக்கிது நேர்பட வற்றே. "

" வேத நூல்களின் முடிவினை வியாதனிற் பின்னுள்
ஓத மாக்கட லுலகிலுண் டாக்கிய வுரவோன்
கோதி லாநெறி யுணர்ந்தகோ விந்தமா முனிவன்
பாத தாமரை பற்றிவீட் டின்பமே படைத்தான். "

" ஆற்றியல் வழுவிய புலன்க ளைந்தையும்
பாற்றிய சங்கர பகவற் பாதனென்
றேற்றிய பெயரினு னருளி னுலியான்
சாற்றின னிப்பெருந் தரும நூலையே. "

18 - சஞ்சயபே அத்தியாயம் முற்றிற்று.

பரமார்த்த தரிசன மென்னும்

ப க வ த் கீ தை வ ச ன ம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீசாது இரத்தின சற்குரு திருவடி வாழ்க.